
IIIT

# ஹதீஸ்

## ஆதாரப்படுத்தலும் அளவு கோல்களின் மீள்வரையறையும்



இஸ்ரார் அஹ்மத் கான்

# ஹதீஸ்

## ஆதாரப்படுத்தலும்

## அளவு கோல்களின் மீள்வரையறையும்

# ஹதீஸ்

## ஆதாரப்படுத்தலும்
## அளவு கோல்களின் மீள்வரையறையும்

*இஸ்ரார் அஹ்மத் கான்*

தமிழில்:
ஸெய்யித் முஹம்மத் பாரூக்

செம்மையாக்கம்:
ஸைனப் பின்த் ஸிந்தா

# Hathees
Aatharappaduththalum Alavukolkalin Meel Varaiyarayum

Tamil edition of
Authentication of Hadith
Redefining the Criteria

by

Israr Ahmad Khan

*Published by*
The International Institute of Islamic Thought
P.O. Box 669, Herndon, va 20172, USA
www.iiit.org
London Office
P.O. Box 126, Richmond, Surrey tw9 2ud, uk
www.iiituk.com

ISBN 978-955-8398-46-3

*Tamil Edition*
Translation by Syed Muhammad Farook
Edited by Zainab binth Zindha

*Published by*
Fuzin Texts
23/3 Market Road, Dharga Town – 12090, Sri-Lanka.
Printed by Millennium Graphics, Maharagama
© Abd-al-Jabbar Muhammad Zaneer (2018)

# நன்றி

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கு மாத்திரமே. இந்த ஆய்வுக்காக அவனுக்கு மட்டுமே நான் கடன்பட்டுள்ளேன். நான் நாட வேண்டும் என்பது அவன் நாட்டம் அவனது அளவிலாக் கருணை கொண்டு நான் நாடினேன். அவனே இதனை முழுமைப்படுத்தி வைத்தவன்.

எனது ஆய்வுக்கான வசதிகளை அமைத்துக் கொடுத்தது International Islamic University Malaysia (IIUM) வின் ஆய்வு முகாமைத்துவ மையம். அதன் துறை முதல்வர், துணை துறை முதல்வர்கள், இயக்குனர்கள், துணை இயக்குனர்கள், ஏனைய அலுவலர்கள் அனைவரும் இவ்வாய்வின் போது ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்கள்.

ஆய்வுப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட வேளை, அதற்கான அங்கீகாரம் அளித்து, ஆய்வின் பல்வேறு கட்டங்களிலும் உற்சாகம் ஊட்டியவர் பல்கலைக்கழகத்து இஸ்லாமியக் கல்வி, மானுடவியல் துறை முதல்வரான இணைப் பேராசிரியர் Dr. Hazinan M. Noon.

பேராசிரியர் Dr. Muhammad Nejatullah Siddiqi, பேராசிரியர் Dr. Ibrahim M. Zain, இணைப் பேராசிரியர் Dr. Jamal Basheir Badi, Dr. Muhammad Tahir Mesawi ஆகியோர் எனக்கு உற்சாகம் ஊட்டி னார்கள்; அறிவுரை பகர்ந்தார்கள்; எனது கருத்துக்களின் மீதான அவர்களது அவதானங்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் (IIIT-USA) துணைத் தலைவர் மர்ஹூம் Dr. Jamal Barzinji பேராதரவு தந்து, இந்த நூலை வெளியிட ஆவன செய்தார்.

அனைவருக்கும் எனது ஆழ்ந்த நன்றிகள்.

எனது ஆய்வின்போது பொறுமையும் அமைதியும் காத்து, அனைத்து வகை அழுத்தங்களிலிருந்தும் என்னை விடுவித்து, வாக்காலும் செயலாலும் எனக்குப் பூரணமான ஆதரவு அளித்த வர்கள் எனது மனைவி Shahnaz Begum, எனது நான்கு புதல்வியர், Mariya Seemin, Juwayriya Naznin, Naeylah Zarrin, Hamna Sheerin, எனது ஐந்து புதல்வர்கள், Muaaz, Muawwiz, Yasir, Samrah, Owaym ஆகியோர். இம்மையிலும் மறுமையிலும் அவர்களுக்கு சகல நன்மைகளும் கிட்ட வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன். ஆமீன்.

# பொருளடக்கம்


முன்னுரை ix

அறிமுகம் xiii

*1.* நபித்துவ மரபில் புனைவுகள் - காரணிகளும் பரிகாரங்களும் *01*

*2.* ஹதீஸின் ஆதாரபூர்வத் தன்மையைக் கண்டறிவதில் முஸ்லிம் அறிஞர்களின் பங்களிப்பு *42*

*3.* அல்குர்ஆனும் ஹதீஸின் ஆதாரபூர்வமும் *69*

*4.* அறிவுபூர்வமான ஆதாரத் தன்மை வாய்ந்த ஹதீஸ்கள் மூலமாக ஹதீஸை ஆதாரப்படுத்தல் *106*

*5.* பகுத்தறிவின் மூலம் ஹதீஸை ஆதாரப்படுத்தல் *125*

*6.* வரலாறும் ஹதீஸ் ஆதாரப்படுத்தலும் *173*

*7.* ஹதீஸை ஆதாரப்படுத்துவதில் நிதானம் *185*

*8.* முன்தீர்மானிக்கப்பட்ட விதி பற்றிய அல்-புஹாரியின் அத்தியாயம் *202*

குறிப்புகள் *279*

உசாத்துணை நூல்கள் *295*

# முன்னுரை

**நீ எங்களுக்குக் கற்றுக் கொடுத்ததைத் தவிர வேறு எந்த அறிவும் எமக்கில்லை (2:32)**

*ஹதீஸ் கற்கையுடன் இணைந்தனவாக நாம் ஏற்கனவே முஹம்மத் முஸ்தபா அல் அஸமியின் 'ஹதீஸ் முறைமையும் கிரந்தங்களும்', தாஹா ஜாபிர் அல்-அல்வானியின் 'குர்ஆனும் ஸுன்னாவும் - கால, இட பரிமாணங்கள்', யூஸுப் அல்கர்ளாவியின் 'ஸுன்னாவை அணுகும் முறை' ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளோம். இந்த வரிசையில், இஸ்ரார் அஹ்மத் கான் அவர்களது* Authentication of Hadith - Redefining the Creteria *எனும் நூலின் தமிழ் வடிவத்தை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.*

*ஹதீஸ் ஆதாரப்படுத்தலும் அளவுகோல்களின் மீள்வரையறையும் எனும் இந்நூலின் சுருக்கப் பதிப்பொன்று ஹதீஸின் ஆதார பூர்வத்தன்மை - பிரிகோடுகளை மீள்வரையறை செய்தல் எனும் தலைப்பில், எம்மால் முன்னம் வெளியிடப்பட்டது. இப்போது வெளியிடப்படுவது மூல நூலின் பூரணமான மொழிபெயர்ப்பு.*

*கலாநிதி இஸ்ரார் அஹ்மத் கான் அவர்களது இந்த நூல் 2010 இல் முழு அமைப்பில் வெளியிடப்பட்டது. அவர் தனது ஆய்வில் ஹதீஸின் ஆதாரபூர்வத் தன்மை எனும் நுட்பமான பொருள் குறித்துப் பேசுகின்றார். ஹதீஸ் அறிவிப்புக்களின் உள்ளடக்கத்திற்கான தொடர் வரிசை, அதன் நம்பகத் தன்மை, அதன் அறிவிப்பாளர் வரிசையை உறுதிப்படுத்தும் முனைப்பு ஆகியவற்றில் செலுத்தப்படும் கவனத்தை விட, பிரதான ஹதீஸ் கிரந்தங்களின் தொகுப்பாளர்கள் பிரிகோடுகளின்* ***முறைமை****களில் செலுத்தியுள்ள கவனம் குறித்து இங்கு விவாதிக்கப்பட்டுள்ளது.*

இதன் விளைவாக, இக்கிரந்தங்களில் தொகுக்கப்பட்டுள்ள ஹதீஸ்களில் ஒன்றோ சிலவோ, மற்றும் சில ஹதீஸ்களுடன் நேரடியாக முரண்படுகின்றமை; தாம் கொண்டுள்ள கருத்துக்களின் தாத்பர்யத்தைத் தெளிவுறுத்தத் தவறி விடுகின்றமை; அல்லது அல்குர்ஆனின் போதனைகளுடன் ஒவ்வாது செல்கின்றமை என் பன அறிவுறுத்தப்படுகின்றன.

மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது மறைவை அடுத்து புழக்கத்தில் வலம் வந்து கொண்டிருந்த பெருந்தொகை யான ஹதீஸ்கள் இட்டுக்கப்பட்டப்பட்ட போலியான ஹதீஸ் களாக இருந்தன என்ற உண்மையை அலட்சியம் செய்வது அறிவார்ந்த ஆராய்ச்சிக்குப் பொருந்தாது என்பதையும் அவர் நிறுவுகின்றார். இவற்றால் நம்பிக்கையின் அடிப்படைத் தூது மாசுபடலாயிற்று. அரசியல் சார்பு, மதப் பிரிவினைகள், பொரு ளாதாரம், இறையியல் ரீதியிலான கிரந்தங்கள் முதலானவற்றுக்கு ஆதரவு தேடி முட்டுக் கொடுக்கவும் இவை பயன்படுத்தப்பட்டன. அரசியல் மற்றும் மார்க்க சம்பந்தமான கருத்து வேறுபாடுகள் புதிதாகத் தோன்றி வளர ஆரம்பித்து, அவையனைத்தும் தத்தமது நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்ள ஹதீஸை வாகன மாகப் பயன்படுத்தித் தவறான தகவல் பிரச்சாரங்களைக் கொண்டு சென்றுள்ளன.

ஹதீஸைத் தவறாகப் பயன்படுத்துவதும் துஷ்பிரயோகம் செய் வதும் ஏதோ புதிதான ஒன்றல்ல; சிக்கல்கள் மலிந்த, எளிதில் மாறுகின்ற இன்றைய உலகில் கடும் வாதப் போக்கை நியாயப் படுத்துவதற்காக இட்டுக்கட்டப்பட்டதும் போலியுமான ஹதீஸ் கள் பிரயோகம் செய்யப்படுகின்றமை அப்பட்டமான துஷ்பிர யோகமே. குறிப்பாக, பெண்கள் பற்றியனவும் வன்முறைகளைத் தூண்டி அமைதிக்குக் குந்தகம் விளைக்கும் மார்க்கத் தீர்ப்புகள் பற்றியனவும் எளிதானவையல்ல; மிக்க அபாயகரமானவையும் கூட.

மேலும், இன்றைய சூழலில் இஸ்லாத்திற்கு எதிரான உணர் வலைகளைக் கிளறி விட ஹதீஸ்கள் எனப் பெயரியன பயன் படுத்தப்படும் பிரச்சினைகளைத் தவிர்க்க முடியாதுள்ளமை, அவையே இஸ்லாமிய வன்முறையும் பிற்போக்கு வாதமும் என்ற கோட்பாட்டை ஆதரித்துப் பேசுவதற்காகப் பரந்த அள விலும் பயங்கரமான முறையிலும் விளம்பரம் செய்யப்படுகின் றமை என்பனவெல்லாம் இங்கு பேசப்பட்டுள்ளன.

மிகவும் தெளிவான முறையில் புனைந்து கூறப்பட்டுள்ள ஹதீஸ்களை நேர்மையுடனும் தைரியத்துடனும் வேருடன் பிடுங்கி யெறிவது இஸ்லாமியக் கலைகளில் நன்கு பாண்டித்யம் பெற்ற வர்களின் பொறுப்பாகும். புனைந்துரைக்கப்பட்ட ஹதீஸ்கள் போலியான விளக்கங்கள் தருவன; அறியாமையை நிலைக்கச் செய்வன; குர்ஆனுக்கும் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கும் துரோகம் இழைப்பன.

ஆங்கில மூல நூலில் கொடுக்கப்பட்டுள்ள அடிக்குறிப்புகளதும் உசாத்துணை நூல்களதும் நிரல்கள் பிரதி செய்யப்பட்டு இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளன.

ஸையத் முஹம்மத் பாரூக் அவர்களது தமிழ் மொழிபெயர்ப் பைப் பதிப்புக்காகச் சீர்செய்து தந்தவர் ஸைனப் பின்த் ஸிந்தா. இருவருக்கும் எமது நன்றிகள்.

எமது முனைவுகள் மூலம் நன்மைகளே விளைய வல்ல அல்லாஹ் நல்லருள்பாலிப்பானாக.

**பூஸின் டெக்ஸ்ட்ஸ்**

23/3, மார்கட் வீதி,
தர்காநகர் - 12090
ஸ்ரீ லங்கா
மார்ச் -2018

## வாசகர் கடன்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிடப்படும் போதெல்லாம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் (அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் அவர் மீது அருளப்படுவதாக) எனவும், அண்ணலாரின் தோழர்கள் யாரும் குறிப்பிடப்படும்போது ரழியல்லாஹு அன்ஹு (அன்ஹா, அன்ஹும்) (அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக) எனவும் முஹம்மத் (ஸல்) அவர்கள் தவிர்ந்த ஏனைய நபிமார்கள் குறிப்பிடப்படும்போது அலைஹிஸ்ஸலாம் (அவர் மீது அல்லாஹ் நல்லருள்பாலிப்பானாக) எனவும் கூற வேண்டுவது.

# அறிமுகம்

## இஸ்லாத்தில் ஹதீஸ் வகிக்கும் இடமும் அதன் முக்கியத்துவமும்

இஸ்லாமிய அமைப்பினுள் சிந்தனை, ஒழுகலாறு, சமூகம் கலாசாரம் அரசியல் பொருளாதாரம் அறவொழுக்கம் கல்வி புலமையியல் மதச்சட்டங்கள் யாவும் குர்ஆனாலும் ஹதீஸாலும் வரையறுக்கப்பட்டுள்ளன. அல்லாஹு ஸுப்ஹானஹு வ தஆலா வினால் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகளை அல் குர்ஆன் எடுத்துச் சொல்கின்றது. குர்ஆனியக் கட்டளைகளதும் அறிவுரை களதும் நடைமுறை, முறையியல் பரிமாணங்களை ஹதீஸ் கொண்டுள்ளது.

அல்லாஹ்வின் தூதர் என்ற முறையில் நபி (ஸல்) அவர்களின் தூதுத்துவப் பணி நால்வகையினதாக அமைகின்றது.

(1) அல்லாஹ்விடமிருந்து தூது வரும்போது அதனைப் பொது வாக மக்களுக்கும் குறிப்பாக தன்னைப் பின்பற்றுவோருக் கும் தாம் பெற்றுக்கொண்டவாறே ஒப்புவித்தல்.

(2) முழு அரபு தேசத்தினதும் கருத்தியலையும் நடத்தையையும் மாற்றியமைத்தல்.

(3) குர்ஆனில் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை மலரச் செய்தல்

(4) குர்ஆனியக் கொள்கைகளை தனது சொந்த வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திக் காட்டுவதும் தனது மார்க்கத்தைத் தழுவியவர்களுக்கு அவற்றைக் கற்றுக்கொடுப்பதும்.

*பன்முகப்பட்ட இப் பாரிய பொறுப்பை நிறை வேற்றுவதற்காக நபிகளார் அல்லாஹ்வின் துணையை நாடி நின்றதோடு இரு விடயங்களை உறுதியாக விட்டுச் சென்றார்கள். அவையே அல்குர் ஆனும் பயானும் - அதாவது அதன் அர்த்தமும் வியாக்கியானமும்*

*''(நபியே! வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகளை திருப்பிச் சொல்லி) உமது நாவை அசைப்பதில் நீர் அவசரப்பட வேண்டாம். (உம்முடைய உள்ளத்தில்) அதனை ஒன்று சேர்த்து (ஓத வேண்டிய முறையில்) அதனை ஓதச் செய்வது எமது பொறுப்பு. எனவே அதனை நாம் ஓதும்போது (முழுமையாக மனஞ் செலுத்தி) அதனைப் பின்தொடர்(ந்து ஓது)வீராக. அதன் அர்த்தத்தை (பயானஹு) தெளிவுபடுத்துவது எமது பொறுப்பாகும் (75:16-19).*

*அல் குர்ஆனில் அல்லாஹ்வினால் தீர்க்கமாக வெளிப்படுத்தப் பட்ட வார்த்தைகள் அடங்கியுள்ளன. அல் குர்ஆனின் பயானில் நபி (ஸல்) அவர்களின் நடைமுறை விளக்கம் அடங்கியுள்ளது. பயான் என்பது ஹதீஸ், ஸுன்னாஹ்வினது இஸ்லாமிய முதுசமாகும்.*

*இஸ்லாமிய வாழ்வில் ஹதீஸ், ஸுன்னாஹ் வகிக்கும் இடம் நபிகளார் வகிக்கும் இடமாகும். அதாவது நாம் ஹதீஸ் பற்றியும் சுன்னாஹ் பற்றியும் பேசும்போது நபிகளாருடன் தொடர்பு கொள்கிறோம். நபி (ஸல்) ஒரு முழுமையான நீதிமான், வழிகாட்டி ஆகிய பாத்திரங்களை வகித்தார்கள். அவர்கள் இன்று எங்கள் மத்தியில் இல்லை. என்றாலும் அன்னாரது சொற்களும் செயல்களும் அதே கண்ணோட்டத்தில் அணுகப்படல் வேண்டும்.*

- *அல்லாஹ்வுக்கும் அவனது றஸூலுக்கும் கீழ்ப்படிவோர் மீது அல்லாஹ்வின் கிருபை உண்டாகும் (3:132).*
- *விசுவாசிகளே! அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியுங்கள்; (அவனது) தூதருக்கும் கீழ்ப்படியுங்கள் (4:59).*
- *எல்லா சச்சரவுகளிலும் அவரே நீதிபதி (4:65).*
- *வேண்டுமென்றே அல்லாஹ்வுக்கும் அவனது றஸூலுக்கும் கீழ்ப்படிய மறுப்பது பாரதூரமான குற்றமாகும் (8: 12-25)*

- *அல்லாஹ்வினதும் அவனது றஸூலினதும் வழிகாட்டலைப் புறக்கணிப்பது முடிவில் தோல்விக்கு இட்டுச் செல்லும். (8:46)*
- *அல்லாஹ்வுடையவும் அவனது றஸூலுடையவும் அறிவுரைகளைப் புறக்கணிப்பது மனிதனுடைய செயல்களை அர்த்த மற்றதாக்கி விடும் (47:33).*

## ஹதீஸ் குறித்து சமகால முஸ்லிம்களின் அணுகுமுறை

*ஹதீஸை அணுகும் முறையில் முஸ்லிம்களை நான்கு வகையினரெனலாம். (1) இஸ்லாமிய வாழ்வில் ஹதீஸின் பொருத்தப்பாட்டை முற்றாக நிராகரிப்போர். (2) ஹதீஸின் ஆதாரபூர்வம் பற்றி அறியாமல், ஹதீஸ் போலத் தோற்றும் எதனையும் கண் மூடித்தனமாகக் கடைப்பிடிப்போர். (3) நடைமுறைக் காரியங்களுக்காக ஹதீஸிலிருந்து பரிசீலனைகள் செய்யாது தேர்வுகள் செய்து கொள்வோர். (4) நபி (ஸல்) அவர்களுடைய ஹதீஸின் புனிதத்தைப் பேணி, இஸ்லாமிய வாழ்வுக்கும் நாகரிகத்திற்கும் அவற்றின் பொருத்தப்பாட்டையும், ஏற்புடைமையையும் மிகக் கவனமாகப் பரிசீலித்துத் தர்க்க ரீதியான அணுகுமுறையைக் கடைப்பிடிப்போர்.*

*இந்நான்கு பிரிவினருள்ளும் நான்காவது பிரிவினரே தீவிரமான போக்குகளுக்கிடையில் நடுநிலையை, நிதானத்தைக் கடைப்பிடிப்போராவர். ‘‘அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியுங்கள் இன்னும் அவனது றஸூலுக்கும் கீழ்ப்படியுங்கள்’’ (உ-ம் 4: 59) என குர்ஆனின் பல்வேறு இடங்களில் அல்லாஹ் விசுவாசிகளுக்குக் கட்டளையிடுகிறான். அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல் என்பது குர்ஆனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலாகும். அவனது றஸூலுக்குக் கீழ்ப்படிதல் என்பது நபியின் ஆதாரபூர்வமான ஹதீஸ்களில் காணப்படும் அவர்களின் வழிமுறையைப் பின்பற்றுவதாகும். குர்ஆனில் உடனிகழ்வாகக் குறிப்பிடப் படும் இருவகைக் கீழ்ப்படிதல்கள் - அல்லாஹ்வுக்கும் அவனது றஸூலுக்கும் கீழ்ப்படிதல் - ஹதீஸை மறுதலிப்போர்*

கூறுவது போன்று அல்லாஹ்வுக்கு மட்டும் கீழ்ப்படிதல் என எவ் வகையிலும் அர்த்தப்படாது. ஹதீஸையும் ஸுன்னாஹ்வையும் முற்றாக மறுதலித்தல் ஈற்றில் இஸ்லாத்தில் அர்த்தபேதங்களுக்கு இடமளிக்கும் வெறும் மெய்யியலாக மாறிவிடும். இஸ்லாத்தின் இன்றைய அவலநிலைக்குக் காரணம் குறுகிய மதவாதம் என அடிக்கடி கூறப்படுகின்றது. ஆயினும் இவ்வித விவாதங்களைப் பாரதூரமாக எடுத்துக் கொண்டால் அதற்கு குர்ஆனையோ ஹதீஸையோ பொறுப்புசாட்ட முடியாது. இதற்கு நேர்மாற்றமாக முஸ்லிம்கள் படும் அல்லல்களுக்கு அவர்கள் நபி (ஸல்) அவர் களின் பழம் பாரம்பரியங்களை இறுகப் பற்றிக்கொண்டிருப்பது காரணமன்று. அவர்களது சிந்தனையும் நடைமுறையும் குர்ஆனி லும் சுன்னாஹ்விலுமிருந்து விலகிச் செல்வதே காரணம்.

ஹதீஸின் ஏற்புடைமையை மறுப்பவர்களுக்கு எதிராக அதனையும் ஸுன்னாஹ்வையும் நிபந்தனையற்ற முறையில் கொண்டாடும் பாமர முஸ்லிம்கள் இருக்கின்றனர். இவர்கள் தவறான வழிகாட்டலினால் ஹதீஸ் நூல்களில் காணப்படும் ஹதீஸ்களின் ஆதாரபூர்வத்தை அறியாமல் நபியின் ஹதீஸ் எனச் சொல்லப்படும் எதையும் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுவோராய் இருக்கின்றனர். தாம் வழிதவறிச் செல்வதோடு, மேலும் பலரையும் இவர்கள் வழிதவறச் செய்துவிடுகின்றனர். மேலும், இன்று முஸ்லிம்கள் மத்தியில் பிரசித்தம் பெற்று விளங்கும் ஹதீஸ்களின் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படின் அதனால் வெளிவரும் உண்மைகள் அதிர்ச்சியூட்டுவனவாய் இருக்கும். மத வட்டாரங்களில் உண்மை யானவையாய் எடுத்துரைக்கப்படும், விளக்கம் கூறப்படும், கடைப்பிடிக்கப்படும் ஹதீஸ்களில் கணிசமானவை புனையப்பட்டவற்றின் எச்சசொச்சங்களாகவே அமைந்துள்ளன. மத, ஆன்மீகத்துறை உட்பட வாழ்வின் சகல துறைகளிலும் முஸ்லிம்களின் தேக்கத்திற்கும் பின்னடைவுக்கும் வீழ்ச்சிக்கும் ஆன பிரதான காரணிகளில் இதுவும் ஒன்றாகும்.

முந்திய வேதங்களைப் பின்பற்றியோர் அதனை அரைகுறையாக பின்பற்றியமைக்காகவும் (2:85) அவர்களது நபிமார்களின்

கட்டளைகளை மீறியமைக்காகவும் (5: 20-24) குர்ஆனில் விமர்சிக் கப்படுகின்றனர். இறைவெளிப்பாட்டையும் நபியின் போதனை களையும் அரைகுறையாய் ஏற்றுக்கொண்ட அணுகுமுறைக்காக நபிகளாரின் காலத்தில் வாழநேர்ந்த நயவஞ்சகர்களையும் குர்ஆன் கடிந்துரைக்கின்றது (4:150). ஏதோவொரு வகையில் சுயநலத் துக்காகவும் தமது சொந்தத் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள வும் குர்ஆன் வசனங்களிலும் ஹதீஸ்களிலும் தமக்குச் சாதகமாக அமைந்த வாசகங்களை மட்டுமே பயன்படுத்திக் கொள்வோர் இன்று முஸ்லிம் உலகில் பரவலாகக் காணப்படுகின்றனர். இவர் களின் மனதில் ஒரு வியாதியுள்ளதாக குர்ஆன் குறிப்பிடுகின்றது. இவர்கள் இஸ்லாத்துக்கோ அதன் இலட்சியங்களுக்கோ விசுவாச மானவர்கள் அல்லர்.

குர்ஆன் மீதும் ஹதீஸ், ஸுன்னாஹ்மீதும் நிதானமான, நடு நிலையான அணுகுமுறையொன்றைக் கைக்கொள்வதே நடை முறைக்கு உகந்ததாகும். இவ்வணுகுமுறையையே அல்குர்ஆன் (2:143) பரிந்துரைக்கின்றது. ஸுன்னாவையும் ஹதீஸையும் பொறுத்து நியாயமான, நடுநிலையான அணுகுமுறையென்பது மிகவும் ஆதாரபூர்வமான, எவ்வித சந்தேகத்திற்கும் அப்பாற் பட்ட நபிகளாரின் சுன்னாஹ்வையும் ஹதீஸையும் நம்புவதையும் நடைமுறைப்படுத்துவதையும் குறிக்கும்.

## ஸுன்னாஹ்வையும் ஹதீஸையும் ஆதாரப்படுத்தல்

பழையனவும் புதியனவுமான இஸ்லாமிய எழுத்தாக்கங்களில் ஹதீஸும் ஸுன்னாஹ்வும் நிரம்பிக் காணப்படுகின்றமை இவற் றின் முக்கியத்துவத்துக்குச் சான்றாகும். ஹதீஸ் தொகுப்புகளை அவற்றின் ஆதாரபூர்வம் கருதி நான்கு வகையினவாகப் பிரிக்க லாம். அவையாவன:

(1) புஹாரி, முஸ்லிம் முதலியோரின் ஹதீஸ் கிரந்தங்களைப் போன்று மிகவும் ஆதாரபூர்வ மானவையாய்க் கருதப்படு பவை.

(2) திர்மிதி, நஸாயி, அபூதாவூத் போன்றோரின் தொகுப்பு களைப் போன்று ஒரு சில ஹதீஸ்களை சந்தேகத்திற் குரியனவாய்க் கொண்டுள்ள தொகுப்புகள்

(3) இப்னு மாஜா, அஹ்மத் முதலானோரினதைப் போன்று பிரச் சினைக்குரிய பல ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ள தொகுப்புகள்

(4) தபரானியுடையதைப் போன்று பலவீனமானவையும் புனை யப்பட்டவையும் ஆக அமைந்த ஏராளமான ஹதீஸ்களைக் கொண்ட தொகுப்புகள்

ஹதீஸ் நிபுணர்களால் மிகவும் ஆதாரபூர்வமானவையெனக் கருதப்படும் ஹதீஸ்களின் ஆதாரபூர்வம் முற்று முழுதாய் ஹதீஸ் அறிவிப்பாளர்களின் தொடர் வரிசையைக் கொண்டே நிர்ணயிக் கப்பட்டுள்ளன. ஹதீஸின் வாசகத்தைக் கொண்டு ஆதாரபூர்வ மானதென நிறுவும் தீவிர முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப் பட்டமையைக் காண்பது அரிது.

## ஹதீஸ் வாசகத்தின் ஆதாரபூர்வம்

அறிவிப்பாளரின் வரிசைத் தொடரில் முறிவில்லா தொடர்ச்சி காணப்படல் (இத்திஸால் அஸ்-ஸனத்), சீரிய குணவொழுக்கம் (அதாலஹ்), பிழையற்ற நினைவாற்றல் (தப்த்), மறைவான குறை பாடுகளிலிருந்து விடுபடல் (கைர் அல்-இல்லாஹ்) பிறழ்வுகள் தவிர்ந்துள்ளமை (அத்ம் அல்-ஷுஹூத்) ஆகிய ஐந்து அளவீடு களின் படி அறிவிப்பாளர் வரிசை தேறினால் அந்த ஹதீஸ் ஆதார பூர்வமானதென முஸ்லிம் அறிஞர்களும் மாணாக்கர்களும் நம்பு கின்றனர். கடைசி இரு அளவீடுகள் ஹதீஸின் வாசகத்துப் பரி சீலனைக்கும் பொருந்தக் கூடியது. ஆயினும் நடைமுறையில் உலூம் அல்- ஹதீஸ் நூல்களில் இடம்பெற்றுள்ள விவாதங்க ளிலும் கலந்துரையாடல்களிலும் மட்டுமே இதனைக் காணக் கூடியதாய் உள்ளது. ஹதீஸ் தொகுப்பாளர்கள் ஹதீஸ் வாசகங் களைப் பரிசீலிப்பதில் மிகவும் அரிதாகவே இவ்வளவீடுகளைக் கையாண்டுள்ளனர். இஸ்லாமிய வரலாற்றின் பிந்திய கால

கட்டத்தில் ஒரு சில அறிஞர்கள் வாசகத்தின் கண்ணோட்டத்தில் ஹதீஸ் பரிசீலிக்கப்படல் வேண்டுமென வலியுறுத்திய போதிலும் அவ்வறைகூவல் யார் செவியிலும் விழுந்ததாகத் தெரியவில்லை.

உண்மையில் வாசகத்தின் கண்ணோட்டத்தில் ஹதீஸ் பரிசீலிக் கப்படல் தேவைதானா? இதற்கான விடை சிரமமானதும் அதே வேளை எளிதானதுமாகும். ஏன் சிரமமானதெனில், இதற்கு விடைகாணும் துணிவை இன்றைய ஹதீஸ் அறிஞர்களிடம் காண்பது அரிது. இது எளிது என்பதற்குக் காரணம் ஹதீஸ் வாச கங்களைப் பரிசீலிப்பதை நியாயப்படுத்துவதற்கான காரணிகள் ஏராளம் உள.

### 1- குறிப்பிட்டவோர் அறிவிப்பாளரின் நிலை குறித்த சர்ச்சைகள்

சில அறிவிப்பாளர்களின் நம்பகத்தன்மை குறித்து ஹதீஸ் அறிஞர்கள் மத்தியில் ஒருமுகமான உடன்பாடு காணப்படாமை நன்கறியப்பட்ட உண்மையாகும். இதற்கான உதாரணங்களை வாழ்க்கைச் சரிதை அகராதிகளில் காணமுடியும். உதாரணத்துக்கு, குறிப்பிட்டவோர் அறிவிப்பாளர் சம்பந்தமாக முஸ்லிமின் அவ தானம் புஹாரியின் அவதானத்திலிருந்து வேறுபடுகின்றது. ஒரு வாழ்க்கைச் சரிதையாளர் ஓர் அறிவிப்பாளரை நம்பகமானவர் (திக்காஹ்) என்கிறார். மற்றொருவர் அவரை பலவீனமானவர் (ழயீஃபப்) என்கிறார். மூன்றாம வர் அவரையிட்டு ஏதும் பிரச்சி னையில்லை (லா பஃஸ பிஹி) யென அறிவிக்கின்றார்! இவ் வாறிருக்கை யில் ஒருவர் எவ்வாறு நடந்துகொள்வது? எவ்வாறு எதிர்வினையாற்றுவது?

### 2- ஒரு ஹதீஸ் மிகச்சரியானது எனத் தாபிப்பதற்குச் சில அறிவிப்பாளர்களின் இயலாமை

நபிகளாரின் பெரும்பாலான ஹதீஸ்கள் நபிகளாரின் வார்த்தை களிலேயே அறிவிக்கப்படவில்லையென்றும் அவற்றின் போத னைகள் -செய்திகள்- அர்த்தங்கள் மட்டுமே அறிவிப்பில் இடம்

பெற்றுள்ளனவென்றும் பெரும்பாலான ஹதீஸ் அறிஞர்கள் அபிப் பிராயப்படுகின்றனர். நபி (ஸல்) அவர்களின் ஹதீஸை அன்னாரின் மொழியிலேயே அதே சொற்பிரயோகங்களுடனேயே எடுத்தா ளாமல் அதன் அர்த்தத்தை மட்டும் எடுத்துரைக்கையில் பிரச்சி னைகள் ஏற்படாமல் இராது. இந்நூலில் எடுத்துக்காட்டப்பட் டுள்ளது போன்று சில அறிவிப்பாளர்களால் இதனைக்கூடச் சரி யாகச் செய்ய இயலவில்லை. அல்-ஸர்கஸியின் அல்-இஜாபாஹ் என்ற முக்கியமான நூலில் எடுத்தாளப்பட்டுள்ள, றமழான் காலத்தில் சுபஹுத் தொழுகைக்கு அழைப்பு விடுக்கும் இரு அதான்கள் சம்பந்தப்பட்ட பின்வரும் அறிவிப்பு இதனைத் தெளிவுபடுத்துகின்றது. ஒரு அதான் பிலாலுடையது. மற்றது அப்துல்லாஹ் இப்னு உம் மக்தூம் உடையது. ''பிலால் இன்னும் இரவாக இருக்கும்போதே பாங்கு சொல்லிவிடுகிறார். அப்துல் லாஹ் இப்னு உம் மக்தூம் பாங்கு சொல்லும்வரை நீங்கள் உண்ணவும் பருகவும் முடியும்'' என நபிகளார் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு உமர் அறிவிக்கின்றார். நபிகளார் கூறியதைப் பிழையாக அறிவித்தமைக்காக இப்னு உமரை ஆயிஷா குறை காண்கிறார். நபிகளார் கூறியதாகச் சொல்லப்படும் அந்த ஹதீஸை அவர் இவ்வாறு திருத்துகின்றார். ''இப்னு உம் மக்தூம் பார்வை தெரியாதவர். அவர் தொழுகைக்கு அழைப்பு விடுத்தால், பிலால் பாங்கு சொல்லும்வரை உண்ணவும் பருகவும் முடியும்''. இங்கு இமாம் புஹாரி ஒரே விடயம் குறித்து இரு ஹதீஸ்களைப் பதிவு செய்துள்ளார். ஒன்று இப்னு உமரின் ஆதாரத்துடனும் மற்றது ஆயிஷாவின் ஆதாரத்துடனும் எடுத்துரைக்கப்படுகின்றது. இரண்டு அறிவிப்புகளும் ஒன்றே. எனவே இப்னு உமரை ஆயிஷா திருத்தி னார் எனச் சொல்வதற்கு ஆதாரமில்லையென ஒருவர் கூறலாம். இவை அவ்வாறு தென்படினும் அஹ்மத் இப்னு ஹன்பல், அல்-பைஹக்கி முதலானோரின் நூல்களில் ஆயிஷாவினதும் ஏனை யோரதும் ஆதாரத்துடன் பதிவுசெய்யப்பட்ட வேறு அறிவிப்புகள் உள்ளன. அவை முன்னர் குறிப்பிடப்பட்ட அல்-ஸர்கஸியின் கருத்தை உறுதிப்படுத்துகின்றன. இவ்விடயம் குறித்து புஹாரி தவிர்ந்த ஏனையோரின் நூல்களில் ஆயிஷாவின் ஆதாரத்துடன்

அறிவிப்புகள் பதிவாகியுள்ளதைக் காணலாம். இவை இவற்றின் அறிவிப்பாளர் தொடரின் (ஸனத்) கண்ணோட்டத்தில் மிகவும் ஆதாரபூர்வமானவை யென்பது கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். அல்-ஸர்கஸியின் கருத்துப்படி ''பிலாலினால் நேரத்தை அறியமுடியும். ஆனால் இப்னு உம் மக்தூமால் பார்வைக்குறை பாடு காரணமாக நேரத்தைச் சரியாகக் கணித்தல் கடினம்'' என்பதையும் ஆயிஷா கவனத்தில் கொண்டுள்ளார். இவ்வறிவு பூர்வமான நியாயப்படுத்தல், அல் புஹாரியின் அறிவிப்பாளர் தொடரில் யாரோ பிலால், அப்துல்லாஹ் இப்னு உம் மக்தூம் ஆகிய இரு பெயர்களையும் இடம்மாற்றிக் கூறுவதன் மூலம் பிழைவிட்டிருக்கக் கூடும் என ஊகிக்கச் செய்கின்றது.

### 3- அறிவிப்புகள் மத்தியில் வாசகங்களின் முரண்பாடு

நாம் இமாம் புஹாரியின் அல்லது இமாம் முஸ்லிமின் ஹதீஸ் தொகுப்பைப் பரிசீலிக்கும்போது, ஒரே விடயம் குறித்த பல் வேறு அறிவிப்புகளிடையே அல்லது அவற்றின் வார்த்தைப் பிரயோகங்களிடையே வேறுபாடுகளைக் காண்பதுடன் அவற்றின் அர்த்தங்களிலும் வேறுபாடுகளைக் காண்கிறோம். அறிவிப்புகளி டையே வேறுபாடு காணப்படுவதற்கான காரணம் அறிவிப்பாளர் கள் விட்ட பிழைகளன்று; நபிகளாரே வெவ்வேறு சந்தர்ப்பங் களில் வெவ்வேறு விதமாக அறிவித்தார்களெனப் பொதுவாக நம்பப் படுகின்றது. சில விவகாரங்களில் இது சரியெனப்படினும் எல்லா இடங்களுக்கும் இது பொருந்தாது. உதாரணமாக, இமாம் முஸ்லிம் தனது 'அல்-முஸாக்காத்' (கூட்டு விளைச்சல்) என்ற அத்தியாயத்தில், நாயை வீட்டுப் பிராணியாக வளர்ப்பதால் உண் டாகும் ஆன்மீக இழப்புகளைப் பதினைந்து இடங்களில் பதிவு செய்துள்ளார். இவற்றுள் ஏழு அப்துல்லாஹ் இப்னு உமரின் ஆதா ரத்துடன் பதிவுசெய்யப்பட்டுள்ளது. எஞ்சிய எட்டும் அபூ ஹுரைரா வின் ஆதாரத்துடன் பதிவாகியுள்ளது (முஸ்லிம் 3999-4013).

அப்துல்லாஹ் இப்னு உமர் அறிவித்துள்ள ஏழு ஹதீஸ்களில் ஐந்து, சரியான காரணமின்றி நாயை வீட்டில் வைத்திருப்பவரின் அமல்களிலிருந்து நாள்தோறும் இரண்டு 'கிராத்'கள் (கிராத்தான்)

குறைக்கப்படுகின்றன வென அறிவிக்கின்றன. ஆனால் இரு ஹதீஸ்கள் ஒரு கிராத் மட்டுமே குறைக்கப்படுகின்றது என்கின்றன. அபூ ஹுரைரா அறிவித்துள்ள எட்டு ஹதீஸ்களில் ஒன்று மட்டும் நன்மையிலிருந்து இரு கிராத்கள் குறைக்கப்படுகின்றன என்பதோடு எஞ்சிய ஏழு ஹதீஸ்களும் இழப்பு ஒரு கிராத் மட்டுமே என்கின்றன. இந்தப்பிழையை எப்படி திருத்துவது? இவற்றுக்கிடையே உடன்பாடு காண்பதற்கு ஏதும் வழியுண்டா?

## 4- நம்பகமான அறிவிப்பாளர்களின் மருட்சி

சிலவேளைகளில் அறிவிப்பாளர் தொடர் மிகவும் ஆதாரபூர்வமானதாய்த் தென்படினும் அறிவிப்பின் வாசகங்களில் வெளிப்படையான பிரச்சினை காணப்படுகின்றது. இந்நிலையில் ஹதீஸ் விளக்கவுரையாளர்கள் விவகாரத்தைச் சரிவர ஆராய்வதை விடுத்து பெயர் குறிப்பிடாமல் யாரோ தவறுவிட்டுள்ளார் எனக் கூறி பிரச்சினையை அத்துடன் விட்டுவிடுகின்றனர். ஒரு வாசகம் நம்பகமற்றதாய் குறைபாடுடையதாய் இருக்கக் கூடிய சாத்தியப்பாட்டை ஆராய இவர்கள் விரும்பியதில்லை. அறிவிப்பாளர் தொடரில் பிரச்சினை எதுவும் எதிர்ப்படாமையே அவர்கள் இதனைச் செய்யத் தவறியமைக்குக் காரணமாக இருத்தல் கூடும். உண்மையில் வாசகத்தில் பிரச்சினை காணப்பட்டிருப்பின் அவர்கள் அதனை அறிவித்திருக்க வேண்டும். அறிவிப்பாளர் மருட்சிக்கு ஆட்பட்டிருப்பின், இதனைத் தீர்மானிப்பதற்கான அளவுகோல் எது? வாசகத்திலான குறைபாட்டைக் கண்டுபிடிப்பதற்கு ஏதேனும் அளவுகோல் இருத்தல் வேண்டும்.

## 5- அறிவிப்புகளில் மேற்கொள்ளப்படும் திருத்தம்

நபிகளாரின் காலத்தில் கூட அன்னாரின் ஹதீஸை மிகச் சரியாக அறிவிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது. பிழையாக அறிவிக்கப்பட்ட சில ஹதீஸ்கள் இஸ்லாமிய அறிவுத்துறையின் முன்னணியில் இருந்தோரால் திருத்தப்பட்டமை இந்நூலின் மூன்றாம் நான்காம் அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளது. பின்வரும் உதாரணம் இதனை நன்கு தெளிவுபடுத்தும்:

நபிகளாரிடமிருந்து அபூ ஸய்த் அல்-குத்ரி இவ்வாறு அறிவிக்கின்றார்: ''இறந்தவர் இறக்கும்போது அணிந்திருந்த உடையில் அவர் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவார்.'' இதனை ஆயிஷா (றலி) ''நபிகளார் உடைக்குப் பதிலாகச் செயலையே குறிப்பிட்டனர்'' என உடனடியாகத் திருத்தினார். ''மக்கள் வெற்றுடம்பினராக, வெறுங்காலினராக, கத்னா செய்யப்படாதவர்களாக எழுப்பப்படுவர்'' (அல்-இஜாபாஹ்: 120) என்ற இன்னொரு ஹதீஸை ஆதாரம் காட்டி அவர் விவாதித்தார். இத்திருத்தம் வாசகத்தில் உள்ளது. இதனால் உண்டாகும் குளறுபடி, பிரச்சினைகள் காரணமாக இந்நிலை மேலும் தொடர்வதற்கு இடமளித்தல் தகுமா?

## 6- ஹதீஸின் சமகாலப் பொருத்தப்பாட்டை அடையாளம் காணல்

குர்ஆனிலும் ஹதீஸிலும் நபிகளாரின் போதனைகள் பொதிவு பெற்றுள்ளன. இவை வெறும் பேச்சளவில் இல்லாமல் நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை. முஹம்மத் (ஸல்) இறுதி நபியாகையால் அவர்களின் போதனைகள் எல்லா மனிதர்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் எல்லா சந்தர்ப்பங்களுக்கும் பொருந்துபவை. எனவே குர்ஆன் ஹதீஸ் விளக்கங்கள் காலத்தால் தேங்கி நின்றுவிடக்கூடியனவன்று. அவை புதிய சகாப்தத்தின் தேவைகளை, சவால்களை எதிர்கொள்ளும் வகையில் காலத்தையும் இடத்தையும் கடந்து நிற்கும் தன்மையன. இவற்றைக் கவனமாக மீளாய்வு செய்வதும் இவற்றுக்கு மீள் விளக்கம் அளிப்பதும் அவசியம். இம்முயற்சியில் ஒருவர் ஹதீஸ் விளக்கவுரையாளர்களால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள விளக்கங்களுக்கு முகம்கொடுக்க நேரும் என்பதில் ஐயமில்லை. இவ்விளக்கங்கள் சிலவேளை ஒன்றுக்கொன்று முரண்படுபவையாக இருக்கலாம். இதனை எதிர்கொள்வதற்கும், குளறுபடிகளைத் தவிர்த்துக் கொள்வதற்கும் நம்முன்னால் உள்ள ஒரே வழி நபிகளாரின் ஹதீஸ்களில் உபயோகிக்கப்பட்டுள்ள சொற்களின் நிலையை மீளாய்வு செய்தலாகும்.

## 7- ஹதீஸின் முறையியல் பரிமாணத்தைப் புரிந்துகொள்ளல்

நபிகளாரின் ஹதீஸை சட்டவாக்கத் தகுதி பெற்றவை, சட்ட வாக்கத் தகுதி சம்பந்தப்படாதவை என இரு பிரதான வகை யினவாய்ப் பிரிக்கலாம். இவற்றுள் ஒன்று கட்டுப்பாடு விதிப் பது; மற்றது கட்டுப்படுத்தாதது. கட்டுப்படுத்தும் ஹதீஸ்களைப் பொறுத்தவரை, அவை நேருக்கு நேர் குர்ஆன், பகுத்தறிவு, ஸுன்னாஹ் முதவாதிர் (அதாவது பெரும்பாலானோரால் அறி விக் கப்பட்டுள்ளமையால் அவர்கள் அனைவரும் பொய்யொன் றின்மீது உடன்பாடு கொண்டிருக்க முடியாது) முதலியவற்றின் கண்ணோட்டத்தில் பார்க்கப்படல் வேண்டும். ஹதீஸும் குர் ஆனும் ஒன்றுக்கொன்று முரண்படும் சாத்தியப்பாடு தென்படும் பட்சத்தில் ஹதீஸ் நிபுணர்கள் முரண்படும் ஹதீஸ்கள் விடயத்தில் ஓர் உடன்பாட்டுக்கு வர பெரும் பிரயத்தனமெடுக்க வேண்டும். இது சாத்தியமாகாவிடின் ஹதீஸ்கள் ஆதாரபூர்வமானவையென்ற உயர் ஸ்தானத்தை இழந்துவிடும். ஒரு ஹதீஸின் ஆதாரபூர்வமான வாசகம் மட்டுமே முறையியல், நடைமுறை இரண்டிலும் வழி காட்டலுக்கான ஆதாரமாய்க் கொள்ளப்பட முடியும்.

## 8- ஹதீஸ் வாசகத்தில் இட்டுக்கட்டலுக்கான சாத்தியக்கூறு

நபிகளாருக்குப் பின்னரான இரு தசாப்த காலங்களில் அன்னார் மீது போலியாகச் சாட்டப்பட்ட ஹதீஸ்கள் புனையப்பட்ட உண் மையை மறுக்கமுடியாது. இவற்றின் எண்ணிக்கை ஆயிரக்கணக் கிலாகும். இவற்றில் அசலையும் போலியையும் பிரித்தறிவதற்கு ஹதீஸ் நிபுணர்கள் பெரும்பிரயாசை எடுத்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் அவர்களின் பிரமாண்டமான முயற்சி அவை நூற்றுக்கு நூறு வழுவற்றவை யென்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. இதன் விளைவாக, சில புனையப்பட்ட ஹதீஸ் கள் அவற்றின் அறிவிப்பாளர் தொடர் ஆதாரபூர்வமாய் இருப்ப தனால் உண்மையான ஹதீஸ்களாய்க் கருதப்படுவதனைக் காண்கிறோம். உதாரணமாக ஸுனன் இப்னு மாஜாவில் சுமார் தொன்னூறு ஹதீஸ்கள் இட்டுக்கட்டப்பட்டவையாய் ஹதீஸ்

அறிஞர்களால் அடையாளங் காணப்பட்டுள்ளன. அவற்றை வெளிக்கொணராமல் கதவை நிரந்தரமாய்ச் சாத்திவிடுவதா? அறிவிப்பாளர் தொடரைப் பொறுத்தவரை கதவு மூடப்பட்டு விட்டதாகக் கருத முடியும். ஆனால் வாசகங்களைப் பொறுத்த வரை கதவு திறந்திருத்தல் வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதாயின், மிகப் பிரபலமான ஆதார நூல்களில் இடம் பெற்றுள்ள புனையப்பட்ட ஹதீஸ்களை இனம்காண்பதற்கு ஹதீஸ்களின் வாசகங்களை ஆராய்வதைத் தவிர வேறு வழி கிடையாது.

## 9- ஃபுகஹாவுக்கிடையிலான ஃபிக்ஹ் சர்ச்சைகள்

இஸ்லாமிய வாழ்வு தொடர்பாக சில விவகாரங்களையிட்டு முஸ்லிம் சட்ட அறிஞர்கள் மத்தியில்பல சர்ச்சைகள் நிலவுகின்றன. குறிப்பிட்டவொரு ஹதீஸின் சில வாசகங்கள் ஏனைய வாசகங்களை விட விரும்பப்படுகின்றமை இதற்கான பிரதான காரணிகளில் ஒன்று எனலாம். அனைத்தையும் ஆதாரபூர்வமானவை எனக் கொள்வதற்குப் பதிலாக சில ஹதீஸ்கள் மட்டும் தேர்ந்து கொள்ளப்படுவதற்கு அறிவிப்பாளர்களது வரிசைகள் பற்றிய திருப்தி காரணமாக இருக்கலாம். என்றாலும் வாசகத்தின் அடிப்படையில் அவை ஆதாரபூர்வமாய் இருத்தல் அவசியமன்று எனவும் கருதப்பட்டிருக்கலாம். எனவே ஹதீஸின் வாசகங்களை ஆதாரப்படுத்துவதன் மூலம் ஃபிக்ஹ் சம்பந்தமான சர்ச்சைகளை எதிர்கொள்வது இலகுவாக அமையும்.

## 10- ஹதீஸின் புனிதத்துவம்

'அறிவிப்பாளர் ஒருவரின் வாழ்க்கையையும் குணவொழுக்கத்தையும் ஆராய்ந்து பார்ப்பதும், அவரை நம்பகமானவர் அல்லது பலவீன மானவர், பொய்யர் என்றெல்லாம் வகைப்படுத்தி அறிவிப்பதும் தேவைதானா? இது ஒரு வகையான வசையும் தூற்றலும் தானே. இஸ்லாம் இதனைத் தடைசெய்துள்ளதே' என அஹ்மத் இப்னு ஹன்பலிடம் கேட்கப்பட்டபோது, அவர் கூறிய

பதில்: 'இதனால் பாதிக்கப்படுபவர்கள் இறுதித் தீர்ப்புநாளில் எனக்கெதிராக முறையிடுவதையிட்டு நான் கவலைப்பட வில்லை. ஆனால் இறுதித் தீர்ப்புநாளில் நபிகளார் எனக்கெதிராக வாதியாகத் தோன்றி அன்னாரது ஹதீஸின் ஆதாரபூர்வத்தை உறுதிப்படுத்தத் தவறியமைக்காக என்மீது குற்றம் சுமத்தும் நிலையை எதிர்கொள்ள என்னால் முடியாது'. ஹதீஸை ஆதாரப் படுத்துவதில் எத்தகைய வெற்றிடமும் ஏற்படாதிருக்க அறிஞர் கள், புலமையியலாளர்கள் முடிந்தவரை தம்மாலானதைச் செய்ய வேண்டும். அறிஞர்களின் பொறுப்பும் கடமைப்பாடும் இன்னும் முடிந்துவிடவில்லை. இஸ்லாமிய வாழ்வில் ஹதீஸ் புனித இடம் வகிக்கின்றது. ஆனால் இப்புனிதம் நபிகளாரின் ஆதாரபூர்வமான, உண்மையான ஹதீஸ்களுக்கு மட்டுமே உரியது.

## இந்த ஆய்வின் வரலாறு

வெளிப்பார்வைக்கு அசலானவை உண்மையானவை எனப் பதிவாகியுள்ள ஹதீஸ்களின் பல்வேறு வாசகங்களுக்கிடையே வெளிப்படையான முரண்பாடுகள் காணப்படுவதையிட்டு கரிச னையும் அக்கறையும் கொண்ட எந்தவொரு முஸ்லிமையும் போன்று நானும் கவலைப்பட்டேன். வாசகங்களுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுவது குறித்து நான் சந்தித்த பல அறி ஞர்களுடன் கருத்தாடல் புரிந்தபோது இருவித எதிர்வினைகள் வெளிப்பட்டன. ஒன்று ஹதீஸ் சம்பந்தமான எனது ஆய்வை மேலும் முன்னெடுக்காமல் அப்படியே விட்டுவிடுமாறு ஆலோ சனை கூறிற்று. மற்றது கருத்தாடலை விடாமல் தொடருமாறு எனக்கு ஆர்வமூட்டிற்று. காரசாரமான வாதப்பிரதிவாதங்களுக் கிடையே நான் புஹாரி, முஸ்லிமில் பதிவாகியுள்ள ஹதீஸ்கள் மீதான எனது ஆய்வைத் தொடர்ந்தேன். இந்த ஹதீஸ்களுக்கான விளக்கவுரைகளையும் படித்தேன். குறிப்பாக, அல்-நவவி, அல்-அய்னி, இப்னு ஹஜர் முதலானோரின் நூல்களைப் படித்தேன். ஹதீஸ் விளக்கவுரையாளர்கள் ஹதீஸ் விளக்கவுரையின் நன்கு நிறுவப்பட்ட பொதுவாக வரையறுக்கப்பட்ட கொள்கைகளைக்

கடைப்பிடித்ததாகவோ ஹதீஸ்மீதான அணுகுமுறையில் நிதானத் தன்மையைக் கடைப்பிடித்ததாகவோ எனக்குத் தென்படவில்லை. அவர்களின் கவனக்குவிப்பு அறிவிப்பாளர் தொடர்மீது இருந்ததே யன்றி ஹதீஸின் வாசகம் (Text) மீது இருக்கவில்லை. ஹதீஸ் துறையின் மாபெரும் அறிஞர்களது விளக்கங்கள் சில என்னுள் அதிருப்தியையே ஏற்படுத்தின. ஆக, வாசகத்தின் (Text) கண் ணோட்டத்தில் ஹதீஸின் ஆதாரபூர்வம் பற்றிய எனது ஆழமான ஆய்வைத் தொடர்ந்தேன். எனது இம்முயற்சிக்கு உதவுமாறு மலேசிய சர்வதேச பல்கலைக் கழகத்திடம் விண்ணப்பித்தேன். இறுதியாக, ''ஹதீஸை ஆதாரப்படுத்தலும் அளவுகோல்களை மீள் வரையறை செய்தலும்'' என்ற எனது ஆய்வை வெளிக்கொணர்ந் தேன். இவ்வாய்வு பற்றிய அபிப்பிராயங்களையும் அவதானங் களையும் அறிவதற்காகவும் ஆலோசனைகளைப் பெறுவதற்காக வும் இதன் பிரதிகளை ஹதீஸ் புலமைத்துறையினர், நிபுணர்கள், சட்டக்கலை வல்லுனர்கள் உட்பட பல்வேறு அறிஞர்களுக்கும் அனுப்பி வைத்தேன். இவ்வாய்வு மீதான பொதுவான கவன ஈர்ப்பு ஆர்வமூட்டுவதாக இருந்ததனால் இதன் ஒரு சிறுபகுதியை அமெ ரிக்காவிலிருந்து வெளிவரும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரு சஞ்சிகைக்கு அனுப்பி வைத்தேன். அது பிரசுரம் பெறவே, அதனை ஒரு நூலாக வெளியிடவும் தீர்மானித்தேன். அதன் விளைவே இந்நூல். எனது ஆரம்ப ஆய்வின் அங்கமாக அமையாத மேலும் இரு அத்தியாயங்கள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

## நூலின் உள்ளடக்கம்

முதலாவது அத்தியாயம் நபிளாரின் பெயரால் ஹதீஸ்கள் புனை யப்பட்டதன் பின்னணியை ஆராய்கின்றது. இந்நிலைமைக்கு இட்டுச் சென்ற காரணிகளையும் இதற்குப் பரிகாரம்காண உயர் முஸ்லிம் வட்டாரங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் இது விவரிக்கின்றது. இரண்டாவது அத்தியாயம் அறிவிப்பாளர் தொடர், வாசகம் ஆகிய கண்ணோட்டங்களில் அறிஞர்களின் பங்க ளிப்பை அடையாளம் காண்கிறது.

மூன்றாவது அத்தியாயம் குர்ஆனியக் கொள்கைகளதும் அறிவுறுத்தல்களதும் வெளிச்சத்தில் ஹதீஸைப் பரிசீலிக்கின்றது. நான்காம் அத்தியாயம் நபிகளாரின் மிகவும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களைப் பயன்படுத்தி ஹதீஸின் வாசகங்களை ஆராய்கின்றது. ஐந்தாம் அத்தியாயம் பகுத்தறிவின் மூலம் ஹதீஸ் வாசகங்களின் ஆதாரத்தை உறுதிப்படுத்துகின்றது. ஆறாம் அத்தியாயம் ஹதீஸ் வாசகங்களில் கிடைக்கக் கூடிய வரலாற்றுப் பரிமாணங்களை ஆதாரப்படுத்துவதற்கு வரலாற்றில் நிறுவப்பட்டுள்ள அளவுகோல்களை ஆராய்கின்றது. அத்தியாயம் ஏழு இன்னொரு அளவுகோலான நடுநிலை அல்லது நிதானத்தின் அடிப்படையில் ஹதீஸை ஆராய்வதனைக் காட்டுகின்றது.

இறுதியான எட்டாவது அத்தியாயம் அல்-புஹாரியில் இடம்பெற்றுள்ள 'கித்தாப் அல்-கதர்' (முன்தீர்மானிக் கப்பட்ட விதி) என்ற அத்தியாயத்தை அடிப்படையாகக் கொண்டு மறு விளக்கம் செய்வதாக உள்ளது. அத்தியாயங்கள் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எட்டு முதலியவற்றில் பரிசீலனைக்கும் விளக்கத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட ஹதீஸ்கள் புஹாரி, முஸ்லிமிலிருந்து பெறப்பட்டவை.

இவ்வத்தியாயங்ஙகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்தாடல்கள் பெருமளவில் சுயமானவை என்பது எனது வலுவான நம்பிக்கை. இக்கருத்தாடல்களில் நான் இரு காரியங்களைச் செய்ய முனைந்துள்ளேன். அவையாவன முதலாவது ஹதீஸ் வாசகங்களின் அளவுகோல்களை அறிவுபூர்வமாக வரையறுத்தல். இரண்டாவது அவற்றைப் பொருத்தமான முறையியல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹதீஸ்கள் மீது நேர்மையுடன் பிரயோகித்தல்.

இறுதியாக, அறிஞர்களதும் தனிநபர்களதும் பெயர்கள் முதன் முறையாகக் குறிப்பிடப்படும்போது மட்டுமே அவர்கள் சம்பந்தமான திகதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## அல் புஹாரியின் ‘முன்தீர்மானிக்கப்பட்ட விதி’ சம்பந்தமான எட்டாவது அத்தியாயத்தின் முக்கியத்துவம்

*எட்டாவது அத்தியாயம் நூற்பொருளுடன் சம்பந்தமில்லாத தெனவும் இதில் கலந்துரையாடப்பட்டுள்ள ஹதீஸ்களை அத்தி யாயங்கள் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழின் கீழ் எளிதாகவும் மிகப் பொருத்தமாகவும் மீளொழுங்கு செய்திருக்கலாமெனவும் அவற்றில் நபிகளாருடைய ஹதீஸின் ஆதாரபூர்வத்தை நிறுவு தற்கு முறையான அளவுகோல்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன வென்றும் ஒருவருக்குத் தோன்றக்கூடும். எனினும் அல் புஹாரியின் ‘கித்தாப் அல் கதரில்’ (முன்தீர்மானிக்கப்பட்ட விதி என்ற அத்தி யாயத்தில்) காணப்படும் இருபத்தேழு ஹதீஸ்களையும் குறிப் பிட்டவொரு அளவுகோலினால் மட்டும் அளந்துவிடவோ ஆராய்ந்து விடவோ முடியாது. மேலும் அவை தனிக் கவனத்தைக் கோரி நிற்கின்றன. இவை பல்வேறு கோணங்களிலிருந்து ஆராயப்பட வேண்டியவை. ‘கித்தாப் அல் கதரி’ன் உள்ளடக்கம் முஸ்லிம்கள் மனதில் பெரும் உளவியல் தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளபடியால் அது பல்வேறு அத்தியாயங்களில் சிதறிச் சென்றுவிடுதல் தகாது.*

## ஒரு நேர்மையான விண்ணப்பம்

*விசேடமாக முஸ்லிம் மத, கல்விப் பீடங்களில், நிறுவப்பட்ட வகைமாதிரிகளுக்கும், நம்பிக்கைகளுக்கும் முரணானவை யாவும் அர்த்தமற்றவையென நிராகரிக்கப்படுகின்றன. ஹதீஸ் சம்பந்தமாக நிறுவப்பட்டுள்ள கருத்தியல் இரு அம்சங்களை உள்ளடக்கியதாய் உள்ளது:*

*(1) அறிவிப்பாளரின் தொடர் ஆதாரபூர்வமானதாய்க் காணப் படின், வாசகத்தில் காணப்படும் பிரச்சினைகள் பற்றிக் கவனஞ் செலுத்தாமல், அந்த ஹதீஸ் ஆதாரபூவமானதெனக் கருதுதல்.*

*(2) புஹாரியிலும் முஸ்லிமிலும் தேரந்து தொகுக்கப்பட்டுள்ள ஹதீஸ்கள் மிகவும் ஆதாரபூர்வமானவை; அந்த ஹதீஸ்களின் வாசகங்களில் காணப்படும் முரண்பாடுகளுக்கு விளக்கம் கற் பிக்கலாம்; ஆனால் இவ்விரு ஆதார நூல்களிலும் காணப்படும் ஹதீஸ்களை நம்பகமற்றதெனச் சொல்வதை ஏற்க முடியாது. அத்தகைய நிலைப்பாடு உண்மையில் பாரியதொரு குற்றமாகும்.*

*இவ்வாய்வில், உண்மையில் செய்யவேண்டுமென நிர்ப்பந்திக் கப்பட்ட ஒன்றை நான் செய்துள்ளேன். மாபெரும் ஹதீஸ் அறி ஞர்களின் ஈடிணையற்ற மகத்தான பங்களிப்புக்குப் பங்கம் உண்டுபண்ணுவதற்காக நான் இதனைச் செய்யவில்லை. ஆனால் ஹதீஸின் நிலைப்பேற்றை பலப்படுத்துவதே எனது நோக்க மாகும். ஆயினும் இந்நூல் முழுமையானதென என்னால் எவ் வகையிலும் உரிமை கொண்டாட முடியாது. பரிபூரண ஞானம் அல்லாஹ்விடமே உள்ளது. மனித முயற்சி குறைபாடுடையது. எனது இம்முயற்சியில் குறைபாடுகள் இருப்பின் அவை சுட்டிக் காட்டப்படுவதை வரவேற்கிறேன். இந்நூலின் எதிர்காலப் பதிப்பு கள் சாத்தியமானால் அவற்றில், ஆலோசனையாகக் கூறப்படும் மாற்றங்கள் பற்றி மிகுந்த கவனஞ் செலுத்தப்படும். இவ்வெளிய நூல், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நற்பயன் நல்க வேண்டு மென எல்லா அறிவுக்கும் ஆதாரமான வல்லநாயன் அல்லாஹ் வைப் பிரார்த்திக்கின்றேன்.*

*ஆமீன்.*

**இஸ்ரார் அஹ்மத் கான்**
*15 ஜுலை 2008.*

*01*

# நபித்துவ மரபில் புனைவுகள்: காரணிகளும் பரிகாரங்களும்

*நபித்துவ வழிமுறைகளில் புனைவு அல்லது இட்டுக்கட்டல் என்பது, சொற்பொருள் அர்த்தத்திலும் சங்கேதமாகவும், ஒரு கூற்றினை அல்லது நடைமுறையை வேண்டுமென்றோ அல்லது அறியாமலோ நபிகளார்மீது பொய்யாகச் சாட்டுவதாகும். நபிகளார் சொல்லாதவற்றையும் செய்யாதவற்றையும் அவர்கள் சொன்ன தாகவும் செய்ததாகவும் கூறும் அறிவிப்புகள் பொய்யானவை (மர்தூத்) என ஏகமனதாய் நிராகரிக்கப்படுவன.*

*ஹதீஸ்களில் இடம்பெற்றுள்ள பல்வேறு அறிவிப்புகள் பரவ லாக அறியப்பட்டனவாக ஆனால் உண்மையற்றனவாக இருப் பதை ஹதீஸ் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அவற்றுள் சில இட்டுக்கட்டப்பட்டவை என்பதை வெளிப்படையாய்ச் சுட்டுவன வாயும், சில இட்டுக் கட்டலைக் குறிப்புணர்த்துவனவாயும் உள் ளதை ஹதீஸ் அறிஞர்கள் இனங்கண்டுள்ளனர். அறிவிப்பாளர் வரிசையில் (ஸனத்) சிலர், அதி மேலான, மிகைநவிற்சியான அல்லது சாதாரண அடைமொழிகளை அறிவிப்புகளில் பயன் படுத்துகையில் அவை அப்பட்டமான இட்டுக்கட்டலின் சமிக் ஞையாக இருப்பதை ஹதீஸ் கலையில் துறைபோன அறிஞர்கள் எடுத்துக் காட்டுவர்.*

*அதி மேலான சொல்லடுக்குகளாய் காணப்படுவனவற்றுள் பின்வருவன அடங்கும்: அனைவரிலும் மிகப்பெரும் இட்டுக் கட்டுவோன் (அவ்தா அல்-நாஸ்), பொய்யின் மூலாதாரமாய் விளங்குபவன் (மன்பஅ அல்-கதிப்), பொய் இன்னாருடன் முற்றுப்பெறல் (அல்-கித்ப் யன்த்தஹி இலைஹி), இத்தியாதி.*

*மிகை நவிற்சியான சொல்லடுக்குகளுக்கு உதாரணங்கள் வரு மாறு: புனைவில் முழுமையாய் மூழ்கியோன் (வத்தா), தீவிர மாய்ப் பொய்யுரைப்பவன் (கத்தாப்), அண்டப் புளுகன் (தஜ்ஜால்) வெறித்தனமாய்ப் பொய் புனைதல் (அப்பாக்) இத்தியாதி.*

*சாதாரண அடைமொழிகளுள் அடங்குபவைக்கு உதாரணங்கள்: குறிப்பிட்ட இன்னார் ஹதீஸை இட்டுக்கட்டுபவர் (ஃபுலானுல் யதாஉ அல்-ஹதீத்), இன்னார் ஹதீஸ்களைத் தானே புனைந்து கூறுகின்றார் (புலானுல் யக்தலிக் அல்-ஹதீஸ்). குறிப்பிட்டவொரு ஹதீஸ் அறிஞர்வட்டத்தினர் இன்னார் பொய்யர் என அறிவித்தல் (ஃபுலானுல் கத்தபஹு) போன்றவை.*

*ஆகுபெயரால் குறிக்கப்படும் சில அறிவிப்பாளரின் ஹதீஸ் களும் போலியானவையெனக் கொள்ளப்படுவன. இன்னார் போலி அறிவிப்புகள் செய்பவர் (ஃபுலானுல் யுஹத்திது பி அல்-அபாதில்) அவர் பெயரால் போலி அறிவிப்புகள் காணப் படுகின்றன. (லஹு அஹாதித் பாத்திலா).*

*இவ்வாறு ஹதீஸ் புலமைவட்டத்தினர் ஒரு ஹதீஸ் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது என்பதை அறிவிப்பதற்குப் பல்வேறு பதப்பிரயோகங்களைக் கையாள்கின்றனர். இவற்றுள் மவ்து (இட்டுக்கட்டப்பட்டது) பாத்தில் (போலி) ஹாதா அல்-ஹதீத் லா அஸ்ல லஹு (இந்த ஹதீஸ் ஆதாரமற்றது) போன்றவை அடங்கும்.*

## *ஹதீஸ் இட்டுக்கட்டப்பட்டதன் வரலாற்றுப் பின்னணி*

*இஸ்லாத்துக்குக் களங்கம் கற்பித்து முஸ்லிம்கள் மத்தியில் பிளவை உண்டு பண்ணுவதற்காக முதன் முதலாக ஹதீஸை இட்டுக்கட்டத் தொடங்கியவன் இப்னு ஸபா என்பது குறிப்பாக,*

உதுமான் (றலி) அவர்களின் கிலாஃபத்தின்போது நிகழ்ந்த சம்ப வங்கள்மீது குறியாகக் கவனஞ் செலுத்தும் வரலாற்றாசிரியர் களின் கருத்தாகும்.(1) இது ஹதீஸை இட்டுக்கட்டும் போக்கு உதுமானுடைய கிலாபத்தின் நடுப் பகுதியில் ஆரம்பமாகியதெனக் காட்டுவதாய் அமைகின்றது.

அக்ரம் ளியா அல்-உமரி என்பாரின் கருத்துப்படி, முதன் முதலாக நபிகளாரின் பெயரில் ஹதீஸை இட்டுக்கட்டத் தொடங் கியவன் மூன்றாவது கலீஃபா உதுமான் இப்ன் அஃப்பானை எதிர்த்து நின்ற இப்னு அதீஸ் என்பவனாகும். அவன் உதுமானைக் கண்டிக்கும் நபிகளாரின் ஹதீஸ் ஒன்றை அப்துல்லாஹ் இப்னு மஸூதை ஆதாரம் காட்டி இட்டுக்கட்டினான்.(2) இதன்படி நபி பெயரால் ஹதீஸை இட்டுக்கட்டுவது உதுமானுடைய கிலாஃபத் தின் இறுதிப் பகுதியில் ஆரம்பமானதாகத் தோன்றுகின்றது.

இன்னொருபுறம் நபிகளாரின் காலத்திலேயே அவர்களின் ஹதீஸ்களை இட்டுக்கட்டல் தொடங்கிவிட்டதாக முஹம்மத் அபூ ஸஹ்வ், அஹ்மத் அமீன் ஆகியோர் நம்புகின்றனர்.(3) ‘‘என்னைப் பற்றி மனமறிய ஏதேனும் பொய்யை இட்டுக்கட்டுபவர் நரக நெருப்புக்கு ஆளாவார்’’ என்ற நபிகளாரின் எச்சரிக்கையொன்றே இதற்கு அவர்கள் காட்டும் ஆதாரம்.(4) இது சற்று நெருடலான சிந்தனையாகும். ஏனெனில் பெருமானார் (ஸல்) தங்களின் சொல் செயல் இரண்டினதும் சுயத்தை உறுதிபடுத்துவதற்காய் விடுத்த முன்னெச்சரிக்கையாக இதனைக் கொள்ளமுடியும். (எவர் பெயரி லேனும் வாய்மொழிகளை இட்டுக்கட்டும் போக்கு அரபு சமூ கத்தில் காணப்பட்ட ஒன்று.) ஆக, ஏலவே இட்டுக் கட்டத் தொடங்கிவிட்டவர்களுக்கு எதிராகப் பெருமானார் விடுத்த எச்ச ரிக்கையாய் இதனைக் கொள்ளத் தேவையில்லை. அத்துடன் நபிகளார்மீது நபித்தோழர்கள் கொண்டிருந்த உண்மையான பற்றும் விசுவாசமும் வெகு பிரசித்தமானவை. நபிகளாரின் பெயரால் அவர்கள் வேண்டுமென்றே ஹதீஸ்களை இட்டுக் கட்டியிருப்பர் என்பது நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒன்று. அவர்கள் தம் உயிரினும் மேலாய் நபியை நேசித்தவர்கள். நபிக்காக இன்னுயிர் ஈயத் தயாராய் இருந்தவர்கள்.

மூன்றாவது கலீஃபா உதுமானுக்கெதிராக மக்களைத் தூண்டி விடுவதில் அவரின் எதிரிகள் வெற்றிகண்ட ஹிஜ்ரி 41 ஆம் ஆண்டு தான் ஹதீஸ் இட்டுகட்டப்படத் தொடங்கிய காலம் எனக் கருது கிறார் முஹம்மத் அபூ ஸஹ்பாஹ். நபிக்கு எதிராகப் பொய்யான பல ஹதீஸ்களை இட்டுக்கட்டத் தொடங்கிய மூலகர்த்தா இப்னு ஸபா என்பவனே எனக் குறிப்பிடுகின்றார் அவர். அலி இப்னு அபூ தாலிபைத் தமது வாரிசாக நபிகளார் குறிப்பிட்டார் என்பது இத்தகைய ஹதீஸ் களில் ஒன்று.(5) எனினும் ஓர் முக்கியமான வரலாற்றுண்மையை அபூ ஸஹ்பாஹ் காணத் தவறிவிட்டார். மூன்றாம் கலீஃபா கொலைசெய்யப்பட்டது ஹிஜ்ரி 35 ஆம் ஆண்டு. எனவே முஸ்லிம் களை அவர்களது மத நம்பிக்கைக்கு எதிராகவும் அவர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் எதிராகவும் அவர்களின் தலைமைத்துவத்துக்கு எதிராகவும் தூண்டிவிடுவதற் காக இப்னு ஸபா துரோகத்தனமாய் நபியின் பெயரால் போலி ஹதீஸ்களை இட்டுக்கட்டத் தொடங்கியது ஹிஜ்ரி 41ஆக இருக்க முடியாது அது ஹிஜ்ரி 30ஆக இருத்தல் வேண்டும்.

ஸுப்ஹி அல்-ஸாலிஹ் என்பவர் ஹதீஸ் இட்டுக்கட்டல்களின் தோற்றம் முதன் முதலாகப் பதிவாகியது நான்காம் கலீஃபா அலி இப்னு அபூதாலிபின் ஆட்சியின்போது - அதாவது முஸ்லிம் சமூகம் பல்வேறு முகாம்களாகப் பிரிந்தபோது - என நம்புகிறார். ஒவ்வொரு பிரிவும் அதனதன் நிலைப்பாட்டுக்கு ஆதரவு தேடு வதற்காக நபிகளாரின் பெயரால் ஹதீஸ்களைப் புனையத் தொடங்கின.(6)

தொகுத்துரைப்பதாயின் நபித்துவ வழிமுறைகளின் இட்டுக்கட் டல்கள் உதுமானுடைய கிலாஃபத்தின் நடுப்பகுதியில் ஆரம்ப மாகி அலி, முஆவியா ஆகியோரின் காலத்தில் உச்சநிலை அடைந்து, அப்பாஸியாக்களின் காலம்வரை நீடித்தன எனலாம்.

## இட்டுக்கட்டலுக்கான காரணிகள்

நபித்துவ இட்டுக்கட்டலுக்கு இட்டுச் சென்ற காரணிகளை இனம்காண்பது பெரிதும் சிரமமானதொரு கருமமல்ல. இட்டுக்

கட்டப்பட்ட அறிவிப்புகளை மேலோட்டமாய்ப் பரிசீலிக்கும் போதே நபிகளாரின் பெயரால் புனையப்பட்டவை எவை, ஏன் என்பன தெளிவாகிவிடும். உள் நோக்குடன் இட்டுக்கட்டப் பட்டவைகளைப் பொறுத்தவரை (அ) கிலாஃபத் சம்பந்தமாகவும் வாரிசு சம்பந்தமாகவும் தத்தம் நிலைப்பாடுகளை மக்கள் நம்பச் செய்தல் (ஆ)இஸ்லாமிய போதனைகளின் தூய்மைக்கு களங்கம் கற்பித்தல் (இ)அவரவரின் வணிக நலன்களை முன்னெடுத்தல் (ஈ)மக்களை மதவாழ்வின் பக்கம் ஈர்ப்பதில் அளவுமீறிய ஆர்வம் (உ) லௌகிக நலன்களுக்காக ஆட்சியாளரை திருப்திபடுத்த முனைந்தமை (ஊ) அறிவாளி என்ற படிமத்துடன் பேரும் புகழும் பெற விரும்பியமை முதலாய காரணங்களுக்காக நபிபெயரால் அறிவிப்புகள் இட்டுக்கட்டப்பட்டன.

### 1- அரசியல் இயக்கங்கள்

மூன்றாவது கலீஃபா உதுமான் நிர்வாக விவகாரங்களைக் கையாண்டவிதம் கண்டு அதிருப்தியுற்ற முஸ்லிம் பேரரசின் சில பகுதியினரின் வெறுப்பு உச்சமடைந்து அவரது கொலையில் முடிந்தமை பொதுமக்களையும் சமூகத்தின் தலைவர்களையும் பேரதிர்ச்சியில் ஆழ்த்திய பயங்கர நிகழ்வாகும். நான்காம் கலீஃபா அலி (ரலி) ஆட்சியில் அமர்த்தப்பட்டதும் முஸ்லிம் சமூகத்தில் அராஜக நிலையை உண்டுபண்ணியவர்களுக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென முன்னணித் தவைர்கள் கோரிக்கையெழுப்பினர். புதிய கலீஃபாவோ பிரச்சினைக்கு முடிவு காண்பதில் தமக்கேயுரிய முறைமையைக் கையாண்டதால் முஸ் லிம் சமூகம் மீண்டும் பிளவுற்றது. இம்முறை முஆவியாவின் ஆதரவாளர்கள், ஆயிஷாவின் ஆதரவாளர்கள், அலியின் ஆதரவா ளர்கள் என மூன்று அரசியல் முகாம்கள மேற்கிளம்பின. அரசியல் பிரிவுகள் எதிரெதிர் தரப்பினர்களிடையே கடுமையான இராணுவ மோதல்களுக்கு இட்டுச் சென்றன. சண்டைகள் மூண்டு போராளி களுக்குப் பேரிழப்புகள் நேர்ந்ததோடு உளவியல் ரீதியாக சந்தேகச் சூழல் உருவாகிற்று. பாரிய ஊழல்கள் தலைதூக்கக் கண்டு முஸ்லிம் சமூகத்தின் பெரும்பகுதியினர் பேரதிர்ச்சியுற்றனர்.

ஒவ்வோர் அரசியல் பிரிவும் தன்பக்கம் மக்களை வென்றெடுக்க முயன்றது. இதற்கு மிகவும் இலகுவான வழிகளில் ஒன்றுதான் அதனதன் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக நபிகளாரின் பெயரால் புதிய ஹதீஸ்களை அறிமுகம் செய்தல்.

இவ்வாறு விவகாரம் உச்சமடைந்தபோது இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் இருவகையின வாகும். ஒருவகை, பிரபல தலைவர்கள் மீது வசைமாரி பொழிவது, மறுவகை, அவர்களைப் போற்றிப் புகழ்வது. பிந்திய வகையில் முஆவியாவின் அந்தஸ்து உச்சிமீது வைத்துப் போற்றப்படுவதை, இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களைப் பார்வையிடுவதன் மூலம் ஒருவர் கண்டுகொள்ளலாம். முதலா வது ஹதீஸ் அமரர் ஜிப்றீல் தங்கப் பேனாவுடன் நபிகளாரிடம் இறங்கி வந்ததாகக் குறிப்பிடுகின்றது. அல்லாஹ்வின் விருப்பப்படி பேனாவை முஆவியாவிடம் கையளிக்குமாறு கேட்டுக் கொண்ட துடன் அதனைக் கொண்டு ஆயத்துல் குர்ஷியை (2:255) எழுதுமாறு ஆலோசனை கூறும் படியும் ஜிப்றீல் நபிகளாரிடம் கூறினார். அப்பேனாவைக் கொண்டு முஆவியா அத் திருவசனத்தை (அழகிய கையெழுத்தில்) எழுதினார். அதனைக் கண்ணுற்ற நபிகளார் இறுதித் தீர்ப்பு நாள்வரை அத்திருவசனத்தை ஓதுவோருக்குக் கிடைக்கக்கூடிய மொத்தமான நற்கூலிக்கு நிகரானதை அவரது கணக்கில் அல்லாஹ் எழுதியுள்ளதாக முஆவியாவிடம் அறிவித் தார்கள்.(7) ''அல்லாஹ்வின் பார்வையில் நம்பிக்கைக்குரியோர் மூவர் அவர்கள் நான், ஜிப்றீல், முஆவியா'' என நபிகளார் நவின்றதாக இரண்டாவது அறிவிப்பு கூறுகின்றது.(8) மூன்றாவது அறிவிப்பு ''தனது வெளிப்பாடுகளைப் பொறுத்தமட்டில் அல் லாஹ் விண்ணில் ஜிப்றீலையும் மண்ணில் முஹம்மதையும் முஆவியாவையும் நம்பினான்'' என நபிகளார் நவின்றதாகக் கூறுகின்றது.(9) நான்காவது அறிவிப்பு நபிகள்பிரான் முஆவி யாவை வருமாறு அழைப்பு விடுத்து அவர் வந்ததும் அபூபக்கர், உமர் உட்பட தம்மைச் சூழ இருந்தவர்களிடம் முஸ்லிம்களின் தலைமைத்து வத்தை முஆவியாவிடம் ஒப்படைக்குமாறும் அவர் அதற்கு முற்றிலும் தகுதியானவர் என்றும் கூறியதாக அறிவிக்கின்றது.(10) ஐந்தாவது அறிவிப்பு உயிர்கள் மீண்டும்

எழுப்பப்படும் நாளன்று முஆவியா ஒளியினாலான ஆடையை அணிந்தவராக எழுப்பப்படுவார் என நபிகளார் கூறியதாக அறிவிக்கின்றது.(11)

இவற்றுக்கு நேர்மாற்றமாக முஆவியாவுக் கெதிரான கண்ட னங்களும் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களில் உள. ''இந்த மின்பரி லிருந்து நீங்கள் முஆவியாவைக் கண்டால் அவரைக் கொன்று விடுங்கள'' என நபி (ஸல்) கூறினார் என்கின்றது ஓர் அறிவிப்பு.(12) இரண்டாவது அறிவிப்பு ''முஸ்லிம்களின் தலைவராக அவர் தீமையை நன்மையாகவும் நன்மையைத் தீமையாகவும் மாற்றி விடுவார். அவரது தவறுகள் அளவுமீறியதாய் இருக்கும்'' என முஆவியா பற்றி நபி (ஸல்) கூறினார் என்கின்றது.(13) மூன்றாவது ஹதீஸ் முஆவியாவையும் அம்ர் இப்னுல் ஆஸையும் பற்றியது: ''யா அல்லாஹ்! அவர்கள் இருவரையும் அல்லலுக்குள் ஆழ்த்தி விடு. யா அல்லாஹ்! அவர்களை நரக நெருப்பில் தள்ளிவிடு'' என நபி (ஸல்) பிரார்த்தித்தார்''.(14)

ஆயிஷா நாயகிக்கு ஆதரவாகவும் எதிராகவும் இட்டுக்கட்டப் பட்ட ஹதீஸ்களும் காணப்படுகின்றன. ஆதரவான ஹதீஸ்கள் வருமாறு: நபிகளார் அபூபக்கரின் புதல்வியருள் ஒருவரை மணப் பதை அல்லாஹ் விரும்புவதாக நபியிடம் ஜிப்றீல் அறிவித்தார். எனவே அபூபக்கரிடம் அவரது மகளைக் கைத்தலம்பற்றத் தரு மாறு நபிகளார் வேண்டினார். அபூபக்கர் திருமணப் பருவமடைந்த தமது மூன்று புதல்விகளையும் நபிக்குக் காட்டினார். நபிகளார் ஆயிஷாவை மணக்க வேண்டுமென்பது அல்லாஹ்வின் நாட்ட மாகையால் அவர் ஆயிஷாவைத் தேர்ந்தெடுத்தார்.(15) இது அப் பட்டமான பொய் என்பதை இரு ஆதாரங்கள் நிரூபிக்கின்றன. ஆயிஷாவுடன் நபிகளாரின் மணவினை பூர்த்தியானது மக்கா விலேயே அன்றி மதீனாவில் அல்ல. அடுத்து அபூபக்கருக்கு அப்பொழுது இருந்தது ஆயிஷா, அஸ்மா ஆகிய இரு புதல்வியர் மட்டுமே. அறிவிப்பில் கூறப்படுவதுபோல் மூன்று புதல்விகள் அல்ல. அபூபக்கரின் மூன்றாவது மகள் அவர் காலமான பின் பிறந்தவர். அவர் பெயர் உம்மு குல்தூம்.(16)

*ஆயிஷா மீதான கண்டனங்களைப் பொறுத்தவரை பின்வரும் ஹதீஸ் ஸிப்பீன் போருக்குப் பின் இட்டுக்கட்டப்பட்டதாகும். ''பெண்ணின் தலைமையின் கீழ் மக்கள் வெற்றிபெறல் முடியாது'' என நபி (ஸல்) நவின்றார்.[17]*

*அலி இப்னு அபூதாலிபைப் புகழ்ந்துரைக்கும் நபிமொழிகள் அநேகம். அவற்றுள் சில கீழே தரப்படுவன:*

1. *''நானும், ஹாருன் இப்னு இம்ரானும், யஹ்யா இப்னு ஸக்கரியாவும், அலி இப்னு அபூ தாலிபும் ஒரே களிமண்ணி லிருந்து படைக்கப்பட்டோம்'' என நபி (ஸல்) கூறினார்.[18]*
2. *''அலி இப்னு அபூதாலிப் எனது சகோதரரும் எனது மந்திரியும் எனது வாரிசும் ஆவார்; எனக்குப் பின் எனது கடனை அவர் செலுத்துவார்; எனது வாக்குறுதியை அவர் நிறைவேற்றுவார்'' என நபி (ஸல்) கூறினார்.[19]*
3. *''அலியின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருத்தல் ஒரு வணக்கம் (இபாதா) ஆகும்'' என நபி (ஸல்) கூறினார்.[20]*
4. *''ஆதத்தின் அறிவையும் நூஹூவின் புரிதலையும் இப்றாஹீ மின் ஞானத்தையும் யஹ்யாவின் பக்தியையும் மூஸாவின் பற்றுதலையும் பார்க்க விரும்புவோர் அலியைப் பார்க் கட்டும்'' என நபி (ஸல்) கூறினார்.[21]*
5. *''குர்ஆனில் எனது பெயர் ''வஷ்ஷம்ஸி வழ்ழுஹாஹா'' (சூரியனும் அதன் பிரகாசமும்) என்பதாகும்; அலியின் பெயர் ''வல்கமரி இதா தலாஹா'' (அதனைதத் தொடரும் சந்திரன்) என்பதாகும்; ஹஸன் ஹுஸைனின் பெயர்கள் ''வன்னஹாரி இதா ஜல்லாஹா'' (பகல் பொழுதின் வெளிச் சம்) என்பதாகும்; உமையாக்களின் வம்சம் ''வல்லைலி இதா யஃஷாஹா'' (அதனை மூடிக் கொள்ளும் இரவு)'' என நபி (ஸல்) நவின்றார்.[22]*
6. *அபூபக்கரும் உமரும் ஃபாத்திமாவைத் தமக்கு மணமுடித் துத் தருமாறு நபியிடம் கேட்டபோது நபி (ஸல்) அலியை*

நோக்கி 'யா அலி! ஃபாத்திமா உமக்குரியவர் வஞ்சகர் (தஜ்ஜால்)களுக்கு அல்ல'என நபி (ஸல்) நவின்றார்.[(23)]

இவற்றுக்கு நேர்மாற்றமாய் ''தலைமைத்துவம் உமக்கோ உமது வாரிசுகளுக்கோ உரியதல்ல'' என நபி (ஸல்) கூறினார்.[(24)] என்று ஒரு அறிவிப்பு உள்ளது. கிலாஃபத்துக்கு அலி தகுதியானவர் என மக்கள் கொள்ளாதிருப்பதற்காக, அவர்களது வைரிகளால் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ் இது.

ஹிஜ்ரி 66 இல் நேர்மையில்லாதவனும் சதிகாரனுமான அல்- முக்தார் அல்- தக்காஃபி, நிர்வாகத்துக்கு எதிராகக் கலகஞ்செய்து கூஃபாவைக் கைப்பற்றிக் கொண்டான். பின்னர் தனது நிலைப் பாட்டை அங்கீகரிக்கச் செய்யும் வகையில் நபிகளாரின் பெயரால் ஹதீஸ்களைப் புனைந்து தருமாறு சமகால ஹதீஸ் புலமையாளர் ஒருவரிடம் கேட்டான். அதற்கு வெகுமதியாகப் பத்தாயிரம் திர்ஹமும், பரிகளும், அடிமைப் பரிவாரமும், விலையுயர்ந்த ஆடைகளும் தருவதாய் வாக்களித்தான். அதற்கு இணங்க மறுத்த முஹத்திக்கள், பிரதியாக ஸஹாபாக்கள் சிலரின் பெயரால் அவற்றைப் புனைந்து தருவதாய்க் கூறினர்.[(25)] உண்மையில் அநேக ஹதீஸ்கள் அரசியல் நோக்கங்களுக்காகப் புனையப்பட்டவை. ஆட்சியாளரை அபகீர்த்திக்குள்ளாக்கும் வகையில், அவர்கள் நபி களாரால் இழித்துரைக்கப்பட்டவர்களென சித்தரிக்கும் ஹதீஸ்கள் புனையப்பட்டன. உதாரணமாக, யஸீத் இப்ன் முஆவியாவை ஹுஸைனின் கொலைகாரனென நபிகளார் சபித்தார்கள். அதே போன்று வலீத் இப்னு அப்துல் மாலிக்கையும் இட்டுக்கட்டப் பட்ட நபிமொழியொன்று கண்டிக்கின்றது.[(26)]

## 2- இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் தீங்கிழைத்த குழுக்கள்

இஸ்லாமிய வரலாற்றில் ஸனாதிக்காஹ் (மத நிந்தனையாளர்/ நயவஞ்சகர் வெளிக்கு முஸ்லிம்களாகக் காட்டிக் கொண்டு மனதால் குரோதம் பாராட்டிய வஞ்சகர்கள், மதத்தை நிந்திக்கும் கருத்துக்களைப் பரப்பியோர்) குழுவினால் ஏராளமான ஹதீஸ்கள் இட்டுக்கட்டப்பட்டன. இவ்வாறு இஸ்லாமிய வாழ்வின் சகல

துறைகளிலும் இவர்கள் போலி ஹதீஸ்களைப் புனைந்தனர். அப்துல் கரீம் இப்னு அபீ அல்-அர்ஜா என்பவன் தனது உறவின ருள் ஒருவரான ஹம்மாத் இப்னு ஸலாமாவின் உண்மையான ஹதீஸ் தொகுப்புகளினூடு தான் உருவாக்கிய போலி ஹதீஸ்களை இடைச்செருகல்களாய்த் திணித்தான். தான் கொல்லப்படும் வரை சட்டபூர்வமானதை சட்ட விரோதமானதாயும் சட்டவிரோதமான தைச் சட்டபூர்வமானதாயும் பிரகடனஞ் செய்யும் எத்தனத்தில் நபிபெயரால் நாலாயிரம் ஹதீஸ்களைப் புனைந்தமையை ஏற்றுக் கொண்டான்.(27) நயவஞ்சகனொருவன் நாலாயிரம் ஹதீஸ்களை இட்டுக்கட்டியதைத் தனது முன்னிலையில் ஒப்புக்கொண்டதாய் ஹதீஸ் பேரறிஞர் அல் மஹ்தி அறிவிக்கின்றார்.(28)

இது இவ்வாறிருக்க, அநேக யூத குழுக்களின் உறைவிடமாய் விளங்கி வந்தது மதீனா. நபிக்கெதிராக அவர்கள் இழைத்த பல்வேறு துரோகச் செயல்கள் காரணமாக அவர்களை அங்கிருந்து வெளியேற்றும்படியாயிற்று. முஸ்லிம்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளோ, பகிரங்கப் பிரச்சாரங்களோ தமக்கு உதவப் போவதில்லை என அவர்கள் உணர்ந்திருந்தனர். மிக்க பாதிப்புக் குள்ளான யூத குழுவினர்கள், ஹதீஸ்களை இட்டுக்கடுவதன் மூலம் இஸ்லாத்தின் அடிப்படைப் போதனைகளைச் சிதைக்கலாம் எனக் கொண்டு அத்தகு முனைவுகளில் ஈடுபடலாயினர். முஸ்லிம்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்து மதத்தில் பிரிவினையொன்றைத் தோற்றுவிப்பது இவர்களது நோக்கமாக அமைந்தது. இதற்கு நல்ல உதாரணம் இப்னு ஸபா. இவன் இஸ்லாத்தைத் தழுவி இஸ்லா மியப் போர்வையில் இஸ்லாமியப் பேரரசு முழுவதும் சுற்றித் திரிந்து புதிய முஸ்லிம் பிரதேசங்களில் சந்தேகம் கொள்ளாத விசு வாசிகளை ஏமாற்றுவதில் வெற்றிகண்டான். நபி பெயரால் ஹதீஸ் களைப் புனைந்து முஸ்லிம் சமூகத்தவர் மத்தியில் அவற்றைப் பரப்பலானான்.

மற்றொருவன் பயான் இப்னு ஸம்ஆன் அல்-நஹ்தி என்பவன். தான் ஒரு நபியென உரிமை கொண்டாடிய மத நிந்தகன். இத் துரோகத்தனமான உரிமை கொண்டாடலுக்காக அவனும் போலி

ஹதீஸ்களைப் புனைந்திருக்கக் கூடும். பின்னர் மத நிந்தனைக்காக இவன் கொலைசெய்யப்பட்டான். முகீரா இப்னு ஸய்த் என்ற மந்திரவாதியும் நபித்துவ வழிமுறைகளின் மரபைக் களங்கப் படுத்துவதில் பங்காற்றியவன். இவன் தனது துரோகச் செயலுக் காக சிரச்சேதம் செய்யப்பட்டான்.[29]

இஸ்லாத்தின் விரோதிகளால் இட்டுக்கட்டப்பட்ட வியப் பூட்டும் ஹதீஸ்களின் உதாரணங்கள் சில வருமாறு:

(1) இறைவனின் அடிப்படை மூலம் பற்றிய கேள்வியொன் றுக்குப் பதிலளிக்கையில் நபி கூறினார்: அது மண்ணையோ விண்ணையோ சேர்ந்ததல்ல. அவன் ஒரு குதிரையைப் படைத்து அதனை ஓடச்செய்து அது வியர்க்கத் தொடங்கிய போது அவ் வேர்வையிலிருந்து தன்னைத் தானே படைத் தான். முஹம்மத் இப்னு ஷுஜா அல்- பல்கி என்ற மத நிந்தகன் புனைந்த ஹதீஸ் இது.[30]

(2) ஒரு பெண் ஜின் பிற ஜின்களுடன் நபியைத் தரிசிப்பது வழக்கமாய் இருந்தது. ஒரு நாள் அது வரத் தாமதமாகி விட்டது. ஏன் இவ்வளவு தாமதம் என நபி கேட்க அப் பெண் ஜின் கூறியதாவது: துக்கம் அனுஷ்டிக்கும் ஒரு குடும்பத்துக்கு ஆறுதல் கூற நான் இந்தியா சென்றிருந்தேன். வரும் வழியில் ஓர் அதிசயத்தைக் கண்டேன். ஒரு கற் பாறை மீது ஷைத்தான் தொழுதுகொண்டிருப்பதைக் கண் டேன். ஆதத்தின் சந்ததி யை ஏன் வழிகெடுத்தாய் என அவனிடம் கேட்டதற்கு அவன் பதில் கூறவில்லை. நான் அதனை மீண்டும் கேட்க அப்போதவன் பிரார்த்தித்து விட்டு 'நான் என் எஜமானனிடம் மன்னிப்பு கேட்கிறேன்' என்றான். இவ்வாறு அது கூறக் கேட்ட நபி முன்னென்றும் இல்லாதவாறு சிரித்தார்.[31] இது பெரும்பாலும் முஸ்லிம் களுக்கு ஷைத்தான்மீது அனுதாபம் ஏற்படுவதற்காய்ப் புனையப்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

(3) நபி (ஸல்) கூறினார்: ''எவரின் கரங்களிலிருந்து முஸ்லி மல்லாத ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்கின்றாரோ

அவர் அந்தப் புதிய முஸ்லிமின் சொத்துகளுக்கு வாரிசாவார்.''[32] இது இஸ்லாத்தின் வாரிசுரிமை சட்டத்தை மாற்றுவதற்காகப் புனையப்பட்டதென்பது வெட்டவெளிச்சம்.

4) நபி (ஸல்) கூறினார்: ''தன் வாழ்நாளில் ஸக்காத் கொடுக்காத ஒருவர் குர்ஆனின் வெளிச்சத்தில் தனது மரணசாசனத்தை எழுதுவதன் மூலம் அதற்குப் பரிகாரம் காணலாம்.''[33] இந்தப் புனைவு ஸக்காத் கொடுக்கத் தவறியவர்களுக்கு ஆறுதல் கூறுதற்காகப் புனையப்பட்டதென்பது தெளிவாகின்றது.

(5) நபி (ஸல்) கூறினார்: ''150 ஆம் ஆண்டில் மணஞ் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அவ்வாண்டில் மணஞ் செய்பவரை அல்லாஹ் சித்தசுவாதீனம் இழக்கச் செய்வான். அவரது மதநம்பிக்கையை இல்லாமலாக்கி இம்மை மறுமை இரண்டிலும் அவரை நஷ்டவாளியாக்கி விடுவான்.''[34] இது முஸ்லிம் சனத்தொகையைப் பலவீனப்படுத்தும் நோக்குடன் திருமணத்தில் அவர்களை ஆர்வமிழக்கச் செய்வதற்காய்ப் புனையப்பட்டதுபோல் தோன்றுகிறது.

(6) நபி கூறினார்: ''பலதெய்வ நம்பிக்கையால் நலனேதும் விளையாததுபோல் ஏக தெய்வ நம்பிக்கையால் எதிர்விளைவு எதுவும் நேராது''[35] இது முஸ்லிம்களை மனஇச்சைப்படி நன்மை தீமைகளைச் செய்யத் தூண்டவும் பொய், களவு, கொலை, விபச்சாரம், வட்டி, பிறர் சொத்தை அபகரித்தல் இன்னோரன்ன பாபச் செயல்களில் ஈடுபடல் மதநம்பிக்கையைப் பாதிக்காது என நம்பவும் செய்வதற்கு இட்டுக்கட்டப்பட்டதாகும்.

(7) நபி (ஸல்) கூறினார்: ''எனக்குப்பின் நபியொருவர் வரமாட்டார் வேறுவிதமாய் அல்லாஹ் நாடினாலன்றி.''[36] இந்த ஹதீஸில் முற்பகுதி ஸஹீஹ் புஹாரி ஸஹீஹ் முஸ்லிம் உட்பட ஆதாரபூர்வ ஹதீஸ் கிரந்தங்களில்

காணப்படும் உண்மையான ஹதீஸாகும். ''அல்லாஹ் வேறு விதமாய் நாடினாலன்றி'' என்ற பிற்பகுதி முஹம்மத் இப்னு ஸைத் என்ற நயவஞ்சகன் இட்டுக்கட்டிய பிற்சேர்க்கை யாகும். முஹம்மதின் இறுதி நபித்துவம் என்பது இஸ் லாத்தின் நிகரற்ற அடித்தளம் என்பதை இந்நயவஞ்சகர் கள் நன்கறிந் திருந்தனர். எனவே முஹம்மதின் இறுதி நபித்துவம் பற்றி மக்கள் மனங்களில் சந்தேகத்தை உண்டு பண்ணி அவர்களுக்குப் பின்வந்த போலி நபிகளைப் பற்றிய ஐயத்தை நீங்கச் செய்வதே இதுபோன்ற இட்டுக் கட்டல்களின் நோக்கம் என்பது பிரத்தி யட்சம். மேலும் முஹம்மத் இப்னு ஸைத், நலமான ஹதீஸ்களைக் கண்ட போதெல்லாம் நபி (ஸல்) அவர்கள் வரை செல்லும் அறி விப்பாளர் வரிசை ஒன்றை அவனே உருவாக்கி அறிமுகம் செய்தான்.[37]

### 3. குறிப்பிட்ட சிந்தனைப் பிரிவுகளை வலுவுறச்செய்தல்

இஸ்லாமிய ஆட்சி பரந்து வியாபித்து அதன் எல்லைகள் ரோமா புரிக்கும் பாரசீகத் துக்கும் விரிவடைந்தபோது முஸ்லிம்களுக்கும் பிறபகுதிகளைச் சேர்ந்த ஏனையோருக்கும் இடையே ஊடாட் டங்கள் நிகழ்ந்தன. பின்னவர்களின் முதுசங்கள் முஸ்லிம்களுக்குக் கைமாறின. அந்நியரிடமிருந்து இரவல் பெற்ற புதிய அறிவு அறிஞர்களிடையே விவாதங்களைத் தோற்றுவித்தன. இறுதியில் இவை மெய்யியல் தன்மை (Philosophic) வாய்ந்த பல கருத்து மோதல்களுக்கான காரணமாய் அமைந்தன. குர்ஆனின் நிலை, மனிதனின் விதி, மனித சுதந்திரம், பெரும் பாவங்களின் தன்மை யும் விளைவும், விதி பற்றிய முன்தீர்மானம் போன்றவை இவ் விவாதங்களின் கருப்பொருளாயின. வெறும் அறிவார்ந்த விவா தங்கள் மூலம் சாதாரண மக்களை நம்பச் செய்தல் கடினமான காரிய மாகையால் தர்க்கிப்போரும் கருத்துநிலை சார்ந்த ஆதர வாளர்களும் இதற்குப் பதிலாக நபிபெயரால் ஹதீஸ்களை இட்டுக்கட்டும் கைங்கரியத்தில் இறங்கினர் .

*முஹ்தஸிலா, முர்ஜி, காதரி, ஜபரீ, அஷ்ஹரி முதலிய பிரதான பிரிவைச் சேர்ந்த ஆர்வலர்கள் அவரவரது சிந்தனைப் பள்ளி களைச் செல்லுபடியானதாய்க் காட்டுதற்குத் தடைசெய்யப்பட்ட பிராந்தியங்களுள் பிரவேசித்து ஹதீஸ்களை இட்டுக் கட்டத் தொடங்கினர். ''நயக்கத்தக்கதோர் கருத்தைக் கண்டபோதெல் லாம் அதனை நபிமரபாக மாற்றினோம்'' என தன் சகாக்களுடன் கூடி தான்செய்த கைங்கரியங்களைப் பின்னைய காலங்களில் ஒருவர் பிராயசித்தமாய் வெளியிட்டார்.*[38]

*உதாரணமாக ''இறைவிசுவாசம் (ஈமான்) நிலையான தன்மை வாய்ந்ததல்ல. அது அதிகரிப்பதும் குறைவதும் உண்டு'' என ஒரு சிந்தனைப் பிரிவினர் நம்பினர். இக்கருத்து நிலை சார்ந்தோர் இவ்வகையான பகுத்தறிவாராய்ச்சியில் தாமே திருப்தி காணாத வர்களாய் தம் அணுகுமுறைக்கு வலுவூட்டவும் அதனை மக்கள் நம்பச் செய்யவும் தமது கருத்தை நபிகளார் மீது சாட்டினர். இதற்கு மாறாக ஈமான் நிலையானது என்ற கொள்கையினர் தம் கருத்துக்கு ஆதரவாகப் பின்வரும் ஹதீஸைப் புனைந்தனர்: ''தகீபிலிருந்து வந்த ஒரு குழுவினர் நபியிடம் 'ஈமான் அதிகரிப்பதும் குறைவதும் உண்டா?' என வினவினர். அதற்கு நபியவர்கள் 'பூமியில் நடப் பட்ட மலைகளைப் போல் உள்ளத்துள் உறுதியானது ஈமான். அது அதிகரிப்பதும் குறைவதும் உண்டு எனக் கூறல் மத நிந்தனை யாகும்' என்றார்கள்'' முர்ஜிகள் தம் கருத்தை ஆதாரபூர்வமான தென நிறுவுதற்குப் பல ஹதீஸ்களைப் புனைந்தனர். இப்பிரிவின் பிரபலத் தலைவரான முஹம்மத் இப்னு அல்-காஸிம் அல்-தல் கானி இதற்கு நல்ல உதாரணம் ஆவார். தமது பிரிவின் கொள் கையைக் காத்திரமானதாய்க் காட்டுதற்குப் பின்வரும் ஹதீஸ் உட்பட பல ஹதீஸ்களை அவர் புனைந்துள்ளார்:*

*நபி கூறினார்: ''ஈமான் அதிகரிப்பதும் குறைவதும் உண்டு எனக் கூறுவோர், அதிகரிக்கும் என்பது நயவஞ்சகமாகும்; குறையும் என்பது மத நிந்தனையாகும் என அறியக் கடவர். அவர்கள் இதற்காகப் பிராயாச்சித்தம் தேடினால் அவர்களை விட்டுவிடுங் கள். அப்படிச் செய்யா விடின் அவர்களின் கழுத்தை வாளால்*

வெட்டுங்கள். அவர்கள் பெருங் கருணையாளனின் பகைவராவர். அவர்களின் தொழுகை நோன்பு ஸக்காத் இறைபக்தி முதலியன ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. அவர்கள் நபிகளாரைச் சார்ந்தோர் அல்லர் என்பதை நினைவில் கொள்வீர்களாக.''[39]

ஜபரியாக்கள் மனிதனின் விதி ஏலவே எழுதப்பட்டு விட்ட ஒன்று என நம்பினர். இதற்குப் பதிலடி கொடுப்பதற்காக கதரியாக்கள் பின்வரும் ஹதீஸைப் புனைந்தனர்: ''இறுதித் தீர்ப்பு நாளில் அல்லாஹ் எல்லோரையும் ஒரே இடத்தில் ஒன்று சேர்ப்பான். அப்போது, புனித சிம்மாசனத்தின் கீழிருந்து அறிவிப்பாளர்ஒருவர் 'பாவங்கள் கழுவப்பட்டோர் சுவனத்தில் நுழைக!' என அழைப்பு விடுப்பார்.[40] இச்சிந்தனைப் பிரிவுகளைச் சேர்ந்த தீவிர வெறியர்கள் எல்லை மீறியவர்களாக தாம் செய்வதன் பாரதூரம் அறியாமல் ஒருவரையொருவர் பழிகூறி நபிபெயரால் ஹதீஸ்களைப் புனைந்தனர். இத்தகைய இட்டுக்கட்டல்களுக்கு மேலும் உதாரணங்கள் வருமாறு:

(1) நபி (ஸல்) கூறினார்: ''ஒவ்வொரு சமூகத்திலும் ஒரு நெருப்பு வணங்கி (மஜூஸி) இருக்கிறார். இந்த சமூகத்தின் நெருப்பு வணங்கிகள் கதரியாக்கள் ஆவர். அவர்கள் சுகவீன முற்றால் அவர்களைப் பார்க்கச் செல்லாதீர்கள். அவர்கள் இறந்தால் அவர்களின் ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்ளாதீர்கள்.''[41]

(2) நபி (ஸல்) ஒரு முறை கூறினார்: ''எழுபது நபிமார்களின் நாவுகளால் அல்லாஹ் நான்கு வகுப்பினரை சபித்துள்ளான்.'' அவர்களின் அடையாளம் பற்றி நபித்தோழர்கள் கேட்டனர். 'அவர்கள்தான் கதரிய்யாக்கள், ஜஹ்மிகள், முர்ஜிகள், ராஃபிதிகள்' என நபி விடை பகர்ந்தனர். அவர்களின் பிரச்சினை யாது என வினவப்பட 'நன்மை இறைவனிடமிருந்தும் தீமை ஷைத்தானிடமிருந்தும் வருவதாக கதரியாக்கள் உரிமை பாராட்டுகின்றனர். நினைவில் கொள்க. நன்மை தீமை இரண்டுமே இறைவனிடமிருந்து வருபவை. இதற்கு மாற்றமாகச் சொல்பவர் நாசமுற்றார்.

ஜம்ஹிகள் குர்ஆன் படைக்கப்பட்டது என்கின்றனர். நினைவில் கொள்க. குர்ஆன் படைக்கப்படாதது. இதற்கு மாற்றமாகச் சொல்பவர் நாசமுற்றார். முர்ஜிகள் செயல் இன்றி வெறும் மொழிதல் மட்டுமே ஈமான் என்கின்றனர். ராஃபிதிகள் அபூபக்கரையும் உமரையும் இழித்துரைக்கின்றனர். நினைவில் கொள்க இவ்விருவரையும் கோபமடையச் செய்தோர் நாசமுற்றார்.''[42]

(3) நபி (ஸல்) கூறினார்: கதிரிகள் அல்லது முர்ஜிகள் இறந்து மூன்று நாட்களின் பின் அவர்களின் சடலத்தைத் தோண்டியெடுத்தால் அவர்களின் முகம் கஃபாவிலிருந்து வேறு திசையில் திரும்பியிருக்கும்.[43]

(4) நபி (ஸல்) கூறினார்: முர்ஜிகள், கதரிகள், ராஃபிதிகள், காரிஜிகள் முதலியோரின் இறை விசுவாசம் நான்கிலொரு பகுதி களையப்பட்டு, நிராகரிப்பாளர் போன்று நிரந்தரமாய் நரகில் தங்கிவிடுமாறு தூக்கியெறியப் படுவார்கள்.[44]

இறையியல் சிந்தனைப் பிரிவுகளைச் சேர்ந்த தீவிர ஆதரவாளர்கள் தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்தவும், கருத்துகளுக்கு ஆதரவு திரட்டவும் நபிகளாரின் பெயரைத் தவறாகப் பயன்படுத்துவதில் இந்தளவு பயங்கர தூரத்துக்குச் சென்றது வியப்பூட்டுகின்றது.

### 4- நியாயவியல் குரோதங்கள்

இஸ்லாமியச் சட்டம் நியாயவியல் அறிஞர் பலரால் விளக்கப்பட்டுள்ளது. இவர்களுள் மிகப் பிரபல்யம் வாய்ந்தோர் அபூ ஹனிஃபா (மறைவு: ஹிஜ்ரி 150), மாலிக் இப்னு அனஸ் (ம: ஹிஜ்ரி 179), முஹம்மத் இப்னு இத்ரீஸ் அஷ்- ஷாஃபி (ம: ஹிஜ்ரி 204), அஹ்மத் இப்னு ஹன்பல் (மறைவு: ஹிஜ்ரி 241) முதலியோர் ஆவர். இவர்களிடையே கருத்து முரண்கள் காணப்பட்ட போதிலும் இம்மாபெரும் அறிஞர்கள் தம்மால் முடிந்த மட்டும் இஸ்லாமியச் சட்டங்களுக்கு தமது சொந்த இஜ்திஹாதின் அடிப்படையில் விளக்கமளித்து மக்களுக்கு வழிகாட்டிகளாய்த்

திகழ்ந்தனர். ஆயினும் இவர்களின் ஆதரவாளர்கள் இம் முரண் களைப் பெரிது படுத்தியதன் விளைவாக குறிப்பிட்ட ஒரு இமா மின் கருத்தே சரியானதென்றும் மற்றோரின் கருத்துகள் பிழை யானதென்றும் சாதித்தனர். இந்தளவில் இச்சர்ச்சைகள் சகிக்கக் கூடியனவாய் இருந்தன. ஆயினும் அவர்கள் தத்தம் சட்டப் பிரிவு களை ஆதரிப்பதோடு நில்லாமல் ஏனைய சட்டப் பிரிவுகளையும் அவற்றின் தலைவர்களையும் பெயர் குறிப்பிட்டுத் தாக்குவதற்கு நபிகளாரின் பெயரில் ஹதீஸ்களைப் புனைந்துரைப்பதன் மூலம் தம் செயலின் பாரதூரமறியாமல் எல்லைமீறலாயினர். இவர்கள் தம் கருத்துக்கு ஆதாரம் தேடி இட்டுக்கட்டிய ஹதீஸ்களுக்கு உதாரணம் வருமாறு:

*(1)* நபி (ஸல்) கூறினார்: ''தொழுகையில் கைளை உயர்த்தி யோரின் தொழுகை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.''[45] நபியும் அவர்தோழர்களும் தொழுகையில் தம்கைகளை உயர்த்தினர் என்ற ஆதாரபூர்வமான ஹதீஸுக்கு மாற்றமான புனைவு இது. சட்ட அறிஞர்களின் ஆதரவாளர்களிடையேயான குரோத மனப்பான் மையால் விளைந்தது. நபியின் சொல் செயல் இரண்டினதும் புனிதத்தை மதியாமல் மேற்கோள்ளப்பட்ட இப்புனைவு அதிர்ச்சி யூட்டுவதாகும். இவர்களின் குருட்டுத் தனமான அணுகுமுறை நபியின் உண்மையான ஹதீஸ்களைக் களங்கப்படுத்துவதையிட்டு இவர்கள் சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

*(2)* ஜிப்றீலும் ஏனைய மலக்குகளும் ஏழாவது வானில் தொழு ததுபோல் தொழுமாறு அமரர் தலைவர் ஜிப்றீல்மூலம் அல்லாஹ் நபிக்கு அறிவித்தான்: அதாவது ''தொழுகையில் 'அல்லாஹு அக்பர்' என மொழியும்போது உங்கள் கைகளை உயர்த்துங்கள். குனியும் போதும் அவ்வாறு செய்யுங்கள். குனிந்த நிலையிலிருந்து தலையை உயர்த்தும்போதும் அவ்வாறு செய்யுங்கள். உண்மையில் எல்லாவற்றுக்கும் ஒரு ஏணியுண்டு. தொழுகையின் ஏணி ஒவ் வொருமுறையும் 'அல்லாஹு அக்பர்' எனப் பிரகடனம் செய்கை யில் கைகளை உயர்த்துவதாகும்.''[46] தொழுகையில் கைகளை உயர்த்துவோருக்கு இது விடயத்தில் நபியினதும் தோழர்களினதும்

வழிமுறை போதவில்லை போலும். எனவே தம் கருத்தை அழுத்திக் கூற ஒரு ஹதீஸைப் புனைந்தனர்.

இறுமாப்புக் கொண்டோர் சிலர், இமாம் அபூ ஹனிஃபாவை துதித்துப் போற்றும் அதேவேளை இன்னொரு சட்டவல்லுனரான இமாம் ஷாஃபியை இழித்துரைக்கும் ஹதீஸ்களைப் புனைந்தனர்: ''என் உம்மத்தினர் மத்தியில் முஹம்மத் இப்னு இத்ரீஸ் அஷ்-ஷாஃபி என்றொரு மனிதர் இருப்பார். அவர் என் உம்மத்தினர்க்கு ஷைத்தானைவிடக் கொடியவர். அதேபோல் என் உம்மத்தினர் மத்தியில் அபூ ஹனிஃபா என்றொரு மனிதர் இருப்பார். அவர் எனது உம்மத்தின் ஒளிவிளக்காவார். அவர் எனது உம்மத்தின் ஒளிவிளக்காவார்.''(47)

### 5. வர்த்தகப் பிரச்சாரம்

மனிதன் ஒரு லௌகிகப் பிறவி. அவனுக்கு வாழ்வாதாரங்கள் தேவை. அவற்றை அவன் விலைகொடுத்து வாங்க வேண்டியுள்ளது. இதற்கு விற்பனை என்ற நடைமுறை அவசியம். நினைவுக் கெட்டாத காலம் தொட்டு மனிதன் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகிறான். சந்தை நிலவரத்துக்கேற்ப பண்டங்களை வாங்கவும் விற்கவும் செய்கிறான். சிறு வியாபாரம் பெரு வர்த்தகம் எல்லாவற்றுக்கும் விளம்பரம் தேவை. நவீன காலத்தில் இலத்திரன், அச்சு ஊடகங்களில் கவர்ச்சியும் காட்சிரூபமுமாய் விளம்பர உபாயங்கள் கையாளப்படுகின்றன. அந்நாளில் இவ்வசதிகள் இருக்கவில்லை. ஹிஜ்ரி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் நூற்றாண்டுகளில் இஸ்லாமிய ஆட்சி உலகின் பெரும் பகுதிகளுக்குப் பரவியபோது கடைக்காரர்களுக்கும் வியாபாரிகளுக்கும் விற்பனைப் பண்டங்களை விளம்பரஞ் செய்யும் தேவையேற்பட்டபோது வாய்மொழித் தொடர்புகளே விளம்பரத்துக்கான ஒரேவழியாகக் காணப்பட்டன. எனவே வர்த்தகர்கள் விளம்பரத்துக்காக நபிமொழியைப் பயன்படுத்தும் கைங்கரியத்தில் இறங்கினர். பண்டவிற்பனைக்கு ஆதரவாக நபிமொழியில் ஏதும் காணப்படாதபோது வர்த்தகத்தில் லாபம் பெறவும் வாடிக்கையாளரைக் கவரவும் நபிகளாரின்

பெயரால் ஹதீஸ்களைப் புனையத் துணிந்தனர். மாதுளை, பேரீத்தம், வாதுமை, திராட்சை, ரொட்டி, பால், காய்கறி, வெள்ளரி, தானியங்கள், உப்பு, பால் உற்பத்திப் பொருட்கள், கோழி, கத்தரிக்காய், கம்பளி ஆடை இன்னோரன்னவை பற்றியெல்லாம் நபிமொழிகள் புனையப்பட்டன. விற்பனைப் பண்டங்களை விளம்பரப்படுத்த ஹதீஸ் புனையும் திறமை பெற்றோருக்கு வர்த்தகர்கள் பணம் கொடுத்திருக்கக்கூடும். மருத்துவர்களும் இவ்வுபாயத்தைக் கையாண்டனர். சில உதாரணங்கள் வருமாறு:

*(1)* ஒவ்வொரு மாதுளையிலும் சுவனத்து மாதுளையின் விதையொன்று உள்ளது.

*(2)* நீர்ப்பூசனி ஓர் அருட்கொடையாகும். அதன் இனிமை சுவனத்தின் பூசனியுடையதைப் போன்றது.

*(3)* திராட்சையை உண்ணலாம், பருகலாம் உலர வைக்கலாம்.

*(4)* யா அல்லாஹ்! மார்க்கத்தையும் ரொட்டியையும் அனுபவித்து மகிழ அருள்புரிவாயாக! ரொட்டி இல்லாவிடின் தொழுகையில்லை; நோன்பு இல்லை; ஹஜ்ஜு இல்லை. போரில் பங்குபற்றுதலும் இல்லை.

*(5)* யா அலி! நீர் உப்பை உபயோகிப்பீராக! அது தொழு நோய், வெண்குஷ்டம், சித்தப் பிரமை முதலான எழுபது நோய் களைக் குணப்படுத்தும்.

*(6)* தயிர் சாப்பிட்ட பின் நபி (ஸல்) இவ்வாறு பிரார்த்திப்பார்: யா அல்லாஹ்! இதில் எமக்கு அருளைத் தருவாயாக! இதனை எமக்கு அதிகரித்தருள்வாயாக!

*(7)* இறைச்சியுடன் வெள்ளரிக்காயும் சாப்பிடுவோர் தொழு நோயிலிருந்து பாதுகாக்கப்படுவர்.

*(8)* பருப்பு வகை தானியத்தை உட்கொள்வீர்களாக! அது இதயத்தை மிருதுவாக்கும். விழிநீர் பெருகச் செய்யும். எழுபது நபிமார்கள் அதனை ஆசீர்வதித்துள்ளனர்.

*(9)* பாதாமும் வெண்ணெயும் வியாதியானவை. எனினும் வயிற்றினுள் சென்றதும் அவை குணமளிப்பவையாய் மாறிவிடும்.

*(10)* உங்கள் உணவுமேசைகளில் மரக்கறிகளைப் பரிமாறுங்கள். அவை ஷைத்தானை வெருண்டோடச் செய்பவை.

*(11)* சிகிரி (Endive) இலை ஒவ்வொன்றிலும் ஒரு சொட்டு சுவனநீர் உண்டு.

*(12)* கத்தரிக்காயில் ஒவ்வொரு வியாதிக்கும் நிவாரணமண்டு. அதில் தீங்கெதுவும் இல்லை.

*(13)* மக்கள் பால் உற்பத்திப் பொருட்களின் நன்மையறிந்தால் அவற்றின் நிறைக்குச் சமமாகப் பொன் கொடுத்தேனும் அவற்றை வாங்குவர்.

*(14)* செல்வந்தர் ஆடும் செம்மறியும் சாப்பிடுமாறும் ஏழைகள் கோழி சாப்பிடுமாறும் நபி (ஸல்) கட்டளையிட்டடார்.

*(15)* மனிதரொருவர் நபியிடம் வந்து தனது ஆண்மைக் குறைவு பற்றி முறையிட அவருக்கு முட்டையும் வெங்காயமும் சாப்பிடுமாறு நபி (ஸல்) ஆலோசனை கூறினார்.

*(16)* உங்களது பெண்களின் மாதவிடாயின்போது அவர்களுக்குப் பேரீத்தம்பழம் உண்ணக் கொடுங்கள். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை இரக்க சுபாவம் உள்ளதாய் இருக்கும். ஈஸா நபி பிறந்த வேளை மர்யம் பேரீத்தம் பழம் உண்டார். பேரீத்தம் பழத்தை விடச் சிறந்த ஒன்றை அல்லாஹ் அறிந்திருந்தால், மர்யத்துக்கு அதனையே ஏற்பாடு செய்திருப்பான்.[48]

*(17)* நீங்கள் கம்பளி ஆடை அணிவீர்களாக! அது உங்கள் இதயங்களில் ஈமானின் இன்பத்தை உண்டுபண்ணும். நீங்கள் கம்பளி ஆடை அணிவீர்களாக! அது உங்கள் பசியைக் குறைக்கும். நீங்கள் கம்பளி ஆடை அணிவீர்களாக! அதன் முக்கியத்துவத்தை மறுமையில் நீங்கள்

*அறிவீர்கள். கம்பளி உடை உங்களை சிந்திக்கத் தூண்டு கிறது. சிந்தனை ஞானத்துக்கு இட்டுச் செல்கின்றது. உங்கள் நரம்புகளில் இரத்தம் ஓடுவதுபோல், வயிற்றி னுள் ஞானம் ஓடும்.*[49]

*(18) 'இது அல்லாஹ்வின் அருட்கடாட்சம்' எனப் பொறிக் கப்பட்ட கார்னேலியன் கல்பதித்த கணையாழியை ஒருவர் அணிந்தால் அல்லாஹ் அவருக்கு எல்லா நன்மை களையும் அருள்வான்; எப்போதும் அவருடனிருக்கும் இரு மலக்குகளும் அவரை நேசிப்பர்.*[50]

*(19) மாணிக்கம் பதித்த கணையாழியை அணிபவரை ஒரு போதும் வறுமை தீண்டாது.*[51]

*(20) வயிறு உடலின் குழாய்கள் உள்ள தொட்டியாகும். நரம்பு நாளங்கள் அதனோடு இணைக்கப்பட்டுள்ளன. வயிறு ஆரோக்கியமாக இருந்தால், நரம்பு நாளங்களும் ஆரோக் கியமாய் இருக்கம். வயிறு நோயுற்றால் நரம்பு நாளங்க ளும் நோயுறும்.*[52] *இந்த ஹதீஸ் இப்றாஹீம் இப்னு ஜூரைஜ் என்ற மருத்துவரால் தனது மருத்துவ மனை யையும் சேவையையும் விளம்பரப்படுத்தும் நோக்கில் இட்டுக்கட்டப்பட்டது.*[53]

*இவை யாவும் வர்த்தக விளம்பரத்துக்காகவும் நுகர்வோரைக் கவர்வதற்காகவும் நபி (ஸல்) பெயரால் புனையப்பட்டவையாகும்..*

## 6. பிழைப்பும் புகழும்

*இயல்பாகவே அமைந்த விவேகத்தையும் கெட்டித் தனத்தை யும் கொண்டு பிழைப்பு நடத்தி வருவர் சிலர். அதேவேளை மேதாவிகள் என மக்கள் மத்தியில் கௌரவம் ஈட்டிக் கொள்ளவும் நாடுவர். இவர்கள் இயல்பாகவே சோம்பேறிகள். தமதும் தமது குடும்பத்தினரதும் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள கடின உழைப்புகளில் ஈடுபடமாட்டார்கள். இஸ்லாமிய நாகரிகத்தின் உச்சகட்டத்தின்போது இத்தகையோர் மஸ்ஜித்களில்*

தஞ்சம்புகலாயினர். மஜ்லிஸில் மக்களை அழைத்து அவர்களுக்கு உபந்நியாசம் புரிவர். இவர்கள் பழங்கதைகளையும் வீர வரலாறு களையும் எடுத்துரைக்கும் கதைசொல்லிகளாய் மாறினர். இத்தகை யோர் தமது வாக்குத் திறனில் மக்களை மெய்மறக்கச் செய்வ தற்காகத் தாமே இட்டுக்கட்டிய ஹதீஸ்களையும் இக்கதைகளுள் திணிக்கலாயினர். சொல்லாடல்களின் மந்திர சக்தியில் மயங்குகிற அப்பாவி சனங்களே இவர்களின் இலக்கு. இதனால் இவர்களுக்குப் பணமும் புகழும் குவிந்தன.

இன்று போலவே இஸ்லாமிய நாகரிகம் தழைத்தோங்கிய காலத்திலும் குறிப்பிட்ட சில நாட்களின் மீதும் சம்பிரதாயங்கள் மீதும் மக்கள் பெருவிருப்பு கொண்டிருந்தனர். தம் விருப்புகளை யும் ஆசைகளையும் நபித்துவ மரபு சிலாகிப்பதைக் கண்டால் மக்கள் களிப்புற்றனர். இம் மனித சுபாவத்தை கதை சொல்லிகள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.

ஒருமுறை இஸ்வாமிய நாட்காட்டி குறிக்கும் முஹர்ரம் 10 ஆம் நாளன்று ஒரு கதைசொல்லியின் முழுப் பேச்சும் அத்தினத்தைப் பற்றியதாகவே இருந்தது. அவர் அப்பேச்சில் நபி (ஸல்) பெயரால் பல ஹதீஸ்களை எடுத்துரைத்தார். அவ் ஹதீஸ்களின் ஆதாரம் பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது அவற்றைத் தான் யாரிடமும் கற்கவில்லை எனவும் தானே இட்டுக்கட்டியன அவை என்பதை யும் அவர் வெட்கமேதும் இல்லாமல் ஒப்புக்கொண்டார்.(54)

அஹ்மத் இப்னு ஹன்பலும் யஹ்யா இப்னு மாயினும் ஒருநாள் மஸ்ஜிதில் தொழுது கொண்டிருக்கையில் ஒரு கதைசொல்லி நபி (ஸல்) பெயரால் ஹதீஸ்களை எடுத்துரைத்துக் கொண்டிருந்தார். அறிவிப்பாளர் வரிசையில் அவர்கள் இருவரது பெயர்களையே சொல்லி ஆதாரமாகக் குறிப்பிட்டார். ஹன்பலும் மாயினும் அங்கி ருப்பதைக் கதைசொல்லி அறிந்திருக்கவில்லை. ஒரு நூலில் இருபது பக்கங்களளவு நீளக் கூடிய அக்கதைசொல்லியின் விவ ரணம், ‘லா இலாஹ இல்லல்லாஹ்’வை விளக்குவதாக அமைந்தது. அதன் ஒவ்வொரு சொல்லிலிருந்தும் அல்லாஹ், தங்கத்தாலான கொண்டையும் பவளத்தாலான சிறகுகளையும் கொண்ட ஒரு

பறவையைப் படைக்கின்றான் என்றவாறாக அது அமைந்தது. விவரணம் முடிவுற்றதும் இப்ன் மாயின், அதற்கான ஆதாரம் குறித்து வினவினார். அஹ்மத் இப்ன் ஹன்பலும் யஹ்யா இப்ன் மாயினுமே தனக்கு ஆதாரம் என்றார் கதைசெல்லி, அவர்கள் இருவரும் தன் முன்னால் நிற்பதை அறியாதவராய். இருவரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு தாம் அவ்வாறான ஒரு ஹதீஸை அறிவித்ததில்லை எனவும், இது ஒரு கட்டுக்கதையே எனவும் கூறினர். கதைசொல்லியோ விட்டுக்கொடாமல் அஹ்மத் இப்னு ஹன்பல், யஹ்யா இப்னு மாயின் என்ற அதே பெயர் களைக் கொண்ட பதினேழு அறிவிப்பாளர் வரிசை தனக்கு அத்துபடியென சாதித்தார்.[55] நபித்துவ மரபில் ஹதீஸ் அறிவிப் பாளர்களுக்குக் களங்கம் கற்பிக்கும் செயலன்றோ இது!

இன்னொரு சம்பவம். சிறு பட்டினமொன்றில் மக்களிடமிருந்து பணவுதவிபெறும் நோக்குடன் இளைஞர் ஒருவர் பள்ளிவாசலில் நின்றிருந்தார். எளிய முஸ்லிம்களுக்கு உதவுவது பற்றி அவர் ஹதீஸ் ஒன்றை எடுத்துரைத்துக் கொண்டிருந்தார். அதன் அறி விப்பாளர்களாக அபூ கலீஃபா, அல்-வலீத், ஷுஉபா, கத்தாதா, அனஸ் என நபிகளார்வரை வரிசைப்படுத்தினார். சம்பந்தப்பட்ட ஹதீஸுக்கான ஆதாரம் யார் என வினவப்பட்டபோது, அபூ கலீஃபா என்றார். அபூ கலீஃபாவைச் சந்தித்ததுண்டா என ஒருவர் கேட்க, 'இல்லை'யென அவரிடமிருந்து பதில் வந்தது. சந்திக்காத ஒருவரை ஆதாரம் காட்டி ஒரு ஹதீஸை அறிவிப்பது எவ்வாறு எனக் கேட்கப்பட்டபோது அவமானமுற்ற அவர் 'என்னுடன் தர்க்கிப்பது அநாகரிகமாகும். இதுவே நான் மனனஞ்செய்துள்ள ஒரே அறிவிப்பாளர் வரிசை. எந்தவொரு ஹதீஸுக்கும் இந்த வொரு அறிவிப்பாளர் வரிசையையே நான் பயன்படுத்துகிறேன்' என்றார்.[56]

நபிகள் நாயகம் (ஸல்), நபித்தோழர்கள், முன்னைய நபிமார் கள், இஸ்லாமிய வரலாற்று நாயகர்கள் முதலானோர் பற்றி யெல்லாம் இக்கதைசொல்லிகள் மிகைநவிற்சியான ஹதீஸ் களைப் புனயலாயினர். உதாரணத்துக்குச் சில வருமாறு:

*(1) அனஸ் இப்னு மாலிக் அறிவிக்கின்றார்: நானும் நபிகளாரும் மலைப்பாதையொன்றில் இல்யாஸ் நபியைச் சந்தித்தோம். அவருடன் நபிகளார் நீண்டநேரம் அளவளாவிக் கொண்டிருந்தார். அப்போது விண்ணிலிருந்து தட்டுகள் நிரம்பிய மரவையொன்று இறங்கிற்று. நாம் உணவு உட்கொண்டபின் ஒரு மேகம் தோன்றிற்று. அதில் இல்யாஸ் நபி ஸிரியா நோக்கிப் பயணித்தார். நபியவர்களுக்கும் இதுபோன்று விண்ணிலிருந்து உணவு வருவதுண்டா எனக் கேட்டேன். நாற்பது நாட்களுக்கொரு முறை ஜிப்ரீல் உணவு மரவை கொணர்வதுண்டு என நபி (ஸல்) பதிலளித்தார்.*[57] *யஸீத் அல்-முசாலி, அபூ இஷ்ஹாக் அல்-ஜரஸி ஆகிய இரு அறிவிப்பாளர்கள் இந்த ஹதீஸை நம்பமுடியாததாக்குகின்றனர்.*

*(2) ஷைகு இப்னு அபீ - காலித் என்பவர் நபிபெயரால் இட்டுக் கட்டிய ஹதீஸொன்றின்படி சுலைமான் நபியின் கணையாழியில் ''வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறில்லை. முஹம்மத் அவனது றஸூலாவார்'' என்ற வாசகம் பொறிக்கப் பட்டிருந்தது'' என நபி (ஸல்) கூறினார்.*[58]

*(3) மைசரா இப்னு இப்றாஹீம் என்பவர் நபிபெயரால் பின்வரும் ஹதீஸைப் புனைந்தார்: ''ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் இருவர் தவிர்ந்த ஒரு லட்சம் பேரை அல்லாஹ் நரகிலிருந்து விடுதலை செய்கிறான். இவ்விருவரும் அபூ பக்கரையும் உமரையும் வெறுத்ததனால் நரக விடுதலை மறுக்கப்பட்டவர்கள். இவர்கள் முஸ்லிம்கள் அல்லர். அபூ பக்கர், உமர், உதுமான் முதலியோரை வெறுப்பவர்மீது சாபம் உண்டாகட்டும்.''*[59]

*உமர் இப்னு கத்தாபை ஆதாரம்காட்டி ஸஹீஹ் முஸ்லிமில் பதியப் பட்டுள்ள ஒரு ஹதீஸின்படி ''யெமனில் உவைஸ் அல்-கரானி என்ற ஒரு மனிதர் இருப்பார். அவரைக் கண்டால் அல்லாஹ்விடம் உங்களுக்காக மன்னிப்பு கேட்கும்படி சொல்லுங்கள்.''*[60] *இந்த சாதாரண நபிமொழி கதைசொல்லிகளால் பூதாகாரமாக்கப்பட்டுள்ளது. இந்த இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ் குறைந்தது இரண்டு பக்கங்களுக்கு மேல் நீள்கின்றது. கதை சொல்லிகள் எடுத்துரைக்கும் இந்த ஹதீஸ் இவ்வாறு தொடங்குகிறது:*

ஒருமுறை நபிகளார் கஃபாவின் முன்றிலில் இருக்கும்போது ஜிப்றீல் இறங்கிவந்து 'வெகு சமீபத்தில் உமது உம்மத்தில் ஒருவர் தோன்றுவார். றபீஇ முழார் ஆகிய கோத்திரத்தாரின் மொத்த சனத்தொகையளவு மக்களுக்காகப் பரிந்துரைப்பதற்கு அல்லாஹ் அவருக்கு அதிகாரம் வழங்கியுள்ளான். அவரைச் சந்தித்தால் உமது உம்மத்தினர்க்குப் பரிந்துரை செய்யுமாறு அவரிடம் கேட்பீராக!' என நபிக்கு அறிவித்தார். நபி அவரது பெயரைக் கேட்டதற்கு ''உவைஸ்'' என்றார்.[61]

### 7- இஸ்லாமியப் பணியில் அவா

மத பக்திகொண்டோரை உளவியல் ரீதியாய் முப்பிரிவினராகப் பிரிக்கலாம்: 1. பிறரைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் மதநம்பிக்கையைத் தம்மோடு வைத்துக் கொள்வோர். 2. உண்மையான அர்த்தத்தில் மதநம்பிக்கை கொண்டு அதனைப் பிறருக்கும் எத்திவைப்போர். 3. மித மிஞ்சிய மதஉணர்வினர்- கடுமையான ஆன்மிக வாழ்வில் தம்மை ஆழ்த்திக் கொண்டு பிறரையும் அதன்பால் ஈர்ப்பதற்குப் பெரும் பிரயத்தனங்களில் ஈடுபடுவோர்.

பக்திமான்களான இம்மூன்றாம் பிரிவினர் சமூகத்தினுள் வித்தியாசமான போக்கினரைக்கண்டால் அவர்களைத் தம்வழிக்குக் கொணர்வதற்குக் கடும் பிரயத்தனமெடுப்பர். இதற்கு இஸ்லாமிய வரலாற்றில் ஏராளம் உதாரணங்கள் உள. இவர்கள் தம் அழைப்புப் பணிக்கு (தஃவா) குர்ஆனையும் ஹதீஸையும் துணையாய்க் கொண்டபோதும் துரதிர்ஷ்டவசமாய் குர்ஆனிலும் ஹதீஸிலும் காணப்படும் போதனைகள் இவர்களுக்குப் போதுமானதாய்ப் படாமல் இவர்கள் நபி (ஸல்) அவர்களின் பெயரால் புதிய ஹதீஸ்களைப் புனைவது தவறல்ல எனக் கருதினர்.

இறைபக்தியைக் கடுமையானதாய் ஆக்கிக் கொண்ட இவர்கள் இறையச்சமின்றி வாழ்வோரை அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவும் அற்ப நன்மைகளுக்கும் கிடைக்கக்கூடிய நற்கூலிகளின்பால் மக்களின் ஆசையைத் தூண்டுவதற்காகவும் நன்னோக்குடன் பொய்களைப் புனைந்துரைக்கலாயினர். பொய்மைகளைக் கற்பிப்பதன்

மூலம் பெரும் தவறிழைக்கின்றோம் என்பதை இவர்கள் உணர்ந் திலர்.

பக்தாதில் குலாம் கலீல் என்ற பெரும் பக்திமானொருவர் இருந்தார். தாம் காலமான போது பக்தாதின் சந்தைகள் மூடப் படும் அளவுக்கு இவர் மக்கள் மத்தியிலும் ஆட்சியாளரிடமும் பெரும் செல்வாக்கு பெற்றிருந்தவர். எனினும் இம்மனிதரிடம் அவர் எடுத்துரைத்த ஹதீஸ்களின் ஆதாரம்பற்றி வினவப்பட்ட போது மக்கள் மனதை நெகிழச் செய்வதற்காகத் தானும் தன் னைப் போன்றோரும் அவற்றைப் புனைந்துரைத்ததாகக் கூறினார்.(62) நபிபெயரால் ஹதீஸை இட்டுக்கட்டுவோருக்கு எதிராக நபி விடுத் திருந்த எச்சரிக்கை இவரிடம் சிறு நடுக்கத்தையேனும் உண்டு பண்ணியதாய்த் தெரியவில்லை.

நூஹ் இப்னு அபீ - மர்யம் என்பவர் அறிஞரும் பக்திமானும் ஆவார். குர்ஆன்மீது மக்கள் அசிரத்தையாய் இருப்பது கண்டு கவலைப்பட்டவராய் நன்னோக்குடன் இப்னு அப்பாஸிலிருந்து இக்ரிமாவை ஆதாரம் காட்டி குர்ஆன் வசனங்களை - ஸூரா ஃபாத்திஹா விலிருந்து ஸூரா நாஸ் வரை - ஓதுவதால் உண்டாகும் நன்மைகளை எடுத்துரைப்பதற்காக ஹதீஸ்களைப் புனைந் துரைத்தார். தாம் முன்னர் கேட்டிராத இவ் ஹதீஸ்களால் கலவர மடைந்த ஹதீஸ் நிபுணர்கள் அபீ-மர்யமிடம் அவர் எடுத்துரைத்த ஹதீஸ்களின் ஆதாரங்களை உறுதிப்படுத்துமாறு கேட்டபோது அவர், மக்கள் குர்ஆனிலிருந்து தூரமாகி அபூ ஹனிஃபாவின் ஃபிக்ஹுவிலும் இப்னு இஷ்ஹாக்கின் வரலாற்றிலும் நாட்டம் செலுத்துவது கண்டு, மார்க்கத்துக்கு நற்பணிபுரியும் நோக்குடன் அவற்றைப் புனைந்தேன் எனத் தெளிவாக உரைத்தார்.(63) குர் ஆனின் எந்தப் பகுதியை ஓதினாலும் மனித இனத்துக்குப் பெரும் நன்மை உண்டென்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

இஷ்ஹாக் இப்னு இப்றாஹீம் அத்-தபரி என்பவர் நபிகளாரின் பெயரால் பின்வரும் ஹதீஸொன்றைப் புனைந்தார்: வைகறைப் பொழுதிலிருந்து சுபஹுத் தொழுகை வரை 'சுப்ஹானல்லாஹி வபி ஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அலீம் அஸ்தஃபிருல்லாஹ்'

என ஒருவர் ஓதி வந்தால் உலகம் அவருக்குக் கீழ்ப்படியும். அவர் உச்சரிக்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அல்லாஹ் ஒரு மலக்கைப் படைக்க, அந்த மலக்கு இறுதித் தீர்ப்பு நாள்வரை அவருக்கு நற்கூலி கிடைக்குமாறு பிரார்த்தித்துக் கொண்டே இருப்பார்.[64]

இஷ்ஹாக் இப்னு வஹ்ப் என்பவர் நபிபெயரால் பின்வரும் ஹதீஸைப் புனைந்தார்: அல்லாஹ் ஒருவரை நேசித்தால் அவரைத் தனக்காகவே எடுத்துக்கொள்வான். அவரிடம் மனைவி, பிள்ளை கள் பற்றிய நினைவை இல்லாமலாக்கி விடுவான்.[65] உலகப் பற்றைத் துறந்து இறைவணக்கத்தில் முற்றாக மூழ்கிவிடுமாறு செய்வதற்காக இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ் இது.

வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள் இரவுகளில் தொழும் தொழுகை, தஸ்பீஹ் தொழுகை, றஜப் மாதத்திலும் முஹர்ரம் 10 இலும் தொழும் தொழுகை, ஷஃபான் நடுப்பகுதியில் தொழும் தொழுகை முதலிய முப்பது விசேட தொழுகைகளின் முக்கியத் துவம் குறித்து இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸொன்றை இப்னு அல்-ஜவ்ஸி பதிவுசெய்துள்ளார். இது பொய்யென்றும் புனையப் பட்டதென்றும் அவர் அறிவிக்கின்றார்.[66] இவ் வணக்கங்கள்மீது கவனத்தை ஈர்ப்பதற்காக இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ் இது வென்பது தெள்ளத் தெளிவு.

''வெள்ளிக்கிழமை தலைப்பாகை அணிவோர்மீது அல்லாஹ் வும் அவனது மலக்குகளும் அருள்மாரி பொழிகின்றனர்.'' இது ஐயூப் இப்னு முத்ரிக் என்பார் இட்டுக்கட்டிய ஒரு ஹதீஸ்.[67]

### 8- ஆட்சியாளரின் ஆதரவை நாடுதல்

ஒவ்வொரு சமூகத்திலும் ஆட்சியாளருடன் மக்களின் தொடர்பு ஒரே விதமாய் இருந்ததில்லை. சிலர் தவிர்க்க முடியாத சந்தர்ப் பங்களிலன்றி ஆட்சியாளரிடமிருந்து ஒதுங்கியிருக்கவே விரும் புவர். சிலர் ஆட்சியாளருடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டு அவர்களைக் கட்டுப்படுத்தவும் அவர்களுக்கு ஆலோ சனை கூறவும் முற்படுவர். பிறரைப்பற்றிக் கவலைப்படாத சுயகாரியப் புலிகளான பிரிதொரு வகுப்பார் அரசை அண்டிப்

பிழைப்பவர்களாவர். இவர்கள் சொந்த நலனுக்காக அடிமைச் சேவகம் புரியவும் தயங்காதவர்கள் ஆட்சியாளருக்குத் துதிபாடு வதில் அசகாயசூரர்கள். நபிகளாரது ஆட்சியிலும் நேர்வழி நடந்த நபித்தோழர்களின் ஆட்சியிலும் இம் முகஸ்துதிகாரர்களுக்கு இட மிருக்கவில்லை. எனினும் உமையாக்களதும் அப்பாஸியாக்கள தும் காலத்தில் இந்த அடிவருடிக் கூட்டம் பல்கிப் பெருகிற்று. அரச வம்சத்தைத் திருப்திப்படுத்த இவர்கள் ஹதீஸ்களை இட்டுக் கட்டலாயினர். இவ்வாறு புனையப்பட்ட ஹதீஸ்களில் ஆட்சி யாளர்களைப் போற்றிப் புகழ்வனவும் அவர்களோடு சம்பந்தப்பட்ட இடங்களுக்குத் 'தலபுராணம் பாடுவனவும்' அடங்கும். தொகுத் துரைப்பதாயின் இந்தப் புனைவுகள் நகரங்களின் மாண்பையும் ஆட்சியாளரின் மான்மியத்தையும் கூறுவனவாய் உள்ளன.

பொதுவாக அப்பாஸிய ஆட்சியாளர்கள், குறிப்பாக ஹாருன் அல்-ரஷீத், வைப்பாட்டிகள் மீது பெருவிருப்பு கொண்டவராய் விளங்கினர். அடிமைப் பெண்களின் முக்கியத்துவம் பற்றி உதுமான் இப்னு அத்தா, ஹப்ஸ் இப்னு உமர் முதலானோர் புனைந்த ஹதீஸ்கள் அடிமைப் பெண்களை வைத்துக் கொள்ள வசதிபடைத்தவர்களுக்குப் பெருமகிழ்ச்சி ஊட்டுவனவாய் காணப் படுகின்றன. இத்தகைய இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களில் ஒன்று: ''நீங்கள் வைப்பாட்டிகளை நன்கு கவனித்துக் கொள் வீர்களாக! ஏனெனில் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்ட கருப் பைகளைக் கொண்டவர்கள். கர்ப்பமடைவதிலும் பிரசவிப்ப திலும் உத்தமமானவர்கள்.''[68]

அப்பாஸிய அரச பரம்பரையைப் புகழும் ஹதீஸ்களும் பல வாகும். அப்பாஸிய ஆட்சியாளரை மகிழ்விப்பதற்காகப் புனையப் பட்ட இவ் ஹதீஸ்களுக்கு உதாரணங்கள் சில வருமாறு:[69]

(1) நபிகளார் தம் மாமனார் அப்பாஸ் இப்னு அப்துல் முத்தலிப் பற்றிக் கூறினார்: ''இவர் என் மாமனார். இவர் அல்-ஸஃபா, அல்-மன்சூர், அல்-மஹ்தி முதலிய நாற்பது கலீஃபாக்களின் தந்தையாவார்.

(2) உமைய்யாஹ் ஆட்சியை விட அப்பாஸிய அரச பரம்பரையின் ஆட்சி இரு மடங்கு நீடிக்கும் என நபி (ஸல்) கூறினர்.

(3) நபி (ஸல்) கூறினார்: ஒருமுறை ஜிப்றீல் கறுப்பு அங்கியையும் கறுப்புத் தலைப்பாகையையும் எடுத்துக் கொண்டு இறங்கிவந்து 'இது உமது மாமனார் அப்பாஸுடைய சந்ததிகளுக்கான உடை' என்றார். அப்போது நான் 'அவர்கள் நேர்மையான ஆட்சியாளராய் இருப்பார்களா?' எனக் கேட்டேன். அவர் 'ஆம்' என்றார். அப்புறம் நபிகளார் அல்-அப்பாஸுக்காகவும் அவரின் சந்ததிகளுக்காகவும் துஆ செய்தார்.

(4) நபி (ஸல்) கூறினார்: ''அல்-அப்பாஸ் இப்னு அப்துல் முத்தலிப் எனது தந்தையாரும் மாமனாரும் பாதுகாவலரும் வாரிசும் ஆவார்.''

முன்னர் குறிப்பிட்டது போல் சமூகத்தின் சில பகுதியினரைத் திருப்திப்படுத்துதற்காய் சில நகரங்களைப் புகழ்ந்தும் ஹதீஸ்கள் புனையப்பட்டன போலத் தெரிகின்றது.[70]

(1) ஜித்தாவைப் புகழ்ந்து கூறப்பட்டுள்ளதாவது: உலகின் பால் சுவனத்தின் நான்கு கதவுகள் திறக்கப்பட்டுள்ளன - அவை அலெக்ஸாந்திரியா, அஸ்கலான், குஸ்வைன், ஜித்தா. மக்காவிலுள்ள அல்லாஹ்வின் இல்லம் எல்லா மஸ்ஜிதுகளை விடவும் மேலானதைப் போன்று ஜித்தாவும் ஏனைய நகர்களைவிட மேலானது.

(2) அஸ்கலானைப் புகழ்ந்து கூறப்பட்டுள்ளதாவது: ''அஸ்கலானின் மையவாடியிலிருந்து அல்லாஹ் எழுபதினாயிரம் உயிர்த்தியாகிகளை எழுப்புவான். ரபீ கோத்திரத்தினதும் முழார் கோத்திரத்தினதும் மொத்த சனத்தொகைக்கு நிகரான மக்கள் கூட்டத்தினர்க்கு பரிந்துரைக்கும் அதிகாரத்தை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவான். சுவனத்தின் மணப்பெண் அஸ்கலான்.''

*(3) நஸீபய்ன் என்ற நகரைப் பற்றிப் புகழ்ந்துரைக்கப்படுவ தாவது: நபிகளார் தமக்கு அறிமுகப்படுத்தப்பட்ட நக ரொன்றின்மீது மிகவும் விருப்புற்றவராய் அந்நகரின் பெயர் என்னவென ஜிப்றீலிடம் கேட்க அதற்கவர் ''நஸீபய்ன்'' என்றார். அப்போது நபியவர்கள் ''யா அல்லாஹ்! இதன் மீது முஸ்லிம்களுக்கு வெற்றியைத் தருவாயாக! இங்கு முஸ்லிம்கள்மீது அருள்மாரிப் பொழிவாயாக!'' எனப் பிரார்த்தித்தார்கள்.*

*(4) பஸ்ராவைப் புகழ்ந்து கூறப்படுவதாவது: பஸ்ரா என அறி யப்பட்ட நகரில் குடியேறி அங்குள்ள மஸ்ஜித்களையும் சந்தைகளையும் பராமரிக்குமாறு நபிகளார் அனஸ் இப்னு மாலிக்கிடம் ஆலோசனை கூறினார்கள்.*

*(5) குராஸானைச் சேர்ந்த பல்வேறு நகரங்கள்பற்றி புகழ்ந்து கூறப்படுவதாவது: மெர்வ், தலிக்கான், புஹாரா, குவாரிஸ்ம் இன்னோரன்ன குராஸானின் நகர்களைப் புகழும் நீண்ட ஹதீஸ் ஒன்றினை இப்னு அல்-ஜவ்ஸி பதிவுசெய்துள்ளார். இது குராஸானின் ஆட்சியாளரை அல்லது பல ஆட்சி யாளர்களை மகிழ்விப்பதற்காகப் புனையப்பட்டதாய் இருத்தல்கூடும்.*

## புனையப்பட்ட ஹதீஸ்களை அடையாளம் காண்பதில் முஸ்லிம் அறிஞர்களின் பங்களிப்பு

*முஸ்லிம் உலமாக்கள் நபியின் வாரிசுகளாவர். நபிகளாரின் பணியைத் தொடர்ந்து முன்னெடுக்கும் பாரிய பொறுப்பு அவர் களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உலகெங்கிலும் முஸ்லிம் சமூகங்களில் பிரச்சினைகள் ஏற்பட்டபோதெல்லாம் உலமாக்கள் முன்வந்து தம் கடமையைச் செய்வதற்கு முனைப்புடன் நின்றார் கள் என்பதற்கு இஸ்லாமிய வரலாற்றில் உதாரணங்கள் அநேகம் உள. நபி முஹம்மத் (ஸல்) தம் வாழ்நாளில் முன்னெடுத்த பணிகளில் ஒன்று சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டுதலாகும். நபிகளாரைப் பின்பற்றுவோர் இதனை மேலும்*

*முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. தொடர்ந்து சத்தியத்தை அசத்தியத்திலிருந்து பிரித்துக் காட்டவேண்டியுள்ளது. ஹதீஸை இட்டுக்கட்டும் பழக்கம் மேற்கிளம்பியபோது உலமாக்கள் உட னடியாக நடவடிக்கையெடுக்கத் தொடங்கினர். நபித்துவ மரபின் புனித பாரம்பரியம் திரித்துக் கொச்சைப்படுத்தப்படுவதிலிருந்து அதனைப் பாதுகாத்துப் பேணுவதற்கு தம்மால் முடிந்தளவு முயற்சிகளை மேற்கொண்டனர்.*

*பொய்யான ஹதீஸ் புனைவுகளை எதிர்கொள்வதை இஸ்லா மிய அறிஞர்கள் சவாலாக ஏற்றுக்கொண்டனர். இப்பணியில் அவர்களின் பங்களிப்புகளை ஆறு பிரிவுகளாக வகைப் படுத்தலாம்:*

*(1) நபிகளாரின் ஹதீஸ்களுக்கு அறிவிப்பாளர் வரிசை (ஸனத் முறை)யை உருவாக்கல்*

*(2) ஹதீஸ் எடுத்துரைப்புகளை மிகவும் நம்பகமான ஆதாரங் களிலிருந்து மட்டும் மேற்கொள்ளத் தூண்டுதல்.*

*(3) ஹதீஸ் அறிவிப்பாளர்கள் பற்றி விசாரணை மேற்கொள்ளல்*

*(4) அறிவிப்பாளர்களின் வாழ்க்கைக் குறிப்பகராதிகளைத் தயாரித்தல்*

*(5) நபிகளாரின் உண்மையான ஹதீஸ்களைத் தொகுத்தல்*

*(6) நம்பமுடியாத புனையப்பட்ட ஹதீஸ்களை உள்ளடக்கிய தொகுப்புகளை உருவாக்குதல்*

## *1- நபிகளாரது ஹதீஸ்களின் ஸனத் முறையை வளர்த்தெடுத்தல்*

*ஆரம்பத்தில் ஹதீஸ் எடுத்துரைப்புகள் அறிவிப்பாளர் வரிசை யைக் கொண்டிருக்கவில்லை. அறிவிப்புகளில் நபிகளாரின் பெய ரைக் குறிப்பிடுவதே அது உண்மையென்பதை நிறுவுதற்குப் போதுமானதெனக் கருதப்பட்டது. ஹதீஸ்களின் மூலம் குறித்து எவரும் கேள்வியெழுப்பவில்லை. காலங்கள் கழிய, ஹதீஸ்கள் பிரஸ்தாபிக்கப்படுவது பகட்டான ஒரு கருமமாக மாறத் தொடங் கியது. சாதக-பாதக வேறுபாடுகள் இன்றி நபிகளாரின் பெயரில் ஹதீஸ்கள் கூறப்படத் தொடங்கியதும், இஸ்லாமிய உம்மாவின்*

*பேரறிஞர்கள் நிலைமையைக் கட்டப்படுத்துவதற்கு நடைமுறை சாத்தியமான தீர்வொன்றை முன்மொழிந்தனர். ஒவ்வொரு ஹதீஸும் அதன் வாசகத்து அறிவிப்பாளர் வரிசையையும் (ஸனத்) கொண்டிருத்தல் வேண்டும் என்பதாகும் அது. முஹம்மத் இப்னு ஷிரீன் 'ஸனத்'தை வலியுறுத்தும் இவ்வேற்பாட்டை தீன் (இஸ்லாமிய வழி) எனப் பிரகடனம் செய்தார்.*[71] *''ஹதீஸ் எடுத்துரைப்பில் பொதுவாக அறிஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே தூண்கள் (அறிவிப்பாளர் வரிசை) உண்டு'' என அப்துல்லாஹ் இப்னு அல்-முபாரக் குறிப்பிட்டார்.*[72]

## *2- ஹதீஸ் எடுத்துரைப்புகள் நம்பகமான ஆதாரங்களிலிருந்து மாத்திரம் வரச்செய்தல்*

*உமரின் பேரர்களில் ஒருவரான அல்-காஸிம் இப்னு உபைதுல்லாஹ் இப்னு அப்துல்லாஹ் இப்னு உமரிடம் குறிப்பிட்டவொரு விவகாரம் குறித்து வினவப்பட்டபோது அதற்கவர் தன்னால் பதில்சொல்ல முடியவில்லை யென்றார். உமரின் குடும்பத்திலிருந்து வந்த ஒருவர் அவ்வாறு சொன்னது கேட்டு யஹ்யா இப்னு ஸயித் என்பவர் அபுல்-காஸிமை நோக்கி ''இருபெரும் அறிஞர்களான உமர் கத்தாபினதும் அப்துல்லாஹ் இப்னு உமரினதும் வழித்தோன்றலான நீர் இவ்வாறு கூறுவது விசித்திரமாயுள்ளது'' என்றார். அவ்வேளை அல்-காஸிம் ''நான் அறிந்திராத ஒன்றைப் பற்றி பேசுவதோ, அல்லது நம்பமுடியாதவற்றிலிருந்து ஒன்றை எடுத்துரைப்பதோ, அறிஞர்களது பார்வையில் வெறுக்கத் தக்கதொரு செயலாக இருக்கும்'' என்றார்.*[73]

*நம்பகமான ஆதாரங்களிலிருந்து மட்டுமே ஹதீஸ் எடுத்துரைக்கப்படல் வேண்டு மென்பதை உலமாக்கள் தம் உபந்நியாசங்களிலும் ஒன்றுகூடல்களிலும் பொதுக் கூட்டங்களிலும் வலியுறுத்தி வந்தனர். அவர்கள் அவ்வாறு நடப்பதற்கு அடிப்படையாய் அமைந்தது அபூ ஹுரைரா அறிவித்த பின்வரும் நபிமொழியாகும்:*

*''சில காலத்துக்குப் பின் நீங்களோ உங்கள் தந்தைமாரோ கேட்டறியாத அஹாதீஸ்களை பொய்யர்களும் நயவஞ்சகர்களும்*

*எடுத்துரைக்கத் தொடங்குவார்கள். எனவே, எச்சரிக்கையாய் இருங்கள். அவர்களைக் கண்டால் ஒதுங்கிச் செல்லுங்கள். இல்லையேல் அவர்கள் உங்களையும் வழிகெடுத்து விடுவார்கள். உங்களைக் குழப்பத்தில் ஆழ்த்திவிடுவார்கள்.''[74]*

*புஷைர் அல் அதவி என்பவர் இப்னு அப்பாஸிடம் சென்று ஹதீஸ் ஒன்றை எடுத்துரைத்தார். அந் நபித்தோழரின் முகத்தில் எவ்வித சாடையையும் காணவில்லை. தான் சொன்னதை அவர் கவனமாய் கேட்கவில்லை எனக் குறைபட்டுக் கொண்டார் புஷைர். அதற்கு இப்னு அப்பாஸ் கூறிய பதில்: நபிகளார் மீது எந்தப் பொய்யையும் சாட்டமுடியாது என்ற நம்பிக்கையில் நாம் ஹதீஸ்களை எடுத்துரைத்தோம். மக்கள் யார் எவர் என்று பார்க் காமல் எல்லோரிடமும் ஹதீஸ் கேட்கத் தொடங்கி விட்டார்கள், அவர்கள் ஹதீஸ் அறிவுள்ளவரா இல்லையா என்று கூடப் பார்க்காமல். ஆகவே நாம் நபிகளாரின் ஹதீஸ் குறித்து மேலதிக கவனஞ் செலுத்தத் தொடங்கிவிட்டோம். நன்கறிந்த ஒருவரிட மிருந்தல்லாமல் நாம் ஹதீஸ்களை ஏற்றுக்கொள்வதில்லை.''[75]*

*அலி (ரலி)யின் தீர்ப்புகள் அடங்கிய ஆவணமொன்று இப்னு அப்பாஸிடம் கையளிக்கப்பட்டது. அதில் காணப்பட்ட பெரும் பாலான தகவல்களை - அவற்றுக்கும் அலிக்கும் யாதொரு சம் பந்தமும் இல்லாதபடியால - அவர் அதிலிருந்து நீக்கிவிட்டார்.[76] அலி (ரலி) காலமானபின் நாலாவது கலீஃபா சம்பந்தமான எந்தவொரு அறிக்கையையும் அப்துல்லாஹ் இப்னு மசூதின் மாணவர்களிடமிருந்து வந்திருந்தால் மட்டுமே உலமா ஏற்றுக் கொள்ளலாயினர்.[77]*

*அபூ அல் ஸினாத் என்பவர் மதீனாவிலிருந்த மிகவும் பக்தி மான்களான சுமார் நூறு அறிவிப்பாளர்களை அறிந்திருந்தார். என்றாலும் அவரும் ஏனையோரும் அவர்களிடமிருந்து ஹதீஸ் களை ஏற்றுக்கொள்ளாது விட்டார்கள், அவர்கள் நம்பகத் தன்மை குன்றியவர்கள் என்பதனால்.[78]*

*''நபிகளாரின் ஹதீஸை மிகவும் நம்பகமான ஆதாரங்களில் (தக்காத்) இருந்தன்றி எடுத்துரைப்பது பொருந்தாது'' என ஸயித்*

இப்னு இப்றாஹீம் குறிப்பிடுகின்றார்.[79] மிகவும் நீண்ட காலம் நன்கு அறிமுகமானவர்களிடமிருந்து மட்டுமே நபியின் ஹதீஸ் களை அறிவிக்குமாறு தாவுஸ் இப்னு கைஸான் சுலைமான் இப்னு மூஸாவுக்கு அறிவுரை பகர்கின்றார்.[80]

### 3- ஹதீஸ் அறிவிப்பாளர்கள் பற்றிய பரிசீலனை மேற்கொள்ளல்

ஹதீஸ் அறிவிப்பாளர் தொடர்களில் இடம்பெறும் பெருந் தொகையினர் ஒவ்வொருவரும் தனிப்பட எத்தகையவர் என்ப தைக் கண்டுகொள்ளும் முறைமையொன்றை ஹதீஸ் நிபுணர்கள் ஆரம்பித்தனர். இவ்வறிவிப்பாளர்களின் வாழ்க்கையை விசாரித் தறிவது மிகவும் கவனத்துடன் நுட்பமாக மேற்கொள்ளப்பட வேண்டிய விவகாரமாயிருந்தது. அவர்கள் ஆதாரபூர்வமாகக் கொள்ளத் தக்கவர்களா, நம்பகமானவர்களா, அன்றிப் பலவீன மானவர்களா, இட்டுக் கட்டக்கூடியவர்களா என முடிவுசெய் வதும் சிரமமான கருமமாயிருந்தது. ஒருவரின் நடத்தையைக் கணிப்பதற்கு, குறிப்பாக, ஒருவரைப் பொய்யர் என அறிவிப்ப தற்கு, முதலில் எவரும் தயங்கினர். பிறரைப் பொய்யர் எனக் குற்றஞ்சாட்டுவதையும் புறங்கூறுவதையும் தவிர்த்துக் கொள்க என்பது இஸ்லாத்தின் கட்டளை. இது எவ்வாறிருப்பினும் ஹதீ ஸின் புனிதத்துவத்தைப் பேணுவதற்கு அறிவிப்பாளரை அடை யாளம் காட்டுவது தவிர்க்க முடியாதது என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர். உதாரணமாக சுபாஹ் இப்னு ஹஜ்ஜாஜ் அறிவிப்பாள ரின் தகைமை பற்றிய விசாரணை மேற்கொள்ள வருமாறு நண்பர்களுக்கு அழைப்பு விடுக்கும்போது கூறுவார்: ‘‘அல்லாஹ் வுக்காக வேண்டி சற்றே புறங்கூறலை மேற்கொள்வோம்.’’ இத னைத் தவிர்த்துக் கொள்ளுமாறு சில சந்தர்ப்பங்களில் அவருக்கு அறிவுரை கூறப்பட்ட போது அவர் சொன்ன பதில்: ‘‘அறிவிப் பாளரை அடையாளப்படுத்துதற்கு விசாரணை மேற்கொள்ளல் தவிர்க்கக் கூடிய ஒன்றல்ல. ஏனெனில், இது மதம் சம்பந்தப்பட்ட விவகாரம்.’’[81]

அஹ்மத் இப்னு ஹன்பலுடன் உரையாடும்போது அல் ஜூர்ஜானி, இன்னின்ன அறிவிப்பாளர் பொய்யர் அல்லது

*இட்டுக்கட்டுபவர் என அறிவிப்பது, தன்னைப் பொறுத்தவரை சங்கடமான ஒரு கருமமாக உள்ளதெனக் கூறினார். அவருக்கு ஹன்பலி கூறிய ஆறுதல்: ''இவ்விவகாரத்தில் நீரும் நானும் மௌனம் சாதித்தால், எந்த அறிவிப்பு ஆதாரபூர்வமானது, எது பிரச்சினைக்குரியது என மக்கள் எவ்வாறு அறிந்துகொள்வார்கள்?''*(82)

*நவீன, அந்நியமான கருத்துகளை இஸ்லாத்தினுள் புகுத்து வோரும், நபிகளாரின் பெயரால் ஹதீஸ்களைப் புனைவோரும், இஸ்லாத்தின் பரம விரோதிகளை விடப் பயங்கரமானவர்கள். பின்னவர்கள் பகிரங்கமாக இஸ்லாத்துக்கு இடர் விளைவிப்பவர் களாவர். முன்னவர்களோ உள்ளிருந்தே இஸ்லாத்துக்கு நாசம் விளைவிக்கின்றனர் என்பது முஸ்லிம் அறிஞர்களின் கருத்தாகும்.*(83)

*கணிசமான அளவு புலமையாளர்கள் அறிவிப்பாளர்களின் தகைமையை ஆராய்வதில் ஈடுபட்டனர். இவர்களுள் மிகப் பிரபலமானோரின் பெயர்கள் வருமாறு: சுஃபாஹ் இப்னு அல்-ஹஜ்ஜாஜ், சுஃப்யான் இப்னு உயைனாஹ், சுஃப்யான் அல்-ஸவ்ரி, வாகிஇ இப்னு அல்-ஜர்ராஹ், அப்துல்லாஹ் இப்னு அல்-முபாரக், முஹம்மத் இப்னு இஸ்மாயில் அல்-புஹாரி, முஸ்லிம் இப்னு அல்-ஹஜ்ஜாஜ், யஹ்யா இப்னு ஸயீத் அல்-கத்தான், அஹ்மத் இப்னு ஹன்பல், முஹம்மத் இப்னு ஈஸா அல் -திர்மிதி, அஹ்மத் இப்னு சுஹைப் அல்-நசாயி, சுலைமான் இப்னு அஷ்ஹத் அபூதாவூத், யஹ்யா இப்னு மாயின், முர்ரா அல் ஹம் தானி, ஹம்மாத் இப்னு ஸைத், ஹம்மாத் இப்னு ஸலாமா, அப்துல் றஹ்மான் இப்னு மஹ்தி.*

*ஹதீஸ் அறிவிப்பாளரை அடையாளம் காணும் தீவிர ஆய்வின் காரணமாக நம்பகமானவர்களும் நம்பமுடியாதவர்களும் பற்றிய தெளிவான சித்திரமொன்று உருவாயிற்று. இந்த அலசல் எந்தளவு தீவிரமானதெனில், ஆதாரம் வாய்ந்தவரா பலவீனமானவரா என அடையாளப்படுத்தலின்றி எந்தவொரு அறிவிப்பாளரும் விட்டு வைக்கப்படவில்லை. அறிவிப்பாளர்களின் -அவர்களின் எண் ணிக்கை சுமார் 10 லட்சமாகும்- ஆதாரத்துவம் சம்பந்தமாய் விசார ணையாளர்களின் கருத்துகள் வேறுபட்டபோதிலும் அவர்களின்*

வகைப்பாடுகளை நான்கு பிரதான பிரிவுகளாகக் கொள்ளலாம். அவையாவன: (1) ஆதாரம் வாய்ந்தவர்களென ஏகமனதாய் ஏற்றுக் கொள்ளப்பபட்டவர்கள் (2) தம் பலவீனம் சர்ச்சைக்குரியதாய்க் கொள்ளப்படாதவர்கள் (3) புலமையாளர் மத்தியில் சர்ச்சை க்குரியோராய்க் காணப்படுவோர் (4) பொய்யர், இட்டுக்கட்டு வோர் என ஏகமனதாய் பிரஸ்தாபிக்கப்பட்டோர்.

பொய்யர் புனைவாளர் என ஏகமனதாக அடையாளம் காணப் பட்டோர் பட்டியல் நீளமானது. இவ்வாறு அறிவிக்கப்பட்டோ ருள் பின்வருவோர் பிரபலமானவர்களாவர்: வஹ்ப் இப்னு வஹ்ப் அல்-காதி, முஹம்மத் இப்னு அல்-ஸாயிப் அல்-கல்பி, முஹம்மத் இப்னு மர்வான் அல்- ஸூத்தி, முஹம்மத் இப்னு ஸயீத் அல்-ஷாமி, அபூதாவூத் அல்-நக்காயி, இஷ்ஹாக் இப்னு நஜீஹ், கயாத் இப்னு இப்றாஹீம் அல்-நக்காயி, அல்-முகீரா இப்னு ஸயீத் அல்-கூஃபி, அஹ்மத் இப்னு அப்துல்லாஹ் அல்-ஜுவைபாரி, மஃமூன் இப்னு அஹ்மத் அல்-ஹரவி, முஹம்மத் இப்னு உக்காஷா அல்-கிர்மானி, முஹம்மத் இப்னு அல்-காசிம் அல்-கான்கானி, முஹம்மத் இப்னு தமீம் அல்-ஃபாராபி, முஹம் மத் இப்னு ஸியாத் அல்-யஷ்குரி, நூஹ் இப்னு அபீ மர்யம், ஜாபிர் இப்னு யஸீத் அல்-ஜுஃபி.

ஹதீஸ் அறிஞர்கள், அறிவிப்பாளர்களின் நம்பகத் தன்மையை அடையாளங் காட்டியதோடு நில்லாமல் அதனை சாதாரண மக்க ளும் இஸ்லாமிய அறிவுத்துறை மாணவர்களும் அறிந்துகொள் ளும் பொருட்டு தத்தமது கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் ஹதீஸ் பற்றிய உரையாடல்களிலும் பிரகடனம் செய்தனர்.

### 4- ஹதீஸ் அறிவிப்பாளர்களின் வாழ்க்கைச் சரிதை அகராதிகள்

தமது சாதனைகள் எவ்வாறிருந்தாலும் முஸ்லிம் அறிஞர்கள் அதிருப்தி மிகுந்தோராய் இருந்தனர். ஹதீஸ் அறிவிப்பாளர்களின் தகைமைகளை வெளிக்கொணர்வதில் அவர்கள் கடும் முயற்சி கள் மேற்கொண்டிருந்தனர். அவையனைத்தும் தொகுக்கப்பட்டு எழுத்தில் பதியப்பட வேண்டி யிருந்தது. முன்னம் போன்று ஹதீஸ்

தொகுப்புகளிலேயே இவ்விவரங்களைப் பரவலாக விட்டு விடாமல் தனியான தொகுப்புகளை உருவாக்க வேண்டியிருந்தது. விளைவாக, வாழ்க்கைச் சரிதை அகராதிகள் உருவாக்கப்பட்டன. இத்தொகுப்புகள் இருவகையினவாகும். ஒன்று பொதுவாக அறிவிப்பாளர்களினது. மற்றது பலவீனர்கள் பொய்யர்கள் புனைவாளர்கள் என அறிய வரப்பட்ட அறிவிப்பாளர்களினது.

பொதுவாக தொகுக்கப்பட்ட வாழ்க்கைச் சரிதை அகராதிகளில் மிகவும் குறிப்பிடத்தக்கவை:

(1) அல்- தபகாத் அல்-குப்ரா- தொகுத்தவர் முஹம்மத் இப்னு ஸஅத் (ம.ஹி. 230)

(2) அல்-தாரீக் அல்-கபீர்- தொகுத்தவர் முஹம்மத் இப்னு இஷ்மாயில் அல்-புஹாரி (ம.ஹி. 256)

(3) அல்-ஜர்ஹ் வ அல்-தஃதில்- தொகுத்தவர் இப்னு அபீ ஹாத்திம் (ம.ஹி. 327)

(4) அல்-தக்றீப்- தொகுத்தவர் யஹ்யா இப்னு ஷர்ஃப் அல்-நவவி (ம.ஹி. 676)

(5) தஹ்திப் அல்-கமால் ஃபீ அஸ்மா அல்-றிஜால் - தொகுத்தவர் யூசுஃப் இப்னு அப்துல் றஹ்மான் அல்-மிஸ்ஸி (ம.ஹி. 742)

(6) மீஸான் அல்-இஃதிதால் - தொகுத்தவர் முஹம்மத் இப்னு அஹ்மத் அல்-தஹ்பி (ம.ஹி. 748)

(7) தஹ்தீப் அல்-தஹ்தீப் தொகுத்தவர் அஹ்மத் இப்னு அலி இப்னு ஹஜர் அல்-அஸ்கலானி (ம.ஹி. 852)

பலவீனர்களும் புனைவாளர்களுமான ஹதீஸ் அறிவிப்பாளர்கள் பற்றிய நூல்களுள் மிகவும் பரவலாக அறியப்படுபவை:

(1) கிதாப் அல்-துஅஃபா - தொகுத்தவர், அலி இப்னு அப்துல்லாஹ் இப்னு அல்-மதாயினி (ம.ஹி. 234)

(2) கிதாப் அல்-துஅஃபா - தொகுத்தவர், முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் இப்னுஅல்-பர்கீ (ம.ஹி. 249)

*(3)* கிதாப் அல்-துஅஃபா - தொகுத்தவர், முஹம்மத் இப்னு இஸ்மாயில் அல்-புஹாரி.

*(4)* *அல்-துஅஃபா - தொகுத்தவர், இப்றாஹீம் இப்னு யாக்கூப் அல்-ஜுஸ்ஜானி (ம.ஹி. 259)*

*(5)* *அல்-துஅஃபா வ அல்-மத்ரூகூன் - தொகுத்தவர், ஸயீத் இப்னு அம்ர் அல்-பர்தா (ம.ஹி. 292)*

*(6)* *அல்-துஅஃபா - தொகுத்தவர், அபு அஹ்மத் இப்னு அலி இப்னு அல்-ஜாரூத் (ம.ஹி. 299)*

*(7)* *அல்-துஅஃபா வஅல்-மத்ருக்கூன் - தொகுத்தவர், அஹ்மத் இப்னு சுஹைப் அல்-நஸாயி (ம.ஹி. 303)*

*(8)* *அல்-துஅஃபா - தொகுத்தவர், ஸக்கரியா இப்னு-யஹ்யா அல்-ஸாஜி (ம.ஹி. 307)*

*(9)* *அல்-துஅஃபா முஹ்மத் இப்னு அஹ்மத் அல்-துலாபி (ம.ஹி. 310)*

*(10)* கிதாப் *அல்-துஅஃபா -தொகுத்தவர், முஹம்மத் இப்னு அம்ர் அல்-அல்- உக்கய்லி (ம.ஹி. 322)*

*(11)* கிதாப் *அல்-துஅஃபா -தொகுத்தவர், அபூ நுஐம் அப்துல் மாலிக் அல்- ஜுர்ஜானி (ம.ஹி. 323)*

*(12)* *அல்-துஅஃபா - தொகுத்தவர், முஹம்மத் இப்னு அல்-தமீமீ (ம.ஹி. 333)*

*(13)* கிதாப் *அல் - துஅஃபா -தொகுத்தவர், ஸயீத் இப்னு உதுமான் இப்னு அல்-ஸகன் (ம.ஹி. 353)*

*(14)* கிதாப் *அல்- மஜ்ரூஹின் - தொகுத்தவர், அபூ ஹாத்திம் முஹம்மத் இப்னு ஹிப்பான் (ம.ஹி. 354)*

*(15)* கிதாப் *அல்-காமில் ஃபீ துஅஃபா அல்- றிஜால் - தொகுத்தவர், அபூ அஹ்மத் அப்துல்லாஹ் இப்னு அதீ இப்னு அல்-கத்தான் (ம.ஹி. 365)*

*(16) கிதாப் அல்-துஅஃபா - தொகுத்தவர், முஹம்மத் இப்னு அல்-ஹுஸைன் அல்-அஸ்தி (ம.ஹி. 374)*

*(17) கிதாப் அல்-துஅஃபா வ அல்-மத்ரூக்கூன்- தொகுத்தவர், அலி இப்னு உமர் அல்-தாரகுத்னி (ம.ஹி. 385)*

*(18) கிதாப் அல்-துஅஃபா -தொகுத்தவர், உமர் இப்னு அஹ்மத் இப்னு ஷாஹீன் (ம.ஹி. 385)*

*(19) கிதாப் அல்-துஅஃபா - தொகுத்தவர், முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் அல் ஹாகிம் (ம.ஹி. 405)*

*(20) கிதாப் அல்துஅஃபா - தொகுத்தவர் அப்துல் றஹ்மான் இப்னு அல்-ஜவ்ஸி (ம.ஹி. 597)*

### 5- உண்மையான (கலப்பற்ற) ஹதீஸ்களின் தொகுப்புகள்

*சுரங்கங்களிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படும் தங்கம் முற்றிலும் சுத்தமல்லாத, ஆனால் தங்கத்தினதும் தங்கமல்லாத மூலகங்களினதும் கலப்பு என்பதை பொற்கொல்லர் நன்கறிவர். அவர்கள் முழுக்கட்டியிலிருந்து தங்கத்தைப் பிரித்தெடுத்து பிற மூலகங்களைப் புறமொதுக்குவதிலேயே கவனம் செலுத்துவர். இப்பொற்கொல்லரைப் போன்றோரே முஸ்லிம் அறிஞர்களும். நபிகளாரின் அசலான (உண்மையான) ஹதீஸ்களைப் போலியானவற்றிலிருந்து பிரித்தெடுப்பதே அவர்களின் அணுகுமுறை. இதைச் செய்வதற்கு அதாவது ஹதீஸின் ஆதாரபூர்வத்தை உறுதிப்படுத்துவதற்கும் ஹதீஸ்களில் அசலையும் போலியையும் பிரித்தறிவதற்கும் அவர்கள் சில அளவுகோல்களைப் பிரயோகிக்கலானார்கள். இம்முயற்சியின் விளைவாக ஆதாரபூர்வ ஹதீஸ்களைத் தொகுக்கும் பணி தொடங்கிற்று. இத்தொகுதிகள் பெருந்தொகையின வாயினும் இவற்றின் ஆதாரபூர்வத்தைப் பொறுத்தவரை இவையாவும் ஒரே தரத்தினவன்று. பின்வருவன இவற்றுள் மிகவும் ஆதாரபூர்வமானவை:*

*(1) அல்-ஜாமி அஸ்- ஸஹீஹ் - முஹம்மத் இப்னு இஸ்மாயில் அல்-புஹாரி தொகுத்தது.*

*(2) அல்-முஸ்னத் அஸ் - ஸஹீஹ் - இது முஸ்லிம் இப்னு அல்- ஹஜ்ஜாஜ் அல்- குஷைரி (ம.ஹி. 261) தொகுத்தது.*

*(3) ஸுனன் - இது சுலைமான் இப்னு அல்-அஷ்அத் (ம.ஹி. 275) தொகுத்தது.*

*(4) ஸுனன் - இது முஹம்மத் இப்னு ஈஸா அல்-திர்மிதி (ம.ஹி. 279) தொகுத்தது*

*(5) ஸுனன் - இது அஹ்மத் இப்னு சுஹைப் அல்- நஸாயி தொகுத்தது*

*(6) அல்- முவத்தா- இது மாலிக் இப்னு அனஸ் தொகுத்தது.*

### 6- புனையப்பட்ட ஹதீஸ்களின் தொகுப்புகள்

*புனையப்பட்ட ஹதீஸ்களின் தொகுப்புகள் நூற்றாண்டுகளின் முன்பாகவே புறந்தள்ளப்பட்டிருத்தல் வேண்டும். எனினும் அது நடக்கவில்லை. அதற்குப் பதிலாக அவை புனையப்பட்டன என அடையாளப்படுத்தப்பட்ட போதிலும் ஹதீஸ் அறிஞர்கள் அவற்றை மனனஞ் செய்தது மட்டுமல்லாமல், அடுத்த தலை முறையினர்க்கு அவை இட்டுக்கட்டப்பட்ட புனைவுகள் என்ற தெளிவான செய்தியுடன் கையளித்துச் சென்றனர். பின்னையத் தலைமுறை அறிஞர்கள் தமக்குப் பின்னர் வரக்கூடிய அறிஞர் களுக்கும் மாணவர்களுக்குமாக, ஹதீஸ்களில் புனையப்பட்டவை எவை, ஏன் யாரால் அவை புனையப்பட்டன என்ற விவரங்களை அளித்தனர். இத்தொகுதிகள் எண்ணிக்கையில் மிகச் சிலவே. இவற்றுள்ளும் காலத்தால் அழிந்தன போக மிகச் சிலவே எஞ்சின. அவற்றுள் மிகவும் பிரபலமானவை வருமாறு:*

*(1) அல்-மவ்ழூஅத்- தொகுத்தவர் அபூ ஸயீத் முஹம்மத் இப்னு அலி அல்- அஸ்ஃபஹானி (ம. ஹி. 414)*

*(2) ததிக்கிராஹ் அல்- மவ்ழூஅத்- தொகுத்தவர், முஹம்மத் இப்னு தாஹிர் அல்- மக்திஸி (ம. ஹி. 507)*

*(3) அல்-அபாத்தீல்-தொகுத்தவர், அபூ அப்துல்லாஹ் அல்-ஹுஸைன் இப்னு இப்றாஹீம் அல்- ஜுஸ்கானி (ம. ஹி. 543)*

*(4) அல்-மவ்ழூஅத் - தொகுத்தவர் அப்துர் றஹ்மான் இப்னு அல்-ஜவ்ஸி*

*(5) அல்- அஸ்ரார் அல் மர்ஃபூஆ ஃபீ அல்-அஹாதீஸ் அல்-மவ்ழூஅத் தொகுத்தவர் நூர் அல்-தீன் முல்லாஅலி அல்- காரீ (ம. ஹி. 1014)*

*(6) அல் ஃபவாஇத் அல் மஜ்மூஅஹ் ஃபீ அல் அஹாதீஸ் அல் மவ்ழூஅத் - தொகுத்தவர், முஹம்மத் இப்னு அலி அல் ஷவ்கானி (ம. ஹி. 1250)*

மேற்கண்ட ஒவ்வொரு நூலும் இது நம்ப முடியாதது இட்டுக் கட்டப்பட்டது என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள் நிரம்பிய தாகும். பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு அறிவிப்பாளர் தொடர் மீதும் இந்நூல்கள் ஆழ்ந்த கவனஞ் செலுத்தியுள்ளன. இப்புனை வாளர்கள் தம் போலி ஹதீஸ்களின் அறிவிப்பாளர் தொடரில் நம்பகமானவர்களையும் எவ்வாறு பயன்படுத்தினர் என்பதையும் இந்நூல்கள் மேலும் விவரிக்கின்றன.

*02*

# ஹதீஸின் ஆதாரபூர்வத் தன்மையைக் கண்டறிவதில் முஸ்லிம் அறிஞர்களின் பங்களிப்பு

## ஹதீஸின் ஸனத், மத்ன்

முன்னர் குறிப்பிட்டது போன்று ஹதீஸ் என்பதில் நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் சொல், செயல், முடிவுகள், அங்கீகாரம், பண்புகள் யாவும் அடங்கும். ஹதீஸ் என்பதன் இன்னொரு பதப்பிரயோகம்தான் சுன்னா. இதன் பொருள் வழி, பழக்கம், வழிமுறை இத்தியாதி. நடைமுறையில் இது பெரு மானாரின் வழிமுறையைக் குறிக்கின்றது. ஹதீஸ் என்பது சில சந்தர்ப்பங்களில் நபித்தோழர்களின் சொல், செயல் முதலியன வற்றையும் குறிக்கும். ஒவ்வொரு ஹதீஸும் அறிவிப்பாளர் தொடர் (ஸனத்) ஹதீஸ் வாசகம் (மத்ன்) என இருபகுதிகளைக் கொண்ட தாகும். ஸனத் என்பது நபிகளாரின் சொல் செயல் பண்புகள் முதலானவற்றை அறிவிப்போரது பெயர்களின் தொடர்வரிசை யைக் குறிக்கும். இத்தொடர் நீண்டதாகவோ குறுகியதாகவோ இருத்தல்கூடும். நபிகளார் சொன்னதை அல்லது செய்ததை அறிக் கைப் படுத்துவதே மத்ன். இவ்வறிக்கைப்படுத்தலும் நீண்ட தாகவோ குறுகியதாகவோ இருக்கலாம்.

## ஹதீஸை ஆதாரப்படுத்தல்: சுருக்கமான வரலாற்றுப் பின்னணி

*நபிகளாரின் வாழ்நாளிலும், அவர்கள் காலமாகி மூன்று தசாப்த காலம் வரையிலும், அறிவிப்பாளர் தொடர் (ஸனத்) பற்றி எந்த சர்ச்சையும் எழவில்லை. இக்காலப் பகுதியில் ஹதீஸ் வாசகம் (மத்ன்)மீது மட்டுமே முழுக் கவனமும் செலுத்தப்பட்டது. ஹதீஸை உண்மையானதென உறுதிப்படுத்தும் நடைமுறை முதல் கலீஃபா அபூபக்கர் ஸித்தீக்கின் (ம. ஹிஜ்ரி 13) காலத்திலேயே ஆரம்பித்ததெனக் காணலாம். ஒரு நபித்தோழரின் அறிவிப்பை இன்னொரு நபித்தோழர் உறுதிப்படுத்தாமல் தனியாக அதனை அபூபக்கர் (ரலி) ஏற்காது விட்டார். தனியொருவரின் அறிவிப்பில் -உள்நோக்கத்துடனோ- உள்நோக்க மின்றியோ தவறுகள் நுழையக் கூடிய சாத்தியப்பாட்டிலிருந்து ஹதீஸைப் பாதுகாப்பதே இதன் நோக்கமாக இருந்தது.*[(1)] *இவ்வணுகுமுறை இரண்டாவது கலீஃபா உமர் கத்தாப் (ரலி) காலத்திலும் (ஹிஜ்ரி 13 - 23) தொடர்ந்தது. ஹதீஸை ஏற்றுக்கொள்வதில் முன்னையவரை விட அதிக கண்டிப்பைக் கடைப்பிடித்தவர் உமர் (றலி). குறிப்பிட்ட விவகார மொன்றின்போது அபூ மூஸா அல்-அஷ்ஹரி (ம.ஹி. 50) ''மூன்று முறை கேட்டும் அனுமதி கிடைக்கப் பெறாத ஒருவர் போய் விட வேண்டும்'' என நபிகளார் கூறினர் என்ற ஹதீஸை எடுத்துரைத்த போது உமர் (றலி) அதனை ஏற்க மறுத்து இதற்கு ஆதாரமாக ஒரு சாட்சி வேண்டுமெனக் கோரினார். அபூஸயீத் அல்-குத்ரி (றலி) (ம.ஹி. 65) சாட்சியாய்க் கொணரப்பட்ட பின்னரே உமர் (றலி) திருப்தியடைந்தார்.*[(2)] *நபியின் ஹதீஸை எடுத்துரைப்பதில் தான் மேலதிக கவனம் செலுத்துவதனை அபூ மூஸா அல்-அஷ்ஹரிக்கு விளங்கப்படுத்தினார் உமர் (றலி).*[(3)] *மேலதிக உறுதிப்படுத்தலின்றி ஒரு ஹதீஸை எற்றுக்கொள்ள நபித்தோழர்கள் மத்தியிலான அறிஞர்கள் தயங்கினர்.*[(4)]

*''ஆரம்பத்தில் ஒரு ஹதீஸை எம்மிடம் எவர் எடுத்துரைத்த போதும் அதனை நாம் வெகு கவனமாய்க் கேட்போம். ஆனால் மனிதர்கள் நபிகளாரின் பெயரால் கண்டதையெல்லாம் எடுத் துரைக்கத் தொடங்கியதிலிருந்து ஆதாரபூர்வமானதாய் நாம்*

அடையாளம் கண்ட ஹதீஸ் களைத்தவிர வேறெதனையும் ஏற்றுக் கொள்வதில்லை'' என அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ம. ஹி. 68) குறிப்பிடுகின்றார்.[5]

மூன்றாவது கலீஃபா உதுமான் இப்னு அஃப்பானின் (ம. ஹிஜ்ரி 35) கொலைக்குப் பின்னரும், அலி (றலி) யை ஆதரித்த பிரிவி னர்க்கும் முஆவியாவை ஆதரித்த பிரிவினருக்குமிடையே மூண்ட உள்நாட்டுப் போரின் பின்னரும் உருவான பதற்ற நிலைகளின் போது நிலவிய சூழல் காரணமாக நபித்தோழர்கள் கூடிய அவ தானத்துடனான அணுகுமுறையைக் கையாள வேண்டியிருந்தது. இப் பதற்ற சூழலை நன்கு பயன்படுத்திக் கொண்ட சந்தர்ப்பவாதி கள் அலி இப்னு அபூதாலி (றலி)பை (ம. ஹிஜ்ரி 40) ஆதாரம் கற்பித்து ஹதீஸ்களைப் புனையலாயினர்.[6] உலமாப் பெருமக்கள் தம்மைச் சூழ நடந்துகொண்டிருந்த நிகழ்வுகளின் யதார்த்தை உணர்ந்து வேகமாய்ச் செயல்படத் தொடங்கி நபிகளாரின் பெய ரில் காணப்பட்ட ஹதீஸ்களை ஆதாரபூர்வமாய் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தம்மால் இயன்றளவு முயற்சிகளை மேற்கொண்ட னர். அலி (றலி) யை ஆதாரம்காட்டி ஹதீஸ்கள் அறிவிக்கப்பட்ட போது தஃப்ஸீர், ஹதீஸ் ஆகிய துறைகளில் பேரறிஞராய் விளங் கிய அப்துல்லாஹ் இப்னு மசூதின் மாணவர்களால் உறுதிப் படுத்தப்படாமல், உலமாக்கள் அவற்றை ஏற்கமறுத்தனர். உள் நாட்டுப் போரின்பின் ஹதீஸ்களின் ஆதாரத்தை உறுதிப்படுத்தல் சம்பந்தமாய் தஃப்ஸீர் ஹதீஸ்துறைப் பேரறிஞர் முஹம்மத் இப்னு ஸீரீன் இவ்வாறு கருத்துரைக்கின்றார்:

'மக்கள் அறிவிப்பாளர்கள் தொடர் பற்றி ஒருபோதும் கேள்வி யெழுப்பவில்லை. ஆனால் உள்நாட்டுப் போரின்பின் ஹதீஸ் களின் ஆதாரத்தை வெளியிடுமாறு அவர்கள் அறிவிப்பாளர்களை வேண்டினர். அறிவிப்பாளர் தொடரில் அஹ்லுஸ் ஸுன்னா வினரின் பெயர்கள் காணப்படின் அவர்கள் அவற்றை ஆதாரபூர்வ மானவைகளாய் ஏற்றுக்கொண்டனர். அறிவிப்பாளர்கள் தொடரில் அஹ்லுல் பித்ஆவினரின் (புதியன புகுத்துவோரின்) பெயரைக் கண்டால் அந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதல்ல என நிராகரிக்கப் பட்டது.'[7]

*அறிவிப்பாளர் வரிசையில் காணப்படும் அனைவரும் மிகவும் ஆதாரபூர்வமானவர்கள் என நிறுவப்பட்ட பின்னரே பிந்திய தலை முறையைச் சேர்ந்த அறிஞர்கள் ஒரு ஹதீஸை ஆதாரபூர்வமான தென வகைப்படுத்தினர். நம்பகமானவர்களிடமிருந்து மட்டுமே ஹதீஸை ஏற்றுக்கொள்ளுமாறு தாவூஸ் இப்னு கைஸான் (ம. ஹிஜ்ரி 106) தம் மாணவர்க்கு அறிவுறுத்தினார்.[8] தம் காலத்தில் மதீனாவில் சிறந்த பக்திமான்கள் என அறியப்பட்ட சுமார் நூறு பேர் இருந்ததாகவும் ஆனால் ஹதீஸ்துறையில் அவர்கள் நம்பக மானவர்களாய் கருதப்படவில்லை யெனவும் அபூ அல் ஸினாத் (ம. ஹிஜ்ரி 130) குறிப்பிடுகின்றார்.[9] ஹிஜ்ரி முதலாம் நூற்றாண் டின் பிற்பாதியிலிருந்து ஹதீஸை ஆதாரப்படுத்துவதில் அறிவிப் பாளர் தொடர் முக்கிய இடம் வகிக்கலாயிற்று. இத்தொடர் வரிசை பற்றி கருத்துரைக்கையில் அப்துல்லாஹ் இப்னு முபாரக் ''அறிவிப்பாளர் தொடர் மிகப் புனிதமானது. அது இல்லாவிடின் கண்டவரெல்லாம் கண்டதையெல்லாம் அறிவிக்கத் தொடங்கி யிருப்பர்'' எனக் குறிப்பிடுகின்றார்.[10]*

*அவர் ஒருமுறை ஒரு ஹதீஸை அதன் அறிவிப்பாளர் தொடர் வரிசையில் அதன் கடைசி அறிவிப்பாளரான இப்னு தீனார் (மறைவு நிச்சயமில்லை, பெரும்பாலும் 2 ஆம் நூற்றாண்டா யிருக்கலாம்) தமக்கும் நபிகளாருக்கும் இடையேயான அறிவிப் பாளர்களை வெளிப்படுத்தாத காரணத்தால் நிராகரித்தார்.[11] ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டு முற்றுப்பெறுகையில் ஹதீஸ் அறி ஞர்கள் ஹதீஸ் கற்கைக்கு சீர்மையான ஒரு துறையினை வளர்த் தெடுத்துவிட்டனர். இதுவே இல்ம் அஸ்மா அல் ரிஜால் (வாழ்க் கைச் சரிதை அகராதிகள்) என அறியப்படுவது. அறிவிப்பாளர்கள் பற்றிய இந்த அறிவு, அறிவிப்பாளர் தொடர் வரிசையை உறுதிப் படுத்துவதற்கு பரவலாக உபயோகிக்கப் படலாயிற்று. அறிவிப் பாளர் தொடர் வரிசை நம்பகமானதென நிறுவப்படின் அத் தொடர் மூலம் அறிவிக்கப்படும் ஹதீஸ் வாசகம் ஆதாரபூர்வ மானதென ஏற்கப்பட்டது. தொடர் வரிசையில் ஏதேனும் பிரச்சி னையிருப்பின் அவ்வறிவிப்பு பலவீனமானதென்றும் நம்ப முடி யாததென்றும் வகைப்படுத்தப்பட்டது.*

*ஹிஜ்ராவுக்குப் பின் சுமார் 140 வருடங்கள் ஹதீஸை ஆதாரப் படுத்தல் வாய்மொழி மூலமாகவே நிகழ்ந்துவந்தது. ஆதாரபூர்வ மான ஹதீஸ்களின் முதல் எழுத்துப்பதிவு ஸயீத் இப்னு அபீ அரூஃபாஹ் (ம. ஹிஜ்ரி 156) அல்-ரபீ இப்னு ஸபீஹ் (ம. ஹிஜ்ரி 160) ஆகியோரின் நூல்களாகும்.[(12)] இவற்றைத் தொடர்ந்து அநேக ஹதீஸ் தொகுப்புகள் வெளிவரலாயின. இவற்றுள் மிகவும் பிர சித்தி பெற்றவை மாலிக் இப்னு அனஸ் இப்னு ஜுரைஜ் (ம. ஹிஜ்ரி 150), அல்-அவ்ஸாயி (ம. ஹிஜ்ரி 157), சுஃபியான் அல்-ஸவ்ரி (ம. ஹிஜ்ரி 161), ஹம்மாத் இப்னு ஸலாமா (ம. ஹிஜ்ரி 167), அஹ்மத் இப்னு ஹன்பல், இஷ்ஹாக் இப்னு ராஹ்வைஹ் (ம. ஹிஜ்ரி 238) முதலானோரின் நூல்களாகும். நாம் இமாம் அல்-புஹாரியின் சகாப்தத்துக்கு வரும்போது எண்ணற்ற ஹதீஸ் நூல்கள் காணப் படுகின்றன. எனினும் இத்தொகுப்புகள் பிரச்சினைகள் மலிந் தவை. மிகவும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களின் தொகுப்பொன்றை வெளியிடும் மாபெரும் பணியை அல்-புஹாரி மேற்கொண்டார்.[(13)] இதற்காகஅவர்600,000ஹதீஸ்களிலிருந்துஆதாரபூர்வமானவற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. அதேபோன்று முஸ்லிம், 300,000 ஹதீஸ்களிலிருந்து தேர்வுகள் செய்யவேண்டியிருந்தது.[(14)]*

*புஹாரி, முஸ்லிம் இருவரதும் நூல்களைத் தொடர்ந்து மற்றும் பலரின் நூல்கள் வெளிவந்தன. இந்நூல்கள் அனைத்தினதும் பொதுவான அம்சம் அறிவிப்பாளர் தொடரை (ஸனத்) ஆதார பூர்வமாக்கல் மூலமாகவே ஹதீஸை ஆதாரபூர்வப்படுத்தலாகும். எனினும், வாசகம் அறிவிப்பாளர்கள் வரிசை ஆகிய இரண்டை யும் உறுதிசெய்து பதிவுசெய்யப்பட்ட தொகுப்பாக எந்தவொரு ஹதீஸ் நூலையும் காண இயலவில்லை. வாசகத்தின் அடிப்படை யிலான பார்வையில், குறிப்பிட்ட சில ஹதீஸ்கள் மீது சில அறிஞர்களது சிதறலான கருத்துக்களும் அவதானிப்புகளும் காணப் பட்டாலும் கூட, ஹதீஸ் புலமைப் பாரம்பர்யத்தில் இது குறித்து மேற்கொள்ளப்பட்ட காத்திரமான முயற்சியெதுவும் தென்பட வில்லை.*

## *அறிவிப்புத் தொடரையும் வாசகப் பதிவையும் கணித்தல்*

*ஹதீஸின் நம்பகத் தன்மையையும் ஆதாரபூர்வத்தையும் தீர்மானிப்பதற்கு ஒருமனதாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஐந்து அளவுகோல்களை ஹதீஸ் அறிஞர்கள் உருவாக்கினர். அவையாவன:*

1. *அறிவிப்புத் தொடரில் முறிவுகள் இல்லாமை (இத்திஸால் அஸ்-ஸனத்)*
2. *அறிவிப்பாளரின் சீரிய குணவொழுக்கம் (அல்-அதாலாஹ்)*
3. *அறிவிப்பின் திட்பநுட்பம் (அல்-தப்த்)*
4. *குறையேதும் இன்மை (கைர் அல்-இலாஹ்)*
5. *நெறி பிறழாமை (அத்ம் அல்-ஷுதூத்)*(15)

*முதல் மூன்று அளவுகோல்களும் அறிவிப்பாளர் தொடரைச் சரிகாண்பதாகும். மற்றைய இரண்டும் அறிவிப்பாளர் தொடர், வாசகம் இரண்டுக்கும் பொதுவானவை. இதில் ஏதேனும் ஒரு அளவுகோலுக்குப் பொருத்தமாக அமையாது போனால் குறிப்பிட்ட ஹதீஸ் பலவீனமானதெனக் கருதப்படும். ''ஆதாரபூர்வமான ஹதீஸ் என்பது அதன் அறிவிப்பாளர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு அறுபடாமல் இணைப்புற்றவர்களாகவும், குணசீலர்களாகவும், நினைவாற்றல் மிக்கவர்களாகவும், குறைபாடுகள் இல்லாதவர்களாகவும், நெறி பிறழாதவர்களாகவும், இருத்தலாகும்'' என இப்னு கதீர் இதனை மிகச் சுருக்கமாகத் தொகுத்துரைக்கின்றார்.(16) ஆதாரபூர்வமான ஹதீஸுக்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவை பலவீனமான ஹதீஸ் ஆகும்.(17) இவ்வைந்து அளவுகோல்களின் முக்கியத்துவம் கருதி அவற்றை இன்னும் சிறிது விரிவாக நோக்குவோம்.*

*அறிவிப்புத் தொடரில் முறிவுகள் இல்லாமை: ஹதீஸ் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அதன் அறிவிப்பாளர்களின் தொடர்ச்சி முறிவுகள் இல்லாமல் இருத்தல் வேண்டும். அதாவது அறிவிப்பாளர் வரிசையில் விடுபாடுகள் இருக்கக் கூடாது. மேலும்*

ஒவ்வொரு அறிவிப்பாளரும் சம்பந்தப்பட்ட ஹதீஸை முன்னவரிட மிருந்து நேரடியாகக் கேட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு அறி விப்புத் தொடரும் நபிகளாருடன் அல்லது ஒரு நபித்தோழருடன் நேரடியாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.(18) அறிவிப்புத் தொடரில் நபித்தோழரின் வகிபாகம் வெளிப்படையானதும் தெளி வானதுமாகும். அவர் நபிகளாரைச் சந்தித்திருப்பார்; அன்னாரிட மிருந்து கற்றும் இருப்பார். நபிகளாரிடமிருந்து அறிவிப்பவர் நபித்தோழரா இல்லையா என்பது முக்கியம். அறிவிப்பவர் நபித் தோழர் என்பது உறுதியானால் அவரைப்பற்றி வேறொன்றும் துருவிப் பார்க்கப்படவில்லை. நபித்தோழர் அல்லாத ஏனைய அறிவிப்பாளர் விடயத்தில் சம்பந்தப்பட்ட ஆதாரங்களுடன் அவரது உடனடித் தொடர்பு பற்றி நன்கு ஆராய்ந்தறிய வேண்டி யிருந்தது. இரு அறிவிப்பாளர்களிடையே எங்கு எப்போது சந் திப்பு நிகழ்ந்தது அவர்களின் தோற்றம் மறைவு பற்றிய விவ ரங்களையெல்லாம் அறிஞர்கள் விசாரணைக்குட்படுத்தி துல்லிய மாக ஆராய்ந்தனர். 'அ' முதல் 'ஊ' வரையான எழுத்துக்கள் குறிக்கும் தொடரொன்றை நாம் எடுத்துக் கொண்டால் 'அ' என்பவர் 'ஆ'விடமிருந்தும் 'ஆ' என்பவர் 'இ' இடமிருந்தும் 'இ' என்பவர் 'ஈ' இடமிருந்தும் 'ஈ'என்பவர் 'உ' இடமிருந்தும் 'உ' என்பவர் 'ஊ' இட மிருந்தும் 'ஊ' என்பவர் நேரடியாக நபி களாரிடமிருந்தும் அறிவிப்பவராக இருப்பார். அளவுகோலின்படி இத்தொடர் 'அ' என்பவருக்கும் 'ஆ' என்பவருக்குமிடையே அதேபோன்று 'ஆ'வுக்கும் 'இ' என்பவருக்குமிடையே 'இ' என்பவருக்கும் 'ஈ' என்பவருக்குமிடையே 'ஈ' என்பவருக்கும் 'உ'என்பவருக்குமிடையே 'உ' என்பவருக்கும் 'ஊ'என்பவருக்கு மிடையே நேரடி சந்திப்பும் தொடர்பும் இருப்பதையும் 'ஊ' என்பவர் நபித்தோழராய் இருப்பதையும் குறிக்கும். இதில் 'உ' என்பவருக்கும் 'ஊ' என்பவருக்குமிடையே காலம் இடம் சம் பந்தமான இடைவெளி ஏதும் காணப்படுமாயின் 'உ' என்பவர் 'ஊ'விடமிருந்து ஆதாரமில்லாத ஒன்றை அறிவிக்கின்றார் என் றாகிவிடும். அப்போது சம்பந்தப்பட்ட ஹதீஸின் ஆதாரபூர்வத் தன்மை சிதைவுற்று விடும்.

## *அறிவிப்பாளரின் சீரிய குணவொழுக்கமும் நடத்தையும் (அல்-அதாலாஹ்):*

ஓர் அறிவிப்புத் தொடரில் இடம்பெறும் அறிவிப்பாளர் உண்மை விசுவாசியாய் உடல் உள ரீதியான முதிர்ச்சியும் பக்குவமும் பெற்றவராய் பாபச்செயல் புரியாதவராய் குண வொழுக்கத்திலும் நடத்தையிலும் கண்ணியமானவராய் மானுட அவமதிப்புக் குள்ளாகாதவராய் இருத்தல் வேண்டும்.(19) இவ் வளவுகோல் அனைத்தும் தழுவிய ஒன்றாகும். இறை நம்பிக்கை யின்மை, நயவஞ்சகம், சித்தசுவாதீனமின்மை, உடலியல் முதிர்ச்சி யின்மை முதலியன அறிவிப்பாளரின் குணவொழுக்கத்தையும் நடத்தையையும் ஐயத்திற்குள்ளாக்கிவிடும். அறிவிப்பாளர் எச்சந் தர்ப்பத்திலும் எவருக்கும் தீங்கு புரியாதவராய் இருத்தல் வேண் டும். ஓர் அறிவிப்பாளர் தொழாதவராய் நோன்பு நோற்காதவராய் பாபம் புரிபவராய் அற்பச்செயல்களில் ஈடுபடுபவராய் அல்லது மக்களிடம் இரந்து வாழ்பவராய் இருப்பின் அவர் குணவொழுக்க நடத்தையின் அளவுகோல்படி தகுதியற்றவராவார்.

## *அறிவிப்பின் திட்பநுட்பம் (அல்-தப்த்)*

அறிவிப்பாளர் நினைவாற்றல்மிக்கவரா என ஆய்ந்தறியப் படல் வேண்டும். இவ்விடயத்தில் அவர் பலவீனராய் இருத்தல் கூடாது. அத்துடன் அவர் தனது அறிவிப்பில் அறிவீனமான தவறுகள் விடக்கூடியவராய் இருத்தல்கூடாது. அவர் தகவலைத் துல்லியமாய் திட்பநுட்பத்துடன் அறிவிப்பவராய் இருத்தல் வேண்டும். அவர் ஞாபகமறதி உடையவராய் தனது ஆதாரத்தி லிருந்து தான் எடுத்துரைக்கும் விடயம்பற்றி உணர்வற்றவராய் இருத்தல் கூடாது. அளவுக்கதிக மாயை வசப்பட்டவராக இருத்த லும் கூடாது.(20) அறிவிப்பாளரின் நினைவாற்றலிலோ ஆவணப் படுத்தப்பட்ட அவரது எடுத்துரைப்பிலோ திட்ப நுட்பக் குறை பாடு காணப்படின் அவர் பலவீனமானவராய், நம்பகத்தன்மை யற்றவராய் ஆகிவிடுவார்.

## குறையேதும் இன்மை (கைர் அல்- இலாஹி)

ஒரு ஹதீஸ் ஆதாரபூர்வமானதெனக் கொள்ளப்பட வேண்டுமாயின் அது, அறிவிப்பாளர் வரிசையிலோ, வாசகத்திலோ எவ்வித குறையும் இல்லாததாக இருக்க வேண்டும். ஒரு ஹதீஸ் ஆரம்பத்தில் குறையேதுமற்றதாய்த் தென்படக் கூடும். என்றாலும் அதன் அறிவிப்பாளர் தொடரிலோ அல்லது அதன் வாசகத்திலோ அல்லது இரண்டிலுமோ தெளிவற்ற, மறைவான, அல்லது கண்டிக்கத்தக்க ஒரு குறைபாடு அமிழ்ந்திருக்கலாம். இதற்குப் பல காரணிகள் இருக்கலாம்.

*1. குறிப்பிட்ட ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் இடம் பெற்றுள்ள ஒருவர் அதனை அறிவிப்பதில் தன்னந்தனியராய்க் காணப்படல் 2. ஒரு ஹதீஸ் பிற ஹதீஸ்களி லிருந்து முரண் பட்டிருத்தல் 3. ஒரு தாபியி அறிவிப்பாளர் நபிகளாரிடமிருந்து நேரடியாக அறிவித்தல் 4. நபிகளாருடையதாய் அல்லாமல் நபித் தோழருடைய சொல்லாகவும் செயலாகவும் இருத்தல் 5. ஒரு ஹதீஸ் இன்னொரு ஹதீஸினுள் நுழைதல் (அதாவது ஒரு ஹதீஸ் இன்னொரு ஹதீஸுடன் கலந்து குழம்பியிருத்தல். அல்லது யாரோ ஒருவருடைய கூற்று நபியுடைய ஹதீஸில் இடைச்செருகலாய்த் திணிக்கப் பட்டிருத்தல்).*[21]

*''வாசகத்தின் குறை அல்லது பூர்த்தியின்மை பல்வேறு வகையின'' என விளக்குகின்கிறார் அல்-கைர் அபதீ: 1. ஹதீஸ் வாசகம் குர்ஆனுக்கு முரணாய் இருத்தல் 2. வாசகம் இஸ்லாத்தின் நோக்கத்துக்கு மாற்றமாயிருத்தல் 3. வாசகம் நிறுவப்பட்ட வரலாற்றுடன் மோதுவதாய் இருத்தல் 4. வாசகம் பகுத்தறிவுக்கு முரணானதாயிருத்தல் 5. வாசகம் பொது அவதானிப்புடன் முரண்படல் 6. வாசகத்தில் தண்டனை வெகுமதி முதலிய தகவல்கள் சமானமற்றிருத்தல். 7. வாசகத்தில் பொருத்தப்பாடற்ற சொற்களும் அர்த்தங்களும் விரவிக்கிடத்தல்.*[22]

## *நெறிபிறழாமை (அத்ம் அல்-ஷுதூத்):*

*'ஷுதூத்' என்பது மரபுமீறலைக் குறிக்கும். அதாவது ஓர் ஆதார பூர்வமான அறிவிப்பாளரின் ஹதீஸில் நினைவாற்றலையும் துல்லியத்தையும் பொறுத்தவரை தன்னைவிடச் சிறந்த அல்லது தனக்குச் சமனான சமகால அறிவிப்பாளர்களின் பிற ஹதீஸ்களுடன் முரண்படும் ஏதோவொன்று தென்படுதலாகும்.[23] இத்தகைய குறை, வாசகத்தோடு சம்பந்தப்பட்டதென்பது வெளிப்படை. நெறிபிறழ்வு ஐந்து வகையினதாய் இருக்கலாம். அவை: பிற்சேர்க்கை (ஸியாதாஹ்) தலைகீழாக்குதல் (கல்ப்) குளறுபடி (இத்திராப்) இடைச்செருகல் (இத்ராஜ்) உச்சரிப்புப் பிழை (தஷிஃஃப்).*

*பிற்சேர்க்கை (ஸியாதாஹ்) என்பது நபித்துவ கட்டளையின் இயல்பே மாற்றமுறும்படி ஹதீஸின் மூலநவிற்சியில் ஏதோ பின்னர் சேர்க்கப்பட்டிருப்பதைக் குறிக்கும். உதாரணத்துக்கு ரமழான்மாத இறுதியில் முஸ்லிம் சமூகத்திலிருந்து சகலரும் பிரமாணமான ஒரு கிண்ண அளவு (ஸாஅ) பேரீத்தம்பழங்களை அல்லது பார்லியை ஸகாத் அல்-பித்ர் ஆக கொடுக்க வேண்டும் என நபிகளார் நவின்றதாக அப்துல்லாஹ் இப்னு உமர் அறிவிக்கின்றார்.[24] ஆனால் 'முஸ்லிம் சமூகத்திலிருந்து' என்ற சொற்கள் யாரோ ஓர் அறிவிப்பாளரால் பின்னர் சேர்க்கப்பட்டதென்பது ஆய்வின் மூலம் தெரியவந்தது.*

*இப்னு உமரின் இதே ஹதீஸை இமாம் முஸ்லிம் ஐந்து அறிவிப்புத் தொடர்கள் மூலம் பதிவு செய்துள்ளார். இவற்றுள் மூன்று அறிவிப்புகளில் இப் பிற்சேர்க்கை காணப்படுகின்றது. ஏனைய இரு ஹதீஸ்களில் இப்பிற்சேர்க்கை இல்லை.[25] இம் மேலதிக சொற்களால் இந்தக் கட்டளையின் இயல்பு மாறுகின்றது. பிற்சேர்க்கை இன்மை ஸகாத் அல்-ஃபித்ராவைச் சகலருக்கும் கடமையாக்குகின்றது. பிற்சேர்க்கை இதனை முஸ்லிம்களுக்கு மட்டுமென மட்டுப்படுத்துகின்றது. வாசகத்திலான இத்தகைய குறைபாடு ஹதீஸை நம்பகமற்றதாக்குகின்றது.[26]*

## தலைகீழாக்குதல் (கல்ப்)

இது ஹதீஸில் சொற்களின் ஒழுங்கை மாற்றியமைத்தலைக் குறிக்கும். உதாரணத்துக்கு இறுதித் தீர்ப்பு நாளில் ஏழு வகையான மனிதர்களுக்கு இறைவன் பாதுகாப்பளிப்பது சம்பந்தமான ஹதீ ஸொன்றை அபூஹுரைரா அறிவிப்பதை முஸ்லிம் பதிவுசெய் துள்ளார். இதில் ஆறாவது வகையினர் பற்றி அறிவிக்கப்படுவ தாவது: 'இடது கை செய்யும் தருமத்தை வலது கைஅறியாமல் மறைப்பவர்கள்.' தர்மம் வலது கையால் செய்யப்படுவதே வழமை. இங்கு இடது கையே அதற்குப் பயன்படுகிறது. 'வலது கை செய்யும் தருமத்தை இடது கை அறியாமல் மறைப்பவர் கள்' என்பதே மரபு. இந்த அறிவிப்பில் யாரோ ஒருவர் சொல் ஒழுங்கை மாற்றி யிருக்கிறார். மூலநவிற்சி ''... அவரது வலது கை செய்த தருமத்தை இடது கை அறியாது'' என்றே இருந்திருத்தல் வேண்டும்.[27]

## குளறுபடி (இத்திராப்)

ஒரே மூலத்திலிருந்து அறிவிக்கப்படும் ஒரு பொருள் குறித்த ஹதீஸின் பல்வேறு அறிவிப்புகளில் வேறுபாடுகள் காணப் படுதல் என இது வரையறுக்கப்படுகின்றது. உதாரணத்துக்கு அப்துல்லாஹ் இப்னு அப்பாஸை ஆதாரம் காட்டி அல்-கைர் அஹதி ஐந்து ஹதீஸ்களைத் தருகின்றார். இவை யாவும் ஒரே ஆதாரத்தைக் கொண்டவையென அவர் நம்புகிறார். ஆனால் அறிவிப்புகள் ஒன்றிலிருந்தொன்று வேறுபடுவதால் இது குளறு படிக்கு இட்டுச் சென்றுள்ளது. அந்த ஐந்து ஹதீஸ்களும் கீழே தரப்பட்டுள்ளன:

1. ஒரு மனிதர் தனது காலஞ்சென்ற அன்னைக்காக ஈடுசெய்ய நோன்பு நோற்கலாமா என நபிகளாரிடம் கேட்கவும் அதற்கு நபியவர்களின் பதில் அதற்கு உடன்பாடானதாய் இருந்தது.

2. ஒரு பெண் தனது காலஞ்சென்ற அன்னைக்காக ஈடுசெய்ய நோன்பு நோற்கலாமா எனக் கேட்டதற்கு அவர் அவ்வாறு செய்வதற்கு நபி (ஸல்) அனுமதித்தார்கள்.

3. ஒரு பெண் தனது காலஞ்சென்ற சகோதரிக்காக நோன்பு நோற்கவா எனக் கேட்டதற்கு அவர் அவ்வாறு செய்வதற்கு நபி (ஸல்) அனுமதித்தார்கள்.

4. ஸஅத் இப்னு உபாதாஹ் தன் அன்னையால், காலமாகு முன் நிறைவேற்ற முடியாது போன நேர்த்திக் கடனை தன்னால் நிறைவேற்ற முடியுமா என நபிகளாரிடம் கேட்க நபி (ஸல்) அவருக்கு அனுமதி வழங்கினார்கள்.

5. ஸஅத் காலமான தன் அன்னைக்காகத் தான் எத்தகைய தர்மம் செய்யவேண்டுமென நபிகளாரிடம் கேட்க அதற்கு நபியவர்கள் பொதுமக்கள் பயனடைவதற்காக நீர்நிலை யொன்றை நிறுவுமாறு அவருக்கு ஆலோசனை கூறினார் கள்.(28)

**இடைச்செருகல் (இத்ராஹ்):**

நபி(ஸல்) கூறாத ஒன்றை ஹதீஸினுள் புகுத்தல் என இதனை வரையறுக்கலாம். உதாரணத்துக்கு ''நபி (ஸல்) அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊதுக்கு தொழுகையில் தஷஹ்ஹுதைக் கற்றுக் கொடுத்த பின் கூறியதாவது: 'தஷஹ்ஹுத் ஓதிய பின் நீர் விரும்பினால் இருப்பில் இருக்கலாம் அல்லது அதிலிருந்து நீங்க லாம்' எனக் கூறினார்கள்.''(29) ''தஷஹ்ஹுத் ஓதியபின் நீர் விரும் பினால் இருப்பில் இருக்கலாம் அல்லது அதிலிருந்து நீங்கலாம் என்ற இறுதிப் பகுதி இப்னு மஸ்ஊதின் அறிவிப்பாகும். இது நபிகளார் நவின்றதாகப் வாசகத்தில் இடைச்செருகலாய்ப் புகுத் தப்பட்டதாகும்'' என்று சாதிக்கின்றார் அல்-நவவி.(30)

**உச்சரிப்புப் பிழை (தஷ்ஹீஃப்):**

இது ஹதீஸில் இடம்பெற்றுள்ள சொல் அல்லது சொற்களின் பிழையான புரிதல் ஆகும். உதாரணத்துக்கு வெள்ளிக்கிழமை தொழுகைக்குமுன் மக்கள் வட்டங்களாகக் (ஹிலக்) கூடுவதை நபிகளார் தடைசெய்தார்கள். ஆனால் 'ஹிலக்' என்ற சொல்லை அநேக அறிஞர்களும் முஹத்திதூன்களும் அல்-ஹல்க் (மயிரை

மழித்தல்) என உச்சரித்தார்கள்.[31] உச்சரிப்புப் பிழை காரணமாக சொல்வடிவமும் பொருளும் மாறிற்று என்பது வெட்டவெளிச்ச மாகும்.

## இமாம் புஹாரி இமாம் முஸ்லிம் இருவரதும் வகிபாகம்

புஹாரி (ஹிஜ்ரி 194 - 256) முஸ்லிம் (ஹிஜ்ரி 204 - 261) இரு வரையும் குறிப்பிடாமல் ஹதீஸ் தொகுக்கப்பட்டதன் வரலாறு முழுமை பெறாது. திர்மிதி, அபூதாவூத், நஸாயி, அஹ்மத் இப்னு ஹன்பல் போன்ற மற்றும் அறிஞர்கள் ஹதீஸைப் பேணிப் பாதுகாப்பதில் பாரிய பங்காற்றியுள்ள போதும் புஹாரியும் முஸ்லிமும் மிகுந்த கவனிப்புக்குரியோராவர். இவர்கள் எல்லாக் காலத்துக்கும் உரிய மிகப்பெரும் ஹதீஸ் அறிஞர்களாகக் குறிப் பிடப்படுபவர்கள். ஹதீஸ்களைப் பரிசோதனை செய்யவும் வகைப்படுத்தவும் அவர்கள் கைக்கொண்ட முறைமை ஹதீஸை ஆதாரப்படுத்துவதற்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. இன்று நாம் அறிந்துள்ள ஹதீஸ் ஆதாரப்படுத்துதல் முறைமை அவர்களுடையதே. அவர்களுக்குப் பின்னர் வந்தவர்களும் இம் முறைமையையே பின்பற்றினர். புஹாரி, முஸ்லிம் இருவரும் ஹதீஸை ஆதாரப்படுத்தும் துறையில் ஆசான்களாகவும் முன் னோடிகளாகவும் திகழ்வது ஆச்சரியமன்று.

### இமாம் புஹாரி (ரஹ்):

இமாம் புஹாரி (ரஹ்) இன்றைய உஸ்பெக்கிஸ்தானில் உள்ள புஹாராவில் பிறந்தார். இவரது கொள்ளுப் பாட்டன் அல்-முகீரா ஒரு மஜூஸி (நெருப்பு வணங்கி)யாயிருந்து இஸ்லாத்தைத் தழுவியவர். இவர் புஹாரா கவர்னரின் கையில் பிரமாணம் செய்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார். இமாம் புஹாரியின் தந்தையும் ஓர் ஹதீஸ் மாணவராவார். இவர் மாலிக் இப்னு அனஸை சந்திக்கவும் அவரிடமிருந்து ஹதீஸ்களைக் கேட்கவும் பாக்கியம் பெற்றிருக்கின்றார். இமாம் புஹாரி மிக இளம் வயதிலேயே

குர்ஆனையும் ஹதீஸையும் மனனஞ் செய்திருந்ததோடு ஹதீஸ் ஆராய்ச்சியிலும் ஈடுபடத் தொடங்கினார். பதினாறுவயதாகும் போது அப்துல்லாஹ் இப்னு அல் முபாரக்கினதும் வாக்கி இப்னு அல்-ஜர்ராவினதும் நூல்களை மனனஞ் செய்திருந்தது மட்டுமன்றி அவற்றின் உள்ளடக்கம்பற்றி ஆழ்ந்த புரிதலைக் கொண்டிருந்தார். ஹதீஸை ஆழ்ந்து கற்று அவற்றை நுணுகி ஆராயும் பணி அவரது பதினாறு வயதில் மக்காவில் தொடங்கிற்று. அங்குவதியும்போது ஓரிரண்டாண்டுகளில் நபித்தோழர்களதும் அவர்களின் சீடர்களதும் தீர்ப்புகளையும் வாக்குமூலங்களையும் தொகுக்கத் தொடங்கினார். மக்காவில் வைத்தே இமாமின் 'அல்-தாரீக்' என்ற நூல் இயற்றப் பெற்றது. இமாமின் ஆசிரியர் இஷ்ஹாக் இப்னு ராஹவையிடம் யாரோ ஒருவர் நபிகளாரின் ஹதீஸைத் தொகுக்கும் பணியில் ஈடுபடுமாறு ஆலோசனை கூறியபோது அதுகேட்டு உந்துதலுற்ற இமாமவர்கள் தாமே அப்பணியில் ஈடுபடத் துணிந்தார். தமது 'அல்-ஜாமி அஸ்-ஸஹீஹ்' என்ற மாபெரும் நூலில் ஒன்பதாயிரத்து எண்பத்து இரண்டு ஹதீஸ்களை அவர் பதிவு செய்தார். இவை தாம் மனனஞ் செய்திருந்த ஆறு இலட்சம் ஹதீஸ்களிலிருந்து வடிகட்டி எடுக்கப்பட்டவை.

இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ள ஹதீஸ்கள் உண்மையில் ஈராயிரத்து அறுநூற் றிரண்டேயாகும். ஹதீஸ்கள் மீட்டுரைக்கப் பட்டதன் மூலம் இத்தொகை சுமார் நான்கு மடங்கு அதிக மாகப் பெருப்பமுற்றது. இந்நூலில் ஃபிக்ஹ் அடிப்படையில் 97 அத்தி யாயங்கள் காணப்படு கின்றன. ஹதீஸ்களை நூலில் சேர்த்துக் கொள்ளுமுன் ஒவ்வொரு ஹதீஸினதும் அறிவிப்பாளர் தொடரைக் கடுமையான பரிசோதனைக்கு உட்படுத்தினார் இமாம் புஹாரி. இக்காரணத்தாலேயே அவரது நூல் மிகவும் ஆதாரபூர்வமான ஹதீஸ் தொகுப்பாக அங்கீகரிக்கப்படுகின்றது. பாரிய சிரமங்கள் மிக்கதொரு முயற்சியாக இது இருந்தும் தாரகுத்னி போன்ற ஹதீஸ் விற்பன்னர்கள் புஹாரி பதிவுசெய்துள்ளவற்றில் சுமார் எழுபது ஹதீஸ்களின் நிலைகுறித்துச் சவால் விடுகின்றனர். தாரகுத்னியின் விமர்சனம் ஆதாரமற்றது என நிரூபிக்கின்றார் இப்னு ஹஜர் அஸ்கலானி.

### இமாம் முஸ்லிம் (ரஹ்)

இமாம் முஸ்லிம் (ரஹ்) ஈரானின் வடபகுதியில் ரஸவி குராஸான் மாகாணத்தில் உள்ள நிஸாப்பூரில் பிறந்தார். பன்னிரண்டு வயதில் ஹதீஸ் கற்கத் தொடங்கி யஹ்யா இப்னு யஹ்யா, இஷ்ஹாக் இப்னு ராஹவை முதலானோரிடம் பயின்றார். ஹதீஸ் கற்பதில் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாடு காரணமாக மக்கா, மதீனா, கூஃபா, பஸ்ரா, பகுதாத், சிரியா, பால்கு, எகிப்து, ராயி இன்னோரன்ன இடங்களுக்கெல்லாம் பிரயாணஞ் செய்தார். அவர் எழுதிய நூல்களுள் மிக முக்கியமானது முஸ்னத் அஸ்-ஸஹீஹ் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இதில் சுமார் நாலாயிரம் ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன. ஹதீஸ்களைப் பரிசீலிப்பதில் இமாம் புஹாரியைப் போலவே முஸ்லிமும் மிகக் கடினமான முறைமையைக் கையாண்டார். சில அறிவிப்பாளர்களைத் தரப் படுத்துதலில் மட்டுமே அவர்களுக்கிடையே வித்தியாசம் காணப் படுகின்றது. முஸ்லிமின் சில அறிவிப்பாளர் வரிசைகள் முற்று முழுதாக விமர்சனத்துக்கு அப்பாற்பட்டன அல்ல என்றே இமாம் புஹாரி கருதினார். ஆயினும், முஸ்லிமுடைய வசீகரம் அவர் ஹதீஸ்களை ஒழுங்கு படுத்திய பாணியில் தங்கியுள்ளது. குறிப் பிட்டவோர் விடயம் பற்றிய அனைத்து ஆதாரபூர்வ ஹதீஸ்களையும் அவர் ஒரே இடத்தில் பதிவுசெய்துள்ளார். புஹாரியிலோ அவை பல்வேறு அத்தியாயங்களிலும் பரவிக் கிடக்கின்றன.

## வாசகங்களின் அடிப்படையில் ஹதீஸ்களை ஆதாரப்படுத்தல்

புஹாரியும் முஸ்லிமும் மற்றும் ஹதீஸ் நிபுணர்களும் அனைவருக்கும் ஏற்புடைத்தான அளவுகோல்களைக் கொண்டு ஹதீஸ்களைப் பரிசீலித்தார்கள் என உரிமை கொண்டாடல் எவ்வகையிலும் சாத்தியமன்று. ஹதீஸ் அறிவிப்பாளர் தொடர் ஆதார பூர்வமானதாக இருப்பின் ஹதீஸ் வாசகமும் ஆதாரபூர்வமானதாக இருக்கும் என்ற நம்பிக்கையில் அறிவிப்பாளர் தொடரைக் கடுமையான பரிசீலனைக்கு உட்படுத்துவதன் மூலம் ஹதீஸை

*ஆதாரபூர்வமானதெனக் கொள்ளலாம் என்றே அவர்கள் கருதினர். ஆதாரபூர்வமானதென நம்பப்பட்ட ஹதீஸ் நூல்களை விமர்சிக்கும் போது கூட அவர்கள் அறிவிப்பாளர் தொடரை அலசுவதில் மட்டுமே கவனஞ் செலுத்தினர். இதனால் உலுமுல் ஹதீஸ் அறிஞர்கள் உள்ளடக்கத்தில் கவனஞ் செலுத்தவில்லையென்று அர்த்தமாகிவிடாது. புஹாரி முஸ்லிம் உட்பட ஆதாரபூர்வமான ஹதீஸ் நூல்களில் பதிவாகியுள்ள சில ஹதீஸ் வாசகங்களில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து ஆங்காங்கு குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் இதனையிட்டு உண்மையில் காத்திரமான முயற்சியேதும் காணப்படவில்லை. வாசகத்தைப் பரிசீலிப்பதன் மூலம் ஹதீஸை ஆதாரப்படுத்துவதில் ஓரளவு காத்திரமான பங்காற்றியுள்ள நூல்கள் குறைந்தது மூன்றேனும் உள. அவையாவன: 1. இப்னு அல்- ஜவ்ஸியின் 'அல்-மவ்லூஆத்' 2. இப்ன் அல்-கையிமின் 'அல்-மனார் அல்- முனீஃப் ஃபீ அல்-ஸஹீஹ் வ அல்-ளயீஃப்' 3. அல்-துமைனியின் 'மக்காயிஸ் நக்த் முதூன் அஸ் ஸுன்னா'.*

## *இப்னு அல்-ஜவ்ஸியின் 'அல்-மவ்லூஆத்''*

*இப்னு அல்-ஜவ்ஸிய்ன் 'அல்-மவ்லூஆத்' புனையப்பட்ட ஹதீஸ்களின் தொகுப்பாகும். இதில் ஐம்பது தலைப்புகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ள அனைத்து ஹதீஸ்களையும் அறிவிப்பாளர் தொடரைக் கவனத்தில் கொள்ளாமல் வாசகத்தின் அடிப்படையிலேயே எளிதாக நிராகரித்து விட முடியும். என்றாலும் அவர் வாசகத்தின் அடிப்படையிலன்றி மீண்டும் அறிவிப்பாளர் தொடரை அலசுவதன் மூலமாகவே பதிவாகியுள்ள ஹதீஸ்களைப் புனைந்து கூறப்பட்டன என வகைப்படுத்தியுள்ளார். ஒவ்வொன்றும் புனையப்பட்ட ஹதீஸ் என்பதை அவர் வாசகங்களை அலசுவதன் மூலம் அறிவிக்காத போதிலும் இந்நூலின் தலைப்புகள் வாசகத்தின் கண்ணோட்டத்தில் ஹதீஸ்களை ஆதாரப்படுத்துவதன் பாலான ஜவ்ஸியின் மனச்சாய்வு பற்றி அதிகம் பேசுகின்றன. ''பொய்யர்களின் புனைவுமீது மனம் காட்டும் வெறுப்பு புனையப்பட்ட ஹதீஸ்களை நிராகரிப்பதற்குப் போதுமான*

அளவுகோல்'' எனச் சில சமயங்களில் அவர் வெகு சுவாரஸ்யத்துடன் அறிவிக்கின்றார்.[32]

புஹாரி முஸ்லிம் உட்பட ஆதாரபூர்வமான ஹதீஸ் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஹதீஸ்களை ஜவ்ஸி ஆறு பிரிவுகளாக வகைப்படுத்துகின்றார். அவை: (1) ஆதாரபூர்வமானதென அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட ஹதீஸ்கள் (2) புஹாரி அல்லது முஸ்லிமில் மட்டும் பதிவாகியுள்ள ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் (3) புஹாரி முஸ்லிமில் பதிவாகாத ஆனால் ஆதாரபூர்வமானவையென உரிமைகொண்டாடும் ஹதீஸ்கள் (4) பலவீனமான தன்மைகொண்ட ஹதீஸ்கள் (5) மிகவும் பலவீனமான ஹதீஸ்கள் (6) நபிகளாரின் பெயரால் இட்டுக்கட்டப்பட்ட பொய்களே தவிர வேறில்லை எனக் கருதப்படும் ஹதீஸ்கள்.[33]

## இப்னு கையிமின் ''அல்-மனார் அல்- முனீஃப் ஃபீ அல்-ஸஹீஹ் வ அல்-ளயீஃப்''

வாசகத்தை நுணுகி ஆய்வதன் மூலம் ஹதீஸை ஆதாரப்படுத்துவதற்கான அளவுகோலை ஓரளவாவது முதன் முறையாக உருவாக்கியவர் இப்னு அல்-கையிம் (ம. ஹிஜ்ரி 751) ஆவார். அவர் உருவாக்கிய அளவுகோல்கள் வருமாறு: (1) குர்ஆனுடன் ஹதீஸ் முரண் படாமை (2) ஒரு ஹதீஸ் மிகவும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களுக்கு முரண்படுவதாகக் காணப்படாமை (3) தெளிவான அவதானிப்புகளை ஹதீஸ் நிராகரியாமல் இருத்தல் (4) நற்கூலி தண்டனையிரண்டையும் மிகைப்படுத்தி விவரியாதிருத்தல் (5) ஹதீஸ் பொய்மையான அறிவிப்புகளை கொண்டிராமை (6) ஓர் இடத்தையோ நபரையோ தொழிலையோ அளவு கடந்து புகழாமையும் இகழாமையும். இப்னு கையிமின் ''அல்-மனார் அல்-முனீஃப் ஃபீ அல்-ஸஹீஹ் வ அல்-ளயீஃப்'' ஐம்பது பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதியிலும் அறிவிப்பாளர் தொடரின் அடிப்படையிலும் வாசகத்தின் அடிப்படையிலும் நம்பமுடியாதது என அறிவிக்கப்படும் ஹதீஸ்களை அது பதிவு செய்கின்றது. மொத்தம் முன்னூற்றி நாற்பத்தியேழு ஹதீஸ்கள் இதில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

## துமைனியின் ''மகாயீஸ் நக்த் முதூன் அல்-ஸுன்னாஹ்''

*வாசகத்தின் கண்ணோட்டத்தில் ஹதீஸ் ஆராயப்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து முழுமையான நூலொன்றை முதன் முதலாக எழுதியவர் மிஸ்ஃபிர் கர்ம் அல்லாஹ் அல்-துமைனியாவார். அவரது நூல் உண்மையில் மக்கா உம் அல்-குரா பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வாகச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றதாகும். இந்நூல் முகவுரையும் மூன்று அத்தியாயங்களும் கொண்டது. அத்தலைப்புகள்: (1) ஸுன்னாவின் வாசகங்களது பரிசீலனைக்கான, நபித்தோழர்களது அளவுகோல் (2) ஸுன்னாவின் வாசகங்களது பரிசீலனைக்கான ஹதீஸ் அறிஞர்களது அளவுகோல் (3) ஸுன்னாவின் வாசகங்களது பரிசீலனைக்கான சட்டவியலாளர்களின் அளவுகோல்.*

## ஸுன்னாவின் வாசகங்களது பரிசீலனைக்கான நபித்தோழர்களது அளவுகோல்

*அல் துமைனியினது நூலின் இவ்வத்தியாயம் சுன்னாஹ்வின் வாசகங்களைப் பரிசீலிப்பதற்காக மூன்று அளவுகோல்களை முன்வைக்கின்றது. அவை குர்ஆன், மிக்க ஆதாரபூர்வமான ஹதீஸ், பகுத்தறிவு என்பன. நபித்தோழர்கள் தம் சகாக்களின் நேர்மை குறித்து ஐயங்கள் கொண்டிராத போதிலும் நபிகளாரின் பெயரால் அறிவிக்கப்பட்ட ஹதீஸ்களை மேலும் ஆதாரப்படுத்துவதற்கு இவ்வளவுகோல்களைப் பயன்படுத்தினர் என்பார் துமைனி.[(34)] நபிகளாரின் எந்தவொரு கூற்றும் குர்ஆனுக்கு விரோதமானதாய் இருக்கமுடியாது. ஏனெனில் குர்ஆனும், ஸுன்னாவும் அல்லாஹ் விடமிருந்தே வந்தவை என அவர்கள் நம்பினர். அப்படி விரோதப்படின் அவர்கள் அதனை நிராகரித்து விடுவர். ஹதீஸைக் குர்ஆனுடன் ஒப்புநோக்கும் நபித்தோழர்களின் வழக்கத்தை துமைனி தூலமான எட்டு உதாரணங்களால் விளக்குகிறார்: உதாரணமாக மீஃகால் இப்னு ஸினான் அல்-அஷ்ஜாஈ என்பவர் நபிகளாரின் பெயரால் அறிவித்த பின்வரும் ஹதீஸை அலி(றலி) கேள்வியுற்றார்: ''திருமணம் முழுமைபெறுமுன் இறந்துவிட்ட*

கணவர் பற்றிய பர்வா பின்த் வாஷிக் விவகாரத்தில் நபியவர்கள் முடிவுசெய்து 'அவர் இறந்தவரின் சொத்திலிருந்து மணக்கொடையையும் வாரிசுரிமைச் சொத்தையும் பெறத் தகுதியானவர். அத்துடன் அவர் 'இத்தா' இருக்கவேண்டும்' என அறிவித்தார்.'' குர்ஆனுக்கு முரணான ஒரு ஹதீஸ் இது எனக் கொண்ட அலி (றலி), நாடோடி அரபி ஒருவரின் ஹதீஸ் என அதனை நிராகரித்துவிட்டார். ''நீங்கள் யாருடன் திருமண சுகம்பெற ஆசைப் படுகிறீர்களோ அவர்களுக்கு உரிய மணக்கொடையைக் கொடுத்து விடுங்கள்'' (4:24) என்கிறது அல்குர்ஆன். இந்த இறைவசனத்தின் படி திருமணம் முழுமை பெற்ற பின்னரே மணக்கொடை கட்டாயமாகின்றது என்பதே அலி (றலி)யின் நிலைப்பாடு.[35]

அறியப்படாத ஒரு ஹதீஸை அறியப்பட்டவொரு ஹதீஸுடன் ஒப்பு நோக்குவதும் நபித்தோழர்களின் வழக்கமாயிருந்தது. இதற்குக் காரணம் அறிவிப்பாளர் விடயத்தில் சில பிரச்சினைகள் காணப்படுகின்றன என்ற ஊகமே தவிர நபிமொழியை நிராகரித்தல் என்பது நோக்கமல்ல. இப்பகுதியில் துமைனி இவ்வகையான பதினொரு உதாரணங்கள் தருகின்றார். உதாரணமாக நாயும் கழுதையும் பெண்ணும் தொழுகையைச் செல்லுபடியற்றதாக்கிவிடும் என்று குறிப்பிடும் ஹதீஸொன்று ஆயிஷா (றலி) முன்னிலையில் வாசிக்கப்பட்டது. நபிகளார் தொழும்போது சில சந்தர்ப்பங்களில் தாம் அவர்களுக்குமுன்னால் மிகநெருக்கமாகப் படுக்கையில் இருந்ததாகவும் இயற்கைத் தேவையை நிறைவேற்ற எழுந்துசெல்ல நேர்ந்தபோது நபிகளாரின் காலடியிலிருந்து அப்பால் மெதுவாக நகர்ந்து சென்றதனையும் குறிப்பிட்டு ஆயிஷா (றலி) இந்த ஹதீஸை ஒரேயடியாக நிராகரித்துவிட்டார்.[36]

'பகுத்தறிவின்' அடிப்படையில் ஒரு ஹதீஸை ஆதாரப்படுத்துவதற்கு துமைனி பன்னிரண்டு உதாரணங்கள் தருகின்றார். உதாரணமாக நெருப்பில் வேகவைத்ததைச் சாப்பிட்டால் மீண்டும் 'வுழு' செய்யவேண்டுமென நபிகளார் கூறியதாக அபூ ஹுரைரா அறிவித்த ஹதீஸொன்றை துமைனி குறிப்பிடுகின்றார். எண்ணெய்

வெந்நீர் போன்றன நெருப்புடன் தொடர்புகொண்டவை. வெந்நீர் அருந்துவதும், எண்ணெய்யின் பாவனையும் மீண்டும் 'வுழூ' செய்வதனை அவசியப்படுத்துவதில்லை என்பதைக் காரணம் காட்டி இப்னு அப்பாஸ் இந்த ஹதீஸை ஏற்க மறுத்துவிட்டார்.[37]

## ஸுன்னாவின் வாசகங்களது பரிசீலனைக்கான ஹதீஸ் அறிஞர்களது அளவுகோல்

இவ்வத்தியாயத்தில் துமைனி முஹத்திதூன்களது அளுவுகோல் களை வரிசையாக விவரிக்கின்றார். அவையாவன: (1) குர்ஆன் (2) நெறிபிறழாமை (அத்ம் அல்-ஷுஊத்தூத்) (3) ஒப்பு நோக்கில் ஆதார பூர்வ ஹதீஸ்கள் (4) நிறுவப்பட்ட வரலாறு (5) பொய்மையான சொற்களிலிருந்தும் அர்த்தங்களிலிருந்தும் விடுபடல் (6) இஸ் லாமிய ஷரீஆ கொள்கைகளும் சட்டவிதிகளும் (7) அருவருப் பானதிலிருந்தும் சாத்தியமற்றதிலிருந்தும் விடுபடல்.

அல் குர்ஆனை முதலாவது அளவுகோலாகக் கொள்வதற்கு துமைனி பதினொரு உதாரணங்களை முன்வைக்கின்றார். உதார ணத்திற்கு, ''ஏற்கனவே இறைமன்னிப்பு பெற்றவர் என ஆசீர் வதிக்கப்பட்ட ஒருவருடன் உணவருந்துபவரும் மன்னிக்கப்படு கின்றார்'' என்ற ஒரு ஹதீஸ் அறிவிப்பு. ''அல்லாஹ் இறை நிராகரிப்பாளர்களுக்கு நூஹ் நபியின் மனைவியையும் லூத் நபி யின் மனைவியையும் உதாரணம் காட்டுகிறான்: எமது இரு நேர்மையான அடியார்களின் கீழ் அவர்கள் இருந்தனர். அவர்கள் தம் கணவன்மாருக்குத் துரோகமிழைத்தனர். அவர்கள் அல்லாஹ் வின் முன்னிலையில் எந்த நன்மையையும் தேடிக்கொள்ளவில்லை. அதனால் 'மற்றவர்களுடன் நரகத்தில் நுழையுங்கள்' என அவர் களுக்குக் கூறப்பட்டது.'' (66:10) என்ற குர்ஆன் வசனத்தின் அடிப் படையில் ஹதீஸ் அறிஞர்கள் அந்த அறிவிப்பினை நிராகரித்த மையைக் காட்டுகிறார் இப்ன்-கதீர்.[38]

''நெறிபிறழாமை'' குறித்து நூலாசிரியர் இருபது உதாரணங்கள் தருகிறார். துமைனி நெறிபிறழாமை என்ற பதத்தைப் பிரயோ கிக்கவில்லை. பதிலாக 'தனித்து நிற்கும் ஹதீஸ்களை ஒப்பு

நோக்கல்' என்கிறார். எனினும் அவர் முன்வைக்கும் உதாரணங் கள் யாவும் நெறிபிறழாமையின் பாற்பட்டவை. இவ் வகைப் படுத்தலின் கீழ் 'இடைச் செருகல்' (இத்ராஜ்) 'குளறுபடி' (இத்திராப்) 'தலைகீழாக்கல்' (கல்ப்) பிழையான உச்சரிப்பு (தஷிஃப்) 'கூட்டல்' (ஸியாதாஹ்) முதலியவற்றைச் சேர்த்துள்ளார். இவை யாவும் 'நெறிபிறழாமை' (ஷுதூத்)யின் கீழ் வகைப் படுத்தப்பட் டுள்ளன. இவைபற்றி அவரது விவரிப்புகள் வருமாறு:

இடைச்செருகல் (இத்ராஜ்): ''அடிமைக்கு இருமடங்கு நற் கூலிகள். என்ஆன்மா யார்கரங்களில் உள்ளதோ அவன்மீது ஆணையாக! அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்தல், புனித யாத்திரை மேற்கொள்ளல், என் அன்னையைப் பராமரித்தல் முதலியன இல்லாவிடின் நான் ஓர் அடிமையாகவே மரணிக்க விரும்புகிறேன்'' என்ற ஹதீஸ் அல்-ஸுயூத்தியின் கருத்துப்படி இடைச்செருகல் காரணமாக நிராகரிக்கப்பட வேண்டிய ஒன் றாகும். 'அடிமைக்கு இருமடங்கு நற்கூலி' என்ற முதற்பகுதி ஹதீஸாகத் தோன்றுகிறது. ஆனால், பிற்பகுதி அபூஹுரைராவின் சுயவிருப்பாகும். இது பின்னர் நபிகளாரின் உண்மையான ஹதீ ஸாகக் கொள்ளப்பட்டுள்ளது.[39]

குளறுபடி (இத்திராப்): ''செல்வத்தில் ஸக்காத்துடன் மேலும் உரிமையுண்டு'' என்றொரு ஹதீஸை ஃபாத்திமா பின்த் கைஸ் என்பவரின் அறிவிப்பாக திர்மிதி பதிவுசெய்துள்ளார். இதே ஹதீஸை இப்னு மாஜா ''செல்வத்தில் ஸக்காத்தைத் தவிர வேறு உரிமையில்லை'' என இன்னொரு விதமாகப் பதிவுசெய்துள்ளார். வெளிப்படையான இம் முரண்பாடு காரணமாக இரு ஹதீஸ் களுமே பலவீனமான, நம்பகமற்றவை என முடிவுசெய்யப்படு கின்றன.[40]

தலைகீழாக்கல் (கல்ப்): ''நெருப்பைப் பொறுத்தவரை அல் லாஹ் தான் நாடியவர்களுக்கு அதனை அதிகரிக்கின்றான். சொர்க் கத்தைப்பொறுத்தவரை அவன் யாருக்கும் தீங்கிழைப்பதில்லை'' என்ற ஹதீஸை அபூஹுரைராவின் அறிவிப்பாக இமாம் புஹாரி பதிவுசெய்துள்ளார். அல் ஸனாஃனீ இதன் சொல்லொழுங்கில்

*மாறுதல் இருப்பதை அடையாளம் கண்டு இந்த ஹதீஸ் ''சொர்க் கத்தைப் பொறுத்தவரை அவன் தனக்கு விருப்பமானவர்களுக்கு அதனை அதிகரிக்கச் செய்கிறான். நரகத்தைப் பொறுத்தவரை அல்லாஹ் யாருக்கும் தீங்கிழைப்பதில்லை'' என இருத்தல் வேண்டுமெனக் கருதுகின்றார்.*[41]

*உச்சரிப்புப் பிழை (தஷிஃப்): 'அல்லாஹ்வைத் தவிர வணக் கத்துக்குரியவன் வேறுயாருமில்லை' என்று சொன்னவரின் இத யத்தில் ஓர் அணுவளவு (தர்ராஹ்) நன்மை (ஈமான்) இருப்பினும் அவர் நரகிலிருந்து விடுதலை பெறுவார் என நபிகளார் நவின்ற தாக அனஸ் இப்னு மாலிக் அறிவிக்கின்றார். அந்த சொல் 'தர்ராஹ் (அணு) அல்ல 'துர்ராஹ்' (சோளம்) என்கிறார் ஷூபாஹ் இப்னு அல்-ஹஜ்ஜாஜ்.*[42]

*கூட்டல் (ஸியாதாஹ்): உச்சரிப்புப்பிழைக்குக் காட்டப்பட்ட உதாரணம் இங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.*[43]

*''ஒப்புநோக்கில் ஆதாரபூர்வமான ஹதீஸ்'' என்ற அளவுகோலுக் கும் துமைனி தூலமான உதாரணம் எதுவும் தரவில்லை. எனினும் நபிகளாரின் ஹதீஸை எவ்வாறு சரிகாணலாம் என்பதற்கு இருபத்துரெண்டு நியமங்களைக் கவனத்தில் கொணர்கிறார்.*[44]

*''நிறுவப்பட்ட வரலாறு'' என்ற அளவுகோலின்படி அவர் பின் வருவது உட்பட ஒன்பது உதாரணங்கள் தருகின்றார்: திர்மிதியின் அறிவிப்பின்படி நபிகள் (ஸல்) வெற்றியுடன் மக்காவினுள் நுழையும்போது அப்துல்லாஹ் இப்னு ரவாஹா நபியுடன் இருந் தார். மக்கா வெற்றிக்கு நான்கு வருடங்களுக்கு முன்பே 'முஃதா' போரில் ரவாஹா வீரமரணம் எய்தியிருந்தார். ஆக, இந்த ஹதீஸை ஆதாரமற்றது இப்னு கையிம் நிராகரிக்கின்றார்.*[45]

*''பொய்மையான சொற்கள் அர்த்தங்கள் இன்மை'' என்ற அளவுகோலின்படி துமைனி பின்வரும் ஹதீஸ் உட்பட பதினேழு ஹதீஸ்களை எடுத்தாண்டுள்ளார்: ''ஓர் அழகிய முகத்தைப் பார்த் துக் கொண்டிருப்பது ஓர் இபாதத் ஆகும்.'' இந்த ஹதீஸின் உள்ளடக்கம் பொய்மையானதென இப்னு அல்-கையிம் இதனை நிராகரிக்கின்றார்.*[46]

''இஸ்லாத்தின் அடிப்படைக்கொள்கையும் சட்டவிதிகளும்'' என்ற அளவுகோலின்படி துமைனி இருபது ஹதீஸ்களைத் தருகிறார். ''ஒருவரிடம் விபச்சாரப்பழக்கம் இருந்தால் அவரது மனைவியும் அதே பழக்கத்துக்குள்ளாவார்'' என்ற ஹதீஸை ''ஒருமனிதனுக்கு அவன் முயற்சித்தது தவிர வேறில்லை'' (53:39) என்ற குர்ஆன் வசனத்தை ஆதாரம்காட்டி 'இது ஆதாரமற்ற குப்பையாகும்' என நாஸிர் அல்-தீன் அல்-அல்பானி கூறியதை துமைனி ஆதாரம் காட்டுகிறார்.(47)

அருவருப்பானதிலிருந்தும் சாத்தியமற்றதிலிருந்தும் விடுபடல் என்ற தலைப்பின் கீழ் துமைனி பத்தொன்பது உதாரணங்கள் தருகின்றார். அவற்றுள் ஒன்று: ''ஒன்பது வானவர்கள் சூரியனுக் குப் பொறுப்பாக உள்ளனர். அவர்கள் ஒவ்வொரு நாளும் சூரியன் மீது பனிக்கட்டிகளை வீசிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் அப்படிச் செய்யாவிடின் அதனோடு தொடர்புகொள்ளும் ஒவ் வொரு பொருளையும் அது சுட்டுப்பொசுக்கிவிடும்.'' இது கிறீஸ் தவ-யூத மரபிலிருந்து வந்தது; வானியல் அறிவுக்கு ஒவ்வாதது; பூமி சூரியனிலிருந்து 150 மில்லியன் கிலோமீட்டர் தூரத்தில் இருப்பதனாலேயே அது சுட்டுப்பொசுக்கப்படாமல் இருக்கிறது என அல்-அல்பானி இந்த ஹதீஸைப் புறமொதுக்குகிறார்.(48)

### ஸுன்னாவின் வாசகங்களது பரிசீலனைக்கான சட்ட வியலாளர்களின் அளவுகோல்

ஹதீஸ் வாசகங்கள் மீது சட்டவியலாளர்களின் அணுகு முறையை ஆராயும்போது துமைனி ஏழு அளவுகோள்களை அடையாளம் காண்கிறார். அவை: (1) குர்ஆன் (2) சுன்னாஹ் (3) சமூக உடன்பாடு (4) நபித்தோழர்களின் நடைமுறை (5) தர்க்க பூர்வமான ஒற்றுமை (6) பொது விதிகள் (7) தனித்து நிற்கும் ஹதீஸ்களின் தாக்கம்

குர்ஆனின் அளவுகோல்படி பின்வருவது உட்பட இருபத்தொரு உதாரணங்கள் தரப்படுகின்றன. ''ஒருவர் ஒரு பெண்ணை மனைவி யாகக் கொண்டிருக்கும் அதேவேளை மனைவியின் தந்தை வழி

*அல்லது தாய்வழி சித்தியரை மனைவியாகக்கொள்ள முடியாது.'' முஸ்லிம் தொகுப்பிலான இந்த அறிவிப்பினை, ஹனபிகளும் ஏனைய சட்டவியலாளர்களும் குர்ஆனின் 4:23-24 வாசகங்களுக்கு முரண்பட்டதாகக் கொள்வதில்லை.*

*''உங்கள் அன்னையர் புதல்வியர் சகோதரிகள் தந்தையின் சகோதரிகள் உங்கள் தாயின் சகோதரிகள், உங்கள் சகோதரனுடைய புதல்விகள், சகோதரியின் புதல்விகள், உங்களுக்குப் பாலூட்டிய செவிலித் தாய்மார் உங்கள் பால்குடிச் சகோதரிகள் உங்கள் மனைவியின் அன்னை (முதலானோரை) மணஞ்செய்வது உங்களுக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் உங்கள் பாதுகாப்பில் வளர்ந்த வளர்ப்பு மகள்மாரையும் நீங்கள் உடலுறவு கொண்டுவிட்ட உங்கள் மனைவியரின் (முந்திய கணவர்களுக்குப் பிறந்த) புதல்விகளையும் நீங்கள் மணப்பது தடைசெய்யப் பட்டுள்ளது. ஆனால் (நீங்கள் மணஞ்செய்து அவர்களுடன் உடலுறவு கொள்ளவில்லையானால்) அவளை விலக்கிவிட்டு அவளுடைய மகளை மணஞ்செய்து கொள்வதில் உங்களுக்குக் குற்றமில்லை. உங்கள் முதுகந் தண்டிலிருந்து உண்டான உங்கள் புதல்வர்களின் மனைவியரும் விலக்கப்பட்டுள்ளனர். இரு சகோதரிகளை ஒரே நேரத்தில் மனைவியராக்கிக் கொள்வதும் விலக்கப் பட்டுள்ளது- இதற்கு முன்னர் நடந்து விட்டவைகளைத் தவிர. இவற்றை அல்லாஹ் மிக்க அறிந்தவனாவும் கிருபையுள்ளவனாகவும் இருக்கிறான். பெண்களில் கணவர்களுள்ளவர்களும் மணஞ்செய்துகொள்வதிலிருந்து விலக்கப்படடுள்ளனர் - உங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்களைத் தவிர. அவ்வாறு அல்லாஹ் உங்களுக்குத் தடைவிதித்துள்ளான். இவர்களைத் தவிர மற்றவர்களைஅல்லாஹ் உங்களுக்குச்சட்டபூர்வமாக்கியுள்ளான்...''*

*குர்ஆன் விதிக்கும் வரையறையையே இந்த ஹதீஸ் விவரிக்கின்றதென சட்டவியலாளர்கள் கருதுகின்றனர்.*[49]

*சுன்னாஹ்வின் அளவுகோலின் கீழ் நான்கு உதாரணங்கள் மட்டுமே தரப்பட்டுள்ளன. உதாரணமாக ''நபிகள் (ஸல்) அவர்கள் சாட்சியின் அடிப்படையிலும் சத்தியப் பிரமாணத்தின்*

அடிப்படையிலும் ஒரு வழக்கைத் தீர்மானித்தார்கள்'' என்பதனை ஆதாரபூர்வமானதாக ஹனபிகள் ஏற்பதில்லை. ஏனெனில், இது ''சாட்சி வழக்காளிக்குரியது. சத்தியப்பிரமாணம் எதிர்தரப்புக் குரியது'' என்ற பிரசித்தமான ஆதாரபூர்வமான ஹதீஸுடன் முரண்படுகின்றது.(50)

சமூக உடன்பாடு: 'உம்மாவின் உடன்பாடு' என்ற அளவு கோலின் கீழ் ஒன்பது ஹதீஸ்கள் தரப்படுகின்றன. காஸிம் இப்னு முஹம்மத் அவரது தோட்டத்தில் விளைந்த பேரீத்தம் பழங்களில் சிலவற்றை வைத்துக் கொண்டு மற்றவைகளை விற்று விடுவது வழக்கம் என மாலிக் இப்னு அனஸ் பதிவு செய்துள்ளார். காஸிம் இப்னு முஹம்மதின் இப்பழக்கம் சமூக உடன்பாடானது எனக் கொள்வார் மாலிக்.(51)

நபித்தோழர்களின் வழக்கம் என்ற அளவுகோலின்கீழ் துமைனி பத்து ஹதீஸ்களைத் தந்துள்ளார். உதாரணமாக ''நபியவர்கள் தொழுகையில் ருக்கூவுக்கு முன்னரும் பின்னரும்கைகளை உயர்த்து வது வழக்கம்'' என இப்னு உமர் அறிவிக்கின்றார். ஆனால் முஜாஹித் என்ற ஒரு தாபியி அறிவிப்பதாவது: ''நான் இப்னு உமரின் பின்னாலிருந்து தொழுதேன். தொழுகையின் ஆரம்பத்தில் தவிர அவர் கைகளை உயர்த்தவில்லை.'' இப்னு உமரின் இவ்வழக்கம் இந்த ஹதீஸை வலுவிழக்கச் செய்து விடுகின்றது.(52)

''தர்க்கபூர்வமான ஒற்றுமை'' என்ற அளவுகோலின்கீழ் எமக்கு ஒன்பது உதாரணங்கள் கிடைக்கின்றன. உதாரணமாக ஒருவர் தனது மனைவியின் அடிமையுடன் பலவந்தமாக உடலுறவு கொண்டால் அவள் விடுதலைசெய்யப்படுவதுடன் அவளுக்குப் பிரதியீடாக அவர்இன்னொருத்தியை மனைவிக்கு வழங்குவார். அவ்வடிமைப்பெண் அவளாகவே அவரை உடலுறவுக்கு அழைத் திருந்தால் அவள் அவரது உடைமையாகிவிடுவாள். அவளுக்குப் பிரதியீடாக இன்னொருத்தியை அவர் மனைவிக்கு வழங்குவார். தர்க்கபூர்வமான ஒற்றுமை இந்த ஹதீஸுக்கு ஆதரவாக உள்ள தெனக் கூறுவார் இப்ன்-தைமியா.(53)

''பொதுவிதிகள்'' என்ற அளவுகோலின் கீழ் எமக்கு ஆறு உதாரணங்கள் தரப்படுகின்றன.'' நாயொன்று பாத்திரத்தினுள் தலையை நுழைத்தால் அப்பாத்திரம் ஏழுமுறை கழுவப்படல் வேண்டும்'' என்பதை மாலிக் இப்னு அனஸ் குர்ஆனின் பின் வரும் பொதுவிதியின் அடிப்படையில் நிராகரிக்கின்றார்:

*''... அல்லாஹ் உங்களுக்குக் கற்றுத் தந்தவற்றுள் ஒன்றை நீங்கள் கற்றுக் கொடுத்து உங்களால் பயிற்றுவிக்கப்பட்ட வேட்டை மிருகங்களைப் பொறுத்தவரை அவை உங்களுக்குப் பிடித்துத் தந்தவற்றைச் சாப்பிடுங்கள். ஆனால் அதன்மீது (பிஸ்மில்லாஹ் என்று)அல்லாஹ்வின் பெயரைச் சொல்லுங்கள். அல்லாஹ் கணக்குக் கேட்பதில் துரிதமானவன்.''(5:4)*[54]

''தனித்து நிற்கும் ஹதீஸ்களின் தாக்கம்'' என்ற அளவுகோலின் கீழ் அல்-துமைனி நான்கு ஹதீஸ்களை விவரிக்கின்றார். இவற்றுள் ஒன்று அபூ மூஸா அறிவிப்பது: நபிகளாரின் பின்னாலிருந்து தொழும்பொழுது பலர் சிரித்துவிட்டனர். தொழுகை முடிந்ததும் அவர்களை மீண்டும் 'வுழூ' செய்து தொழுமாறு நபி கட்டளை யிட்டார். இந்த ஹதீஸ் தனித்துநிற்கும் ஒன்று. இதனை ஆதார பூர்வமானதாய் எடுத்துக்கொள்வது மக்களுக்குச் சங்கடத்தை யுண்டுபண்ணும் எனக் கூறி ஹனஃபிகள் இந்த ஹதீஸை ஏற்காது விட்டனர்.[55]

## தொகுப்புரை

நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் ஹதீஸை ஆதாரபூர்வ மாக்குவதிலும் அதனைப் பேணிப் பாதுபாப்பதிலும் முஸ்லிம் அறிஞர்கள் நபித்தோழர்களின் காலத்திலிருந்தே கவனஞ் செலுத்தி வந்துள்ளனர். ஆரம்பத்திலிருந்து அவை அறிவிப்பாளர் தொடரின் கண்ணோட்டத்திலிருந்தும் வாசகத்தின் கண்ணோட் டத்திலிருந்தும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஹிஜ்ரி இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் பாரிய ஹதீஸ் தொகுப்புகள் உருவாக்கப்பட்ட வேளை, அறிவிப்பாளர் வரிசை

*யின் பரிசீலனையே முக்கியத்துவம் பெற்றிருந்தது. உலூம் அல்-ஹதீஸ் அறிஞர்களே ஹதீஸ் வாசகங்களினதும் பரிசீலனைகள் குறித்துக் கவனம் செலுத்தியவர்கள். ஹதீஸ் வாசகங்களது பரி சீலிப்புக் குறித்து இப்ன்-அல்- ஜவ்ஸி, இப்ன்-அல்-கையிம், அல்-துமைனி ஆகியோரின் நூல்கள் குறிப்பிடத்தக்கன.*

# 03

# அல்-குர்ஆனும் ஹதீஸின் ஆதாரபூர்வமும்

ஹதீஸ் தொகுப்புகளான மாலிக் பின் அனஸின் முவத்தா, முஹம்மத் இப்னு இஸ்மாயில் அல்-புஹாரியின் ஸஹீஹுல் புஹாரி, முஸ்லிம் இப்னு அல்-ஹஜ்ஜாஜ் அல்-குஷைரியின் ஸஹீஹ் முஸ்லிம், அபூதாவூதின் (ம. ஹிஜ்ரி 275) ஸுனன், முஹம்மத் இப்னு ஈஸா அல்-திர்மிதியின் ஸுனன், அஹ்மத் இப்ன்-சுஐப் அல்-நஸாயியின் ஸுனன் ஆகிய ஆதாரபூர்வமான நூல்கள் மிகவும் பிரசித்தமானவையும் பரவலாகப் போற்றப்படு பவையுமாகும்.

குறிப்பாக, இவையும் ஏனைய தொகுப்புகளும், அறிவிப்பாளர் தொடரின் மட்டத்திலேயே ஹதீஸின் ஆதாரபூர்வத்தை ஆய்வுக் குட்படுத்தின. எந்தவொரு ஹதீஸ் தொகுப்பும் அறிவிப்பாளர் தொடரையும் உள்ளடக்கத்தையும் (அறிவிப்பின் வாசகத்தையும்) ஒருசேர ஆய்வுக்குட்படுத்தித் தொகுக்கப்படவில்லை. இதனால் உள்ளடக்கம் உதாசீனம் செய்யப்பட்டது என்று அர்த்தமல்ல. அபூ ஹனிஃபா, அஷ் ஷாஃபி, இப்னு அல்-ஜவ்ஸி (ம. ஹிஜ்ரி 751), இப்னு அல்-கையிம் போன்ற சில அறிஞர்கள் குர்ஆன் உட்பட, எவருக்கும் ஏற்புடைத்த சில அளவுகோல்களைப் பிரயோ கிப்பதன் மூலம் ஹதீஸை வாசகத்தின் அடிப்படையில் ஆய்வுக் குட்படுத்துவதை குறிப்புணர்த்தவே செய்தனர். ஹதீஸைப் பொறுத்த குர்ஆனின் தகைமை குறித்து முஸ்லிம் அறிஞர்கள்

ஒரே கருத்தினராவார். நபிகளின் பெயரால் பதிவான ஒரு ஹதீஸுக்கும் குர்ஆனுக்குமிடையே சமப்படுத்த இயலா முரண்பாடுகள் ஏற்படும்போது அந்த ஹதீஸ் ஏற்றுக்கொள்ளப்படாதவொன்றாய் நிராகரிக்கப்படல் வேண்டும் என அவர்கள் கருதினர்.

## ஹதீஸ்களைப் பொறுத்து குர்ஆனின் தகைமை பற்றிய புரிதல்

மனிதர்கள்வெவ்வேறு கருத்துகள் கண்ணோட்டங்கள் அபிப்பிராயங்கள் கொண்டவர்கள். தமக்கிடையான வேறுபாடுகளைக் களைந்து, பொது உடன்பாடுகள் காண, அகிலத்துவ அங்கீகாரம் கொண்டதொரு முறைமையின் பக்கல் அவர்கள் சார வேண்டியுள்ளது. ஹதீஸ் அறிஞர்கள் மத்தியில் கருத்துமுரண்கள் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும் பொழுது அவற்றை நீக்குதற்கு முதல் அடிப்படையாக -அளவுகோலாக- எடுத்துக்கொள்ளப்பட வேண்டியது அல்குர்ஆன் ஆகும். அல்குர்ஆன் அல்லாஹ்வின் கலாமாக -பேச்சாக- இருப்பதால் அது மனித சிந்தையைப் பிரதிபலிப்பதில்லை. அதன் வார்த்தைகளிலேயே சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறியக் கூடிய அளவுகோலாக -அல் ஃபுர்கானாக- அது திகழ்கின்றது.

''ரமழான் மாதத்திலேயே அல் குர்ஆன் மனிதனுக்கு வழிகாட்டியாக இறக்கிவைக்கப்பட்டது. அந்த வழிகாட்டலின் சுய அத்தாட்சியாக (சத்தியத்தையும் அசத்தியத்தையும்) பிரித்தறியக் கூடிய ஒன்றாக (அல் ஃபுர்கானாக) அது அருளப்பட்டுள்ளது.'' (2:185)

''சத்தியத்தை அசத்தியத்திலிருந்து பிரித்தறிவதற்கான அளவுகோலாக அவனே அதனை இறக்கிவைத்தான். (3:4)

''சத்தியத்தை அசத்தியத்திலிருந்து பிரித்தறிவதற்கான ஒன்றாக (அல் ஃபுர்கானாக) அதனை இறக்கிவைத்தவன் மிகவும் பாக்கியமானவன்.'' (25:1)

*எனவே, அல் குர்ஆன் அல்லாஹ் வழங்கிய அளவுகோல் ஆகும். எது சரி எது பிழையென அது விவரித்துக் கூறுகின்றது. அது சத்தியத்தை அசத்தியத்திலிருந்து பிரித்துக் காட்டுகின்றது. அல் லாஹ் தன் தூதருக்கு இரண்டை அருளினான். ஒன்று அல் குர்ஆன். மற்றது அதன் பயான் (விளக்கம்). ''இவ்வாறு அதனை நாம் ஓதும்பொழுது அதன் வார்த்தைகளைக் கவனியுங்கள். பின்னர் அதனை விளக்குவது எம்மீது கடமையாகும்.'' (75: 18-19)*

*குர்ஆனின் விளக்கமாக இருப்பதே ஹதீஸினதும் சுன்னாஹ் வினதும் பணியென்பதில் ஐயமில்லை. இவ்வாறு பயான் என்பது நபிகளாரின் வாக்கையும் வழிமுறைகளையும் குறிக்கின்றது. குர்ஆனும் பயானும் ஒன்றையொன்று முழுமைப்படுத்துவன வாகும். இவ்விரண்டுக்குமிடையே பூரண ஒத்திசைவு காணப்படல் வேண்டும். பயானின் ஏதாவதொரு பகுதி -அதாவது ஹதீஸ், குர்ஆனுடன் முரண்படுவதாயின் நபிகளாருடன் சம்பந்தப்படுத் தப்படும் அந்த ஹதீஸ் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றென உடன் நிராகரிக்கப்படும். அல்லாஹ்வின் வேதம் (நூல்) வழிகாட்டி மட்டுமன்று. ஏதும் முரண்பாடுகள் ஏற்படும்பொழுது மத்தி யஸ்தம் செய்யும் ஒன்றாகவும் விளங்குகின்றது.*

*ஸூரா அந்நிஸா:59 பின்வருமாறு கூறுகின்றது:*

> ''விசுவாசம் கொண்டோர்களே! அல்லாஹ்வுக்கும் அவனது றஸூலுக்கும் அதிகாரம் வழங்கப்பட் டோருக்கும் செவிசாய்ப் பீர்களாக. ஏதாவது விடயம் குறித்து நீங்கள் (கருத்து) வேறு பட்டால் அல்லாஹ்விடமும் அவனது றஸூலிடமும் அதனை விட்டு விடுங்கள்.''

*இந்த ஸூரா சர்ச்சைக்குரிய விடயங்களில் அல்லாஹ்வையும் அவனது றஸூலையும் நடுவர்களாக ஏற்றுக்கொள்ளுமாறு விசு வாசிகளுக்கு அறிவுறுத்துகிறது. ஹதீஸ் தொகுப்புகள் அவற்றின் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை சர்ச்சைக்கு அப்பாற்பட்டவை யல்ல. எனவே ஒரு ஹதீஸ் அதிகாரபூர்வமானதா என்பதை அறி வதற்கு அல்லாஹ்வின் அதிகாரமாகக் குர்ஆனைப் பயன்படுத்த*

முடியும். இவ்விரண்டுக்குமிடையே முரண்பாடு இல்லாவிடின் அந்த ஹதீஸை ஆதாரபூர்வமானதாய் அறிவிக்கலாம். வெளிப் படையான முரண்பாடுகள் காணப்படுமிடத்து, ஹதீஸ் நிராகரிப் புக்குள்ளாகும்.

### *ஆயிஷா (றலி) வின் அணுகுமுறை:*

*நபியின் துணைவியார் ஆயிஷா (றலி) (ம.ஹி. 57) குர்ஆனிலும், நபிகள் (ஸல்) அவர்களது வாக்கு, வழிமுறைகளிலும் இஸ்லாமிய சட்டத்திலும் ஞானம்மிக்கவராய் விளங்கினார். அறிஞருக்கும் மாணவர்கட்கும் முதியோருக்கும் இளைஞருக்கும் சிரேஷ்ட, கனிஷ்ட நபித்தோழர்கட்கும் ஆசிரியையாகத் திகழ்ந்த ஆயிஷா (றலி) மாபெரும் மத அறிஞருமாவார். நபிகளாரின் மரணத்துக்குப் பின்னர் மட்டுமன்றி அவர்களது வாழ்நாளின்போதும் பிரச்சினை களுக்குத் தீர்வுகாண மக்கள் ஆயிஷா (றலி) வை நாடினர். நபித் தோழர்கள் மத்தியில் ஆயிஷாவின் நிலைபற்றி அபூ மூஸா அல்-அஷ்ஹரியின் அவதானம் வருமாறு: ''நபிகளாரின் ஹதீஸ் சம்பந்தமாகப் பிரச்சினைகளை எதிர்கொண்டபோதெல்லாம் நாம் ஆயிஷாவின் உதவியை நாடினோம். அவரது புலமைமிக்க தீர்வு கள் எமக்கு அறிவார்ந்த திருப்தியளித்தன.''[(1)] பெருமானார்(ஸல்) காலமானபின் ஆயிஷா (றலி) விசுவாசிகளின் அன்னையாக மட்டு மன்றி அவரது ஆழ்ந்த ஆறிவு ஞானத்துக்காகவும் மிகுந்த மதிப்பும் மரியாதையும் பெற்றவராய்த் திகழ்ந்தார். குர்ஆன் அடிப்படை யிலான அவரது ஹதீஸ் அணுகுமுறை பின்வரும் உதாரணங்களால் துலாம்பரமாகின்றது:*

*''இறுதித் தீர்ப்புநாளில் கணக்குக்கேட்கப்படுபவர் தண்டிக்கப் படுவார்'' என்று நபிகளார் ஒருமுறை கூறினார்கள்.[(2)] இந்த ஹதீஸ்* ''எவரது பதிவுப் புத்தகம் அவரது வலது கரத்தில் கொடுக்கப் பட்டதோ அவர் இலகுவான (கேள்வி)கணக்காகக் கேட்கப்படுவார்.'' (84:7-8) *என்ற இறை வசனத்துடன் முரண்படுவதைக் கண்ட ஆயிஷா நாயகி நபிகளாருடன் தமது கவலையைப் பகிர்ந்து கொண்டார். ''அது இலகுவான கணக்கு. ஆனால் கேள்வி கணக்கு*

கேட்கப்படுபவர் கைசேதமடைவார்'' எனக்கூறி நபிகளார் அவரைச் சமாதானப்படுத்தினார்கள்.(3) ஆயிஷா நாயகி கொண்டிருந்த அக்கறை, ஒரு ஹதீஸ் குர்ஆனுக்கு முரணாக அமையக் கூடாது என்ற நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகின்றது.

''அவர்கள் (இறந்தவர்கள்) நான் சொல்வதைக் கேட்கின்றனர்'' என நபிகளார் கூறினார்கள் என்ற இப்னு உமரின் அறிவிப்பு உண்மையா என ஆயிஷா நாயகியிடம் வினவப்பட்டது. அதனை மறுத்துரைத்த அவர், ''நான் சொல்வது உண்மை என்பதை அவர்கள் அறிவார்கள்'' என்பதே நபிகளார் உண்மையில் கூறியது எனக் குறிப்பிட்டுப் பின்வரும் இறைவசனங்களை ஓதிக்காட்டினார்: ''நிச்சயமாக நீர் இறந்து வட்டவர்களைச் செவியேற்கச் செய்ய முடியாது'' (27:80), ''நிச்சயமாக இறந்தோரை உம்மால் கேட்கச்செய்ய முடியாது.''(35:22)(4) குர்ஆனுக்கு முரணான எதனையும் நபிகளார் சொல்லியிருக்க முடியாது என்பதைத் தெளிவுபடுத்தவே அவர் குர்ஆனிலிருந்தும் மேற்கோள் காட்டினார்.

உமர் கடுமையாகக் காயமுற்றவேளை சுஹைப் அழத் தொடங்கி விட்டார். அப்போது உமர் ''எனக்காக ஏன் அழுகின்றீர்? 'மக்கள் அவர்களுக்காக அழுது பிரலாபிப்பதன் காரணமாக இறந்தவர்கள் தண்டிக்கப்படுகின்றார்கள்' என நபிகளார் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்'' என்றார். உமர் (றலி) காலமான பின் இது ஆயிஷா (றலி)வின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டது. இவர் கூறினார்: ''நபிகளார் அவ்வாறு சொல்லவில்லை. அவர்கள் சொன்னதாவது 'நிச்சயமாக அல்லாஹ் அவிசுவாசியின் வேதனையை அதிகரிக்கச் செய்கிறான் - அவர்களின் உறவினர்கள் அவர்களுக்காக அழுவதனால்' என்பதாகும்'' என்றார். மேலும் ''இவ்விவகாரத்தில் குர்ஆன் கூறுவதே உங்களுக்குப் போதுமானதாகும்'' எனப் பின்வரும் குர்ஆன் வசனத்தை ஓதிக் காட்டினார்:

> ''சுமையைச் சுமப்பவர்மீது இன்னொருவரது சுமை சுமத்தப்பட மாட்டாது.'' (6:164 17:15 35:18 39:7 53:38)(5)

*''அல்லாஹ்வை நபிகளார் இருமுறை கண்டார்கள்'' என அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் அறிவித்ததாகக் குறிப்பிடப்படு கின்றது. இது ஆயிஷாவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட போது அவர் அதனை உடனடியாக நிராகரித்ததுடன்* ''(மனிதப்) பார்வைகள் அவனை அடையாது. அவனோ எல்லா (மனிதப்) பார்வைகளையும் சூழ்ந்து கொள்கிறான். அவனே நுட்பமானவன். நன்கு உணர்பவன்'' (6:103) *என்ற இறை வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.*

*''பெண்ணிடமும் மிருகங்களிடமும் வீட்டிலும் தீய நிமித் தங்கள் காணப்படுகின்றன'' என அபூ ஹுரைரா அறிவித்த நபிமொழி எடுத்துரைக்கப்பட்டபோது ஆயிஷா (றலி) அந்த ஹதீஸை ''பெண்ணிடமும் மிருகங்களிடமும் வீட்டிலும் தீய நிமித்தங்கள் காணப்படுகின்றன என அறியாமைக் காலத்தைச் சேர்ந்த மக்கள் சொல்வது வழக்கம்'' என்றே நபிகளார் கூறினார் கள் எனத் திருத்தினார். பின்னர் தமது நிலைப்பாட்டை உறுதிப் படுத்துவதற்காக* ''எமது கட்டளையிலிருந்து நாம் அதனை வெளிப் படச்செய்யாமல் எந்தவொரு அழிவும் பூமியில் ஏற்படுவதில்லை'' (57:22) *என்ற இறைவசனத்தை மேற்கோள் காட்டினார்.*[7]

*தற்காலிக மணம் (முத்ஆஹ்) முஸ்லிம்கள் மத்தியில் சர்ச்சை உண்டுபண்ணிய ஒரு விவகாரமாகும். சிலர் அதனைத் தக்கவைத் துக்கொள்ள விரும்பினர். மற்றவர்கள் அது என்றென்றைக்கு மாய் தடைசெய்யப்பட்டு விட்டதாய்க் கருதினர். இவ்விவகாரம் ஆயிஷா (றலி)வின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட போது அவர் அறிவித்ததாவது: ''எனக்கும் உங்களுக்குமிடையே அல் லாஹ்வின் வேதம் (நூல்) இருக்கின்றது. அது கூறுகின்றது:*

> ''திருமணப் பந்தத்தால் இணைந்தவர்களையும் தங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்களையும் தவிர யார் தம் வெட்கத் தலங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றனரோ அவர்கள் நிந்திக்கப் படுபவர்கள் அல்லர். (23: 5-6)

*ஆகவே அல்லாஹ் மணவினையால் ஆகுமாக்கியவர்களை யும் அவர்களுக்குச் சொந்தமானவர்களாய் ஆக்கியவர்களையும் தவிர மற்றவர்களுக்கு ஆசைப்படுகிறவர்கள் வரம்பு மீறியோ ராவர்.''*(8)

## *உமர்(றலி) அவர்களின் நிலைப்பாடு:*

*நபித்தோழியரான ஃபாத்திமா பின்த் கைஸ் நபிகளார் கூறிய தாகச் சொன்ன ஓர் அறிவிப்பை குர்ஆனுக்கு முரணானது என்ற காரணத்தால் உமர் இப்னு கத்தாப் (ம. ஹிஜ்ரி 23) உடனடியாக நிராகரித்துவிட்டார். தான் தன் கணவரால் மூன்று முறை தலாக் (மணவிலக்கு) சொல்லப்பட்ட பின் தனக்கு ஜீவனாம்சத்துக்கும் உறைவிடத்துக்கும் உரிமையில்லையென நபிகளார் அறிவித்ததாக ஃபாத்திமா பின்த் கைஸ் கூறினார்.*(9) ''(மணவிலக்கு பெற்ற) அவர்களை அவர்களின் இல்லத்திலிருந்து வெளியேற்றாதீர்கள். அவர்கள் பகிரங்கமாக நடத்தை கெட்டவர்களாய் இராவிடின் அவர் களை வெளியேற்றக் கூடாது'' (65:1) *என்ற இறைவசனத்தை அடிப்படையாகக் கொண்டு உமர் (றலி) இந்த ஹதீஸை நிராகரித்தார்.*(10)

## *அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் பார்வையில்*

*வளர்ப்புப் பிராணியான கழுதையின் மாமிசத்தைச் சாப்பிடு வதைத் தடைசெய்யும் நபிகளாரின் ஹதீஸொன்று அறிவிக்கப் பட்டபோது அப்துல்லாஹ் இப்ன்-அப்பாஸ் பின்வரும் குர்ஆன் வசனத்தின் காரணமாக அதனை நிராகரித்தார்:*

''கூறுவீராக, *செத்தவையாக அல்லது ஓடும் இரத்தமாக அல்லது பன்றியின் மாமிசமாக இருந்தாலன்றி உண்ணுபவருக்கு உண்ணத் தடைசெய்யப்பட்டதாக வஹி மூலம் எனக்கு அறிவிக் கப்பட்டவற்றில் நான் காணவில்லை - காரணம் அவை அசுத்த மானவை. அல்லது அல்லாஹ் அல்லாதவருக்காகப் பெயர் கூறப் பட்டதனைத் தவிர (வேறு ஏதும் தடுக்கபபட்டதாக எனக்கு அறிவிக்கப்பட்டவற்றில் நான் காணவில்லை). (6:145)*(11)

### அபூ ஹனிஃபாவின் கருத்து:

நுஃமான் இப்னு தாபித் அபூ ஹனிஃபா தமது ''அல்-ஆலிம் வ அல்-முத்தஅல்லிம்'' என்ற நூலில் குறிப்பிடுவதாவது: 'நபியவர்கள் ஒருபோதும் நீதமற்ற எதையும் சொன்னதில்லை யென்றும் குர்ஆனுக்கு முரணான எதையும் சொன்னதோ செய்ததோ இல்லையெனவும் ஒருவர் விசுவாசிக்க வேண்டும்.' அவரது கருத்தில் நபிகளாரின் பெயரால் அறிவிக்கப்படும் எந்த வொரு ஹதீஸும் குர்ஆனுக்கு முரண்படின், அதனைப் போலி யானதெனக் கொண்டு நிராகரித்துவிட வேண்டும். இதனை அவர் மேலும் விளக்கும்போது 'ஒரு ஹதீஸை நிராகரிப்பதன் மூலம் நாம் நபிமொழியை நிராகரித்துவிட்ட தாக அர்த்தமாகாது. மாறாக யாரோ ஓர் அறிவிப்பாளர் நபிகளாரின் பெயரால் பொய் யுரைத்துள்ளார் என்பதே அர்த்தமாகும்' என்கிறார்.(12)

### அல்-ஷாஃபியின் அவதானம்:

'ஒரு ஹதீஸின் அறிவிப்பாளர்கள் நம்பிக்கைக்குரியவர்களாய் இருப்பினும் அந்த ஹதீஸ் குர்ஆனுக்கு முரணானதாக இருப்பின் அது நியாயபூர்வமாக நபிகளாரிடமிருந்து வந்ததாய் ஏற்றுக் கொள்ள முடியாது' என முஹம்மத் இப்னு இத்ரீஸ் அஷ்-ஷாஃபி தனது மாபெரும் படைப்பான ''அல்-உம்'' என்ற நூலில் குறிப் பிடுகின்றார். இக்கருத்துக்கு ஆதரவாக பின்வரும் நபிமொழியை ஆதாரம் காட்டுகிறார் அஷ்-ஷாஃபி: 'ஹதீஸ் என்பெயரால் பல் வேறு திசைகளிலும் பரவும். அவற்றுள் குர்ஆனுடன் இயைந்து செல்பவை எனதாகும். குர்ஆனுடன் முரண்படுபவை நிச்சயமாக என்னுடையவையல்ல.''(13)

### இப்னு கையிம் அல் ஜவ்ஸிய்யாஹ்வின் அபிப்பிராயம்:

''உலகின் ஆயுள் ஏழாயிரம் ஆண்டுகளாகும். நாம் ஏழாவது ஆயிரத்தில் இருக்கிறோம்'' என நபிகளார் சொன்னதாகக் கூறப் படும் ஹதீஸுக்கு எதிர்வினையாக முஹம்மத் இப்னு அபீ பக்கர் இப்ன்-கையிம் அல்- ஜவ்ஸிய்யாஹ் இறை வசனமொன்றை ஓதிக்காட்டினார்:

''(நபியே!) இறுதி நேரம் பற்றி 'அது எப்போது வரும்?' என அவர்கள் கேட்பார்கள். நிச்சயமாக அதுபற்றிய அறிவு இரட்சகனிடமே உள்ளது. அவனன்றி வேறு எவரும் அதனை வெளிப்படுத்தமாட்டார். வானத்தின்மீதும் பூமியின்மீதும் அது கடமையாக இருக்கும். அது உங்கள்மீது திடீரெனச் சம்பவிக்கும். இது பற்றி நீர் அறிவீர் என நினைத்து அவர்கள் உம்மிடம் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். 'அதுபற்றிய அறிவு என் இரட்சகனிடமே உள்ளது' எனச் சொல்வீராக. ஆனால் (அதுபற்றி) அநேகர் அறியார்.'' (7:187)[14]

## பொருத்தமான உதாரணங்கள்

*ஹதீஸ் உள்ளடக்கம் குர்ஆனுடன் முரண்படும் மேலும் சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.*

### *1. நபி இப்றாஹிம் (அலை) சம்பந்தமாய்ச் சொல்லப்படும் பொய்கள்*

*''இப்றாஹிம் (அலை) மூன்று சந்தர்ப்பங்களில் தவிர ஒரு போதும் பொய் பேசியதில்லை'' என நபிகளார் கூறினார்கள் என்ற அபூ ஹுரைராவின் அறிவிப்பை புஹாரியும் முஸ்லிமும் மற்றோரும் பதிவுசெய்துள்ளனர்.*[15]

*இந்த ஹதீஸில் இப்றாஹிம் நபிக்கு எதிரான ஒரு குற்றச்சாட்டு அடங்கியுள்ளது. ஆனால் அல்-குர்ஆன் இத்தகைய குற்றச்சாட்டுகளிலிருந்து அவரை விடுவிக்கின்றது.* ''மேலும் (நபியே!) இவ்வேதத்தில் இப்றாஹீமை நினைவுகூர்வீராக! அவர்மிக்க உண்மையாளரும் நபியுமாவார்.''(19:41) *அல்-குர்ஆன் இப்றாஹீம் நபியை உண்மையாளர் (ஸித்தீக்) என வர்ணிக்கின்றது. இப்றாஹீமைப் பாராட்டுவதற்காக குர்ஆன் பயன்படுத்தும் சொல் 'ஸித்தீக்' (பரிபூரண உண்மையாளர்).*[16] *அல்-ராகிப் அல்-அஸ்ஃபஹானி (ம. ஹிஜ்ரி 502) 'ஸித்தீக்' என்பதன் பொருள் சம்பந்தமாய் நான்கு கருத்துகளை முன்வைக்கிறார்: (1) வாழ்வில் உண்மையின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர் (2) ஒருபோதும் பொய் பேசாதவர்*

*(3) சத்தியத்துக்கு எந்தளவு கட்டுப்பட்டவரெனில் அவர்வாழ்வில் பொய் நிகழ்வதற்குச் சாத்தியமே இல்லை. (4) வாழ்வும் வாக்கும் ஒத்தியைகின்ற ஒருவர்.[17] அறபு மொழியில் இதனை (ஸித்தீக்) ஒத்த சொல் வடிவம் (ஆலிம், கபீர், மத்தீன், கரீம், ஹசீன் போன்ற) போன்ற சொற்கள் பூரணத்துவத்தைக் குறிப்பனவாகும்.*

*இந்த ஹதீஸ் உண்மையெனில் குர்ஆன் வசனம் அர்த்தமற்ற தாய்விடும். குர்ஆனின் புனிதம் பாதுகாக்கப்படல் வேண்டுமாயின் இந்த ஹதீஸ் நம்பமுடியாததென வகைப்படுத்தப்படல் வேண்டும். ஸஹீஹ் புஹாரிக்கு விரிவுரையெழுதிய மிகவும் உயர்வாக மதிக்கப்படும் இப்னு ஹஜர் அல்-அஸ்கலானி இந்த ஹதீஸ் ஏற்றுக்கொள்ளக் கூடியதெனக் காட்டும் முனைப்பினராக இருக்கின்றார். 'இப்றாஹீம் நபியவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த நிலைமைகள் காரணமாக போலி அறிவிப்பை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானார். இது தர்க்க ரீதியானதே' எனும் இப்ன்-அகீல் (ம. ஹி. 513) லின் வாதத்தை அங்கீகரித்து முன்வைக்கின்றார். 'ஒரு நபியென்ற முறையிலும் அல்லாஹ்வின் நண்பர் என்ற முறையிலும் இப்றாஹீம் உண்மையைப் பேசியிருக்க வேண்டும். ஆனால் அவருக்கு பொய் சொல்வதற்கான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அவர் அதனை ஏற்றுக்கொண்டார்' என அல்-காதி அபூபக்கர் இப்னு அரபியும் (ம. ஹிஜ்ரி 543) இந்த ஹதீஸை அங்கீகரிக்கின்றார்.[19]*

*அல்-குர்தூபியும் (ம. ஹிஜ்ரி 671) இப்னு அரபியின் அதே தர்க்கத்தின் வழிநின்று இந்த ஹதீஸை நியாயப்படுத்த முனைகின்றார்.[20] இப்றாஹீம் நபி பொய் சொன்னார் என்பது ஆதாரமற்ற கூற்று என இப்னு அல்-ஜவ்ஸி அதனை நிராகரிப்பதுடன் இப்றாஹீம் நபி சொன்னது பொய்யல்ல; அது இரட்டுற (மஆரீத்) மொழிதலாகும் என்கிறார். அவர் தனது கருத்தை வலியுறுத்துவதற்காக இஸ்லாமிய வரலாற்றிலிருந்தே பல உதாரணங்களை முன்வைக்கின்றார்.[21] எனினும் இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதல்ல என அறிவிப்பதை அவர் தவிர்த்துக் கொள்கிறார்.*

*இப்றாஹீம் நபி கூறியதாகக் குறிப்பிடப்படும் 'பொய்கள்' அதன் உண்மையான அர்த்தத்திலன்றி உருவகமாக (மஜாஸ்) சொல்லப்பட்டது என்கிறார், அல்-ஆலூஸி (ம. ஹிஜ்ரி 1270). அவர் இந்த ஹதீஸை ஆதாரபூர்வமனதாய்க் கொள்வதில் பிரச் சினையிருப்பதாகக் கருதவில்லை.*[22] *இது எவ்வாறிருப்பினும் 'பொய்' என்ற சொல் உருவகமாகக் கருதப்படுவதில் பொதுவாக பிரச்சினையேதும் இல்லையெனினும் இதனை ஒரு நபிமீது சாட்டுவது நிச்சயமாக விரும்பத்தக்கதல்ல. மேலும் குர்ஆன் 'ஸித்தீக்' (மிகவும் உண்மையானவர்) என மிக்க கௌரவத்துடன் அழைக்கின்ற ஒரு நபியின் விடயத்தில் நபி(ஸல்) 'கதீப்' என்ற வார்த்தையைப் பிரயோகித்திருப்பார்கள் என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று.*

*அமீன் அஹ்ஸன் இஸ்லாஹியும் (மறைவு கி.பி. 1997) இந்த ஹதீஸை நியாயப்படுத்துவதாகத் தெரிகிறது. அவர் 'கதீப்' என்ற சொல்லுக்கு மூன்று அர்த்தங்கள் உண்டு என்கிறார்: 'பொய்', 'தவறு', 'இரட்டுற மொழிதல்'. 'கதீப்' என்ற சொல் இந்த ஹதீஸில் 'இரட்டுற மொழிதல்' என்றஅர்த்தத்தில் பயன் படுத்தப்பட் டுள்ளதாக அவர் கருதுகிறார். 'கதிப்' என்ற சொல் இவ்வர்த்தத்தில் அறபுக் கவிஞர்களாலும் பயன்படுத்தப்பட்டுள்ளதால் இந்த அறி விப்பில் உள்ளார்ந்த பிரச்சினையேதுமில்லை என அவர் விவாதிக்கின்றார்.*[23] *அறபிக் கவிஞர்களும் நாவேந்தர்களும் 'கதிப்' என்ற சொல்லை இரட்டுற மொழியப் பயன்படுத்தியது ஒருபுறத்திருக்க, இப்றாஹீம் என்ற இம்மாபெரும் நபி பற்றி குறிப்பாகக் குர்ஆனே மிகத் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும்போது மக்களைத் தவறாக கருத்துக் கொள்ளக் கூடியவாறு நபியவர்கள் இவ்வார்த்தையைப் பாவித் திருப்பார் கள் என்பதைக் கற்பனை செய்வதுகூட மிகக் கடினமானதாகும்.*

*அல் - ஃபக்ர் அல்-ராஸி (ம. ஹிஜ்ரி 606) இவற்றுக்கு நேர்மாறாக, இந்த ஹதீஸ் இட்டுக்கட்டப்பட்ட பொய்யென திட்டவட்டமாய்க் கூறுகிறார். பொய்யை நபிகளார் மீது சாட்டுவதைவிட அதனைப் புனைந்த அறிவிப்பாளர்கள்மீது சாட்டுவதே பொருத்தமானதாகும்*

என்கிறார் ராஸி.[24] ஒரு நபியை பொய்யுரைத்த குற்றச்சாட்டுக்கு முகம்கொடுக்க வைப்பதைவிட புஹாரி, முஸ்லிமுடைய வாய்மை பற்றி இவர்கள் அதிகம் கவலைப்படுவோராய் இருக்கின்றனர் என இந்த ஹதீஸை ஆதாரபூர்வமானதெனக் கருதுவோரைக் குறைகூறுகின்றார் ஸெய்யத் மௌதூதி (ம. கி.பி. 1979). அறி விப்பாளர் வரிசையில் எந்த குறையுமில்லை என்ற காரணத்தால் ஏற்புடைத்ததல்லாத ஹதீஸொன்றை நபி முஹம்மத் (ஸல்) மீது சாட்டுவது நியாயமல்ல என்பார் அவர்.[25]

இறுதியாக ஸெய்யத் குதுபின் கருத்துப்படி ''அவ்வாறல்ல. அதை அவர்களில் பெரியதுதான் செய்தது' (21:63) ''நிச்சயமாய் நான் நோயுற்றிருக்கிறேன்'' (37:89) என குர்ஆன் குறிப்பிடும் இப்றாஹீம் நபியின் வார்த்தைகளைப் பொய்யென்று கருதத் தேவையில்லை; இவை பொய்கள் அல்ல; இவை பொது மக்க ளுக்காகக் கூறப்பட்ட அங்கதச்சுவை கொண்ட விடைகளாகும் என்பது அவரது வாதம்.[26]

### 2. முன்தீர்மானிக்கப்பட்ட மானுட விதி

அல்-புஹாரி, முஸ்லிமும் மற்றவர்களும் தம் ஹதீஸ் நூல் களில் முன்தீர்மானிக்கப்பட்டது (கிதாப் அல்-கத்ர்) எனும் ஓர் அத்தியாயத்தைச் சேர்த்துள்ளனர். இவ்வத்தியாயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீஸ்கள் மனித வாழ்வில் எல்லாமே முன் தீர்மானிக்கப்பட்டுவிட்டவை எனக் கூறுவனவாக உள்ளன. இத் தொகுப்புகளில் பதிவாகியுள்ள முதலாவது ஹதீஸ் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊதை ஆதாரமாகக் கொண்டது. இந்த ஹதீஸின்படி நபி (ஸல்) கூறுகிறார்கள்:

''நிச்சயமாக உங்கள் ஒவ்வொருவரதும் கட்டமைக்கப்பட்ட முதல் வடிவம் தாயின் கர்ப்பப்பையில் நாற்பது நாட்கள் ஒன்று சேர்க்கப்படுவதாகும். பின்னர் இது இரத்தக் கட்டியாக (அலக்கஹ்) மாற்றப்பட்டு அதே கால அளவு அவ்வாறிருப்பதாகும். அதன் பின்னர் சதைக் கட்டியாக (முத்கஹ்) மாறி அதே காலஅளவு அவ்வாறிருப்பதாகும். அதன்பின் ஒரு மலக்கு அனுப்பப்பட்டு

*அவர் அதனுள் உயிரை ஊதுவார். அப்புறம் அதன் உணவு (றிஸ்கு), ஆயுள் (அஜல்), வாழ்நாள் செயற்பாடுகள் (அமல்), சபிக்கப்பட்டதான (ஷக்கிய்) அல்லது ஆசீர்வதிக்கப்பட்டதான (ஸயீத்) அதன் இறுதி முடிவு முதலியனவற்றை எழுதுமாறு அவர் கட்டளையிடப்படுவார். வணக்கத்துக்குரியவன் அவனைத்தவிர யாருமற்றவன் மீது ஆணையாக! உங்களில் ஒருவர் சுவனத்துக் குரியவராய் அமல் செய்து கொண்டிருந்து அவர் சுவனத்தின் விளிம்பை நெருங்கும்பொழுது விதி (அல்-கிதாப்) அவரை முந்தி விடும். அப்போதவர் நரகத்துக்குரிய செயல்களைச் செய்து நரகி னுள் நுழைந்துவிடுவார். இன்னும் உங்களில் அநேகர் நரகத்துக் குரிய செயல்களைச் செய்யத் தொடங்கி அவர் நரக விளிம்பை நெருங்கும்போது விதி அவரை முந்திவிட அவர் நற்செயல்களைச் செய்துகொண்டு சுவனத்துள் நுழைந்துவிடுவார்.''*[27]

*இந்த அறிவிப்பின்படி மனிதன் சிந்திப்பதற்கும், தேர்வினை மேற்கொள்வதற்கும் செயலாற்றுவதற்கும் சுதந்திரமற்றவனாய், படைத்தவனால் அவனுக்கென முன்கூட்டியே தீர்மானிக்கப் பட்டு விட்ட வழியிலேயே செல்கிறான். 'முன்தீர்மானிக்கப்பட்டு விட்டது' என்ற இக்கருத்தியல் குர்ஆன் கூறும் 'பரீட்சை' கோட் பாட்டுக்கு முற்றிலும் மாறானதாகும். மனிதன் பல்வேறு வகை களில் பரீட்சிக்கப்படுகிறான் என்பதைக் குர்ஆன் இருபத்தி யிரண்டு இடங்களில் மீள வலியுறுத்துகின்றது. உதாரணமாக:*

> ''பாருங்கள்! பூமியின் சௌந்தர்யங்கள் யாவை யும் மனித னுக்காகவே நாம் சித்தப்படுத்தி வைத்துள்ளோம், அவர்களில் யார் செயல்களில் அழகானவர்கள் என்பதை அறிவதற்காக.'' (18:7)

> ''அல்லாஹ் வாழ்வையும் மரணத்தையும் படைத்தான், உங்க ளில் செயலில் சிறந்தவர் யார் என்பதை அறிவதற்காக.'' (67:2)

*மனிதனின் இவ்வுலக வாழ்க்கை பற்றிய அல்-குர்ஆனின் இந்த வசனங்கள் தெள்ளத் தெளிவானவை. மனிதன் இவ்வுலகில் வாழ் வதும் செயலாற்றுவதும் ஒரு பரீட்சார்த்தியாகவே. இப்பரீட்சைக்*

*கோட்பாடு சிந்திப்பதற்கும், தீர்மானிப்பதற்கும், தேர்வு செய்வதற்கும், செயலாற்றவும் அவனுக்கு சுதந்திரம் வழங்குகின்றது. மனிதன் தனது தேவைகளைப் பொறுத்தவரையில் சுதந்திரமானவன் என்கிறது குர்ஆன். ஆனால் மேலே குறிப்பிடப்பட்ட ஹதீஸ் மனிதனின் இச்சுதந்திரத்தை மறுதலிப்பதோடு 'முன்தீர்மானிக்கப்பட்ட விதி'என்ற திட்டத்தினுள் அவனை முடக்கிவிடுகின்றது.*

*இந்த ஹதீஸ், மனிதன் நெகிழ்வானவன் - மாறுதலுக்குரியவன்- என்ற கருத்தை மறுக்கின்றது. 'அவர்களால் இயலும்' (லஅல்லஹுும்), 'உங்களால் இயலும்' (லஅல்லகும்), 'அவனால் இயலும்' (லஅல்லஹு) என்ற மூன்று தொடர்களை குர்ஆன் முறையே 44 இடங்களிலும் 68 இடங்களிலும் 3 இடங்களிலும் உபயோகித்துள்ளது. அவற்றுள் மூன்று கீழே தரப்படுகின்றன. மனிதன் விரும்பினால் தன்னை மாற்றிக்கொள்ள இயலும் என்பதை இத்தொடர்கள் சுட்டுகின்றன.*

''அவர்கள் தங்களை மாற்றிக்கொள்ள இயலுமான முறையில், அவர்களை நல்லவைகளாலும் தீயவைகளாலும் பரீட்சித்தோம்.'' (7:168)

''வழிகாட்டலை உங்களுக்கு இயலுமானதாய்க் காண்பதற்காக அல்லாஹ் தனது வசனங்களை உங்களுக்குத் தெளிவாக்குகிறான்.'' (3:103)

''ஆனால் கனிவான வார்த்தையில் அவனுடன் பேசுங்கள். அதைக்கொண்டு நல்லுபதேசம் பெற அவனால் இயலும்.'' (20:44)

*குர்ஆனின் இவ்வலியுறுத்தல்கள் மனிதனின் மாறுதலுக்குள்ளாகும் தன்மையைக் குறிப்பிடுகின்றன. மாறுதலுக்குரியவன் என்ற இந்த அம்சம் மனிதன் விதிக்குக் கட்டுப்பட்டவன் என்ற நிலைப்பாட்டை அனுமதிப்பதில்லை.*

*என்றபோதிலும் 'முன்தீர்மானிக்கப்பட்டு விட்டது' என்று அர்த்தப்படுத்தக் கூடிய குர்ஆன் வசனங்களை ஒருவர் சுட்டிக் காட்டி, இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கக்கூடும். இது எவ்வாறாயினும்*

மனிதனின் 'முன்தீர்மானிக்கப்பட்டு விட்ட விதிக்கு' உடன் பாடானதாய்த் தோற்றும் வகையிலேயே இவ்வசனங்கள் வியாக்கி யானம் செய்யப்பட்டுள்ளன என்பதை மறந்துவிடலாகாது. இவ் விவகாரம் குறித்த விவாதம் இந்நூலின் நோக்கத்துக்கு அப்பாற் பட்ட தாகையால் ஒரு குர்ஆனிய வசனம் இன்னொரு குர்ஆனிய வசனத்துடன் முரண்படுவதில்லை; அனைத்து குர்ஆன் வசனங் களும் ஒன்றோடொன்று ஒத்திசைவன என்பதை இங்கு குறிப் பிடல் போதுமானதாகும். ஒரு வசனத்தின் விளக்கம் இன்னொரு வசனத்தின் விளக்கத்துடன் முரண்படுவதை ஏற்றுக்கொள்ள முடி யாது. முழுக் குர்ஆனும் அங்க சம்பூரணமான -ஒன்றிணைந்த- ஒன்று என்பதை விளக்குவது முஃபஸ்ஸிரீன்களின் - குர்ஆன் விளக்கவுரையாளர்களின் - கடமையாகும். மனிதன் பூமியில் பரீட்சிக்கப்படுகிறான் என்ற கருத்தினை வலியுறுத்தும் வசனங்கள் அநேகம் காணப்படுவதால் முன்தீர்மானிக்கப்பட்ட விதி என்ற கருத்துக்கு ஆதரவாக எந்தவொரு வசனத்துக்கும் வியாக்கியானம் கூறுதல் தகாது.[28]

மனிதன் மாறுதலுக்குரியவன் பூமியில் அவனது இருப்பு ஒரு பரீட்சையாகும் என்ற குர்ஆனியக் கருத்துக்கு எதிராகத் தாக்குப் பிடிப்பதற்கு புஹாரி, முஸ்லிமின் ''கித்தாப் அல் கத்ர்'' என்ற அத்தியாயத்தில் அவர்கள் பதிவு செய்துள்ள ஹதீஸ்களால் முடி யாது போகக்கூடும். உண்மையில் முன்னர் குறிப்பிட்ட ஹதீஸ் கூறுவதும் குர்ஆனின் விளக்கமும் இரு துருவங்களாகத் தோன்று கின்றன. இவற்றுக்கிடையில் உடன்பாடு காண்பதற்கு வழியேது மில்லை. எனவே இவற்றுள் ஒன்றைமட்டுமே சரியானதென ஏற்றுக்கொள்ள முடியும். இயல்பாகவே இதன் தீர்ப்பு குர்ஆனுக்கு ஆதரவாகவே இருக்கும்.

இது ஒருபுறமிருக்க இந்த ஹதீஸில் உள்-முரண்பாடு வேறு காணப்படுகின்றது. வெளிப்படையாக இரண்டு அம்சங்கள் இந்த ஹதீஸில் தென்படுகின்றன. ஒன்று முன் தீர்மானிக்கப்பட்டது என்ற முறைமை பற்றிய அறிவிப்பு. அடுத்தது, மானுட வாழ்வில் முன் தீர்மானிக்கப்பட்டமையின் தாக்கமும், விளைவும். முதல்

பகுதியில் மனிதனின் வாழ்க்கை ஒழுங்கமைக்கப்படும் முறைமை குறித்து ஒரு 'கிதாப்' பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. ஆனால் மனிதன் சிந்திப்பதற்கும் செயலாற்று வதற்கும் குறிப்பிட்ட காலம் வரை ஓரளவு சுதந்திரம் அனுபவிக்கின்றான் என இரண் டாவது பகுதியில் இன்னொரு 'கிதாப்' தென்படுகிறது. மனிதன் குறிப்பிட்ட காலம்வரை சுதந்திரமாகச் செயல்பட்டபின் அவனது விதிநூல் முந்திக்கொள்கிறது. இந்த ஹதீஸ் நம்பத் தகுந்ததல்ல என்பதற்கு இந்த உள்-முரண்பாடே போதுமானதாகும்.

### 3. மனிதனின் செயல்களுக்கும் சுவனம் புகுவதற்கும் சம்பந்தமில்லை

அபூ ஹுரைரா உட்பட பல்வேறு அறிவிப்பாளர்களின் மேற் கோளுடன் புஹாரி, முஸ்லிமாலும் மற்றவர்களாலும் பின்வரும் ஹதீஸ் பதிவுசெய்யப்பட்டுள்ளது:

''நபிகளார் நவின்றார்கள்: 'உங்களில் யாரும் அவரது நற் செயல்கள் காரணமாக சுவர்க்கம் புக மாட்டார்.' அப்போது யாரோ ஒருவர் 'நீங்களுமா?' எனக் கேட்க 'ஆம். எனது நாயனின் கருணை என்னைச் சூழ்ந்து கொண்டாலன்றி' என விடை பகர்ந்தார்கள்.''(29)

இந்த ஹதீஸ் உண்மையான விசுவாசிகளின் நற்செயல்கள் அவர்களை சுவனத்துக்கு இட்டுச்செல்லும். (7:45, 16:32, 52:19, 77:43) என்று குர்ஆனில் கூறப்படும் நன்மாராயத்துடன் முரண் படுகின்றது. மேலும் 'இம்மையிலும் மறுமையிலும் வெற்றி உண்மையான விசுவாசத்திலும் நற்செயல்களிலுமே தங்கியுள்ளது' என நபிகளாரின் மக்கா காலப் பகுதியிலும் மதீனா காலப்பகுதி யிலும் விசுவாசிகளுக்கு வக்குறுதியளித்தும் அவிசுவாசிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்தும் வஹி அருளப்பட்டது. (2: 25, 82, 277; 3:57, 4:57, 122, 173; 11:23; 14:23; 18:107; 22:14, 23, 50, 56; 29:58; 31:8; 32:19; 42:22; 47:12; 85:11 இன்ன பிற)

சுவனம் புகுதல் குறித்து குர்ஆன் உபயோகிக்கும் பதம் ஜஸா (16:30, 31) (வெகுமானம், சன்மானம், பிரதியுபகாரம்) என்பதாகும். நற்கருமங்கள் புரிவோரின் உண்மையான வெற்றி (ஃபலாஹ்)

*சுவனம் புகுதலாகும் (23:1-11) என குர்ஆன் தெள்ளத் தெளிவாக அறிவிக்கின்றது. இறைவசனம் 10:4 மூலம், அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது; உண்மை விசுவாசிகளுக்கும் நற் கருமங்கள் புரிவோருக்கும் அல்லாஹ் மறுமையில் நியாயமாக வெகுமானம் வழங்குவான் என வாக்களிக்கின்றான். அல்லாஹ் வின் கருணை (ரஹ்மத்) என்பதுவும் இறைவிசுவாசம் நல்லமல் கள் என்னும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும் (45:30). விசுவாசி களுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் உண்டென் றும் அதன்படி விசுவாசிகள் தம் செல்வத்தையும் உயிரையும் தியாகம் செய்வார்கள் என்றும் அல்லாஹ் அவர்களை சுவனம் புக அனுமதிப்பான் என்றும் இறைவசனம் 9:111 அறிவிக்கின்றது. சுருக்கமாகச் சொல்வதெனில், குர்ஆன் நற்செயல்களின் அவசி யத்தை வலியுறுத்துகின்றது; அதேவேளை இந்த ஹதீஸ் அதனை மறுக்கின்றது.*

*ஸஹீஹ் புஹாரியின் விரிவுரையாளர்களில் ஒருவரான இப்னு பத்தால் (ம. ஹிஜ்ரி 449) இந்த ஹதீஸ் நற்செயல்களின் முக்கியம் குறித்து இறை வசனங்களுடன் முரண்படுவதைக் காணவில்லை. அவர் இந்த ஹதீஸ் மனிதன் சுவனம் புகுவதையும் அங்கு அவன் அனுபவிக்கக்கூடிய சுகபோகங்களையும் குறிப்பிடுகிறது என்றும் அல்-குர்ஆனோ (16:30 உம், 43:72 உம்) அங்கு மனிதனுக்கு கிடைக் கக் கூடிய அந்தஸ்தை தீர்மானிக்கின்றதென்றும் கூறுகிறார்.(30) இது வெறும் ஊகமேயன்றி வேறில்லை. இப்னு பத்தால் இந்த ஹதீஸுக்கும் குர்ஆனுக்கும் இடையேயான முரண்பற்றி அறிந்தி ருக்கின்றார். என்றாலும் ஹதீஸின் புனிதத்தைக் காக்கும் அளவு கடந்த ஆர்வம் காரணமாகவே அவர் இவ்வாறான ஒரு விளக்கத்தை அளிக்கின்றார். ஏற்புடைத்தான ஒரு விளக்கமல்ல இது.*

*அல் புஹாரியின் மற்றொரு விரிவுரையாளரான அல்-கிர்மானி (ம. ஹி. 786) இந்த ஹதீஸை இன்னொருவிதமாக நியாயப்படுத்த முற்படுகிறார். வெறும் நற்செயல்கள் மட்டும் மனிதனைச் சுவ னம் புகச் செய்வதில்லை. அல்லாஹ்வின் கருணை அவசியம். ஏனெனில் சுவனம் நற்செயல்களுக்கான ஒரு வெகுமதியல்ல*

என்கிறார் அவர்.(31) இக்கருத்து இரண்டு காரணங்களால் உள் -முரண் கொண்டதாகும். முதலாவது அல்லாஹ் விசுவாசிகளின் செல்வத்தையும் உயிரையும் எடுத்துக் கொண்டான். அதற்குப் பிரதியுபகாரமாக அவர்களுக்கு சுவனத்தை வைத்திருக்கிறான் *(9:111)* என்று குர்ஆனே அறிவித்து விட்டது. இரண்டாவது, இது விடயத்தில் அல்லாஹ்வின் பெருங்கருணை பங்காற்றுகின்ற போதும் மனிதனது செயல்களின் பங்கு புறக்கணிக்க முடியாத தாகும். மனிதனது நற்செயல்களே அல்லாஹ்வின் கருணையைப் பெறுவதற்கு அவனைத் தகுதியுடையவ னாக்குகின்றன. *(45:30)* மனிதனது நற்கருமங்களே அல்லாஹ்வின் கருணையைப் பெற நிபந்தனையாகுமெனில் நற்கருமங்களின் பங்கை எவ்வாறு மறுத்துரைக்கலாம்?

இவ்விவகாரத்தில் ஹதீஸுக்கும் குர்ஆனுக்குமிடையே உடன் பாடு காண்பதற்காக அல்-ஆலூஸி இன்னுமொரு விவாதத்தை முன்வைக்கிறார். சுவனத்துள் நுழைவதற்கு குர்ஆன் பொதுவான காரணத்தைக் குறிப்பிடும் அதேவேளை ஹதீஸ் உண்மையான காரணத்தைக் குறிப்பிடுகின்றது என்பது அவரது விளக்கம்.(32) இந்த ஹதீஸ் நற்கருமங்களுக்கு எந்தவொரு பலனையும் நல்காத காரணத்தால் இவரது வாதம் திருப்தியளிப்பதாய் இல்லை.

உண்மையில், இந்த ஹதீஸ் முஃதஸிலாக்களை மௌனிக்கச் செய்வதற்காக உருவாக்கப்பட்டிருக்கலாம். மனிதன் தனது நற் செயல் காரணமாகச் சுவனம் புகுவான் என்ற முஃதஸிலாக்களின் நிலைப்பாடு அல் குர்ஆனை ஆதாரமாகக் கொண்டிருந்த போதி லும் அவர்களை எதிர்ப்பதற்காகவென்றே இது உருவாக்கப்பட்டி ருக்கக் கூடும்.(33)

இறுதியாக, அல்லாஹ்வின் கருணையின்றி நபியே சுவனம் புக மாட்டார் என்ற இந்த ஹதீஸின் இரண்டாவது பகுதி அல் லாஹ்வின் தூதரது தரத்தையே குன்றச் செய்வதாகும். நபி (ஸல்) அவர்களின் அந்தஸ்து மிகவும் புனிதமானது. குர்ஆனில் அவர் களின் திருநாமம் அல்லாஹ்வின் பெயருக்குப் பக்கத்திலேயே இடம்பெறுகின்றது. எனவே 'நபியே நீங்களுமா?' என்ற கேள்வி

கூட சந்தேகத்தையே கிளறுகின்றது. நபி (ஸல்) அல்லாஹ்வின் அருட் பெருங் கருணையின் அடையாளம் (21:107) என்பதனை நன்கறிந்த நபியின் தோழர் எவரேனும் இவ்வாறு கேள்வி யெழுப்பியிருக்க மாட்டார்.

## 4. இஸ்லாத்தில் பலவந்த மதமாற்றம்

உமர், இப்னு உமர், அபூஹுரைரா, இன்ன பிறரின் மேற் கோளுடன் புஹாரியும் முஸ்லிமும் மற்றவர்களும் பதிவுசெய் துள்ள ஒரு ஹதீஸ்: ''அல்லாஹ்வைத் தவிர வேறு நாயனில்லை' (ஷஹாதா) என்பதனை ஏற்றுக்கொள்ளாத மனித வர்க்கத்துக்கு (அந்-நாஸ்) எதிராகப் போர் (கித்தால்) தொடுக்குமாறு எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. ('லாஇலாஹ இல்லல்லாஹு' என) அதனைப் பகிரங்கமாக மொழிந்தவரின் உயிரும் உடைமையும் - நீதிக்காகவேயன்றி - என்னிடமிருந்து பாதுகாக்கப்பட்டதாய் இருக் கும். அவரது கணக்குக் காட்டல் அல்லாஹ்வுடனாயிருக்கும்'' என நபி (ஸல்) கூறினார்.[34]

இந்த ஹதீஸ் இஸ்லாத்தை உலக முழுவதும் பரப்புவதற்காக பலாத்காரம் பிரயோகிக்கப்படுவதனை நியாயப்படுத்துகின்றது. இப்னு ஹஜர் இந்த ஹதீஸ் அறிவிப்பில் ஏதோ பிரச்சினை யிருப்பதைக் காண்கின்றார். என்றாலும் கூட, 'மார்க்கத்தில் பலவந்தம்' என்ற குற்றச்சாட்டை சமாளிக்கும் வகையில் இதற்கு விளக்கமளிக்கின்றார் அவர். 'கித்தால்' (போர்) என்ற சொல் யுத் தத்தைத் தவிர்க்கும் எதனையும் கூடக் குறிக்கலாம். முஸ்லிம்கள் அல்லாதார் மீது ஜிஸ்யா வரி விதிக்கப்படலாம் என்பதும் ஒன்று. அத்துடன் 'ஷஹாதா' என்பது இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதையும் அல்லது எதிரிகளை அடிமைப்படு த்தலையும் குறிக்கும். எதிரிகளை அடிமைப்படுத்தலை, அவர்களைக் கொல்வதன் மூலமாக அல்லது அவர்களுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதன் மூலமாக அல்லது அவர்கள் மீது வரியேதும் விதிப்பதன் மூலமாகச் செய்யலாம் என்பார் இப்ன்-ஹஜ்ர்.[35] இந்த விளக்கம் ஏற்புடைத்தானதொன் றாகத் தோற்றவில்லை. மேற்கோள் காட்டப்பட்ட இந்த ஹதீஸ்,

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காக மக்களுடன் சண்டையிடவும், மக்கள் புதிய மார்க்கத்தை நிராகரித்தால் அவர்கள் அல்லாஹ்வுக்கு முழுவதும் கீழ்ப்படியும்வரை அவர்களுடன் போர் தொடுக்கவும், நபிகளார் கடமைப்பட்டுள்ளார் எனவும் கூறுகின்றது. அல் ஸம்ஆனி (ம. ஹி. 489) இந்த ஹதீஸில், வேறு விடயங்கள் தவிர அவிசுவாசியர்க்கு எதிராக யுத்தம் புரிய கடமைப்பாடும் உள்ளது எனக் காண்கின்றார்.[36] இந்த ஹதீஸை அவர் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தாலும், குர்ஆனின் கட்டளைகளுக்கு முரண்பட்டதாகவே இது அமைந்துள்ளது.

''மார்க்கத்தில் பலவந்தம் இல்லை. வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகிவிட்டது.'' (2: 256)

''(நபியே!) அவர்கள் புறக்கணித்துவிட்டால் (கவலைப்படாதீர்) அவர்களின் பாதுகாவலராய் நாம் உம்மை அனுப்பவில்லை. தூதை எத்திவைப்பதைத் தவிர (வேறெதுவும்) உம்மீது சாட்டப்படவில்லை. (42:48)

''எனவே நபியே! (அவர்களுக்கு) நல்லுபதேசம் செய்வீராக. நல்லுபதேசம் செய்வதே நும் பணி. விசுவாசம் கொள்ளும்படி அவர்களை உம்மால் பலவந்தஞ்செய்ய முடியாது. (88: 21, 22)

இஸ்லாத்தைத் தழுவச் செய்வதில் பலவந்தம் பிரயோகிக்கப் படுவதை இந்த இறை வசனங்கள் தடைசெய்கின்றன என்பது தெளிவு. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பலவந்த மதமாற்றம் செல்லுபடியற்றதாகும்; முஸ்லிம் அல்லாதாரை இஸ்லாத்தைத் தழுவுமாறு பலவந்தஞ் செய்வது பாரதூரமான குற்றமாகும் என்பது முஸ்லிம் அறிஞர்களின் ஏகோபித்த தீர்ப்பாகும். 'இஸ்லாத்தைத் தழுவுதல் அல்லது வாளுக்கு இரையாதல்' என்ற தீர்வை முஸ்லிம்கள் அவிசுவாசிகள்மீது பலவந்தமாகத் திணித்தார்கள் என்ற குற்றச்சாட்டை முற்றாகவே மறுதலித்து நின்கின்றது இஸ்லாமிய அறிஞர்களின் இத்தீர்ப்பு.[37] இத்தீர்ப்பு ஐயமின்றி நாம் முன்னர் கண்ட குர்ஆன் வாசகங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

குழப்பமும் கலவரமும் (ஃபித்னா) நீங்கி வணக்கங்கள்யாவும் அல்லாஹ் ஒருவனுக்கே என்பது நிலைபெறும்வரை நிராகரிப் பாளர்களுக்கு எதிராகப்போர் புரியுமாறு கட்டளை பிறப்பிக்கும் இறைவசனங்களை (2:193; 8:39) ஒருவர் உதாரணங் காட்டக் கூடும். நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களுக்கெதிராகப் போர்த் தொடுக் கும்போது முஸ்லிம்கள் தற்காப்புப் போரில் இறங்கு வதனையே இவ்வசனங்கள் குறிக்கின்றன என்பதை மறந்துவிட லாகாது. இவ்விரு வசனங்களும் குறைஷிகளின் படையெடுப்பு காரணமாக மதீனாவில் இருந்த நிலைமையைப் பின்னணியாகக் கொண்டதாகும். இவ்வசனங்களுக்கு முன்னரும் பின்னரும் வரும் வசனங்களுடன் தொடர்புபடுத்திப் பார்த்தால் போதிய தெளிவு ஏற்படும். வரலாற்றில் வேர்கொண்டுள்ளன இவ்வாசகங்கள். எனவே, மக்காவின் நிராகரிப்பாளர்களுக்கு எதிராக மட்டும் போர் புரிய வேண்டும் என்பதே இதன் கருத்தாகும். இதனால் இன் னொரு பிரச்சினை எழுகின்றது. குறிப்பிட்ட ஹதீஸின்படி எதிரி கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காக நபிகளார் யுத் தங்களைத் தொடர நேர்ந்தது என்றாகின்றது. வரலாற்றை நோக்கி னால் எந்தப்போரிலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு நிராகரிப்பாளர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இதற்கு நேர்மாறாக, விசுவாசிகளும் நிராகரிப்பாளர்களும் உடனிருந்து வாழும் கொள்கையையே இஸ்லாம் கொண்டுள்ளது. நபிகளாருக்கும் யூதக் கோத்திரத்தார்களுக்குமிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை இதற்கு தக்க சான்றாகும். தங்க ளுடன் மோதாத நிராகரிப்பாளர்களுடன் நீதியாகவும் நேர்மை யாகவும் நடந்துகொள்ளுமாறு குர்ஆன் விசுவாசிகளுக்குக் கட்ட ளையிடுகின்றது (60:8). சில சந்தர்ப்பங்களில் விரோதிக்கெதிராகப் போர் அனுமதிக்கப்பட்டபோதும் இஸ்லாமிய வெற்றியின்போது முஸ்லிமல்லாதாரை இஸ்லாத்துக்கு வருமாறு பலவந்தப்படுத் துவது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்று.

### *5. மூஸா (அலை) தனது மரணத்தைப் பிற்படுத்த சக்தி பெற்றிருத்தல்*

*புஹாரி முஸ்லிமும் மற்றவர்களும் அபூ ஹுரைராவின் ஆதாரத்தின் பேரில் பின்வரும் ஹதீஸைப் பதிவு செய்துள்ளனர்:*

*''நபி (ஸல்) கூறினார்கள்: ''மலக்கல் மௌத் (உயிரை எடுப் பதற்குப் பொறுப்பான வானவர்) மூஸாவிடம் சென்று உயிரை விடுமாறு அல்லாஹ் விடுத்த அழைப்பை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார். அப்போது மூஸா அவ் வானவரைத் தாக்கி அவரது விழியைப் பிடுங்கியெடுத்து விட்டார். வானவர் (மலக்கல் மௌத்) அல்லாஹ்விடம் திரும்பிச்சென்று 'மரணிக்க விரும்பாத உன் அடியாரிடம் நீ என்னை அனுப்பிவைத்தாய். அவர் என் கண்ணைப் பிடுங்கி யெடுத்துவிட்டார்.' என முறையிட்டார். அப்போது அல்லாஹ் அவரது விழியைத் திருப்பிக் கொடுத்து மூஸா வாழ்வை வேண்டுகிறாரோ என அறிந்து வருமாறு அவரை அனுப்பிவைத்தான்...''[38]*

*இந்த ஹதீஸை மேலோட்டமாகப் பார்க்கும்போதே இது யூத-கிறீஸ்தவ (இஸ்ராயி லிய்யாத்) மரபிலிருந்து வந்ததென்பது புரிந்துவிடும். பழைய ஏற்பாட்டில் காணப்படும் இதுபோன்ற மற்றும் கதைகளை இது ஞாபகமூட்டுகிறது. உதாரணமாக பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படும் கடவுளான யேஹோவா, யாக்கூபுடன் மல்யுத்தம் புரிந்து தோற்றுவிடுகின்றார்.[39]*

*வானவரொருவர் மரணிக்கக் கூடிய மானிடப்பிறவியான மூஸாவால் காயப்படுத்தப்படுவது சாத்தியமற்றதாகும் எனச் சில அறிஞர்கள் இந்த ஹதீஸை ஆதாரபூர்வ மானதாய் ஏற்க மறுத்து விடுகின்றனர். இந்த அறிஞர்களை இப்னு குஸைமா (ம. ஹி. 311) மத நிந்தகர்கள் (அல்-முப்ததியா) என அழைக்கின்றார்.[40] மலக்கல் மௌத் மனித உருவில் மூஸாவின் வீட்டில் நுழைந்த தாகவும் அவர் வானவர் என்பதை அறியாமல் அத்துமீறி வீட்டுக் குள் புகுந்தவரெனக் கருதி மூஸா அவரைக் கண்ணில் தாக்கிக் காயப்படுத்தியிருக்கிறார். வந்தவர் வானவர் என அறிந்திருந்தால் மூஸா அவரைத் தாக்கியிருக்க மாட்டார் என அவர் வாதிக்கின்*

*றார்.[41] இவ்வகையான விவாதம் வெறும் ஊகத்தின் பாற்பட்ட தாகும். மலக்கு மூஸாவிடம் வந்தது மனித உருவிலா இல்லையா என்பது முக்கியமன்று. ஆனால் வானவரொருவர் மனிதஜீவியால் தாக்கப்படுவதென்பது சாத்தியமேயல்ல.*

*இந்த ஹதீஸை புஹாரி பதிவு செய்தது வெகு சுவாரசிய மானதாகும். ஹதீஸின் இறுதியில் இதே ஹதீஸ் மஃமார், ஹம்மார் முதலானோரை உள்ளடக்கிய இன்னொரு அறிவிப்பா ளர் தொடராலும் அபூ ஹுரைராவிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது என புஹாரி குறிப்பிடுகின்றார். முஸ்லிமும் எல்லாவற்றுக்கும் மேலாக இக்கதை அபூ ஹுரைராவால் நேரடியாகச் சொல்லப் பட்டது என்கிறார்.[42] எனவே இக்கதை நபிகளார் அல்லாத ஒருவரால் சொல்லப்பட்டது எனக் கொள்வதே சரி.*

*இது ஒருபுறத்திருக்க, நபிகளார் கூறியதாகவே கொண்டாலும் கூட, இதனை நியாயப்படுத்த முடியாமைக்கு இன்னும் காரணங் கள் உள. இந்த ஹதீஸ் மரணத்தைப்பற்றிய குர்ஆனின் கருத்துகளுக்கு முற்றிலும் முரணாக உள்ளது. ஹதீஸில் குறிப்பிடப் படும் மலக்கல் மௌத் மரணத்தருவாயில் வருபவர். மரண வேளை யென்பது இறைவனாலேயே தீர்மானிக்கப்படுவது. எனவே அதனை ஒத்திப்போடுவ தென்பது எவராலும் முடிந்த காரியமல்ல.*

> ''உங்களில் ஒருவருக்கு மரணம் வந்துவிடுமானால் எமது மலக்குகள் அவரது உயிரைக் கைப்பற்றுகின்றனர். அவர்கள் தம் கடமையில் தவறுவதில்லை.'' (6:61)

> ''ஒவ்வொரு மக்கள் கூட்டத்துக்கும் ஒரு தவணையுண்டு. ஆகவே அவர்களது தவணை வந்துவிட்டால் அவர்கள் ஒரு கணப்பொழுது பிந்தவும் மாட்டார்கள் முந்தவும் மாட்டார்கள்.'' (7:34)

> ''அவர்களது தவணை முடிந்துவிட்டால் அவர்கள் அதனை பிற்படுத்தவோ முற்படுத்தவோ முடியாது.'' (16:61)

> ''இன்னும் அல்லாஹ் எந்தவொரு ஆன்மாவையும் - அதன் தவணை வந்துவிட்டால் பிற்படுத்தவே மாட்டான்.'' (63:11)

குர்ஆன் 'முடியாது' என்று சொன்னதை மூஸா செய்ததாக இந்த ஹதீஸ் சொல்கிறது. எனவே மூஸா செய்தார் எனச் சொல்லப்படும் காரியம் நினைத்துப்பார்க்க முடியாத ஒன்று. மூஸாவின் உயிரை எடுப்பதற்காக மலக்கல் மௌத் அவரிடம் செல்லவில்லை; மலக்கல் மௌத்தினால் தனது கடமையை நிறைவேற்ற முடியுமா என அறிவதற்காகவே அல்லாஹ் அவரை அனுப்பிவைத்தான் என ஒரு வாதத்தை முன்வைக்கிறார் அந் -நவவி.[43] இது வலிந்து பொருள் கொள்வதாகும். அறிவுபூர்வ மாகவோ குர்ஆனின் அடிப்படையிலோ இதனை நிரூபித்தல் இயலாது. ஊகம் ஒருபோதும் உண்மைக்குப் பதிலீடாகாது. (10:36) உண்மை குர்ஆனில் உள்ளது என்பதைக் கூட பொருட்படுத்தாது, மறந்து தங்கள் கருத்துகளுக்கு வலுவூட்டுவதற்காக ஆதாரமற்ற விவாதங்களை முன்வைப்ப தற்கும் அஹ்லுல் ஹதீஸினர் தயங்க வில்லை யென்பது விசனத்துக்குரியதாகும்.

### 6. ஆதத்தின் தவறுக்காக மூஸா அவரைக் கண்டித்தல்

அபூ ஹுரைராவை ஆதாரமாகக் கொண்டு புஹாரியும் முஸ்லி மும் மற்றவர்களும் பின்வரும் ஹதீஸைப் பதிவுசெய்துள்ளனர்:

''நபி கூறினார்: ஆதமும் மூஸாவும் தர்க்கித்துக் கொண்டனர். 'ஆதமே! நீர் எமது தந்தை. நீர் எமது எதிர்ப்பார்ப்பை வீணாக்கி விட்டீர். எம்மை சுவனத்திலிருந்து வெளியேறச் செய்தீர்' எனறார் மூஸா. 'நீர் மூஸா ஆவீர். அல்லாஹ் உமக்காகத் தனது வார்த் தையை தன் கரங்களாளேயே எழுதும் பாக்கியத்தைப் பெற்றீர். என்னைப் படைப்பதற்கு நாற்பது வருடங்களுக்கு முன்பாகவே அல்லாஹ்வினால் முன்தீர்மானிக்கப்பட்டு விட்ட ஒன்றுக்காக நீர் என்னைக் குறைசொல்கிறீர்' என்றார் ஆதம்.''[44]

இந்த ஹதீஸ் பல காரணங்களுக்காக ஆட்சேபிக்கப்பட வேண்டியதாகும். முதலாவதாக, மூஸா ஆதமை பெயர் கூறி அழைப்பதுபோல் ஒரு நபி தம் தந்தையைப் பெயர் கூறி அழைப் பது முறையல்ல. இது மூஸா உட்பட அனைத்து நபிமார்களுக்கும் அருளப்பட்டிருந்த 'இஹ்ஸான்' என்ற மிகச் சிறந்த நடத்தைக்கு முற்றிலும் மாறானதாகும். (2:83)

இரண்டாவது, தந்தையின் செயலுக்காக அவரை மகன் கண்டிப்பது முறையல்ல. அவ்வாறு தந்தையின் தவறைச் சுட்டிக் காட்டுவதாயின் அது 'இஹ்ஸான்' என்ற ஒழுகலாறுக்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும். ஆனால் மூஸாவின் கண்டனமோ கடுமையானது. பய பக்தியுடைய தந்தையுடன் பயபக்தியுடைய தனயன் பேசுவதாக இது அமையவில்லை.

மூன்றாவது, அல்லாஹ்வே மன்னித்துவிட்ட தவறுக்காக மூஸா ஏன் ஆதமைக் குறைசொல்ல வேண்டும்? பாவ மன்னப்பின் பின்னர் ஒருவரது முன்னைய தவறுகளைச் சுட்டிக் காட்டுவது தவறல்லவா?

நான்காவதாக, மூஸா ஏன் ஆதமைக் குறைசொல்ல வேண்டும்? ஆதமைத் தவறு செய்யும்படித் தூண்டியவன் ஷைத்தான் என்பதை மூஸா அறியமாட்டாரா? ஷைத்தானே ஆதமை சுவனத்திலிருந்து வெளியேறச் செய்தவன் என்பதை அல்லாஹ் திட்டவட்டமாகக் கூறிவிட்டான். குர்ஆன் கூறுகின்றது:

> ''ஆதமுடைய மக்களே! ஷைத்தான் உங்களுடைய பெற்றார்களை சுவனத்திலிருந்து வெளியேறச் செய்ததுபோல் உங்களையும் வழிகெடுக்க அனுமதித்து விடாதீர்கள்.'' (7:27)

மீளவலியுறுத்துவதாயின் மூஸா (அலை) இறைவெளிப்பாடு அருளப்பெற்றவராதலால் ஆதம் (அலை) சுவனத்திலிருந்து வெளியேற்றப்படுவதற்குக் காரணம் ஷைத்தானே என்பதை அறிந்திருத்தல் வேண்டும். அல்லாஹ்வின் வார்த்தைப்படி குறைகூறப்பட வேண்டியவன் ஷைத்தானே தவிர ஆதம் (அலை) அல்ல. எனவே இம்முழுக் கதையும் விசித்திரமானதும் நம்ப முடியாததுமாகும்.

இமாம் முஸ்லிமுடைய நூலின் விரிவுரையாளர்களுள் ஒருவரான அல்-மாஸரீ (ம.ஹி. 536) இதற்கு ஆதரவாக பல்வேறு விளக்கங்களைக் குறிப்பிடுகிறார்.[45] சில சந்தர்ப்பங்களில் தந்தையைத் தனயன் கண்டிப்பதற்கு அனுமதிக்கப்படலாம் எனக் கூறுவார் அவர். சில சந்தர்ப்பங்களில் இது உண்மையாயிருக்கலாம் எனினும் முதலில் மூஸா ஆதமைக் கண்டிப்பதற்கு அப்படி

என்ன அவசியம் நேர்ந்து விட்டது? இது எவ்வாறிருப்பினும் இவ்விவகாரம் ஊகத்துக்கு அப்பாற்பட்டதாகும்.

இந்த ஹதீஸுக்கு ஆதரவான இரண்டாவது விடயம் தந்தையைத் தனயன் குறைகூறக் காரணம் ஆதத்துடைய (ஷரிய்யாஹ்) சட்டமும் மூஸாவுடைய (ஷரிய்யாஹ்) சட்டமும் வெவ்வேறு என்பதே. ஆனால், பெற்றார் பிள்ளையென்ற உறவு காலத்தால் மாறாதது. அது எல்லா காலத்துக்கும் உரியது. இந்த உறவை வலியுறுத்தும் விதிகளை அல்லாஹ் தனது எல்லா நபிமார்களுக்கும் வெளிப்படுத்தியிருக்க வேண்டும். நாம் முன்னர் கவனித்தது போன்று இருதரப்பினரதும் நடத்தையைத் தழுவிநிற்கும் 'இஹ்ஸான்' மூஸாவின் சட்டத்தில் ஏற்கனவே காணப்பட்டதாகும்.

மூன்றாவது, ஆதம் மீது மூஸாவின் குற்றச்சாட்டு பூமியின் யதார்த்தத்துக்கு அப்பாற்பட்டது. ஏனெனில், அவர் உலகப் பொறுப்புகளிலிருந்து ஏற்கனவே விடுவிக்கப்பட்டு மறுவுலக வாழ்க்கையை மேற்கொள்பவர். அங்கு குற்றச்சாட்டு அவரைப் பாதிக்காது. எனவே குற்றஞ்சாட்டுகிற விவகாரத்தைப் பிரச்சினைக் குரியதாய் பார்க்கத் தேவையில்லை யென்கிறார் அல்-மாஸரி.

ஏற்கனவே பாவமன்னிப்பு கேட்டுவிட்ட ஒன்றுக்காக எவரும் மீண்டும் குற்றம் சாட்டப்படக்கூடாது என்பதிலிருந்தும் விதி விலக்கானது இது என்கிறார் இப்னு அப்துல் பர்ர் (ம. ஹி. 463).[46] அறிவு பூர்வமான அறம்சார்ந்த விவாதங்கள் இடம்பெறாத நிலையில் பிரயோகமாகும் வாதம் இது. மறுமையில் எவரும் எதற்காகவும் மற்றவரை குறைகூற மாட்டார். அது அற்பமான வீணான செயல் (லக்வா) என்பதை மாஸரியும் இப்னு பர்ரும் மறந்து விடுகின்றனர்.

> ''அவர்கள் சுவனத்தில் ஸலாம் என்ற வார்த்தையைத் தவிர வீணான எதையும் செவியுற மாட்டார்.'' (19: 62)

> ''அங்கு ஒவ்வொருவரும் வீணானதோ பாபங்களோ இல்லாத (மதுக்) கிண்ணங்களைப் பரிமாறிக் கொள்வர்.'' (52: 23)

''அங்கு அவர்கள் வீணான வார்த்தையையும் விஷமத்தன மானவற்றையும் செவியுற மாட்டார்.'' (78: 35)

''மேலான சுவனபதியில் வீணான (சொல்) எதையும் அவர்கள் செவியுற மாட்டார்கள்.'' (88: 10-11)

*அல்-தீபீ (ம. ஹி. 743) ஒருபுறம் ஜபரிய்யாக்களையும் மறுபுறம் முஃதஸிலாக்களையும் தாக்குவதற்காக இந்த ஹதீஸைப் பயன் படுத்துகிறார்.*[47] *இது ஹதீஸின் உண்மைத் தன்மை பற்றிய சந்தேகத்தை உண்டுபண்ணுகிறது. இது மற்றவர்களை விமர்சிப் பதற்கும் தாக்குவதற்கும் புனையப்பட்ட ஹதீஸாக இல்லாம லிருக்க முடியாது.*

### 7. படைப்புகளைப் படைப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட காலம்

*அபூ ஹுரைரா சொன்னதாக இமாம் முஸ்லிம் பின்வரும் ஹதீஸைப் பதிவுசெய்துள்ளார்: ''நபிகளார் என் கையைப் பிடித்துக் கொண்டு ''அல்லாஹ் சனிக்கிழமை பூமியைப் படைத்தான்; ஞாயிறன்று அதிலுள்ள மலைகளைப் படைத்தான்; திங்களன்று மரங்களைப் படைத்தான்; செவ்வாயன்று துரதிர்ஷ்டத்தைப் படைத்தான்; புதனன்று ஒளியைப் படைத்தான்; வியாழனன்று அதன் மீது பிராணிகளைப் பரவச் செய்தான்; வெள்ளியன்று மாலை ஆதமைப் படைத்தான்...'' எனச் சொன்னார்கள்.''*[48]

*இந்த அறிவிப்பு குர்ஆனின் கூற்றுக்கு மாற்றமானதாகும். இத்த ஹதீஸ் படைப்புச்செயல் பூர்த்தியாவதற்கு ஏழு நாட்கள் எடுத்த தாகச் சொல்கிறது. ஆனால் அல் குர்ஆனோ இப்பிரபஞ்சத்தில் உள்ளவை யாவும் ஆறு நாட்களில் படைக்கப்பட்டதாகக் கூறு கின்றது:*

''நிச்சயமாக உமது நாயன் அல்லாஹ் வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான்.'' (7:54)

''உண்மையில் நாம் வானங்களையும் பூமியையும் அவற்றுக் கிடையேயுள்ள யாவையும் ஆறு நாட்களில் படைத்தோம்...'' (50:38)

*குர்ஆன் வசனங்கள் 10:3 11:7 25:59 32:4 57:4 முதலியவற்றிலும் இதே செய்தி உறுதி செய்யப்படுகின்றது. இக்குர்ஆன் வசனங்களுக்கும் குறிப்பிட்ட ஹதீஸுக்கும் இடையே எவ்வித உடன்பாடும் தெரியவில்லை. இமாம் முஸ்லிமின் விளக்கவுரையாளரான அந்-நவவி இம்முரண்பாட்டை அலட்சியம் செய்துவிட்டு எவ்வித விளக்கமும் தராமல் அப்பால் நகர்வது ஆச்சரியமாய் உள்ளது. குர்ஆன் தரும் படைப்புகளின் கால அட்டவணை பற்றி அவர் அறிந்திருக்கவில்லையா? அறிந்திருந்திருப்பின் அது சம்பந்தமாய் அவர் மௌனம் சாதித்தது ஏன்? ஆதாரபூர்வமான அறிவிப்பாளர்கள் சொல்வதன் பக்கம் அவர் சாய்வதே அதற்குக் காரணம் போலும்! ஒரு ஹதீஸ் எவ்வித உடன்பாடும் காண முடியாதவாறு குர்ஆனுடன் முரண்படுமானால் அது ஆதாரபூர்வமற்ற ஹதீஸ் என்றே நிராகரிக்கப்படல் வேண்டும்.*

### *8. முஸ்லிம்களின் பாவங்கள் யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மாற்றப்படல்*

*இமாம் முஸ்லிம் மட்டுமே இவ்விடயம் சம்பந்தமாக அபூ மூஸா அல்-அஷ்ஹரி மூலம் பின்வரும் ஹதீஸ்களைப் பதிவு செய்துள்ளார்:*

1. *''இறுதித் தீர்ப்புநாளில் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஒரு யூதரோ அல்லது கிறிஸ்தவரோ அளிக்கப்பட்டு இது நீர் விடுவிக்கப்படுவதற்கான உமது கிரயப்பொருள் எனக் கூறப்படுவார்'' என்று நபிகளார் கூறினர்.*[(49)]

2. *''எந்தவொரு முஸ்லிமும் நரகில் தனது இடத்துக்கு ஒரு யூதரோ கிறிஸ்தவரோ நியமிக்கப்படாமல் மரணிக்க மாட்டார்'' என நபிகளார் கூறினர்.*[(50)]

3. *''இறுதித் தீர்ப்புநாளில் ஒவ்வொரு முஸ்லிமும் மலையளவு பாவங்களைச் சுமந்தவராகத் தோன்றுவார். அவர்கள் மன்னிப்பட்டு விடுவார்கள். அவர்களது பாவங்கள் யூதர்கள் மீதும் கிறிஸ்தவர்கள் மீதும் சுமத்தப்படும்'' என நபிகளார் கூறினர்.*[(51)]

இமாம் முஸ்லிமின் விரிவுரையாளர்களில் ஒருவரான அல்-நவவி இந்த ஹதீஸ்களுக்கு அறிவுபூர்வமான விளக்கம் தர முடியாமல் அதன் புனிதத்தைக் காக்கும் பிரயத்தனத்தில் கருத் தாட முற்பட்டு சித்தி காணத் தவறி விடுகின்றார். ஒவ்வொரு வருக்கும் இரு இடங்கள் ஒதுக்கப்பட்டடுள்ளன. ஒன்று நரகம் மற்றது சுவர்க்கம். விசுவாசியொருவர் சுவர்க்கம் புகுந்தால் நரகத்தில் அவரது இடம் ஒரு நிராகரிப்பாளருக்கு, அவரது நிராகரிப்பு காரணமாக வழங்கப்படும்'[(52)] என அபூ ஹுரைரா நபிகளாரிடமிருந்து அறிவிப்பது ஹதீஸ்களுக்கு விளக்கமாக அமைகின்றது எனக் கூறுவார் அல்-நவவி.

யூதர்களும் கிறிஸ்தவர்களும் அவர்களின் பாவம் காரணமாகத் தான் நரகம் புகுவார்களேயன்றி முஸ்லிம்களின் பாவம் காரணமாக அல்ல என அர்த்தப்படுத்த எத்தனிக்கிறார் அவர். தனது நிலைப் பாட்டுக்கு ஆதரவாக மற்றுமொரு ஹதீஸ முறப்படுத்துகின்றார். ''தீயசெயல்களை அறிமுகப்படுத்துவோர் அதனைச் செய்யும் ஒவ்வொருவரது பாவங்களையும் சுமக்க வேண்டும்.''[(53)] தீய வற்றை அறிமுகப்படுத்தியதன் விளைவாகவே யூதர்களும் கிறிஸ் தவர்களும் முஸ்லிம்களின் பாவங்களைச் சுமக்க வேண்டியுள்ளது என்று அவர் அர்த்தப்படுத்த முற்படுகிறார்.[(54)] அந்-நவவியின் வாதம் சீரிய பரிசோதனை ஒன்றை தாக்குப்பிடிக்கக் கூடியதாக இல்லை. முஸ்லிம்களின் பாவங்கள் யூதர்களுக்கும் கிறிஸ்தவர் களுக்கும் திருப்பப்படும் என ஹதீஸ்கள் தெளிவாகக் குறிப்பிடு கின்றன என்ற விவாதத்தை முன்னெடுப்பதற்காக அவர் எடுத் தாளும் இரண்டாவது அறிவிப்பு அதிலிருந்து அவர்பெறும் முடிவைச் சுட்டுவதாக இல்லை. அவர் இதில் ஒருபகுதியை மட்டும் எடுத்துக்கொண்டு மறுபகுதியை விட்டுவிடுகிறார்.

இந்த ஹதீஸின்படி பாவத்தை அறிமுகப்படுத்தியவரின் பாவங் கள் மட்டுமன்றி, மற்றவர்களின் பாவங்களும் அவர் மீது சுமத்தப் படும். அதேவேளை மற்றவர்களின் பாவங்கள் தளர்த்தப்பட மாட்டா. மூன்று ஹதீஸ்களும் முஸ்லிம்களின் பாவங்கள் யூதர் மீதும் கிறிஸ்தவர் மீதும் சுமத்தப்படும் என்கின்றன. அப்படி

*யாயின் அவர்கள் இரண்டு வகை பாவங்களைச் சுமக்க வேண்டி யவர்களாகின்றார்கள். 1. அவர்களது சொந்தப் பாவங்கள். 2. முஸ்லிம்களின் பாவங்கள்.*

*முஸ்லிமில் மட்டும் பதிவாகியுள்ள இம்மூன்று ஹதீஸ்களும் குர்ஆனுக்கு முற்றிலும் முரணானவை. குர்ஆன் கூறுகின்றது:*

> ''ஒவ்வொரு மனிதப் பிறவியும் புரியும் பாவம் அவர்மீது மட்டுமே சுமத்தப்படும். சுமையைச் சுமப்பவரின்மீது இன் னொருவரின் சுமை சுமத்தப்பட மாட்டாது.'' (6:164)

*ஒருவரின் பாவம் இன்னொருவர்மீது சாட்டப்படுவதைக் குர்ஆன் மறுதலிக்கின்றது. ஆனால் இந்த ஹதீஸ்கள் இதற்கு முற்றிலும் மாறான செய்தியை முன்வைக்கின்றன. அந்-நவவி இந்த முரண்பாடு குறித்து அதிகம் அலட்டிக் கொள்ளாமல் முரண்பாட்டை நீக்கும் வகையில் நாம் விளக்கம் காண வேண்டு மென அறிவுரை பகர்கின்றார். என்றாலும் முன்னர் காட்டியது போன்று குர்ஆன் கூறுவதற்கும் இந்த ஹதீஸ்களின் அறிவிப் புக்குமிடையே வெட்ட வெளிச்சமாகத் தெரியும் முரண்பாடு களுக்கிடையே இணக்கம் காணும் முயற்சியில் அவர் சித்தி பெறத் தவறி விடுகின்றார். அபூ பர்தா (ம. ஹி. 104) பாவங்களைப் பிறர் மீது சாட்டுவது சம்பந்தமான ஹதீஸ்களைத் தனது தந்தை அபூ மூஸா அல்-அஷ்ஹரியை ஆதாரம் காட்டி அறிவித்தபோது உமைய்யாஹ் கலீஃபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ம. ஹி. 101) வியப்புற்றவராய், 'இதனை உமது தந்தையார் நேரடியாக நபி களாரிடமிருந்து அறிவித்தாரா?' என மூன்று முறை கேட்டுவிட்டு அதனையிட்டுச் சத்தியம் செய்யுமாறு அவரை வேண்டினார்.[(55)]*

*ஐந்தாவது கலீஃபா பயபக்தி மிக்கவர். அவர் கேட்ட கேள்வி சரியானதொன்று. அக்கேள்வியே சம்பந்தப்பட்ட ஹதீஸ்கள் குறித்து ஐயங்களை எழுப்பி விடுகின்றன. இந்த ஹதீஸ்களைத் தான் தன் தந்தையிடமிருந்து கேட்டதாக அபூ பர்தா சத்தியஞ் செய்து கொடுத்தபோதிலும் கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் மனதில் எழுந்த சந்தேகம் தீர்வு கண்டதாகத் தெரியவில்லை.*

### *9. பெண்கள் தம் கணவர்களுக்குத் துரோகமிழைப்பதற்கு மூல காரணம் ஹவ்வாவே.*

*நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைராவை ஆதாரமாகக் கொண்டு புஹாரியும் முஸ்லிமும் பின்வரும் ஹதீஸைப் பதிவு செய்துள்ளனர். ''இஸ்ரவேலர்கள் இருந்திராவிட்டால் உணவு கெட்டுப் போயிருக்காது; இறைச்சி துர்நாற்றமடித்திருக்காது. ஹவ்வா இருந்திராவிட்டால் எந்தப் பெண்ணும், ஒருபோதும் தன் கணவனை ஏமாற்றியிருக்க மாட்டாள்.''(56)*

*இந்த ஹதீஸ் உணவு பழுதடைதல், பெண்கள் தம் கணவர் களுக்குத் துரோகமிழைத்தல் ஆகிய இரு விடயங்களைக் குறிப்பிடு கின்றது. அதாவது உணவு பழுதடைவதற்கு இஸ்ராயீலின் மக்க ளும் பெண்கள் துரோகமிழைப்பதற்கு ஹவ்வாவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர். அப்படியாயின் இஸ்ராயீலின் மக்களது காலத்துக்கு முன் ஒருபோதும் உணவு பழுதடையவில்லையென ஒருவர் தர்க்கபூர்வமான முடிவுக்கு வரக்கூடும்! ''இஸ்ராயீலுடைய மக்கள் அல்லாஹ்வின் கட்டளையை மீறி மன்ன், ஸல்வா போன்ற உணவுப் பொருட்களைப் பாதுகாத்து வைத்ததிலிருந்துதான் அவை பழுதாகிக் கெடத் தொடங்கின.''(57) என அல்-நவவி நாமமறியா சில அறிஞர்களை மேற்கோள் காட்டிக் கூறுவார். இங்கு சில கேள்விகள் எழுகின்றன. உணவுப் பொருட்களைப் பாதுகாத்து வைத்தது முழு மனித இனமும் அவஸ்தைக்குள்ளாக வேண்டிய பாரியதொரு குற்றமா? இரண்டாவது, ஒரு பிரிவினரின் அத்து மீறலுக்காக முழு மனித இனமும் தண்டிக்கப்படுவது ஏன்? மூன்றாவது, இத் தண்டனை மன்ன் ஸல்வாவுடன் நில்லாமல் பிற உணவு வகைகளையும் உட்படுத்துவது ஏன்? இஸ்ராயீ லுடைய மக்களின் செயலுக்கு முன்னர் உணவுப் பொருட்கள் பழுதடையவில்லையா? தர்க்கபூர்வமான இக்கேள்விகளுக்கு விடை காண்பது கடினம்.*

*மூஸாவைப் பின்பற்றியவர்களுக்குஅல்லாஹ் வழங்கிய அருட் கொடைகள் பற்றி அல் குர்ஆன் குறிப்பிடுகின்றது. அத்தகைய அருட்கொடைகளிலொன்றுதான் மன்ன், ஸல்வா எனும் உணவுப்*

*பதார்த்தங்களாக அருளப்பெற்றன. குர்ஆனில் மூன்றிடங்களில் இது குறிப்பிடப்படுகின்றது. வசனங்கள் 2:57; 7:160; 20:80. இவற்றிலும் இஸ்ராயீலின் மக்களைப் பற்றிப் பேசும் இதர வசனங்களிலும் இஸ்ராயீலின் மக்கள் செய்த பல்வேறு குற்றங் களும் அவற்றுக்குத் தக்கனவான தண்டனைகளும் விவரிக்கப் பட்டுள்ள போதிலும் இறைவனால் அனுப்பிவைக்கப்பட்ட உணவு களைச் சேகரித்துவைத்த அத்துமீறலைக் குறிப்பிடும் எந்தவொரு குறிப்பும் இவற்றில் இல்லை. பெரும் பாவங்களே அல்லாஹ்வின் அதிருப்தியையும் கோபத்தையும் சம்பாதிப்பவையென குர்ஆன் மீண்டும் மீண்டும் வலியுறுத்து கின்றது. உணவினைப் பாதுகாத்து வைப்பது எவ்வகையிலும் பெரும்பாவத்தில் அடங்காது. இது ஒருபுறத்திருக்க இவற்றையோ பிற உணவுப்பண்டங்களையோ பாதுகாத்து வைப்பதற்கு இஸ்ராயீலின் மக்களுக்குளவ்விதத் தடையும் விதிக்கப்பட்டதாக குர்ஆனிலோ உண்மையான ஹதீஸ் தொகுப்புகளிலோ எந்த ஆதாரமுமில்லை.*

*தண்டனை பாவம் செய்தவர்களுக்கேயன்றி பாவம் செய்யாத வர்களுக்கல்ல என்பதையும் குர்ஆன் தெளிவாகக் கூறுகின்றது.* ''பாவத்ததைச் சம்பாதித்துக் கொள்பவர் தனது ஆன்மாவுக்கெதி ராகவே அதனைச் சம்பாதித்துக் கொண்டார். ஏனெனில் அல்லாஹ் யாவும் அறிந்தவன். ஞானம் மிகுந்தவன்.'' (4:111) *ஒருவரது பாவம் இன்னொருவர்மீது சுமத்தப்படமாட்டாது என்பதே குர்ஆன் கூறும் கருத்து.* ''இன்னும் மனிதப் பிறவி (தவறாக) எதனைச் செய்யினும் அது அவர்மீதே சுமத்தப்படும். சுமையைச் சுமப்பவர் எவரும் மற்றவரின் சுமையைச் சுமக்க வேண்டியிராது.'' (6:164) *இவை அல்லாஹ்வினால் விதிக்கப்படும் நீதியின் நித்திய கொள் கைகளாகும். எனவே இஸ்ராயீலின் மக்களது (பாவச்) சுமை முழு மனித குலத்தின் மீதும் விடிவதற்கு வழியில்லை. அவர்கள் குற்றஞ் செய்திருந்தால் தண்டிக்கப்பட வேண்டியது அவர்கள் மட்டுமே.*

*மேலும் உணவு கெட்டுப் போவது இயற்கை நிகழ்வாகும். இஸ்ராயீலின் மக்களுக்கு முன்னர் உணவு கெடாமல் இருந்திருப் பின் மனிதனின் சமிபாட்டு முறை வேறுவிதமாய் இருந்திருக்கும்.*

மனிதனது உடல் நலனுக்கு நீர், கார்போஹைதரேத்து, விட்டமின், புரதம், தாதுப்பொருள், இரும்புச் சத்து முதலியன தேவை. இவை கெடக்கூடியவை. அதுவே இவ்வகை சத்துள்ள மூலகங்களின் இயற்கை. உட்கொள்ளப்படும் இவை கெடும்தன்மை வாய்ந்ததாய் இருத்தல் மனிதனின் சமிபாட்டுமுறைக்கு அவசியம். இல்லா விடின் அது சமிபாடடையாது. மனிதன் உணவு உட்கொள்ளவும் முடியாது போயிருக்கும். மரணம் என்பது தவிர்க்கப்பட முடியாத யதார்த்தம். உணவுப் பொருட்கள் கெடுவதும் அவ்வாறே. இவை ஆதமும் ஹவ்வாவும் பூமியில் கால்வைத்த நாள் முதல் நிகழ்ந்து கொண்டிருப்பவை.

இந்த ஹதீஸின் இரண்டாவது பகுதி ஹவ்வா (அலை) சம்பந்த மானது. ஹவ்வா விலக்கப்பட்ட கனியை உண்ணுமாறு ஆதத்தைத் தூண்டியவர்; ஆகவே ஆதமும் ஹவ்வாவும் சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றப்படுவதற்கு ஹவ்வாவே காரணம் எனச் சொல்லப் படுகின்றது. இது உண்மையாயிருத்தல் முடியாது. இவ்விவகாரத் தைக் குர்ஆன் முன்வைக்கும் முறையே வேறு: ''அப்போது ஷைத்தான் அவர்களை சுவனத்திலிருந்து வெளியேறச் செய்தான். (உயர்வான) நிலை யிலிருந்து அவர்களை வெளியேறச் செய்தான்.'' (2:36) நவவி உரிமைகொண்டாடுவதற்கு நேர் மாற்றமாக விலக் கப்பட்ட கனியை உண்ணுமாறு ஆதம் ஹவ்வா இருவரையுமே ஷைத்தான் ஏமாற்றியுள்ளான். 'அல்லாஹ்வினால் விலக்கப்பட்ட கனியை உண்ணுமாறு ஷைத்தான் ஹவ்வா வைத் தூண்டினான். ஹவ்வா ஆதமைத் தூண்டினார்' என்ற அல்-காதியின் கருத்தை நவவி முன்வைக்கிறார்.(58) இந்த அறிவிப்பு குர்ஆனுக்கு மாற்ற மாயிருப்பதால் இது ஏற்புடைத்தாவதில்லை.

ஹவ்வாவின் பங்குபற்றி ஹதீஸில் அறிவிக்கப்பட்டுள்ளது குறித்து அல்-அய்னியின் புரிதல் 'மரத்தின் கனியை உண்ணுமாறு ஹவ்வா ஆதமைத் தூண்டினார்' என்பதே.(59) இதில் ஹவ்வாவின் பங்கை இப்னு ஹஜர் இவ்வாறு விளக்குகிறார்: ''இந்த ஹதீஸில் ஆதமை ஹவ்வா தூண்டியபடியால்தான் அவர் அந்த மரத்திலிருந்து புசித்தார் என்ற குறிப்பு இருக்கிறது. ஹவ்வாவின் 'கியானஹ்'

*(நேர்மையின்மை, கட்டளை மீறல், துரோகம்) தான் அவரை ஷைத்தானின் அழகான வார்த்தைகளில் ஏமாற வைத்தது. கவர்ச்சியான வார்த்தைகளில் ஹவ்வா ஆதமை ஏமாற்றினார்.''(60) அல்-அய்னி இப்னு ஹஜர் இருவரும் புஹாரியால் பதிவுசெய் யப்பட்ட ஹதீஸுக்கு ஆதரவாக குர்ஆனை ஓரங்கட்டியமைக்கு இது நல்லதோர் உதாரணம். குர்ஆன் வசனம் 2:36 ஐ அவர்கள் மேலோட்டமாகக் கவனித்திருப்பினும் அவ்வாறான கருத்துகளை அவர்கள் வெளியிட்டிருக்க மாட்டார்கள். மீட்டுரைப்பதாயின் ஆதத்தை ஹவ்வா தூண்டவில்லை. மாறாக ஆதம் ஹவ்வா இருவரையும் தூண்டியவன் ஷைத்தானே என்பதைக் குர்ஆன் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. எனவே ஹவ்வா (அலை) குற்ற மற்றவர். அவர் செய்யாத ஒரு குற்றத்திற்காக அவரைக் குறை காண்பது தகாது.*

*இந்த ஹதீஸின் அறிவிப்பு இறைவசனம் 2: 36க்கு விளக்கம் கூற முற்பட்ட யாரோ ஒருவரால் மேற்கொள்ளப்பட்டு பின்னர் அது நபி (ஸல்) கூறியதாகத் தவறுதலாக அறிவிக்கப்பட்டிருத்தல் கூடும். குர்ஆனுடன் முரண்படும் எதனையும் நபிகளார் சொல் லியிருக்க முடியாது என்பதே நிஜ யதார்த்தம். ஆதம் இறைகட்ட ளையை மீறியதற்கு ஏவாள் (ஹவ்வா) காரணம் என்பது பைபிளின் குற்றச்சாட்டு. ஏவாள் சம்பந்தமாக எவருடைய கருத்தையும் நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஏனெனில், உண்மையாக இறக்கி வைக்கப்பட்ட பைபிள் தொலைந்துபோய் அதன் உட் பொருள் கொச்சைப்படுத்தப்பட்ட நிலையே காணப்படுகின்றது. உண்மையை நாம் கண்டுகொள்ளக் கூடியது, குர்ஆனிலேயே அன்றி பைபிளில் அல்ல.*

*இறுதியாக, இந்த ஹதீஸ் பெண்களை இழிவுபடுத்துவதாகும். மனைவி மட்டுமா துரோகமிழைப்பவள்? ஆடவர்கள் தம் மனைவியருக்குத் துரோகம் இழைப்பதில்லையா? ஏன் பெண்கள் மீது மட்டும் விரலை நீட்டவேண்டும்? உண்மையில் இது நேர் வது ஆதமோ ஹவ்வாவோ இழைத்த தவறினால் அல்ல. அல்லாஹ் மனிதனை அவ்வாறுதான் படைத்திருக்கிறான்.*

*குர்ஆன் கூறுகின்றது:* ஆன்மாவின்மீதும் அதனைச் செவ்வையாக்கியவன் மீதும் ஆணையாக! பின்னர் (ஆத்மாவான) அதற்கு அதன் தீமையையும் நன்மையையும் உணர்த்தினான். (91:7-8) ***ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் எதிராகப் பாவம் புரிகிறார் எனின், அவர்களின் இயல்பான தன்மைகளே அதற்குக் காரணம். மனித இனத்தின் சிந்தனா சுதந்திரமும், தேர்வும், செயலுமே அவனது நடத்தைச் சரியா பிழையா எனத் தீர்மானிக்கின்றன.***

## *10. பெண்களும் இல்லங்களும் பிராணிகளும் துர்ச்சகுணங்கள்*

*பெண்களும் இல்லங்களும் பிராணிகளும் தீய சகுனங்கள் எனக் கூறும் அப்துல்லாஹ் இப்னு உமர் அறிவித்த ஹதீஸை புஹாரியும் முஸ்லிமும் மற்றவர்களும் பதிவுசெய்துள்ளனர். முஸ்லிமின் வார்த்தைகளில் ஹதீஸ் வருமாறு: ''துரதிர்ஷ்டம் என்பது உண்மையெனில், அது குதிரையிலும் பெண்ணிலும் இல்லத்திலும் இருக்கிறது.''*[61]

*''இல்லங்களைப் பொறுத்தவரை துரதிர்ஷ்டம் இடவசதி யின்மை, அண்டை அயலவர்கள் தீயவர்களாய் இருப்பது முதலிய வற்றைக் குறிக்கும். 'பெண்ணில் துரதிர்ஷ்டம் என்பது அவள் தகாத வார்த்தைகள் பேசுபவளாக, கருத்தரிக்க, பிரசவிக்க முடியாத வளாக இருப்பது. குதிரையில் துரதிர்ஷ்டம் என்பது அது போருக் குப் பொருத்தமில்லாமை'' என அல்-கத்தாபி இந்த ஹதீஸை விளக்க முனைகிறார்.*[62] *இது சீராகச் சொல்லப்பட்டிருப்பினும் இந்த ஹதீஸ் இத்தகைய ஒரு விளக்கத்தை அனுமதிப்பதாக இல்லை. ஹதீஸில் ஏதோ பிரச்சினை உள்ளது எனக் கண்ட போதிலும் புஹாரி பதிவுசெய்துள்ள ஹதீஸின் ஆதாரபூர்வம் குறித்த சந்தேகத்தை நீக்குதற்கு யத்தனிக்கிறார் கத்தாபி. இப்னு ஹஜரின் அணுகுமுறையும் இவ்விதமாகவே உள்ளது. பெண்ணின் துர்ச்சகுண நிலைமை பற்றிய எண்ணக்கருவுக்கு வலுவூட்டும் வகையில் பல்வேறு கருத்துக்களை அவர் எடுத்தாண்ட போதிலும் அல்-கத்தாபியின் கருத்தையே அவரும் ஆதரிக்கின்றார்.*[63]

*அல்-கத்தாபியையும் இப்னு ஹஜரையும் பொறுத்தவரை பெண்ணில் காணப்படும் துர்ச்சகுனம் அவளது நாவடக்கமின்மையும் கருத்தரிக்க முடியாமையுமாகும். இது இவ்விரு அறிவாளிகளதும் நிலைப்பாடு எனில் துர்ச்சகுனம் பெண்களிடம் மட்டும்தானா? ஆண்களிடம் இல்லையா? கெட்ட வார்த்தைகளும் மலட்டுத் தனமும் பெண்களுக்குமட்டுமே உரியதல்ல. இது இருபாலாரும் சம்பந்தப்பட்ட விடயம். இந்த ஹதீஸில் ஆண்கள் விட்டு வைக்கப்பட்டுள்ளது ஏன்?*

*பெண் துர்ச்சகுனம் கொண்டவளென நபி (ஸல்) கூறியிருப்பார் என்பது நம்புதற்குரியதா? நிச்சயமாக இல்லை. நபிகளாருக்கு குர்ஆன் அருளப்பட்டது. தீயசகுனம் பற்றி நபிகளார் நன்கறிந்திருந்தார்கள். அல்-குர்ஆன் கூறுகின்றது:*

''அவர்களுக்கு நன்மை வரும்போது அது எங்களுக்கே உரியது என்கின்றனர். துன்பம் வரும்போது இது மூஸாவாலும் அவரைப் பின்பற்றுவோராலும் நேர்ந்த துரதிர்ஷ்டம் என்கின்றனர். ஆனால் அவர்களின் துரதிர்ஷ்டம் யாவும் அல்லாஹ்விடமிருந்தே வந்தது. அநேகர் இதனை அறிவதில்லை.'' (7:131) *துர்ச்சகுணமென்பது மானுடரது மூடநம்பிக்கையேயன்றி வேறில்லையென்பதை இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது. மக்களுக்குத் துன்பம் வரும்போது மக்கள் அதனை ஏதோ ஒன்றின்மீது அல்லது யாரோ ஒருவர்மீது அல்லது ஓர் இடத்தின்மீது சாட்டிவிடுகின்றனர். பூமியின் மீது ஒருவர் துன்பப்படுவது அவரது துரதிர்ஷ்டத்தினாலன்று. இன்ப துன்பங்கள் யாவும் இறைவனின் நாட்டப்படி நிகழ்வன என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர். இது இறைவசனம் 7:131 கூறும் செய்தி. குர்ஆன் பிரிதோர் இடத்தில் கூறுகின்றது:*

> ''அவர்கள் கூறினர்: நாம் உம்மிடம் துர்ச்சகுனத்தைக் காண்கின்றோம். நிச்சயமாக நாம் உமக்குக் கல்லெறிவோம்; எம்மிடமிருந்து கடுமையான வேதனை உம்மைத் தொடும். தூதர்கள் கூறினர்: உங்கள் துர்ச்சகுனம் உங்களிடமே உள்ளது. நீங்கள் கண்டித்து எச்சரிக்கப்பட்டதால் அது துர்ச்சகுனம் என்கிறீர்களா? இல்லை. நீங்கள் வரம்பு மீறிவிட்டீர்கள்.'' (36:18-19)

இந்த இறைவசனம் துர்ச்சகுனம் என்ற கருத்தை மறுக்கின்றது. உண்மையில் அப்படியொன்றும் கிடையாது. மக்களின் துன்பமும் அது எவ்வாறு நிகழ்ந்தது என அறியாமையுமே துர்ச்சகுனத்தின் விளைநிலம்.

இந்த ஹதீஸ் ஆயிஷா (றலி) வின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டபோது அவர் அதனைத் திருத்தினார். நபிகளார் உண்மையில் சொன்னது: ''அறியாமைக்கால அறபிகளும் யூதர்களும் 'பெண், இல்லம், பிராணி முதலியன துரதிர்ஷ்டமானவை' எனச் சொல்வதுண்டு'' என்பதாகும். ஹதீஸை அறிவித்தவர் அதன் முதல் பகுதியைச் செவியுற்றிருக்கவில்லை என்பது ஆயிஷாவின் அவதானமாகும்.(64) நபிகளார் கூறியதன் முதல்பகுதியை அறிவிப்பாளர் செவியுற்றில்லை என்ற ஆயிஷாவின் அபிப்பிராயத்தை அறிவிக்கும் அறிவிப்பாளர் தொடரில் குறைபாடுள்ளதால் ஹதீஸும் குறைபாடுள்ளதாகும் என்கிறார் இப்னு ஹஜர். ஆனால் ஆயிஷாவின் அவதானம் சரியெனக் கூறும் சில அறிவிப்புகளை எதிர்கொள்ள நேர்ந்ததும் ஆயிஷாவின் அவதானம் புஹாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளதுபோன்ற மிகவும் ஆதாரபூர்வமான அறிவிப்புகளுடன் ஒப்புநோக்குகையில் வலிந்து பொருள்கொள்வதாகவே உள்ளது என முடிவுசெய்கிறார் இப்னு ஹஜர். ஆயிஷாவின் அணுகுமுறையை நிராகரிக்கும்போது இப்னு ஹஜர் துர்ச்சகுனம் என்ற கருத்தை நபியவர்கள் இஸ்லாத்துக்கு முந்திய அராபிய மக்களுடன் தொடர்புபடுத்தி யிருக்கக் கூடாது எனக் கருத்துரைக்கின்றார்.(65)

ஒரு ஹதீஸ் தொகுப்பிலோ அல்லது இன்னொன்றிலோ இடம் பெற்றுள்ள ஒரு ஹதீஸின் ஆதாரபூர்வ தன்மையை என்னவிலை கொடுத்தேனும் பாதுகாப்பதும் வலியுறுத்துவதுமே சில ஹதீஸ் விளக்கவுரையாளர்களின் அக்கறைபோல் தோன்றுகிறது. ஆயிஷா (றலி)வின் அபிப்பிராயத்தைக் கண்டிக்கக்கூடிய அளவுக்கு இப்னு ஹஜர் துணிவு பெற்றிருக்கக் கூடாது! ஆயிஷாவின் அவதானம் கவனத்திற் கொள்ளப்படின் குறிப்பிட்ட ஹதீஸ் சம்பந்தமான பிரச்சினைக்கு சுலபமான தீர்வு கிடைக்கும்.

*04*

# அறிவுபூர்வமான ஆதாரத்தன்மை வாய்ந்த ஹதீஸ்கள் மூலமாக ஹதீஸை ஆதாரப்படுத்தல்

*விசுவாசிகளுக்கு நபி ஒரு நீதிபதியைப் போன்றவர். (4:65) அவரின் தீர்ப்பு முடிவானது. (33: 36) அவரது வாய்மொழியை விமர்சிப்பதற்கு அவருக்கே பூரண அதிகாரமுண்டு. அவரின் அதிகாரம் அல்லாஹ்வின் அதிகாரத்தைக் குறிக்கும். (40: 80) நாம் முன்னர் குறித்தது போல முதலாவது அளவுகோலான குர்ஆன், சர்ச்சைக்குள்ளான விவகாரங்கள் அனைத்தும் அல்லாஹ்விடமும் அவனுடைய இறுதித் தூதரிடமுமே (தீர்வுக்கு) விடப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றது.*[1]

பூரணத்துவம் பெறும்வரை இரண்டு தசாப்தங்களுக்கு மேல் நீடித்தது நபிகளாரின் தூதுத்துவப் பணி. அன்னார் இக்காலப் பகுதியில் குர்ஆன் வசனங்களுக்கு விளக்கம் கூறியதுடன் அல் லாஹ்வின் கட்டளைகளை அன்றாட வாழ்வில் கடைப்பிடித் தொழுகுவது எவ்வாறு என்பதையும் கற்றுக் கொடுத்தார்கள்; தகராறுக்குரிய வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கினார்கள்; தீமை செய்வதையிட்டு - பாவம் புரிவதையிட்டு - மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தார்கள்; பிரச்சினைகளின் போது மக்களுக்கு

ஆலோசனை வழங்கினார்கள். இஸ்லாத்தின் போதனைகளுக் கமைய மக்களின் வாழ்க்கையை ஒழுங்கமைத்தார்கள். (62: 2) இவையாவும் ஒவ்வொரு சகாப்தங்களினூடு காலங்கள் தோறும் இடங்கள் தோறும் தொடரப்பட வேண்டிய, பொதுவாக மக்களை யும், குறிப்பாக விசுவாசிகளையும் வழிநடத்தக்கூடிய இஸ்லாமிய மரபு ஆகும். மக்கள் இதன் வழி நின்று ஒழுகினாலும் கூட, துரதிர்ஷ்டவசமாய், சொந்த நலன் பேணும் சில சுயநலமிகள் வரம்புகள் மீறலாயினர். மக்களின் சொந்த விருப்பு வெறுப்புகளும் அவாக்களும் நபிகளாரின் பெயரால் விநியோகம் பெறலாயின.

இந்நிலையில், நபிகளாரின் பெயரால் புழக்கத்திலிருக்கும் இவ்வகையான ஹதீஸ்களின் தன்மைகளை மதிப்பீடு செய்து காண்பதற்கு, குர்ஆன், உறுதிசெய்யப்பட்ட ஸுன்னா, ஆதாரபூர்வ மான ஹதீஸ் என்பனவற்றையும் அளவுகோல்களாகப் பயன் படுத்த முடியும். ''யாரேனும் ஒருவரது செயல் எனது அங்கீ காரத்தைப் பெற்றிராவிடின் அது நிராகரிக்கப்படும்'' என நபி (ஸல்) நவின்றுள்ளனர்.[2] ஓர் அறிவிப்பை ஹதீஸ் என ஏற்றுக் கொள்வதற்கும், இல்லையென அதனை நிராகரிப்பதற்கும், ஓர் அளவுகோலின் தேவையை நபிகளாரின் இவ்வறிவுரை குறிப்பிடு கின்றது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நபிகளாரின் நன்கறியப்பட்ட ஹதீஸ்களுடன் ஒத்துப் போகின்றவை ஆதாரபூர்வ மானவையாய் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். மிக ஆதாரபூர்வ மான ஸுன்னா அல்லது ஹதீஸுடன் முரண்பட்டு நிற்பவை ஹதீஸ் அல்லவெனப் புறந்தள்ளப்படல் வேண்டும்.

## ஆயிஷா(றலி) வின் அணுகுமுறை

நபி (ஸல்) கூறியதாக அறிவிக்கப்பட்ட பல ஹதீஸ்களை ஆயிஷா (றலி) தம் அனுபவத்தைக் கொண்டும் அறிவைக் கொண்டும் நிராகரித்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. ''பெண் ணாலும் கழுதையாலும் நாயாலும் தொழுகை முறிந்துவிடும்'' என நபிகள் (ஸல்)கூறினார் என்ற ஹதீஸை இமாம் முஸ்லிமும் மற்றையோரும் அபூ தர்ரையும், அபூ ஹுரைராவையும் ஆதாரமாகக்

கொண்டு பதிவு செய்துள்ளனர்.[(3)] இந்த ஹதீஸ் ஆயிஷாவிடம் கூறப்பட்டபொழுது 'நீங்கள் எம்மை (பெண்களை) நாயுடனும் கழுதையுடனும் ஒப்பிடுகிறீர்கள் எனக் கடிந்து கொண்டதோடு ''அல்லாஹ்மீது ஆணையாக! நபிகளார் தொழும்போது நான் அவர்கள் முன்னால் படுத்திருப்பேன்'' என்றார்கள்.[(4)]

ஒரு ஹதீஸைக் கொண்டு இன்னொரு ஹதீஸை ஆயிஷா நாயகி நிராகரித்தமைக்கான மற்றுமோர் உதாரணம் முஸ்லிமில் பதிவாகி யுள்ளது: அபூ மூஸா அல்-அஷ்ஹரி ஒருமுறை ஆயிஷாவிடம் ''குளிப்பைக் கடமையாக்குவது எது?'' எதுவெனக் கேட்டபோது அதற்கவர், நபிகள் (ஸல்) கூறினார்கள்: ''பெண்ணின் நான்கு உறுப்புகளின் முன்னால் ஒருவர் அமர்ந்திருந்து பாலுறுப்புகள் ஒன்றையொன்று தீண்டினால் குளிப்பு கடமையாகும்'' என்று பதிலளித்தார்.[(5)] ஆயிஷாவின் இப்பதில் புஹாரி, முஸ்லிம் இரண்டிலும் பதிவாகியுள்ள ஹதீஸுக்கு முரணானதாகும். இந்த ஹதீஸ் அபூ ஸஈத் அல்-குத்ரியின் ஆதாரத்தில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. ''நபிகளார் அன்சார்களில் ஒருவரைக் காணச் சென்று அவரை அழைத்தபோது அவர் தலையிலிருந்து நீர் சொட்ட வெளியே வந்தார். 'நாம் உம்மை அவசரப்பட வைத்துவிட்டோம் போலும்' என நபிகளார் கூற அவர் 'ஆம், அல்லாஹ்வின் றஸூலே!' என்றார். அப்போது நபியவர்கள் 'விந்து வெளிப் படாமல் நீர் அவசரப்பட்டுவர நேர்ந்திருந்தால் குளிப்பு கட்டாய மன்று. 'வுழு' செய்தலே போதுமானதாய் இருந்திருக்கும்' என்றார்கள்.[(6)]

முதலாவது ஹதீஸ் இரண்டாவதைச் செல்லுபடியற்றதாக்கு கின்றதென உரிமை கொண்டாடப்படுகின்றது.[(7)] செல்லுபடியற்ற தாக்கும் முறைமை கடைப்பிடிக்கப்பட்டிருப்பின் அது சம்பந்த மாய் ஆயிஷா தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்திருப்பார். ஆனால், இவ்விவகாரத்தில் ஆயிஷா, நபிகள் (ஸல்) அவர்களது கூற்றை மேற்கோள் காட்டுவதுடன் நின்றுவிடுகின்றார்.

''நிச்சயமாக மக்களின் ஒப்பாரி காரணமாக இறந்தவர்கள் வேதனை அனுபவிப்பர்'' என அப்துல்லாஹ் இப்னு உமர்

அறிவித்துள்ள ஹதீஸ் சரியானதாவென ஒருமுறை ஆயிஷாவிடம் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் கேட்டார். அதற்கு ஆயிஷா ''ஒருமுறை மரண ஊர்வலமொன்று ஒப்பாரியுடன் நபிகளாரைக் கடந்துசென்றபோது 'அவர்கள் ஒப்பாரி வைக்கின்றனர். ஆனால் இறந்தவர் வேதனைபட்டுக் கொண்டிருக்கிறார்' என நபிகளார் கூறியதைச் சுட்டிக்காட்டி அந்த ஹதீஸை மறுத்துவிடுகின்றார். 'இப்னு உமர் தான் கேள்விப்பட்ட ஹதீஸ் சரியானதா என்ற திட்பநுட்பத்தைக் கவனிக்கத் தவறிவிட்டார்' என ஆயிஷா மேலும் கருத்துரைத்தார்.(8) இன்னொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) கூறினார் என்ற இப்னு உமரின் ஓர் அறிவிப்பு குறித்து 'நான் சொல்வதை அவர்கள் (இறந்தவர்கள்) கேட்கிறார்கள்' என நபிகளார் கூற வில்லை; 'நான் சொல்வது உண்மையென்பதை அவர்கள் அறி வார்கள்' என்பதுதான் அவர்கள் நவின்றது' என ஆயிஷா அவரைத் திருத்தினார்.(9)

''ஹஜ்ஜின்போது கற்களை எறிந்துவிட்டு தலையை மழித்தபின் பெண்களும் நறுமணவாசனையும் தவிர மற்றெல்லாம் ஆகுமான தாகும்'' என உமர் கூறினார். அதனை மறுத்த ஆயிஷா ''இந்த விதிவிலக்கு பெண்களுக்கு மட்டுமே பொருந்தும். நபிகளார் இஹ்ராம் உடையில் இருந்தபோது நானே நபிகளாருக்கு நறு மணம் பூசிவிட்டேன்'' எனக் குறிப்பிடுகின்றார்.(10)

அலி (றலி) நபியின் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர் (வஸிய்) எனச் சிலர் குறிப்பிட்டனர். அவ்வேளை ஆயிஷா நாயகி, 'நபிகளார் எப்போது இந்த உயிலை செய்தார்கள்? அவர் மரணித்த வேளை, நான் அவருடனேயே இருந்தேன்' என்றார். மேலும் அவர் கூறியதாக அறிவிக்கப்படுகின்றது: ''நபிகளார் வாரிசுரிமை யாக எதனையும் விட்டுச் செல்லவில்லை.''(11)

ஹஜ்ஜுக்காக இரு பலியிடும் பிராணிகளைத் தான் அனுப்பி வைத்துள்ளதாகவும், 'ஹஜ்ஜுக்காக ஒரு பலியிடும் பிராணியை அனுப்பிவைத்தவர் ஹஜ் கடமைகளை நிறைவேற்றியவர் போலாவார்' என்ற இப்னு அப்பாஸின் கட்டளை குறித்து கருத் தறிய விரும்புவதாகவும், ஸியாத் இப்னு அபூ சுஃபியான், ஆயிஷா

*(றலி) வுக்கு எழுதினார். 'இப்னு அப்பாஸ் சொல்வது சரியன்று. நபிகளாரின் பலி பிராணிக்கான கழுத்துப் பட்டையை நானே தயாரித்தேன். நபிகளார் அதனை அபூபக்கருடன் அனுப்பி வைத்தார்கள். ஹஜ்ஜுக் காலத்தில் நபிகளார் எதனையும் தமக்கு ஆகுமானதல்லவென விலக்கிக் கொள்ளவில்லை' என ஆயிஷா அதற்குப் பதில் எழுதினார். இவ்விவகாரத்தில் மக்களின் குழப் பத்தைத் தீர்த்துவைத்த முதல் நபர் ஆயிஷாவே என அதனைப் பெரிதும் சிலாகிக்கின்றார் முஹம்மத் இப்னு ஷஹாப் அல்-ஸுஹ்ரி.*[12]

*ஒருமுறை அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் அஸர் தொழுகையின் பின் இரு ரக்அத்துகள் தொழக் கண்டு முஆவியா தனது அதிருப்தியை வெளியிட்டார். இவ்விவகாரம் ஆயிஷாவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவர் நபிகளார் தம்மைச் சந்திப்பதற்குத் தூதுக்குழுவொன்று வந்திருந்தபோது, தம்மால் நிறைவேற்ற முடியாது போன ளுஹருக்குப் பின்னரான ஸுன்னத் தொழுகையை, அஸர் தொழுகைக்குப் பின் தொழுதமையை சுட்டிக்காட்டினார்.*[13]

*அப்துல்லாஹ் இப்னு உமர் இஹ்ராம் உடையில் நறுமண வாசனையுடன் வியர்ப்பதை விரும்பவில்லை. (அதாவது இஹ்ராம் உடையில் தமது வியர்வையிலிருந்து நறுமணவாசனை வருவதை விரும்பவில்லை.) இது ஆயிஷா (றலி) விடம் குறிப்பிடப்பட்டது. அவர் கூறினார்: ''நான் நபிகளாருக்கு நறுமணவாசனை பூசி விட்டேன். அவர்கள் தம் மனைவியர்களிடம் சென்றார்கள். மறுநாள் இஹ்ராம் அணிந்து கொண்டார்கள்''.*[14]

*அப்துல்லாஹ் இப்னு உமர் ஒருமுறை நபிகளார் எத்தனை உம்ராக்கள் (சிறு ஹஜ்) நிறைவேற்றினார்கள் என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் ''நபிகளார் நான்கு உம்ராக்கள் நிறைவேற்றினார். மூன்று துல்கஃதா மாதத்தில் நிகழ்ந்தது. நாலாவது உம்ரா றஜப் மாதத்தில் நிகழ்ந்தது'' என்று குறிப்பிட்டார். 'நபிகளாரின் எல்லா உம்ராவும் துல் கஃதா மாதத்திலேயே நிகழ்ந்தன' என ஆயிஷா (றலி) இப்னு உமரின் அறிவிப்பைத் திருத்தினார்.*[15]

''திடீர் மரணம் உண்மையில் விசுவாசிகளுக்கு சினமூட்டுவதாகும்'' என்ற அப்துல்லாஹ் இப்னு உமரின் அறிவிப்பைக் கேள்விப்பட்டபோது ஆயிஷா கூறினார்: 'நபிகளார் உண்மையில் கூறியது: 'திடீர் மரணம் விசுவாசிகளுக்குத் துன்பத்தைக் குறைக்கும் நிராகரிப்பாளர்களுக்கு சினமூட்டும்' என்பதாகும்.(16)

''பிலால் உண்மையில் இன்னும் இரவாக இருக்கும்போதே தொழுகைக்கு அழைப்பு விடுக்கின்றார். நீங்கள் அப்துல்லாஹ் இப்னு உம் மக்தூம் தொழுகைக்கு அழைப்பு விடுக்க வரும்வரை உண்ணவும் பருகவும் முடியும்'' என நபிகளார் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு உமர் குறிப்பிட்டார். நபி (ஸல்) கூறியதைப் பிழையாக அறிவித்துள்ளார் என ஆயிஷா (றலி) இப்னு உமரைக் கடிந்துகொண்டதுடன், அவ்வறிவிப்பைப் பின்வருமாறு திருத்தினார்: ''இப்னு உம் மக்தூம் பார்வை தெரியாதவர். பிலால் தொழுகைக்கு அழைப்பு விடுக்கும்வரை உண்ணவும் பருகவும் செய்யுங்கள்'' என்று நபிகளார் கூறினர்.(17) (உம்மி மக்தூம் கண் பார்வையின்மை காரணமாக சுபஹுத் தொழுகைக்கு அழைப்பு விடுப்பதற்கு சரியான நேரத்தை அறிந்துகொள்ள முடியாமல் உரிய நேரம் வருவதற்கு முன்பே அழைப்பு விடுத்துவிடுகின்றார் என்ற அர்த்தத்திலேயே நபிகளார் இதனைக் கூறினர்.)

''உண்மையில் ஒருமாதம் இருபத்தொன்பது நாட்களைக் கொண்டதாகும்'' என நபிகளார் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு உமர் அறிவித்தார். இதைச் செவியுற்ற ஆயிஷா (றலி), 'அல்லாஹ் இப்னு உமரை ஆசீர்வதிப்பானாக! நபிகள் அவ்வாறு சொல்லவில்லை. 'ஒரு மாதம் இருபத்தொன்பது நாட்களைக் கொண்டதாகவும் இருக்க முடியும்' என்பதே நபிகளார் சொன்னது'' என அதனைத் திருத்தினார்.(18)

''பெண்கள் குளிக்கும்போது கூந்தலை அவிழ்த்துவிட வேண்டும்'' என அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் நியமம் செய்தார். இச்செய்தி ஆயிஷாவை வந்தடைந்தபோது அவர் கூறினார்: ''இது என்ன விசித்திரம்! பெண்கள் கூந்தலை முற்றாக மழித்து விட வேண்டுமென அவர் உத்தரவு பிறப்பித்திருக்கலாமே!

ஒரே பாண்டத்திலிருந்து நபிகளாருடன் நான் குளிப்பதுண்டு. மூன்று பாத்திரங்களுக்கு மேல் நான் தலையில் நீர் ஊற்றிய தில்லை; கூந்தலை நான் அவிழ்த்துவிட்டதில்லை.''[19]

''வித்றுத் தொழுகையைச் சேர்த்துக் கொள்ளாதவரின் தொழுகை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது'' என நபிகளார் கூறியதாக அபூ ஹுரைரா அறிவித்தார். அன்னை ஆயிஷா (றலி) அது குறித்துக் கூறினார்: ''இதனை நபியிடமிருந்து கேட்டவர் யார்? நபிகளாரின் காலம் இன்னும் எம்மைவிட்டுத் தூரமாகி விடவில்லை. அவர்கள் கூறியதை நாம் மறந்துவிடவில்லை. வுழூ செய்தல், உரிய நேரத்தில் தொழுதல், தொழுகையில் குறையேற் படாமல் ருக்கூவையும் சுஜூதையும் ஒழுங்காக நிறைவேற்றல் முதலிய பேணுதல்களோடு ஐங்காலத் தொழுகையைச் சிறப்பாக நிறை வேற்றுபவரை ஒருபோதும் தண்டிக்க மாட்டேன் என அல்லாஹ் வாக்களித்துள்ளான். தொழுகையில் குறைபாட்டுடன் வருபவரைத் தண்டிப்பதும் மன்னிப்பதும் அல்லாஹ்வையே பொறுத்தது.''[20]

அபூ ஹுரைரா கூறினார்: (ஜனாஸாவுக்குரிய கடமையாக) ஜனாஸாவை (இறந்தவரின் உடலை) குளிப்பாட்டுகின்றவர். அதன்பின் கட்டாயமாகக் குளித்தல் வேண்டும். ஜனாஸாவைச் சுமந்து செல்பவர் அதன்பின் கட்டாயமாக வுழூ செய்ய வேண்டும்.''[21] 'முஸ்லிம் சமூகத்தில் மரித்தோர் தூய்மையில் லாதவர்களா?' என வினவிய ஆயிஷா நாயகியின் எதிர்வினை அபூ ஹுரைராவின் கூற்றை மறுதலிப்பதாக அமைந்தது.

## அபூ ஹுரைராவின் அணுகுமுறை

காலையில் கண்விழித்தெழும்போது குளிப்பு கடமையானவர் நோன்பு நோற்கக்கூடாதென அபூ ஹுரைரா கூறினார். அதைச் செவியுற்ற ஆயிஷாவும் உம்மு ஸலாமாவும் ''நபிகளார் அடிக்கடி குளிப்பு கடமையான நிலையில் காலையில் கண்விழிப்பார்கள். தம்மை சுத்திகரித்துக் கொள்ளும் முன்பாகவே நோன்பு நோற்கத்

தொடங்கிவிடுவார்கள்'' என அறிவித்தார்கள். தான்விட்ட தவறுக் காக வருந்திய அபூ ஹுரைரா தனக்கு அதனை அறிவித்தவர் யாரெனக் குறிப்பிட்டு அதனை மீளப்பெற்றுக் கொண்டார்.(22)

## அல்-கைர் அபாதியின் உதாரணம்: ஓர் விமர்சனம்

ஒன்றுக்கொன்று முரணாகத் தோன்றும் இரு ஹதீஸ்களை அல்-கைர் அபாதி முன்வைக்கின்றார்.

''நபிகளார் ஒரு வழக்கை சத்தியப் பிரமாணத்தின் அடிப்படை யிலும் சாட்சியின் அடிப்படையிலும் தீர்த்துவைத்ததாக அப்துல் லாஹ் இப்னு அப்பாஸை ஆதாரமாகக் கொண்டு அறிவிக்கப் படுகின்றது.''(23)

அப்துல்லாஹ் இப்னு மசூதின் ஆதாரத்தில் இன்னொரு ஹதீஸ் அறிவிக்கப்படுகின்றது: ''அல்-அஷ்அத்-இப்ன் கைஸ் கூறினார்: எனக்கும் (ராபியா இப்னு இஃஃப்தான் என்ற) இன்னொருவருக்கு மிடையே ஒரு கிணறு சம்பந்தமாகத் தகராறு ஏற்பட்டு நாம் வழக்கை நபிகளாரிடம் கொண்டுசென்றோம். அவர்கள் (வழக்காளி யிடமிருந்து) இரு சாட்சிகள் அல்லது பிரதிவாதியிடமிருந்து சத்தி யப் பிரமாணம் (வேண்டும்) என்றார்கள்''.(24)

இவ்விரு ஹதீஸ்களுக்குமிடையில் உடன்பாடு காணல் கடின மல்ல வெனினும் ஒன்றோடொன்று முரண்படுவதாவே தெரி கின்றது. இப்னு அப்பாஸுடைய அறிவிப்பு குறிப்பிடும் விவகார மும் இப்னு மஸ்ஊதுடைய அறிவிப்பு குறிப்பிடும் விவகாரமும் வெவ்வேறான தாய்த் தெரிகின்றது. அத்துடன் ஒரு நீதிபதி வாதியிடம் அல்லது பிரதிவாதியிடம் ஒன்று அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சாட்சிகளைக் கொணருமாறு கேட்கக் கூடும். பிரதிவாதியைப் பொறுத்தவரை சத்தியப் பிரமாணத்தின் மூலம் மட்டுமே நீதிபதி வழக்கைத் தீர்மானிக்கக் கூடும். இவை யாவும் வழக்கின் தன்மையைப் பொறுத்தவை. குறிப்பிட்ட வழக்காளியிடம் நபிகளார் சாட்சிகளைக் கொணருமாறும் சத்தியப் பிரமாணம் செய்யுமாறும் கேட்டிருந்தால் வழக்கின் தன்மையைப்

பொறுத்து அவர்கள் அவ்வாறு செய்திருப்பார்கள். முறையீட்டாள ரிடமிருந்து இரு சாட்சிகள் அல்லது பிரதிவாதியிடமிருந்து சத்தியப் பிரமாணம் என நபிகளார் கோரியிருந்தால் சம்பந்தப்பட்ட வழக்கைச் சீர்தூக்கிப் பார்த்தே அவர்கள் அவ்வாறு முடிவுசெய்தி ருப்பார்கள் எனக் கொண்டு இவ்விரு அறிவிப்புகளும் வெவ்வேறு தன்மை வாய்ந்த வெவ்வேறு நிலைமைகளுக்குரிய இருவேறு வழக்குகள் சம்பந்த மானவை என அனுமானிக்கலாம்.

## ஹதீஸ்களை ஒப்புநோக்கல்: மிக நுட்பமான பணி

ஒருவிடயம் குறித்த ஒன்றுக்கொன்று முரண்படும் பல்வேறு ஹதீஸ்களை ஒப்புநோக்கல் என்பது மிகக் கடினமான ஒரு காரியம். ஒரு ஹதீஸ் இன்னொரு ஹதீஸுக்கு முரணானதென்ற காரணத்தால் அதனை நிராகரிப்பதெனில் அதற்கு வலுவான காரணங்கள் வேண்டும். முரண்பாடுகள் தென்படும்போது முதற் பணி மோதலைக் களைவதற்கான அறிவுபூர்வமான விளக்கங் களை வளர்த்தெடுத்தலாகும். இது சாத்தியமற்றதாய் முரண்படும் அறிவிப்புகளுக்கிடையே உடன்பாடு காணல் முடியாத காரிய மாகத் தோன்றின் எந்த ஹதீஸை நம்ப முடியாததெனப் புறமொதுக்குவது என்பதை மிகக் கவனமாய்த் தீர்மானிப்பதே உசி தமாகும். இதில் அறிவுபூர்வமான ஆய்வும் விசாரணையும் பெரும் பங்கு வகிக்கின்றது. இதனை மனங்கொண்டே 'அறிவுபூர்வமாய் ஆதாரப்படுத்தல்' என்ற தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இது இரண்டாவது அளவுகோலாய் அமைகின்றது. சில உதார ணங்கள் கீழே தரப்படுகின்றன:

### 1. வாழ்வாதாரமாய் நித்தியமாய் வைக்கப்பட்டுள்ள அளவும் ஒருவரின் ஆயுளும்

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊதின் ஆதாரத்தில் பின்வரும் ஹதீஸை இமாம் முஸ்லிம் பதிவுசெய்துள்ளார்:

நபியின் மனைவியருள் ஒருவரான உம்மு ஹபீபா ''யா அல்லாஹ்! நபியான என் கணவருடனும் என் தந்தை அபூ

*சுஃபியானுடனும் என் சகோதரர் முஆவியாவுடனும் மகிழ்வாய் இருப்பதற்கு அருள்புரிவாயாக!'' என்று பிரார்த்தித்தார். அப்போது நபிகளார் ''நீங்கள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்ட ஆயுள், மட்டிடப்பட்ட நாட்கள், ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்பட்டு விட்ட வாழ்வாதாரங்கள் என்பன குறித்து அல்லாஹ்விடம் கேட்கின்றீர் கள். குறித்த நேரம் வரும்வரை எதுவும் நடைபெறப்போவ தில்லை. தீர்மானிக்கப்பட்டுவிட்ட திட்டத்தின்பின் எதுவும் நிகழப்போவதில்லை...'' என அவரிடம் கூறினார்.*[25]

இந்த ஹதீஸின்படி முன்தீர்மானிக்கப்பட்டுவிட்ட திட்டத்தின் படியன்றி எதுவும் நிகழாது. எனவே ஒருவரின் வாழ்வாதாரத்தை அதிகரிப்பதற்கும் வாழ்நாளை அதிகரிப்பதற்கும் வழியில்லை. இதனாலேயே நீண்ட ஆயுளை வேண்டியும் வருமானம் அதிகரிக்க வேண்டியும் பிரார்த்திக்க வேண்டாமென நபிகளார் அறிவித் துள்ளார்கள். எனினும் இந்த ஹதீஸ் அனஸ் இப்னு மாலிக்கின் மேற்கோளுடன் அறிவிக்கப்பட்டுள்ள இன்னொரு ஹதீஸுடன் முரண்படுகின்றது:

*''என் அன்னை என்னை நபிகளாரிடம் ஒரு பணியாளாக ஒப் படைத்து எனக்காகப் பிரார்த்தனை செய்யுமாறு வேண்டினார்கள். நபிகளார் 'யா அல்லாஹ்! இவரது செல்வத்தையும் சந்ததியையும் அதிகரிப்பாயாக! நீ அவருக்கு அருளியதை (அதாவது வயதை) யும் அதிகரிப்பாயாக!' என்று பிரார்த்தித்தார்கள்''.*[26]

இவ்விரு ஹதீஸ்களுக்கிடையே உடன்பாடு காணல் சாத்திய மற்ற தாய்த் தோன்றுகிறது. உம்மு ஹபீபா சம்பந்தப்பட்ட ஹதீஸ் இரு காரணங்களால் சந்தேகத்துக் குரியதாகின்றது. முதலில், இது நபிகளாரின் வாய்மொழியென - ஹதீஸாக - அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அனஸ் இப்னு மாலிக் அறிவித்ததோ நபிகளாரின் சொந்த நடைமுறை - ஸுன்னாஹ். ஒரு ஸுன்னாஹ்வுக்கும் ஹதீஸுக்கு மிடையே முரண்பாடு காணப்படின், இரண்டாவது குறிப்பிடப் பட்டதே - அதாவது ஸுன்னாஹ்வே- விருப்புத் தேர்வுக்குரிய தாகும் என முடிவுசெய்யலாம். இரண்டாவது, நபிகளாரின் பிரார்த் தனைகள் பற்றி அநேக அறிவிப்புகள் உள. அவற்றுள் ஒன்று

அளவுக்கதிகமான செல்வத்திலிருந்தும் அளவு கடந்த வறுமை யிலிருந்தும் விளையக் கூடிய தீங்குகளிலிருந்தும் பாதுகாப்பு தேடுவதாகும்.[27]

## *2. நோய் நிவாரணியாக ஒட்டகச் சிறுநீர் அருந்துமாறு நபிகளாரின் ஆலோசனை*

அனஸ் இப்னு மாலிக்கின் ஆதாரத்துடன் புஹாரியும் முஸ்லி மும் மற்றவர்களும் இந்த ஹதீஸைப் பதிவுசெய்துள்ளனர்:

உரைனா கோத்திரத்தைச் சேர்ந்த சிலர் நபிகளாரைச் சந்திக்க வந்தபோது சுவாத்தியநிலையின் ஒவ்வாமை காரணமாகச் சுகவீன முற்றனர். நபிகளார் அவர்களிடம் தர்மஞ் செய்யப்பட்ட ஒட்ட கத்தின் பாலையும் சிறுநீரையும் அருந்துமாறு கூறினார். அவர்கள் அவ்வாறு செய்ததால் குணமடைந்தனர்.[28]

ஒட்டகப் பாலிலும் நிறுநீரிலும் சில நோய்களுக்கு நிவாரண முண்டென இந்த ஹதீஸ் கூறுகின்றது. இங்கு எழும் கேள்வி ஒட்டகச் சிறுநீர் பலனளிக்கக்கூடியதா இல்லையா என்பதல்ல. அதனை அருந்துமாறு அவர்களிடம் நபி (ஸல்) கூறினரா என்பதுதான் பிரச்சினை. சிறுநீர் தடைசெய்யப்பட்டது. அதனை அருந்த முடியுமா என்பது ஒருபுறத்திருக்க அதன் நினைப்பே அருவருப்பூட்டுவதாகும். முறையே அபூ ஹுரைரா, அனஸ் இப்னு மாலிக் இருவரதும் பின்வரும் அறிவிப்பை புஹாரி, முஸ்லிம் இருவரும் பதிவுசெய்துள்ளனர்: ஒருமுறை ஒருமனிதர் மஸ்ஜிதில் சிறுநீர் கழித்துவிட்டார். அவ்விடத்தைத் தண்ணீரால் கழுவுமாறு நபிமணி பணித்தனர்.[29] அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் அறிவித் துள்ள இன்னொரு ஹதீஸின்படி சிறுநீரிலிருந்து சுத்தமடையாத ஒருவர் மறுஉலகில் வேதனை படுத்தப்படுவதாக நபிகளார் கூறினார்கள்.[30] அபூ ஹுரைரா அறிவித்துள்ள பிறிதொரு ஹதீஸின் படி தேங்கியுள்ள நீரில் சிறுநீர் கழிக்க வேண்டாமென்றும் அதில் குளிக்க வேண்டாமென்றும் நபிமணி அறிவித்துள்ளார்கள்.[31]

இந்த ஹதீஸ்கள் மூலம் சிறுநீர் அசுத்தமானது, சிறுநீர் படிந்த இடத்தைத் தண்ணீரால் கழுவிச் சுத்தஞ்செய்ய வேண்டுமென்பது

புலனாகின்றது. எனவே அதனை அருந்து மாறு மருத்துவக் காரணத் துக்காகவேனும் நபிகளார் முஸ்லிம்களுக்குக் கூறியிருப்பார்களா? மாலிக் இப்னு அனஸையும் அஹ்மத் இப்னு ஹன்பலையும் பின்பற்றுவோர், நபிகளார் சிறுநீர் அருந்தும்படி அறிவுறுத்தினார் கள் என்று கூறப்படுவதன் அடிப்படையில், ஹலாலான - ஆகு மான - பிராணிகளின் கழிவை, ஹலாலானதென்றும் தூய்மை யானதென்றும் கருதுகின்றனர்.(32) இது குருட்டுத் தனமான அணுகு முறை. சிறுநீர் தய்யிபாத் (நல்லது, தூய்மையானது) என்ற வகையினுள் அடங்குவதல்ல. அது கபாயித் (கெட்டது, அசுத்த மானது) என்ற வகையினுள் அடங்குவதாகும். நபிகளார் நல்ல தையும் தூய்மையானதையும் மட்டுமே சட்டபூர்வமாக்கினார் கள். நன்றல்லாததையும் அசுத்தமானதையும் சட்டவிரோத மாக்கினார்கள்.(33) ஒரு ஹதீஸ் அசலானது எனக் கருதப்படுவதற்கு அது புழக்கத்தில் இருப்பதுமட்டும் போதாது. யாரோ ஒருவர் தெரிந்தோ தெரியாமலோ 'பால்' (அல்-பானிஹா) என்ற சொல் லுக்குப் பக்கத்தில் சிறுநீர் (அப்-வாலிஹா) என்ற சொல்லைப் புகுத்தியிருக்க வேண்டும். நபிகளார் பாலுடன் சிறுநீரையும் அருந்துமாறு கூறியதாக அறிவுறுத்தும் ஹதீஸ் அரூசையாக, அருவருப்பூட்டுவதாகத் தோன்றுகிறது.

ஒட்டகச் சிறுநீரின் குணப்படுத்தும் தன்மை கருதியே உரைனா கோத்திரத்தாருக்கு ஒட்டகச் சிறுநீரை அருந்துமாறு நபிகளார் கூறியதாகச் சிலர் ஊகிக்கலாம். புண்கள், கொப்புளங்கள் போன்ற சரும வியாதிகளுக்கும் சில புற்றுநோய்களுக்கும் சிறுநீர் மருத் துவப் பலன் தருவதாய்க் கூறும் சில நவீன மருத்துவ ஆய்வுகளை யும் சிலர் குறிப்பிடலாம். இந்த ஆய்வுகள் இன்னும் விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை. சிறுநீரில் நச்சு கலந்த இரசா யனப் பொருள் உண்டென்பது நன்கறியப்பட்டதாகும். அதன் நச்சுத் தன்மை தீங்கு பயப்பதாகும். சிறுநீரின் தீங்குகள், அதன் பயன்களை விஞ்சியிருப்பின் அதனை நலம் பயப்பதாகக் கொள்ள முடியாது.

*''உம்மி நபியைப் பின்பற்றுவோரும், வேதநூல்களிலிருந்து -தௌராத், இன்ஜீலிலிருந்து - நபியைப் பற்றி அறிந்தோரும், அவர் நன்மையை, நீதமானதை ஏவுகிறார்; தீமையைத் தடுக்கின்றார்; தூய்மையானதை (தய்யிபாத்) அனுமதிக்கின்றார்; அசுத்தமான தைத் (கபாயில்) தடைசெய்கிறார்; மக்களை அவர்களது சுமை களிலிருந்து அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கிறார் என அறிவர். எனவே அவர்மீது நம்பிக்கை கொண்டோரும் அவரை மதிப் போரும் அவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஒளியைப் பின்பற்று வோருமே வெற்றியாளர்கள்.'' (7:157)* மக்காவில் அருளப்பட்ட ஸூறாவான அல் - அஃராப் (7) நபியின் நிலையை நன்கு தெளிவு படுத்துகின்றது. மேலே எடுத்தாளப்பட்ட ஹதீஸ் மதீனா கால கட்டத்தைச் சேர்ந்தது. மேலே குறிப்பிடப்பட்ட இறைவசனத் தின்படி தீயவை அசுத்தமானவை அனைத்திலிருந்தும் நபிகளார் மக்களைத் தடுக்க வேண்டியிருந்தது. தூயதையும் நல்லதையும் அவர்களுக்கு அறிவிக்க வேண்டியிருந்தது. ஒட்டகச் சிறுநீர் நல்லதா தூயதாவெனத் தீர்மானித்தாக வேண்டும். ஒட்டகச் சிறுநீர் நல்லதல்லாதவற்றின், அசுத்தத்தின் வகையைச் சேர்ந்தது என முன்னர் குறிப்பிடப்பட்டது. எனவே, நல்லதல்லாததை, அசுத்த மானதை அருந்துமாறு நபிகளார் ஒரு கூட்டத்தினர்க்குக் கூறினர் என்பது கற்பனைக்கெட்டாததாகும். ஒட்டகச் சிறுநீர் நல்லது, தூயது எனக் கருதும் முஸ்லிம் அறிஞர்கள் இந்த ஹதீஸை அடிப் படையாகக் கொண்டே அவ்வாறு முடிவு செய்திருப்பர். அறிஞர் கள் சிறுநீரின் பொதுத் தன்மையையும், குர்ஆன் குறிப்பிடும் நபிகளாரின் கடமையையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

ஒட்டகப் பாலை அருந்துமாறு மட்டும் உரைனா கோத்திரத் தார்க்கு நபிகளார் கூறியிருக்கக்கூடும். ஆனால் அந்நோயாளிகள் ஒட்டகப் பாலுடன் சிறுநீரையும் சேர்த்து அருந்தியிருக்கவும் கூடும். அவர்கள் குணமடைந்தபோது ஒட்டகச் சிறுநீரின் 'மகிமை' குறித்து செய்தி பரவியிருத்தல் கூடும். விசித்திரம் என்னவென்றால், நபித்தோழர்களின் வரலாற்றில் ஒட்டகச் சிறு நீரின் மருத்துவச் சிறப்புப்பற்றி யாதொரு குறிப்பும் இல்லை. நபிகளாரின் அறிவுரையில் ஒட்டகச் சிறுநீர் ஓர் அம்சமாக

இடம்பெற்றிருப்பின் அது ஏதோவொரு வகையில் முஸ்லிம்களின் மருத்துவ வரலாற்றில் இடம்பிடித்திருக்கும். ஒட்டகச் சிறுநீரின் மருத்துவ 'மகிமை' பற்றிய முஸ்லிம் உலக மருத்துவர்களின் மௌனமே அதன் தகைமைக்கு தக்க சான்று.

### 3. அடிமைமீது அபாண்டமாய் விபசாரக் குற்றம் சாட்டுவது குற்றமல்ல:

''தனது அடிமை விபசாரம் புரிந்ததாக அபாண்டமாய்ப் பழி சுமத்துபவருக்கு - அவர் சொன்னது உண்மையாய் இராவிடின் - மறுமையில் 'ஹத்' தண்டனை உண்டு'' என்ற ஹதீஸை அபூ ஹுரைராவின் ஆதாரத்தில் புஹாரியும் முஸ்லிமும் மற்றவர்களும் பதிவுசெய்துள்ளனர்.(34) 'சுதந்திரமான ஒருவர் தனது (ஆண் அல்லது பெண்) அடிமை விபச்சாரம் புரிந்ததாய் அவதூறு கூறினும், அவர் தண்டனையிலுருந்து விடுதலை பெற்றவராவார்' என அறிஞர்கள் மத்தியில் உடன்பாடு காணப்படுவதாய் அல்-முஹல்லப் (ம. ஹி. 82) அபிப்பிராயப்படுகிறார். இக்கருத்து தண்டனை மறுமையில் உண்டு எனக் கூறும் மேலே குறிப்பிட்ட ஹதீஸை அடிப்படை யாகக் கொண்டது. எஜமானுக்கும் அடிமைக்கும் வித்தியாசமுண்டு என்பதைக் காட்டுவதற்காகவே தண்டனை மறுமைக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளதாய் அவர் வாதிடுகின்றார்.(35) அவதூறு கூறல் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம். இக்குற்றத்தைப் புரிவோர் யாராயிருப்பினும் தண்டிக்கப்படல் வேண்டும். பாதிக்கப்பட்டவர் அடிமையென்ற காரணத்தால் குற்றவாளியைத் தப்பிச் செல்ல விடுதல் நியாயமன்று. பாரபட்சமான இத்தீர்ப்பு முஹல்லபுக்குத் திருப்தியளிக்கின்றது. எனவேதான் எஜமானனுக்கும் அடிமைக்கு மிடையே வேறுபாட்டை அவர் குறிப்பிடுகின்றார். இது சம்பந்த மாய் அறிஞர்கள் மத்தியில் உடன்பாடு காணப்படுவதாக அவர் உரிமை கூறுவதை இப்னு ஹஜர் மறுக்கின்றார். குற்றஞ்சாட்டப் பட்டவர் எஜமானாய் இல்லையெனில் அவர் அவதூறு கூறிய குற்றத்திற்கான தண்டனை (80 கசையடி) இவ்வுலகிலேயே விதிக்கப்படுவதை ஹஸன் அல்-பஸ்ரியும் (ம. ஹி. 110) மற்றோரும் ஆதரிப்பதை அவர் குறிப்பிடுகின்றார்.

அப்துல்லாஹ் இப்னு உமர் கொண்டிருந்த நிலைப்பாட்டையே இந்தக் கட்டளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதனை நாஃபி (ம.ஹி. 117) அறிவிப்புச் செய்கின்றார். 'ஒருவரின் அடிமைப் பெண்மீது இன்னொருவர் அவதூறு கூறியது சம்பந்தமாய் அபிப் பிராயம் கேட்கப்பட்டபோது, அப்துல்லாஹ் இப்னு உமர் ''அவ மானப்படுத்தலாக அவருக்குத் தண்டனை வழங்கப்படும்'' என்றார்.(36) எஜமான் அல்லாத ஒருவர் சட்டத்தின் முன் நிறுத்தப் படுவார்; ஆனால் எஜமான் தப்பிவிடுவார் என்னும்போது ஒரு கேள்வியெழுகின்றது: இவ்விரு வழக்குகளிலும் பாதிக்கப்பட்ட வர் ஓர் அடிமை. அடிமைமீது அபவாதம் கூறிய எஜமானின் விடுதலை உம்மாவின் உடன்பாட்டைப் பெற்றுள்ளதென அந்-நவவி முடிவுசெய்கிறார். அடிமை மீது அபாண்டம் சுமத்தும் ஒருவர் 'ஹுதூத்' சட்டத்தின்படியன்றி நடைமுறையிலுள்ள பொது வான தண்டனை சட்டத்தின்படி (தஃஸீர்) தண்டிக்கப்படல் வேண்டுமென அவர் ஆலோசனை கூறுகிறார்.(37)

அந்-நவவியின் நிலைப்பாட்டில் இரண்டு பிரச்சினைகள் எழு கின்றன: ஒன்று, மேலே கூறப்பட்ட ஹதீஸின்படி அவதூறு கூறிய குற்றவாளி இவ்வுலகின் தண்டனையிலிருந்து தப்பிவிடுகிறா ரென்றால், அவரைத் தண்டனைக்குள்ளாக்க முடியாது. ஏனெனில், மறுமையிலன்றி அவர் தண்டிக்கப்படுவதற்கு வேறு வழியில்லை. இரண்டாவது, நடைமுறையிலுள்ள தண்டனைச் சட்டத்தின்படி (தஃஸீர்) அவர் தண்டிக்கப்பட முடியுமெனில், அவர்மீது இந்த உலகிலேயே 'ஹுதூத்' சட்டத்தை நிறைவேற்றுவதில் என்ன பிரச்சினை? பரிசீலிக்கப்படும் ஹதீஸ் ஆதாரபூர்வமானதென ஏற்றுக்கொள்ளப்படின் குற்றவாளியைத் தண்டனைக்குள்ளாக்க யாராலும் இயலாது. அவதூறு சொன்னவரை சட்டத்தின்முன் நிறுத்தி தண்டிப்பதாயின் இந்த ஹதீஸ் நம்பமுடியாததென நிராகரிக்கப்படல் வேண்டும்.

எஜமான் திருமண பந்தத்துக்கு வெளியே உறவுகொண்டி ருந்தாரென அவர்மீது அடிமை குற்றம் சுமத்தினால் அந்த அடிமை தண்டனைக்குள்ளாவார். ஆனால், எஜமான் அடிமை மீது

அபாண்டப் பழி சுமத்தினால் அவர்மீது விசாரணையில்லை. ஏன் இந்த ஓரவஞ்சம்? மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே ஏன் இந்த ஏற்றத்தாழ்வு? இது மனிதவர்க்கத்தையே அவமதிப்பதாக இல்லையா? அடிமைகளும் மனிதர்கள்தான். அவர்களுக்கும் தன்மானம், சுயகௌரவம் உண்டு. சுதந்திர மனிதர்களுடன் அடிமையைச் சரிநிகர்சமானமாய்க் கருதும் ஹதீஸ்கள் பல உள. நபி (ஸல்) அபூ தர் (றலி)க்கு வழங்கிய பின்வரும் அறிவுரை புஹாரியாலும் முஸ்லிமாலும் மற்றவர்களாலும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

''அவர்கள் (அடிமைகள்) உங்கள் சகோதரர்களாவர். அல்லாஹ் அவர்களை உங்களின் பொறுப்பில் வைத்துள்ளான். நீங்கள் உண்பதிலிருந்தே அவர்களுக்கு உணவளியுங்கள். நீங்கள் உடுப்பதிலிருந்தே அவர்களுக்கு உடையளியுங்கள். அவர்களால் சுமக்க முடியாத பளுவை அவர்கள்மீது சுமத்தாதீர்கள். அவர்களுக்குக் கடினமான வேலையை வழங்கினால் அதில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்.''[38]

இந்த ஹதீஸில் நபி (ஸல்) அடிமைகளை எஜமானரின் சகோதரர்களாகக் குறிப்பிட்டு, அவர்களை சரி சமமாக நடத்தும்படி அறிவுறுத்துகிறார்கள். அப்படியாயின் குற்றத்துக்குத் தண்டனை வழங்கும்போது எஜமானனுக்கும் அடிமைக்கும் இடையில் பாரபட்சம் காட்டமுடியாது. இப்னு உமரின் ஆதாரத்துடன் இமாம் முஸ்லிம் பின்வரும் ஹதீஸைப் பதிவுசெய்துள்ளார்கள்: ''ஒருவர் தன் அடிமையை கன்னத்தில் அறைந்தால் அல்லது அடித்தால் அதற்குப் பரிகாரம் அவர் அந்த அடிமையை விடுதலை செய்தலாகும்'' என்று நபி (ஸல்) கூறினர்.[39]

இங்கு இந்த ஹதீஸ், எஜமான் தன் அடிமையின் உடலில் காயத்தை உண்டுபண்ணினால் அந்த அடிமையை அவர் விடுதலை செய்ய வேண்டியதை அவர்மீது கடமையாக்குகின்றது. அடிமைக்கு விடுதலை வழங்குவதென்பது அவருக்குப் பொருளாதார நட்டத்தை உண்டுபண்ணுவதாகும். ஆக, எஜமான் தன் அடிமை மீது அபாண்டமாய் விபச்சாரக் குற்றம் சாட்டினால் அதற்கவர்

எதுவும் செய்யத் தேவையில்லை என்பது என்ன நியாயம்? கன்னத்தில் அறைவது உடலுக்கு ஊறுவிளைவிக்கலாம். ஆனால் அவதூறு கூறுவது உள்ளத்துள் ஊறு விளைப்பது. உள்ளத்துள்ளான புண் இலகுவில் ஆறுவதில்லையல்லவா?

அவதூறு கூறிய குற்றத்திலிருந்து எஜமானுக்கு விடுதலை வழங்கும் இந்த ஹதீஸ் அவருக்கான 'ஹுதூத்' தண்டனை மறுமையில் நிறைவேற்றப்படும் என்கிறது. ஹுதூத் சட்டங்கள் இம்மைக்குரியன; மறுமைக்குரியனவல்ல. அங்கு அல்லாஹ் வினால் விதிக்கப்பட்ட வேறு தண்டனைகள் இருக்கின்றன. மறுமையின் தண்டனையிலிருந்து தப்பிக்கொள்ளவும் அவருக்கு வேறு வழி இருக்கின்றது. இறப்பதற்கு முன் அவர் செய்த பிழைகளுக்காக வருந்தி பிராயச்சித்தம் தேடமுடியும். எனவே, இந்த ஹதீஸ் உலகில் பெறவேண்டிய தண்டனையிலிருந்து அவரை விடுவித்து விடுகின்றது. பிராயசித்தத்தின் மூலம் மறுமை யிலும் அவர் சலுகை பெற்றுக் கொள்கின்றார். 'ஹுதூத்' சட்டங் கள் நிறைவேற்றப்படுவதை பிராயசித்தத்தினால் தடுத்துவிட முடியாதென்பது நிறுவப்பட்ட உண்மையாகும். காமிதிய்யாஹ் (என்ற பெண்மணி) பாபமன்னிப்பு கேட்டு பிராயச்சித்தம் வேண் டினார். எனினும் மரண தண்டனையிலிருந்து அவருக்கு விடுதலை வழங்கப்படவில்லை.(40)

### 4. குருதியகல்வு (ஹிஜாமா) செய்யும் தொழிலுக்கான கண்டனம்

''தீய வருமானம் என்பது விபச்சாரம், நாய்களை விற்றல், குருதி யகல்வு (ஹிஜாமா) சிகிச்சை முதலியவற்றால் வருவதாகும்.'' என்ற ஹதீஸ் ராஃபி இப்னு கதீஜ் உடைய அறிவிப்பில் புஹாரி தவிர்ந்த முஸ்லிம் மற்றும் ஏனைய தொகுப்பாளர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது.(41)

இந்த ஹதீஸ் மற்றையவற்றுடன் குருதியகல்வு சிகிச்சையை யும் தடைசெய்கின்றது. நவவி சொல்வதுபோல் இவ் விவகாரம் குறித்து இருவித அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. ஒருசாரார் இது தடைசெய்யப்பட்டுள்ளதாகக் கருதவில்லை. மறுசாரார் மேலே

குறிப்பிட்ட ஹதீஸின் அடிப்படையில், அடிமைகள் தவிர்ந்த சுதந்திர மனிதர்க்கு இத்தொழில் தடைசெய்யப்பட்டுள்ளதாகக் கருதுகின்றனர்.(42)

அறிவிப்பாளர் தொடர் ஆதாரபூர்வமானதாக இருப்பின் எந்த வொரு ஹதீஸையும் ஆதாரபூர்வமானதாய்க் கருதும் அளவு கடந்த ஆர்வமே இவ்விவகாரத்தில் சர்ச்சையேற்படக் காரணமென்பது இங்கு புலனாகின்றது. அல்-கத்தாபி (ம. ஹி. 388), இப்னு அப்துல் பர்ர் இருவரும் இதன் அறிவிப்பாளர் தொடர் (ஸனத்) பல வீனமானதென அறிவித்துள்ளனர்.(43)

புஹாரியும் முஸ்லிமும் மற்றவர்களும் பதிவுசெய்துள்ள பின் வரும் ஹதீஸ் குருதியகல்வு சிகிச்சை முறையை அனுமதிக்கின் றது: ‘‘நபிகளார் குருதியகல்வு செய்துகொள்ள அபூ தய்யிபாவை அழைத்தார்கள். சேவைக்குப் பிரதியாக இரு கிண்ணங்கள் நிறைய தானியங்களை வழங்கினார்கள். பின்னர் ‘குருதியகல்வு செய்தல் சி றந்த மருத்துவம்’ எனக் கூறினர்’’ என்று அனஸ் இப்னு மாலிக் அறிவிக்கின்றார்.(44)

நபி (ஸல்) அவர்களின் இத்தகு ஆதாரபூர்வமான நடைமுறை களின் பின்னணியில் குருதியகல்வு செய்யும் மருத்துவ முறையைத் தடைசெய்யும் ஹதீஸ் நம்ப முடியாததாக அமைகின்றது. குருதி யகல்வு செய்யும் சிகிச்சை முறையும், அத்தொழில் மூலம் வருவாய் ஈட்டலும் தடைசெய்யப்பட்டிருப்பின் நபி (ஸல்) அதற்காக ஊதியக் கட்டணம் செலுத்தியிருக்க மாட்டார்கள். இரண்டு ஹதீஸ் களுமே ஆதாரபூர்வமானவை எனக் கொண்டால், உம்மத்தினர் மத்தியில் தேவையற்ற பிளவுகளுண்டாகும். ஐக்கியத்தைக் குழைக் கும் எதனையும் நபிகளார்மீது சாட்டல் தகுமானதல்ல.

**5. கவிதைக்குக் கண்டனம்:**

‘‘கவிதையால் ஒருவரின் வயிறு நிரப்பப்படுவதைவிட கக்கப் பட்ட வாந்தியாலும் இரத்தத்தாலும் நிரப்பப்படுவது நலம்’’ என நபிமணி (ஸல்) கூறியதாக ஒரு ஹதீஸை அபூ ஹுரைராவினதும் மற்றோரினதும் அறிவிப்பில் இமாம் முஸ்லிம் பதிவுசெய்துள்ளார்.

*(இமாம் புஹாரியும் மற்றோரும் கூட இதனைப் பதிவு செய் துள்ளனர்.)[45] இந்த ஹதீஸ் ஆயிஷா (றலி) அறிவித்துள்ள ஆதார பூர்வமான ஒரு ஹதீஸுடன் முரண்படுகின்றது. ''என்னைக் கேலியும் இழிவும் செய்யும் கவிதைகளால் வயிற்றை நிரப்புவதை விட வாந்தியெடுக்கப்பட்டவையாலும் இரத்தத்தாலும் வயிற்றை நிரப்புதல் நலம்'' என்பதுதான் நபிகளார் சொன்னது என அறி வித்தார் ஆயிஷா.[46]*

*நபிகளாருடைய ஹதீஸ் பூரணமற்றதாக இங்கு எடுத்துரைக்கப் பட்டமை அவதானிக்கத்தக்கது. புஹாரியாலும் முஸ்லிமாலும் பதிவுசெய்யப்பட்டுள்ள ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர் வலு வானதாகக் காணப்பட்ட போதிலும், இதன் வாசகத்தில் குறை பாடு காணப்படுகின்றது. இந்த ஹதீஸ் திருத்தப்பட்டிரா விடின், நபி (ஸல்) கவிதையை வெறுத்ததாகவும் அதனை ஒதுக்கித் தள்ளுமாறு கூறியதாகவும் முஸ்லிம் உம்மத்தினர் நம்பத் தலைப் பட்டிருப்பர். நபியவர்களின் கவிஞரான ஹஸன் இப்னுத் தாபிதின் சிறப்பினைக் கூறும் ஹதீஸ்கள் புஹாரியிலும் முஸ்லிமிலும் பதிவாகியுள்ளன. நபியின் பார்வையில் ஹஸன் இப்னுத் தாபிதின் முக்கியத்துவத்தை இந்த ஹதீஸ்கள் விவரிக்கின்றன. நபிகளாரைப் புகழ்ந்தும் எதிரிகளைக் கடிந்தும் கவிதை இயற்றுமாறு நபி (ஸல்) ஹஸனை உற்சாகப்படுத்தினார்கள்.[47]*

# *05*

# பகுத்தறிவின் மூலம் ஹதீஸை ஆதாரப்படுத்தல்

*மனிதனின் உயிர்வாழ்வில் பகுத்தறிவு முக்கிய பங்கு வகிக்கின்றது (2:170). அவன் பூமியில் சிகரத்தைத் தொடுவதற்கு அறிவே அவனின் சக்திவாய்ந்த ஆயுதம் (2:30-38). அதனையவன் சரியாகப் பிரயோகிப்பதன் மூலம் அவனால் அவனது மானிடத் தன்மையைப் பேணமுடிகிறது (2:10). அதன் தவறான பிரயோகம் அல்லது துஷ்பிரயோகம் அல்லது பயன்படுத்தாமை பிற சீவராசிகள்மீது அவனது ஆதிக்கத்தைக் குறைத்துவிடுகின்றது (8:22). அதேவேளை, சுயமான சிந்தனை இல்லாவிடின் அவன் மிருக நிலைக்குத் தாழ்ந்துவிடுகிறான் (7:179) அல்-குர்ஆன் எந்தளவுக்கு அறிவு ஜீவிதத்தை வலியுறுத்துகிறதெனில், அதன் வழிகாட்டலின்றி உண்மையான இறைநம்பிக்கையும், நல்லமல்களும் (நற்கருமங்களும்), சாத்தியமில்லையென (67:10) அது கூறுகின்றது.*

*உண்மையில், அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதர்கள் ஒவ்வொருவரும் மக்களின் பகுத்தறிவைத் தூண்டிவிட்டே அவர்களை இறைத்தூதின் பக்கம் அழைத்தனர் (2:44; 3:65; 7:169; 21:67). இறுதி நபியின் உம்மத்தினர்களது மெச்சத்தக்க பண்புகளில் ஒன்றுதான் கண்ணடைத்து காதடைத்துப் போய் அவர்கள்*

இறைத்தூதைப் புறக்கணியாமை *(25:73)*. விசுவாசிகள், இறை வெளிப்பாட்டை, விழிகளையும் செவிகளையும் அகலத் திறந்த வண்ணம், விழிப்புணர்வுடன், மன லயிப்புடன் செவிமடுத்தனர் என அல்-ஸமக்ஷரீ (ம. ஹி. 538) இறைவசனம் 25:73ஐ விளக்கும் போது கூறுகின்றார்.(1) இது இறை வெளிப்பாட்டை முடிந்தளவு திறம்பட விளங்கிக்கொள்வதற்காக தமது புலன்களைச் சரிவரப் பிரயோகம் செய்யும் நிலையைக் குறிக்கின்றது. ''அவர்கள் குர்ஆன்மீது சிந்தனையைச் செலுத்த மாட்டார்களா? அவர்களின் இதயங்கள் தாழிடப்பட்டுள்ளனவா?'' *(47:24)* என விளிக்கும் குர்ஆன், மக்களைச் சிந்தனை செய்யுமாறு (ததப்புர்) தூண்டுகின்றது. கற்பதற்கும் புரிந்துகொள்வதற்கும் பகுப்பாய்வதற்கும் விமர்சிப்ப தற்கும் குறித்தவொரு விவகாரத்தில் தீர்மானமெடுப்பதற்கும் உரிய கருவியாக இறை வசனம் 47:24 மனித இதயத்தைக் குறிப்பிடு கின்றது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அல்லாஹ்வின் கட்டளைகளைப் புரிந்துகொள்வதற்கு மனிதன் தன் சிந்தையைப் பயன்படுத்த வேண்டும். குர்ஆனை விளங்கிக் கொள்வதற்கு அறிவுபூர்மான ஆய்வுகள் அவசியம் என்பதே இதன் கருத்தானால் ஹதீஸ்களை விளங்குதற்கும் அறிவே கருவியாக அமைகின்றது.

## அறிவைப் பயன்படுத்துவதற்கான வரையறை

அறிவைப் பயன்படுத்தல் என்பதன் அர்த்தம் மனதை அதன் போக்கில் அலையவிட்டு அதன் எல்லைகளை மீறி அறிவைப் பிரயோகித்தல் அல்ல. அதன் பூரண சுதந்திரம் மனதைக் கெடுத்து விடும். அதனால் தாண்டமுடியாத எல்லைகளும் உண்டு. அப்படித் தாண்டினால் அதன் சமநிலை குழைந்துவிடும். மனமும் சிந்த னையும் ஒரு கட்டுக்கோப்புக்குள் இயங்க வேண்டும். ஹதீஸ் வாசகங்களை ஆராய்கையில் இது இன்னும் முக்கியமாகின்றது. இஸ்லாமிய நம்பிக்கை, அறிவு, ஞானம் முதலியவற்றுக்குக் கட்டுப்படாத, அல்லாஹ்வையும் றஸூலையும் விசுவாசிக்காத ஒரு மனம் இதற்குத் தகுதிவாய்ந்ததல்ல. உண்மையில் எவ்வித பாரபட்சமும் அறிவின் பிரயோகத்துக்குத் துணை பயப்பதில்லை.

குர்ஆன்மீதும் சுன்னாஹ் மீதும் குரோதம் பாராட்டுபவர், அவர் எவ்வளவுதான் அறிவாற்றல் மிக்கவராக இருந்தபோதிலும் குர் ஆனையும் ஸுன்னாஹ்வையும் அணுகுவதில் நியாயமாக நடந்து கொள்வாரென எதிர்பார்க்க முடியாது. எனவே, திட்டமாக அறிவுபூர்வ அளவுகோல் என்பது வெறும் அறிவாற்றலை மட்டும் குறிக்காது. அது அனைத்தும் தழுவிய முழுமையான ஒன்றாகும். இறை பக்தி ( அல்-தக்வா), நீதி (அல்-அத்ல்), நேர்மை (அல்-அமானாஹ்), உண்மை (ஸித்க்), நடுநிலைமை (அல்-வஸத்), மனத்தூய்மை (அல்-இஃக்லாஸ்) முதலிய இஸ்லாமிய பண்புகளை அடியொற்றி ஊகித்தறியும் ஆற்றல்கொண்ட ‘திடமான மனமும்’, ‘திடமான அறிவும்’ இதற்கு அவசியம். அறிவிக்கப்பட்ட ஹதீஸ் களின் தன்மையைத் தீர்மானிக்கும் அளவுகோலாக அறிவு பயன் படுத்தப்பட்டமைக்குச் சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன:

### *1. வளர்ந்த ஓர் ஆணுக்கு முலைப்பாலூட்டடல்*

முஸ்லிமும், (புஹாரி தவிர்ந்த) மற்றோரும் ஆயிஷா நாயகி யின் ஆதாரத்துடன் ஒரு ஹதீஸைப் பதிவுசெய்துள்ளனர்: அபீ ஹுதைஃபாவின் பராமரிப்பிலும் பாதுகாவலிலும் இருந்த ஸாலிம் என்பவர் அபூ ஹுதைஃபாவுடனும் அவரது குடும்பத்துடனும் வாழ்ந்து வந்தார். அபூ ஹுதை ஃபாவின் மனைவியான ஸஹ்லா பின்த் சுஹைல் ஒருநாள் நபிகளாரிடம் வந்து, ‘ஸாலிம் வாலிப பருவத்தை எட்டிவிட்டார். அவர் எங்களைப் பார்க்க வருகிறார். அவர் எம்முடன் இருக்கும் போதெல்லாம் அபூ ஹுதைஃபாவின் கண்களில் அதிருப்தியைக் காண்கிறேன்’ என்று கூறினார். அதற்கு நபியவர்கள் ‘‘அவருக்கு முலைப்பால் ஊட்டுவீராக. அப்போது நீர் அவருக்கு விலக்கப்பட்டவராக (ஹராமானவராக) ஆகிவிடுவீர். அபூ ஹுதைஃபாவின் மனதில் உள்ளது மறைந்துவிடும்’’ என அறிவுரை கூறினார்கள். எனவே அவர் திரும்பிச் சென்று ஸாலி முக்கு முலைப்பாலூட்டியதாகவும், அதன்பின் அபூ ஹுதைஃபா சங்கடப்படவில்லை யென்றும் ஸஹ்லா கூறினார்.(2)

அந்-நவவி இந்த ஹதீஸ் பற்றி கருத்துரைக்கும்போது ‘ஸஹா பாக்கள், தாபியீன்களின் காலத்திலிருந்து முஸ்லிம் உலகில்

அனைவரும் ஏற்றுக்கொண்ட கருத்து, முலைப்பாலூட்டும் காலம் இரண்டு வருடங்களாகும் எனக் கூறுகின்றார். பின்னர் மூன்று விதிவிலக்குகளைக் குறிப்பிடுகின்றார். அபூ ஹனிஃபா இரண்டரை வருடங்களையும் (அபூ ஹனீஃபாவின் மாணாக்கரான) ஸுபர் மூன்று வருடங்களையும் மாலிக் இப்னு அனஸ் இருவருடங்க ளுடன் சில தினங்களையும் குறிப்பிட்டுள்ளதாக விவரிப்பார் அவர். இவ்வளவையும் கூறிவிட்டு, ஸாலிமுடைய விவகாரம் விதிவிலக்கானதாகும்; இது ஸாலிமுக்கு மட்டும் பொருந்துவது என்கிறார்.[3] முஸ்லிமின் விளக்கவுரையாளரான இந்த அறிஞர், நபியவர்கள் ஸஹ்லாவுக்குச் சொன்ன அறிவுரையை அடிப்படை யாகக் கொண்டு, நபிகளாரின் மனைவியான ஆயிஷா, மற்றொரு மனைவியான உம்மு ஸலாமாவிடம் அவரது ஆண் அடிமையான அய்ஃபாவுக்கு முலைப்பாலூட்டுமாறு அறிவுரை பகர்ந்த இன் னொரு ஹதீஸை பொருட்படுத்தாது விடுகிறார்.[4] ஸாலிமின் விவகாரம் விதிவிலக்கானதொன்று எனில், அறிவிலும் விவே கத்திலும் நபிகளாரின் ஏனைய மனைவிகளைவிட சிரேட்டமான வரான ஆயிஷா, இதனை உம்மு ஸலாமாவுக்கு எவ்வாறு பரிந்து ரைப்பார்? எனினும், அந்-நவவி நபிகளாரின் மற்ற மனைவியர் களின் கருத்தையே தனது விருப்பத் தேர்வாகக் கொள்கிறார். உண்மையில் ஸாலிமுக்கு முலைப்பாலூட்டிய விவகாரமே சர்ச்சை க்குரியதாகத் தோற்றுகின்றது.

இந்த ஹதீஸிலிருந்து ஏதோவொரு தீர்வுக்கு வருவதற்கு முன் முதலில் இதில் அடங்கியுள்ள தகவல் அறிவுபூர்வமாக ஏற்றுக் கொள்ளக் கூடியதாவென முடிவுசெய்தல் வேண்டும். மனதில் எழும் முதல் கேள்வி ஸாலிமுக்கு முலைப்பாலூட்டியதாகச் சொல்லப்படும் ஸஹ்லாவிடம் அந்நேரம் முலைப்பால் இருந் ததா? ‘இல்லை’ என்பது விடையானால், இந்த ஹதீஸின் பவித் திரம் எவ்வகையிலும் பேணப்பட முடியாது. வரலாற்று நோக்கில் பார்த்தால் ஸஹ்லா பால்சுரப்பவராக இருந்திருக்க முடியாது. ஸஹ்லா பின்த் ஸுஹைலுக்கு ஹுதைஃபா மூலம் ஒரு குழந்தை மட்டுமே பிறந்தது. அவர்கள் அபிஸீனியாவில் இருந்தபோது நபித்து வத்தின் ஐந்தாவது ஆண்டில் அவர்களுக்குக் கிடைத்த

குழந்தை அது. அதேயாண்டு சுமார் ஒரு மாதத்தின்பின் மக்கா திரும்பிய அவர்கள், எட்டாண்டுகளின் பின் நபிகளார் மதீனா வுக்குப் புலம்பெயரும் வரை, மக்காவிலேயே தங்கினர். ஹதீஸில் குறிப்பிடப்படும் முலைப்பாலூட்டும் சம்பவம் மதீனாவில் நடந்த தாகும். அப்படியாயின், ஸஹ்லாவுக்கு குழந்தை கிடைத்ததி லிருந்து ஸாலிமுக்கு முலையூட்டியது வரை சுமார் 8 அல்லது 10 ஆண்டு இடைவெளி காணப்படுகின்றது.[(5)] வழக்கமாக பிரசவத் துக்குப் பின் ஒரு பெண்ணுக்குப் பால் சுரப்பது சுமார் மூன்றாண்டு வரை நீடிக்கக்கூடும். அப்படியானால் ஸாலிமுக்கு முலையூட்டிய தாகச் சொல்லப்படும் காலப்பகுதியில் அவருக்குப் பால் சுரந் திருக்க சாத்தியமே இல்லை. உடலியல் ரீதியாகப் பார்த்தால், கிரமமான முறையில் உறிஞ்சப்படின் வறண்ட மார்பிலிருந்து பால் போன்றதொரு திரவம் சுரக்கக்கூடும். இவ்வாறு நடந்திருக்கு மெனில், ஸஹ்லாவின் மார்பிலிருந்து பால்போன்ற - ஆனால் பால் அல்லாத - திரவம் சுரப்பதற்கு, ஸாலிம் பலநாட்கள் கடுமை யாக முயன்றிருக்க வேண்டும்.

அறிஞர்களின் முடிவின்படி முலைப்பால் மட்டுமே செவிலித் தாய் உறவை உறுதிப்படுத்த முடியுமே தவிர பால் போன்ற வேறேதும் திரவத்தால் அல்ல.

மேலும் ஸாலிமுக்கு முலையூட்டுவதற்கு அவர் தன் மார்பைத் திறந்து காட்ட வேண்டி யிருந்திருக்கும். வேறு வார்த்தைகளில் சொல்வதெனில், அவர் தனது அவுரத்தை (மறைக்கப்பட வேண் டிய பகுதியை) காட்ட வேண்டியிருந்திருக்கும். இஸ்லாம் இத னைத் தடைசெய்கின்றது. (24:31; 33:59). முகத்தையும் மணிக் கட்டுவரை கைகளையும் தவிர பெண்ணின் ஏனைய பகுதிகள் அவுரத் ஆகும். பெண்ணின் முகமும் கைகளும் பாதங்களும் கூட மறைக்கப்படல் வேண்டுமென்பதையிட்டு கருத்து வேற்றுமை உண்டெனினும் இதனைத் தவிர பெண்ணின் மறைக்கப்பட வேண்டிய உடற் பகுதிகளையிட்டு வேறு அபிப்பிராயம் கிடை யாது. பெண்ணின் மார்பு உட்பட கவர்ச்சியூட்டும் பகுதிகள் மறைக்கப்படுவதனை குர்ஆன் கட்டாயப்படுத்துகின்றது (24:31).

மேலும் முலையூட்டல் என்பது இருவருக்கிடையில், பெண்ணுக்கும் குழந்தைக்கும் இடையிலான உடல் தொடர்பு சம்பந்தப்பட்டது. ஸாலிம் முலையூட்டப்பட்டாரெனில், அவருக்கும் ஸஹ்லாவுக்கும் உடல் தொடர்பு ஏற்பட்டது என்று அர்த்தம். உறவில்லாத ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே - சிகிச்சை பெறுவதற்காக மருத்துவரிடம் காட்டல் போன்ற - விதிவிலக்கான சந்தர்ப்பங்களிலன்றி உடல் தொடர்பு விலக்கப்பட்டுள்ளபடியால் ஸஹ்லா இன்னொரு இஸ்லாமிய விதியை மீறியவராகின்றார். முஸ்லிம் பெண்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நபிகளாரின் கைமீது கைவைத்து சத்தியப் பிரமாணம் செய்வதற்கும் நபிகளார் அனுமதிக்கவில்லை.[(6)] என்றபோதிலும் அல் காதி ஹஸன் (ம. ஹி. 592) இன்னொரு சாத்தியப்பாட்டை முன்வைக்கின்றார்: 'ஸஹ்லா தனது முலைப்பாலை ஒரு கிண்ணத்தில் பீச்சி ஸாலிமுக்குப் பருகக் கொடுத்திருக்கக்கூடும்.' அவ்வாறெனில், உடல் தொடர்பு ஏற்பட்டிருக்காது என்பது அவர் தரும் விளக்கம்.[(7)] இது வலிந்து பொருள்கொள்வதாகும். இது ஏற்கக்கூடியதல்ல. உடல் தொடர்பு மூலமாக - அதாவது முலையூட்டல் மூலமாகவே செவிலித்தாய் உறவு ஏற்பட முடியும்.[(8)] பெண்ணின் மார்பில் அல்லாமல் கிண்ணத்தில் முலைப்பால் அருந்துவதால் அத்தகு உறவு நிறுவப்பட முடியாது.

உயிரியல் ரீதியாகப் பெண்ணின் மார்பு பாலியல் கிளர்ச்சியூட்டக் கூடியது. இப்பகுதியுடன் தொடர்பு கொள்வது வயது வந்த இருபாலினர் மத்தியிலும் உடல் இச்சையைத் தூண்டக்கூடியது. ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் நீண்டநேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதையே இஸ்லாம் தடைசெய்கின்றது (24: 29 - 30). விபச்சாரத்தை மட்டுமன்றி அதன்பால் இட்டுச் செல்லக்கூடிய எந்தவொரு செயலையும் தவிர்த்துக் கொள்ளுமாறு இஸ்லாம் அறிவுறுத்துகின்றது (17:32). எனவே இந்த ஹதீஸ் இஸ்லாத்தின் ஒழுகலாற்றுக்கே விரோதமானதாய்த் தென்படுகின்றது.

அடுத்து, ஸாலிம் தாயின் முன்னால் இருப்பதைப் பார்த்து ஹுதைஃபா ஏன் சங்கடப்பட வேண்டும் என்ற கேள்வி

யெழுகின்றது. ஒரு தந்தை உளவியல் ரீதியாக இவ்வாறு பாதிக் கப்பட மாட்டார். மனிதர்களின் செயல்கள் பரம்பரை குணத்தால் மட்டும் தீர்மானிக்கப்படுவதன்று. பண்பாட்டு பழக்க வழக்கங்க ளுக்கும் அதில் பங்குண்டு. தன் வளர்ப்புமகன் ஸாலிம், தன் மனைவியான ஸஹ்லாவின் அருகில் இருப்பது கண்டு ஹுதைஃபா சந்தேகப்பட்டாரென்பது கற்பனைக் கெட்டாத விடயம். ஸாலிம் மனைவியின் அருகில் இருப்பதையே அனுமதிக்காத ஹுதைஃபா உடல் ரீதியாக ஸாலிமுடன் ஸஹ்லா அத்தகு தொடர்பு கொள் வதனை அனுமதித்திருப்பாரா?

இவை யாவும் இந்த ஹதீஸின் ஆதாரபூர்வம் குறித்த ஐயங்களை எழுப்புகின்றன.

## 2. இறுதித் தீர்ப்பு நாளில் நபிமார்களின் சுய குற்றச்சாட்டுகள்:

புஹாரியும், முஸ்லிமும் மற்றோரும் ‘ஹதீஸ் அஸ்-ஸஃபாஅ’ என்ற நீண்ட ஹதீஸொன்றைப் பதிவுசெய்துள்ளனர். அதன் சாராம் சம் வருமாறு:

இறுதித் தீர்ப்பு நாளன்று முழுமனித இனமும் ஓர் இடத்தில் ஒன்றுகூட்டப்படும். மனிதர்கள் துக்கத்திலும் வேதனையிலும் ஆழ்ந்தவர்களாக ஆதம் (அலை) இடம் உதவி நாடிச் செல்வர். அவர் விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியை உண்டதால் அவர் களுக்கு உதவ முடியாத நிலையிலிருப்பதாகக் கூறி வருந்துவார். அடுத்து அவர்கள் நூஹ் நபியிடம் செல்வர். தனது துஆவை (பிரார்த்தனையை) தனது மக்களுக்கெதிராகப் பாவித்துவிட்ட படியால் தான் வெறுங்கையரான நிலை குறித்து நூஹ் (அலை) பச்சாதாபப்படுவார். பின்னர் அவர்கள் இப்றாஹீம் (அலை) இடம் செல்வர். அவர் தான் சொன்ன மூன்று பொய்களைக் குறிப்பிட்டு தன்னை மன்னித்துவிடுமாறு கூறுவார். அடுத்து அவர்கள் மூஸா (அலை) இடம் செல்வர். அவர் தான் காரண மின்றிச் செய்த ஒரு கொலை காரணமாக அவர்களுக்கு உதவ முடியாத நிலையிலிருப்பதாகக் கூறுவார். பின்னர் அவர்கள் ஈஸா (அலை) இடம் செல்வர். அவர்அவர்களை நபி முஹம்மத் (ஸல்)

*அவர்களிடம் அனுப்பிவைப்பார். முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு உதவ முற்படுவார்கள்...*[9]

இந்தச் செய்தியின் மையக்கரு இறுதித் தீர்ப்பு நாளன்று மானுடர் அனைவருக்குமாக மன்றாடு வதற்கு முஹம்மத் நபி (ஸல்) மட்டுமே சக்தியும், கௌரவமும் பெற்றிருப்பார் என்பதாகும். நான்கு முக்கிய நபிமார்கள், தாம் செய்த பாவங்கள் காரணமாக மக்களுக்காக அல்லாஹ்விடம் மன்றாடத் துணிய மாட்டார்கள் என ஆட்சேபகரமான முறையில் வர்ணிக்கப்படுவதை கவனத்திற் கொள்ளும்வரை இந்த ஹதீஸ் ஏற்புடையதாகவே தோன்றும்.

விலக்கப்பட்ட கனியை உண்டதைக் குறிப்பிட்டு ஆதம் (அலை) தன் இயலாமையைக் கூறியிருக்கக் கூடாது. அல்லாஹ் அவரை ஏற்கனவே மன்னித்துவிட்டான். பிராயசித்தமும் பாவ மன்னிப்பும் ஒருவரை பாவத்திலிருந்து நீக்கிவிடுகின்றது. தனக்கு இறைமன்னிப்பு கிடைத்துவிட்டதை நன்கறிந்த ஆதம் (அலை) விலக்கப்பட்ட கனியை உண்டதனை மீண்டும் குறிப்பிடல் அவரது ஆளுமைக்குத் தகுமானதல்ல.

தனது மக்களுக்கு சாபம் உண்டாகுமாறு பிரார்த்தித்த குற்றத்தை நூஹ் (அலை) குறிப்பிடுகின்றார். இது பாவமன்று. அல்லாஹ்வின் தூதை ஏற்றுக்கொள்ளுமாறு ஓராயிரமாண்டு அழைப்புவிடுத்தும் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் அதனைச் செவிமடுக்க மறுத்தனர். அநியாயக்காரர்களை விட்டு வைத்தால் மனித வாழ்க்கை அமைதியிழந்துவிடும். எனவே துட்டர்களைத் துவம்சம் செய்யுமாறு அவர் அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார். உண்மையில் நூஹ் (அலை) தனது மக்களுக்கெதிராகப் பிரார்த்திக்கவில்லை. அவர் பிரார்த்தித்தது மனித இனத்தைக் காப்பதற்காக; நீதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்காக. இதன் முதற் கட்டமாக சமூக விரோத சக்திகளை அழிக்க வேண்டியிருந்தது. எனவே அவர் செய்தது சரி. அது பாவமன்று. உண்மையில் அவரது பிரார்த்தனை மனித வர்க்கத்தைக் காப்பாற்றியது. இதற்கு நேர்மாற்றமாக இந்த ஹதீஸ், பிரார்த்தித்த குற்ற உணர்வினால் நூஹ் (அலை) வருந்துவதாகக்

கூறுகின்றது. அவர் பிழையேதும் செய்திராவிடின் அவரை ஏன் குற்றவுணர்வு உறுத்த வேண்டும்? நூஹ் (அலை) ஒரு நபி. எது சரி எது பிழை யென்பதை மற்றவர்களைவிட நன்கறிந்திருந்தவர்.

அடுத்து இப்றாஹீமின் சுய குற்றச்சாட்டு சம்பந்தமாக. இப்றாஹீம் (அலை) சொன்னதாகக் கூறப்படும் 'பொய்கள்' பற்றி முந்தியதோர் அத்தியாயத்தில் ஏற்கனவே பார்த்தோம். அல்லாஹ் இப்றாஹீமை 'ஸித்தீக்' (ஓர் உண்மையாளராக) (19:41) என அழைப்பதை இங்கு குறிப்பிடுவதே போதுமானதாகும். இப்றாஹீம் (அலை) அவர்களை இழிவுபடுத்தும் கருத்தை நபிகளார் கூறியிருப்பார் என்பது நினைத்துப் பார்க்க முடியாததாகும்.

மூஸா (அலை) தமக்கு நபித்துவம் கிடைப்பதற்குமுன் புரிந்த ஒரு மனிதக் கொலை பற்றிய சுயகுற்றச்சாட்டு நியாயப்படுத்த முடியாதது. மூஸா புரிந்த கொலை திட்டமிட்ட ஒன்றல்ல. அது எதிர்பாராத நிகழ்வு. மேலும் மூஸா நபியாக நியமிக்கப்பட்ட பின்னர் அவர் மீது கொலை குற்றம் சாட்ட முடியாது. மூஸா (அலை) வாழ்நாள் பூராவும் தன் மக்களுக்காகப் பிரார்த்தித்தவர். மூஸா பிரார்த்தனை மூலம் கேட்டது எல்லாமே அவருக்கு வழங்கப்பட்டன. அல்லாஹ்வை வணங்கும்போது மூஸா தனது பாவத்தைக் குறிப்பிட்டிருக்க மாட்டார் என்பதும் இறுதித் தீர்ப்பு நாளில் அவர் அல்லாஹ்வுடன் பேசுதற்கு அஞ்சுவார் என்பதும் விசித்திரமாயுள்ளது.

இந்த ஹதீஸ் உண்மையானதெனக் கொள்ளப்பட்டால் இது அல்லாஹ்வுடன் தனக்குள்ள உறவு குறித்த மூஸாவின் அறியாமையையே குறிக்கும். எந்தவொரு நபியும் இது குறித்து குற்றவுணர்வு கொள்ள முடியாது.

இறுதியாக ஈஸா நபியின் விவகாரத்துக்கு வருவோம். இந்த நபி பாவமெதுவும் புரிந்ததாக ஹதீஸ் குறிப்பிடாவிடினும் மக்களுக்கு உதவிசெய்யும் உரிமை இவருக்கு மறுக்கப்படுவது ஆச்சரியமாக உள்ளது. அவரின் உதவி நாடி வந்தவர்களை அவர் நபி முஹம்மத் (ஸல்) இடம் அனுப்பி வைக்கின்றார்.

*முஹம்மதிடம் செல்லுங்கள் அவரின் பாவங்களை அல்லாஹ் மன்னித்து விட்டான் என்கிறார். அவரால் மட்டுமே மக்களுக்கு உதவி செய்ய முடியுமென இது குறிப்புணர்த்துகின்றது. அனைத்து நபிமார்களும் இறை மன்னிப்பு பெற்றவர்களா அல்லது அது முஹம்மத் நபிக்குமட்டும் வழங்கப்பட்ட விசேட சலுகையா? பாவ மன்னிப்பு என்பது இறைநம்பிக்கை, நல்லமல் புரிதல் முதலிய நிபந்தனைகளுக்குட்பட்டதாகும். இந்த நிபந்தனைகளை நிறைவேற்றுபவர், இறைமன்னிப்பு பெறத் தகுதியுடையவர் (3:31). மேலும் பாவம் புரிவதிலிருந்து வாழ்நாள் பூராவும் பாது காக்கப்பட்ட நபிமார்களுக்கு இப்பொது நிபந்தனை பொருந் தாததா? அனைத்து நபிமார்களும் அல்லாஹ்வினால் மன்னிக்கப் பட்டவர்களே. அப்படியாயின் நபியின் பாவங்கள் மன்னிக்கப் பட்டு விட்டதால் அன்னார் மட்டுமே மக்களுக்காக மன்றாடும் உரிமை பெற்றவர் எனக் கொண்டாடுதல் பிழையாகும். உண்மை யில் இந்த ஹதீஸ் ''ஸகரிய்யாஹ்வின் புதல்வர் யஹ்யாவை விட நான் (முஹம்மத்) சிறந்தவரென எவரும் சொல்வது பொருத்தமல்ல'' என்ற நபிகளாரின் ஹதீஸுடன் முரண்படுகின் றது.[10] பரிந்துரை சம்பந்தமான இந்த ஹதீஸ் ஏனைய நபிமார் களுக்கு அல்லாஹ் அளித்துள்ள கௌரவத்துக்குக் களங்கம் கற் பிப்பதாகும். வெளிப்படையாக இந்த ஹதீஸ் மனிதர்க்கு உதவு வதில் மற்ற நபிமார்களின் இயலாமையைச் சுட்டிக்காட்டு வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.*

### 3. மூஸா பொதுவிடத்தில் நிர்வாணமாக ஓடுதல்

*புஹாரியும் முஸ்லிமும் மற்றையோரும் அபூ ஹுரைராவின் அறிவிப்பில் பின்வரும் ஹதீஸைப் பதிவுசெய்துள்ளனர்:*

> இஸ்ரேலின் மக்கள் நிர்வாணமாகத் தம் பிறப்புறுப்புகளைக் காட்டிய வண்ணம் நீராடுவது வழக்கம்.ஆனால் மூஸா தனி யாகவே நீராடுவார். 'மூஸாவுக்கு பிறப்புறுப்பில் நீர் தேங்கும் விரைவீக்க நோய். அதனால்தான் அவர் எம்முடன் நீராடவரத் தயங்குகிறார்' என அவர்கள் குறைபட்டுக் கொண்டனர். ஒரு

முறை மூஸா நீராடச் சென்று தம் உடைகளைக் களைந்து ஒரு கற்பாறை மீது வைத்தபோது அப்பாறை உடைகளோடு பறக்கத் தொடங்கி விட்டது. அதனைத் தடுத்து நிறுத்துவதற்காக அப்பாறையைப் பின்தொடர்ந்து ஓடுகையில் மூஸா சனநட மாட்டமுள்ள பொதுவிடத்தை வந்தடைந்தார். அவரது நிர்வாண கோலத்தைக் கண்ட சனங்கள் மூஸாவிடம் ஒரு குறையுமில்லை என்பதை அறிந்தனர். கற்பாறையும் அப்படியே நின்றுவிட்டது. மூஸா உடைகளைப் பற்றியெடுத்து அதன்மூலம் பாறையை அடிக்கத் தொடங்கினார்.[(11)]

*இந்த ஹதீஸ் ஒரு நபியின் நற்பெயருக்கு மாசுகற்பிக்கும் பயங்கர நிலைக்குச் செல்வதாகத் தோன்றுகிறது. 'மூஸா (அலை) அவர்களின் சிறப்புகள்' என்ற தலைப்பில் இந்த ஹதீஸ் பதிவு செய்யப்பட்டுள்ளது. சனங்கள் முன் அவமானப்படுத்தப்படல் எவ்வாறு போற்றுதலாக அமையும்? பொதுவிடத்தில் நிர்வாண மாக ஓடுதல் மானக்கேடான செயலென்பதை யாவருமறிவர். கற்பாறை மூஸாவின் உடைகளை எப்படியோ கவர்ந்து சென்றி ருப்பினும் மூஸா அதனைத் தொடர்ந்து பொதுவிடத்தில் மான உணர்வின்றி அவ்வாறு ஓடியிருக்கமாட்டார். இது மூஸாவை அவமானப்படுத்துவதாகும். முதலில் பொதுவிடத்தில் மூஸா நீராட மாட்டாரென்பதைப் பெருமையாகக் குறிப்பிட்டு விட்டு அதனைத் தொடர்ந்து அவரது ஒழுக்கவீனத்தைக் குறிப்பிடுவதன் மூலம் அவரை மானபங்கப்படுத்துகின்றது. இந்நிகழ்வின் மூலம் ஹதீஸ் எமக்குச் சொல்லவரும் செய்தியென்ன? மூஸா உடல் ஊனம் அற்றவர் என்பதைக் காட்டுவதற்காகவே இது நிகழ்ந்த தாகக் காட்டப்படுகின்றது. வேறு வார்த்தைகளில் சொல்வதாயின், சனங்கள் குறைசொல்வதையிட்டு மூஸா கவலைப்படவில்லை யாதலால், சனங்கள் அவரது மர்ம வுறுப்பைப் பார்த்து அவருக்கு உடற்குறை யெதுவுமில்லையென அறிந்து கொள்ளும் பொருட்டு அல்லாஹ் மூஸாவைப் பொதுவிடத்தில் நிர்வாணமாய் ஓடச் செய்தான் என இது குறிப்புணர்த்துகின்றது. இவ்வாறு சிந்திப்பது அல்லது மூஸாவின் இயல்பான மானவுணர்வை இல்லாமல்*

*செய்வதற்கு இயற்கையின் திட்டம் இதுவென கற்பனை செய் வது அருவருப்பூட்டுவதாகும். மூஸாவின் உடைகளுடன் கற் பாறை பறந்து சென்றது ஓர் அற்புதம் எனக் கொண்டாடுகிறார் அந்-நவவி.*[12]

*நபிமார்களுக்கு அற்புதம் நிகழ்த்தும் சக்தி அருளப்பட்டது, அல்லாஹ்வின் பிரதிநிதிகளாக அவர்களுக்குள்ள தகைமையைக் காட்டுவதற்கும் மக்களின் சில குறிப்பிட்ட அசாதாரணமான பிரச் சினைகளைத் தீர்த்து வைப்பதற்குமே. அற்புதங்கள் இவ்விரு வகையினவே. அற்புதம் என்பது சர்க்கஸ் வித்தையல்ல. அது நிகழ்வதற்கு ஏதேனும் அத்தியாவசியத் தேவையிருத்தல் வேண் டும். ஆனால் ஹதீஸ் குறிப்பிடும் சம்பவத்தில் காணப்படும் தேவை புறக்கணிக்கத்தக்கதாகும். அல்லாஹ் தான் தேர்ந்தெடுத்த ஓர் அடியானை, ஊகத்தின் அடிப்படையிலான ஓர் அபவாதத்தி லிருந்து விடுவிப்பதற்காக, அவர் இவ்வாறு கேவலப்படும்படி விட்டிருக்க மாட்டான். இதனைக் கருத்தில் கொண்டே இப்னு அல் - ஜவ்ஸி, பாறையைப் பின்தொடர்ந்து ஓடும்போது மூஸா (அலை) ஏதேனும் உள்ளாடை அணிந்திருக்கக் கூடும் என்கிறார்.*[13]

*இந்த ஹதீஸில் பல பிரச்சினைகள் காணப்படுவதால் இது நபிகளார் கூறியதாக இருக்கமுடியாது. அறிவிப்பாளர்களில் யாரோ ஒருவர் இதனை யூத-கிறிஸ்தவ மரபிலிருந்து பொறுக்கி யெடுத் திருக்கலாம். அதற்குப் புனிதத்துவமும் நம்பகத்தன்மையும் அளிப் பதற்காக இதனை நபிகளார் கூறியதாக அறிவித்திருக்கலாம்.*

### *4. ஒரு நிரபராதியைக் கொலைசெய்யுமாறு நபிகளார் கட்டளையிட்டதாகக் கூறப்படுவது:*

*இமாம் முஸ்லிம் மட்டுமே இந்த ஹதீஸை அனஸ் இப்னு மாலிக்கின் அறிவிப்பில் பதிவுசெய்துள்ளார்:*

> நபிகளாரின் ஓர் அடிமைப் பெண்ணான மாரியாஹ்வுடன் ஒரு மனிதனுக்குத் தொடர்பிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. நபி அவனைச் சிரச் சேதம் செய்யுமாறு அலிக்குக் கட்டளையிட்டார். அலி அவனிடம் சென்றபோது அவன் தடாகத்தில் குளித்துக்

கொண்டிருந்தான். அலி அவனை வெளியே வருமாறு கூறினார். அவன் தண்ணீரிலிருந்து வெளியே வருகையில் அவனுக்கு ஆணுறுப்பு இல்லாதிருக்கக்கண்ட அலி அவனைக் கொலை செய்யாது விட்டதோடு அதனை நபிகளாருக்கு அறிவித்தார்.[14]

*இவ்விவகாரம் குறித்து குற்றஞ் சாட்டப்பட்ட நபர் முகவ்கிஸ் என்ற எகிப்திய அரசனால் நபிக்கு வழங்கப்பட்ட மஃபூர் என்ற அடிமையாவான். அவன் ஓர் அலி. நபியின் அடிமைப் பெண் மாரியாஹ்வும் எகிப்திய அரசனால் நபிக்கு வழங்கப்பட்டவள் தான்.[15] இந்த அறிவிப்பு பல கேள்விகளை எழுப்புகின்றது. நபிகளாரின் கட்டளையை அலி நிறைவேற்றியிருப்பின் ஒரு நிரபராதியான, அலியான, அடிமைமீது மரண தண்டனை நிறை வேற்றப்பட்டிருக்கும். இத்தொடர்பு சாத்தியமற்றதென அறிந்த அலி அவனைக் கொல்லாது விடுகின்றார். இது இவ்வழக்கைத் தீர விசாரியாமல், சாட்சிகளைக் கொண்டுவருமாறு கேளாமல், நபி தீர்ப்பு வழங்கினார் என்று அர்த்தப்படும். ஹதீஸில் அறி விக்கப்படும் வழக்கோ விபசாரக் குற்றம் பற்றியது. இதற்குத் தண்டனை வழங்குவதெனில் நான்கு சாட்சிகள் அல்லது குற்ற வாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளல் அன்றேல் பாலியல் தொடர்பை நிரூபிப்பதற்கு வேறு ஏதேனும் அத்தாட்சிகள் அத்தி யாவசியம். மஃபூருடைய வழக்குக்கு நான்கு சாட்சிகள் ஒருபுற மிருக்க ஒரு சாட்சியேனும் இருக்கவில்லை. மறுக்கப்பட முடியாத வேறு அத்தாட்சிகளும் இல்லை. விபச்சாரக் குற்றம் சுமத்தப் பட்ட சாட்சிகளேதும் இல்லாத காரணத்தால் ஒரு பெண்ணுக்குத் தண்டனை வழங்க நபி (ஸல்) மறுத்தார்கள்.[16] இந்நிலையில் வெறுமனே விபச்சாரக் குற்றம்சாட்டப்பட்ட ஓர் ஆணை விசார ணையேதுமின்றி கொலைசெய்யுமாறு அன்னார் கட்டளையிட்டி ருப்பாரென்பது ஏற்புக்குரிய ஒரு கருமமல்ல.*

*நிறுவப்பட்ட வரலாற்றின்படி மஃபூர் ஓர் அலியாகவே பெரு மானாருக்கு வழங்கப்பட்ட அடிமை. இதனை யாரும் அறியாமல் இருந்திருக்க முடியாது. அடுத்து ஓர் அலியிடம் பெண்மைக்குரிய சில லட்சணங்கள் காணப்படும். இது அவனை மற்றவர்களுக்கு*

எளிதில் இனம் காட்டிவிடும். எனவே மஃபூர் மீதான விபச்சாரக் குற்றம் ஏதும் சுமத்தப்பட்டிருப்பின், அது சந்தேகத்தை உண்டு பண்ணியிருக்க வேண்டும்.

அடுத்து நபிகளார் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருடன் ஓர் அலிக்குத் தொடர்பிருந்ததாக விபச்சாரக் குற்றம் சுமத்தியவர் யாரென்ற கேள்வியெழுகின்றது. இதுவொரு பாரதூரமான குற்றம். நபிகளாரின் குடும்பத்துக்கு மாசு கற்பிக்க முஸ்லிம்கள் யாரும் துணிந்திருப்பர் என்பது நடவாத காரியம். வஞ்சகர்கள் யாரும் இவ்வாறான ஓர் அவதூற்றைப் பரப்பியிருக்கலாம் எனவும் கொள்ளலாம். என்றாலும் சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் காலப்பகுதியில் இது நடந்திருக்க முடியாது. மாரியாஹ்வையும் மஃபூரையும் மற்றவர்களையும் எகிப்தின் அரசன் நபிகளாரிடம் அனுப்பிவைத்தது ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு.[17] அக்கால கட்டத்தில் மதீனாவின் இஸ்லாமிய உம்மத்தினர் மத்தியில் நயவஞ்சகர்கள் இருந்ததாகத் தெரியவில்லை.

இறுதியாக இக்கதை விடை காண முடியாத ஒரு கேள்வியுடன் எம்மை விட்டுவிடுகின்றது: மஃபூர் குற்றமற்றவன் என்பது தெரிந்த பின்னர், நபிகளார் அபவாதம் சுமத்தியோரைக் கண்டறிந்து அவதூறு கூறிய (கதப்) குற்றத்துக்கான தண்டனையை நிறை வேற்றினார்களா? குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதற்காக அவர் களைச் சட்டத்தின் முன்னால் கொணர்ந்து நிறுத்த வேண்டியது சமூகத்தின் பொறுப்பாகும். என்றாலும் இது சம்பந்தமான செய்தி எதுவும் வரலாற்றிலிருந்து கிடைத்தில. அவதூறு கூறுவோர் எவரும் அச்சமயம் இருக்கவில்லை என்பதனையே வரலாறு காட்டுகின்றது. அவதூறு கூறியோர் இன்மையால் இக்கதை புனையப்பட்ட புளுகு என்பது புலனாகின்றது

**5. தொழுகையில் இணைந்துகொள்ளாதவர்களைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும் என்ற நபிகளாரின் கருத்து.**

புஹாரியும் முஸ்லிமும் மற்றவர்களும் அபூ ஹுரைராவின் ஆதாரத்துடன் பின்வரும் ஹதீஸைப் பதிவுசெய்துள்ளார்கள்:

''நயவஞ்சகர்க்கு ஃபஜ்ர் தொழுகையையும் இஷா தொழுகை யையும்போல் கடினமான தொழுகை வேறொன்றும் கிடையாது. குறித்த நேரத்தில் அத்தொழுகைகளை நிறைவேற்றுவதால் கிடைக்கும் நன்மைகள் பற்றி அறிந்திருந்தால் அவர்கள் தவழ்ந்து சென்றேனும் பள்ளிவாசலுக்குச் சமூகமளிப்பர்'' என்று நபிகளார் கூறினர். அவர்கள் மேலும் கூறியதாவது: ''நிச்சயமாக நான் முஅத்தினை இகாமத் சொல்லச் செய்து தொழுகையை நடத்து மாறு ஒருவரைப் பணித்துவிட்டு, தீப்பந்தத்துடன் போய் அது வரை பள்ளிவாசலுக்குக் கிளம்பாதவர்களை வீட்டோடு கொளுத்துவதற்கு தீர்மானித்துள்ளேன்.''(18)

*இந்த ஹதீஸ் இரு செய்திகளை அறிவிக்கின்றது: முதலாவது, நபி கொடூரமான கல்மனம் கொண்ட மனிதர். இரண்டாவது ஜமாஅத் - கூட்டுத் தொழுகையில்- அவர் கலந்துகொள்ளாதமை. அல்-குர்ஆனிலும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களிலும் விதந்துரைக் கப்பட்டுள்ள நபியின் நற்பண்புகள், கருணையுள்ளம், இனிய சுபாவம் முதலியவற்றுடன் முதல் செய்தி முரண்படுகின்றது. ''(நபியே!) அல்லாஹ்வின் அருள் காரணமாகவே நீர் அவர் களுடன் மென்மையாக (இரக்கத்துடன்) நடந்துகொள்கிறீர். நீர் கடூரமானவராக, கல்நெஞ்சராக கடுகடுப்பானவராக இருந்திருப் பின் அவர்கள் உம்மை விட்டு விலகிச் சென்றிருப்பர் (3:159) என அல்லாஹ்வின் திருமறை அறிவிக்கின்றது.*

*''நான் முஹம்மத், அஹ்மத், கடைசி இறைதூதர், இறுதித் தீர்ப்பு நாளில் மக்களின் தலைவன், பாவங்களுக்காகப் பச்சா தாபப்படும் தூதன், கருணையின் தூதுவன்''(19) என்ற ஹதீஸ் மூலமாக நபிகளார் தமது தன்மைகளை நயந்துரைக்கின்றார். நபிகளார் இனிய சுபாவத்தினர், இரக்க சிந்தையினர், இங்கித மானவர், காருண்ய சீலர். தம்மைப் பின்பற்றுவோரை உயிருடன் எரிப்பதற்கு கருணை நபி (ஸல்) விரும்பியிருப்பார் என்பதை நினைத்துப் பார்க்கவும் முடியாது.*

*பள்ளியில் ஜமாஅத் தொழுகையில் கலந்துகொள்ளாமை விரும் பத்தகாத செயல்தான். ஆயினும், அந்தக் குற்றம் உயிருடன்*

கொளுத்தி மரணத்துக்குள்ளாக்கும் அளவுக்குப் பாரதூரமானதல்ல. மேலும் எந்தவொரு பாரதூரமான குற்றத்திற்கும் உயிருடன் கொளுத்தப்படும் தண்டனை இஸ்லாத்தில் இல்லை. நபிகளார் யாருக்கும் அத்தகு தண்டனை விதிக்கவில்லை; கூட்டுத் தொழுகையின் முக்கியத்துவத்தை உணர்த்துதற்கே அன்னார் அவ்வாறு கூறினர் என எவரேனும் விவாதிக்கக்கூடும். ஒரு செய்தியை எத்தி வைப்பதற்காக நபிகளார் அவ்வாறு கூறியிருப்பார் என்பது சாத்தியமே. எனினும் நபிகளார் மக்களை இந்தளவு தூரம் அச்சுறுத்தித்தான் அச்செய்தியைக் கூற வேண்டுவதில்லை. கருணையின் உருவமான திருநபி தன்னைப் பின்பற்றுவோரை உயிருடன் கொளுத்துவதைக் கற்பனை கூட செய்திருக்க மாட்டார். தன்னைப் பின்பற்றுவோர், யாரையேனும் தீயினால் சித்திரவதை செய்வதைத் தடைசெய்த நபிகளாரின் வாய்மொழியாக இப்படியொரு ஹதீஸை எவ்வாறு கூறலாம்? ''அல்லாஹ்வின் தீயைத் தவிர வேறு தீயினால் எவரையும் தண்டிக்க முடியாது'' என்பதே நபிவாக்கு.[20] இந்த ஹதீஸிலிருந்து தீயினால் தண்டிப்பதற்கு அனுமதி யில்லையென்பது துலாம்பரமாகின்றது. அது அல்லாஹ்வினால் மட்டுமே முடியும். எனவே நபிகள் பிரான் தமது விதிமுறையையே மீறும் வகையில் இம்மனிதர்களை தீயினால் தண்டிப்பதற்கு ஒருபோதும் விரும்பியிரார்.

தொழுகைக்கு சமூகமளிக்காத சில நயவஞ்சகர்க்கெதிராக நபிகளார் இவ்வாறு அறிவித்தருப்பார் என ஓர் அறிவிப்பின் மூலம் பிரத்தியட்சமாகின்றது.[21] அது நயவஞ்கர்க்கு எதிராகக் கூறப்பட்டதாய்க் கொள்ளப்படினும் தனது தூதுத்துவப் பணி முழுவதிலும் நயவஞ்சகர்களுடன் கடுமையாய் நடந்துகொள்ளாத நபிகள்பிரான், இவ்வளவு கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்திருப்பார் என்பது நம்பமுடியாததாகும். நபிகளார் நயவஞ்சகருடன் எப்பொழுதும் நாகரிகமாகவே நடந்து கொண்டார்கள். நபிகளார் கடுகடுப்பாகவும் கடுமையாகவும் நடந்திருந்தால் அவர்களிடமிருந்து மக்கள் தூரமாகியிருப்பர். உஹத் போரின் போது வெற்றியைத் தோல்வியின் பக்கம் திருப்பிவிட்டவர்களின் பொறுப்பின்மையைக் கூட நபிகளார் கடிந்து கொண்டதில்லை.[22]

*போர்க்களத்ததில் இராணுவக்கடமையை மீறுவது மிகப் பெருங் குற்றம். உஹத் போரில் கடமையில் தவறியவர்களையே தண் டிக்காத நபியவர்கள் தொழுகையில் மற்றவர்களிலிருந்து பின்தங்கி விட்டவர்களை உயிருடன் தீயிட்டுக் கொளுத்த விரும்பியிருப் பார் என்பது அறிவுபூர்வமாக ஏற்றுக்கொள்ளக் கூடியதா?*

### 6. உறவினர் அல்லாத ஒரு பெண் நபியின் தலையில் பேன் பார்த்தல்

*இமாம் புஹாரியும் முஸ்லிமும் மற்றவர்களும் அனஸ் இப்னு மாலிக்கின் ஆதாரத்தில் பின்வரும் ஹதீஸைப் பதிவுசெய்துள்ளனர்:*

> ''நபி (ஸல்) அச்சமயம் உபாதா இப்னு ஸாமித்தின் மனைவி யாயிருந்த உம்மு ஹராம் பின்த் மில்ஹானை அடிக்கடி சந்திக்கச் செல்வது வழக்கம். நபிகளார் ஒருநாள் அவரைக் காணச் சென் றார். அவர் நபிகளாருக்கு உணவு பரிமாறினார். பின்னர் நபியின் தலையில் பேன் பார்த்தார். நபிகளார் அப்படியே உறங்கி விட்டார்கள்...''[23]

*உம்மு ஹராம் மதீனாவைச் சேர்ந்த முஸ்லிம் பெண்மணி. அவர் நபியின் உதவியாளர்களில் ஒருவரான அனஸ் இப்னு மாலிக்கின் சிற்றன்னை.[24] நபியின் கொள்ளுப்பாட்டியான ஸல்மா பின்த் அம்ர் இப்னு ஸைத் இப்ன் லபிதின் கோத்திரமான அதே அல்-நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.[25] நபிகளாருக்கும் உம்மு ஹராமுக்குமிடையே இரத்த உறவோ செவிலித்தாய் உறவோ இருந்ததாகத் தெரியவில்லை. அப்படியாயின் நபிகளாருக்கும் உம்மி ஹராமுக்குமிடையே உடல் ரீதியான உறவு இருந்ததாக ஒருவர் எப்படி கற்பனை செய்ய முடியும்? இந்த ஹதீஸ் நபிகளாரின் அப்பழுக்கற்ற ஒழுக்கத்துக்கு மாசு கற்பிக்கும பிரயத்தனமாகும்.*

*உம்மு ஹராம் நபிகளாருக்கு மஹ்ரம் (மணஞ்செய்ய முடியாத உறவினர்) என்பது முஸ்லிம் அறிஞர்களின் ஒருமுகமான கருத்து என்கிறார் அந்-நவவி. அவர் எவ்வாறு மஹ்ரம் ஆவார் என் பதையிட்டு அறிஞர் மத்தியில் அபிப்பிராய பேதம் நிலவுவதையும் அவர் குறிப்பிடுகின்றார். முலைபாலூட்டல் (ரிதாஅஹ்) மூலமாக உம்மு ஹராம், நபியின் சிற்றன்னை என்கிறார் இப்ன் அப்துல் பர்ர்.*

*உம்மு ஹராம் முலைப்பாலூட்டல் மூலமாக நபியுடைய தந்தையின் அல்லது பாட்டனாரின் சிற்றன்னையென அவர் பெயர் குறிப்பிடாத சில அறிவிப்பாளர்களை மேற்கோள் காட்டிக் கூறுகின்றார்.[26] இமாம் புஹாரியின் விளக்கவுரையாளரான இப்னு ஹஜர் இந்த ஹதீஸ் உறவினரல்லாத ஒரு பெண் ஓர் ஆணை விருந்தாளியாகக் கொள்ளவும், அவரது தலையில் பேன் பார்க்கவும் அனுமதிப்பதாகக் கொள்கின்றார். அதேவேளை, இந்த ஹதீஸ் சில அறிஞர்கள் மத்தியில் சிக்கலானதாய் மாறியுள்ளதையும் அவதானிக்கின்ற அவர், இப்னு பர்ருடைய பின்வரும் கருத்தையும் எடுத்தாள்கிறார்: ''உம்மு ஹராம் அல்லது அவரது சகோதரி உம்மு ஸுலைம் நபிகளாருக்கு முலைப்பால் ஊட்டினார் என நினைக்கிறேன். எனவே ஒருவர் நபியின் செவிலித்தாய், மற்றவர் நபியின் செவிலிச் சிற்றன்னை. எனவேதான் நபிகளார் உம்மு ஹராமுக்கு அருகில் படுத்திருந்து ஆண் மஹ்ரமுக்கும் பெண் மஹ்ரமுக்கும் இடையே அனுமதிக்கப்பட்ட சேவையைப் பெற்றுக்கொண்டார்.''[27] நபிகளாருக்கும் உம்மு ஹராமுக்கும் இடையிலான செவிலி உறவை நிரூபிப்பதற்கு இமாம் மாலிக்குடைய முவத்தாவின் விளக்கவுரையாளரான யஹ்யா இப்னு இப்றாஹீம் இப்ன் முஸய்ன் (ம. ஹி. 259) இன்னொரு விவகாரத்தை முன்வைக்க எத்தனிக்கின்றார். நபியின் கொள்ளுப்பாட்டி ஸல்மாவும் உம்மு ஹராமும் ஒரே அல்-நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்கிறார் அவர்.[28] இப்னு வஹ்ப் (ம. ஹி. 197) இவ்விவகாரம் குறித்து இரு அவதானங்களைக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. ஒன்று உம்மு ஹராம் நபிகளாரின் செவிலிச் சிற்றன்னை. மற்றது உம்மு ஹராம் நபியின் தந்தையினது அல்லது பாட்டனாரினது செவிலிச் சிற்றன்னை.[29] ஹதீஸ் மனனம் செய்வார் சிலரின் கருத்துப்படி உம்மு ஹராம் நபிகளது அன்னையின் செவிலிச் சிற்றன்னை என இப்னு ஜவ்ஸி குறிப்பிடுகின்றார்.[30]*

*இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதென நிறுவும் முயற்சியில் பெரும்பாலான அறிஞர்கள் நபிகளாருக்கும் உம்மு ஹராமுக்குமிடையே செவிலித்தாய் உறவை நிறுவுதற்குப் பிரயத்தனம்*

மேற்கொண்டுள்ளது இதிலிருந்து புலனாகின்றது. எந்த மதீனப் பெண்மணியும் நபிகளாரின் செவிலித் தாயாய் இருந்ததாக நிறுவப்பட்ட வரலாற்றுக் குறிப்பெதுவுமில்லை. நபிகளாருக்கும் உம்மு ஹராமுக்குமிடையே இரத்த உறவோ செவிலி உறவோ நிலவியதென்பதை அல் - திம்யாதி (ம. ஹி. 705) உறுதியாக மறுக்கின்றார். நபிகளாருக்கு முலைப்பால் ஊட்டிய பெண்கள் அறியப்பட்டிருக்கின்றார்கள். உம்மு ஹராம் அவர்களுள் அடங்கவில்லை என்பார் அவர். மேலும், நபிகளாரின் பாட்டனாருக்கும் உம்மு ஹராமுக்கும் இடையே செவிலி உறவுகள் இருந்தமையையும் அவர் மறுத்துரைக்கின்றார். அத்துடன் நபிகளாரின் கொள்ளுப் பாட்டியான ஸல்மாவுக்கும், உம்மு ஹராமுக்கும் இடையில் எவ்வித இணைப்பும் இல்லையெனக் கூறும் அல்-திம்யாதி, இருவரதும் வம்சாவளிப் பட்டியலையும் தருகிறார்.(31) அவர்களுக்கிடையிலான தொடர்பு, நான்கு தலைமுறையினர்க்கும் முன்னரானது எனக் காட்டித் தருவார் அவர். அவர்களுக்கிடையே ஏதும் செவிலியுறவு இருந்திருக்கக் கூடுமாயின், அதனை நபிகளாருக்கும் உம்மு ஹராமுக்குமிடையிலான உறவுக்கு அடிப்படையாகக் கொள்ளல் முடியாது என்பது அவரது நிலைப்பாடு.(32)

உம்மு ஹராமின் சகோதரி உம்மு ஸுலைமும் நபியின் அன்னையான ஆமினா பின்த் வஹ்பும் செவிலிச் சகோதரிகள் என்ற இப்னு ஜவ்ஸியின் கருத்து வலிந்து பெறப்பட்டதாகும். உம்மு ஸுலைம், ஆமினாவின் செவிலிச் சகோதரியெனில் இருவரும் பெரும்பாலும் ஒரே வயதினராய் இருத்தல் வேண்டும். நபிகளார் பிறக்கும் போது அன்னை ஆமினாவுக்கு வயது முப்பது.(33) எனவே, நபிகளார் மதீனாவினுள் பிரவேசிக்கும் போது உம்மு ஸுலைமுக்கு வயது ஏற்கனவே 80 அல்லது 82 ஆக இருந்திருக்கும். வரலாற்றுக் கணிப்பு இதனை உறுதிப்படுத்துவதாக இல்லை. நபிகளார் மதீனாவுக்கு வந்ததும் உம்மு ஸுலைம் தனது புதல்வர் அனஸ் இப்னு மாலிக்கை நபிகளாரிடம் கூட்டிச் சென்று அன்னாருக்குப் பணிவிடை புரியவென அவர்களிடம் ஒப்படைத்தார். மாலிக்குக்கு அப்போது எட்டு அல்லது பத்து வயதுதானிருக்கும்.(34)

அப்படியாயின், அப்போது உம்மு ஸுலைமின் வயது சுமார் 71 அல்லது 73 என்றாகின்றது. முதல் கணவர் மாலிக் இப்னு நத்தார் மூலம் உம்மு ஸுலைமுக்குக் கிடைத்த ஒரேயொரு பிள்ளைதான் மாலிக் என்பதும் நினைவிற் கொள்ளப்படல் வேண்டும்.(35)

உயிரியல் இயல்பின்படி பெண்களுக்கு வயது எழுபதைத் தாண்டிவிட்டால் மாதவிடாய் இறுதியாக நின்று போயிருப்பதன் காரணமாக கருத்தரிக்க முடியாதுபோகும். இது ஒருபுறத்திருக்க உம்மு ஸுலைம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பின் அபூ தல்ஹாவை மணந்து அபூ உமைர், அப்துல்லாஹ் ஆகிய இரு பிள்ளைகளுக்குத் தாயானார்.(36) அவ்வாறாயின் அபூ தல்ஹாவுடனான தனது திருமணத்தின் போது உம்மு ஸுலைம் 84 வயதினராக இருந்திருக்க வேண்டும். உம்மு ஸுலைமின் அழகினால் கவரப்பட்டே அபூ தல்ஹா அவரை மணக்க விரும்பியதாக வரலாறு கூறுகின்றது.(37) அப்போது அபூ தல்ஹாவுக்கு 25 அல்லது 30 வயதுதானிருக்கும்.(38) எனவே, உம்மு ஸுலைமின் வயதும் 25 அல்லது 30 ஆகவே இருந்திருத்தல் வேண்டும். எனவே இந்த குறிப்பிட்ட விவகாரத்தின் போது, உம்மு ஸுலைம் நபிகளாரை விட 23 அல்லது 28 வயது இளையவராக இருந்துள்ளார். அவ்வாறெனில், உம்மு ஸுலைம் எவ்வாறு நபிகளாரின் தாயார் ஆமினாவின் செவிலிச் சகோதரியாய் இருந்திருக்க முடியும்.

இதன் பின்னணியில், உம்மு ஹராமுக்கும் நபிகளாருக்கும் செவிலி உறவு இருந்ததென்ற கருத்து நிரூபிக்க முடியாததாகும். இக்கருத்தை அறிஞர்கள் வெறும் ஊகத்தின் அடிப்படையிலேயே உருவாக்கினர் என்பது வெளிப்படை. இதனாலேயே அபூ பக்கர் இப்னு அல்-அரபி, அல் - திம்யாத்தி போன்ற அறிஞர்கள் நபிகளாருக்கே உரிய விசேட உரிமைகள் என்ற கருத்தை உருவாக்கினர்.(39) இந்த முன்மொழிவு நபிகளாருக்கும் உம்மு ஹராமுக்குமிடையே ஒருபோதும் செவிலி உறவு நிலவவில்லை என்ற கருத்துக்கு மேலும் வலுவூட்டுகின்றது. நபிக்கும் உம்மு ஹராமுக்கு மிடையிலான உடல் ரீதியான தொடர்பு, நபிகளாரின் விசேட உரிமைகளின் பாற்படும் என்ற கருத்தும் வெறும் ஊகத்தின்

அடிப்படையிலானதாகும். எத்தனை பெண்களையும் மணக்க லாம் என்பதுபோன்ற அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட பிரத்தி யேகச் சலுகை நபிகளாருக்கு இருந்ததில் எவ்விதச் சந்தேகமும் இல்லை. அது குறித்து குர்ஆனிலும் ஆதாரபூர்வமான ஹதீஸிலும் சந்தேகத்துககு இடமற்ற தெளிவான அறிவிப்புகள் உள்ளன.(40) எனினும் உறவினரல்லாத ஒரு பெண் தமது தலையில் பேன் பார்ப்பதற்கு நபிகளாருக்கு உரிமையிருந்ததாக குர்ஆனிலோ ஹதீஸிலோ எவ்விதக் குறிப்பும் இல்லை. நபிகளாரைப் பற்றி எதையும் திட்டவட்டமாக அறிவிப்பதற்கு உறுதியான அத்தாட்சி கள் அத்தியாவசியம். வெறும் ஊகங்கள் வலுவானவையாக அமைவதில்லை.

விசுவாசம் தெரிவித்து சத்தியப் பிரமாணம்செய்த பெண் களுடன் கைலாகு செய்ய மறுத்துவிட்ட நபிகள் பிரான் உறவில் லாத ஒரு பெண் தனக்குப் பேன் பார்க்க அனுமதித்தார் என்பது சாத்தியப்படாத ஒரு கருமமாகும்.(41) சத்தியப் பிரமாணம் செய்யும் புனித கருமத்துக்காக பெண்களின் கைகளைத் தம் கரங்களில் நபிகளார் எடுத்திருந்தால் அதனையிட்டு எவரும் கேள்வியெழுப் பியிருக்க மாட்டார். எனினும் அன்னார் அதனைத் தவிர்த்துக் கொண்டார்கள். நாம் எடுத்துக் கொண்டுள்ள இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதெனக் கொள்ளப்படின் மனிதர்கள் இதனைத் துஷ்பிரயோகம் செய்ய முற்படுவர். மனிதரைத் தவறான வழி யில் இட்டுச் செல்லக்கூடிய எதனையும் நபிகளார் ஒருபோதும் சொன்னதுமில்லை, செய்ததுமில்லை. இந்த விவகாரத்தைச் சூழ்ந் துள்ள சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், நபிகளாரின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படாமல் காப்பதற்கும் ஒரேவழி, இந்த ஹதீஸ் போலியானதென அறிவிப்பதே.

### 7. அதிக மதிகம் பாபம் புரியுமாறு மக்களுக்கு ஆர்வமூட்டடல்:

முஸ்லிமும் (புஹாரி தவிர்ந்த) மற்றவர்களும் அபூ ஐயூப், அபூ ஹுரைரா இருவரதும் ஆதாரத்துடன் பின்வரும் ஹதீஸைப் பதிவுசெய்துள்ளனர்:

*அல்லாஹ்வின் தூதர் கூறினார்கள்: ''யாருடைய கைகளில் எனது ஆன்மா உள்ளதோ அவன்மீது ஆணையாக! நீங்கள் பாவம் புரியாவிடின் அல்லாஹ் உங்களை அழித்துவிட்டு, பாவம் புரிந்த பின் அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்கும் ஒரு சமுதாயத்தை கொணர்வான். பின்னர் அல்லாஹ் அவர்களுக்கு மன்னிப்பு வழங்குவான்.''*[42]

இங்கு எமக்குச் சொல்லப்படுவது, மனிதன் துணிந்து பாவம் செய்ய வேண்டும். அவன் பாவம் செய்யாவிட்டால் செய்த பாவங்களுக்குப் பச்சாதாபப்பட்டு பாவமன்னிப்பு கேட்பதற்கு அவனுக்குச் சந்தர்ப்பம் கிட்டாது. வேறு வார்த்தைகளில் கூறு வதானால், ஒரு சமூகம் குறைந்தளவு பாவம் புரிந்து பயபக்தியுடன் வாழ்ந்தால் அந்த சமூகத்தின் இருப்பு நீடிக்காது. அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்பதற்காக வேண்டி, உம்மத்தினர் பாவங் களில் உழல வேண்டுமென நபிகளார் உற்சாக மூட்டியிருப்பார் களென யாரும் கற்பனை செய்வார்களா? இமாம் முஸ்லிமின் விளக்கவுரையாளரான அந் - நவவி இவ்விடயம் குறித்து எதுவும் சொல்லாமல்விட்டது விசித்திரமாகும். அவரைப் பொறுத்த மட்டில் இந்த ஹதீஸை யிட்டு அவருக்கு யாதொரு பிரச்சினையும் இல்லையென்பதே இதன் அர்த்தம்.

பாவங்களில் மூழ்கிக் கிடந்ததனால் சமூகங்கள் அழிக்கப் பட்டதனை அல் குர்ஆன் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றது (6:6; 8: 52,54 இன்னபிற). நற்கருமங்கள் புரிவோருக்கு மட்டுமே இம்மையிலும் மறுமையிலும் நிம்மதியான வாழ்வுண்டு என அல்லாஹ் நன்மாராயம் கூறுகின்றான் (2:25; 10:9; 16:197 இன்ன பிற) அழகிய நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளுமாறு குர்ஆன் மனுக்குலத்துக்கு அழைப்புவிடுக்கின்றது (25:62-74). அவை அவர் களை தீய எண்ணங்களிலிருந்தும் தீயச் செயல்களிலிருந்தும் பாதுகாக்கும். மனிதனைப் பாவம் புரியவைக்கும் ஷைத்தானின் வஞ்சக வலையில் வீழ்ந்து விடாதிருக்குமாறு விசுவாசிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது. அன்றாட மனித வாழ்வில் நிகழக் கூடிய தவறுகளுக்காக விசுவாசிகள் எந்நேரமும் அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்க வேண்டுமென அறிவுறுத்தப் படுகின்றனரேயன்றி,

அதனால் மனிதர்கள் மென்மேலும் பாவம் புரியுமாறு தூண்டப் படுகின்றார்கள் என்று அர்த்தமல்ல. பாவம் நிறைந்த வாழ்க்கை நாசம் விளைவிக்குமேயன்றி நன்மையளிக்கப் போவதில்லை. உளவியல் ரீதியாக மனிதன் வேண்டுமென்றே பாவம் செய்து கொண்டும் செய்த பாவங்களுக்காகப் பச்சாதாபப்பட்டுக் கொண்டு மிருந்தால், அவன் உண்மையில் பயபக்தியுள்ள வாழ்க்கையை வாழ்வான் என எதிர்பார்த்தல் முடியாது. பாவங்கள் அதிகரித்தால் அது சீரழிவில்தான் (ஃபஸாத்) முடியும். (30:41-42) அத்தகு நிலைமை, குர்ஆனின் தீவிர கண்டனத்தையே ஈட்டும்.

ஹதீஸில் பாவங்களைக் குறிக்கும் சொல் 'துனூப்' என்பதாகும். பாவங்கள் சிறுபாவம், பெரும்பாவம் என இருவகைப்படும். பெரும்பாவத்தில் (ஷிர்க் (இணைவைத்தல்)குக்கும் மேலாக) தகாத பாலுறவு, அநியாயக் கொலை, கொள்ளை, களவு, பிறர் உரிமையைப் பறித்தல், பெற்றோருடன் தவறாக நடத்தல், கொடுக் கல் வாங்கலில் நேர்மையின்மை முதலியனவும் இன்னபிறவும் அடங்கும். பெரும் பாவங்கள் சட்ட நடவடிக்கையெடுக்கப்படு வதற்கும் தண்டனைக்கும் உரியன. சம்பந்தப்பட்ட ஹதீஸ் சிறு பாவம் மட்டுமன்றி பெரும்பாவம் புரிவதற்கும் உற்சாக மூட்டு வதாய்த் தோன்றுகிறது.

நபிகள் பெருமான் (ஸல்) அராபியத் தீபகற்பத்தில் இஸ்லா மியக் கொள்கைகளின் அடிப்படையில் இறைபக்தியும் உன்னத விழுமியங்களும் கொண்ட சமூகமொன்றை நிறுவினார்கள். நபி களார் மக்களை சுதந்திரமாகப் பாவங்களில் ஈடுபட அனுமதித் திருந்தால் அரபிகள் அவர்களது கடந்த கால வாழ்விலிருந்து தங்களைத் துண்டித்துக் கொள்ள வேண்டிய அவசியம் நேர்ந் திராது. அரபு தீபகற்பத்தில் அமைதியான சகாப்தமொன்று உதய மாகியிராது. இஸ்லாத்தின் முழு கட்டமைப்பும் ''நன்மையை ஏவுதல், தீமையைத் தடுத்தல்'' - அல்-அம்ர் பி அல் மஃரூஃப் வ அல்-நஹ்யி அனல் முன்கர்- என்பதை அடிப்படையாகக் கொண் டது. இஸ்லாத்துக்கும் அதன் அடிப்படைக் கொள்கைகளுக்கும் ஒவ்வாத இந்த ஹதீஸின் எதிர்பார்ப்புக்கேற்ப இஸ்லாத்தின் அடிப் படையை மாற்றியமைக்கக் கூடுமா?

## *8. உமர் இப்னு கத்தாபின் வெள்ளிக்கிழமை உபந்நியாசமும் ஆயத் அல்-றஜ்மும்*

*இமாம் புஹாரியும் முஸ்லிமும் மற்றவர்களும் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸின் ஆதாரத்துடன் இரண்டாவது கலீஃபா உமர் இப்னு கத்தாபின் வெள்ளிக்கிழமை உபந்நி யாசத்தையும் அதன் பின்னணியையும் பதிவுசெய்துள்ளனர். இமாம் புஹாரி மட்டுமே அதனை முழுமையாக எடுத்தாண்டுள்ளார். அவர் கூறுகிற வண்ணம் அந்த விவரம் கீழே தரப்படுகின்றது:*

*(அப்துற் றஹ்மான் இப்னு அவ்ஃபின் கூற்றுப்படி மக்கா வுக்குப் புனித யாத்திரை வந்திருந்த கலீஃபா உமரிடம் யாரோ வொருவர் குறிப்பிட்ட ஒரு மனிதர் சொன்ன பின்வரும் கருத்தை அறிவிக் கின்றார்:) ''உமர் இறந்துவிட்டால் நான் நிச்சயமாக இன்னாருக்கு (தல்ஹா இப்னு உபைதுல்லலாஹ்வுக்கு) விசுவாசப் பிரமாணம் செய்வேன். அல்லாஹ்மீது ஆணையாக! அபூபக்கர் தெரிவுசெய்யப்பட்டமை தவறுதலாக நிகழ்ந்ததாகும். அது சீக்கி ரமே முடிந்துவிட்டது.'' இதனைக் கேட்டுக் கோபமுற்ற உமர் ''இன்றிரவு நான் மக்கள் முன்னிலையில் நின்று, தலைமைத்து வத்தை அபகரிக்க நினைப்போருக்கு எச்சரிக்கை விடுக்கப் போகிறேன்'' என்றார். அப்போது அப்துற் றஹ்மான் இப்னு அவ்ஃப், ஹஜ் காலத்தில் அற்பர்கள், அறிவிலிகள் உட்பட பல் விதமான மக்களும் ஒன்றுகூடுவதால், அவ்வாறு செய்ய வேண் டாமென ஆலோசனை தெரிவித்தார். ''நீங்கள் பேசவிரும்பும் கூட்டத்தில் அவர்களின் ஆதிக்கம் காணப்படும். உங்கள் வார்த் தைகளை அவர்கள் எவ்விதப் புரிதலுமின்றி திரித்துப் பொருள் கொள்வர். எனவே மதீனாவுக்குத் திரும்பும்வரை பொறுத் திருங்கள். மதீனா ஹிஜ்ராவினதும் சுன்னாவினதும் தலம். அங்கு நீங்கள் அறிஞர்கள் மத்தியில், உயர் மக்கள் மத்தியில் இருப்பீர் கள். அவர்கள் உங்கள் வார்த்தைகளைச் சரியான அர்த்தத்தில் புரிந்துகொள்வர்.'' (இந்த ஆலோசனையை உமர் ஏற்றுக்கொண் டார். அங்கு உரை நிகழ்த்தாமல் மதீனா திரும்பியதும் முதலா வது கூட்டத்தில் தம் கருத்துகளை வெளியிடுவதற்குத் தீர்மானித்*

தார். அவர் மதீனா திரும்பியதும் முதலாவது வெள்ளியன்று இந்த உபந்நியாசத்தை நிகழ்த்தினார்)

‘‘நான் உங்களுக்கு ஒரு விடயத்தைச் சொல்லப் போகிறேன். எனது முடிவு நெருங்கி விட்டதோ நானறியேன். எனவே இதனைச் சொல்லவேண்டியது எனது கடமை. எனது வார்த்தைகளை உள் வாங்கி மனதில் இருத்திக்கொள்வோர் அதனை முடிந்தளவு பிறருக்கு எத்திவைக்க வேண்டும். இதனைப் புரிந்துகொள்ள முடியாதோர் என்மீது பொய்களைச் சாட்டக்கூடாது. நிச்சயமாக அல்லாஹ் முஹம்மதை உண்மையைக் கடைப்பிடிக்குமாறு செய்து அவருக்குத் தனது வேதத்தை இறக்கிவைத்தான். அந்த இறைவெளிப்பாடுகளில் ஒன்றுதான் ஆயத் அல்-றஜ்ம் (கல் லெறிந்து கொல்லல் சம்பந்தமானது). அதனை நாங்கள் படித்து, உள்வாங்கி மனனஞ் செய்துள்ளோம். நபிகளார் ‘றஜ்ம்’ சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார்கள். நாமும் அவ்வாறே செய்தோம். அல்லாஹ்மீது ஆணையாக! காலப்போக்கில் ‘அல்லாஹ்வின் திருமறையில் ஆயத் றஜ்மை நாங்கள் காணவில்லை’ என யாரா வது சொல்லக்கூடுமென அஞ்சுகிறேன். இவ்வாறு அல்லாஹ் வின் கட்டளை ஒன்றைப் புறக்கணித்து விடுவதால் அவர் வழி தவறி விடுகிறார். நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! மண முடித்த ஆணும் பெண்ணும் விபசாரத்தில் ஈடுபட்டால் அவர் களைக் கல்லெறிந்து கொல்வது அல்லாஹ் விதித்த தீர்ப்பு. இச்செயல் சாட்சிகள் மூலம், கர்ப்பமடைதல் மூலம், அல்லது சுய ஒப்புதல் மூலம் நிரூபிக்கப்படுவது. ‘உங்களின் இரத்த உறவை உங்கள் தந்தையைத் தவிர வேறு யாருடனும் தொடர்புபடுத்தாதீர் கள்’ என நாங்கள் திருமறையில் காண்கிறோம். உங்களின் வம்சாவளியை உங்களின் தந்தையைத் தவிர வேறு எவருடனும் தொடர்புபடுத்தல் மத நிந்தனையாகும். நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! மரியமுடைய மகன் ஈசாவை மேன்மைபடுத்தி விட்டதுபோல் நீங்கள் என்னை மேன்மைப் படுத்தாதீர்கள். நான் அல்லாஹ்வின் அடியான், அவனின் தூதர் என்று மட்டும் கூறுங்கள்’’ என நபிகளார் கூறினர். ‘உமர் இறந்துவிட்டால் நான் இன்னாருக்கு விசுவாசப் பிரமாணம் செய்வேன்’ என யாரோ

சொன்னதாக எனக்குத் தகவல் கிட்டியது. அபூபக்கர் தெரிவு செய்யப்பட்டது தவறுதலாக நிகழ்ந்ததாகும்; அது சீக்கிரம் முடிவடைந்து விட்டது எனச் சொல்லி யாரும் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். அது அவ்வாறுதான் நிகழ்ந்ததென்பதில் சந்தேகமில்லை. ஆனால் அல்லாஹ் அதன் தீங்குகளை பாதிப்பை அகற்றிவட்டான். உங்களில் அபூபக்கருக்குச் சமானமானவர் எவருமில்லை. மக்களைக் கலந்தாலோசியாமல் யாருக்கேனும் விசுவாசப் பிரமாணம் செய்பவர் தனக்கும், விசுவாசப் பிரமாணம் செய்யப்பட்டவருக்கும் மரண ஆபத்தை வரவழைத்துக் கொள்கின்றார். நபிகளார் காலமானதும் ஆதரவாளர்கள் (அன்சாரிகள்) பனூ ஸய்தாவின் இல்லத்தில் கூடியிருப்பதாக நாம் கூறப்பெற்றோம். மேலும் அலியும் ஸுபைரும் அவர்களை நெருங்கியோரும் எம்மிடமிருந்து விலகி நின்றனர். புலம் பெயர்ந்தவர்கள் (முஹாஜிரீன்கள்)அப்போது அபூபக்கரைச் சூழ்ந்து நின்றனர். நான் அபூபக்கரிடம் 'நாம் எமது ஆதரவாளர்களான (அன்சாரிகள்) நம் சகோதரர்களிடம் செல்வோம்' எனக் கூறினேன். நாம் அவர்களிடம் சென்றோம். நாங்கள் அவர்களை நெருங்கும்போது அவர்களில் நல்லோரான இருவரைச் சந்தித்தோம். ஆதரவாளர்களைச் சேர்ந்த எம் சகோதரர்களைச் சந்திக்க விரும்புகிறோம் என நாம் சொன்னபோது அவர்கள் அவர்களிடம் செல்லவேண்டாமென எம்மைத் தடுத்தனர். நாம் என்ன தீர்மானித்துள்ளோமோ அதன்படி நடக்குமாறு எங்களிடம் கூறினர். 'அல்லாஹ்மீது ஆணையாக! நிச்சயமாய் நாம் அவர்களிடம் செல்வோம்' என்றேன். நாம் பனூ ஸய்தாவின் இல்லத்தையடைந்தபோது அவர்கள் மத்தியில் ஒரு மனிதர் தன்னை போர்த்துக் கொண்டு அமர்ந்திருக்கக் கண்டோம். இவர் யார் என நான் கேட்டேன். இவர் ஸஅத் இப்னு உபாதா என அவர்கள் பதில் கூறினர். அவருக்கு என்னவென நான் கேட்டேன். அவர் சுகவீனமுற்றிருக்கிறார் என்றனர். நாம் அமர்ந்ததும் அவர்களின் பேச்சாளர் எழுந்து நின்று அல்லாஹ்வைப் புகழ்ந்துவிட்டு பேசத் தொடங்கினார். ''நாம் அல்லாஹ்வினதும் பெரும்பான்மையான முஸ்லிம் இராணுவத்தினதும் ஆதரவாளர்கள். ஏ புலம் பெயர்ந்

*தோரே! நீங்கள் ஒரு சிறுகுழுவினர். உங்களில் சிலர் எங்களைப் புறந்தள்ளிவிட்டு (கலீஃபா பதவிக்கான) எமது உரிமையைத் தடுக்க முற்பட்டு விட்டனர்.'' அவர் நிறுத்தியதும் நான் பேச விரும்பினேன். அபூபக்கர் பேசும் முன்னால் பேசுவதற்கு நான் ஒரு பேச்சைத் தயாரித்து வைத்திருந்தேன். அவருக்கு ஆத்திரமூட்டு வதைத் தவிர்த்துக் கொள்வது எனது வழக்கம். அபூபக்கர் சற்று பொறுக்குமாறு என்னிடம் கூறினார். பின்னர் அவரே பேசத் தொடங்கினார். அவரது பேச்சு என்னுடையதைவிட இங்கிதமாக வும் நிதானமாகவும் இருந்தது. அல்லாஹ்மீது ஆணை! நான் தயாரித்திருந்த பேச்சில் எனக்கு விருப்பமான ஒரு வசனத்தைக்கூட அவர் தவறவிடவில்லை. அவரின் பேச்சு நான் தயாரித்திருந்ததை விட அழகாய் அமைந்தது. அவர் கூறினார்: உங்களைப் பற்றி நீங்கள் கூறிய நல்லவைகளுக்கெல்லாம் நீங்கள் பூரணமான தகுதி உடையவர்களே. ஆனால் கிலாஃபத்தைப் பொறுத்தவரை அது இந்த குறிப்பிட்ட குறைஷிக் கூட்டத்தினர்க்கு மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வம்சாவளியையும் வாழ்வமைப்பையும் பொறுத்தவரை அரபிகள் மத்தியில் அவர்களே மேலானவர்கள். நான் இவ்விரு மனிதர்களில் ஒருவரை உங்களுக்காக அங்கீ கரிக்கிறேன். எனவே அவர்களில் ஒருவருக்கு விசுவாசப் பிரமா ணம் செய்யுங்கள்.'' அவர் என்னுடைய கையையும் எம்மோடு வீற்றிருந்த அபூ உபைதா இப்னு அல் - ஜர்ராஹ்வுடைய கையை யும் பற்றினார். அவர் கூறிய எதனையும் நான் வெறுக்கவில்லை, அந்தப் பிரேரணையொன்றைத் தவிர. அபூபக்கர் பிரசன்னமாயி ருக்கும் ஒரு மக்கள் கூட்டத்தின் தலைமையை ஏற்பதை விட மரணமுறுவதையே நான் விரும்பினேன். அப்போது ஆதரவாளர் களில் ஒருவர், ''நான்தான் மத்தியஸ்தத் தூண்... எங்கள் மத்தி யிலிருந்து ஒரு தலைவரும் (குறைஷிகளாகிய) உங்களிடமிருந்து ஒரு தலைவரும் இருக்க வேண்டும் (என நான் முன்மொழிகிறேன்)'' என்றார். அப்போது பெரும் பரபரப்பு ஏற்பட்டது. குழப்ப நிலை யிலிருந்து ஒதுங்கிய நான், அபூபக்கரிடம், ''கையை நீட்டுங்கள்'' என்றேன். அவர் கையை நீட்டவும் நான் அவருக்கு விசுவாசப் பிரமாணம் செய்தேன். அதனைத் தொடர்ந்து புலம் பெயர்ந்த*

*வர்களும் (முஹாஜிரீன்கள்), ஆதரவாளர்களும் (அன்சாரிகள்) விசுவாசப் பிரமாணம் செய்தனர். பின்னர் நாம் ஸஅத் இப்னு உபாதாமீது பாய்ந்தோம். ''நீங்கள் ஸஅத் இப்னு உபாதாவைக் கொன்றுவிட்டீர்கள்'' என்று யாரோ கத்தினார். ''அல்லாஹ் அவரைக் கொன்றுவிட்டான்'' என்றேன் நான். (உமர் தமது வெள்ளிக்கிழமை உபந்நியாசத்தை இவ்வாறு முடித்தார்...) அல்லாஹ்மீது ஆணையாக! அபூபக்கரின் தேர்வை விட வேறு எதையும் பொருத்தமானதாய் நாம் காணவில்லை. தலைவரைத் தெரிவுசெய்யாமல் நாம் வெளியேறியிருந்தால், அவர்கள் தங்களிலிருந்தே வேறொருவரைத் தெரிவுசெய்திருப்பர். விரும்பியோ விரும்பாமலோ நாம் அதற்கு உடன்பட நேர்ந்திருக்கும். அதனை எதிர்த்திருந்தால் கலகம் மூண்டிருக்கும். எனவே முஸ்லிம்களைக் கலந்தாலோசியாமல் யாரோ ஒருவருக்கு விசுவாசப் பிரமாணம் செய்பவர் தனக்கு மட்டுமன்றி விசுவாசப் பிரமாணம் செய்யப்படுபவருக்கும் மரண ஆபத்தை உண்டுபண்ணுகிறார்.''*[43]

இந்த அறிவிப்பில் பல விடயங்கள் அடங்கியுள்ளன: 1. உமருடைய வெள்ளிக் கிழமை உபந்நியாசத்தின் பின்னணி 2. உபந்நியாசத்தின் அறிமுகவுரை 3. அபூ பக்கர் முதல் கலீஃபா வாகத் தெரிவுசெய்யப்படும் நிகழ்வு 4. அவர் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னரான நிகழ்வு 5. உமர் மக்களுக்கு விடுத்த எச்சரிக்கை. இந்த அறிவிப்பின் உண்மைகளைத் தெரிந்துகொள்வதற்கு, இந்த ஐந்து விடயங்களும் தனித் தனியாக பரிசீலிக்கப்பட வேண்டும்.

## பின்னணி:

உமரின் மரணத்துக்குப் பின் இன்னாரை ஆதரிக்கப் போவதாக ஒருவர் குறிப்பிடுகின்றார். அவரே, கிலாஃபத் பதவிக்கு அபூ பக்கர் தெரிவு செய்யப்பட்டமை குறித்துத் தான் கொண்டுள்ள எண்ணத்தையும் வெளியிடுகின்றார். இதனால் சினம் கொண்ட உமர், அபூபக்கரின் தெரிவு சம்பந்தமான உண்மைகளை மக்களுக்கு வெளியிடத் தீர்மானித்தார். ஆனால் அபிப்பிராயம் வெளியிட்ட அந்த நபர் வெளிப்படையாக எதையும் தவறுதலாகச்

சொல்லிவிட வில்லை. தலைவரைத் தெரிவுசெய்யும் உரிமை ஒவ்வொரு தனிநபருக்கும் உரியதே.

ஒருவர் குறிப்பிட்ட ஒருவருக்காகத் தன் விருப்பைத் தெரி விப்பது, சட்டவிரோதமான அல்லது விரும்பத்தகாத செயல் என கருத முடியாது - இங்கு குறிப்பிட்ட ஒருவர் என்பது தல்ஹா இப்ன் உபைதல்லாவைக் குறிக்கின்றது என சில அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். உண்மையில் அது அவரது சனநாயக உரிமை. மேலும் அபூபக்கர் தெரிவுசெய்யப்படுவதை ஆரம்பத்தில் அலி, அல்- ஸுபைர் போன்றோரும் விரும்பவில்லை. ஆயினும், அவர் களின் மாற்றுக் கருத்து உம்மாவுக்குப் பாதகம் விளைவிப்பதாகக் கருதப்படவில்லை. அலியும், ஸுபைரும் குறைகூறப்பட முடியாத வர்களாயின், இந்த அநாமதேய நபர் மட்டும் ஏன் குழப்பத்தை உண்டு பண்ணுபவராய்க் கருதப்படல் வேண்டும்?

இந்த அறிவிப்பைக் கேட்டு உமர் சினங்கொண்டா ரென்பது பெரும் புதிராகவுள்ளது. உமர் கோபக்காரர் என்பது உண்மைதான். ஆனால் இஸ்லாத்தை ஏற்றதிலிருந்து அவரின் கோபக்குணம் பெரிதும் மாறிவிட்டதையும் மத விவகாரங்களில் பாரதூரமான அம்சங்கள் குறித்தே அவர் கோபமுற்றார் என்பதையும் நாம் காண்கிறோம். அவர் அடங்காக் கோபக்காரராக இருந்திருப்பின் சிறந்தவோர் ஆட்சியாளராக இருந்திருக்க முடியாது. இந்த அபிப்பிராயத்தைக் கேள்வியுற்று உமர் சினமடைந்தா ரென்பது கற்பனைசெய்ய முடியாததாகும். அவர் இந்த விமர்சனத்தை யிட்டுக் கலவரமுற்றார் எனில் அதற்கு இந்த அறிவிப்பில் குறிப் பிடப்படாத வேறுகாரணம் ஏதேனும் இருந்திருத்தல் வேண்டும்.

## அறிமுகக் குறிப்புகள்

'ரத்து செய்யப்பட்டவை'(44) எனக் கூறப்படும் இரு குர்ஆன் வசனங்கள் மீதும் ஒரு ஹதீஸ் மீதும் மக்களின் கவனத்தை ஈர்க்கும் அறிமுகவுரையுடன் உமரின் உபந்நியாசம் தொடங்குகிறது. சம் பந்தப்பட்ட வசனங்கள் 'ஆயத் அல்-றஜ்ம்' (''வயது வந்த ஆணும் வயது வந்த பெண்ணும் விபசாரம் புரிந்தால் அவ்விருவரும்

கல்லெறிந்து கொல்லப்படல் வேண்டும்'') 'ஆயத் அல்-றக்ப்' ''உங்களின் இரத்த உறவை உங்களின் தந்தைமார்களைத் தவிர வேறு யாருடனும் தொடர்புபடுத்த வேண்டாம். நீங்கள் அப்படிச் செய்தால் அது இறை தூஷணையாகும்''. உபந்நியா சத்தில் மேற்கோள் காட்டப்பட்ட ஹதீஸ் ''மரியத்தின் மகன் மேன்மைப் படுத்தப்பட்டதுபோல் நீங்கள் என்னை மேன்மைபடுத்த வேண்டாம்'' என்பதாகும்.

உபந்நியாசத்தின் பிரதான விடயத்துக்கும் இந்தக் குறிப்பீடு களுக்கும் என்ன சம்பந்தம் என ஒருவர் சிந்திக்கக்கூடும். இரண் டுக்குமிடையே எத்தகைய தொடர்பையும் காண்பது சாத்திய மில்லை. அரபிகள் நாவன்மைமிக்கவர்கள்; சிறந்த சொற்பொழி வாளர்கள் என்பது பிரசித்தம். உமரும் நாவன்மை மிக்க சிறந்த சொற்பொழிவாளர். சந்தர்ப்பத்துக்குப் பொருந்தாத விடயங்களை அவர் கூறியிருக்க மாட்டார். அல்-முஹல்லப் இவற்றுக்கிடையே ஒரு தொடர்பை நிறுவ முற்படுகிறார். குர்ஆனிலும் ஹதீஸிலும் நிர்ணயிக்கப்பட்டிராத விடயங்களையிட்டு முடிவெடுப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை என்பதை வலியுறுத்து வதற்காகவே உமர் ரத்துசெய்யப்பட்ட இறைவசனங்களையும் ஹதீஸையும் மேற்கோள் காட்டுவதாக முஹல்லப் கூறுகிறார்.(45) இந்த ஊகம் தெளிவற்றது. இதனை ஏற்றுக்கொண்டாலும் 'ஆயத் அல்-றஜ்ம்', 'ஆயத் அல்-றக்ப்' முதலிய வசனங்களுக்கும் அபூபக்கர் தெரிவு செய்யப்படுவதற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. அபூபக்கரின் தெரிவு சம்பந்தமாய் ரத்துசெய்யப்பட்ட வசனங்களேதும் இருந்தி ருப்பின் உமர் அதனைக் குறிப்பிடுவதில் அர்த்தம் இருந்திருக்கும்.

உமர் எடுத்துக் காட்டிய 'ஆயத் அல்-றஜ்ம்' என்னவென அறிவிப்பில் குறிப்பிடப்படவில்லை. ரத்துசெய்யப்பட்ட மற்ற இறை வசனத்தை முழுமையாக எடுத்தாண்ட படியால் இதனையும் அவர் முழுமையாக எடுத்தாண்டிருக்க வேண்டும். ஏனைய ஆதாரங்களின்படி உமர் மேற்கோள் காட்டிய வசனம் الشيخ والشيخة إذا زنيا فارجموهما البته ''வயது வந்த ஆணும் வயது வந்த பெண்ணும் விபசாரம் புரிந்தால் அவ்விருவரும் கல்லெறிந்து

கொல்லப்படல் வேண்டும்.[46] கேட்கப்பட வேண்டிய முதல் கேள்வி: இது குர்ஆன் வசனமா? இஸ்லாத்தின் உன்னதமான சொற்பிரயோகங்களுடன் இது பொருந்துகின்றதா? குர்ஆனின் சொற்பிர யோகங்கள் குறித்து நிபுணத்துவம் வாய்ந்த அமீன் அஹ்ஸன் இஸ்லாஹியின் அவதானம் வருமாறு:

இந்த ஹதீஸ் மீது சிந்தனையைச் செலுத்தினால் ஒவ்வொரு கோணத்திலிருந்தும் இது நயவஞ்சகர்களின் இட்டுக்கட்டல் என்பது தெரியவரும். இதன் நோக்கம் திருக்குர்ஆனின் அதிகார பூர்வத்தின் மீது கேள்வியெழுப்பி சந்தேகப்படாத நெஞ்சங்களில் சில இறைவசனங்கள் திருமறையிலிருந்து புறந்தள்ளப்பட்டுள்ளன என்ற கருத்தை விதைப்பதாகும். முதலில் இதன் மொழியைக் கவனியுங்கள். நல்ல ரசனையுள்ள எவரும் இது திருமறை வசன மென ஒப்புக் கொள்வாரா? இது இறைவசனமா எனக் கவனிப் பது ஒருபுறமிருக்க இதனை நபிமொழியென்றேனும் கூறுவதற்கு ஆழ்ந்த புலமையும் ரசனையும் கொண்டோரால் சாத்தியமில்லை. குர்ஆனின் மிருதுவான வனப்பு மிக்க பட்டுத்துணியுடன் சணல் நாரினால் நெய்த ஒட்டுத்துண்டை இடைச் செருகலாக எங்கே பொருத்துவது? அல் குர்ஆனின் அழகிய மொழிநடைக்கும் சொற் சாதுர்யத்துக்கும் (ஆயத் அல்-றஜ்ம்) என்ற இந்த நவிற்சிக்கு மிடையே யாதொரு இணைப்பும் கிடையாது.[47]

திருமணமானவர் விபசாரம் புரிந்தால் அவரைக் கல்லெறிந்து கொலை செய்தல் சட்டபூர்வமான தென்பதை நிரூபிக்க உமர் இந்த வசனத்தைப் பயன்படுத்துவதாகக் காட்டப்படுகிறது. ‘முதிய ஆண்’, ‘முதிய பெண்’ என்ற பிரயோகங்கள் திருமணமான ஆணையும் திருமணமான பெண்ணையும் குறிக்குமா? செய்தியை இயல்பாக உள்ளடக்காத சொற்களை குர்ஆன் ஒருபோதும் உபயோகிப்பதில்லை. அவ்வாறு செய்தல் அதன் சொல்வன்மைக்கு முற்றிலும் மாறானதாகும். ‘ஆயத் அல்-றஜ்ம்’ பற்றிய பிரஸ்தாபம் பொருட்படுத்தத் தகாததென்றும் அதனை உமருடன் தொடர்பு படுத்தல் அவருக்கு இழைக்கும் அநீதி என்றும் இஸ்லாஹி கருதுகின்றார்.[48]

*மேலும் ''காலப்போக்கில் யாராவது, 'அல்லாஹ்மீது ஆணை யாக! குர்ஆனில் ஆயத் அல்-றஜ்ம்' ஐக் காணவில்லை' யெனக்கூறி குர்ஆனில் அல்லாஹ் விதித்துள்ள கடமையை நிறைவேற்றாமல் வழிதவறிவிடுவார் என அஞ்சுகிறேன்'' என்ற உமரின் கூற்று விபசாரத்தில் ஈடுபடும் மணம்முடித்த ஆணும் பெண்ணும் கல் லெறிந்து கொல்லப்படல் வேண்டுமென்பது அல்லாஹ்வின் தீர்ப்பு எனக் கூறல் விசித்திரமானதாய்த் தோன்றுகின்றது. கல் லெறிந்து கொல்லல் குர்ஆன் கூறும் கடமையா? குர்ஆன் கூறும் கடமை குர்ஆனிலேயே உள்ளது. அதில் இல்லாதது கடமை யாக மாட்டாது. 'ஆயத் அல்- றஜ்ம்' என்ற வசனம் குர்ஆனில் இல்லை யென்பதை உமர் அறிந்துதானிருப்பார். எனினும் அதனையவர் குர்ஆன் கூறும் கடமையாகச் சொல்கிறார். இது நகைப்புக்குரியது.*

## அபூபக்கர் கலீஃபாவாகத் தெரிவுசெய்யப்படும் நிகழ்வு

*அபூபக்கர் முதலாவது கலீஃபாவாகத் தெரிவுசெய்யப்பட்ட நிகழ்வை உமர் குறிப்பிடுகிறார். இது முற்றுமுழுதாக வரலாற்றி னால் உறுதிப்படுத்தப்பட்ட நிகழ்வெனினும் இது குறித்து தரப்படும் சிறு விவரங்கள் சந்தேகத்துக்குரியவை. உதாரணமாக அன்சாரிகள் (ஆதரவாளர்கள்) அதிகாரவெறி பிடித்தவர்களாய் சித்தரிக்கப்படுகின்றனர். அவர்கள் முஹாஜிரீன்களுடன் (புலம் பெயர்ந்தவர்களுடன்) அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்ப வில்லை. தாங்கள்தான் இஸ்லாத்தின் உண்மையான ஆதரவாளர் களென்றும் முஹாஜிரீன்களை விடவும் மேலானவர்களென்றும் கருதினர்.*

*இந்த விவரிப்பு அன்சாரிகளைப் பற்றிய குர்ஆனின் வர்ணனை யுடன் முரண்படுவதைக் காண்கிறோம்:*

> ''இன்னும் அவர்களுக்கு முன்பே (மதீனாவில்) வீடுகளையும், (அல்லாஹ்வின்மீது) விசுவாசத்தையும் கொண்டிருந்தார்களே அத்தகையவர்கள் (அன்சாரிகள்) புலம்பெயர்ந்து வந்தவர்களான (முஹாஜிரீன்களான) அவர்களை நேசிப்பார்கள். அத்துடன்

(புலம் பெயர்ந்துவந்த) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டவைகளுக்காகக் காழ்ப்புணர்ச்சிகொள்ள மாட்டார்கள். தங்களுக்குத் தேவையிருந்தபோதும் தங்களைவிட (முஹாஜிரீன்களான) அவர்களுக்கே முன்னுரிமை வழங்குவார்கள். இன்னும் எவர்கள் உலோபத்தனத்திலிருந்து தங்கள் ஆன்மாவைப் பாதுகாத்துக் கொண்டார்களோ அவர்களே வெற்றியாளர்கள்'' (59: 9).

*வரலாற்று ரீதியாக, முஹாஜிரீன்களின் நல்வாழ்வுக்காக அன்சாரிகள் பெரும்பாலும் எல்லாவற்றையுமே தியாகஞ் செய்தனர். அவர்கள் தம் வாரிசுரிமை சொத்தில் தமக்குரிய பங்கையும் முஹாஜிரீன்களுக்கு வழங்கினர். மதீனாவுக்கு வந்தவர்களை மனமுவந்து வரவேற்றனர்.(49) அவ்வாறானவர்கள் ஒரு தினத்திலேயே முஹாஜிரூன்களின் எதிரிகளாகி விடக் கூடுமா? அப்படியாயின் உபந்நியாசத்தில் அறிவிக்கப்பட்ட விதமாக அன்சாரிகளை உமர் வர்ணித்திருப்பாரென்பது ஐயங்களையே கிளறிவிடுகின்றது.*

## அபூபக்கர் கலீஃபாவாகத் தெரிவுசெய்யப்பட்டதன் பின் நிகழ்ந்த சம்பவம்

*அபூபக்கர் தெரிவுசெய்யப்பட்டவுடனே (முஹாஜிரீன்களும் அன்சாரிகளும் ஆகிய) இரு தரப்பினரும் -குறிப்பாக உமர் உள்ளிட்ட முஹாஜிரீன்கள்- தலைமைத்துவத்துக்கு அன்சாரிகளின் வேட்பாளராயிருந்த ஸஅத் இப்னு உபாதாவைத் தாக்கினர். அவரைப் பெரும்பாலும் கொன்றேவிட்டனர். விவகாரம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டபின் உபாதா ஏன் தாக்கப்பட வேண்டும் என்ற கேள்வி இங்கெழுகின்றது. ஸஅத் இப்னு உபாதா தலைமைத்துவத்துக்குப் பொருத்தமான ஓர் வேட்பாளராய் அவரது மக்களால் தெரிவுசெய்யப்பட்டிருப்பின் அதில் பிழையேதுமில்லை. உமரின் கூற்றுப்படி உபாதா சுகவீனமுற்றிருந்தார். எனினும் அவர் தாக்கப்பட்டார். அவர் தவறுசெய்திருப்பினும் சுகமடையும் வரை அவரைத் தொடாமல் விட்டிருக்க வேண்டும். உமரும் மற்றவர்களும் அவரைத் தாக்குவதற்கு, புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட*

*கலீஃபாவின் அனுமதியைப் பெற்றார்களா? இல்லையெனில், ஏன் அனுமதி பெறவில்லை? சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற வரின் முன்னிலையில் சட்டத்தை நினைத்தபடி கையிலெடுப்ப தற்குப் பிறருக்கு அனுமதி கிடையாது. அனுமதி வழங்கப்பட்ட தெனச் சொல்லப்பட்டால் இனிய சுபாவத்தினரான இரக்க குணம்படைத்த அபூபக்கர் தனது இஸ்லாமியச் சகோதரரொரு வரைத் தாக்குவதற்கு அனுமதியளித்திருப்பார் என்பது நம்பக் கூடியதல்ல. இத்தகைய தாக்குதல் இஸ்லாமிய சமூகத்தினுள் மேலும் பிளவையுண்டு பண்ணும் என்பதைத் தாக்கியவர்கள் அறிந்திருக்கவில்லையா? அறிவீனர்களே அத்தகைய செயலில் ஈடுபட்டிருக்க முடியும். உண்மையில் முஹாஜிரீன்களும் அன்சாரி களும் மதிநுட்பம் மிக்கவர்கள். அவர்கள் அத்தகைய ஈனச் செயலில் ஈடுபட்டார்களென்பது குர்ஆனில் விதந்துரைக்கப்பட் டுள்ள அவர்களின் உதார குணத்துக்கு மாசு கற்பிப்பதாகும்:*
''முஹம்மத் அல்லாஹ்வின் தூதர். அவரோடுள்ளவர்கள் யாவரும் நிராகரிப்பாளர்களுக்கு எதிராக வலிமையும் உறுதியும் கொண்டவர் கள். ஆனால் தங்களுக்குள் கருணையுள்ளம் படைத்தவர்கள்'' (48: 29).

## மக்களுக்கு உமரின் எச்சரிக்கை

*உமர் இறுதியாக, 'கலீஃபாவைத் தெரிவுசெய்வதை யாரும் தனியாக மேற்கொள்ளக் கூடாது' என எச்சரிக்கை விடுத்தார். ஆனால் அபூபக்கர் தலைமைப் பதவிக்கு உமர், அபூ உபைதா ஆகிய இரு பெயர்களைத் தாமாகவே பிரேரித்ததை உமர் தமது உரையில் குறிப்பிடுகிறார். அபூபக்கர் மற்றவர்களைக் கலந்தா லோசித்தாரா? அபூ பக்கரின் பெயரைப் பிரேரித்து அவர் கையில் விசுவாசப் பிரமாணம் செய்தபோது உமரும் அதைத்தானே செய்தார். அவர் சமூகத்தினருடன் கலந்தாலோசித்தாரா? அவர் தன்னிச்சையாய் நடந்துகொண்டதாகவே தெரிகிறது. அவர் அவ் வாறு செய்ததும் மற்றவர்களும் அவரைப் பின்பற்றினர். யாருடைய அபிப்பிராயம் உமருக்குக் கோபமூட்டியதோ அந்த மனிதரும் அடுத்து தெரிவுசெய்யப்பட வேண்டிய கலீஃபாவைப் பற்றித்*

தன் அபிப்பிராயத்தைத்தான் வெளியிட்டார். வரலாறு கூறுவது உண்மை யெனில் அவர் பிரேரித்தது தல்ஹா இப்னு உபைதுல் லாஹ்வின் பெயரை. நபியைப் பின்பற்றிய குறைஷியர்களுள் நபிக்கு மிகவும் விசுவாசமானவர்களில் ஒருவர்தான் தல்ஹா. தல்ஹா உம்மத்தின் சிறந்த தலைவர்களுள் ஒருவராகத் திகழ்வார் என அவர் பெயரைப் பரிந்துரைத்தவர் எண்ணியிருக்கலாம். அவர் செய்தது பிழையில்லை. உமரும் அதனையே செய்தார்.

இந்தப் பகுப்பாய்வின் வெளிச்சத்தில், வெள்ளிக்கிழமை உபந்நியாசத்தின் வடிவில் உமர் கூறியதாகச் சொல்லப்படுபவை யாவும் இட்டுக்கட்டப்பட்டவையாகவே தோன்றுகிறது. முதலில், உமரின் ஆளுமைக்கு களங்கம் ஏற்படுத்துவதையும், இரண்டாவது, உம்மத்தில் பிளவை உண்டுபண்ண முனைந்தார்களென அன்சார் கள்மீது பழிபோடுவதையும், இறுதியாக, குர்ஆன் மாற்றத்துக்கு உட்படக் கூடியது என்ற கருத்தை மக்கள் மனங்களில் விதைப் பதையும் இந்த அறிவிப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது என்றே கொள்ள வேண்டியுள்ளது. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் பிரச்சினையேதும் காணப்படாத போதிலும் இந்த அறிவிப்பு, ஆழமான பாதக விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பதால் இதனை ஆதாரபூர்வமானதெனக் கொள்ள இயல வில்லை.

### 9. அறிவிலும் மதத்திலும் பெண்கள் கொண்டுள்ள குறைபாடு

இமாம் புஹாரியும் முஸ்லிமும் மற்றவர்களும் அபூ ஸயீத் அல்-குத்ரி, அபூ ஹுரைரா ஆகிய இருவரதும் ஆதாரத்துடன் பின்வரும் ஹதீஸைப் பதிவுசெய்துள்ளனர்:

''நபிகளார் பெண்களை நோக்கி கூறினர்: 'பெண்களே! தான தர்மங்கள் செய்யுங்கள். நரகவாசிகளில் பெரும்பாலானோர் பெண் கள் என எனக்குக் காட்டப்பட்டுள்ளது.' பெண்கள் 'ஏன்?' என்று கேட்க, நபிகளார் கூறினர்: நீங்கள் அளவுக்கதிகம் சபிக்கின்றீர் கள். உங்கள் குடும்பத்துக்கு விசுவாசமில்லாமல் நடந்துகொள் கிறீர்கள். உங்களைப்போல் அறிவிலும் மத விவகாரங்களிலும்

குறைபாடுடைய, ஆண்களுக்கு தீங்கு விளைவிக்கின்ற வேறு ஜீவிகளை நான் கண்டதில்லை. அப்போது பெண்கள், 'அல் லாஹ்வின் றஸூலே! அறிவிலும் மதத்திலும் எங்கள் குறை பாடென்ன?' எனக் கேட்டனர். அப்போது நபிகளார், 'பெண் களின் சாட்சி ஆண்களின் சாட்சியில் பாதி எனக் கருதப்பட வில்லையா?' என்று கேட்டார். பெண்கள் 'ஆம்' என்றனர் அப்போது நபிகளார் 'அது பெண்களின் அறிவுக் குறைபாடுகளில் ஒன்று' எனக் கூறிவிட்டுத் தொடர்ந்து, 'நீங்கள் மாதவிடாய் காலத்தில் தொழுகையையும் நோன்பையும் விட்டுவிடுவதில் லையா?' எனக் கேட்டார். 'ஆம்' எனப் பெண்கள் அதனை ஒத்துக் கொண்டதும் நபிகளார் 'இது (பெண்களின்) மதக் குறைபாடு' என்றார்.[50]

ஆண்களை விடப் பெண்கள் அறிவிலும் மதத்திலும் குறை பாடுடையவர்களென இந்த ஹதீஸ் அறிவிக்கின்றது. நபிகளாரின் வாக்காகக் கூறப்படும் இந்த அறிவிப்பு, ஐயந் திரிபற்ற உண் மையா என்பதை அறிந்துகொள்வதற்கு இந்த ஹதீஸை மிகவும் நன்றாக அலசிப் பார்த்தல் அவசியம்.

சாதாரணமாக, கேட்கப்படும் கேள்விகள் சம்பந்தப்பட்ட விவ காரத்துக்குப் பொருந்துவதாய் இருத்தல் வேண்டும். இங்கு 'பெரும் பாலான பெண்கள் ஏன் நரகவாசிகளாய் இருக்க வேண்டும்?' எனப் பெண்கள் கேட்கின்றனர். அதற்குப் பதிலாக நபிகளார் மூன்று விடயங்களைக் குறிப்பிடுகிறார்கள்: 1. அளவு மீறி சபித்தல் 2. அளவுமீறிய நம்பிக்கைத் துரோகம் 3. அறிவிலும் மதத்திலும் குறைபாடு. முதலிரு காரணங்கள் விவகாரத்துடன் பொருந்துகின்றன. மூன்றாவது காரணம் அவ்வாறில்லை. நபிகளார் ஏனையவற்றுடன், அறிவுக் குறைபாட்டை விளக்குகையில், வழக் கில் ஒரு பெண் முழுச் சாட்சியாக நிற்க முடியாமையைக் குறிப்பிட்டு விட்டு மாதவிடாய் காலத்தில் தொழவும் நோன்பு நோற்கவும் முடியாமையை மதக்குறைபாடு என்கிறார்கள். இது விசித்திரமானதாகும். பெண்ணின் சாட்சி ஆணின் பாதிசாட்சியைக் குறிக்குமென அல்லாஹ்வே தன் திருமறையில் குறிப்பிடுகிறான்.

குறிப்பிட்டவொரு காரணத்துக்காக மாதவிடாயையும் அல்லாஹ்வே உருவாக்கினான். அவ்வாறெனில், இந்த இயற்கையான சட்டபூர்வமான நிர்ப்பந்தம் எப்படி பெண் நரகில் எறியப்படுவதற்குக் காரணமாகலாம்? அவர்களின் அறிவுக் குறைபாடும் மதக் குறைபாடும் அவர்களாகத் தேடிக்கொண்டதல்ல. அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்டவைகளுக்காக ஏன் அவர்களைப் பொறுப்பு சாட்ட வேண்டும்?

இந்த அறிவிப்பின்படி ஆண்களை வஞ்சிப்பதாகவும் அவர்களது மனங்களிலும் இதயங்களிலும் ஆதிக்கம் செலுத்தி அவர்களை வழிகெடுப்பதாகவும் நபி (ஸல்) பெண்களைக் குறை கூறுகிறார். இது அர்த்தமற்றதாகும். அறிவிலும் ஆற்றலிலும் குறைபாடுடைய பெண்கள் அறிவிலும் ஆற்றலிலும் மேம்பட்ட ஆண்களை அடக்கியாள்வது எப்படி? அறிவில் குறைந்தவர்களான பெண்கள் அறிவுமிக்கோரான ஆண்களை எப்படி வஞ்சிக்கவும் ஏமாற்றவும் முடியும்? உளவியலின்படி அறிவாற்றல் மிக்கோரே அறிவாற்றல் குறைந்தோரை அடக்கியாள முடியும். பெண்கள் உண்மையில் ஆண்களை அடக்கியாளவும் வழிகெடுக்கவும் செய்கின்றனரென்றால் அவர்கள் ஆண்களை விடவும் அறிவும் விவேகமும் கொண்டவர்கள் என்றுதானே அர்த்தம்?

நபிகளார் இரு உதாரணங்களை முன்வைப்பதாக இந்த ஹதீஸ் கூறுகின்றது. அவற்றுள் ஒன்று அறிவு குறைபாட்டை விளக்குகிறது. மற்றது மதகுறைபாட்டை விளக்குகிறது. அறிவு குறைவுக்கான உதாரணம் வழக்கு விவகாரத்தில் பெண் அரைசாட்சியாகக் கருதப்படத் தகுதியானவர் என்பது மட்டுமே. இங்கு அறிவு குறைபாடென்பது அறிவின்மையைக் குறிக்கும். அந்-நவவி, மதிநுட்பம் (அக்ல்) மூன்று அம்சங்களை உள்ளடக்கிய தென்கிறார். 1) அறிவு 2) வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைத் தகவல்கள் 3) பகுத்துணரும் திறன்.[51] இதிலிருந்து அறிவு குறைபாடு என்பது அறிவீனத்தையும் பகுத்துணரும் திறன் இன்மையையும் குறிக்கின்றது. அப்படியாயின் பெண்கள் மட்டும்தான் இக்குறைபாட்டுக்கு ஆட்படுகின்றார்களா? ஆண்களிடமும்

இக்குறைபாடு காணப்படுவது இயல்பாக உள்ளதல்லவா? அதே வேளை லட்சக்கணக்கான பெண்கள் ஆண்களை விட அறிவு மிக்கோராயும் மதிநுட்பம் உடையோராயும் காணப்படுகின்றனர். நபிகளாரின் மனைவியார் உம்மு ஸலமாவின் ஆலோசனை பற்றிய விவகாரம் ஒன்றினைப் பார்ப்போம். ஹுதைபியா உடன் படிக்கை தீர்மானமாகி விட்டது. மனக்கிலேசம் ஊட்டும் அதன் நிபந்தனைகளால் முஸ்லிம்கள் பெரிதும் கலவரமுற்றுக் காணப் பட்டனர். உம்ரா நிறைவேறியதைக் குறிக்கும் முகமாக பிராணி யொன்றைப் பலியிடுமாறு நபிபெருமான் கூறியபோது அவர்கள் அவ்வாறு செய்யாமல் நியாயமற்ற உடன்படிக்கை குறித்து தம் அதிருப்தியைக் காட்டுவதற்காக மௌனம் சாதித்தனர். நிலை மையை எவ்வாறு சமாளிப்பதென நபிகளார் யோசித்துக் கொண்டிக்கையில், அவருடனிருந்த அன்னாரின் மனைவி உம்மு ஸலமா நபிகளாரின் பிராணியை முதலில் பலியிடுமாறு நபிக்கு ஆலோசனை வழங்கினார். அப்போது நபியின் முடிவு மாற்ற முடியாத தென்பதையறிந்து மற்றவர்களும் அன்னாரைப் பின் பற்றுவர் என்றார் அவர். உம்மு ஸலமா எதிர்பார்த்தது போலவே அனைத்தும் நடந்தன.[52] உம்மு ஸலமா அறிவுக் குறைபாட்டுக்கு ஆட்பட்டிருந்தாரா? நபிகளாரின் மற்றொரு மனைவியான ஆயிஷா அறிவாற்றல் மிக்கவராகவும் மதிநுட்பம் வாய்ந்தவராக வும் மிளிர்ந்ததை வரலாறறியும். உமர் இப்னு கத்தாப் உட்பட அறிவுத் திறம் மிக்கோர் பலர் அவ்வப்போது முக்கிய விவகாரங் களில் ஆயிஷா (றலி)வின் கருத்தை அறிந்துகொள்ள விழைந்த னர். அப்படியானால் ஆயிஷாவை எந்தப் பட்டியலில் சேர்ப்பது? 'நாக்கிஸாத் அக்ல்' (அறிவு குறைந்தவர்) என்ற பட்டியலிலா அல்லது 'காமிலாத் அக்ல்' (பரிபூரண அறிவு பெற்றவர்) என்ற பட்டியலிலா?

சாட்சியம் அளிப்பதில் ஆணிலும் பாதிப் பங்குதான் பெண்ணுக் குண்டு என்பது திருமறை வசனத்தை (2:282) அடிப்படையாகக் கொண்டது. இந்த வசனம் உண்மையில் பெண்ணின் அறிவு குறை பாடு பற்றிப் பேசுகிறதா? முஹம்மத் அஸதின் அவதானம் இது:

ஓர் ஆணுக்குப் பதிலாக இரு பெண்களை சாட்சியமாகக் கொள்ளலாம் என்ற விதிமுறை பெண்கள் அறவொழுக்கத்தில் அல்லது அறிவில் குறைந்தவர்களெனக் குறிப்புணர்த்தவில்லை. வியாபார நடைமுறைகளில் பெண்களுக்கு ஆண்களைவிட அனுபவம் குறைவு என்பது பிரத்தியட்ச உண்மை. எனவே இத்துறையில் அவர்கள் தவறு விடும் சாத்தியம் அதிகம்.[53]

இறை வசனமே இதனைத் தெளிவுபடுத்துகின்றது. நிதி நடவடிக்கைகளில் அவர்களுக்கு பரிச்சயம் குறைவாதலால் இரு பெண் சாட்சிகள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, வியாபார நடவடிக்கையில் அனுபவக் குறைவு காரணமாக மறதி ஏற்படலாம் என்ற நிலைமை காணப்படாவிடின் ஓர் ஆண் சாட்சிக்குப் பதிலாக இரு பெண் சாட்சிகளை நிறுத்த வேண்டியிராது என முடிவு செய்யலாம். ஒரு விதியை அமுல்படுத்துவதற்கு நிலைமை பொருத்தமாக இருக்க வேண்டும் என்பது மனங்கொள்ளத்தக்கது. ஆனால் பொதுவாகப் பெண்கள் கல்வியறிவற்றவர்களாகவும் வீட்டுப் பணிகளிலேயே மூழ்கிக் கிடப்பவர்களாகவும் காணப்படும் ஒரு சமூகத்தில் இரு பெண்களின் சாட்சியம் என்பது நியாயமானதே.

மதக்குறைபாடு என்பதற்குத் தரப்பட்டுள்ள உதாரணம் மாதவிடாயின்போது தொழுகையை நிறைவேற்றவும் நோன்பு நோற்கவும் முடியாமையாகும். முன்னர் குறிப்பிட்டது போன்று மாதவிடாய் பெண்களுக்கு இயற்கையானது. இதன்போது தொழுவதற்கும் நோன்பு நோற்பதற்கும் அனுமதியில்லை. அப்படியாயின் பெண்கள் விடயத்தில் என்ன குறைபாடு? அவர்கள் தொழுகையையும் நோன்பையும் தவிர்த்துக் கொள்வது சுயவிருப்பினாலன்று. அவ்வாறு அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும்போது அதனை அவர்களது மதவுணர்வின் குறைபாடென எவ்வாறு கருதமுடியும்?

இஸ்லாமிய சட்டப்படி பெண்களுக்கு மாதவிடாயின்போது தொழுகை கடமையல்ல. எனவே இக்காலத்தில் தவறவிட்ட தொழுகையைப் பின்னர் நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை.

அதேபோன்று மாதவிடாயின்போது நோன்பு நோற்பதும் பெண்களுக்கு கடமையல்ல. ஆனால் நோன்பைப் பொறுத்தவரை தவறவிட்ட நோன்பை அவர்கள் பின்னர் நோற்றாக வேண்டும். தவறவிட்ட நோன்பைப் பின்னர் நோற்பதன்மூலம் அவர்கள் அந்த இழப்பை ஈடுகட்ட முடியும்.

மேலும், 'நாக்கிஸாத் அக்ல் வ தீன்' (அறிவிலும் மதத்திலும் குறைபாடு) என்ற பதப்பிரயோகம் பெண்ணைச் சிறுமைப்படுத்துவதும் அவமானப்படுத்துவதுமாகும். இது ஒருவரை முட்டாள் என அழைப்பதற்குச் சமானம். இஸ்லாம் அவமானமூட்டும் வார்த்தைகளை அனுமதிப்பதில்லை.

''இறை நம்பிக்கையாளர்களே! எந்தவொரு கூட்டத்தினரும் மற்றொரு கூட்டத்தினரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். (ஏனெனில்) இவர்களை விட அவர்கள் சிறந்தவர்களாக இருக்கக் கூடும். எந்தப் பெண்களும் மற்றப் பெண்களை பரிகாசம் செய்ய வேண்டாம். இவர்களை விட அவர்கள் சிறந்தவர்களாக இருக்கக் கூடும். இன்னும் உங்களிடையே குறைகூறிக் கொண்டிருக்க வேண்டாம். (அன்றியும் கெட்ட) பட்டப் பெயர்களைக் கொண்டு (ஒருவருக்கொருவர் அழைத்துக் கொள்ளாதீர்கள்.'' *(49:11)*

'நாக்கிஸாத் அக்ல் வ தீன்' என அழைப்பதன் மூலம் நபி (ஸல்) பெண்கள் மனதைப் புண்படுத்தியிருப்பார் என்பது நினைத்துப் பார்க்க முடியாததாகும். விசுவாசிகள் பிறரைப் புண்படுத்தும் வார்த்தைகளால் அவமானப்படுத்தக் கூடாது எனக் குர்ஆன் எதிர்பார்க்கின்றதெனில், பெருமானார் அதனைத் தம் வாழ்வில் உச்ச பட்சம் கடைப்பிடித்திருக்க மாட்டார்களா? ''பெண்கள் மீதான நேசம் என் இதயத்தில் வைக்கப்பட்டுள்ளது''[(54)] எனப் பெண்கள் மீது தம் உணர்வுகளை வெளிப்படுத்திய நபிபெருமான் (ஸல்), அவர்களைப் புண்படுத்தும் வார்த்தைகளை ஒருபோதும் உபயோகித்திருக்க மாட்டார்கள். ''பெண்கள் உம்மத்தின் மிகச் சிறந்தவர்களுள் பெரும்பான்மையினராவர்'' என்ற இப்னு அப்பாஸின் அவதானத்தை இமாம் புஹாரி பதிவுசெய்துள்ளார்.[(55)] நபிமொழிகளை அடிப்படையாக வைத்தே இப்னு அப்பாஸ் இதனைக்

கூறியிருக்கவேண்டும். அவ்வாறெனில் பெண்கள் அறிவிலும் மதத்திலும் குறைபாடுடையவர்கள் என்ற கூற்று மிகவும் கேள்விக் குரியதே.

### *10. நபிகளாருடனான ஆயிஷா (ரலி)வின் தந்திரம்*

*நபிகளாரின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் ஆயிஷா, அவர்களை ஏமாற்றியதாகக் குறிப்பிடும் இரு ஹதீஸ்களை அல்-புஹாரியும் முஸ்லிமும் மற்றவர்களும் பதிவுசெய்துள்ளனர்:*

*1. ஆயிஷா இவ்வாறு கூறக்கேட்டதாக உபைத் இப்னு உமைர் அறிவிக்கின்றார்: நபிகளார் ஸைனப் பின்த் ஜஹ்ஸின் இல்லத்தில் (அதிக நேரம்) தங்கியிருந்து தேன் பருகுவது வழக்கம். (அவர் கூறினார்:) நானும்; ஹஃப்ஸாவும் எங்களில் எவருடைய இல்லத் துக்கு நபி வந்தாலும், ''நான் உங்களிடம் மகாஃபிருடைய (துர்மணம் வீசும் ஒருவகைப் பூவுடைய)மணத்தை நுகர்கிறேன். நீங்கள் மகாஃபிர் சாப்பிட்டீர்களா?'' எனக் கேட்போமெனத் தீர்மானித்தோம். அவ்வாறே நபிகளார் எங்களில் ஒருவரின் இல்லத்துக்கு வந்தபோது அவர் அதைக் கேட்டார். அதற்கு நபிகளார், ''இல்லை. ஸைனப் பின்த் ஜஹ்ஸின் இல்லத்தில் தேன் பருகினேன். இனி நான் அதனைப் பருகமாட்டேன்'' என்றார்கள். அப்போது பின்வரும் இறை வசனம் இறங்கியது: ''நபியே! உமது மனைவிமார்களைத் திருப்தி படுத்துவதற்காக வேண்டி அல்லாஹ் உமக்கு ஆகுமாக்கியதை ஏன் விலக்கப்பட்டதாக ஆக்கிக் கொண்டீர்?...'' (66:1-4)[56]*

*2. ஆயிஷா கூறுகின்றார்: நபிகளாருக்கு இனிப்பிலும் தேனி லும் அதிக விருப்பம். அஸர் தொழுகைக்குப் பின்னர் நபி வழக்கமாக ஒவ்வொரு மனைவி வீட்டுக்கும் செல்வார். ஒருநாள் அவர் ஹஃப்ஸாவின் வீட்டுக்குச் சென்றபோது அங்கு வழக்கத் துக்கு மாறாக அதிக நேரம் தங்கிவிட்டார். இதற்கான காரணத்தை விசாரித்தபோது ஹஃப்ஸாவின் வீட்டுக்கு உறவினரொருவர் ஒரு தோற்பையில் தேன் அனுப்பியிருப்பதாகவும் அதிலிருந்து நபி களார் தேன் அருந்தியதாகவும் என்னிடம் சொல்லப்பட்டது.*

அப்போது 'அல்லாஹ்மீது ஆணையாக! நபிகளார் மீது தந்திர மொன்றக் கையாள்வேன்' என விடயத்தை ஸௌதாவிடம் கூறி நபிகளார் வரும்போது அவரிடம் மகாஃபிர் சாப்பிட்டீர்களா எனக் கேட்குமாறும் நபிகளார் இல்லையென மறுத்தால் அந்த துர்மணத்துக்குக் காரணம் என்னவெனக் கேட்குமாறும், துர் மணத்தை விரும்பாத நபிகளார் தாம் ஹஃப்ஸாவின் வீட்டில் தேனருந்தியதைக் கூறுவார் என்றும் தெரிவித்தேன்...

ஆயிஷா தொடர்கின்றார்: ''அப்போது நீர் 'அந்தத் தேனி 'அல்-உர்ஃபுத்' (துர்மணம் தரும் ஒருவகைச் செடி)திலிருந்து தேனைச் சேகரித்திருக்க வேண்டும் எனச் சொல்வீராக'' என்றேன். இதே ஆலோசனையை நபிகளாரின் இன்னொரு மனைவியான ஸஃபிய்யாவிடமும் கூறினேன். ஸௌதா நம் இரகசியத்தை வெளி யிடப் பார்த்தார். ஆனால் நபிகளார் ஸௌதாவின் அருகில் சென்ற போது அவர் நான் கூறிய விதமாகவே நடந்துகொண்டார். நபி (ஸல்) என்னிடம் வந்தபோது நானும் அதனையே கூறினேன். நபி (ஸல்), ஸஃபிய்யாவிடம் போனபோது அவரும் அவ்வாறே சொல் லியிருக்கிறார். நாம் ஒரே விதமாகச் சொன்னதனால் நபிகளார் அதன்பின் ஹஃப்ஸாவின் வீட்டில் தேனருந்த மறுத்துவிட்டார். நபிகளார் தமக்கு மிகப் பிரியமான தேனை அருந்துவதிலிருந்தும் நாம் அவரைத் தடுத்து விட்டோமே என பின்னர் ஸௌதா கூறிய போது நான் அவரை மௌனம் சாதிக்குமாறு சொன்னேன்.''[57]

இவ்விரு அறிவிப்புகளிலும் காணப்படும் முரண்பாடுகள் மிகத்தெளிவானவை. முதலில் நபிகளார் தேனருந்துவதற்காக எந்த மனைவி வீட்டில் அதிகநேரம் தங்கினார்? முதல் அறிவிப்பு ஸைனப் பின்த் ஜஹ்ஸின் இல்லத்தில் என்கிறது. இரண்டாவது அறிவிப்பு ஹஃப்ஸாவின் இல்லத்தில் என்கிறது. இரண்டாவது ஆயிஷா யாருடன் சேர்ந்து திட்டமிட்டார்? முதல் அறிவிப்பு ஹஃப்ஸாவுடன் என்கிறது. இரண்டாவது அறிவிப்பு ஸௌதா வுடனும் ஸஃபிய்யாவுடனும் என்கிறது. இந்த இரு ஹதீஸ்களின் அறிவிப்பாளர்களும் ஆதாரபூர்வமானவர்களாகையால் இந்த முரண்பாட்டுக்கு எவ்வாறு விளக்கமளிப்பது? இந்த ஹதீஸ்களைச்

சீர்தூக்கிப் பார்க்கும் முயற்சி ஆதாரபூர்வமான ஹதீஸ்களைப் பதிவு செய்தவர்களெனக் கருதப்படும் புஹாரியையும் முஸ்லிமையும் தாக்குவதாகத் தோன்றலாம். ஆனால் இது விடயத்தில் அறிஞர்கள் மௌனம் சாதிப்பது நபிகளாருக்கும் அவரது மனைவிமாருக்கும் புரியும் அநீதியாகும். இந்த இரு ஹதீஸ்களுமே சரியாக இருத்தல் முடியாது என்பது வெட்டவெளிச்சம். எனினும் எந்த ஹதீஸ் எதன் அடிப்படையில் சரியானதெனத் தீர்மானிப்பது மிகச் சிரமமானதே. அந்-நவவி இதற்குத் தீர்வுகாண முயன்றிருக்கிறார். முதலில் இவ்விரு ஹதீஸ்களும் ஒன்றோடொன்று மோதுவதை அவர் ஏற்றுக்கொள்கிறார். அடுத்து இரண்டாவது ஹதீஸுடன் ஒப்பிடுகையில் முதலாவது ஹதீஸே சரியானதென முடிவு செய்கிறார். இதற்கு இரு காரணங்கள் அவரால் முன்வைக்கப் படுகின்றன. *(1) அந்- நஸாயி போன்ற அறிஞர்கள் முதலாவது ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர் இரண்டாவது ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரைவிட வலிமை வாய்ந்ததெனத் தீர்மானித்தது. (2) முதலாவது ஹதீஸில் ஆயிஷா, ஹஃப்ஸா ஆகிய இரு மனைவிகள் மட்டுமே குறிப்பிடப்படுவது குர்ஆன் வசனங்களுடன் (66:1-4) ஒத்துப்போகின்றது. குர்ஆன் பெயர் சொல்லாமல் இரு பெண்கள் எனக் குறிப்பிடுகின்றது.*[58]

அந்-நவவி இரண்டாவது ஹதீஸ்பற்றிய தனது நிலைப்பாட்டைத் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை. இமாம் புஹாரியினதும் முஸ்லிமினதும் இரண்டாவது ஹதீஸ் நம்பகமானதல்ல என நவவி ஏன் குறிப்பிடவில்லை? அது இவ்விரு அறிஞர்களது ஆதாரப்படுத்தலின் அதிகாரபூர்வம் குறித்து கேள்வியெழுப்புவதாக முடியும் என்பதுதான் இதற்குக் காரணம். ஸஹீஹ் புஹாரியின் மிகச்சிறந்த விளக்கவுரையாளர்களான அல்-அய்னி, இப்னு ஹஜர் இருவரும் இந்த வெளிப்படையான முரண்பாட்டைத் தொடாமல் விட்டமை விசனத்துக்குரியதாகும். ஏன்? ஹதீஸ்களைப் பரிசீலிப்பதற்காக புஹாரியும் முஸ்லிமும் வளர்த்தெடுத்த முறையியலின் நம்பகத் தன்மையைப் பாதுகாத்துக் கொள்வதுதான் அவர்களின் ஒரே நோக்கமாக இருந்தது. இமாம்

முஸ்லிமின் அறிவிப்புகள் குறித்து கருத்துவெளியிட்ட அந்-நவவி யின் அணுகுமுறையையேனும் கடைப்பிடிப்பதில் என்ன பிழை? நேர்மையான பகுப்பாய்வுதான் உண்மையான அணுகுமுறை இல்லையா?

இவ்விரு ஹதீஸிலும் இன்னுமொரு பிரச்சினை யுள்ளது. நபிகளாரின் மிகுந்த நேசிப்புக்குரிய மனைவியான ஆயிஷா நபிகளாரை ஏமாற்றினார் என்பதை நாம் உண்மையில் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? நபிகளாரின் மனைவி உட்பட அனைவரும் நபியை எந்தளவு நேசித்தார்களெனில் அவர்களில் யாரும் அன் னாரின் மனதைப் புண்படுத்தவோ, நபிகளாரை ஏமாற்றவோ ஒருபோதும் நினைத்திருக்க மாட்டார்கள். பத்ருத்தீன் அல்-அய்னி மட்டுமே இதனைக் கவனத்தில் கொள்கிறார். அப்போது ஆயிஷா இளவயதினர்; அனுபவமில்லாதவர். அவர் உண்மையில் நபி களாரைப் புண்படுத்த நினைத்திருக்க மாட்டார் என்கிறார் அவர்.(59) இது ஓரளவு ஏற்கத் தக்கதே யெனினும் மற்ற மனைவியர்கள் ஏன் இதற்கு இணங்கினார்கள் என்ற கேள்வி யெழுகின்றது. ஹஃப்ஸா மனமுதிர்ச்சி பெற்றவராகவும், இந்த விளையாட்டு வினையில் முடியலாம் என அறிந்தும் இருந்தவர். இந்த ‘விளையாட்டு’ வேண்டாமென அவர் ஏன் ஆயிஷாவைத் தடுக்கவில்லை.

மேலும், இவ்விரு ஹதீஸ்களும் இந்தக் குறும்பை மட்டும் குறிப்பிடவில்லை. நபிகளார் உட்கொண்ட தேன் துர்மணம் வீசு வதாக அன்னாரிடம் பொய்யுரைக்குமாறு ஆயிஷா மற்ற மனைவி மாரைத் தூண்டினார் என்பதையும் குறிப்பிடுகின்றன. மீண்டும், ஆயிஷா இளவயதினர் பக்குவம் போதாதவர் அனுபவமற்றவர் என அவரை மன்னித்துவிட்டாலும் பக்குவ முதிர்ச்சி பெற்ற நபியின் பிற மனைவியரின் செயலுக்கு என்ன விளக்கம் கூறுவது? நியாயமான இந்த கேள்விகளும் அவதானங்களும் ஹதீஸ் விளக்கவுரை யாளர்களால் புறக்கணிக்கப் பட்டுள்ளன.

நபிகளாரின் மனைவியர் அன்னாரை ஏமாற்றவும் நபியிடம் பொய்யுரைக்கவும் துணிந்தார்களென முடிவு கட்டுவதைவிட இவ்விரு ஹதீஸ்களையும் புறக்கணித்து விடுவது நல்லது.

நபிகளாரின் தராதரம் ஹதீஸ் அறிஞர்களுடையதை விட அதிமேன்மையானது. மேலும், ஆயிஷாவும் ஹஃப்ஸாவும் நபிகளாரின் பிற மனைவியரும் 'விசுவாசிகளின் அன்னையர்' என மதித்துப் போற்றப் படுவோராவர். அவர்கள்மீது அன்பு பாராட்ட வேண்டியது, அவர்களின் ஒழுக்க மாண்பைப் போற்ற வேண்டியது விசுவாசிகளின் கடமை. ஆனால் பொதுவாக முஸ்லிம் அறிஞர்களும் குறிப்பாக ஹதீஸ் நிபுணர்களும் இவ்விரு ஹதீஸ்களும் ஸஹீஹ் புஹாரியிலும் முஸ்லிமிலும் பதிவாகியுள்ள ஒரே காரணத்தால் அவை ஆதாரபூர்வமானவையென வலியுறுத்துகின்றனர். நபிகளாரின் மனைவியரை விட இவ்விருவர் மீதும் அவர்கள் அளவு கடந்த மரியாதை பாராட்டுவதாகத் தெரிகின்றது. புஹாரி, முஸ்லிமின் புனிதம் பேணப்படுவதில் அதிக அக்கறை கொண்டுள்ள அவர்கள் ஆயிஷா (றலி)வின் புனிதத்துக்கு மாசு கற்பிக்கப்படுவதையிட்டுக் கவலைப் படுவதாகத் தெரியவில்லை. இது ஏற்கக் கூடியதல்ல. இவ்வறிவிப்பு செய்வதுபோல், ஆயிஷாவுக்கும் ஹஃப்ஸாவுக்கும் நபிகளாரின் பிற மனைவியர்க்கும் இழிவு கற்பிப்பதைவிட இந்த அறிவிப்புகள் இட்டுக்கட்டப்பட்டவை, நம்பத் தகாதவையென இவற்றை மறுதலிப்பதே மேல்.

நபியின் மனைவியரை மோசமாகப் பாதிக்காத விளக்கமொன்றை அமீன் அஹ்ஸன் இஸ்லாஹி தருகின்றார். அவர் அறிவிப்பதாவது:

''நபிகளார் ஒருமுறை தம் மனைவியர் இல்லங்களில் தேனருந்தினார். அத்தேனிலிருந்து ஒருவகைத் துர்மணம் வீசியது. இதனை அவர்களில் சிலர் விரும்பவில்லை. இவ்வகைத் தேன் துர்மணம் வீசுவது. துர்மணம் இல்லாவிடினும் உணர்திறன் கொண்டோர் குறிப்பாகப் பெண்கள் எல்லா வாசனையையும் விரும்புவதில்லை. அனைவரது ரசனையும் விருப்பு வெறுப்புகளும் ஒரேவிதமாக இருப்பதில்லை. நபிகளாரின் மனைவியருள் சிலர் மகஃபிர் (பூவின்) வாசனை கொண்ட தேனை விரும்பவில்லை. அதனை அவர்கள் தெரியப்படுத்தியதும் பெண்களின் உணர்வுகளைப் பெரிதும் மதித்த நபியவர்கள் இனியொருபோதும் தேனருந்த மாட்டேன் என உறுதியளித்தார்கள்.''(60)

*''(நபியின் மனைவியராகிய) நீங்கள் இருவரும் உங்கள் குற்றங் களுக்காகப் பச்சாதாபப்பட்டு (தவ்பா செய்து) அல்லாஹ்வின் பால் மீள்வீர்களாக. ஏனெனில் உண்மை எதுவென்பதிலிருந்து உங்கள் இருவரது இதயங்களும் பிசகிவிட்டன. நீங்கள் இருவரும் உங்களில் ஒருவருக் கொருவர் உதவ ஒன்றுசேர்ந்தால் (தளாஹரா அலைஹி), நிச்சயமாக (அறிந்துகொள்ளுங்கள்) அல்லாஹ்வே அவருக்குப் பாதுகாவலன். ஆகவே, ஜிப்றீலும் விசுவாசிகளான நல்லடியார்களும் (மற்றும்) அனைத்து மலக்குகளும் அவருக்கு உதவிசெய்வார்கள்'' (66:4) என்ற திருமறை வசனம் முன்னர் குறிப்பிட்ட இரு அறிவிப்புகளில் குறிப்பிடப்படும் சம்பவத்தை உறுதிப்படுத்தவதாக உள்ளது. நபிகளாரின் மனைவியர் இரு வரும் சந்தேகமின்றி நபி (ஸல்) விருப்பத்துக்கு மாறாக ஒருவருக் கொருவர் உதவுவதன்மூலம் ஏதோ தவறு புரிந்து விட்டனர். ஆனால் குர்ஆன் குறிப்பிடும் குற்றம் யாரிடமும் சொல்ல வேண்டாமென நபிகளார் தம் மனைவியருள் ஒருவரிடம் கூறி யதை அவர் இன்னொரு மனைவியிடம் வெளியிட்டதாகும். இனிமேல் தேனருந்துவதில்லை என்பது நபி தம் மனைவியரில் ஒருவருடன் பகிர்ந்துகொண்ட ரகசியம்.*

*ஒரு ஹதீஸில் பிரச்சினை காணப்படும் பொழுது ஹதீஸ் விளக்கவுரையாளர்கள் அடிக்கடி வெளியிடும் கருத்து ஓர் அறி விப்பாளரோ அல்லது இன்னோர் அறிவிப்பாளரோ தவறானதை நம்பி ஏமாந்துவிட்டார் என்பதாகும் (வஹிமா). இதனை ஓர் அறி விப்பாளரோ இன்னோர் அறிவிப்பாளரோ தவறுசெய்துவிட்டார் என்றும் சொல்லமுடியும். ஓர் அறிவிப்பாளர் இன்னோர் அறிவிப் பாளரிடமிருந்து அறிவிக்கும்போது தவறு நேர்வது சாத்தியமே. தவறுகள் நேரலாம். தெரிந்து கொண்டோ அல்லது கவனக் குறை வினாலோ ஓர் அறிவிப்பு திரித்துக் கூறப்படலாம். உதாரணமாக இந்த அறிவிப்பில் ஓர் அறிவிப்பாளர் நபியின் மனைவியர்களின் பெயர்களை அறிவிப்பதில் தவறு விட்டுள்ளார். ஆயிஷா கூறியதை அறிவித்தவர் அவர் கூறிய அதே வார்த்தைகளில் அதனை அறி விக்கவில்லை. இவ்வார்த்தைகள் ஆயிஷாவினுடையதல்ல. வாய்*

மொழியாக அவர் கூறியதை அறிவிப்பாளர் வேறு வார்த்தைகளில் அறிவிப்பதும் இயல்பாக நிகழக்கூடியதே. இந்த ஹதீஸ் பெரும்பாலும் அறிவிப்பாளரின் தவறான சொற்பிரயோகங்களால் வெளியிடப்பட்டுள்ளதென முடிவுசெய்யலாம்.

### 11. எறும்புப் புற்றுக்குத் தீவைத்தல்

பின்வரும் ஹதீஸை இமாம் முஸ்லிம் அபூ ஹுரைராவின் அறிவிப்பில் பதிவு செய்துள்ளார்:

> ''முன்னைய நபிமார்களில் ஒருவர் மரத்தடியில் நிற்கும்போது அவரை ஓர் எறும்பு கடித்துவிட்டது. அவர் உடனிருந்த தோழர்களை ஒதுங்கச் சொல்லி விட்டு அங்கிருந்த எறும்புப் புற்றை தீவைத்துப் பொசுக்கினார். அப்பொழுது, 'ஓர் எறும்பு கடித்ததற்காக முழு எறும்புக் கூட்டையும் ஏன் எரித்தீர்?' என அவரிடம் அல்லாஹ் கேட்டான்.''[(61)]

இந்த ஹதீஸ் நபியொருவரின் கவனமின்மையை -யோசனையின்மையை - சுட்டுகிறது. நபிமார்களின் ஆளுமைச் சிறப்பை அல்குர்ஆன் விவரிக்கின்றது. அவர்கள் பொறுமையாளர்கள் கருணையாளர்கள், புத்தி சாதுர்யம் மிக்கவர்கள், பக்திமான்கள், வீரம் மிக்கவர்கள், நேர்மையாளர்கள், உண்மையாளர்கள், உதாரண புருசர்கள், இத்தியாதி...

அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட அனைத்து நபிமார்களையும் பற்றி குர்ஆன் குறிப்பிடா விட்டாலும் அது குறிப்பிடும் நபிமார்கள் அனைவரும் சிறந்த பண்பாளர்கள். நபித்துவம் என்ற நிறுவனத்தின் பிரதிநிதிகள்; நமக்குத் தெரியவராத நபிமார்களது உயர் பண்புகளதும் பிரதிபலிப்புகள். எனவே, எறும்பொன்று கடித்ததற்காக நபியொருவர் ஏறும்புப் புற்றையே பொசுக்கியிருப்பார் என்பது நினைத்துப் பார்க்கக் கூடியதல்ல. சாதாரண மனிதனே இவ்வாறு நடந்துகொள்ள மாட்டான் என்பதை நினைக்கையில் நபியொருவர் இவ்வாறு நடந்துகொள்வது நகைப்புக்கிடமாக உள்ளது..

## முடிவுரை

முத்தாய்ப்பாக, இந்த அத்தியாயத்தில், மனித அறிவின் வெளிச் சத்தில் பதினொரு ஹதீஸ்கள் படிக்கப்பட்டு துல்லியமாகப் பரி சீலிக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட விவகாரங்களும் அவற்றின்மீது பாய்ச்சப்பட்ட தர்க்கவியலின் வலிமையும் எவராலும் சீரணிக்கப் படுவதற்கும் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் கடினமானவையே. என்றபோதிலும் மாபெரும் ஹதீஸ் அறிஞர்கள் இவற்றை ஆதார பூர்வமாய் பதிவு செய்துள்ளனர். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது பழமொழி. எனவே இவ் விவகாரத்தில் ஹதீஸ் ஒன்றின் வாசகம் அது ஏற்கக்கூடிய தன்மையுடையதா என்பதைக் காட்டிவிடுகின்றது. அத்தியாயத்தின் தொடக்கத்தில் விளக்கப் பட்டது போன்று மனிதஅறிவு என்பது எல்லாவித கட்டுப்பாடு களையும் மீறிய சிந்தனா சக்தியைக் குறிக்கவில்லை. என்ற போதிலும், சத்தியத்தை அசத்தியத்திலிருந்து பிரித்தறிவதற்கு மனித அறிவு நம்பகமான அளவுகோள் என்பதை அல்குர்ஆன் மீண்டும் மீண்டும் சொல்கின்றபடியால், எத்தகைய பின்னணி யைக் கொண்ட புலமைத்துறையினராகவோ மாணாக்கர்களா கவோ இருப்பினும் ஹதீஸ் தொகுப்புகளில் உண்மையைக் கண்டுபிடிப்பதற்குத் தங்களின் அறிவாற்றலைப் பயன்படுத்தியாக வேண்டும்.

# 06

# வரலாறும் ஹதீஸ் ஆதாரப்படுத்தலும்

வரலாற்றுக்கல்வி அவசியம். கல்வியூட்டுவதே அதன் பிரதான நோக்கம். வரலாறு கடந்த காலத்தைப் பிரதிபலிப்பதோடு நில்லாமல், மனித இனம் அதன் கடந்த காலத் தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கும், இதுவரை சாதித்தவைகளிலிருந்து உந்துதல் பெறுவதற்கும் உதவ வேண்டும். இந்நோக்குடனேயே அல்குர்ஆன் ஓர் ஆசானாக இருந்து வரலாற்றை முன்வைக்கின்றது. குர்ஆனும் பைபிளும் பல சமூகங்களினதும் தனிமனிதர்களினதும் வரலாற்றைக் கூறுகின்றன. அல்குர்ஆன் தரும் தரவுகளின் வெளிச்சத்தில் பார்த்தால், பைபிளில் இடம்பெற்றுள்ள பல வரலாற்றுத் தகவல்கள் தவறானவை. லூத் நபியின் வரலாறு இதற்கு நல்லதொரு உதாரணம். பைபிளில் லூத் ஓர் அற்பமனிதனாக அருவருப்பூட்டும் வெறுக்கத்தக்க செயலினராகக் காட்டப்படுகிறார்.[1] குர்ஆன் அவரை ஓர் உயர்ந்த மனிதராக ஒழுக்க சீலராக வர்ணிக்கின்றது.[2] ஒரு சம்பவம் குறித்து வரலாறு கூறுவதை ஆதாரபூர்வமானதாய்க் கொள்வதெனில், அது சரியானதெனவும் நம்பகமானதெனவும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அறிவிக்கப்பட்ட சம்பவம் நன்கறியப்பட்ட வரலாற்றுடன் முரண்படுவதாயின் அது ஏற்றுக் கொள்ளப்பட முடியாததென நிராகரிக்கப்படல் வேண்டும்.

*வரலாற்றுடன் ஏதோவொரு வகையில் தொடர்புள்ள சம்ப வங்கள் ஹதீஸ் தொகுப்புகளில் காணப்படுகின்றன. அறிவிப்பு கள் சில சமயங்களில் வரலாற்றுடன் ஒத்துப் போவனவாகவும் சிலசமயங்களில் முரண்படுவனவாகவும் உள்ளன. நிறுவப்பட்ட வரலாற்றுடன் ஓர் அறிவிப்பு முரண்படும்போது, அதன் அறிவிப் பாளர் தொடரைக் கருத்தில் கொள்ளாமல் அது ஐயத்துக்குரிய தென்றும் நம்பகமற்றதென்றும் அறிவிக்கப்படல் வேண்டும்.*

### *1. நபிகளாருக்குப் பின் முதலில் மரணிக்கப் போகிறவர் ஸவ்தாவா அல்லது ஸைனபா?*

*இமாம் புஹாரி பின்வரும் ஹதீஸை ஆயிஷா (றலி)வின் அறிவிப்பில் பதிவுசெய்துள்ளார்:*

> நபிகளாருக்குப் பின் அன்னாரின் மனைவியருள் முதலில் மரணிக்கப் போகிறவர் யார் என அவர்கள் கேட்டனர். 'நீண்ட கைகளையுடையவர்' என நபி (ஸல்) பதிலளித்தார். அவர்கள் தம் கைகளை அளந்து பார்த்தபோது ஸவ்தாவின் கைகள் அதிக நீளமாயிருக்கக் கண்டனர். நபிகளாருக்குப் பின் முதலில் மர ணித்தவர் ஸவ்தா (றலி) ஆவார். அவர் மரணித்தபின் 'நீண்ட கை' என்பது அதிக தான தர்மம் செய்யும் கையென்பதை அவர் கள் உணர்ந்தனர். அவர் தான தர்மம் செய்வதை அதிகம் விரும்பியவர்.(3)

*நபிகளாருக்குப் பின் அன்னாரின் மனைவியருள் முதலில் மரணித்தவர் ஸவ்தா என இந்த அறிவிப்பு கூறுகின்றது. ஆனால் ஸவ்தா ஹிஜ்ரி 54 இல் காலமானார் என்பது வரலாற்றுச் செய்தி.(4) அவருக்கு முன்னர் ஹிஜ்ரி 20 இல் ஸைனப் பின்த் ஜஹ்ஷ் கால மானார்.(5) எனவே இந்த அறிவிப்பில் குறைபாடுண்டு. இமாம் முஸ்லிம் ஆயிஷாவின் ஆதாரத்துடன் இன்னொரு ஹதீஸைப் பதிவு செய்துள்ளார். அதன்படி நபிகளாரின் மனைவியர்களில் தான தர்மங்களில் சிறந்து விளங்கியவரும் அன்னவரின் பின்னர் முதலில் காலமானவரும் ஸைனப் பின்த் ஜஹ்ஷ் ஆவார்.(6) புஹாரி பதிவுசெய்த ஹதீஸ் பற்றிய ஒரு நீண்ட உரையாடலுக்குப்பின்,*

அறிவிப்பாளர் வரிசையில் ஓர் அறிவிப்பாளர் தவறிழைத்துள்ளதாக அறிவிக்கின்றார் இப்ன்-ஹஜர்.(7) அல் புஹாரியின் அறிவிப்பு தவறானது என்கிறார் அல்-நவவி.(8)

## 2. அபூ சுஃபியான் மரணமடைந்தது மதீனாவிலா சிரியாவிலா?

''அபூ சுஃபியான் சிரியாவில் மரணமடைந்த செய்தி கேட்டு உம்மு ஹபீபா மூன்று நாட்கள் மட்டும் துக்கம் அனுஷ்டித்தார்'' என்ற ஹதீஸ் ஸைனப் பின்த் அபீ ஸலாமாவின் அறிவிப்பில் ஸஹீஹ் புஹாரியில் பதிவாகியுள்ளது.(9)

இது ஹதீஸை முஸ்லிமும் மற்றவர்களும் பதிவுசெய்துள்ளனர் எனினும் 'சிரியாவில்' என்பதை அவர்கள் குறிப்பிடவில்லை.(10) இப்னு ஹஜர் இந்த அறிவிப்பு பிழையெனவும் வரலாற்றின்படி அபூ சுஃபியான் மறைந்தது ஹிஜ்ரி 32 இல் மதீனாவில் என்றும் அறிவிக்கின்றார்.(11)

## 3. பத்ருப் போரில் பங்கு பற்றிய போராளி குபைப் இப்னு இஸாஃப் என்பவரா அல்லது குபைப் இப்னு அதீ என்பவரா?

அபூ ஹுரைராவின் ஆதாரத்துடன் அல்-புஹாரி செய்துள்ள ஓர் அறிவிப்பின்படி, றஜீ போரில் குபைப் இப்னு அதீ உட்பட பல முஸ்லிம்கள் எதிரியால் சிறையெடுக்கப்பட்டுப் பின்னர் கொலை செய்யப்பட்டனர். புஹாரியின் அறிவிப்பு குபைப் இப்னு அதீ பத்ருப் போரில் கலந்துகொண்டா ரென்றும், அப்போரில் அல் ஹாரித் இப்னு அம்ர் இப்னு நவ்ஃபல் என்ற குறைஷி இராணுவ வீரனைக் கொன்றார் எனவும் கூறுகின்றது.(12)

பத்ருப் போரில் பங்கு பற்றிய முஸ்லிம் போராளிகளின் பட்டிய லொன்றை இப்னு ஹிஷாம், இப்னு ஸஅத், இப்னு கதீர் ஆகியோர் தயாரித்துள்ளனர். அதில் ஒரேயொரு குபைப் இடம் பெற்றுள்ளார். அவர் குபைப் இப்னு இஸாஃப்.(13) பத்ருப் போரில் யார், யாரைக் கொன்றார் என்ற விவரங்களையும் இப்னு ஹிஷாம் பட்டியலிட்டுள்ளார். அவர் தரும் தகவலின்படி குபைப் இப்னு இஸாஃப் ஓர் அன்ஸாரி முஸ்லிம். அவர் அல்-ஹாரித் இப்னு

அம்ர் இப்னு நவ்ஃபல் என்பவரைக் கொன்றார்.(14) இதிலிருந்து புஹாரியுடைய அறிவிப்பில் வரலாற்றுப் பிழை ஒன்று நேர்ந் துள்ளமை தெரிகின்றது. றஜீ போரில் கலந்துகொண்டு போர்க் கைதியாய் குறைஷிகளால் கொல்லப்பட்ட குபைப் இப்னு அதீ பத்ருப் போரில் கலந்துகொண்டதாய்க் குறிப்பில்லை.

அல்-புஹாரியின் ஆதாரபூர்வமான ஹதீஸின் பின்னணியில் வரலாற்றைத் திருத்தலாம் என இப்னு ஹஜர் ஆலோசனை கூறுகிறார். பத்ருப் போரில் ஹாரிதைக் கொன்றவர் குபைப் இப்ன்-அதீ இல்லையெனில், ஹாரிதின் குடும்பத்தினர் பழிக்குப் பழியாக அவரையேன் கொலை செய்ய வேண்டும் என்பது இப்னு ஹஜரின் வாதம். குபைப் இப்னு அதீயைக் கொன்றவர் தவறு தலாக அவரை குபைப் இப்னு இஸாஃபாகக் கருதியிருக்கலாம் என்பதும் இப்ன்-ஹஜரின் ஊகம். குபைப் இப்னு இஸாபும் குபைப் இப்னு அதீயும் கூட்டாகச் சேர்ந்து ஹாரிதைக் கொன்றி ருக்கவும் கூடும் எனவும் கூறுவார் அவர்.(15) ஊகங்களாலும் சாத்தி யப்பாடுகளாலும் வரலாற்று மெய்மைகளை மாற்ற முடியாதென் பதை இப்னு ஹஜர் மறந்துவிடுகிறார்.

### 4. நபிமகளார் ஃபாத்திமாவின் உறைவிடம்

''நபிகளார் ஒருநாள் பனூ கைனுக்கா சந்தையை நோக்கி அமைதியாக நடந்துசென்று ஃபாத்திமாவுடைய வீட்டு முற்றத்தில் அமர்ந்தார்'' என்ற ஒரு ஹதீஸை அபூ ஹுரைராவின் ஆதாரத்துடன் அல்-புஹாரி பதிவுசெய்துள்ளார்.(16)

இந்த ஹதீஸில் சில பகுதிகள் விடுபட்டுள்ளன அல்லது இன்னோர் அறிவிப்பு இதனுடன் சேர்ந்து குழம்பியுள்ளது என அல்-தாவூதி (ம. ஹி. 828) கருத்துரைக்கின்றார். ஃபாத்திமாவின் இல்லம் யூதக் குடியேற்றப் பகுதியான பனூ கைனுக்காவில் இருக்கவில்லை என்கிறார் அவர்.(17) அறிவிப்பில் தவறுள்ள மையை இப்னு ஹஜர் ஒப்புக்கொள்கிறார். முஸ்லிமின் ஸஹீ ஹில் பதிவாகியுள்ள ஹதீஸ் சரியானது என்றும், புஹாரியின் ஹதீஸைத் திருத்துதற்கு, '...பனூ கைனுக்கா சந்தை வரை நடந்து,

திரும்பிச் சென்று ஃபாத்திமாவின் வீட்டு முற்றத்தையடைந்தார்' என முஸ்லிமில் காணப்படும் பகுதி இதனோடு சேர்க்கப்படல் வேண்டும் என்றும் அவர் ஆலோசனை கூறுகிறார்.[18] ஃபாத்தி மாவின் இல்லம் யூதக் குடியேற்றப் பகுதியில் இல்லாமல் வேறோரிடத்தில் இருந்த தென்பதை முஸ்லிமின் அறிவிப்பு தெளிவாக்குகின்றது.

### *5. மது அருந்துவதற்கான தண்டனை 80 கசையடியா அல்லது 40 கசையடியா?*

*மது அருந்தியதற்காக அல்-வலீத் இப்னு உக்பாவுக்கு வழங் கப்பட்ட தண்டனை குறித்து உபைதுல்லாஹ் இப்னு அதீ இப்னு அல்-கியார் என்பவரின் ஆதாரத்துடன் அல்-புஹாரி நீண்ட ஹதீஸொன்றை பதிவுசெய்துள்ளார். அதன் கடைசி வசனம்: 'அப்போது உதுமான் இப்னு அப்ஃபான், அலி இப்னு அபீ தாலிபை அழைத்து, அல்-வலீதுக்கு கசையடி கொடுக்குமாறு கட்டளையிட, அலி அவருக்கு 80 கசையடி வழங்கினார்.[19]*

*இதே சம்பவத்தை அபூ ஸாஸான் ஹுதைன் இப்ன்-அல்-முன்திர் என்பாரின் அறிவிப்பில் முஸ்லிம் பதிவுசெய்துள்ளார். ஆனால் இந்த அறிவிப்பில் மது அருந்தியமைக்காக அல்-வலீதுக்கு வழங் கப்பட்ட தண்டனை 40 கசையடியெனக் காணப்படுகிறது.[20] புஹாரியே பதிவுசெய்துள்ள மற்றொரு ஹதீஸ் அல்-வலீதுக்கு 40 கசையடிகள் வழங்குமாறு உதுமான் கட்டளையிட அவர் அவ்வாறு செய்தார் என்கிறது.[21] இவ்வாறு இந்த ஹதீஸ் குறித்து புஹாரி இரு ஹதீஸ்களைப் பதிவுசெய்துள்ளார். முதலாவது ஹதீஸில் 80 கசையடி என்றும் இரண்டாவது ஹதீஸில் 40 கசை யடி என்றும் குறிப்பிடப்படுகின்றது. இப்னு ஹஜர், 80 கசை யடிகள் எனக் குறிப்பிடும் முதலாவது ஹதீஸைவிட 40 கசை யடிகள் எனக் குறிப்பிடும் இரண்டாவது நம்பகமானது என்பார். முஸ்லிம் பதிவுசெய்துள்ள ஹதீஸ் அதிக நம்பகமானது என்பது அவர் கருத்து.[22]*

### *6. நபியின் வயது அறுபத்தைந்தா அல்லது அறுபத்தி மூன்றா?*

*''நபிகளார் காலமாகும்போது அன்னாரின் வயது அறுபத்தைந்து'' என அப்துல்லாஹ் இப்னு அப்பாஸின் ஆதாரத்துடன் முஸ்லிம் ஒரு ஹதீஸைப் பதிவுசெய்துள்ளார்.[(23)] என்றபோதிலும் ''நபிகளார் காலமாகும்போது அன்னாருக்கு வயது அறுபத்தி மூன்று'' என அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ், முஆவியா இருவரதும் ஆதாரத்துடன் முஸ்லிம் இன்னொரு ஹதீஸையும் பதிவு செய்துள்ளார்.[(24)]*

*இவ்விரு ஹதீஸிலும் தெளிவாக வயது வித்தியாசம் காணப்படும்போது முஸ்லிம் இரண்டையும் ஆதாரபூர்வமானவையாய்க் கொண்டது விசித்திரமாயுள்ளது. இரண்டினதும் அறிவிப்பாளர் தொடர்கள் ஆதாரபூர்வமானவையென ஏற்றுக்கொண்டமையே இவ்வாறு நேரக் காரணம். முஸ்லிம் வரலாற்றுப் பின்னணியில் இவற்றின் வாசகங்களை ஆராய்ந்திருந்தால் அவர் ஒரு ஹதீஸை மட்டுமே வெளியிட்டிருப்பார் என்பது நிச்சயம். நபிகளார் காலமாகும்போது அன்னாரின் வயது அறுபத்தி மூன்று என அந்-நவவி கருதுகின்றார்.[(25)] நபி (ஸல்) காலமாகும்போது அன்னாரின் வயது அறுபத்தி மூன்றுதான் என இப்னு ஸஅத் உறுதியாகக் கூறுகிறார்.[(26)]*

### *7. மக்கா காலப்பகுதியினதும் மதீனா காலப்பகுதியினதும் நீட்சி*

*நபித்துவம் கிடைத்தபின் நபிகளார் மக்காவில் பதினைந்து வருடங்களும், ஹிஜ்ராவுக்குப் பின் மதீனாவில் பத்து வருடங்களும் வாழ்ந்தார்கள் என அப்துல்லாஹ் இப்னு அப்பாஸின் ஆதாரத்துடன் முஸ்லிம் பதிவுசெய்துள்ளார்.[(27)] இந்த ஹதீஸின் இன்னொரு எடுத்துரைப்பையும் அவர் பதிவுசெய்துள்ளார். அதில் நபி (ஸல்) மக்காவில் தங்கியிருந்த காலம் பதின்மூன்று வருடங்கள் என்றும் மதீனாவில் தங்கியிருந்த காலம் பத்து வருடங்கள் என்றும் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் குறிப்பிடுகின்றார்.[(28)] நபித்துவம் கிடைத்த பின் நபிகளார் பதின்மூன்று வருடங்கள் மக்காவில் வாழ்ந்தார்கள் என்ற இப்னு இஸ்ஹாக்கின் கருத்தை*

*இப்னு அப்துல் பர்ர் குறிப்பிட்டுள்ளார். இப்னு அப்துல் பர்ர் எடுத்தாண்டுள்ள ஏனைய ஆதாரங்களின்படி நபிகளார் மதீனாவில் வாழ்ந்த காலம் பத்தாண்டுகளாகும்.*[29]

## *8. மஸ்ஜிதுல் ஹரம் நிர்மாணிக்கப்பட்டதற்கும் மஸ்ஜிதுல் அக்ஸா நிர்மாணிக்கப்பட்டதற்கும் இடையிலான கால இடைவெளி*

*அபூ தர்ருடைய ஆதாரத்துடன் புஹாரியும் முஸ்லிமும் பின் வரும் ஹதீஸைப் பதிவு செய்துள்ளனர்:*

> அபூ தர்ர் கூறுகிறார்: பூமியில் முதலில் நிர்மாணிக்கப்பட்ட மஸ்ஜித் எதுவென நான் நபிகளாரிடம் கேட்டேன். நபியவர்கள் 'அல் மஸ்ஜிதுல் ஹரம்' என்றார்கள். அதன்பின் நிர்மாணிக்கப் பட்ட மஸ்ஜித் எதுவெனக் கேட்டேன். அவர்கள் 'அல் மஸ்ஜிதுல் அக்ஸா' என்றார்கள். இவை இரண்டுக்கும் இடையிலான கால இடைவெளி பற்றிக் கேட்டேன். நபியவர்கள் '40 ஆண்டுகள்' என்றார்கள்.[30]

*இந்த ஹதீஸ் வரலாற்றுண்மையுடன் முரண்படுகின்றது. மஸ் ஜிதுல் ஹரம் நபி இப்றாஹிம் (அலை), இஸ்மாயில் (அலை) இருவரும் நிர்மாணித்தது.*[31] *மஸ்ஜிதுல் அக்ஸா நபி சுலைமான் (அலை) நிர்மாணித்தது.*[32] *இப்றாஹிம் நபிக்கும் சுலைமான் நபிக்குமிடையிலான கால இடைவெளி பல தலைமுறைகளாகும். இப்றாஹிமின் இளைய புதல்வர் இஸ்ஹாக்குக்கு யாக்கூப் என்றொரு மகன் இருந்தார். யாக்கூபின் மகன் யூசுஃப் எகிப்தில் குடியேறினார்.*[33] *அவர் தமது சகோதரர்களையும் அங்கு குடியேறச் செய்தார். எகிப்தில் யூசுஃப் வாழ்ந்த காலத்தில் இஸ்ராயிலின் சந்ததிகள் பெருகினர்.*[34] *எகிப்தில் நீண்டகால வளமிக்க வாழ்வின் பின்னர், இஸ்ரேலிகள் வீழ்ச்சி காணத் தொடங்கி சிறிது சிறிதாக அரச பரம்பரையினர்க்கு அடிமைகளாயினர். கவலைக்கிடமான இந்தக் காலகட்டத்தில்தான் அவர்களின் பழைய மகிமையை மீட்டு நிலைநிறுத்த வேண்டி மூஸா (அலை) வந்தார்.*[35] *அவர் மத்திய கிழக்கின் பெரும்பாலான பகுதிகளில் ஹீப்ரு (யூத) அதிகாரத்தை நிறுவினார். தலைமுறைகள் சில கழிய தாவூத் நபி*

அரசரானார்.[36] அவரின் புதல்வர் சுலைமான் நபிதான் ஜெரூஸலத்தில் மஸ்ஜிதை நிறுவியவர்.[37]

இப்றாஹிம் (அலை) கஃபாவை நிர்மாணித்ததற்கும் சுலைமான் நபி அல் அக்ஸாவை நிர்மாணித்ததற்கு மிடையே ஆயிரம் ஆண்டுகளுக்கும் அதிகமான இடைவெளி காணப்படுகின்றது என்பதனால் இப்னு அல்-ஜவ்ஸி இந்த ஹதீஸின் ஆதாரபூர்வம் குறித்து ஐயம் கொள்கின்றார்.[38] வரலாற்று உண்மைக்கும் இந்த ஹதீஸுக்குமிடையே காணும் முரண்பாட்டைத் தீர்க்க முற்படுகின்றார் அல்-குர்துபி. கஃபாவை ஆதம் (அலை) நிர்மாணித்ததாகவும் அல் அக்ஸாவை அவரின் புதல்வரொருவர் நிர்மாணித்ததாகவும் இவையிரண்டுக்கும் இடையே கால இடைவெளி சுமார் 40 வருடங்கள் என்றும் ஆதாரமற்ற கதையொன்றை முன்வைப்பார் அவர்.[39] அல்-தபரானி, அல்-கத்தாபி இருவரும் குர்துபியின் வாதத்தையே அடியொட்டிச் செல்கின்றனர். ஹதீஸின் புனிதத்தைக் காக்கும் முயற்சியில் இப்ன்-ஹஜர் இரு சாத்தியப்பாடுகளை முன்வைக்கிறார்: (1) மஸ்ஜிதுல் அக்ஸாவை நிர்மாணித்தது ஆதம் (அலை), மலக்குகள் அல்லது யாக்கூப். (2) கஃபாவை நிர்மாணித்தது இப்றாஹிம் (அலை) அல்ல. ஏற்கனவேயிருந்த ஓர் அத்திவாரத்தின் மேல் அவர் கட்டடத்தை எழுப்பினார். அதன் பின்னர் அவர் ஜெரூஸலம் மஸ்ஜிதின் உண்மையான சிற்பி யாக்கூப் நபி என்றும் கஃபாவை நிர்மாணித்தவர் இப்றாஹிம் (அலை) என்றும் இவை இரண்டுக்குமிடையே இடைவெளி நாற்பது வருடங்கள் என்றும் கொள்ளப்படும் கருத்தைத் தேர்ந்து கொள்கிறார். என்றாலும் இத்தகைய ஊகம் அவரைத் திருப்தியடையச் செய்வதாக இல்லை. ஆக, இப்னு ஹஜர் இரு மஸ்ஜிதுகளுக்குமிடையிலான இடைவெளி 1000 வருடங்களுக்கும் அதிகம் என்ற இப்னு ஜவ்ஸியின் கருத்தே ஏற்புடைத்து என்கிறார்.[40]

மக்காவில் கஃபா ஏற்கனவே கட்டப்பட்டிருந்த தென்றால் கஃபாவின் முதல் சிற்பியாக ஆதம் (அலை) குறிப்பிடப்பட்டிருப்பார். கஃபாவைப்பற்றி குர்ஆன் உண்மையில் என்ன கூறுகிறதென்றால் இந்த வழிபாட்டுத் தலத்தை நிறுவுவதற்காக அல்லாஹ்

*இப்றாஹிமுக்கு மக்காவில் இடமொன்றை ஒதுக்கிக் கொடுத்தான் என்பதாகும்.[41] ஜெரூஸலத்தில் உள்ள மஸ்ஜிதின் நிர்மாணத் தைப் பொறுத்தவரை அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு அல்-ஆஸின் ஆதாரத்துடன் அந்-நஸாயி பின்வரும் ஹதீஸைப் பதிவுசெய்துள்ளார்:*

*நபிகளார் கூறினார்கள்: ''தாவூதின் மகன் சுலைமான் பைத்துல் முகத்திஸை நிர்மாணித்தபோது அவர் அல்லாஹ்விடம் தனக்கு மூன்று விடயங்களை அருளுமாறு வேண்டினார்...''[42] இந்த திரு மறை வசனமும் ஆதாரபூர்வமான ஹதீஸும் கஃபாவை நிர் மாணித்தவர் இப்றாஹிம் (அலை) என்பதையும் மஸ்ஜிதுல் அக்ஸாவை நிர்மாணித்தவர் சுலைமான் நபி என்பதையும் ஐயந்திரிபற நிறுவுகின்றன. எனவே, கஃபாவை நிறுவியர் ஆதம் மஸ்ஜிதுல் அக்ஸாவை நிறுவியவர் அவரது புதல்வர் என்ற புனைவுக்கு இங்கு இடமில்லை. ஆக, இந்த ஹதீஸ் ஆதார பூர்வமானதல்ல என நாம் முடிவுசெய்யலாம்.*

### *9. அபூ சுஃபியான் தன் மகள் உம்மு ஹபீபாவை நபிகளாருக்கு மணமுடித்துத்தர விரும்புவதாகக் கூறல்*

*அப்துல்லாஹ் இப்னு அப்பாஸின் ஆதாரத்துடன் இந்த ஹதீஸை முஸ்லிம் பதிவு செய்துள்ளார்:*

> முஸ்லிம்கள் அபூ சுஃபியானை ஓரங்கட்டினர். எனவே அபூ சுஃபியான் நபிகளாரிடம் ''அல்லாஹ்வின் றஸூலே! எனக்கு மூன்று விடயங்களை அருள்வீர்களாக'' என வேண்டினார். நபிகளார் அதற்கு உடன்படவும், அபூ சுஃபியான் அன்னாரிடம் ''அல்லாஹ்வின் றஸூலே! என் மகள் ஹபீபா அரேபியா விலேயே மிகவும் அழகான பெண். அவரை உங்களுக்கு மணமுடித்துத் தருகிறேன்'' எனக் கூறினார். நபிகளார் அதற்குச் சம்மதித்தார்...''[43]

*அபூ சுஃபியான் இஸ்லாத்தைத் தழுவும்போது உம்மு ஹபீபாவை நபிகளார் மணமுடித்திருக்க வில்லையென இந்த ஹதீஸ் குறிப்பிடுகின்றது. ('உம்மு' என்ற சொல் அரபியில்*

இன்னாரின் அன்னை என்ற கருத்தில் மட்டுமன்றி பரவலாக உபயோகிக்கப்படுவதென்பது கவனித்தற்பாலது.) அபூ சுஃபியான் ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு றமழான் 20 இல் மக்காவெற்றிக்குச் சற்று முன்னர் இஸ்லாத்தைத் தழுவியவர்.(44) அதேவேளை புலம் பெயர்ந்த மக்கத்து முஸ்லிம்களில் ஒருவராக அபிசீனியாவில் வாழ்ந்துகொண்டிருந்த போதே உம்மு ஹபீபா நபிகளாரின் மனைவியானார்.(45) உம்மு ஹபீபாவும் மற்றவர்களும் ஹுதைபியா உடன்படிக்கை நிறைவேறிய ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு மதீனா திரும்பினர்.(46) மக்கா முற்றுகையை ஒத்திப்போடுமாறு நபிகளா ருக்கு அறிவுறுத்த அபூ சுஃபியான் மதீனா சென்றதை 'சீறா' எழுத்தாளர்கள் விரிவாக எழுதியுள்ளனர். அபூ சுஃபியான் மதீ னாவை வந்தடைந்தமை, நபிகளாரின் மனைவியும் அபூ சுஃபியா னின் மகளுமான உம்மு ஹபீபா தந்தையை வரவேற்ற விதம் முதலியவை விவரமாக வர்ணிக்கப்பட்டுள்ளன.

உம்மு ஹபீபாவின் இருப்பிடத்துக்கு வந்த அபூ சுஃபியான் நபிகளாரின் விரிப்பில் அமர முயன்றபோது தந்தை அபூ சுஃபியான் ஒரு முஷ்ரிக்காக இருந்தனால் உம்மு ஹபீபா அவரை அந்த விரிப்பில் அமரவிடாது தடுத்தார்.(47)

மக்கா வெற்றிக்கு முன்பு அபூ சுஃபியான் மதீனாவுக்குச் சென்ற போது அவர் இன்னும் நிராகரிப்பாளராகவே இருந்தார் என்பதும் உம்மு ஹபீபா ஏற்கனவே நபிகளாரின் மனைவியாக இருந்தார் என்பதும் இதனால் தெளிவாகின்றது.

அந்-நவவி இந்த ஹதீஸில் ஒரு பிரச்சினையைக் காண்கிறார். அபூ சுஃபியான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு. உம்மு ஹபீபா நபியை மணந்தது ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு.(48) இரு காரணங்களால் இந்த ஹதீஸ் புனையப்பட்டது (மவ்தூ) என்கிறார் இப்னு ஹஸம்: (1) அபூ சுஃபியான் இஸ்லாத்தைத் தழுவுதற்கு வெகுகாலத்துக்கு முன்பாக உம்மு ஹபீபா அபிசீனி யாவில் இருக்கும்போதே அவருக்கும் நபிகளாருக்கும் திருமணம் நடந்தேறியதென்பது வரலாறு. (2) இந்த ஹதீஸின் அறிவிப்பா ளர்களில் ஒருவரான இக்ரிமா இப்னு அம்மார் நம்பகத் தன்மை

குன்றியவர்.[49] வாகிஇ, இப்னு மாயின் போன்ற பெரும் அறிஞர் களின் பார்வையில் நம்பகமானவரான இக்ரிமாவை நம்ப முடியாதவராக அறிவித்தமைக்காக இப்னு ஹஸமைக் கடிந்து கொள்கிறார் இப்னு அல்-ஸலாஹ். பிரதியாக அவர் மற்றொரு கருத்தை முன்வைக்கிறார்: அபூ சுஃபியானின் பிரேரணை உம்மு ஹபீபாவுக்கும் நபிகளாருக்கும் நடந்த திருமணத்தைப் புதுப் பித்தலுக்காக இருக்கக் கூடும்.[50] உம்மு ஹபீபாவுடனான திரு மணத்தை நபிகளார் புதுப்பித்ததாகவோ, உம்மு ஹபீபாவை நபிகளாருக்கு மீள்மணம் செய்ய அபூ சுஃபியான் கூறியதாகவோ அறிவிக்கப்படவில்லையாதலால் இவ்வூகம் பிழையானதென அந்-நவவி இதனை நிராகரிக்கிறார். எனினும் ''உங்களுக்கு உம்மு ஹபீபாவை மணமுடித்துத் தருவேன்'' எனக் கூறியதால் அபூ சுஃபியானுக்கு அந்த திருமண பந்தத்தைப் புதுப்பிக்கும் எண்ணம் இருந்திருக்கலாம் என அவர் வேறு ஊகம் கொள்கிறார்.[51] இது இந்த ஹதீஸின் புனிதத்தைக் காப்பதற்கான நியாயமற்ற பிரயத் தனமாகும். இப்னு ஹஸமின் நிலைப்பாடு வலுவானதாகவும் தர்க்கபூர்வமான தாகவும் தெரிகின்றது.

### *10. நபி (ஸல்) மைமூனாவை மணந்தமை*

'நபிகளார் இன்னமும் இஹ்ராம் உடையில் இருக்கும்போதே மைமூனாவை மணந்தார்'' என்ற ஹதீஸை அப்துல்லாஹ் இப்னு அப்பாஸின் ஆதாரத்துடன் புஹாரியும் முஸ்லிமும் மற்றவர்களும் பதிவுசெய்துள்ளனர்.[52]

எனினும், நபிகளார் ஹஜ்ஜை நிறைவேற்றி இஹ்ராமைக் களைந்த பின்புதான் தன்னை மணந்ததாக மைமூனாவே கூறி யுள்ளார்.[53] இரு அறிவிப்புகளுக்குமிடையே முரண்பாடு காணப் படுகின்றது. இப்னு அப்பாஸ் நபிகளார் இஹ்ராமில் இருக்கும் போதே மைமூனாவை மணந்தார் என்கிறார். மைமூனா நபிகளார் இஹ்ராமைக் களைந்த பின்பே தன்னை மணந்ததாகக் கூறுகிறார். இப்னு அப்பாஸின் அறிவிப்பை ஏற்றுக்கொள்வதை விட மைமூனா கூறுவதை ஏற்றுக்கொள்வதே தர்க்கபூர்வமானது.

மைமூனா நபிகளாரை மணந்தவர். அன்னவரின் மனைவி. மற்றவர்கள் அறிவிப்பதைவிட அவர் கூறுவதே கருத்தில் கொள்ளப்படத் தக்கது. இந்த அறிவிப்பில் இப்னு அப்பாஸ் பிழைவிட்டுள்ளதாக ஸயீத் இப்னு அல்-முஸய்யிப் கூறுகிறார்.[54] அநேக ஸஹாபாக்களின் கருத்தின்படி நபி (ஸல்) இஹ்ராமிலிருந்து வெளியேறிய பின்னரே மைமூனாவை மணந்தார் என அந்-நவவி அறிவிக்கின்றார்.[55] அபூபக்கர் இப்னு அல்-அரபி இரு காரணங்களுக்காக இப்னு அப்பாஸின் அறிவிப்பை ஏற்க மறுக்கின்றார். (1) இப்னு அப்பாஸைத் தவிர வேறு எவரும் இதனை அறிவிக்கவில்லை. (2) இதனை வேறுவிதமாக அறிவித்துள்ளவர்கள் இவ்விடயம் குறித்து இப்னு அப்பாஸைவிட அதிகம் தெரிந்திருக்கின்றனர்.[56]

மேலும், இஹ்ராம் நிலையில் மணஞ்செய்வதைத் தடுக்கும் நபிகளாரின் ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் உள்ளன. இது சம்பந்தமான நபிகளாரின் அறிவிப்பை வெவ்வேறு அறிவிப்பாளர் தொடர்களின் மூலம் பல ஹதீஸ்களில் முஸ்லிம் பதிவுசெய்துள்ளார்: ''நிச்சயமாக இஹ்ராமில் இருக்கும் ஒருவர் மணப்பதற்கோ மணக்கப்படுவதற்கோ அனுமதிக்கப்படவில்லை.''[57] இந்த விதியை நபியவர்களே மீறியிருப்பார்களென்பது கற்பனை செய்ய முடியாததாகும். இப்னு அப்பாஸின் அறிவிப்பில், அதன் அறிவிப்பாளர் தொடர் ஆதாரபூர்வமாய் இருந்தபோதும், தவறு நேர்ந்துள்ளது என இப்னு பர்ர் கருத்து தெரிவிக்கின்றார். பலரால் எடுத்துரைக்கப்படும் மற்ற ஹதீஸையே அவர் ஏற்புடைத்ததாகக் கொள்கிறார்.[58]

இறுதியாக இவ்விவகாரத்தையிட்டு அறிஞர்கள் மத்தியில் நிலவும் பல்வேறு அபிப்பிராயங்கள் ஒருபுறத்திருக்க, நபிகளாரை மணந்த அவர் மனைவி மைமூனா கூறுவதை அதிக நம்பகமானதென ஏற்றுக்கொள்வதே நியாயமானது. முடிவில் இப்னு அப்பாஸின் ஆதாரத்துடன் தரப்பட்டுள்ள தகவல் தவறானதாக அமைந்துள்ளமையால் இவ்வறிவிப்பு நம்பகமானதல்லவென்றே கொள்ள வேண்டியுள்ளது.

# 07

# ஹதீஸை ஆதாரப்படுத்துவதில் நிதானம்

நிதானத்தை நடுநிலைமையை விரும்புகிற, கடுமையை தீவிர தன்மையை வெறுத்தொதுக்குகின்ற மனித இயல்புக்கு இசைவான வாழ்க்கை முறையாகவே இஸ்லாம் அருளப்பட்டது. எனவே அதன் சட்டதிட்டங்கள் ஒழுங்குப் பிரமாணங்கள் யாவும் எல்லா விடயங்களிலும் நடுநிலைக் கொள்கையை பிரதிபலிப்பனவாகவே அமைந்துள்ளன. மிகைப்படுத்தலாய், தீவிரத் தன்மை வாய்ந்ததாய்த் தோன்றும் எதுவும் இஸ்லாத்துக்குப் புறம்பானதாகும்.

## நீதமான நடுநிலை குறித்த குர்ஆனின் நிலைப்பாடு

இஸ்லாத்தைப் பின்பற்றுவோரை அல் குர்ஆன் ''உம்மத்தன் வஸதன்'' (நடுநிலையான சமூகம்) என அழைக்கின்றது: ''மேலும் நாம் உங்களை நடுநிலையான சமூகத்தினராக ஆக்கினோம்'' (2:143). எல்லா விவகாரங்களிலும் முஸ்லிம்களின் பார்வையும் நிலைப்பாடும் நடுநிலையானதாய் இருக்கும். எல்லா விவகாரங்களிலும் அவர்கள் தீவிரவாதத்தையும் மிதமிஞ்சிச் செல்வதையும் வெறுத்தொதுக்குவர் என்பதே இதன் அர்த்தம். மிதமிஞ்சிய பொருளாசையையும், முந்திய நபிமார்களைப் பின்பற்றியோரின் அதி தீவிர

*பற்றின்மையையும் விட்டுவிடுமாறு முஸ்லிம்கள் எதிர்பார்க்கப் படுகின்றனர். பொருளாசைக்கும் பற்றின்மைக்கும் இடையே நடுநிலையைக் கடைப்பிடித்தல்தான் இஸ்லாம் காட்டித் தரும் வழிமுறை.*

*மனிதன் பன்முகத்தன்மை வாய்ந்தவன். அவனது வாழ்வின் சகல துறைகளுக்கும் அவ்வவற்றுக்குரிய அக்கறையும் கவனமும் வழங்கப்படல் அவசியம். குடும்ப வாழ்க்கை, சமூக அமைப்பு, பொருளாதாரம், கல்வி, கலை, கலாசாரம், அறிவு ஜீவிதம், அற வொழுக்கம், மதவாழ்வு யாவும் ஒருங்கமைந்து மனிதனுக்கு உந்துசக்தியாய் விளங்குகின்றது. இதில் ஏதோவொரு -துறையில் அவன் நிதானத்தை இழக்கும்போது அது தீவிரவாதத்துக்கும் வேறு தீமைகளுக்கும் இட்டுச்செல்கின்றது. உதாரணமாக ஒரு மனிதன் வணக்க வழிபாடுகளில் அதிதீவிர ஈடுபாடு கொண்டு அவற்றில் மிதமிஞ்சிய நேரத்தைச் செலவிட்டால் அது அவனது குடும்ப வாழ்வில், சமூக, பொருளாதாரப் பொறுப்புகளில் பெரும் பாதிப்பை உண்டுபண்ணிவிடலாம். எனவே எல்லா விடயங்க ளிலும் நடுநிலையைக் கடைப்பிடிக்குமாறு குர்ஆன் அவனுக்குக் கட்டளையிடுகின்றது. உதாரணமாக, ''அவர்கள் எத்தகையவர் களென்றால், செலவு செய்யும்போது ஊதாரித்தனமும் கருமித்தன மும் இன்றி இவ்விரு தீவிர நிலைகளுக்கும் மத்தியில் நடுநிலை யைக் கடைப்பிடிப்பார்கள்'' (25:67). இத்திருவசனம் பொருளா தார வாழ்வு குறித்துப் பேசுகிறதெனிலும் இது பரவலான அர்த்த வியாபகமுடையது. இதன் பிரதான செய்தி நடுநிலைமை. இக் கொள்கை எல்லாக் காலத்துக்கும் எல்லா நிலைமைகளுக்கும் பொருந்துவது. ஸூறா 25 வசனங்கள் 63 - 74 ஒரு சாதாரண விசு வாசியை வர்ணிக்கின்றன. அவரிடம் தான் உயர்ந்தவன் என்ற அகந்தை - உயர்வுச் சிக்கல்- கிடையாது (63). அவர் யாருடனும் - குறிப்பாக அறிவிலிகளுடன் - தேவையற்ற விவகாரங்களில் சிக்கிக் கொள்வதில்லை (63). அவர் தன் றப்பின்மீது விசுவாசமும் பக்தி யும் பூண்டவர் (64). இவ்வுலகில் தான்புரிந்த செயல்களுக்கு இறுதி விளைவை எதிர்பார்த்திருப்பவர். (65-66). அவர் சம்பாத் தியத்திலும் செலவு செய்வதிலும் வீண் விரயம் இராது (67).*

*அவர் அநியாயக் கொலைகளைத் தவிர்த்துக்கொள்வார் (68). கற்பொழுக்கத்தைப் பேணுவார் (68). தவறான செயல்களுக்காகப் பச்சாத்தாபப்படுவார் (69-71). ஈனச்செயல்களை கௌரவமாக தவிர்த்துக் கொள்வார் (72). பொய்சாட்சி கூறமாட்டார் (73). அல்லாஹ்வின் செய்தியை ஆழமாகப் புரிந்துகொள்ள விழைவார் (73). குடும்பத்தை ஒழுங்காகக் கவனித்து தன் பொறுப்புகளை நிறைவேற்றுவார்.*

*இவ்வசனங்கள் மனிதனைப்பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தை தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன. மனிதன் தன்னையறிந்து சகல விவகாரங்களிலும் நடுநிலையைக் கடைப் பிடிக்குமாறு கூறுவதுடன் எல்லாவிதமான தீவிரவாதத்தையும் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்துகின்றன. நீதியை நிலைநாட்டுமாறும் தயாளமாய் நடந்துகொள்ளுமாறும் அல்லாஹ் கட்டளையிடுகிறான். நீதி செலுத்துமாறும் நன்மை செய்யுமாறும் உற்றார் உறவினருக்கு தாராளமாய் (பொருள்) கொடுக்குமாறும் அல்லாஹ் ஏவுகிறான் (16:90). மனிதன் சகல நடவடிக்கைகளிலும் முக்கியமான நடுநிலைமைக் கொள்கையை, நீதிக்கும் தயாளத்துக்குமிடையே நிதானத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதே இங்கு கூறப்படும் செய்தி.*

## நபிகளாரும் நடுநிலையும்

*நபி (ஸல்) எல்லாவித தீவிரவாதத்திலிருந்தும் தூரமாகியதுடன் நீதியையும் நிதானத்தையும் கடைப்பிடிக்குமாறும் சகலவிதமான ஸ்திரமின்மையைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் தம் உம்மத்தினர்க்குப் போதித்தார்கள். உதுமான் இப்னு மஸ்ஊன் மற்றும் அவரைப் போன்றோர் உடைய உதாரணங்கள் எமக்குள்ளன. மிகத் தீவிரமான ஆன்மீகத்தின்பால் ஈர்க்கப்பட்டு அவர்கள் திருமணம் உட்பட லௌகீக இன்பங்களைத் துறக்க விரும்பினர். அதற்கு நபியின் அனுமதியை நாடினர். நபிகளார் அதனைக் கடுமையாக நிராகரித்துவிட்டதுடன் இவ்வாறு உடலை வருத்திக் கொள்வதற்கு இஸ்லாம் அனுமதிக்கவில்லையென்பதைத் தெளிவுபடுத்தினார்கள்.*

நபிகளாரின் அன்றாட வாழ்க்கையை அறிந்து கொள்வதற்காகச் சிலர் அன்னாரின் மனைவியரை அணுகிய உதாரணங்களும் உள் ளன. ஒருவர் வணக்கங்களில் தமது காலத்தைக் கழிப்பதற்கு உறுதிபூண்டார். இன்னொருவர் தினசரி நோன்பு நோற்பதற்குத் தீர்மானித்தார். மற்றொருவர் பிரமச்சரியம் பூண முடிவு செய்தார். இவற்றைச் செவியுற்ற நபிகளார், அவை குறித்த தமது அதிருப் தியைத் தெரிவித்தார்கள். பயபக்தியென்பது தீவிரத்தில் இல்லை; லௌகீகம் ஆன்மிகம் ஆகிய இரு நிலைகளுக்குமிடையே நடு நிலையைக் கடைப்பிடிப்பதிலேயே அது அடங்கியுள்ளது என அன்னார் அறிவுறுத்தினார்கள்.

அப்துல்லாஹ் இப்னு அம்ரூ இப்னுல் ஆஸ் ஆன்மிகத்தில் அளவுகடந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அதுவரை அருளப்பட்டி ருந்த குர்ஆன் வாசகங்களைத் தினசரி ஓதி முடிப்பது அவரது வழக்கமாக இருந்தது. நபிகளார் இதனையிட்டு அதிருப்தி தெரிவித்ததுடன் திருக் குர்ஆனை இரு வாரங்களுக் கொருமுறை ஓதிமுடிக்குமாறு அறிவுரை கூறினார்கள். தினசரி விரதமிருப்பதும் அவரது வழக்கமாயிருப்பதை அறிந்து அவ்வளவு தீவிரம் வேண் டாமென மீண்டும் அவருக்கு அறிவுரை கூறினார்கள். நபி (ஸல்) அபூ மூஸா அல்-அஷ்ஹரியையும் முஆத் இப்னு ஜபலையும் தமது பிரதிநிதிகளாக யெமனுக்கு அனுப்பிவைக்கும்போது ஏனைய சில அறிவுறுத்தல்களுடன், மக்களுக்கு விடயங்களை எளிதாக்கி வைக்குமாறும் அவர்களைச் சிரமப்படுத்த வேண்டா மெனவும் சொல்லி யனுப்பினார்கள்.

அபூ தர்தா மணவாழ்க்கை உட்பட லௌகிக வாழ்வில் ஆர்வமற்றுப்போய் அதிகநேரத்தை வணக்கங்களில் செலவிடத் தொடங்கினார். அடிக்கடி நோன்பிருந்தார். மனைவிக்கு அவர் மீதிருந்த உரிமையைப் புறக்கணித்தார். உடலுக்கு ஓய்வு கொடுக்க மறுத்தார். இரவில் நித்திரை செய்வதைத் தவிர்த்தார். தன் நண்பரது இப்போக்கை அவதானித்த ஸல்மான் அல் ஃபார்ஸி ஆன்மீகம், லௌகிகம் இரண்டிலும் தன் தேவைகளுக்கு சமமாக கால நேரங்களைப் பகிர்ந்துகொள்ளுமாறு அபூ தர்தாவுக்கு அறிவுரை

பகர்ந்தார். ஸல்மானின் அறிவுரை அபூ தர்தாவுக்குத் திருப்தி அளிப்பதாக இல்லை. அவர் ஸல்மானை நபிகளாரிடம் அழைத்துச் சென்றார். நபிகளார் ஸல்மானின் அறிவுரையை உறுதி செய்ததுடன், ''உமது உடம்புக்கு உம்மீது உரிமையுண்டு. உமது விழிகளுக்கு உம்மீது உரிமையுண்டு. உமது ஆன்மாவுக்கு உம்மீது உரிமையுண்டு. உமது மனைவிக்கு உம்மீது உரிமையுண்டு'' என்றார்கள். தீவிரமானவற்றுக்கு எதிராக நபிகளார் நிதானத்தை நடுநிலையைப் பரிந்துரைத்தார்கள் என்பது இதனால் தெளிவாகின்றது. நபிகளாரின் போதனைகள் செயல்கள் அனைத்தும் இதனையே வலியுறுத்துகின்றன. இதனாலேயே அன்னாருடன் தொடர்புபடுத்தப்படும் தீவிரமானவை யாவும் போலியென்றும் புனையப்பட்டவை யென்றும் நிராகரிக்கப்படல் வேண்டும்.

மேலும், ''நபிகளார் அகிலத்தாருக்கு ஓர் அருளாக (ரஹ்மத்)வேயன்றி அனுப்பப்படவில்லை'' (21:107). நபிகளாரின் குணவொழுக்கமும், அவர்கள் கொணர்ந்த செய்தியும், அவர்களின் போதனைகளும் இதனையே உறுதிசெய்கின்றன. அவரது போதனைகள் முற்று முழுதாக மனித இயல்புடன் இசைவாக்கம் கொண்டவை. முன்னர் குறிப்பிட்டதுபோல் மனிதன் பொதுவாக தீவிரவாதத்தை மறுதலிப்பவன். நபிகளாரின் போதனைகள் தீவிரத்தன்மை வாய்ந்தனவாய் இருந்திருப்பின் மனிதன் அவற்றை நிராகரித்திருப்பான். நபிகளார் முதலில் பேசத் தொடங்கியது அரபிகளை நோக்கி. அந்தப் பேச்சின் அழகிய நடுநிலைமையில் வசீகரமுற்றே அவர்கள் நபியின் தூதை ஏற்றுக்கொண்டனர்.

## நடுநிலைமை: சில ஹதீஸ்கள் குறித்த வரைமுறைகள்

இஸ்லாமியத் தூதின் அடிப்படைகளில் ஒன்று நடுநிலைமையென்பதும் குர்ஆனோ நபிகளாரோ எத்தகைய வரம்புமீறலையும் முன்மொழியவில்லை என்பதும் தெளிவான விஷயங்கள். நடுநிலைமைதான் இஸ்லாமிய வழி. இதுவே வாழ்வையும் விவகாரங்களையும் நீதியாக நிதானமாக அணுகும் முறை. கோட்பாடு சார்ந்தும் நடைமுறை சார்ந்தும் அது சகலவிதமான வரம்பு

*மீறலையும் தீவிரவாதத்தையும் புறந்தள்ளி விடுகின்றது. நடு நிலைக் கொள்கையை ஆய்வதற்கும் அதன் முன்னால் இந்த ஹதீஸ்களின் நிலைமை என்ன என்பதை அனுமானிப்பதற்கும் சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன:*

***1. தஸ்பீஹ் தொழுகை***

*நபி (ஸல்) தம் மாமனார் அப்பாஸ் இப்னு அப்துல் முத்தலி புக்கு விசேட தொழுகையொன்றைக் கற்றுக் கொடுத்தார்களென அறிவிக்கப்படுகின்றது. சாதாரண தொழுகை யை விடவும் அதன் ரக்அத்துகளில் மேலதிக அம்சங்கள் அடங்கியிருந்தன. இதுவே தஸ்பீஹ் தொழுகை எனப்படுகின்றது. அத்தொழுகையின் விபரம் வருமாறு: (1) ஃபாத்திஹா ஸூறாவும் வழமையான தொழுகை களில் போலஇன்னொரு ஸூறாவும் ஓதியபின் நிலையில் நின்று 'சுப்ஹானல்லாஹி வல் ஹம்து லில்லாஹி வ லாஇலாஹ இல் லல்லாஹு வல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகத் தூய்மையான வன். புகழனைத்தும் அவனுக்கே உரியன. அவனைத் தவிர வணக்கத்திற்குரியோன் வேறு யாருமில்லை. அல்லாஹ் மிகப் பெரியவன்.) என்ற தஸ்பீஹைப் பதினைந்து முறை ஓத வேண் டும். (2) பின்னர் ருக்ஊவில் பத்து தஸ்பீஹ். (3) ருக்ஊவிலிருந்து நிலைக்கு வந்ததும் பத்து தஸ்பீஹ். ஸுஜூதிலும் பத்து தஸ்பீஹ். இவ்வாறு ஒவ்வொரு ரக்அத்திலும் தஸ்பீஹ் ஓதி நான்கு ரக்அத்து கள் தொழ வேண்டும். இவ்விசித்திரமான தொழுகை பற்றி ஹதீஸில் அறிவிக்கப்பட்டிருப்பதாவது: இத்தொழுகையை நிறை வேற்றுபவரின் முதல் பாவம், கடைசி பாவம், பெரும் பாவம், சிறுபாவம், பழைய பாவம், புதிய பாவம், வேண்டுமென்று செய்த பாவம், தெரியாத்தனமாக செய்த பாவம், மறைவான பாவம், வெளிப்படையான பாவம் ஆகிய பத்து வகையான பாவங்களும் மன்னிக்கப்படும்.*[(1)]

*இப்னு அல்-ஜவ்ஸி இதன் அறிவிப்பாளர் வரிசையில் சில நம்பமுடியாதவர்கள் காணப்படுவதால் இந்த ஹதீஸ் நம்பகமான தல்லவென அறிவிக்கின்றார். மூன்று அறிவிப்பாளர் வரிசைகள் மூலம்அவர் இந்த ஹதீஸை எடுத்தாள்கின்றார்:*

*1. ஹிப்பத்தல்லாஹ் இப்னு முஹம்மத் இப்னு ஹுசைன், அபூ அலி அல்-ஹஸன், இப்னு அலி அல்-முதஹ்ஹப், அபூ அல்-ஹஸன் தாரகுத்னி, உதுமான் இப்னு அஹ்மத் இப்னு அப்துல்லாஹ், அபூ அல்-அஹ்வஸ், முஹம்மத் இப்னு அல்-ஹைதம் அல்-காதி, அஹ்மத் இப்னு அபீ சுஐப் அல்-ஹர்ரானி, மூஸா இப்னு ஐயுன், ஸதகா இப்னு யஸீத் அல் -குராஸானி, உர்வாஹ் இப்னு ருவைம், இப்னு அல்-தைலமி, அல் அப்பாஸ் இப்னு அப்துல் முத்தலிப், நபிகளார்.*

*2. அல்-ஹுஸைன், அபூ அலீ இப்னுல் முதஹ்ஹப், அல்-தாரகுத்தனி, அபூபக்கர் அல்-நிஸாபுரி, அப்துல்லாஹ் இப்னு சுலைமான் இப்னு அல்-அஷ்ஹத், அப்துற் றஹ்மான் இப்னு பிஷ்ர் இப்னுல் ஹகம், மூஸா இப்னு அப்துல் அஸீஸ், அல்-ஹக்கம் இப்னு அபான், இக்ரிமா, இப்னு அப்பாஸ், நபிகளார்.*

*3. இப்ன்-அல் ஹுஸைன், இப்னுல் முதஹ்ஹப், அல்-தாரகுத்னி, அபூ அலி அல்-காதிப் அலி இப்னு முஹம்மத் இப்னு அஹ்மத் இப்னு அல்-ஜுஹ்ம், அஹ்மத் இப்னு யஹ்யா இப்னு மாலிக் அல் சூசி, யஸீத் இப்னு அல்-ஹுபாப், மூஸா இப்னு உபைதாஹ் அல்-ரிந்தி, ஸஈத் இப்னு அபீ ஸஈத் மவ்லா அபூ பக்கர் இப்னு ஹஸம், அபூ ராஃபி - நபிகளாரின் மவ்லா, நபிகளார்.*

*முதலாவது தொடரில் ஸதகா இப்னு யஸீத் அல்-குரஸானியும், மூன்றாவது தொடரில் மூஸா இப்னு உபைதாவும் நம்ப முடியாதவர்கள். இரண்டாவது தொடரில் மூஸா இப்னு அப்துல் அஸீஸ் அநாமதேய நபர். எனவேதான் இப்னு அல் ஜவ்ஸி, இதே விடயத்தையிட்டு வேறு அறிவிப்புகள் காணப்பட்ட போதிலும், விசேட தொழுகை பற்றிய இந்த ஹதீஸ் நம்பகமற்ற தென வகைப்படுத்துகின்றார். இந்த அறிவிப்புகளில் ஒருவரோ இன் னொருவரோ பலவீனமானவர் அல்லது நம்ப முடியாதவர் அல்லது அறியப்படாதவர் என்ற அடிப்படையில் இவை ஏற்கப்பட முடியாததென நிராகரிக்கின்றார் அவர்.(2)*

*இது எவ்வாறிருப்பினும் அறிவிப்பாளர் தொடரில் ஒருவர் அல்லது அனைவருமே ஆதாரபூர்வ மானவர்களாய் இருப்பினும்*

இந்த ஹதீஸின் கருப்பொருள் அதாவது விஷேட தொழுகை பற்றிய இவ்வறிவிப்பு ஆதாரபூர்வமானதென அறிவிக்க முடியாத வாறு இதில் தீவிரத்தன்மை கசிகின்றது.

ஃபர்ளான தொழுகைகளிலும் ஸுன்னத்தான தொழுகை களிலும் செலவிடப்படும் நேரமும் சக்தியும் குறித்து சமநிலை யைப் பேணு மாறு நபிகளார் கற்றுத்தந்துள்ளனர். மறுபுறம் மேற்கண்ட ஹதீஸில் குறிப்பிடப்படும் தொழுகையை நிறை வேற்றுபவருக்கு அதிக நேரமும் சக்தியும் தேவைப்படுவதால் இது விசித்திரமானதாய்த் தென்படுகின்றது. முடிவாக, இந்த ஹதீஸ் பலவீனமான நம்பமுடியாத அறியப்படாத அறிவிப்பாளர் தொடரைக் கொண்டிருப்பது ஒருபுறத்திருக்க, சமநிலை மீறியதாக அமைந்துள்ளது என்ற அடிப்படையிலும் இந்த ஹதீஸ் நிராகரிப் புக்குள்ளாகும்.

### 2. கடமையை விஞ்சிய பிற தொழுகைகள்

உலகமெங்கும் முஸ்லிம் சமூகத்தில், குறிப்பாக ஸூஃபி வட் டங்களில், இம்மையிலும் மறுமையிலும் பெரும் நன்மையை எதிர்பார்த்துச் சில மேலதிகத் தொழுகைகளில் முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது. இவ்விசேடத் தொழுகைகளாவன: சனிக் கிழமைத் தொழுகை, ஞாயிற்றுக்கிழமைத் தொழுகை, திங்கட் கிழமைத் தொழுகை, வெள்ளிக்கிழமைத் தொழுகை, முஹர்ரம் 10 தொழுகை, றஜப் 1 தொழுகை, ஷஹ்பான் 15 இரவுத் தொழுகை, ஈதுல் ஃபித்ருக்கு முந்தியநாள் தொழுகை, ஹஜ்ஜுத் தினத் தொழுகை இன்னபிற. இப்பழக்கம் மிதமிஞ்சிய மேலதிக தொழு கைகளைப் பற்றிய ஹதீஸ்களை ஆதாரமாகக் கொண்டது. இத்தகைய ஹதீஸ்களிலொன்று வருமாறு:

ஞாயிற்றுக்கிழமை, இரவுவேளை, ஒவ்வொரு ரக்அத்திலும் ஃபாத்திஹா ஸூறாவுக்குப்பின் ஸூறா இஃலாஸை (112) 15 முறை ஓதி நான்கு ரக்அத்துகள் விசேட தொழுகையை நிறைவேற்றும் ஒருவருக்கு இறுதித் தீர்ப்புநாளில் அல்லாஹ், குர்ஆனைப் பத்து முறை ஓதித் தமாம் செய்து குர்ஆனின் அனைத்து கட்டளைகளை

யும் ஏற்று நடந்ததற்கான கூலியை வழங்குவான். அவர் பூரண சந்திரனைப் போன்று பிரகாசிக்கும் முகத்துடன் மண்ணறை யிலிருந்து எழுப்பப்படுவார். இத்தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்துக்கும் மாணிக்கம் பதித்த ஓராயிரம் மாளிகைகள் அவருக்கு வழங்கப்படும். ஒவ்வொரு மாளிகையிலும் ஓராயிரம் அறைகள் இருக்கும். ஒவ்வோர் அறையிலும் ஓராயிரம் படுக்கைகள் இருக் கும். ஒவ்வொரு படுக்கையிலும் ஒரு கன்னியிருப்பாள். ஒவ்வொரு கன்னிக்கும் ஓராயிரம் ஆண் பணியாளர்களும் ஓராயிரம் பெண் பணியாளர்களும் இருப்பர்.''[3]

இதுவும், மிதமிஞ்சி மேலதிக விசேட தொழுகைகளைத் தொழும் முறையையும் அவற்றைத் தொழுவதனால் கிடைக்கும் நற்கூலிகளையும் கூறும் பிற ஹதீஸ்களும் அவற்றின் அறிவிப்பா ளர் தொடர்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக ஏற்க முடியாதவையென நிராகரிக்கப்பட்டுள்ளன. எனினும் அவற்றின் பொருளடக்கம் காரணமாக அவை நிராகரிக்கப் படாமை விசித் திரமே.

### 3. மிதமிஞ்சிய வெகுமதியும் தண்டனையும்

அல்-குர்ஆனைப் போன்று ஹதீஸ்களும் நற்செயல்களுக்கான வெகுமதிகளையும் தீமைகளுக்கான தண்டனைகளையும் விவரிக் கின்றன. சத்தியத்தை மறுப்பது துன்பத்துக்கும் அவமானத்துக்கும் இட்டுச்செல்லு மென்றும் அல்லாஹ்வுக்கும் றஸூலுக்கும் கீழ்ப் படிதல் இறுதித் தீர்ப்பு நாளில் அதற்கான நற்கூலியை ஈட்டித் தரும் என்றும் அல்குர்ஆன் பல்வேறிடங்களில் பொதுவாகக் குறிப்பிடுகின்றது. சில சமயங்களில் வெகுமதியையும் தண்ட னையையும் விவரித்தும் கூறுகின்றது. என்றாலும் அவற்றில் சமநிலைப் பிறழ்வையோ ஒவ்வாமையையோ காணமுடியாது. ஆனால் ஹதீஸ் இலக்கியத்தைப் பொறுத்தவரை இது சற்று வித்தியாசப்படுகின்றது. அதில் வெகுமதி தண்டனை பற்றிய விவரிப்புகள் மிகவும் நுட்ப நுணுக்கத்துடனும் மிகைநவிற்சியாக வும் வர்ணிக்கப்படுகின்றன. உதாரணமாக மிக அற்பமான சிறு

நன்மைகளுக்கெல்லாம் அளப்பரிய நற்கூலிகளும் சின்னஞ்சிறு பிழைகளுக்கெல்லாம் கடுந்தண்டனைகளும் உண்டெனக் கூறும் ஹதீஸ்கள் மலிந்து காணப்படுகின்றன. அவற்றுட்சில வருமாறு:

1. 'சுப்ஹானல்லாஹ் வபி ஹம்திஹி' என்று சொல்பவருக்கு அல்லாஹ் சுவனத்தில் ஆயிரக்கணக்கான ஈத்தம் கன்றுகளை நடுகின்றான். அவற்றின் வேர்கள் தங்கத்தாலானவை.(4)

2. படுக்கைக்குச் செல்கையில் குறிப்பிட்டவொரு துஆவை ஓதுபவருக்கு அந்த ஓதலின் ஒவ்வொரு அட்சரத்துக்கும் 700,000 மலக்குகள் அவரைத் துதிப்பதுடன் அவரை மன் னிக்குமாறு அல்லாஹ்விடம் இறைஞ்சுவர்.(5)

3. இரவுத் தொழுகைக்குப் பின் கவிதை படிப்பவரின் அன் றைய இரவுத் தொழுகையை அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான்.(6)

4. படுக்கைக்குப் போகும்போது அல்லாஹ்வைப் புகழும் வார்த் தைகளை உச்சரிப்பவர் அன்று பிறந்த பாலகன் போலாவார்.(7)

5. சந்தையில் வைத்து அல்லாஹ்வை ஒருமுறை நினைவு கூர்பவரை அல்லாஹ் நூறுமுறை நினைவு கூர்வான்.(8)

6. இரவின் ஆரம்பத்தில் ''அல்லாஹ் நூஹுவுக்கு அருள்புரி வானாக. அவர்மீது சாந்தி உண்டாவதாக'' எனப் பிரார்த் திப்பவரை அவ்விரவில் நட்டுவக்காலி தீண்டாது.(9)

7. 'அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்' (அகில உலகங் களையும் படைத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்) என ஓதுபவரின் வார்த்தைகள் கேட்கப்படாத தூரத்திலிருந்து மலக்கொருவர், ''அல்லாஹ் உம்மிடம் வந்துவிட்டான். அவ னிடம் (உம் தேவைகளைக்) கேட்பீராக'' என அழைப்பார்.(10)

8. யா இப்னு உமர்! வைகறையிலிருந்து காலைத் தொழுகை வரை ''சுப்ஹானல்லாஹு வபி ஹம்திஹி சுப்ஹானல்லா ஹில் அலீம்; அஸ்தஃபிருல்லாஹ்'' என ஓதுவீராக. முழு உலகமும் அதன் செல்வங்களுடன் உமது காலடியில்

இருக்கும். நீர் உச்சரிக்கும் ஒவ்வொரு வார்த்தையிலிருந்தும் அல்லாஹ் ஒரு மலக்கை உண்டாக்குவான்; அதற்கான வெகு மதியை அவர்கள் உலக முடிவு நாள்வரை பிரஸ்தாபித்துக் கொண்டிருப்பர்.[11]

9. அல்லாஹ்வுக்காகத் தன்னை 40 நாட்கள் அர்ப்பணிப்பவரின் நாவிலிருந்து ஞானத்தின் ஊற்றுகள் கொப்பளிக்கும்.[12]

10. அறுபதாண்டு பக்தியைவிட ஒரு மணித்தியால சிந்தனை மேலானது.[13]

இவ் ஹதீஸ்கள் புனையப்பட்டவை யென்பது ஹதீஸ் அறிஞர் களின் முடிவு. இது எவ்வாறிருப்பினும், இதனைத் தீர்மானிப்ப தற்கு ஒருவர் இவற்றின் அறிவிப்பாளர்கள் தொடர்களைப் பரிசீலிக்கத் தேவையில்லை. இவற்றின் வாசகங்களைப் பரிசீலிப் பதே போதுமானது. அவையே இவை போலியென்பதைக் காட்டி விடும். இப்னு அல் கையிமின் கருத்துப்படி நற்கூலிகளும் தண்டனைகளும் குறித்த மிகைநவிற்சியான ஹதீஸ்கள் யாவும் நம்பகமற்றவை.[14]

### 4. செல்வந்தர் மீதான கண்டனம்

செல்வந்தர்களைக் கண்டனஞ்செய்வதோடு, அவர்களுடன் பழக வேண்டாமெனக் கூறும் ஹதீஸ்கள் அநேகம் உள. உதார ணமாக,

1. செல்வந்தவர்களிடம் செல்வம் இருப்பதால் அவர்களைப் புகழ்ந்து பேசும் வறியோரை அல்லாஹ் சபிக்கின்றான். அவ்வாறு புகழ்வோரின் மார்க்கத்திலிருந்து மூன்றிலொரு பகுதியை அல்லாஹ் எடுத்து விடுகின்றான்.[15]

2. ''மறுமையில் நீங்கள் என்னுடன் சேர்ந்துகொள்ளப் போவதன் ரகசியம் யாதெனில் (1) செல்வந்தர்களுடன் உங்களுக்கு எவ்விதத் தொடர்பு மில்லை. (2) ஒட்டுப்போடாத ஆடையை நீங்கள் அணிவதில்லை'' என்று நபிகளார் ஆயிஷாவிடம் கூறினார்கள்.[16]

இவ் ஹதீஸ்கள் புனையப்பட்டவை. இவை ஏற்றுக்கொள்ள முடியாதவை யென்பதில் கேள்விக்கிடமில்லை. இப்னு ஜவ்ஸி இந்த ஹதீஸ்கள் பொய்யானவையென்கிறார்.[17] இஸ்லாத்துக் காகவும் ஏழை எளியவர்களுக்கு உதவுவதற்காகவும், இராணுவத் தைக் கட்டியெழுப்புவதற்காகவும், இஸ்லாமிய அரசின் வளர்ச் சிக்காகவும் நிதியுதவி செய்யுமாறு அல்-குர்ஆன் அவ்வப்போது விசுவாசிகளுக்கு அழைப்பு விடுக்கின்றது. பொருளீட்டுவதிலும் சேமிப்பதிலும் ஈடுபடாவிட்டால், அல்லாஹ்வின் இவ்வழைப்பை யேற்று உதவி புரிதல் எவ்வாறு?

### 5. முஸ்லிம் சமூகத்தின் சில பிரிவினர்மீது கண்டனம்

முஸ்லிம் சமூகத்தின் சில பிரிவினர் மீது ஒவ்வாத முறையில் கண்டனம் தெரிவிக்கும் ஹதீஸ்களும் நபிகளாரின் பெயரால் காணப்படுகின்றன. உதாரணமாக,

எல்லாம் நன்மையாய் முடியும் என்பவர்கள் (முர்ஜிகள்), மனித விடுதலையை ஆதரிப்போர் (காதிரிகள்), இரத்து செய் வோர் (சீயாக்கள்), கலகக்காரர்கள் (காரிஜிகள்) முதலானோரின் நான்கி லொரு பங்கு மத நம்பிக்கையை அல்லாஹ் எடுத்துவிடு வான். அவர்களை நிரந்தரமாக அதிலேயே தங்கிவிடுமாறு அல்லாஹ் நரகத்தில் தூக்கியெறிவான்.[18]

இப்னு ஜவ்ஸி இது புனையப்பட்ட ஹதீஸ் என அறிவிக்கின்றார்.

### 6. சில தனிமனிதர்கள் மீது கண்டனம்

வரலாற்றில் நன்கு அறியப்படட சிலரைக் கண்டனம் செய்யும் சில ஹதீஸ்கள் உள. அவை முஸ்லிம்களின் பொதுவான அங்கீ காரத்தை ஏற்றுக்கொண்டனவாகவும் காணப்படுகின்றன. உதார ணமாக,

1) யஸீத் இப்னு முஆவியா நபிகளாரின் பேரரான ஹுஸைனை மக்கள் பார்த்திருக்கக் கொல்லப் போகிறவராதலால் அன்னார் முஆவியாவைச் சபித்ததோடு, 'யஸீதும் ஹுஸைனுக்கு உதவ முன்வராதோரும் கடும் வேதனைக்குள்ளாவார்கள்' என்றார்கள்.[20]

*(2) நபிகளாரின் மனைவியான உம்மு ஸலாமாவின் சகோதர ருக்கு வலீத் என்ற பெயருடைய ஒரு மகன் இருந்தார். நபிகளார் இந்த பெயரை நிராகரித்து ''உங்களது பிர்அவ்ன்களின் பெயர் ஒன்றை அவருக்கு சூட்டியிருக்கிறீர்கள். நிச்சயமாக 'அல் வலீத்' என்ற பெயர் கொண்ட ஒரு மனிதர் இருப்பார். அவர் ஃபிர்அவுன் தன் சமூகத்தினர்க்கு இழைத்த விஷமங்களையும் விஞ்சியதாக இந்த உம்மத்தினர் மத்தியில் விஷமம் புரிபவராய் இருப்பார்'' என்றார்கள்.*[(21)]

*(3) நபிகளார் கூறினர்: ''எனது உம்மத்தில் சீக்கிரம் வஹ்ப் என்ற பெயருடைய ஒரு மனிதர் தோன்றுவார். அல்லாஹ் அவ ருக்கு ஞானத்தை அருள்வான். அத்துடன் கைலான் என்ற பெயரில் இன்னொரு மனிதர் இருப்பார். அவர் எனது உம்மத்துக்கு ஷைத்தா னைவிட மிகவும் தீங்கு விளைவிப்பவராய் இருப்பார்.''*[(22)]

இப்னு கையிம் இந்த ஹதீஸ்கள் புனையப்பட்டவையென திட்டவட்டமாய் நிராகரித்து விடுகிறார்.[(23)] இவற்றின் வாசகங் களது ஏற்கமுடியாத தன்மையை அடிப்டையாகக் கொண்டே அவர் இவற்றை நிராகரிக்கின்றார். எனினும் இவற்றின் அறிவிப் பாளர்களது தொடர் வரிசைகளில் காணப்படும் குறைபாடுகள் காரணமாகவும் அவர் இவை நம்பகமானவையல்லவென வகைப் படுத்துகிறார்.[(24)]

### 7. சில நபித்தோழர்களை அதீதமாகப் பாராட்டல்

சில நபித்தோழர்களை அதீதமான முறையில் பாராட்டும் ஹதீஸ்கள் தொகுப்புகளில் மலிந்துள்ளன. உதாரணமாக,

*1. நபிகளார் கூறினர்: ''அபூ பக்கர் எனது உம்மாவில் மிகச் சிறந்தவர்; எனது உம்மாவில் பெரும் பக்திமான். உமர் எனது உம்மாவில் மிகவும் நேசத்துக்குரியவர்; மிக்க நீதியானவர். உதுமான் எனது உம்மாவில் அதிக அடக்கமுள்ளவர்; பெரும் பரோபகாரி. அலி எனது உம்மாவில் சிறந்த மதிநுட்பம் கொண்ட வர்; சாமர்த்தியம் மிக்கவர். அப்துல்லாஹ் இப்னு மசூத் எனது உம்மாவிலேயே பெரு நம்பிக்கைக்குரியவர்; மிகவும் நேர்மை*

*யானவர். அபூ தர்ர் எனது உம்மாவில் மிகவும் பக்தி வாய்ந்தவர்; மிகவும் உண்மையானவர். அபூ அல்-தர்தா எனது உம்மாவிலேயே அல்லாஹ்மீது அர்ப்பணிப்பு மிக்கவர். முஆவியா எனது உம்மாவில் மிகுந்த கருணையாளர்; இரக்கம் மிக்கவர்.''*[25]

*2. நபி (ஸல்) கூறினார்கள்: ''நிச்சயமாக அல்லாஹ் என்னை இப்றாஹிமைப்போன்று தன் நண்பனாக ஆக்கிக்கொண்டான். சுவனத்தில் என் இருப்பிடமும் இப்றாஹிமின் இருப்பிடமும் எதிரெதிரே இருக்கும். அல் - அப்பாஸ் அல்லாஹ்வின் இரு நண்பர்களுக் கிடையில் இருத்தப்படுவார்.''*[26]

இந்த ஹதீஸ்கள் மிகைநவிற்சியைப் பிரதிபலிப்பதால் நம்ப முடியாதவையாகும்.

### 8. குர்ஆன் ஸூறாக்களின் விநோதமான முக்கியத்துவம்

குர்ஆன் ஸூறாக்களின் முக்கியத்துவத்தைக் குறித்துக் காட்டும் பொருத்தமான ஹதீஸ்கள் உள்ளன. அதேவேளை குர்ஆன் ஸூறாக்களின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கூறும் பொருத்த மற்ற ஹதீஸ்களும் காணப்படுகின்றன. உதாரணமாக,

*(1) நபிகளார் கூறினர்: ''யாஸீன் ஸூறா ஓதப்படுவதை ஒருவர் செவிமடுத்தால் அவரது கணக்கில் அல்லாஹ்வின் பாதையில் 10 தினார்கள் செலவளித்த நன்மை எழுதப்படும். அதனை அவர் ஓதினால் இருபது ஹஜ்ஜுகள் செய்த நன்மைக்குச் சமமான நற்கூலி அவருக்குக் கிடைக்கும். அவர் அதனை எழுதி கரைத்துக் குடித்தால் அவரது இதயத்தினுள் ஆயிரம் திருப்திகள் உண்டாகும்; ஆயிரம் ஒளிகள் புகும்; ஆயிரம் அருள்கள் உண்டாகும்; ஆயிரம் கருணைகள் உண்டாகும்; ஆயிரம் உணவு வகைகள் கிடைக்கும்; அவரது இதயத்திலிருந்து சகலவிதமான தீய எண்ணங்களும் வியாதிகளும் அகன்றுவிடும்.''*[27]

*(2) நபி (ஸல்) கூறினர்: ''இரவில் ஒருவர் ஸூறா துகானை ஓதினால் எழுபதினாயிரம் மலக்குகள் அவருக்காக மறுநாள் காலை வரை பாவமன்னிப்பு கேட்பார்கள்.''*[28]

*(3) நபி (ஸல்) கூறினார்கள்: ஒருவர் வுழு செய்துவிட்டு ஸூறா ஃபாத்திஹாவின் பின்னர் ஸூறா இஃலாஸை 100 முறை ஓதினால் அல்லாஹ் அதன் ஒவ்வொரு எழுத்துக்கும் பத்து நன்மைகளை எழுதுவான். பத்து தீமைகளை அழித்துவிடுவான். அவரை பத்து படித்தரங்களுக்கு உயர்த்துவான். சுவனத்தில் அவருக்கு நூறு மாளிகைகளை நிர்மாணிப்பான்; அவரது அன்றைய செயல்களை ஒரு நபியின் செயல்களுக்கு நிகராக்குவான்; அவர் அந்த ஸூறாவை ஓதியதை முழுக் குர்ஆனையும் முப்பத்தி மூன்று தடவை ஓதியதற்குச் சமமாக்குவான். இந்த ஸூறா பல்தெய்வ வணக்கத்திலிருந்து விடுதலை பெற்றுக் கொடுக்கின்றது. அது அவரிடம் மலக்குகள் சமூகமளித்திருக்கச் செய்கின்றது. ஷைத்தானை வெருண்டோடச் செய்கின்றது; அல்லாஹ் அவரைப் பார்க்கும்வரை ஓதியவரின் பெயர் அல்லாஹ்வின் இருக்கையைச் சுற்றி எதிரொலி யெழுப்புகின்றது. இன்னும், அல்லாஹ்வின் பார்வை அவர்மீது விழுந்துவிட்டால் அதன் பின்னர் அவர் தண்டிக்கப்படவே மாட்டார்.*[29]

இப்னு ஜவ்ஸி இந்த ஹதீஸ்கள் மிதமிஞ்சிய மிகைப்படுத்தலாய் இருப்பதால் இவற்றின் அறிவிப்பாளர் தொடர் வரிசைகளின் குறைபாடுகளை அடிப்படையாகக் கொண்டு இவை நம்பகமற்றதாய்த் தென்படுவதாகக் கூறுகிறார். என்றபோதிலும் அறிவிப்பாளர் தொடரைப் பரிசீலிப்பது ஒருபுறமிருக்க, மிகை நவிற்சிக்காகவே இவை கண்டிக்கப்படல் வேண்டும்.

### 9. குர்ஆனை ஓதுபவரின் அதிசய நிலை

குர்ஆனை ஓதுவதையும் மனனஞ் செய்வதையும் முஸ்லிம் உலகம் முக்கியமானதாய்க் கருதுகின்றது. பாராட்டுக்குரிய இச் செயல்கள ஆதாரபூர்வமான ஹதீஸ்களை அடிப்படையாகக் கொண்டவை. எனினும், இவற்றுடன் குர்ஆனை ஓதுவோரையும் மனனஞ் செய்வோரையும் பற்றித் தப்பான எண்ணங்களை உருவாக்கும் மிகைப்படுத்தப்பட்ட அறிவிப்புகளும் காணப்படுகின்றன. அவற்றின் நம்பகமற்ற தன்மை அவற்றின் ஆதாரபூர்வம்

*குறித்த சந்தேகத்தை உண்டுபண்ணுகிறது. அத்தகைய ஹதீஸ்கள் இரண்டு கீழே தரப்படுகின்றன:*

*(1) நபிகளார் கூறினர்: ''ஒருவர் குர்ஆனில் மூன்றிலொரு பகுதியை ஓதினால் அவருக்கு நபித்துவத்தில் மூன்றிலொரு பங்கு வழங்கப்படுகின்றது. அவர் குர்ஆனில் மூன்றில் இரண்டு பகுதியை ஓதினால் அவருக்கு நபித்துவத்தில் மூன்றில் இரண்டு பங்கு வழங்கப்படுகின்றது. அவர் முழுக் குர்ஆனையும் ஓதினால் அவர் நபித்துவத்தின் பரிபூரண நிலையில் இருப்பார். இறுதித் தீர்ப்பு நாளன்று அவர் குர்ஆனை ஓதுமாறு பணிக்கப்படுவார். அவர் ஓதும் ஒவ்வொரு வாசகத்துக்கும் அவரது படித்தரம் உயர்ந்துகொண்டே போகும். முழு குர்ஆனையும் ஓதி முடித்ததும் அவருக்கு 1. சிரஞ்சீவித்துவம் 2. சதாவும் நீடிக்கும் ஆசீர்வாதம் ஆகிய இரண்டும் அருளப்படும்.''(30)*

*(2) நபி (ஸல்) கூறினார்கள்: ''அல்லாஹ்வினால் குர்ஆன் கற்பிக்கப்பட்ட ஒருவர் வறுமையைப் பற்றி முறையீடு செய்தால் அவரது இரு கண்களுக்கிடையே வறுமை என்று எழுதப்பட்டு இறுதித் தீர்ப்பு நாள்வரை அது அழியாமல் இருக்கும்.''(31)*

*சந்தேகமின்றி இந்த ஹதீஸ்கள் புனையப்பட்டவை. இவற்றின் அறிவிப்பாளர் தொடர்களும் குறைபாடுடையவை.*

### *10. சில நகரங்களுக்கும் ஊர்களுக்கும் தேவையற்ற புகழாரம்*

*சில நகரங்களுக்கும் ஊர்களுக்கும் புகழாரம் சூட்டும் ஹதீஸ் கள் மக்கள் மனங்களிலும் இலக்கியங்களிலும் இடம்பிடித்துக் கொண்டுள்ளன. உதாரணமாக,*

*(1) நபி (ஸல்) கூறினார்கள்: ''அஸ்கலான் என்ற மணப் பெண்ணிலிருந்து இறுதித் தீர்ப்பு நாளன்று அல்லாஹ் எழுபதி னாயிரம் உயிர்த் தியாகிகளை யெழுப்புவான்.''(32)*

*(2) நபி (ஸல்) கூறினார்கள்: ''சொர்க்கத்தின் நான்கு வாயிற் கதவுகள் உலகை நோக்கித் திறந்துள்ளன. அவை அலெக்ஸாந் திரியா, அஸ்கலான், குஸ்வைன், ஜித்தா. உலகிலுள்ள மஸ்ஜிது*

களுக்கெல்லாம் மக்காவிலுள்ள அல்லாஹ்வின் இல்லம் சிரேஷ்ட மாய் இருப்பதுபோல, உலகின் நகர்களுக்கெல்லாம் ஜித்தா சிரேஷ்டமானது.''[33]

இவையும் இவைபோன்ற ஏனைய ஹதீஸ்களும் இவற்றின் அறிவிப்பாளர் தொடர்களின் குறைபாடு காரணமாக நம்ப முடியாதவையென இப்னு ஜவ்ஸி அறிவிக்கின்றார். என்ற போதிலும், மீண்டும் இவற்றின் வாசகங்களும் கூற்றுகளுமே இவையாவும் நபியின் பெயரால் இட்டுக்கட்டப்பட்ட பொய்கள் என்பதை நிரூபிக்கப் போதுமானவை.

### 11. கிழமை நாட்களை வகைப்படுத்தல்

வாரத்தின் சில நாட்களைப் புகழ்ந்தும் சில நாட்களை இகழ்ந் தும் கூறுவதான ஹதீஸ்களும் உள்ளன. சந்தேகமின்றி இவை யாவும் புனையப்பட்டவையே. உதாரணமாக,

சனி வஞ்சனைக்குரிய தினம்; அத்தினத்தில்தான் குறைஷிகள் வஞ்சிக்க விரும்பினர். ஞாயிறு நிர்மாணப் பணிகளுக்கும் மர நடுகைக்கும் உரிய நாள்; சொர்க்கம் நிர்மாணிக்கப்பட்டு மரஞ் செடிகள் நடப்பட்டது இத்தினத்தில்தான். திங்கள் பிரயாணங் களுக்கும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் உரிய தினம்; இது ஆதத்தின் மகன் இன்னொரு மகனைக் கொலைசெய்த தினம்; புதன் தீய சகுனங்கள் கொண்ட தினம்; இத்தினத்தில் தவறுகள் நேரும்; இளைஞர் முதியோர் ஆவர்; இத்தினத்தில் தான் ஆது சமூகத்தை அழிப்பதற்காக அல்லாஹ் சூறாவளியை அனுப்பி வைத்தான்; ஃபிர்அவுன் பிறந்ததும் 'நானே இறைவன்' எனப் பிரகடனஞ் செய்ததும் அழிக்கப்பட்டதும் இத்தினத்தில்தான். வியாழன் ஆட்சியாளரைப் போய் காண்பதற்கான நாள். இப்றாஹீம் (அலை) எகிப்து மன்னனின் அரசவைக்குச் சென்று தன் மனை வியை மீளப்பெற்றதும் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டதும் இத் தினத்தில்தான். வெள்ளி, நிச்சயதார்த்தத்துக்கும் திருமணத்துக்கும் உரிய நாள். நபிமார்கள் நிச்சய தார்த்தம் செய்துகொண்டதும் ஆசீர்வாதம் வேண்டி மணஞ்செய்ததும் இத்தினத்தில்தான்.[34]

# 08

# முன்தீர்மானிக்கப்பட்ட விதி பற்றிய அல்-புஹாரியின் அத்தியாயம்

இஸ்லாமிய வரலாற்றில் மிகவும் மதிப்பிற்குரியவராகப் போற்றப்படும் அதிபிரபலமான ஹதீஸ் அறிஞர் இமாம் அல்-புஹாரி ஆவார். ஸஹீஹ் புஹாரியெனப் பொதுவாக அறியப் படும் அவரது அல்-ஜாமி அல்-ஸஹீஹ் என்ற நூல், குர்ஆனுக்கு அடுத்ததாக மிகவும் ஆதாரபூர்வமான நூலாய் கருதப்படுவ தாகும்.[(1)] ஐயங்கள் அனைத்துக்கும் அப்பாற்பட்டதெனக் கருதப் பட்டுப் போற்றப்படுவன அதன் வாசகங்கள். முஸ்லிம் மனங் களில் பெரும் தாக்கத்தை யேற்படுத்தியுள்ள நூல் அல்-ஜாமி அல்-ஸஹீஹ். அது முஸ்லிம் உலகம் முழுவதும் இஸ்லாமிய சட்டத்தின் ஆதார நூலாகக் கொண்டாடப்படுகின்றது.

அல்-ஜாமி அல்-ஸஹீஹின் ஓர் அத்தியாயம் தான் 'கித்தாப் அல்-கத்ர்' (முன்தீர்மானிக்கப்பட்ட விதி). மனிதனது விதி முன் தீர்மானிக்கப்பட்டது என்ற கருத்து சம்பந்தமாய் இருபத்தேழு ஹதீஸ்கள் இதில் அடங்கியுள்ளன. ஒருவர் இவ்வுலகத்துக்கு வருவதற்கு முன்னமேயே, அவரது இறுதி முடிவு உட்பட, மனித வாழ்வென்பது முன்தீர்மானிக்கப்பட்டு விட்டது என்பதுதான்

விசுவாசிகளுக்கு அது கூறும் செய்தி. மனிதனின் பொறுப்பு குறித்த ஒரு முஸ்லிமின் புரிதலுக்கு இந்த ஹதீஸ்கள் முக்கிய மானவையாக அமைந்துள்ளன. இதன் அடிப்படையில் இந்த அத்தியாயமும் இதில் அடங்கியுள்ள ஹதீஸ்களும் போதியளவு விசாரணைக்கு உட்படுத்தப்படல் அவசியம்.

முன்தீர்மானிக்கப்பட்ட விதி சம்பந்தமான விவாதம் இஸ் லாத்தின் முதல் நூற்றாண்டிலேயே ஆரம்பமாகிவிட்டது. இக் கருத்துக்கு ஆதரவாக முன்வைக்கப்பட்ட பிரதானமான வாதங்கள், சில திருமறை வசனங்களையும், குறிப்பாக ‘கித்தாப் அல்-கத்ர்’ அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள சில ஹதீஸ்களையும் ஆதார மாகக் கொண்டவை. முந்திய அத்தியாயங்களில் வலியுறுத்தப் பட்டது போன்றும், முஹத்திதூன்களின் பொதுவான அணுகு முறையின்படியும், ஹதீஸ்களின் ஆதாரபூர்வம் அறிவிப்பாளர் தொடரின் ஆதாரபூர்வத்திலேயே தங்கியுள்ளது. இமாம் புஹாரி தாம் பதிவுசெய்த ஹதீஸ்களின் ஸனதை (அறிவிப்பாளர் தொடரை) குறையேதுமின்றி ஆழ்ந்த பரிசோதனைக்கு உட்படுத்தி யுள்ளமை தெளிவு. இந்த அளவுகோளின்படி ‘கித்தாப் அல்-கத்ர்’ அத்தியாயத்தில் குறிப்பிடப்படும் ஹதீஸ்கள் யாவும் உறுதியான வையாகவே அமைந்துள்ளன. ஆனால் உள்ளடக்கத்தின் (மத்ன்) கண்ணோட்டத்தில் கேள்விக்குட்படுத்தப்படக் கூடிய சில விவ காரங்கள் இருக்கக்கூடும். இந்த ஹதீஸ்களை ஏதோ ஒரு வகையில் ஹதீஸ் துறை வல்லுனர்கள் விளக்க முற்பட்ட பிரயத்தனங்கள் ஸஹீஹ் புஹாரியின் விளக்கவுரைகளில் விரவிக் கிடக்கின்றன. கித்தாப் ‘அல்-கத்ர்’ இல் அடங்கியுள்ள இருபத்தேழு ஹதீஸ்களில் பெரும்பாலானவைகளைப் பற்றி தரப்பட்டுள்ள விளக்கங்களை மீளாய்வு செய்து காணும் ஒரு முனைவே நாம் மேற்கொள்வது. இதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் வாழ்வில் ஹதீஸ்கள் பெற் றுள்ள முக்கியத்துவத்தை உறுதிசெய்வதோடு, வாசகங்களில் ஏற் பட்டிருக்கக் கூடிய தவறுகளைக் களைந்துகொள்ளவும் இயலும்.

## ஹதீஸ் விளக்கவுரையில் பொதுவான அணுகுமுறை

பெரும்பாலும் நன்கறியப்பட்ட ஹதீஸ் நூல்கள் யாவுக்கும் ஹதீஸ் அறிஞர்களின் விளக்கவுரைகள் காணப்படுகின்றன. இமாம் புஹாரியின் நூலுக்கு பல்வேறு வட்டங்களைச் சேர்ந்த ஹதீஸ் அறிஞர்களின் பன்முகப்பட்ட விளக்கங்கள் உள்ளன. ஹதீஸ் விளக்கவுரைகளைக் கற்பதன் மூலம், ஹதீஸ்களை விளக்குவதற்கு நன்கு வரையறுக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட ஏதேனும் ஒரு முறைமை காணப்படாமயை அவதானிக்கலாம். என்றாலும் கூட, ஐந்து அம்சங்களை உள்ளடக்கிய முறையிய லொன்று பொதுவாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. முதலாவது, ஓர் அறிவிப்பு நம்பகமானதா இல்லையாவென நிரூபிப்பதற்கு விளக்கவுரையாளர், அறிவிப்பாளர் தொடரை (ஸனத்) பரிசீலனை செய்தல். இரண்டாவது, ஹதீஸில் காணப்படும் செய்தியை விளக்கவுரையாளர் பிரபல ஹதீஸ் அறிஞர்களது கருத்துக்களின் கண்ணோட்டத்தில் மேலும் விரித்துரைத்தல். மூன்றாவது, கவனத் திற் கொள்ளப்பட்ட ஹதீஸ் பற்றிய முழுமையான சித்திரத்தைப் பெறுவதற்காக அறிவிப்புக்களை மற்றைய ஆதாரங்களில் அடை யாளம் காண்பதற்கு விளக்கவுரையாளர் கணிசமான காலநேரத் தைச் செலவிடுதல். நான்காவது, விளக்கவுரையாளர் சில சமயங் களில் குறிப்பிட்ட ஹதீஸ்களின் பின்னணியை ஆராய்தல். ஐந்தா வது, புலமையாளர் சில சமயங்களில் மற்றவர்களின் கருத்தை ஆதரித்தோ, மறுத்தோ தன் சொந்த கருத்தை வெளியிடல்.

குறிப்பிடப்பட்ட இம்முறையியல் காரணமாக ஹதீஸ் விளக்க வுரையாளர்கள் ஹதீஸ் பரிசோதனைக்கான தமது ஆய்வு நோக்கினை சரிவர நிர்வகிக்காது விடுகின்றமை தெரிகின்றது. அல்-திபி, அல்-கிர்மானி, இப்னு ஹஜர், அல்-அய்னி (ம. ஹி. 855), அல்-கஸ்த்தலானி (ம. ஹி. 923), அல்-ஸிந்தி (ம. ஹி. 1138) ஹம்சா முஹம்மத் காசிம் முதலானோர் இமாம் புஹாரியுடைய நூலின் விளக்கவுரையாளர்களில் மிகப் பிரசித்தம் பெற்றவர்கள். இவர்கள் அனைவரும் அவரவரின் விளக்கவுரைகளுக்கு முன்னம் நாம் கண்ட ஒரே முறையியலையே பயன்படுத்தியுள்ளனர்.

## 'அல்-கதர்' என்பதன் அர்த்தம் குறித்து சிந்தித்தல்

'அல்-கதர்' என்ற சொல் குறிக்கும் அர்த்தம் 'ஏற்புடைய தீர்ப்பு' (அல்-கழா அல்-முவஃப்பக்) என அல்-ஃபராஹிதி (ம. ஹி. 175) கூறுவார்.[2] 'அல்-கதர்' என்ற சொல்லுக்கு நேரான அர்த்தம் சக்தி/ஆற்றல் (குத்ராஹ்) என்கிறார் அல்-ராகிப் அல்-அஸ்ஃபஹானி. அதனை மனிதனுடன் தொடர்புபடுத்தும்போது ஏதோ ஒன்றைச் செய்யக்கூடிய அவனது ஆற்றலையும், அதனை அல்லாஹ்வுடன் தொடர்புபடுத்தும்போது யாருடனும் பகிர்ந்து கொள்ளாத அவனது எல்லையற்ற வல்லமையும், சக்தியையும் குறிப்பதாக அவர் மேலும் விரித்து ரைக்கிறார்.[3] அல்-ஃபைரூஸாபாதி (ம. ஹி. 817) இதன் அசல் அர்த்தம், இறுதித் தீர்ப்பு (அல்-கழா), ஆணை (அல்-ஹுக்கும்), ஒன்றின் அசல் வடிவம் (மஃப்லக் அல்-ஷையீ), ஆற்றல் (அல்-தாக்கஹ்) முதலியன என்கிறார். 'அல்-கதர் அல்லாஹ் அல்-றிஸ்க்' என்ற கூற்றின் அர்த்தம் 'அல்லாஹ் ஜீவாம்சத்தைத் தீர்மானிக்கின்றான்' என அவர் விளக்குகிறார்.[4] அல்லாஹ் ஜீவாம் சத்தைப் பகிர்ந்தளிப்பது அவனது எல்லையற்ற வல்லமை காரண மாகவாகும்.

'அல்-கதர்' என்பதை 'அல்லாஹ்வின் கட்டளை' என வரை யறுக்கின்றார் அல்-கிர்மானி.[5] 'அல்-கழா' என்பது சாசுவதமாக நிலவும் இறைதீர்ப்பின் பொதுவான சுருக்கமான குறிப்பீடு என் றும் 'அல்-கதர்' அத்தீர்ப்பின் அணுப்பிரமாணமான விவரங்கள் என்றும் கூறும் இப்னு ஹஜர், தனக்குச் சாதகமாக பெயர் குறிப்பிடப்படாத சில அறிஞர்களை மேற்கோள் காட்டுவார்.[6] 'அல்-கதர்' தான் அடிப்படை, அதன் துல்லியமான விவரம்தான் 'அல்-கழா' என இதனை மாற்றிக் கூறுகிறார் அல்-கஸ்த்தலானி.[7] 'அல்-கலா' 'அல் கதர்' பற்றிய முஸ்லிம் அறிஞர்களின் புரிதல் ஊகங்களின் அடிப்படையில்தான் தோற்றியுள்ளது எனத் தெரிகின் றது. 'அல்-கதர்' என்பது நிகழ்வுகளுக்கு முன்பாகவே அதனை அறிந்திருக்கும் அல்லாஹ்வின் ஆற்றல் எனக் கருதுகிறார் ஹம்சா முஹம்மத் காசிம்.[8] ''படைப்பு கள் படைக்கப்படுவதற்கு முன்பாக அல்லாஹ் அவற்றின் அளவையும் காலத்தையும் அறிந்திருந்தான்;

அவன் தனது அறிவிலிருந்ததை உண்டாகுமாறு செய்தான்'' என 'அல்-கதர்' குறிப்பதாக அவர் அநாமதேய அறிஞர்களது கூற்றினைக் காட்டி தன் கருத்துக்கு வலுசேர்க்க முற்படுகிறார்.[9] இப்னு தைமிய்யாஹ் (ம. ஹி. 727) 'அல்-கதர்' இரண்டு அர்த்தங்கள் கொண்டதென அடையாளம் காண்கிறார். (அ) மனிதனது கீழ்ப்படிதல், கலகம், ஜீவாம்சம், ஆயுள், அவனது நிலைமை நற்கூலி பெறக்கூடியதா அல்லது சபிக்கப்பட்டதா ஆகிய சகலதும் அடங்கிய படைப்புகளின் எதிர்காலச் செயல்கள் பற்றிய அல்லாஹ்வின் நித்திய அறிவு. (ஆ) மனிதனின் செயல்கள் உட்பட சகலதும் பற்றிய அல்லாஹ்வின் முழுமையான சித்தம்.[10]

மனிதனது சுதந்திரச் செயற்பாடு குறித்த மத விவாதங்களில் கதரிய்யாஹ், ஜபரிய்யாஹ் ஆகிய இரு குழுக்களின் அறிஞர்கள் வெவ்வேறு நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். அந்த இரு வேறுபட்ட அணுகுமுறையைக் கருத்தில் கொண்டே இப்னு தைமிய்யாஹ் இரு பரிமாணம் என்ற கருத்தை விளக்குவதாகத் தெரிகிறது. அவரது கருத்து குறிப்பிட்டவொரு இறையியல் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தினும், இரண்டு தீவிர நிலைப்பாடுகளுக்கு மத்தியில் அவர் நடுநிலையைக் கடைப்பிடிக்கிறார். என்றாலும் கூட, நடுநிலையானது யாவுமே சரி என உணர்த்துவதாகாது. இப்னு தைமிய்யாவின் விளக்கத்தின் முதல் பகுதி ஜபரிய்யா நிலைப்பாட்டையும் இரண்டாம் பகுதி கதரிய்யா நிலைப்பாட்டையும் ஆதரித்து நிற்கின்றன. ஆக அவருடைய கருத்து நடுநிலையானதெனக் கொள்வதற்கில்லை.

'அல்-கத்ர்' எனும் பதம் முன்தீர்மானிக்கப்பட்ட விதி என்பதைத்தான் உணர்த்துகின்றதா என்பதை அப்பதம் குர்ஆனில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அவதானிப்பதன் மூலம் கண்டுகொள்ளலாம். 'கதர்' என்ற சொல்லை குர்ஆன் பல்வேறு (பெயர், வினை, பெயரிடை, ஒருமை, பன்மை இத்தியாதி) வடிவங்களில் நூற்றி முப்பத்தியிரண்டு முறை உபயோகித்துள்ளது. சம்பந்தப்பட்ட அனைத்து இறைவசனங்களதும் நேர்மையான வாசிப்பு, 'கதர்' என்ற இச்சொல் பதினான்கு விதமான அர்த்தங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காட்டுகின்றது:

1. சக்தி *(2:264; 16: 75-76; 21:87; 57:29; 90:5; 97:1-3)*
2. மதிப்பிடல் *(6:91; 22:74; 39:67; 74:18-20)*
3. சமநிலை *(34:11)*
4. மனோசக்தி *(13:17)*
5. அதிகாரம் *(77:23)*
6. கட்டுப்பாடு *( 13:26; 17:30; 29:62; 30:37; 34:36; 34:39; 39:52; 42:12; 65:7; 89:16)*
7. உரிய விகித அளவு *(25:2; 65:3; 80:19)*
8. திட்டமிடப்பட்ட காலம் *(20:40; 77:22)*
9. நியமம் *(54:12)*
10. சூழ்ந்திருத்தல் *(48:21)*
11. தாங்கிக்கொள்ள முடியாமை *(5:34)*
12. அளவு *(15:21; 23:18; 42:27; 43:11; 54:49; 73:20)*
13. இறுதித் தீர்ப்பு *(15:60; 27:57)*
14. திடமான நோக்கம் *(54:12)*

இந்த அர்த்தங்களின் சில மனித அம்சம், இறையம்சம் இரண்டுக்கும் பொருந்துவன (சக்தி, அதிகாரம்). அதேவேளை சில பிரத்தியேகமாய் மனிதனோடு மட்டுமே தொடர்புடையன (மதிப்பிடல், சமநிலை, மனோசக்தி, அணுகத்தக்கது). ஏனையவை இறைவனோடு மட்டுமே தொடர்புடையவை (திடமான நோக்கம், இறுதித் தீர்ப்பு, அளவு, உரிய விகிதம், திட்டமிடப்பட்ட காலம்).

மனித வாழ்வு பற்றி சகலவும் அடங்கிய முன்தீர்மானம் என்ற அர்த்தத்தில் அல்லாஹ்வின் திடமான நோக்கம்குறித்தோ இறுதித் தீர்ப்பு பற்றியோ குர்ஆன் குறிப்பிடவில்லை. தர்க்க ரீதியாகக் காணும்போது, முன்தீர்மானம் என்ற கருத்து குர்ஆனின் சட்டகத்துள் பொருந்துவதாக இல்லை. மனிதன், ஜின் வர்க்கம் ஆகிய இரு படைப்பினங்களை மட்டுமே குர்ஆன் அவற்றின் செயல்களுக்கு பொறுப்பு சாட்டுகிறது *(6:112; 6:128; 6:130; 7:179;*

*51:56; 55: 39).* இவ்வாறு, மனிதனின் அறம்சார்ந்த நினைவுகளும் செயல்களும் முன்தீர்மானிக்கப்பட்டவையெனக் கருதப்பட முடி யாது. மிருகங்கள் மற்றும் உயிர் ராசிகள் உயிரற்ற சடப்பொருட் கள் விண்ணிலுள்ளவை, மண்ணினதும் விண்ணினதும் புலக்காட்சி கள் இன்னபிற போன்று மனிதனின் பௌதிக அம்சமும் அறிவு ஜீவ அம்சமும் முன்தீர்மானிக்கப்பட்டவையாய் இருக்கலாம்.

மனிதவாழ்வு அணுப்பிரமாணமாய் முன்தீர்மானிக்கப்பட்டு விட்ட தென்பதை நிரூபிப்பதற்கு அறிஞர்கள், ''உங்களையும் நீங்கள் செய்கின்றவற்றையும் அல்லாஹ்வே படைத்தான்'' *(37:96)* என்ற இறைவசனத்தை முன்வைக்கின்றனர். ஸஹீஹ் முஸ்லிமில் பதிவாகியுள்ள ஒரு ஹதீஸை ஆதாரமாக வைத்து இப்னு ஹஜர் (ம. ஹி. *857)* இந்த இறைவசனம் மனிதனின் செயற் சுதந்திரம் சம்பந்தமான குறைஷிகளின் வாதத்துக்கு எதிர்வினையாகவே அருளப்பட்டதெனக் கூறுகின்றார். மனிதவாழ்வின் அனைத் துமே சகல விவரங்களுடனும் முன்தீர்மானிக்கப்பட்டவை என்ற கருத்தை அவர் இத்திருவசனத்திலிருந்து பெறுகிறார்.[(11)] இத் திருவசனம் *(37:96)* மனிதச் செயல்கள் சிருஷ்டிக்கப்பட்டவை என்பது பற்றிப் பேசவில்லை. உண்மையில் இது கல்லாலும் மரத்தாலும் செய்யப்பட்ட விக்கிரகங்களை வணங்கிய தன் கூட்டத்தாருக்கு நபி இப்றாஹிம் கூறியவற்றின் ஒரு பகுதியாகும். விக்கிரகங்களை வணங்குவதன் மூலம் அவர்கள் செய்யும் தவறை அவர் அவர்களுக்கு உணர்த்த விரும்பினார். அவர்களை மட்டு மன்றி விக்கிரகங்களை உருவாக்குவதற்காக அவர்கள் உபயோ கித்த பொருட்ளையும் அல்லாஹ்வே படைத்தான். ஆதலால் படைப்பினங்கள் படைக்கப்பட்டவைகளை வணங்குவது அறி வீனமாகும் என்பதே அவரது வாதம். ஒரு திருவசனத்தை அது சம்பந்தப்பட்ட சூழலிலிருந்து துண்டித்து அதனைத் தனித்துப் படிப்பது தவறான புரிதலுக்கும் தவறான அர்த்தத்துக்குமே இட்டுச் செல்லும்.

## கித்தாப் அல்கதரில் காணப்படும் ஹதீஸ்களின் கணிப்பீடும் விளக்கமும்

*இனி தொடர்வது, முன்தீர்மானம் பற்றிய அல்-புஹாரியின் அத்தியாயத்தை, அதில் அடங்கி யுள்ள ஹதீஸ்களை அவதானத்தில் கொண்டு, கணித்தலும் மறுவிளக்கம் செய்தலுமாகும். 'கித்தாப் அல்-கதர்' அத்தியாயத்தில் ஹதீஸ்களுக்கு இடப்பட்டுள்ள அதே இலக்கங்களே இங்கும் தரப்பட் டுள்ளனவேயன்றி அவை இங்கு இடம்பெறும் ஒழுங்கில் அல்ல என்பதைக் கவனத்தில் கொள்க.*

*ஹதீஸ் இலக்கம் 1. மனிதனின் விதி முன்கூட்டியே தாயின் கருவறையில் முடிவு செய்யப்படுகின்றது*

*நபி (ஸல்) கூறியதாக அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) எடுத்துரைக்கின்றார்:*

*''(நீங்கள் படைக்கப்பட்டதையிட்டு) நிச்சயமாக, உங்களில் ஒவ்வொருவரும் தாயின் கருவறையில் நாற்பது நாட்களுக்கு ஒன்று சேர்க்கப்படுகின்றீர்கள். அதன்பின் நாற்பது நாட்கள் அலக்கஹ் (அட்டை) வடிவில் இருப்பீர்கள். அதன்பின் நாற்பது நாட்கள் முத்கஹ் (சப்பப்பட்ட கட்டி) வடிவில் நாற்பது நாட்கள் இருப்பீர்கள். பின்னர் நான்கு வார்த்தைகளை எழுதுவதற்காக அல்லாஹ் ஒரு மலக்கை அனுப்பிவைப்பான். அவரது செயல்கள், அவர் மரணிக்கும் நேரம், அவரது ஜீவனோபாயத்துக்கான வழி, (மதத்தில்) அவர் சபிக்கப்பட்டவரா அல்லது ஆசீர்வதிக்கப்பட்டவரா என அந்த மலக்கு எழுதுவார். பின்னர் அவரது உடலினுள் உயிர் ஊதப்படும். ஆக ஒரு மனிதர், (நரக)நெருப்புக்குரியவர்களின் குணங்களுடன் கருமமாற்றத் தொடங்குவார். எந்தளவுக்கெனில், அவருக்கும் நரகுக்கும் இடையே முழங்கையளவு தூரம் இருக்கும்வரை. அப்பொழுது அவருக்கு மலக்கினால் எழுதப்பட்டது முந்திவிட, அவர் சுவனவாசிகளின் குணங்களுடன் அமல் புரியத் தொடங்கி சொர்க்கத்தில் நுழைவார். அதேபோன்று ஒருவர் சுவன வாசியைப் போன்று அமல் புரிந்துகொண்டிருந்து அவருக்கும்*

*சொர்க்கத்துக்கும் இடையே முழங்கையளவு தூரமிருக்கையில் அவருக்கு மலக்கினால் எழுதப்பட்டது முந்திவிட, அவர் (நரக) நெருப்பினுள் நுழைவார்.''*[12]

**விமர்சனப் பகுப்பாய்வும் விளக்கமும்**

*இந்த ஹதீஸ் எடுத்துரைக்கப்பட்ட அறிவிப்பாளர் தொடர் வருமாறு:*

*ஹிஷாம் இப்னு அப்துல் மாலிக் (ம. ஹி. 227) ஷுஃபாஹ் இப்னு ஹஜ்ஜாஜ் (ம. ஹி. 160) இடமிருந்து, சுலைமான் இப்னு மிஹ்ரான் அல்- அஃமாஷ் (ம.ஹி. 147) இடமிருந்து, ஸைத் இப்னு வஹ்ப் (ம.ஹி. 96) இடமிருந்து, அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊதிடமிருந்து, நபிகளாரிடமிருந்து. நபித்தோழரான அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊ திடமிருந்து அறிவிக்கும் (ஹிஷாம், ஷுஃபாஹ், சுலைமான், ஸைத் ஆகிய) நால்வரும் முறையே 'திக்காஹ் தப்த்' (மிகவும் நம்பக மானவர்), 'திக்காஹ் ஹாஃபிஸ் முத்கின்' (பரிபூரணமாய் ஆதார பூர்வமானவர்), 'திக்காஹ் ஹாஃபிஸ்' (மிகவும் ஆதாரபூர்வமான வர்), 'திக்காஹ் ஜலீல்' (மரியாதைக்குரிய ஆதாரபூர்வமானவர்) என அறியப்படுகின்றனர்.*[13] *குறிப்பிட்ட இந்த அறிவிப்பாளர் தொடர், தொடர்ச்சி (இத்திஸால்), ஒன்றிணைவு (அல்-அத்ல்), நினைவாற்றல் (அல்-தப்த்) ஆகிய பிரதான மூன்று அளவுகோள் களுக்கு மிகவும் பொருந்துகின்றது. இது அறிவிப்பின் வாசகத்தை விட்டுவிடுகின்றது. ஆனால் இது 'அத்ம் அல்-ஷுதூத்' (முரண் பாடின்மை), கயீர் அல்-இல்லாஹ் (குறைபாடின்மை) ஆகிய மற்றிரு அளவுகோள்களின் தகைமையைப் பூர்த்தி செய்கின்றதா? ஹதீஸை ஆதாரப்படுத்துவதற்காக மாபெரும் ஹதீஸ் நிபுணர்கள் வளர்த்தெடுத்த ஐந்து அளவுகோள்களில் முதல் மூன்றும் அறி விப்பாளர் தொடர் சம்பந்தமானவை. கடைசி இரண்டும் பிரதான மாக வாசகம் சார்ந்தவை என்பதைக் கவனத்திற் கொள்க. கடைசி இரண்டு அளவுகோள்களும் சில சந்தர்ப்பங்களில் அறிவிப்பாளர் தொடருக்கும் பொருந்தக்கூடிய தென்பதை மறுப்பதற்கில்லை.*

*தாயின் கருப்பையிலுள்ள சிசுவின் முதல் மூன்று கட்டங்களின் காலத்தை இந்த ஹதீஸ் குறிப்பிடுகின்றது. இதில் முதல் கட்டம், குர்ஆன் கூறும் 'நுத்ஃபஹ்' (23:13)* என்பது வெளிப்படை. இது நாற்பது நாட்களுக்கு நீடிக்கின்றது. இதனைத் தொடரும் 'அலக்கஹ்', 'முழ்கஹ்' ஆகிய கட்டங்கள் ஒவ்வொன்றும் அதே காலஅளவு நீடிக்கின்றன. எனவே கருவின் முதல் மூன்று கட்டங்களின் மொத்த காலம் நூற்றிருபது நாட்களாகும். அதாவது பதினேழு வாரங்கள்.

கருவின் ஆரம்ப வளர்ச்சி பற்றிய தகவல்கள் இப்போது நன்கு நிறுவப்பட்டுவிட்டன. அது இனியும் ஊகத்திற்குரிய விடயமாக இல்லை. மரபணுப் பொறியியலில் நவீன அறிவியல் கருவின் ஆரம்ப நிலை, வளர்ச்சியுற்ற நிலை பற்றிய சகல விவரங்களையும் வெகு காலத்துக்கு முன் வழங்கிவிட்டது. மரபணுப் பொறியியலின்படி, ஆரம்ப கட்டம் இரு வாரங்களுக்குப் பின் இரண்டாவது கட்டத்தையடைகின்றது. மேலே அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட முதல் மூன்று கட்டங்கள் கருவின் ஆரம்ப நிலையைக் குறிக்கின்றன. ஆரம்ப மூன்று நிலைகளைக் குறிப்பிடுவதற்கு விஞ்ஞானச் சொற்களைப் பயன்படுத்துவதாயின் அவை 'Zycote' (நுத்பஹ்), Blastocyst (அலக்கஹ்), Differentiation - வேறுபடுத்துதல் (முழ்கஹ்). மூன்று கட்டங்களின் சுருக்கமான விவரிப்பு இதனை மேலும் தெளிவுபடுத்தக் கூடும். விந்து கருப்பாதையில் செலுத்தப்படும்போது அது கருப்பையின் நுனி வழியாக ஃபெலோப்பியன் குழாயினுள் செல்கின்றது. ஒரு விந்துதாயின் உயிரணுவை ஊடுருவி அதனால் உண்டாகும் உயிரணு 'Zycote' எனப்படுகின்றது. 'Zycote' ஃபெலோப்பியன் குழாய் வழியாக அடுத்து சில நாட்கள் பயணித்து உயிரணுக்களின் பந்தை உருவாக்குதற்காகப் பிரிகின்றது. இது மேலும் தொடர்ந்து பிரிகின்றது. இதன் விளைவாக, வெளிக்கோதுடன் உயிரணுக்களின் உட்தொகுதியொன்று உருவாகின்றது. இக்கட்டம் Blastocyst (அலக்கஹ்) எனப்படுகின்றது. அநேகமாக ஐந்தாவது நாள் Blastocyst கருப்பை (ரஹிம்)யை அடைந்து ஆறாவது நாள் கருப்பைச் சுவரில் ஒட்டிக்கொள்கிறது. அது கருப்பையின்

*அடுக்கில் இறுக ஒட்டிக்கொண்டு தாயின் குருதியிலிருந்து சத்தினைப் பெறுகின்றது. தாயின் கருப்பையில் இப்போது உயிரணுக்கள் பெருகத் தொடங்கி தனியான கருமங்களை மேற்கொள்கின்றன. இச்செயல்முறையே வேறுபடுதல் (முழ்கஹ்) எனப்படும். மனிதஜீவியை உருவாக்கும் பல்வேறு உயிரணு வகைகளை இது உற்பத்தி செய்கின்றது.[14] விஞ்ஞானக் கண்டுபிடிப்பு, கருவின் ஆரம்ப கட்டத்தை சுமார் இரு வாரங்கள் எனக் கூறுகின்றது. ஆனால் இந்த ஹதீஸ் அறிவிப்பு அதனைப் பதினேழு வாரங்களாகக் கணிக்கின்றது. இது விசித்திரமாகும். இவ்விரு நிலைமைகளுக்கிடையே எவ்வாறு உடன்பாடு காண்பது?*

*கருவின் ஆரம்ப நிலைகளைக் குறிக்கும்* Zycote, Blastocyst, Differentiation *ஆகிய விஞ்ஞான சொற்களுக்கும் ஹதீஸில் பயன்படுத்தப்பட்டுள்ள (நுஃப்தஹ், அலக்கஹ், முழ்கஹ் ஆகிய) சொற்களுக்கும் ஒரே அர்த்தம் காண்பது சந்தேகத்தை எழுப்பலாம். ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள பதங்கள் கரு வளர்ச்சியடைந்த நிலையைக் குறிப்பதாக ஊகிக்கப்படலாம். இப்பிரச்சினைக்குத் தெளிவான தீர்வு குர்ஆனிலேயே காணப்படுகின்றது. சம்பந்தப்பட்ட இறைவசனம் கூறுகின்றதாவது:*

> ‘‘நிச்சயமாக மனிதனை களிமண்ணின் மூலச்சத்திலிருந்து படைத்தோம். பின்னர் அவனை ஓய்வுக்கென உறுதியாகத் தீர்மானிக்கப்பட்ட ஓரிடத்தில் (ஃபெலோப்பியன் குழாயினுள்) வைத்தோம். பின்னர் ‘நுத்ஃபஹ்’வை ‘அலக்கஹ்’வாக ஆக்கினோம். பின்னர் அந்த ‘அலக்கஹ்’விலிருந்து ‘முழ்கஹ்’வை உண்டாக்கினோம். பின்னர் ‘முழ்கஹ்’விலிருந்து எலும்புகளை (இலாம்) உண்டாக்கி அவ்வெலும்புகளை மாமிசத்தால் (லஹ்ம்) போர்த்தினோம். பின்னர் அதிலிருந்து ஒரு புதிய படைப்பை வளர்த்தெடுத்தோம் (23: 12-14).

*குர்ஆனின் இக்கூற்றிலிருந்து ஒருவர் ஆறு நிலைகளை அடையாளம் காணலாம் - மூன்று (நுத்ஃபஹ், அலக்கஹ், முழ்கஹ் ஆகிய) கருவின் ஆரம்ப நிலைகள். மற்ற மூன்று (இலாம், லஹ்ம், கல்க் ஆஹர் ஆகிய) கருவின் வளர்ச்சியடைந்த நிலைகள்.*

*மொழியின் சொற்பொருளில் 'நுத்ஃபஹ்' என்பது இந்திரியத் துளியைக் குறிக்கும். 'அலக்கஹ்' என்பது அட்டையைக் குறிக்கும். ஆரம்ப நிலையின் இரண்டாவது வளர்ச்சிக் கட்டம் குறிப்பிடத் தக்கதாகும். இக்கட்டத்தில் கரு கருப்பைச் சுவரில், ஓர் அட்டை பொருத்தமான வெளிப்பரப்பில் ஒட்டிக்கொள்வது போன்று, இறுக்கமாக ஒட்டிக்கொள்கிறது. இந்த ஆரம்ப வளர்ச்சிக் கட்டம் பிளஸ்ட்டோசிஸ்ட்* (Blastocyst) *எனப்படுகின்றது. இது முன்னர் குறிப்பிட்டது போன்று, கருப்பைச் சுவரில் உறுதியாக ஒட்டித் தொங்கிக் கொண்டிருக்கின்றது. 'முழ்கஹ்' என்பது சப்பப்பட்ட ஒரு பொருளைக் குறிக்கும். உயிரியல் விஞ்ஞானத்தின்படி, ஆரம்ப நிலையின் இக்கட்டமே மனித ஜீவனை உருவாக்கும் பல்வேறு வகையான உயிரணுக்களை உற்பத்தி செய்கின்றது. குர்ஆனில் (23:13-14) குறிப்பிடப்படும் கருவின் ஆரம்ப வளர்ச்சிநிலையைக் குறிக்கும் சொற்கள் இவ்விவகாரத்தில் விஞ்ஞானம் கூறும் திட்ப நுட்பமான உண்மையை ஆதரிக்கின்றன. நுத்ஃபஹ், அலக்கஹ், முழ்கஹ் ஆகியவை அதன் ஆரம்ப நிலையையன்றி வளர்ச்சி யடைந்த நிலையைக் குறிப்பதாகக் கூறுவது குர்ஆனின் கூற்றுக்கு மாறு கற்பிப்பதாகும்.*

IVF *என்ற எண்ணக்கருவின் முன்னோடியான பேராசிரியர் கீத் முவர்* (Prof. Keith Moor) *குர்ஆனியக் கூற்றின் அற்புதத் தன்மையை ஏற்றுக்கொள்கிறார். அவரது கருத்துப்படி 'அலக்கஹ்', 'முழ்கஹ்' என்ற கட்டங்கள், மனிதக் கண்களுக்குப் புலப்படாத, பூதக் கண்ணாடியால் மட்டுமே பார்க்கக் கூடிய நுண்மை வாய்ந்தன. இதுவே ஆரம்ப கட்டமாக அமைகின்றது. நபிகளாரோ வேறெ வரோ இக்குர்ஆனியக் கூற்றை உருவாக்கியிருக்க முடியாது என அவர் கருதுகிறார். நபிகளார் காலத்தில் உருப்பெருக்கிக் கருவியோ வேறு உபகரணங்களோ இருக்கவில்லை. குர்ஆன் அருளப்பட்டு ஓராயிரம் ஆண்டு கட்குப்பின், 16 ஆம் நூற்றாண்டிலேயே உருப் பெருக்கி கண்ணாடி கண்டுபிடிக்கப்பட்டது. கருவின் ஆரம்ப கட்டங்கள் பற்றிய அல்குர்ஆனின் விவரணங்களும் நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புகளும் இரண்டற ஒத்திருப்பதை அவர் அங்கீகரிக்கின்றார். குர்ஆனியக் கூற்றையும் விஞ்ஞானக் கண்டு*

*பிடிப்புகளையும் மனதிருத்திக் கொண்டு அல்புஹாரியால் எடுத் தாளப்பட்டுள்ள அறிவிப்பின் கூற்றுகளை ஒருவர் நோக்கும் போது சங்கடப்பட நேரும்.*[15]

*நபித்தோழரான அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் அல்லாத மற்றைய அறிவிப்பாளர்களில் ஒருவர் காலநீட்சியை அறிவிக்கும் போது தவறு (வஹிமா) இழைத்திருக்கக் கூடும். யாக்கூப் இப்னு சுஃபியான் (ம. ஹி. 277) மிகவும் நம்பகமான அறிவிப்பாளர் களில் ஒருவர் (திக்காஹ் ஹாஃபிஸ்).*[16] *இவர் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊதிடமிருந்து அறிவிக்கும் ஸய்த் இப்னு வஹ்பின் நிலை குறித்து அபிப்பிராயம் கூறுகையில் ''அவரது அறிவிப்புகளில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன'' என்ற வார்த்தைகளை உபயோகிக்கின்றார்.*[17] *யாக்கூபின் இந்த அவதானத்துக்கு அல் -தஹ்பி தம் எதிர்ப்பைத் தெரிவித்து ''அவர் சொல்வது சரியல்ல'' என்கிறார்.*[18] *இப்னு ஹஜரும் இதே கருத்தையே பிரதிபலிக்கின் றார்.*[19] *ஆனால் ஸய்த் இப்னு வஹ்ப் பற்றிய யாக்கூபின் அவ தானத்தை மறுத்து அல்-தஹ்பியோ இப்னு ஹஜரோ எந்தவொரு வாதத்தையும் முன்வைக்கவில்லை. இங்குள்ள நோக்கம் ஸய்த் இப்னு வஹ்பின் ஆதாரபூர்வ நிலைக்கு அவப்பெயர் உண்டு பண்ணுவதல்ல. ஆனால் அவரது அறிவிப்புகளை மற்றவர்கள் தவறாகக் கையாண்டிருக்கக் கூடிய சாத்தியப்பாடு உண்டு. இந்த செய்தியை யாக்கூப் இப்னு சுஃபியானின் அவதானத்தில் கண்டு கொள்ளலாம். கருவின் ஆரம்ப காலகட்டம் பதினேழு வாரங்கள் என்பது இந்த ஹதீஸில் பின்னர் திணிக்கப்பட்ட ஒன்றுபோல் தோன்றுகிறது. எனவே இது அறிவிப்பில் ஒரு குறைபாட்டை (இல்லஹ்) குறிக்கின்றது. அப்படியெனில் இந்த அறிவிப்பு குறை பாடுடையதாய்க் கருதப்பட வேண்டியது (மஃலூல்).*

*ஹுதைஃபா இப்னு அஸீத் அல்-கிஃபாரியின் (ம. ஹி. 42) ஆதாரத்தில் இமாம் முஸ்லிம் இதே விடயம் குறித்து இன்னொரு ஹதீஸை பதிவுசெய்துள்ளார்:*

*''நபி (ஸல்) இவ்வாறு கூறியதாக நான் கேட்டேன்: நுத்ஃபஹ்* (Zycote) *நாற்பத்தியிரண்டு நாட்களுக்கு நிலைபெற்ற பிறகு,*

அல்லாஹ் அதனையொரு மலக்கின் பொறுப்பில் விடுகிறான். அவர் அதன் செவிகளையும் விழிகளையும் தோலையும் சதையை யும் எலும்புகளையும் உருவாக்குகின்றார். அவர் (அந்த மலக்கு) பின்னர் (அது) ஆணா பெண்ணாவென அல்லாஹ்விடம் கேட் கிறார். அல்லாஹ் நியமம் செய்ததை அவர் எழுதுகிறார். பின்னர் அவர் அதன் ஆயுளைப் பற்றி கேட்கிறார். அல்லாஹ் நியமம் செய்ததை அவர் எழுதுகிறார். பின்னர் அதன் ஜீவாதாரம் கேட் கிறார். அல்லாஹ் முடிவு செய்ததை அவர் எழுதுகிறார். அந்த மலக்கு பின்னர் அந்த ஆவணத்துடன் வெளியேறுகிறார். அவர் கட்டளையிடப்பட்டதற்கு மேலதிகமாக எதையும் எழுதுவ தில்லை. எழுதப்பட்டதிலிருந்து எதையும் நீக்குவதுமில்லை.''[20]

இந்த ஹதீஸ், அல்-புஹாரி பதிவுசெய்த ஹதீஸைவிட முக் கியத்துவம் குறைந்ததல்ல. இதுவோர் ஆதாரபூர்வமான ஹதீஸ். இதன் அறிவிப்பாளர் தொடரைப் பொறுத்தமட்டில் இரு நபித் தோழர்களைக் கொண்டுள்ளபடியால் இது புஹாரியுடையதை விட மதிப்புள்ளதாகும். அவர்கள் ஆமிர் இப்னு வாத்திலாஹ், ஹுதைஃபா இப்னு அஸீத் ஆகியோராவர். பின்னவரிடமிருந்து முன்னவர் அறிவிக்கின்றார். ஆமிர் இப்னு வாத்திலாஹ்வுக்குப் பிறகு ஏனைய அறிவிப்பாளர் யாவரும் நம்பகமான ஆதாரங்கள் ஆவர். சமஅளவு ஆதாரபூர்வமான இந்த ஹதீஸ் புஹாரியுடைய தோடு முரண் படுகின்றது. புஹாரியின் அறிவிப்பு மனித விதியின் இக்கட்டத்தைப் பதினேழு வாரங்கள் என அறிவித்ததை நாம் பார்த்தோம். ஆனால் முஸ்லிமின் அறிவிப்பு இதனை ஆறு வாரங்கள் என்கின்றது. முஸ்லிமின் ஹதீஸ் விஞ்ஞான உண்மைக் குப் பொருத்தமாகவும் உள்ளது. நம்பகமான இரு ஹதீஸ்கள் ஒன்றோடொன்று முரண்படும்போது அவற்றுள் ஒன்றையே ஏற்றுக்கொள்ள முடியும். அறிவுபூர்வமாகக் கூறுவதாயின் புஹாரி யின் ஹதீஸைவிட முஸ்லிமின் ஹதீஸ் வலிமைமிக்க தெனலாம். முஸ்லிமின் ஹதீஸில் உள்ளார்ந்த குறைபாடு (இல்லஹ்) எதுவும் காணப்படவில்லை. மேலும் மரபணுப் பொறியியல் துறையின் புதிய கண்டுபிடிப்புகளுக்கு இது மிகவும் பொருந்துவதாய் உள்ளது. ஒப்புநோக்கில் அதிக நம்பகமான முஸ்லிமின்

அறிவிப்புடன் முரண்படுவதால் புஹாரியின் ஹதீஸ் அதிவிசி த்திரமானதாய் (ஷாத்த்) தோன்றுகிறது.

இமாம் புஹாரியின் ஹதீஸில் காணப்படும் இரண்டாவது கூற்று மனிதனுக்கான நான்கு விடயங்கள் சம்பந்தப்பட்டது. ஆனால் மூன்று விடயங்கள் மட்டுமே திட்டவட்டமாய்க் கூறப் படுகின்றன. நான்காவது விடயம் அறிவிப்பில் கூறப்பட வில்லை. மனிதனது ஜீவாதாரம், ஆயுட்காலம், அவன் சபிக்கப் பட்டவனா அல்லது ஆசீர்வதிக்கப்பட்டவனா என்பனவே குறிப் பிடப்பட்டுள்ள மூன்று விடயங்கள். நான்கு விடயங்களின் பட்டியலிலிருந்து 'செயல்' விடுபட்டுள்ளது என இப்னு ஹஜர் ஏற்றுக்கொள்கிறார்.[21] இமாம் புஹாரியின் மற்றிரு அறிவிப்பு களிலிருந்து இப்னு ஹஜர் இதனை அடையாளம் காண்கிறார். அவற்றுள் ஒன்று 'படைப்புகளின் தொடக்கம்' (பத்உ அல்-ஹல்க்) என்ற அத்தியாயத்திலும் மற்றது 'இறைவனின் ஏகத்துவம்' (தவ்ஹீத்) என்ற அத்தியாயத்திலும் காணப்படுகின்றது. ஆனால் 'படைப்புகளின் தொடக்கம்' என்ற அத்தியாயத்தில் காணப்படும் ஹதீஸில் மீண்டும் தவறு நேர்ந்துள்ளது. இதில் 'ஆயுட்காலம்' விடுபட்டுள்ளது. செயல், ஆகாரம், சபிக்கப்பட்டவரா அல்லது ஆசீர்வதிக்கப்பட்டுள்ளவரா என்ற மூன்று விடயங்கள் மட்டுமே குறிப்பிடப்படுகின்றன.[22] 'இறைவனின் ஏகத்துவம்' என்ற தலைப்பின் கீழ் இடம்பெற்றுள்ள ஹதீஸில் நான்கு விடயங்களும் குறிப்பிடப்படுகின்றன.[23] ஏனைய ஹதீஸ்களிலிருந்தும் நான் காவது விடயம் அறிந்துகொள்ளப்படுகின்றது எனினும் கவனத் தில் கொள்ளப்படும் ஹதீஸின் நிலையென்ன? இதில் குறை பாடும் (முஅல்லல்) விசித்திரமும் (ஷாத்த்) இல்லையா? 'செயல்' என்ற நான்காவது விடயம் நன்கறியப்பட்ட ஒன்றாகையால் அது அல்-புஹாரியின் கித்தாப் அல்-கதர் அத்தியாயத்தில் எடுத்தாளப் பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்படவில்லையென பதுருத்தீன் அல்-அய்னி ஊகிக்கின்றார்.[24] அப்படியாயின் அறிவிப்பில் குறிப்பிடப்படும் ஜீவாதாரம், ஆயுட்காலம் ஆகிய இரு விடயங் களும் நன்கறியப்படாதவையா என ஒருவர் திருப்பிக் கேட்கக் கூடும். குறிப்பிடப்படாத 'செயல்' போன்று இவையும்

நன்கறியப்பட்டவையே. அல்-புஹாரியின் அறிவிப்பில் காணப் படும் இக்குறைபாட்டை இப்னு ஹஜர், அல்-அய்னி இருவரும் அறிந்துள்ளனரெனினும் அது விசித்திரமானது (ஷாத்த்) என்பதை அறிவிக்காமல் சமாதானம் கூற முற்படுவதாகத் தோன்றுகிறது. இதே அறிவிப்பை அல்-புஹாரி கித்தாப் அல்-பத்உ அல்-ஹல்க், அஹதீத் அல்-அன்பியா, கித்தாப் அல்-கதர், கித்தாப் அல்-தவ்ஹீத் ஆகிய நான்கு இடங்களில் பதிவுசெய்துள்ளார். இந்த நான்கு அறிவிப்புகளில் (கித்தாப் அஹதீஸ் அல்-அன்பியா, கித்தாப் அல்-தவ்ஹீத் ஆகிய) இரண்டிடங்களில் மட்டுமே நான்கு விட யங்களும் குறிப்பிடப் படுகின்றன. (கித்தாப் பதாஉ அல்-ஹல்க், கித்தாப் அல்-கதர் ஆகிய) மற்ற இரண்டும் மூன்று விடயங்களை மட்டுமே குறிப்பிடுகின்றன. இந்த நிலை விசித்திரத்தின் (ஷுதூத்) பாற்பட்டதாகும்.

இமாம் புஹாரியுடைய அறிவிப்பின் மூன்றாவது கூற்று ஒருவர் வாழ்நாள் முழுவதும் நரகவாசிபோல் தீமை செய்து விட்டு அவரை மரணம் நெருங்கும்போது அவரது விதி அவரை முந்தி விட, அவர் நன்மை செய்யத் தொடங்கி சொர்க்கத்தில் நுழை வதற்குத் தகுதிபெற்றுவிடுகிறார். அதற்கு நேர்மாற்றமாக ஒருவர் வாழ்நாள் முழுவதும் நல்லமல் செய்துகொண்டிருந்து மரணம் வருவதற்குமுன் அவரது விதி அவரை முந்திவிட, அவர் நரக வாசிபோல் பாவம் புரியத் தலைப்பட்டு நரக நெருப்பில் தூக்கி யெறியப்படுகிறார். இந்தக் கூற்றில் கூறப்பட்டுள்ளவற்றுக்கும் இரண்டாவது கூற்றுக்கு மிடையே வெளிப்படையான முரண்பாடு தெரிகின்றது. முன்னர் குறிப்பிட்ட இரண்டாவது கூற்றில் மனித னின் ஒரேயொரு விதியை மட்டுமே மலக்கு எழுதுகின்றார். செயல், ஜீவாதாரம், ஆயுள், இறுதி முடிவு ஆகிய நான்கு அம்சங் களும் அவரது கருவின் ஆரம்பக் கட்டத்தில் அல்லது அதன் வளர்ச்சியடைந்த கட்டத்தில் எழுதப்பட்டுவிடுகின்றது. ஆனால் மூன்றாவது கூற்று மனிதன் தானாகவே வரித்துக்கொள்ளும் இன்னொரு விதி (அல்-கித்தாப்) யையும் குறிப்பிடுகின்றது. இந்த சுதந்திரத்தின் அடிப்படையிலேயே மனிதன் தான் விரும்பியவாறு தேர்வினை மேற்கொள்ளவும் செயல்புரியவும் முற்படுகிறான்.

*அவனது வாழ்வின் அந்திம கட்டத்தில் அவனது விதி அவனை முந்திவிட அவன் அதற்கேற்ப செயல்படத் தொடங்கிவிடுகிறான். இவ்வறிவிப்பில் காணப்படும் ஒவ்வாமையை அல்-புஹாரியின் விளக்கவுரையாளர்கள் எவரும் கவனித்ததாகவோ அதனையிட்டுக் கருத்துரைத்ததாகவோ தெரியவில்லை.*

*ஹதீஸின் முதற்பகுதி முன்னரே எழுதப்பட்டுவிட்ட சகல விவரங்களும் அடங்கிய விதியைக் குறிக்கின்றது. அதேவேளை இறுதிப்பகுதி மனிதனே ஏற்படுத்திக்கொண்ட விதியை இறுதியாக இயற்கை விதி வென்றுவிடுவதாகக் கூறுகின்றது. இங்கு இயல்பாகவே எழும் கேள்வி முன்தீர்மானிக்கப்பட்டுவிட்ட விதியை மீறி வாழ்வின் பெரும்பகுதியை மனிதனால் எப்படி வாழ முடிகிறது? முன்எழுதப்பட்டுவிட்ட விதியினால் மனிதவாழ்வின் இறுதிப்பகுதியில்தான் அதன் தாக்கத்தைச் செலுத்தமுடியுமோ?*

*இயற்கைவிதி மனிதனை முந்திக்கொண்டு அவனிடமிருந்து சொர்க்கத்தைப் பறித்துவிடும் என்ற கருத்து அச்சுறுத்தும் ஒரு செய்தியைச் சொல்கிறது. அதாவது புலப்படாத ஒரு சக்தியின் நிர்ப்பந்தங்களுக்கு அவன் ஆட்பட்டுள்ளான் என்ற கருத்து. மனிதன் பூமியில் ஒரு பொறுப்பாளனாக (கலீஃபாவாக) உள்ளான். அவன் பரீட்சிக்கப்படுகிறான். அவனது நன்மைகள் அல்லது தீமைகளே அவன் செய்யும் சன்மானத்தையும் தண்டனையையும் தீர்மானிக்கின்றன.*

*(1) (நபியே!) உமதிரட்சகன் மலக்குகளிடம், ''நான் பூமியில் (என்னுடைய) பிரதிநிதியைப் படைக்கப்போகிறேன்'' என்று கூறினான். (2:30)*

*(2) அவன்தான் உங்களைப் பிரதிநிதியாக ஆக்கியுள்ளான். அவன் உங்களுக்குக் கொடுத்துள்ளவற்றுள் உங்களைச் சோதிப்பதற்காக உங்களில் சிலரை மற்றவர்களைவிடப் பதவியில் உயர்த்தியுள்ளான். (6: 165)*

*(3) அல்லாஹ் நாடினால் உங்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருப்பான். ஆனால் அவனது திட்டம்*

உங்களுக்கு அருளியவற்றுள் உங்களைச் சோதிப்பதுதான். *(5:48)*

*(4)* பாருங்கள்! பூமியை நாம் வனப்பினதாக ஆக்கிவைத்தோம், அவர்களில் யார் செயலில் அழகானவர் என்பதை நாம் சோதிப்பதற்காக. *(18:7)*

*(5)* உங்களில் செயலில் யார் மிக அழகானவர் என்பதைச் சோதிப்பதற்காகவே மரணத்தையும் வாழ்வையும் அவன் படைத்திருக்கிறான். *(67:2)*

'கிலாஃபா', 'இப்திலா' ஆகிய பதவிகளுக்கு சிந்தனைச் சுதந் திரம், தேர்வு, செயல் ஆகியன அத்தியாவசியம். இறுதிமுடிவு, மனிதன் (போய்ச்) சேருமிடம் இம்மையில் அவனது செய்கை யைப் பொறுத்திருக்கின்றது. இறுதி முடிவு ஏற்கனவே எழுதப் பட்டுவிட்டதெனில், அப்போது 'கிலாஃபா', 'இப்திலா' என்ற கருத்து கேலிக்கூத்தாகிவிடும்.

அல்-புஹாரியின் அறிவிப்பு மனிதனின் முன்தீர்மானிக்கப் பட்ட விதியை அதன் அனைத்து விவரங்களோடும் வெளிக் காட்டவில்லை. ஆனால் அல்லாஹ் எல்லாம் அறிந்தவன்; அவன் நடக்கப் போகிறவைகளை அறிவான் என்பதையே அது பிரதி பலிக்கின்றது என்று கூறப்படுகின்றது.[25] அல்லாஹ் எல்லாம் அறிந்தவன் என்பதில் சந்தேகமில்லை. அவனிடம் எதுவும் மறைக்கப்படவில்லை. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்காலமும் அவனது நித்திய அறிவினுள் அடக்கம். ''இன்னும் அல்லாஹ் அவனது அறிவைக் கொண்டு எல்லாப் பொருள்களையும் சூழ்ந்துகொண்டுள்ளான்'' *(65:12)*. இது எவ்வா றிருப்பினும் அல்-புஹாரியின் அறிவிப்பில் அல்லாஹ்வின் அறிவைப் பற்றி எந்த குறிப்பும் இல்லை. ஆனால் 'கித்தாபாஹ்' (எழுத்து) என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. குர்ஆனின் காலத்தில் அரபிகள் 'எழுதுதல்' என்ற சொல்லை ஆகுபெயராய் 'அறிதல்' என்ற அர்த்தத்தில் உபயோகித்தார்களா? நிச்சயமாக இல்லை. இன்னும் பிறக்காத மனிதனின், வருங்காலம் பற்றி

அல்லாஹ் ஏற்கனவே அறிந்தவன் என அறிவிப்பு கூறியிருந்தால், எந்தப் பிரச்சினையும் இராது. ஆனால் அறிவிப்பு மனித விதியின் நான்கு அம்சங்களை வர்ணிக்கும் விதத்தைப் பார்த்தால் மனித னுக்கு எந்த சுதந்திரமும் இல்லை யென்றாகிறது.

இப்னு ஹஜரும் புஹாரியின் அறிவிப்பை ஆய்வுக்குட்படுத்தி யிருக்கிறார். அவரது பகுப்பாய்வின்படி அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊதின் ஆதாரத்தில் மட்டும் இது அறிவிப்புச் செய்யப்பட்ட தல்ல. வேறு நபித்தோழர்களும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார் கள் - அப்துல்லாஹ் இப்னு உமர், அபூ ஹுரைரா, அனஸ் இப்னு மாலிக், ஹுதைஃபா இப்னு அஸீத், இன்னும் பிறர். இந்த அறிவிப்பு அறிவிக்கப்பட்ட நாற்பது வெவ்வேறு அறிவிப்பாளர் தொடர்களை (இஸ்னாத்) அவரால் அடையாளம் காண முடிகிறது. ஆய்வை இன்னும் ஆழமாக மேற்கொண்டால் இன்னும் பல அறிவிப்பாளர் தொடர்களை வெளிக்கொணர முடியுமென அவர் நம்பிக்கை தெரிவிக்கின்றார்.[26] இந்த ஹதீஸ் முத்தவாதிர் (திரும் பத் திரும்பக் கூறப்பட்டதென) அவர் அறிவிக்கா விடினும் அவர் சொல்வது இறுதியில் இம்முடிவுக்கு இட்டுச்செல்கின்றது.

ஹதீஸ் முத்தவாதிர் இரு பிரதான பிரிவுகளைக் கொண்டது. (1) சொற்பொருள் (லஃப்ஸி) (2) கருத் துருவம் (மஃனவி).[25] இந்த அறிவிப்பு அதே சொற்களில் திரும்பத்திரும்ப (தவாதுர் லஃப்ஸி) எடுத்துரைக்கப்படும் பிரிவில் அடங்காது. கிடைக்கப்பெறும் எல்லா அறிவிப்புகளும் ஒரே சொற்களில் இடம்பெறவில்லை. இம்முடிவுக்கு வர ஒரு சில உதாரணங்களே போதும். முன்தீர் மானிக்கப் பட்டது என்ற தலைப்பில் இமாம் புஹாரி ஏழு ஹதீஸ் களைப் பதிவுசெய்துள்ளார்.[28] இவ்வேழு அறிவிப்புகளில் நான்கு அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் எடுத்துரைத்தது. எஞ்சிய மூன்றும் அனஸ் இப்னு மாலிக்கின் அதிகாரத்தில் அறிவிக்கப்படுகின்றது. அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊதின் அறிவிப்புகளில் இரு கூற்றுகள் காணப்படுகின்றன. இவ்வறிவிப்புகளில் இரண்டு முன்தீர்மானிக் கப்பட்ட விடயங்கள் நான்கு என்றுவிட்டு அவற்றில் மூன்றை மட்டும் குறிப்பிடுகின்றன. அனஸ் இப்னு மாலிக்கின்

எடுத்துரைப்பில் இன்னொரு வித்தியாசம், 'செயல்' என்பதற்குப் பதில் ஆணா பெண்ணா என்பது இடம்பெற்றுள்ளது. இமாம் முஸ்லிம் இதே ஹதீஸின் சுமார் எட்டு அறிவிப்பாளர் தொடர்களைக் குறிப்பிடுகின்றார். அவற்றுள் இரண்டு அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊதின் அதிகாரத்தில் பதிவாகியுள்ளது. ஐந்து ஹுதைஃபா இப்னு அஸீதின் அதிகாரத்திலும் எஞ்சிய ஒன்று அனஸ் இப்னு மாலிக்கின் அதிகாரத்திலும் உள்ளது.(29) இப்னு மஸ்ஊதின் அறிவிப்பின்படி, சிசுவினது கருவின் ஆரம்பநிலையில் பல்வேறு நிலைகளை அது தாண்டிச் செல்லும் நூற்றிருபது நாட்களுக்குப் பின் அதன் விதி தீர்மானிக்கப்படுகின்ற தெனக் குறிப்பிடப் படுகின்றது. அதேவேளை ஹுதைஃபா இப்னு அஸீதுடைய அறிவிப்பு அது நாட்பது, நாற்பத்தியிரண்டு அல்லது நாற்பத் தைந்து நாட்களின்பின் தீர்மானிக்கப்படுவதாகக் கூறுகின்றது. ஹுதைஃபாவுடைய அறிவிப்புகளில் முன்தீர்மானமாகும் அம்ச ங்கள் வித்தியாசமானவையாக அறிவிக்கப் பெற்றுள்ளன. ஓர் அறிவிப்பில், (ஹதீஸ் இலக்கம் 6667) முன்தீர்மானமாகும் அம்சங்கள் ஆறு: இறுதி முடிவு, பால் (ஆணா பெண்ணா), செயல், தாக்கம், ஆயுள், ஜீவாதாரம் என்பன அவை. மற்றோர் அறிவிப்பில் (ஹதீஸ் இலக்கம் 6668) முன்தீர்மானிக்கப்படும் அம்சங்கள் மூன்று: பால், ஆயுள், ஜீவாதாரம் என்பன. இந்த இரண்டு அறி விப்புகளும், 'தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் எதுவும் கூட்டப்படு வதில்லை; குறைக்கப்படுவதுமில்லை' என்ற வசனத்துடன் முடிவடைந்திருப்பது சுவாரஷ்யமான ஒரு விடயம். இன்னொரு அறிவிப்பு (ஹதீஸ் இலக்கம் 6670) முன்தீர்மானிக்கப்படும் ஆறு விடயங்கள் பால் (ஆணா பெண்ணா), உடல் இயல்பு (சாதார ணமானதா, அசாதாரணமானதா), ஜீவாதாரம், ஆயுள், நடத்தை, இறுதி முடிவு (சபிக்கப்பட்டவரா அல்லது ஆசீர்வதிக்கப்பட்ட வரா) என்பனவாகும். இந்த அறிவிப்பில் உடல் இயல்பு என்ற விடயம் வித்தியாசப்படுகின்றது. இந்த நிலை இதன் பொருளில் ஒற்றுமையைக் குறிக்கின்றதா பிளவைக் குறிக்கின்றதா? அல்-புஹாரியுடைய அறிவிப்பில் அதன் ஏனைய கூற்றுகளில் வித்தி யாசங்கள் காணப்படுவதால், அறிவிப்பின் தொடர்ச்சியை

(தவாதிர்) நிரூபிப்பது கடினம். தர்க்க ரீதியாகக் காணில், ஒவ்வோர் அறிவிப்பும் தனித்த அறிவிப்பு (ஆஹாத்) என்ற வகையினுள் அடங்குவன.

இமாம் புஹாரியின் அறிவிப்பை விளக்குகையில் அல்-திபி, இப்னு ஹஜர், அல்-அய்னி, அல்-கஸ்தலானி முதலியோரில் எவரேனும் இந்த அறிவிப்பு ஒரு மனிதனது இறைவிசுவாசத்தில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து ஆராய்வதாக இல்லை. அல்-புஹாரியின் கித்தாப் அல்-கதருக்கு இவர்கள் முறையே வழங்கி யுள்ள அறிமுகக் குறிப்புகளில் இவர்களின் கருத்து வலியுறுத்தப் பட்டிருப்பதால் இது சம்பந்தமாய் மேலதிகமாக எதுவும் சொல் வதை இவர்கள் தவிர்த்துக்கொண்டிருப்பது தெரிகிறது. இவர்கள் ஜபரிய்யாக்களுடையவும் கதரிய்யாக்களுடையவும் நம்பிக்கை சரியானதல்ல எனவும் அஹ்லுஸ் ஸுன்னாவுடைய நிலைப்பாடே சரியானதெனவும் அழுத்தம் திருத்தமாய்க் கூறுகின்றனர். ஜபரிய் யாக்கள் மனிதனின் வாழ்வு முழுமையாக முன்தீர்மானிக்கப் பட்டுவிட்ட தாய்க் காண்கின்றனர். மனிதனுக்கு எவ்வித சுதந்தி ரமும் இல்லையெனவும் அவர்கள் செய்வன யாவும் முன்தீர் மானிக்கப்பட்டு விட்டதாகவும் உரிமைகொண்டாடுகின்றனர். கதரிய்யாக்கள் மனிதனுக்கு சிந்தனைச் சுதந்திரம், தேர்வு, செயல் முதலிய பண்புகளை வழங்குவதுடன் முன்தீர்மானிக்கப்பட்ட விதி என்ற கருத்தை ஏற்காது விடுவர். அஹ்லுஸ் ஸுன்னாவினர் இவ்விரு தீவிர நிலைகளையும் தவிர்த்துக் கொண்டு நடுநிலை யைக் கடைப்பிடிக்கின்றனர். முன்தீர்மானிக்கப்பட்ட விதியென்று ஒன்று இருக்கின்றதெனவும் ஆனால் இது தேர்வினை மேற் கொள்வதற்கும் செயலாற்றுவதற்கும் மனிதனுக்குள்ள சுதந்தி ரத்துக்குப் பாதகங்கள் விளைவிப்பதில்லை எனவும் அவர்கள் கூறுவர். இதில் எந்தப் பிரிவினரின் போக்கு சரியானதென ஆராயப்புகுவதற்குப் பொருத்தமான இடமல்ல இது.

அல்-புஹாரியின் அறிவிப்பு அஹ்லுஸ் ஸுன்னா, கதரிய்யா ஆகிய இரு பிரிவினரதும் கருத்துகளுக்கு முரண்பட்டாலும், எல்லாம் விதிப்பயன் என்ற நம்பிக்கைக்கு ஆதரவாக உள்ளது

என்பதை மறுக்கமுடியாது. ஒருபுறம் அறிவிப்பில் உள்-குறை பாடுகள் இருப்பதால் இதனை விசித்திரம் (ஷாத்த்) என வகைப் படுத்த வேண்டுமென்றும் இதனைவிட மிக ஆதாரம் வாய்ந்த அறிவிப்புகள் இருப்பதால் இதனை நிராகரிக்க வேண்டுமென்றும் ஆலோசனைகள் முன்வைக்கப்படலாம். ஆனால் அது நியாய மற்றது. அறிவிப்பில் காணப்படும் பிழைகளை இனம்கண்டு ஏனைய அறிவிப்புகளின் துணையுடன் அவற்றைத் திருத்தி யமைப்பதே பொருத்தமாகத் தோன்றுகிறது. இந்த அறிவிப்பைக் கவனமாகப் பரிசீலனை செய்து இதனை மீளமைக்க முடியும். திருந்திய வடிவம் இவ்வாறு அமையலாம்:

முஃப்தாஹ் என்ற கட்டத்தின் நாற்பது நாட்களின் பின்னர் அதனை வடிவமைக்கவும் செவிகள், விழிகள், தோல், எலும்புகள், சதை முதலியவற்றை உருவாக்கவும் அல்லாஹ் ஒரு மலக்கை ஏவுகிறான். பின்னர் அவர், அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப, அதன் பால் (தக்கர் அல்லது உன்தா), அதன் ஆயுள் (அஜல்), அதன் செயல் (அமல்) இதன் உடலியல்பு (ஸவிய்யுன் அல்லது கைர் ஸவிய்), அதன் ஜீவாதாரம் (றிஸ்கு), அதன் உளச்சார்புகள் (ஷக்கிய் அல்லது ஸய்த்) முதலிய வற்றைத் தீர்மானிக்கின்றார். அல்லாஹ் வின் ஆணைப்படி, ஒருவர் ஆயுள் முழுவதும் நல்லமல் செய்துவிட்டு இறுதித் தருவாயில் அவரது அந்திம நாட்களில் விதி அவரை முந்திவிட அவர் தீமைகளைச் செய்யத் தலைப்பட்டு நரகத்தையடைகிறார். அதேபோன்று ஒருவர் ஆயுள் முழுவதும் தீமைகளைச் செய்துகொண்டிருந்து இறுதித்தருவாயில் அவரது அந்திம நாட்களில் அவரது விதி அவரை முந்திவிட அவர் நன்மைகளைச் செய்யத் தொடங்கி கடைசியாகச் சொர்க்கத்தை யடைகிறார்.

கித்தாப் அல் கதரில் இவ்வாறு கவனமாக மீளமைக்கப்பட்ட ஹதீஸின் வடிவம் மிகவும் அறிவார்ந்த, ஏற்புக்குரியதான விளக் கத்தைக் கோரி நிற்கின்றது.

நுத்ஃபாஹ் (Zecote) கருத்தரிப்பின் ஆரம்பநிலையைக் குறிக் கின்றது. கருவுண்டாகி சுமார் ஆறு வாரங்களின்பின் கர்ப்பத்தி

லுள்ள சிசுவின் வளர்ச்சி துரிதமடைகின்றது. குழந்தையின் பிரதான தோற்றம் உருப்பெறத் தொடங்குகின்றது. கண்கள், செவிகள், தோல், எலும்புகள், சதை இன்ன பிற வளர்ச்சிபெறத் தொடங்கு கின்றன. நவீன மரபணுப் பொறியியல் விஞ்ஞானத்தின்படி, கர்ப்பத்திலுள்ள சிசுவின் முதல் ஆறு வாரங்கள் தீர்மானகர மானவை. இக்காலப்பகுதியில் மனித உறுப்புகள் உருவாகத் தொடங்குகின்றன. இத்தீர்மானகரமான காலகட்டத்தில்தான் அல்லாஹ் மனிதனின் விதியைத் தீர்மானிக்கின்றான். குழந்தை ஆணா பெண்ணா என்பது தாயின் கருவறையில் முடிவுசெய்யப் படுகின்றது. குழந்தையின் உடல் இயல்புகளும் இக்காலகட்டத் திலேயே தீர்மானிக்கப்படுகின்றன. குழந்தை குறைபாடுகளுடன் பிறந்தால் கர்ப்பத்தின்போது அது அவ்வாறு உருவாவதே காரணம்.

இனி, எவ்வாறு எந்த அமைப்பில் அஜல் (ஆயுள்), ஜீவாதாரம் (றிஸ்கு), ஷாக்கிய் அல்லது ஸய்த் (உளச்சார்பு) முதலியன தீர்மானிக்கப்படுகின்றன என நாம் புரிந்துகொள்ளல் அவசியம். மனித ஆயுள் சில இறைவிதிகளால் முடிவுசெய்யப்படுகின்றது. இதன் பிரகாரம் மனிதன் சிலசமயம் ஆயுள் நீடித்தவனாகவும் சிலசமயம் ஆயுள் குறைந்தவனாகவும் ஆகின்றான். எனினும் ஆயுளை நீடிக்கச் செய்வதற்கு மனிதனுக்குச் சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. ராஃபி இப்னு மக்கீத் உடைய ஆதாரத்துடன் அஹ்மத் இப்னு ஹன்பல் நபிகளாரின் வாக்கொன்றினைப் பதிவுசெய்கிறார்: நல்லமல் ஒருவரின் ஆயுளை நீடிக்கின்றது. தான தர்மம் ஒருவரை விசனகர மரணத்திலிருந்து பாதுகாக்கின்றது.[30] சுலைமானின் ஆதாரத்துடன் அல்-திர்மிதி பதிவுசெய்துள்ள ஒரு ஹதீஸ்: ஒருவரின் ஆயுளைத் தீர்மானிப்பது அவரது நல்லமலே யன்றி வேறில்லை.[31] 'றிஸ்கு' என்பது குறிப்பிட்ட அளவு வெறும் சீவனோபாயத்தை மட்டும் குறிப்பிடவில்லை. ஒருவர் ஆர்வம் கொண்டுள்ள துறை, அவரது ஆற்றல், குறிப்பிட்ட பொருளாதார நடவடிக்கைகளில் அவருக்குள்ள நாட்டம் முதலியவைகளையும் அது குறிக்கின்றது. மனிதர்களில் சிலர் விவேகமுள்ளவர்களாகவும் சிலர் சராசரிகளாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறு அவரவர் ஆற்றலுக்கேற்ப மக்கள் சீவியம் நடத்துகின்றனர். பொருளாதார

வாழ்வில் மனிதனுக்குள்ள பங்கை ஒருவரால் மறுக்க முடியாது. ஒருவரின் செல்வம் அதிகரிப்பதும் குறைவதும் உண்டு.

ஒருவர் கடின உழைப்பாளியாகவும் நேர்மையானவராகவும் ஒழுங்காகச் சமூகமளிப்பவராகவும் நேரம் தவறாதவராகவும் உற்பத்தித் திறன் மிக்கவராகவும் இருந்தால் அவர் தொழில் வழங்குநரிடமிருந்து பதவியுயர்வை சம்பள உயர்வை எதிர் பார்க்கலாம். இதற்கு நேர் மாற்றமாக அவர் ஒழுங்காகச் சமூக மளிக்காதவராக சோம்பேறியாக உற்பத்தித் திறனற்றவராக இருப் பின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படலாம், அவரது பதவியும் சம்பளமும் குறைக்கப்படலாம். இதேபோன்று அல்லாஹ் ஒரு வரது உழைப்பாற்றலைக் கவனத்தில் கொண்டு அவரது சீவனோ பாயத்தைக் குறைக்கவோ அதிகரிக்கவோ கூடும். ஒருமுறை நபிகளார் தமது பணியாளர் அனஸ் இப்னு மாலிக்குக்காக இவ் வாறு பிரார்த்தித்தார்கள்: *''யா அல்லாஹ்! இவரது ஆயுளையும் சந்ததிகளையும் அதிகரிக்கச் செய்வாயாக. இவர்மீது ஏற்கனவே நீ அருளியதைக் கொண்டு இவரை ஆசீர்வதிப்பாயாக.''*[(32)]

அமல் (செயல்) என்பது ஒருவரது உடல் உழைப்பு, மூளை உழைப்பு, சிந்திக்கவும் தீர்மானிக்கவும் தெரிவுசெய்யவும் செய லாற்றவும் ஒருவருக்குள்ள திறன் முதலியவற்றைக் குறிக்கும். இதனாலேயே உடல் உள ஆற்றல்களில் மனிதர்கள் ஒருவருக் கொருவர் வேறுபடுகின்றனர். அல்லாஹ்விடம் இவ்வாறு பிரார்த் திக்குமாறு நபிகளார் மக்களுக்குக் கற்றுக் கொடுத்தனர்: *''யா அல்லாஹ்! தீயவற்றைக் கேட்பது, பார்ப்பது, பேசுவது, சிந்திப் பதிலிருந்து தீயவற்றுக்கு ஆசைப்படுவதிலிருந்து உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன்.''*[(33)] நபிகளாரின் இவ்வறிவுரை ஒருவ ருக்கு தன் செயலைத் தீர்மானிப்பதற்குச் சுதந்திரமுண்டு என் பதையும் சரியாகச் செயல்படுவதற்கு அவர் அல்லாஹ்வின் உதவியை நாடுகிறார் என்பதையும் குறிப்புணர்த்துகிறது. பெரும் பாலும் எல்லா ஹதீஸ் நூல்களிலும் கித்தாப் அல்-தஃஅவாத் (அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிதல் / உதவி வேண்டுதல்) என்றொரு அத்தியாயம் காணப்படுகின்றது. அதில் தீமையைத்

தவிர்த்துக் கொள்வதற்கும் நன்மை புரிவதற்கும் அல்லாஹ்வின் உதவி வேண்டி இறைஞ்சுமாறு மனிதனுக்கு ஆர்வமூட்டும் துஆக்கள் / பிரார்த்தனைகள் காணப்படுகின்றன. மனிதன் சிந்தனைச் சுதந்திரமும் செயல் சுதந்திரமும் உள்ளவன் என்ற முறையில் அவன் தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். இது அவனுக்குரிய ஒரு சிறப்பம்சம்.

ஷக்கிய் அல்லது ஸயீத் என்ற பிரயோகங்கள் சபித்தல் அல்லது சன்மானம் வழங்கல் என்ற கருத்தைத் தான் கொண்டதாக இல்லை. அல்-ஃபைரூஸாபாதியின் கருத்துப்படி ஷகா என்பதன் சொற்பொருள் கடுமை கடின சிந்தை அல்லது சிரமம் (உஸ்ர்) என்பதாகும்.[(34)] ஷக்கிய் என்பவன் இயல்பாகவே கடுமையானவன், கடின சிந்தை கொண்டவன், கடும் கோபக்காரன். 'ஷக்கிய் அல்-கல்ப்' என்பது கல்மனம் கொண்டவனைக் குறிக்கும். ஸயீத் என்ற சொல்லின் உண்மையான அர்த்தம் சந்தோசம் மகிழ்ச்சி என்பதாகும். மகிழ்ச்சியான மனோபாவம் கொண்டவன் 'ஸயீத்' ஆவான். இத்தகைய மனிதன் பிறருடன் இனிமையாகவும் மகிழ்வுடனும் பழகுவான். இவ்விரு சொற்களும் மனிதனின் இயல்பான குணங்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஷகிய் கோபக்காரன். ஸயீத் இனிய சுபாவத்தினன். இவ்விரு சொற்களும் மனித நடத்தையைக் குறிக்கின்றன. அபூ ஹுரைராவின் ஆதாரத்துடன் அபூதாவூத் பின்வரும் ஹதீஸைப் பதிவுசெய்துள்ளார்: ''நிச்சயமாக இஸ்லாத்துக்கு முந்திய பழக்கமான வம்சப்பெருமை பேசலை அல்லாஹ் உங்களிடமிருந்து எடுத்துவிட்டான். இப்போது, இறையச்சம் கொண்ட விசுவாசி, வரம்புமீறிய கல் நெஞ்சர் ஆகிய இரு தரத்தினர் மட்டுமே மனிதரில் உள்ளனர்.''[(35)] மக்கள் தம் நடத்தை காரணமாக இரு குழுக்களாகப் பிரிந்துள்ளனர் என்பது இந்த ஹதீஸிலிருந்து நிதர்சன மாகின்றது. அல்லாஹ்வை அஞ்சி அவனுக்குக் கீழ்ப்படிபவர் விசுவாசிகள். அல்லாஹ்வை நிராகரித்து அவனை வியவாதிருப்போர் வரம்பு மீறியவர்கள். இந்த ஹதீஸ் ஷக்கிய் என்ற சொல்லை தக்கிய் (இறையச்சம்) என்ற சொல்லுக்கு எதிர்ச் சொல்லாகப் பயன்படுத்துகின்றது. எனவே இது கடின சிந்தை காரணமாக அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிய

மறுப்பதைக் குறிக்கின்றது. ஷக்கிய், ஸயீத் என்ற பதங்கள் மனிதன் சபிக்கப்பட்டவனா அல்லது சன்மானத்துக் குரியவனா என முன்தீர்மானிக்கப்படும் விதியைக் குறிப்பதாகக் கருதுவது குர் ஆனின் கொள்கைக்கு முரணானதாகும்.

ஸூறா ஹூது (11) வசனங்கள் 25 - 100, நூஹுடைய சமூகத் தினர் ஆத், ஸமூதுடைய கூட்டத்தினர், லூத்தின் சமூகத்தினர், மத்யன்வாசிகள், ஃபிர்அவுனும் அவன் கூட்டத்தினரும் முதலா னோரின் வரலாற்றைக் கூறுகின்றன. ஸூறா 11 வசனங்கள் 101 - 109 அவர்களின் முடிவு குறித்துப் பேசுகின்றது. இதில் இறுதிக் குறிப்பில் காணப்படும் மூன்று கூற்றுகள் முக்கியமானவை. வச னம் 11:101: ''நாம் அவர்களுக்குத் தீங்கிழைக்கவில்லை. அவர்களே தங்களின் ஆன்மாக்களுக்குத் தீங்கிழைத்துக் கொண்டனர்...'' வசனங்கள் 11: 105 - 106 : ''அவர்களில் சபிக்கப் பட்டவர்களும் (ஷக்கிய்) சன்மானம் வழங்கப்பட்டோரும் (ஸயீத்) உள்ளனர். இனி, தங்கள் செயல் காரணமாக கைசேதமுற்றவர்கள் (அல்-லதீன ஷகூ) நரகில் (கிடப்பர்)...'' ''இன்னும், (ஒன்று சேர்க்கப்பட் டோரில்) சிலர் கைசேதப்படுபவர்களாகவும் சிலர் மகிழ்ச்சி யானவர்களாகவும் (ஸயீத்) இருப்பர். இப்போது, (தங்கள் செயல் கள் மூலம்) தங்களுக்குக் கைசேதத்தைத் தேடிக்கொண்டோர் (அல்-லதீன ஷக்கூ) நரகில் (இருப்பர்)... இம்மூன்று இறை வசனங்களும் (11: 101, 105, 106) தீமை புரிபவர்களை அவர்களின் தீய விதிக்குப் பொறுப்பாக்குகின்றது. சபிக்கப்பட்டவர்களாகவும் சன்மானம் வழங்கப்பட்டவர்களாகவும் அமையும் மனிதர்களின் நிலைமை மறுமையில்தான் தீர்மானிக்கப்படும். பூமியில் தனது வாழ்வைத் தொடங்குவதற்காக ஆதம் (அலை) அனுப்பப்பட்ட வேளை, அவனது வழிகாட்டலை அல்லாஹ் அவருக்கு உறுதிப் படுத்தினான்: ''நிச்சயமாக என்னிடமிருந்து உமக்கு வழிகாட்டல் வரும். என்னுடைய வழிகாட்டலைப் பின்பற்றுவோர் வழிகெட மாட்டார் (யளில்லு) கவலைப்படவும் மாட்டார் (யஷ்கா). (20:123). இங்கு வழிகாட்டலை நிராகரிப்பதன் விளைவாகத் துன்பம் (ஷக்கூ) நேர்கின்றது. வழிகாட்டலை ஏற்றுக்கொள்வதன் விளை வாக இன்பம் (ஸயீத்) உண்டாகின்றது.

*ஹதீஸின் இறுதிப்பகுதி மனிதன்மீது விதியின் ஆதிக்கம் பற்றிப் பேசுகின்றது. விதிப்பயனாய் அவன் நரகத்தையோ சொர்க்கத்தையோ அடைகிறான். இந்த ஹதீஸ் வெளிப்படையாக பயபக்தி யுள்ள நல்ல மனிதர் விதிவசத்தால் நரகம் புகுவதையும் பாவத்தில் உழன்றுகொண்டிருக்கும் ஒருவர் விதிப்பயனாய் நன்மை செய்ய முற்பட்டு இறுதியில் சொர்க்கம் புகுவதையும் சொல்கிறது. இக்கூற்று மனிதன் எத்தகைய சுதந்திரமும் அற்றவனென அர்த்தப்படுமானால் அது இறைநீதிக்கு முற்றிலும் மாற்றமானதாகும். மனிதன் அவனது செயல்களுக்கேற்ப தண் டிக்கப்படவும் நற்கூலி வழங்கப்படவும் வேண்டும் என்பதே அல் குர்ஆனின் அடிப்படை. இங்கு விதி (அல் - கித்தாப்) என்பது வழிகாட்டலினதும் வழிகேட்டினதும், சன்மானத்தினதும் தண்ட னையினதும் பொதுவான விதிகளைக் குறிப்பதாக இருக்கலாம். வழிகாட்டலும் வழிகேடும் அத்தியாவசியமாய் மனிதனிலேயே தங்கியுள்ளது. அல்லாஹ்வின் தூதை ஏற்றுக்கொள்வதும் நிரா கரிப்பதும் மனிதனின் விருப்பில் மனவுறுதியில் தங்கியுள்ளது. குர்ஆன் கூறுகின்றது: ''இதைக் கொண்டு அவன் அநேகரை வழிதவறச் செய்கிறான். இன்னும் இதைக் கொண்டு அநேகரை நேர்வழிபெறச் செய்கிறான். இன்னும் தீயவர்களைத் தவிர (வேறெவரையும்) இதைக் கொண்டு வழிதவறச் செய்யமாட்டான் (2:26). மனிதன் மீது விதியின் ஆதிக்கம் என்பது நன்மை தீமை யென்ற நியாயமான சாசுவத இறைநியதியால் மனிதன் வழி நடத்தப்படுவதைக் குறிக்கின்றது. மக்களின் கண்களுக்கு பக்தி மானாகத் தென்படும் ஒருவர் ஆசாடபூதியாக பொய்யொழுக்கம் பூண்டவராக இருத்தல் கூடும். அவரது நற்செயல்கள் யாவும் நடிப்பாக இருக்கலாம். அவரது இரட்டை வேடம் வெகுகாலம் நீடிக்காமல் நயவஞ்சகம் ஏதோவொரு வகையில் வெளிப்பட்டு விடலாம். இறுதியில் அவர் நரகில் நுழைவார். மனிதவிதி அவர் நேர்மையற்றவர் என்பதை வெளிப்படுத்திவிடுகிறது. ஈற்றில் அவர் தண்டிக்கப்படுகிறார். சந்தர்ப்ப சூழ்நிலையால் தீமை செய்யத் தூண்டப்படும் ஒருவர் நரகவாசிக்குரிய தீய செயல்களில் ஈடுபட்டபோதிலும், அவரது நேர்மையும் நற்செயல்களின்பால்*

*அவரது நாட்டமும் விதியின் வழிகாட்டலில் அவரை நன்மை செய்யத் தூண்டி அவரது நற்செயல்கள் ஈற்றில் அவரை சொர்க் கத்தில் கொண்டு சேர்க்கும்.*

### *ஹதீஸ் இலக்கம் 2 (மனிதனின் விதி))*

> நபிகளார் கூறினர்: ''தாயின் கருவறைக்கு அல்லாஹ் ஒரு மலக்கை நியமிக்கின்றான். அவர் ''எனது இரட்சகனே! இது 'நுத்ஃஃபா'. எனது இரட்சகனே! இது 'அலக்கஹ்'. எனது இரட்சகனே! இது 'முழ்கஹ்' என்று கூறுகிறார். அதன் சிருஷ்டியை அல்லாஹ் சித்தப்படுத்தியதும் மலக்கு கேட்கின்றார்: எனது இரட்சகனே! ஆணா பெண்ணா? அதிர்ஷ்டசாலியா துரதிர்ஷ்டசாலியா (ஷகிய் அல்லது ஸயீத்)? அதன் 'றிஸ்கு'எத்தகையது? அதன் ஆயுள் எத்தகையது?'' இவ்விதமாக அன்னையின் கருவறையிலேயே இவ்விடயங்கள் எழுதப்பட்டு விடுகின்றன.(36)

*இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர் இவ்வாறு செல்கின்றது: சுலைமான் இப்னு ஹர்ப் (ம. ஹி. 224) ஹம்மாத் இப்னு ஸைத் (ம. ஹி. 197) இடமிருந்து உபைதுல்லாஹ் இப்னு அபீபக்கர் இப்னு அனஸ் (ம. நிச்சயமில்லை) இடமிருந்து அனஸ் இப்னு மாலிக் (ம. ஹி. 93) இடமிருந்து நபிகளாரிடமிருந்து. அனஸ் இப்னு மாலிக்குக்குப் பின்னரான அறிவிப்பாளர் (சுலைமான், ஹம்மாத், உபைதுல்லாஹ்) மூவரும் முறையே 'திக்காஹ் இமாம் ஹாஃபிஸ்' (பரிபூரண ஆதாரபூர்வமானவர்), 'திக்காஹ் தப்த் பகீஹ்' (உண்மையான ஆதாரபூர்வ சட்டநிபுணர்), 'திக்காஹ்' (ஆதாரபூர்வமானவர்) என அறியப்படுபவர்கள்.*

*அல்-புஹாரி இந்த ஹதீஸை 'கித்தாப் அல்-ஹய்ல்', 'கித்தாப் அஹதீஸ் அல்-அன்பியா' ஆகியவற்றிலும் பதிவுசெய்துள்ளார். அனஸ் இப்னு மாலிக்கின் ஆதாரத்திலேயே இவை யாவும் பதிவாகியுள்ளன. இந்த ஹதீஸின் அறிவிப்புகளில் பெரும் பாலும் அதே சொற்பிரயோகங்களே இடம்பெற்றுள்ளன. எனவே இந்த அறிவிப்பில் எவரும் அர்த்த பேதம் காண முடியாது. இதே அறிவிப்பை முஸ்லிமும் தமது 'கித்தாப் அல்-கதரி'ல் பதிவுசெய்துள்ளார்.*

கருவின் ஆரம்ப கட்டத்தின் காலநீட்சியை இந்த ஹதீஸ் குறிப்பிடவில்லை. பால், உளச்சார்பு, ஜீவாதாரம், ஆயுள் முதலிய கர்ப்பப்பையில் உள்ள சிசுவின் ஆரம்ப வளர்ச்சியின் கால பரிமாணங்கள் குறித்து மௌனம் சாதித்தல் அறிவின்பாற் பட்ட தாகவே படுகின்றது. இந்த ஹதீஸ் 'செயல்' பற்றிக் குறிப்பிடாதது விசித்திரமாகும். மனித வாழ்வில் செயல் தீர்மானகரமானது. நபிகளாரே மனிதவிதியின் விவரங்களைப் பல்வேறு விதமாகக் கூறியிருக்கலாம் என ஒருவர் ஊகிக்கக்கூடும். மனிதர்களுடன் பேசும் போது சில சமயங்களில் மூன்று அம்சங்களை, சில சமயங்களில் நான்கை, சில சமயங்களில் ஆறை, வேறுயாருடனோ பேசும்பொழுது மேலதிகமான ஒன்றை சேர்த்தோ கூறியிருக்க லாம். இத்த கைய ஊகம் ஆதாரமற்றதாகும். இந்தத் தகவலை (சிசு கருத்தரிக்கப்பட்ட நிலையில் மனித விதி தீர்மானிக்கப் படும் விவகாரத்தை), அல்லாஹ்விடமிருந்தே நபிகளார் பெற்றி ருக்க வேண்டும். எனவே அவர்கள் இதனைத் தோழர்களுடன் பகிர்ந்துகொள்ளும்போது கூட்டிக்குறைத்துச் சொல்லியிருக்கலாம் எனக் கருதுவது தகாது.

இந்த ஹதீஸில் விடுபாடுகள் நேர்ந்திருப்பின் அது நபித்தோழர் களுக்குப்பின் வந்த அறிவிப்பாளர்கள் விட்ட தவறாகவே இருத்தல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட ஹதீஸைப் பொறுத்தமட்டில் நபிகளார் கூறியதை அனஸ் ஒருவேளை சுருக்கமான வடிவில் எடுத்துரைத்திருக்கலாம் எனவும் கொள்ளலாம்.

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊதின் ஆதாரத்துடன் அறிவிக்கப் பட்ட முதலாவது ஹதீஸைப் பரிசீலிக்கும்போது மனிதனின் விதிபற்றி சாத்தியமான விளக்கம் ஏற்கனவே தரப்பட்டுள்ளதால் அதனையே இங்கும் திருப்பிக் காணுதல் அவசியமில்லை.

### ஹதீஸ் இலக்கம் 3 (முன்தீர்மானிக்கப்படல்)

நபிகளார் கூறினர்: ''நீர் பெற்றுக்கொள்வதற்கு நியமமானது கொண்டு, எழுதுகோல் உலர்ந்துவிட்டது.''(37)

*அபூ ஹுரைராவின் அறிவிப்பில் இந்த ஹதீஸ் பதிவாகியுள்ளது. கித்தாப் 'அல்-கதரி'ல் இந்த ஹதீஸ் முழுமையாக இடம்பெறாததால், அல்-புஹாரி இதன் அறிவிப்பாளர் தொடரை முழுமையாகத் தரவில்லை. ஆனால் 'கித்தாப் அல்-நிக்காஹ்'வில் இந்த ஹதீஸ் முழுமையாகக் காணப்படுகின்றது. இந்த ஹதீஸின் நியாயமான புரிதலுக்கு முழு ஹதீஸையும் படித்தல் அவசியம்:*

> அபூ ஹுரைரா கூறியதாக எடுத்துரைக்கப்படுவதாவது: ''அல்லாஹ்வின் றஸூலே! நான் ஓர் இளைஞன். நான் தகாத உடலுறவில் ஈடுபட்டுவிடுவேனோ என அஞ்சுகிறேன். எனக்கு திருமணம் செய்துகொள்ள வசதியில்லை'' என நான் கூறினேன். அவர்கள் மௌனம் சாதித்தார்கள். நான் மறுபடியும் அதனைத் திருப்பிக் கூறினேன். அவர்கள் மௌனமாய் இருந்தார்கள். மீண்டுமொரு முறை அதனைத் திருப்பிக் கூறினேன். அப்போதும் அவர்கள் மௌனம் சாதித்தார்கள். திரும்பவும் ஒருமுறை நான் அவ்வாறு கூறவும், நபி (ஸல்) சொன்னார்கள்: அபூ ஹுரைரா! நீர் காயடித்துக் கொள்வீரோ இல்லையோ, நீர் அடைய வேண்டியது உமக்கு விதிக்கப்பட்டு எழுதுகோல் உலர்ந்து விட்டது.''[38]

*இதன் அறிவிப்பாளர் தொடர் ஆறு அறிவிப்பாளர்களைக் கொண்டது: அஸ்பக்ஹ் இப்னு ஃபர்ஜ் (ம. ஹி. 225) அப்துல்லாஹ் இப்னு வஹ்பிடமிருந்து, யூனுஸ் (ம. ஹி. 159) இடமிருந்து இப்னு ஷஹாப் அல்-ஸஹ்ரி (ம. ஹி. 125) இடமிருந்து அபூ ஸலாமா (ம. ஹி. 2) இடமிருந்து அபூ ஹுரைராவிட மிருந்து. இவர்கள் அனைவரும் மிகவும் ஆதாரபூர்வமானவர்கள்.*

*இந்த ஹதீஸ் பல கேள்விகளை யெழுப்புகின்றது. அபூ ஹுரைரா திருமணம் செய்து கொள்ள வசதியற்றுப் போனது ஏன்? வயிற்றுப்பாட்டுக்காக அவர் தொழிலெதுவும் செய்ய வில்லையா? அவர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்தவரா? 'ஆம்' எனில் ஏன்? அவர் தம் அன்றாடத் தேவைகளை எவ்வாறு நிவர்த்தி செய்து கொண்டார்? தனது தேவைகளுக்காகப் பிறரில் தங்கியிருக்க நேர்ந்ததா? செல்வம் படைத்தவர்கள் அவருக்கு உதவினார்களெனில், அவர் மணஞ்செய்து கொள்ள வசதி*

யற்றிருந்ததை அவர்கள் ஏன் கண்டுகொள்ளவில்லை? இக்கேள்வி களுக்கான விடைகளும் இது சம்பந்தமான வேறு கேள்விகளும் இந்த ஹதீஸை ஐயத்திற்குள்ளாக்குகின்றன.

அபூ ஹுரைரா மதீன இஸ்லாமிய சமூகத்தின் ஓர் உறுப்பினர். அவர்கள் ஒருவருக் கொருவர் உதவிசெய்ய எப்பொழுதும் தயாராயிருந்தவர்கள். அபூ ஹுரைரா பெருமானாரின் போதனை களைக் கற்பதிலும் மனனஞ்செய்வதிலும் அவற்றைப் பரப்பு வதிலும் தமது நேரத்தின் பெரும்பகுதியைச் செலவிட்டவர். அறிவு ஜீவிதத்தில் அவருக்கிருந்த ஈடுபாடு காரணமாக வேறு தொழில் புரிய வாய்ப்பில்லாமல் பிறர் தயவில் வாழவேண்டி யிருந்தது. அறிவுத் துறையில் அவரது ஈடுபாட்டையும் பங்க ளிப்பை யும் அறிந்தவர்கள் அவரை மதித்துப் போற்றியதுடன் பொரு ளுதவியும் வழங்கினர். அவரது அன்றாடத் தேவைகளை சமூகம் கவனித்துக் கொண்டதெனில், அவருக்கொரு வாழ்க்கைத் துணை தேவையென்பதை அந்தச்சமூகம் அறியாமல் இருந்திருக்க முடியாது.

‘மணமகன் மணப்பெண்ணுக்குக் குர்ஆனைக் கற்றுக்கொடுக்க வேண்டும். அதுவே மணப் பெண்ணுக்கு அவர் வழங்கும் மஹர்’ என்ற நிபந்தனையுடன் ஓர் ஏழையின் திருமணத்தை நபிகளார் நடத்திவைத்ததை புஹாரியே பிறிதோரிடத்தில் பதிவுசெய்துள் ளார்.(39) அபூ ஹுரைராவும் இவ்விதம் நடத்தப்படுவதற்கு முற்றி லும் தகுதியானவர்தான். இச்சங்கடமான நிலையிலிருந்து தமக்கு விமோசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே அபூ ஹுரைரா தமது கவலையை நபிகளாருடன் பகிர்ந்துகொண்டார்.

சிற்றின்ப வேட்கையிலிருந்து விடுபடுதற்கு காயடித்து வீர் யத்தை இழக்கச்செய்ய அபூ ஹுரைரா நபிகளாரின் அனுமதியை வேண்டியமை அவர் முகம்கொடுக்க நேர்ந்த சவாலையிட்டு பக்கம் பக்கமாய் பேசவல்லது. அபூ ஹுரைராவின் முறையீட்டை யும் வேண்டுகோளையும் பாரதூரமாய் எடுத்துக் கொள்ளாததை நபிகளாரின் எதிர்வினை காட்டுகின்றது. நபிகளார் இதனைச் சர்வ சாதாரணமாக முன்தீர்மானிக்கப்பட்ட விதியின் பயன் எனப்

*புறக்கணிப்பது கற்பனைக்குக் கூட ஒவ்வாத ஒன்று. எழுதப்பட்டது எதுவோ அது விதிப்படி சம்பவிக்கும்வரை அபூ ஹுரைராவைப் பொறுமை காக்கச் சொல்வது நபிகளாரின் பொதுவான அணுகு முறைக்கு நேர்மாற்றமானதாகும். உடனடியான தீர்வு கிட்டா விடின் ஏதேனும் விபரீதம் நேர்ந்துவிடக்கூடும் என அபூ ஹுரைரா அஞ்சினார். மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதல்லவா நபி களாரின் தலையாய கடன்? ''நீர் காயடித்துக் கொண்டாலும் இல்லாவிடினும் பாதகமில்லை'' என்ற கூற்று (காயடித்துக் கொள்வதில் ஏதும் தவறில்லை எனச் சுட்டுவது) இது குறித்த நபிகளாரின் தீர்ப்புக்கே விரோதமானதாகும். காயடித்துக் கொள்வ தற்கு அனுமதிகேட்ட உதுமான் இப்னு மஸ்ஊன் உட்பட தன் தோழர்களுக்கு நபிகளார் வழங்கிய தீர்ப்பு இதற்கு நல்ல உதார ணம்.[40] இப்னு மஸ்ஊனுக்குத் தவறானது அபூ ஹுரைராவுக்கும் தவறானதே. நபிகளார் இதற்கான முடிவை அபூ ஹுரைராவிடமே விட்டிருக்க மாட்டார் என்பதும் அவர் தமது பாலுறுப்பைச் சிதைக்க விரும்பியதை நபிகளார் நிச்சயம் அனுமதித்திருக்க மாட்டார்கள் என்பதுமே இதன் தர்க்கபூர்வமான முடிவு எனலாம்.*

*'உலர்ந்த எழுதுகோல்' என்ற பிரயோகம் குறித்து அல்-அய்னி சர்ச்சை கிளப்புகிறார். இது, 'எழுதப்பட்ட அல்லாஹ்வின் கட்ட ளையை மாற்றமுடியாது என்பதைக் குறிக்கின்றது' என்ற அல்-கர்மானியின் கருத்தை மறுதலிக்கும் முகமாக, ''அல்லாஹ் தான் நாடியதை அழித்துவிடுவான்; தான் நாடியதை வைத்துக்கொள் வான்'' (13: 39) என்ற இறை வசனத்தை மேற்கோள் காட்டுகிறார். இந்த இறைவசனத்தின்படி அல்லாஹ் மாற்ற விரும்பியதை மாற்றி விடுவான் என வாதிக்கின்றார் அல்-அய்னி. இவ்வாறு முன் தீர் மானிக்கப்பட்ட விதியென்பது நிலையானதல்ல, அல்லாஹ் நாடி னால் அதில் திருத்தங்கள் நேரலாம் என வலியுறுத்த முனைகிறார் அவர்.*

*இப்னு ஹஜர் முன்எழுதப்பட்டுவிட்ட விதி மாற்ற முடியாதது என்ற கருத்தை ஆதரிப்பதாகத் தெரிகிறது. இவ்வாதத்துக்கு வலுச் சேர்ப்பதற்காக, அல்-மாமூனுடைய காலத்தில் குராசானின்*

ஆளுநராக இருந்த அப்துல்லாஹ் இப்னு தாஹிருக்கும் அன்றைய அறிஞர்களுள் ஒருவரான அல்-ஹுஸைன் அல் ஃபத்லுக்கும் இடையே நடந்ததோர் உரையாடலை அவர் குறிப்பிடுகின்றார். ''எழுதப்பட்டுவிட்டதன் மீது அழுதுகோல் உலர்ந்துவிட்டது'' என்ற ஹதீஸுக்கும், ''தினந்தோறும் அவன் செயலாற்றுவதிலேயே இருக்கின்றான்'' *(55:29)* என்ற இறைவசனத்துக்கும் இடையே முன்னவர் முரண்பாடிருக்கக் கண்டு இது பற்றிப் பின்னவரிடம் விளக்கம் கேட்க அதற்கவர் ''இந்த வசனம் அல்லாஹ் வெளிக்குக் காட்டுவதைக் குறிக்கின்றதே தவிர புதிதாகச் சிருஷ்டிப்பதைக் குறிக்கவில்லை'' என்கிறார். இவ்விளக்கத்தைக் கேட்ட ஆளுநர் மெய்மறந்து அவ்வறிஞரின் நெற்றியில் முத்தமிட்டார்.[41] அல்-ஹுஸைனின் இவ்விளக்கத்தால் ஆளுநர் திருப்தியுற்றபோதும் இதனையே முடிந்த முடிவு என ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

அல்லாஹ் தொடர்ந்து விவகாரங்களை நெறிப்படுத்திக் கொண்டிருப்பதைக் குறிக்கும் இறை வசனங்கள் பல உள. உதாரணமாக, ''அவன் இன்னும் விவகாரங்களை ஒழுங்கமைத்துக் கொண்டிருக்கிறான்.''*(13:2)* ''வானிலிருந்து பூமி வரையுள்ள அனைத்து காரியங்களையும் அவனே நிர்வகிக்கின்றான்.'' *(32:5)* அப்துல்லாஹ் யூசுஃப் அலி இரண்டாவது இறைவசனத்தை பின்வரும் வார்த்தைகளில் விளக்குகிறார்: ''ஆதியில் அல்லாஹ்வின் சிருஷ்டிச் செயல் இருந்தது. அது இன்னும் தொடர்கின்றது. சகல விவகாரங்களிலும் அவனே வழிகாட்டவும் ஆட்சிபுரியவும் கட்டுப்படுத்தவும் செய்கிறான்.[42] இறைவசனம் **55:29** ஐ விளக்கும்போது அவர் கூறுவார்: ''எல்லா விவகாரங்களிலும் அல்லாஹ்வே இன்னும் நெறிப்படுத்தும் கரமாக விளங்குகிறான். மனிதன் மீதோ தனது ஏனைய படைப்புகள் மீதோ அக்கறையற்றவனாக அவன் ஒதுங்கியிருக்கவில்லை. அவனது இயக்கம் நாள்தோறும் மணித்தியாலங்கள் தோறும் கணங்கள்தோறும் புத்தொளியுடன் பிரகாசிக்கின்றது.''[43]

*இந்த அறிவிப்பில் நபிகளார் குறிப்பிடும் 'உலர்ந்த எழுதுகோல்' என்பதன் அர்த்தம், அல்லாஹ் ஒவ்வொன்றுக்கும் பொதுவான அடிப்படை சட்டங்களைத் தீர்மானித்துவிட்டான், முன்தீர்மானிக் கப்பட்ட இந்த விதிகள் நிலையானவை, எனினும் வாழ்வு சம்பந்தமான விவரங்களைப் பொறுத்த வரை சம்பந்தப்பட்ட நிலைமைக்கும் காலத்துக்கும் ஏற்புடையதாய் கணந்தோறும் அவை உருவாக்கப்படுகின்றன, எழுதப்படுகின்றன, திருத்தப்படு கின்றன, திரும்பவும் எழுதப்படுகின்றன என்பதாகும்.*

**ஹதீஸ் இலக்கம் 4 (மனிதனின் முன்தீர்மானிக்கப்பட்ட வகிபாகம்)**

*ஒரு மனிதர், ''அல்லாஹ்வின் றஸூலே! சொர்க்கவாசிகளை நரகவாசிகளிலிருந்து பிரித்தறிய முடியுமா?'' எனக் கேட்டார். நபிகளார், ''ஆம்'' என்றனர். ''மனிதர்கள் ஏன் நற்கருமங்களைச் செய்ய முயற்சிக்கின்றனர்?'' என அம்மனிதர் கேட்க, நபிகளார் கூறினர்: ''ஒவ்வொரு மனிதரும் எவற்றைச் செய்வதற்கென படைக்கப்பட்டாரோ அதைச் செய்வார். அல்லது அவர் செய்வ தற்கு எளிதாக்கப்பட்ட கருமங்களைச் செய்வார்.''(44)*

*இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர் வருமாறு: ஆதம் இப்ன் அபீ அயாஸ் (ம.ஹி.221) ஷுபாஹ்விடமிருந்து யஸீத் இப்னு அபீ யஸீத் அல்-ரிஷ்க் (ம.ஹி. 130) இடமிருந்து, முத்தர்ரிஃப் இப்னு அப்துல்லாஹ் (ம.ஹி. 220) இடமிருந்து, இம்ரான் இப்னு ஹுஸைன் (ம.ஹி. 52) இடமிருந்து. இவ்வறிவிப்பாளர்கள் அனைவரும் மிக நம்பகமானவர்கள்.*

*இப்னு ஹஜர், அம்மனிதரின் கேள்வி அல்லாஹ்வினால் எங்களுக்கு அறிவிக்கப்பட்ட மலக்குகள் அல்லது வேறு படைப் பினங்கள் சம்பந்தமாய், மக்களுள் நரகவாசிகளது அல்லது சொர்க்கவாசிகளது அடையாளம் குறித்தது என்கிறார்.(45) இது எத்தகைய ஆதாரமுமற்ற வெறும் ஊகமாகும். இப்னு ஹஜர் தான் வாழ்ந்த காலத்தில் காணப்பட்ட இரு பிரிவினர்க்கிடையே நிகழ்ந்துகொண்டிருந்த மத சர்ச்சைகளின் பாதிப்பினால் இவ்வாறு வலிந்து பொருள்காண எத்தனிப்பதாய்த் தெரிகிறது. இப்னு ஹஜர்*

(மானுட விடுதலையையும் சுதந்திர சிந்தனையையும் ஆதரித்த) கதரிய்யாக்களையோ, (முன்தீர்மானிக்கப்பட்ட விதியை ஆதரித்த) ஜபரிய்யாக்களையோ சாராதவர். இவர் இவ்விரு பிரிவினர்களது கருத்துகளுக்கும் மாற்றாக தமது பிரிவின் கருத்துக்கு வலுவூட்ட பெரும் பிரயத்தனம் மேற்கொள்வது இதிலிருந்து தெரிகிறது.

கேள்வி கேட்டவரின் நோக்கம் மனிதர்களின் செயல்களைக் கொண்டு அவர்களின் இறுதிமுடிவை அறிந்துகொள்ளலாமா என்பதேயன்றி 'ஃபத்ஹ் அல்-பாரி'யின் நூலாசிரியர் சொல்வது போல் அல்ல என்பது தெளிவு. இதற்கு நபிகளாரின் விடை உடன் பாடானதாகும். அதாவது தத்தமது செயல்களைக் கொண்டு சுவன வாசிகளும், நரகவாசிகளும் வித்தியாசமாகத் தோற்றுவார்கள் என்பதாகும். இரண்டாவது கேள்வி அல்-புஹாரி பதிவு செய் துள்ளதுபோல் ''மனிதர்கள் ஏன் (நல்)அமல் புரிய முயற்சிக் கிறார்கள்?'' என்று இருக்கமுடியாது. முஸ்லிம் பதிவுசெய்துள்ள, ''அப்படியாயின், செயல் எத்தகையதாய் இருத்தல் வேண்டும்?'' என்ற கேள்வியே அதிகம் பொருத்தமானதாகவும் அறிவுபூர்வ மானதாகவும் இருக்கும். புஹாரியின் கேள்வி ஒரு திசையிலும் முஸ்லிமின் கேள்வி இன்னொரு திசையிலும் இட்டுச்செல் கின்றது. இரண்டாமவர் பதிவு செய்துள்ள கேள்வி, அதனைக் கேட்டவர் சொர்க்கத்துக்கு தகுதிபெறுவதற்கு ஒருவர் எத்தகைய அமல் புரியவேண்டும் என அறிய அவாவுற்றதைச் சுட்டுகின்றது. அல் புஹாரியில் எடுத்தாளப்பட்டுள்ள கேள்விக்கும் முஸ்லிமில் எடுத்தாளப்பட்டுள்ள கேள்விக்குமிடையே உள்ள வேறுபாட்டை இப்னு ஹஜர் கண்டுகொள்ளாமல் விட்டது விசித்திரமே. இரண்டாவது கேள்விக்கு நபிகளாரின் விடையை இமாம் புஹாரி பதிவு செய்துள்ள விதமும் முஸ்லிம் பதிவு செய்துள்ள விதமும் பிரச்சினைக்குரியதாகும். புஹாரியின் பதிவில் நபிகளார் உப யோகித்த வார்த்தைகள் எவையென்பதில் அறிவிப்பாளரின் நிச்சய மின்மை தெரிகின்றது. முஸ்லிமின் பதிவில் அறிவிப்பாளர் எத்தகைய சந்தேகத்தையும் வெளியிடவில்லை. இவற்றில் முஸ்லி மின் அறிவிப்பே ஏற்புடைத்தானது. புஹாரியின் அறிவிப்பில் முஸ்லிமின் சொற்பிரயோகங்கள் பயன்பட்டுள்ளன. ஒவ்வொரு

*வரும் அவரவரது செயல்களுக் கேற்ப ஆதரவு அளிக்கப் பெறுவார். எனப் பெருமானார் கூறும்போது அன்னார் பின்வரும் திருமறை வசனங்களையே தெளிவாக்குகின்றார்கள்:*

*(1)* ''பின்னர், அதற்கு அதன் தீமையையும் அதற்குரிய நன்மையையும் உணர்த்தினான்'' (91:8).

*(2)* ''ஆகவே, எவர் பிறருக்கு வழங்கி, அல்லாஹ்வுக்குப் பயந்து தனக்கான இறுதி நன்மையில் நம்பிக்கை வைக்கிறாரோ, அவருக்கு இலேசானதை (சுவனத்தின் வழியை) நாம் எளிதாக்கி வைப்போம். ஆனால் எவர் உலோபத்தனம் செய்துகொண்டு (அல்லாஹ்விடமிருக்கும் நற்பேறுகளிலிருந்து தன்னைத்) தேவை யற்றவராகக் கருதுகின்றாரோ, அவருக்கு கஷ்டத்துக்கானதை (நரக வழியை) நாம் எளிதாக்கி வைப்போம்.'' (92: 5 - 10).

*மனிதன் நன்மை செய்யவும் தீமைசெய்யவும் சக்தி பெற்றிருக்கிறான் என்பதும் அவனது விருப்பத் தேர்வுக்கு மதிப்பளிக்கப்பட்டிருக்கின்றது என்பதும் இந்த இறைவசனங்களிலிருந்து தெளிவாகின்றது. அவன் நன்மை செய்ய நாடினால் அவனுக்கு உதவி கிட்டுகிறது. அவன் தீமை செய்ய முற்பட்டால் அது அவனுக்கு சுலபமாகிவிடுகிறது. அவன் நன்மைசெய்ய விரும்பினும் தீமைசெய்ய விரும்பினும் தெரிவு அவனுடையதே. முன் தீர்மானிக்கப்பட்ட விதிப்படி நடப்பதற்கு மனிதன் நிர்ப்பந்திக்கப்படுகிறான் என்ற வகையில் கருத்தாடுவது மேலே குறிப்பிடப்பட்ட திருமறை வசனங்களுக்குச் சவால்விடுவதாகும்.*

*இப்னு ஹஜர் இந்த ஹதீஸுக்கான விளக்கவுரையில், முஸ்லிமில் பதிவுசெய்ப்பட்டுள்ளவாறு, அபூ அல்-அஸ்வத் அல்-தவ்லிக்கும் இம்ரான் இப்னு ஹுஸைனுக்குமிடையே நடந்த உரையாடலை எடுத்தாள்கிறார். மனிதனின் செயல்கள் முன் தீர்மானிக்கப்பட்டவையா அல்லது நபியின் தூதை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் அவனது தெரிவைப் பொறுத்ததா என, மக்களின் செயல்கள் பற்றியும் முயற்சிகள் பற்றியும் இம்ரான் கேட்டார். அதற்கு அல்தவ்லி, ''செயல்கள் ஏற்கனவே முன் தீர்மானிக்கப் பட்டுவிட்டவை'' என்றார். ''இது மனிதனுக்கு இழைக்கப்படும்*

அநீதி'' என்றார் இம்ரான். அல்-தவ்லி, நடுக்க முற்றவராக, ''எல்லாமே அல்லாஹ் வின் சிருஷ்டிகளாகும். யாவுமே அவனது கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அல்லாஹ்வின் செயலுக்கு அவனிடம் கேள்விகேட்க முடியாது. ஆனால் மனிதர்களிடம் கேள்வி கேட்கப்படும்'' என்றார். இது கேட்டு, அல்-தவ்லியை வாழ்த்தி விட்டு, அவரது புரிதலைப் பரீட்சிப் பதற்காகவே தான் அவ்வாறு கேட்டதாகவும், வேறு தவறான நோக்குடன் அதனைக் கேட்க வில்லையென்றும் இம்ரான் கூறிவிட்டுப் பின்வரும் ஹதீஸை எடுத்துரைத்தார்:

முஸய்னா இனக்குழுவைச் சேர்ந்த இருவர் நபிகளாரைச் சந்தித்து அன்னாருடன் தங்களது ஆதங்கத்தைப் பகிர்ந்து கொண்டனர்: 'இம்மையில் மனிதர் கணந்தோறும் மேற்கொள் ளும் முயற்சிகள் முன்தீர்மானிக்கப்பட்டு விட்ட அவர்களது விதியின் வெளிப்பாடா அல்லது நபிமார்களின் தூதை ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்கும் ஏற்ப அவை மாற்றங்களுக் குள்ளாகுமா?' இதற்கு நபிகளாரின் பதில்: ''மனிதனது விதி ஏற்கனவே முன் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. குர்ஆன் இதனை உறுதிப்படுத்துகின்றது'' என்பதாகும்.[46]

முஸ்லிம் பதிவுசெய்துள்ள இவ்வறிவிப்பு எல்லா நபிமார்களது தூதும் அர்த்தமற்றது; மனிதருக்கு வழிகாட்டும் தூதர்களின் பாத்திரம் பிரயோசனமற்றது; மனிதர்கள் நல்வழி நடந்தாலும் அல்லது வழிகேட்டிலிருந்தாலும் எல்லாமே முன்தீர்மானிக்கப் பட்டுவிட்டவை யென்ற மனப் பதிவை யுண்டுபண்ணுகிறது. இது இறைமறையுடன் முரண்படுகின்றது. நபிமார்கள் ஒருவர்பின் ஒருவராய் அனுப்பிவைக்கப் பட்டதன் நோக்கம், மனிதர்களுக்கு வழிகாட்டுவதும் அவர்களிடம் அனுப்பி வைக்கப்பட்ட தூதை எதிர்கொள்ளும் விதத்தில்தான் அம்மக்களின் விதி தங்கியுள்ளது என்பதை மனிதர்க்கு உணர்த்துவதுமே என்பதை அல்லாஹ்வின் திருமறை அநேக இடங்களில் உணர்த்துகின்றது:

''நபிமார்களை (சுவனத்தைக் கொண்டு) நன்மாராயம் கூறவும் (நரகத்தைக் கொண்டு) எச்சரிக்கை செய்யவுமே அனுப்பி

வைத்தோம் - இத்தூதர்களின் வருகைக்குப்பின் மனிதர்கள் சாக்குப்போக்கு சொல்லாதிருப்பதற்காக. அல்லாஹ் யாவரையும் மிகைத்தவன்; யாவும் அறிந்தவன்'' (4:165).

''மனிதர்களே! உங்கள் இரட்சகனிடமிருந்து சத்தியத்துடன் ஒரு தூதர் உங்களிடம் வந்துள்ளார். எனவே அவர்மீது நம்பிக்கை வையுங்கள். அதுவே உங்களுக்குச் சிறந்தது. நீங்கள் நிராகரித்து விட்டால், நிச்சயமாக வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அல்லாஹ்வுக்கே உரியன'' (4:170).

''யார் வழிகாட்டப் பெறுகின்றாரோ அது அவரது நன்மைக்காக வாகும். யார் வழிகேட்டில் செல்கின்றாரோ, அவர் வழிகெடுவது தனக்காகவே (தீங்கிழைத்துக் கொள்ளத்) தான் (17:15).

*மனிதர்களிடம் தூதர்கள் அனுப்பிவைக்கப்பட்டது அவர் களுக்கு நல்வழி காட்டவும், நன்மையைத் தீமையிலிருந்து பிரித்தறிய அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவும்தான். மனிதன் நல்வழிப்படுவதும் நாசமுறுவதும் அவன் மேற்கொள்ளும் தெரிவிலேயே தங்கியுள்ளது.*

*அபூ அஸ்வத் அல்-தவ்லிக்கும் இம்ரான் இப்னு ஹுஸை னுக்குமிடையே நடந்த உரையாடலில், ''அல்லாஹ்விடம் கேட் கப்பட மாட்டாது. ஆனால் மனிதனிடம் கேட்கப்படும்'' என்று கூறுவது உண்மை. ஆனால் முன் தீர்மானிக்கப்பட்டவாறு மனிதர் செய்த செயல்களுக்காக எவ்வாறு அவர்களிடம் கேள்வி கேட்க லாம் எனத் திருப்பிக் கேட்கத் தோன்றலாம். தாம் நினைத்தவாறு நடப்பதற்கு மனிதர்க்குச் சுதந்திரமிருந்தால்தான் அவர்களிடம் கேள்வி கேட்பது தர்க்கப்படி ஏற்புடையதாக இருக்கும். சுயமாகச் செயல்படச் சுதந்திரமில்லாதபோது அவர்களின் செயல்களுக்காக அவர்களைத் தண்டிப்பது அநீதியன்றி வேறென்ன? முஸய்னா இனக்குழுவைச் சேர்ந்த இருவர், ''மனிதனின் செயல்கள் முன் தீர்மானிக்கப்பட்டு விட்டவைகளா அல்லது இறைதூதர்கள் காட் டிய வழியைத் தெரிவுசெய்வதற்கு மனிதர்க்குச் சுதந்திர முண்டா?'' எனக் கேட்பதாகக் கூறும் அறிவிப்பில் அக்கேள்வி*

*முற்றிலும் தத்துவார்த்தம் சார்ந்ததாக அமைந்துள்ளதோடு, இக் கேள்வி கேட்டவரின் விவேகத்தையும் குறிப்புணர்த்துகிறது. வஹி இறங்கிய காலத்தில் வாழ்ந்த இறையியல் ஞானமற்ற சாதாரண அரபிகள் விடுத்திருக்கக் கூடிய ஒரு வினாவல்ல இது. தமது சொந்த நலன்களில் அக்கறை கொண்ட சிலர், தமது நிலைப்பாட்டுக்கு நம்பகத் தன்மையை ஈட்டிக் கொள்வதற்காய், முஸைனாவின் இவ்விருவரையும் பேச வைத்திருக்கலாம் போல வும் தோற்றுகின்றது.*

*முஸ்லிமுடைய அறிவிப்பில், முன்தீர்மானிக்கப்பட்ட விதி யொன்று இருப்பதை நிறுவுதற்காக நபிகளார், ''அதன் நன்மை யையும் அதன் தீமையையும் அதற்கு உணர்த்தினான்'' (91:8) என்ற இறைவசனத்தை ஆதாரம் காட்டியதாகக் கூறப்படுகின்றது. எனினும், அது ஓர் ஆதாரமாக அமைவதாகத் தெரியவில்லை. நன்மை தீமை இரண்டையும் சுதந்திரமாகச் செய்வதற்கு மனித னுக்கு சக்தியுண்டு என்பதையே இறைவசனம் 91:8 குறிப்பிடு கின்றது. மனிதனின் இயல்பாயமைந்த ஆற்றல் அவனுக்கு இறைவன் வழங்கியதாகும்.*

*முஸ்லிமின் இந்த அறிவிப்பு ஹதீஸ் தொகுப்புகளின் ஏனைய ஐந்து ஆதாரநூல்கள் உட்பட எந்த ஹதீஸ் கிரந்தங்களிலும் இடம்பெறவில்லை யென்பது கவனத்திற்குரியது. குர்ஆனுடன் முற்றிலும் முரண்படும் தனித்தவொரு அறிவிப்பு நம்பகமற்றதே.*

### ***ஹதீஸ் இலக்கம் 6 (இயற்கையில் கள்ளங்கபடின்மை)***

*நபிகளார் கூறினர்: ''எல்லாக் குழந்தைகளும் இயற்கையி(ன் மார்க்கத்தி)ல் தான் பிறக்கின்றன. அதன் பெற்றோர்தான் அதனை யூதனாகவோ கிறிஸ்தவனாகவோ ஆக்கிவிடுகின்றனர். இது கால் நடைகள் அவற்றின் கன்றுகளை ஈனுவது போன்றது. அவற்றில் எவையேனும் காதுகள் துண் டிக்கப்பட்டனவாக நீங்கள் கண்ட துண்டா? நீங்களே அதன் காதுகளை வெட்டிவிடுகின்றீர்கள்.''(47)*

*இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை வருமாறு: இஷ்ஹாக் இப்னு இப்றாஹீம் (ம. ஹி. 238) அப்துல் றஸ்ஸாக் இப்னு ஹமாம்*

*(ம. ஹி. 211) இடமிருந்து மஃமர் இப்னு ராஷித் (ம. ஹி. 154) இடமிருந்து ஹம்மாம் இப்னு முனப்பிஹ் (ம. ஹி. 132) இடமிருந்து அபூ ஹுரைராவிடமிருந்து. இவ்வறிவிப்பாளர் அனைவரும் மிகவும் நம்பகமானவர்கள்.*

*இமாம் புஹாரி இதே ஹதீஸை கிதாப் அல்-ஜனாயிஸ் இல் அபூ ஹுரைராவின் மேற்கோளுடன் வேறு அறிவிப்பாளர் தொடர் மூலம் பதிவுசெய்துள்ளார். இந்த அறிவிப்பில் சிறிது வித்தியாசம் காணப் படுகின்றது. அது வருமாறு:*

*நபிகளார் கூறினர்: ''ஒவ்வொரு குழந்தையும் இயற்கையி(ன் மார்க்கத்தி)ல் பிறக்கின்றது. அதன் பெற்றோர்களே அதனை யூதனாகவோ கிறிஸ்தவனாகவோ மஜூஸியாகவோ மாற்றிவிடு கின்றனர். இது ஒரு பிராணி அதன் குட்டியை ஈனுவதுபோலாகும். அப்போது அதனை நீங்கள் காதுகள் துண்டிக்கப்பட்டனவாய்க் காண்கின்றீர்களா?''[48]*

*இந்த ஹதீஸ் ஏன் 'கித்தாப் அல்-கதரி'ல் சேர்க்கப்பட்டுள்ளதென ஒருவர் கேட்கக்கூடும். மனிதவிதி முன்தீர்மானிக்கப்பட்டது என்ற விவகாரத்தை இந்த ஹதீஸ் தொடவில்லை. மனித வாழ்வை விதி தீர்மானிக்கின்றது எனச் சொல்லாமல் குழந்தைகள் யூதனாகவோ கிறிஸ்தவனா கவோ மஜூஸியாகவோ மாறுவதற்கு பெற்றோரே காரணம் என்கிறது. எனவே ஒருவரின் மதநம்பிக்கையில் பெற் றோரின் நம்பிக்கை முக்கியமானது. முஸ்லிம் குடும்பத்தில் பிறந்த ஒரு குழந்தை பெற்றோரின் முயற்சியால் ஒரு முஸ்லிமாக வளர்க்கப்பட்டு முஸ்லிமாகின்றது. தாயின் கர்ப்பத்தில் குழந்தை யின் விதி முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு விடுகின்றது என்பது இங்கு எங்கே பொருந்துகின்றது? எனவே மனிதனின் விதி முன்தீர்மானிக்கப்பட்டு விடுகின்றது என்பதை வலியுறுத்தும் ஹதீஸ்களுடன் நபிகளாரின் கூற்றாக குறிப்பிடப்படுவது இங்கு முரண்படுகின்றது எனக் கொள்வதே தகும்.*

## *ஹதீஸ் இலக்கம் 8 (பிறர் உரிமைகளை அபகரிக்கத் தடை)*

*நபிகளார் கூறினர்: ''தன் சகோதரியின் வயிறை வெறுமையுறச் செய்து தனது திருமணத்தை ஏற்பாடு செய்வதற்காக, அவள் மணவிலக்கு செய்யப்பட வேண்டும் என எந்தப் பெண்ணும் எதிர்பார்க்கக்கூடாது. அவருக்கெனத் தீர்மானிக்கப்பட்டதை அவர் பெறுவார்.''*[(49)]

*இதன் அறிவிப்பாளர் தொடர் வருமாறு: அப்துல்லாஹ் இப்னு யூசுஃப் (ம. ஹி. 218) மாலிக் இப்னு அனஸிடமிருந்து, அபூ அல்-ஸினாத் அப்துல்லாஹ் இப்னு ஸக்வான் (ம. ஹி. 130) இடமிருந்து அப்துல்லாஹ் இப்னு ஹுர்முஸ் அல் அஃராஜ் (ம. ஹி. 117) அபூ ஹுரைராவிடமிருந்து, நபிகளாரிடமிருந்து. எடுத்துரைப்பாளர்கள் அனைவரும் மிகவும் நம்பகமானவர்கள். அபூ ஹுரைராவின் ஆதாரத்தில். ஆனால் வேறு அறிவிப்பாளர் தொடரில் அல்-புஹாரி இதே ஹதீஸை நான்கு இடங்களில் பதிவுசெய்துள்ளார்.*[(50)]

*திருமண விடயத்தில் அல்லாஹ்மீது நம்பிக்கை வைத்து முயற் சிக்குமாறு இந்த ஹதீஸ் முஸ்லிம் பெண்களுக்கு அறிவுறுத்து கின்றது. பிறருடையதைப் பறித்தெடுப்பதற்கு அனுமதியில்லை. நேர்மையான முறையில் ஒருவர் முயற்சிக்க வேண்டும். பெண் களுக்குப் பொருத்தமான துணை கிடைக்காமை நவீன சமுதாயத் தின் பிரச்சினைகளிலொன்று. இது திருமணமாகாத ஆண் பெண் கள் மத்தியில் பொறாமையைத் தூண்டிவிடுகின்றது. மேலும், ஆண் பெண்கள் கலந்து பழகும் சூழலில் பெண்கள், திருமண மான ஆண்களின் பால் ஈர்க்கப்படுவதற்கு இடமுண்டு. சில சந்தர்ப்பங்களில் மற்றொருவரின் கணவரைக் கவர்ந்து கொள்ள வும் மணமாகாது காத்திருக்கும் ஒரு பெண் தூண்டப்படக் கூடும். சகோதரனின் மனைவியை மணந்துகொள்ளும் நோக்குடன் அவளை மணவிலக்கு செய்யுமாறு சகோதரனை வலியுறுத்தும் ஆணுக்கும் இது பொருந்தும்.*

## ஹதீஸ் இலக்கம் 9 (அல்லாஹ்வே அனைத்துக்கும் உரிமையாளன்)

ஒருமுறை நபியின் புதல்வியருள் ஒருவர் தனது மகன் மரணத் தருவாயில் இருப்பதாகவும் நபிகளாரை வருமாறும் ஒரு தூதுவர் மூலம் செய்தியனுப்பினார். அதற்கு நபிகளார் அத்தூதுவர் மூலம் தம் மகளாருக்குப் பின்வருமாறு ஆறுதல் மொழி கூறியனுப்பி னார்கள்: *''அல்லாஹ்விடம் கருணையை எதிர்ப்பார்த்து அமைதி யாய் இருங்கள். நேரம் குறித்தபடியே எல்லாம் நடந்தேறுகின்றது. அல்லாஹ் தருவதும் எடுத்துக்கொள்வதும் அவனுக்கே சொந்த மானது.''*

இந்த ஹதீஸின் எடுத்துரைப்பாளர் தொடர் வருமாறு: மாலிக் இப்னு இஸ்மாயில் (ம. ஹி. 217) இஸ்ராயில் இப்னு யூசுஃப் (ம. ஹி. 160) இடமிருந்து, ஆஸிம் இப்னு சுலைமான் (ம. ஹி. 140) இடமிருந்து, அபூ உதுமான் அப்துல் றஹ்மான் அல்-நஹ்தி (ம. ஹி. 93) இடமிருந்து, உதுமான் இப்னு ஸைத் (ம. ஹி. 54) இடமிருந்து. இவ்வெடுத்துரைப்பாளர்கள் அனைவரும் மிகவும் ஆதாரபூர்வமானவர்கள்.

இதே ஹதீஸை இமாம் புஹாரி மேலும் ஐந்து இடங்களில் பதிவுசெய்துள்ளார்.[51] எல்லா அறிவிப்புகளிலும் குறிப்பிடப்படும் சம்பவத்தை இவ்வாறு தொகுத்து அமைக்கலாம்: நபிகளாரின் புதல்வியரில் ஒருவர் தமது மகன் மரணப்படுக்கையில் இருப்ப தாகவும் விரைந்து வருமாறும் ஒரு தூதுவர்மூலம் நபிகளாருக்குச் செய்தியனுப்புகிறார். நபிகளார் அத்தூதுவர் மூலம் தம் மகளா ருக்கு இவ்வாறு ஆறுதல்மொழி சொல்லியனுப்புகிறார்: *''நிச்சய மாக அல்லாஹ் அவனுக்குச் சொந்த மானதை எடுத்துக் கொள்கி றான். அவன் தந்தது அவனுக்கே சொந்தம். அவனது எல்லாப் பொருளுக்கும் நேரம் குறிக்கப்பட்டிருக்கின்றது. அல்லாஹ்வின் கருணையை எதிர்பார்த்துப் பொறுமையாய் இருங்கள்.''* நபி களாரை வருமாறு மகளார் மீண்டும் செய்தியனுப்ப, நபியவர்கள் ஸஅத் இப்னு உபாதா, முஆத் இப்னு ஜபல், உபை இப்னு கஅப், ஸய்த் இப்னு தாபித் இன்னும் பலருடன் அங்கு சென்றார்கள். இறுதிமூச்சு விட்டுக்கொண்டிருந்த குழந்தை நபிகளாரின் மடியில்

*வைக்கப்பட்டது. நபிகளாரின் கண்களில் நீர் மல்கியது. ''அல்லாஹ் வின் றஸூலே! என்ன இது?'' என ஸஅத் கேட்க, நபிகளார் கூறினர்: ''இது அல்லாஹ் தன் அடியார்கள் உள்ளத்தில் சுரக்க வைத்துள்ள கருணை. கருணையுள்ள அடியார்களின்மீது அல்லாஹ் தன் கருணையைச் சொரிகிறான்.'' இந்த ஹதீஸ் பல செய்திகளை அறிவிக்கின்றது. முதலாவது செய்தி மரணம் நிச்சயம். இரண்டாவது, மனிதனின் வாழ்வு அல்லாஹ்வுக்குச் சொந்த மானது. தான் விரும்பியவாறு அதனை நீடிக்கச் செய்வது அவனது உரிமை. மூன்றாவது, அல்லாஹ்வினால் குறிக்கப்பட்ட நேரத்தில் ஒருவரின் மரணம் சம்பவிக்கின்றது. நான்காவது, மரணிப்பவரின் உறவினர்கள் பொறுமை காத்து அல்லாஹ்விடமிருந்து நன்மையை எதிர்பார்க்க வேண்டும். ஐந்தாவது, மரணப்படுக்கையில் இருக்கும் ஒருவரைப் போய்ப்பார்ப்பது நல்லதொரு நடைமுறையாகும். ஆறாவது, அல்லாஹ் மனிதர்களை இளகிய மனம் கொண்ட வர்களாகப் படைத்துள்ளான். ஏழாவது, பிறர்மீது இரக்கம் காட்டுவோர் மேல் அல்லாஹ் இரக்கம் கொள்கிறான்.*

### ***ஹதீஸ் இலக்கம் 11 (நபிகளாரின் தீர்க்கதரிசனங்கள்)***

*ஹூதைஃபா இப்னு அல்-யமான் அறிவிக்கின்றார்.*

*''நபிகளார் எமக்கு நிகழ்த்திய உபந்நியாசமொன்றில் உலக முடிவு நாள்வரை நிகழப் போகிறவைகளை ஒன்றுவிடாமல் குறிப்பிட்டார்கள். அவற்றைப் புரிந்துகொண்டோர் அவற்றை நினைவில் வைத்துக்கொண்டனர். அவற்றைப் புறக்கணித்தோர் அவற்றை மறந்துவிட்டனர். நான் எதனையும் கண்டால், அதனை மறந்திருப்பினும் நினைவுபடுத்திக் கொள்வேன் - நீண்ட காலத் திற்குப்பின் மீண்டும் சந்திக்கும் ஒருவரை அடையாளம் காண்பது போல.''(52)*

*இதன் அறிப்பாளர் வரிசை வருமாறு: மூசா இப்னு மஸ்ஊத் (ம. ஹி. 220) சுஃபியான் அல்-ஸவ்ரியிடமிருந்து, சுலைமான் அல்-அமாஷிடமிருந்து, அபூ வாயில் ஷக்கீக் இப்னு ஸலாமா (ம.ஹி. 100) இடமிருந்து, ஹுதைஃபா இப்னு அல்-யமான் (ம. ஹி. 36) இடமிருந்து.*

மூசா இப்னு மஸ்ஊதின் பெயர் இடம்பெற்றிருப்பதால் இந்த அறிவிப்பு மிகவும் பலவீனமான தாய்த் தெரிகின்றது. அநேகமான ஹதீஸ் நிபுணர்கள் இவர் குறித்து சாதகமான கருத்துகள் தெரிவித்ததில்லை. பன்தார் ஹதீஸ் அறிவிப்பில் இவர் பலவீன மானவர் என்கிறார். ஹதீஸ் எழுதிய இவர் பின்னர் அவற்றைக் கைவிட்டு விட்டார். அபூ ஹாத்திம், இவர் ஸவ்ரியிடமிருந்து அறிவிப்பதில் மிகவும் பிரபலமானவர் எனினும், அழுத்தக் குறிகளை இடம் மாற்றி வைப்பதன் மூலம் (தஷிஃப்) இவர் ஹதீஸ்களைத் திரித்துக் கூறுவதாகச் சொல்கிறார். அல்-திர்மிதி யின் அபிப்பிராயப்படி இவர் பலவீனமானவர். அபூ ஹிப்பான் இவரை ஆதாரபூர்வமான அறிவிப்பாளர் பட்டியலில் சேர்த்துள்ள போதும் இவர் பிழைவிடக்கூடியவர் என்பதை ஒப்புக்கொள் கிறார். ஹதீஸ் துறையில் ஆழ்ந்த புலமையுள்ளவர்கள் எவரும் இவரிடமிருந்து அறிவிக்கமாட்டார்கள் என அம்ர் இப்னு அலி அல்-ஃபல்லாஸ் அறிவிக்கின்றார். இப்னு குதைமா இவர் நம்பகமானவரல்லர் என்கிறார். அபூ அஹ்மத் அல்-ஹாகிம் இவர் பலவீனமானவர் என்கிறார். அபூ அப்துல்லாஹ் அல்-ஹாகிம், இவர் அநேக பிழைகள் விட்டுள்ளார் எனவும் இவரது நினை வாற்றல் குறைபாடுடையது எனவும் கூறுகிறார். அவர் ஹதீஸ்களை திரிபுபடுத்திக் கூறுபவர் என்பது அல்-ஸாஜியின் அவதானம்.[53] மூசாவின் ஆதாரம் வெகு பிரபலமான சுஃபியான் அல்-ஸவ்ரி அல்லர், அவர் வேறொருவர் என்கிறார் அஹ்மத் இப்னு ஹன்பல்.[54] ஹதீஸ் துறையைச் சேர்ந்த சில பேரறிஞர்களின் அவதானம், மூசாவின் நிலையையிட்டு சந்தேகத்தையுண்டுபண்ணுவதுடன் அவர் நம்பகமானவர் அல்லர் என்கிறது. எனவே இந்த ஹதீஸை இமாம் புஹாரி பதிவுசெய்துள்ளபோதும் இதனை ஆதாரபூர்வ மானதாய்க் கருத வேண்டியதில்லை.

மேலும், இந்த அறிவிப்பின் சொற்பிரயோகங்கள் இதனைச் சந்தேகத்திற்குரியனவாக்குகின்றன. உலக முடிவு நாள்வரை நிகழப் போகும் அனைத்து சம்பவங்களையும் நபிகளார் விவரித்ததாக இந்த அறிவிப்பு கூறுகின்றது. அப்படியாயின் நபிகளாரின் உபந்நியாசம் ஒரு நீண்ட உரையாக அமைந்திருக்கும். அதனை

நிகழ்த்தி முடிப்பதற்கு வாரக்கணக்கான அல்லது மாதக் கணக் கான நாட்கள் எடுத்திருக்கும். இது மிகைப்படுத்தப்பட்ட அசாதா ரணமான ஒன்று என்பதில் ஐயமில்லை. நபிகளாரின் வரலாற்றில் அவர்கள் அத்தகைய நீண்ட உரையொன்றை நிகழ்த்தியதாக எந்தக் குறிப்பும் இல்லை. மேலும் நபிகளார் இத்தகைய தேவை யற்ற காரியமெதையும் செய்திருக்கமாட்டார்கள். வருங்காலத்தில் நடைபெறப் போகும் நிகழ்வுகள் அனைத்தும் நபிகளார் குறிப் பிட்டார்களெனில் அதன் பின்னாலுள்ள அறிவுபூர்வமான காரணி யாது? அவர்களின் தூதுத்துவப் பணியின் நோக்கமெதுவும் இதனால் நிறைவேறியிருக்க முடியுமா? எனினும் வருங்காலத்தில் இடம்பெறப்போகும் சில முக்கிய நிகழ்வுகளை அன்னார் குறிப்பிட்டிருக்கும் சாத்தியங்கள் உள்ளன.

அல்-புஹாரி இன்னொரு அறிவிப்பை, உமர் இப்னு அல்-கத் தாபின் ஆதாரத்தில், ‘கித்தாப் பத்உ அல்-கல்கு’வில் பதிவு செய்துள்ளார். அது வருமாறு: ‘‘நபிகளார் எம்முன்னால் நின்று, படைக்கப்பட்ட நாள்தொட்டு மனிதர்கள் நரகத்திலும் சொர்க் கத்திலும் நுழையும் நாள்வரை நடக்கப் போகின்ற பல விஷ யங்களை எமக்கு அறிவித்தார்கள். அதனை நினைவில் வைத்தி ருப்பவர்களும் உண்டு. மறந்துவிட்டவர்களும் உண்டு.’’(55) இந்த அறிவிப்பு முன்னையதைப் போன்று உயர்வு நவிற்சியானதல்ல. வருங்காலம் சம்பந்தப்பட்ட சில விடயங்களை அவர்கள் தம் தோழர்களுடன் பகிர்ந்துகொண்டார்கள் என்பதை ஏற்றுக்கொள் வதில் ஏதும் பிரச்சினையில்லை. அறிவிப்பில் குறிப்பிடப்படு வதுபோன்று சிலர் அதை நினைவில் வைத்திருந்தனர். சிலர் அதனை மறந்து விட்டனர். இப்பொழுது எழும் கேள்வி: அதனை நினைவில் வைத்திருந்தோர் மக்களுக்கு அறிவித்தனரா? ‘‘ஆம்’’ எனில் அந்த அறிவிப்புகள் எங்கே? நபிகளாரின் தீர்க்கதரிசனங் கள் ஹதீஸ் நூல்களில் மலிந்து காணப்படுகின்றன. அத்தகைய தீர்க்கதரிசனங்கள் காணப்படாமை இந்த அறிவிப்பை சந்தேகத்திற் குரியதாக்குகின்றது. அல்-புஹாரி தான் உபயோகித்துள்ள அறி விப்பாளர் தொடரில் மூசா இப்னு மஸ்ஊத் என்ற அறிவிப்பாள ரின் நம்பகத்தன்மையை ஆராயாமல்விட்டது விசித்திரமாகும்.

*ஹதீஸ் இலக்கம் 12 (முன்தீர்மானிக்கப்பட்டுவிட்ட இறுதி முடிவு)*

*அலி (றலி) அறிவிக்கின்றார்கள்:*

''நாங்கள் நபிகளாருடன் அமர்ந்திருந்தோம். அவர்கள் தம் ஊன்றுகோலால் நிலத்தில் தட்டிக்கொண்டு தலையை உயர்த்திக் கூறினார்கள்: உங்களில் ஒவ்வொருவருக்கும் நரகிலோ சொர்க் கத்திலோ முன்கூட்டியே ஓரிடம் தீர்மானிக்கப்பட்டு விட்டது. அப்பொழுது ஒருவர் திருப்பிக்கேட்டார்: ''அல்லாஹ்வின் றஸூலே! அப்படியாயின் நாம் (எமது) விதிக்கு விட்டுக் கொடா மல் இருக்கமுடியாதல்லவா?'' நபிகளார் கூறினர்: ''இல்லை. நீங்கள் செயல் ஆற்ற வேண்டும். உங்களில் ஒவ்வொருவருக்கும் அவரவர் செல்லும் வழி எளிதாக்கப்பட்டுள்ளது.'' பின்னர் நபிகளார் இந்த இறைவசனத்தை ஓதிக்காட்டினார்கள்: ''ஆகவே எவர் (பிறருக்கு) வழங்கி, அல்லாஹ்வுக்குப் பயந்து, தமக்கான இறுதி நன்மையில் உண்மையில் நம்பிக்கைவைக்கின்றாரோ அவருக்கு (இறுதி) சுகத்துக்கான பாதையை நாம் எளிதாக்கி வைப்போம். (92: 5-7)[56]

*இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர்: அப்தான் அப்துல்லாஹ் இப்னு உதுமான் (ம. ஹி. 221) அபூ ஹம்சா முஹம்மத் இப்னு மைமூன் (ம. ஹி. 168) இடமிருந்து, சுலைமான் அல்-அமாஷிட மிருந்து, ஸஅத் இப்னு உபைதா (ம. நிச்சயமில்லை ஹி. 100க்குப் பின்) இடமிருந்து, அபூ அப்துல் றஹ்மான் அப்துல்லாஹ் இப்னு ஹபீப் (ம. ஹி. 70) இடமிருந்து அலி இப்ன் அபூ தாலிபிடமிருந்து. இவர்கள் அனைவரும் மிகவும் நம்பகமானவர்கள்.*

*இந்த ஹதீஸின் அறிவிப்புகள் மேலும் எட்டு இடங்களில் சிற் சிறு வேறுபாடுகளுடன் இடம்பெற்றுள்ளன.[57] இந்த ஹதீஸின் அறிவிப்புகள் யாவும் பிரதானமாக ஸஅத் இப்னு உபைதா, அபூ அப்துர் ரஹ்மான், அலி ஆகிய மூன்று ஆதாரங்களோடு அறி விக்கப்பட்டுள்ளன. இந்த அறிவிப்புகளில் பிரதான வேறுபாடு நபிகளாரின் முதல் கூற்றில் காணப்படுகின்றது. ஹதீஸின் ஒன்பது*

அறிவிப்புகளில் மூன்றில் மட்டுமே, ''உங்கள் ஒவ்வொருவருக்கும் நரகிலோ சொர்க்கத் திலோ ஓரிடம் முன்கூட்டியே தீர்மானிக் கப்பட்டுவிட்டது'' என்ற வாசகம் குறிப்பிடப்படுகின்றது. எஞ்சிய ஆறு அறிவிப்புகளில் இது ''உங்களில் ஒவ்வொருவருக்கும் நரகில் ஓர் இடமும் சொர்க்கத்தில் ஓர் இடமும் ஒதுக்கப்பட்டுள்ளன'' என்ற கூற்று காணப்படுகின்றது. 'கித்தாப் அல்-கதரி'ல் இடம் பெற்றுள்ள முந்திய அறிவிப்பு ஒருவரின் இறுதி முடிவு நரகமா சொர்க்கமா என்பது முன்தீர்மானிக்கப்பட்டுவிட்ட விவகாரம் என்கிறது. ஒவ்வொரு மனிதனின் இறுதி முடிவும் ஏற்கனவே முன்தீர்மானிக்கப்பட்டு விட்டதாக இதனால் அர்த்தமாகின்றது. இவ்வகையான விளக்கங்களையிட்டு ஏற்கனவே விரிவாக ஆராய்ந்துள்ளோம். இதன்படி முன்தீர்மானிக்கப்பட்டு விட்ட தென்பது மனிதனுக்கும் அவன் பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற தகைமைக்கும் இழைக்கப்படும் மாபெரும் அநீதியாகும். நபிகள் கூறியதாகச் சொல்லப்படும் இந்த ஹதீஸை ஆதாரபூர்வ மானதென நாம் ஏற்றுக்கொள்வதற்கு எந்தக் காரணமும் இல்லை. மற்ற ஆறு அறிவிப்புகளில் அறிவிக்கப்பட்டுள்ளவாறு, ''உங்களில் ஒவ்வொருவருக்கும் சொர்க்கத்தில் ஓர் இடமும் நரகத்தில் ஓர் இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது'' என்பது நியாயமானதாகப்படு கிறது. மனிதனின் தீயசெயல்கள் அவனை நரகில் கொண்டு சேர்க்கும் என்றும் அவனது நற்கருமங்கள் அவனை சொர்க்கத் துக்கு இட்டுச்செல்லும் என்றும் குர்ஆன் திரும்பத் திரும்ப அறிவுறுத்துகின்றது. உதாரணமாக: (1) ஆம். எவர் தீமையைச் சம்பாதித்து அவரது குற்றச்செயல்கள் அவரைச் சூழ்ந்துகொண் டதோ அவர்கள் நரகவாசிகளே. அவர்கள் நிரந்தரமாக அதில் தங்கிவிடுவர்(2:81). (2) எவர் தீமை புரிகிறாரோ அவர் அதற்குச் சமானமானதையே கூலியாகப் பெறுவார். எவர் - ஆணாயினும் அல்லது பெண்ணாயினும் - விசுவாசியாக இருந்து நற்கருமங்கள் செய்தாரோ, அவர்கள் சுவனபதியில் நுழைவார்கள். அங்கு (சுவனத்தின் அருட்கொடைகளிலிருந்து) அவர்கள் கணக்கின்றி கொடுக்கப் படுவார்கள் (40:40).

இந்தத் திருமறை வசனங்களிலிருந்து, ஒவ்வொருவருக்கம் சுவனத்தில் அல்லது நரகில் இடமொதுக்கப்பட்டுள்ளது என்ற அறிவித்தல் சரியெனப்படுகின்றது. இதில் ஒன்றை அல்லது மற்றதை அடைவதற்கான தகுதி மனிதன் புரியும் செயல்களில் தங்கியுள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக 'கிதாப் அல்-கதரி'ல் இடம்பெற்றுள்ள அறிவிப்பு குர்ஆனுக்கு முற்றிலும் மாறான தாகும். எனவே சரியாக அறிவிக்கப்பட்ட ஒரு ஹதீஸாக இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள இயலாது.

கேள்வி அதனைக் கேட்டவரின் தவறான புரிதலைச் சுட்டு கிறது. சுவர்க்கத்திலோ நரகத்திலோ ஒருவரின் இடம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்பதால் அவர் என்ன செயல் புரிகிறார் என்பது பொருட்டாக அமைவதில்லை என அவர் நினைத்திருக்கக் கூடும். நபிகளார் அளித்த விடை கேள்வி கேட்டவரின் தவறான புரிதலை வெளிப்படுத்துகின்றது. ''இல்லை. நீங்கள் செயல் புரியவேண்டும். ஏனெனில், நீங்கள் ஒவ்வொரு வரும் உங்களின் இறுதி முடிவு நோக்கி எளிதாக வழிநடத்தப் படுவீர்கள்'' என நபிகளார் அழுத்தந்திருத்தமாகக் கூறுகின்றனர். இந்தக் கூற்று மனிதன் தனது முன்தீர்மானிக்கப்பட்ட விதிப்படி நடப்பவன் என அர்த்தப்படவில்லை. தங்களின் கருத்தை உறுதிப்படுத்துவதற்காக நபிகளார் இறைவசனங்களை எடுத்தாள் கின்றமை எத்தகைய குளறுபடிக்கும் இடமில்லாமல் செய்துவிடு கின்றது. மனிதன் மேற்கொள்ளும் தெரிவுக்கேற்ப அவனது வழி அவனுக்கு எளிதாக்கி வைக்கப்படுகின்ற தென்பதையே இத் திருவசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. அதுபோன்று அல்லாஹ் வின் தூதை மறுதலித்து, நல்வழி நடவாமல், பிறர்க்குதவாமல் வாழும் ஒருவரின் நரகத்துக்கான பாதையும் அவருக்கு எளிதாக்கி வைக்கப் படும்.

மூன்று அறிவிப்புகளில் (ஹதீஸ் இலக்கங்கள் 1362, 4948, 4949) பின்வரும் கூற்று நபிகளாருடையதாக அறிவிக்கப்பட்டுள்ளது: ''நற்கூலி வழங்கப்பட்டோரில் ஒருவர் (அஹ்லுல் ஸஆதா) நேர்வழி நடக்கும்படி ஆசீர்வதிக்கப்படுவார். சபிக்கப்பட்டவர்

*(அஹ்லுல் ஷகாஅ) பாவச் செயல் புரிவதில் எளிதாக்கி வைக்கப்படுவார்'' இந்தக் கூற்றில் நற்கூலிக்கும் சாபத்துக்குமான இருநிலைகள் முன்தீர்மானிக்கப்பட்டவை என்ற குறிப்பு எங்கிலும் இல்லை. நேர்மையாக வாழ முயற்சிப்போர் ''அஹ்லுல் ஸஆதா'' ஆவர். தீய வழியில் செல்வோர் 'அஹ்லுல் ஷகாஅ' எனக் கருதப்படுவர். இந்தப் புரிதலுக்கும் நபிகளார் எடுத்தாண்ட இறைவசனங்களுக்கு (92:5-7) மிடையே பூரண இணக்கப்பாடு காணப்படுகின்றது.*

*இந்த ஹதீஸின் இரு அறிவிப்புகளில் (ஹதீஸ் இலக்கங்கள் 1362, 4948) நபிகளார் கூறியதாக இடம்பெற்றுள்ள (வ இல்லா கத் குதிபத் ஷகிய்யாஹ் அவ் ஸஈதா) ''முன்தீர்மானிக்கப்படாத, சபிக்கவோ ஆசீர்வதிக்கவோ படாத மனிதப் பிறவி எவருமே இல்லை'' என்ற கூற்று மனித விதி முன்தீர்மானிக்கப்பட்டது என்பதற்குச் சான்றாக எடுத்தாளப்படுகின்றது. இது இவ்வாறு தென்படினும் இதற்கு வேறுவிதமாகவும் பொருள் கொள்ளலாம்.*

*இறுதித் தீர்ப்புநாள் பற்றிய இறைவசனங்கள் பொதுவாக இறந்த காலத்தில் எடுத்துரைக்கப்படுகின்றன என்பதை மனங்கொண்டால், மனிதன் தன் செயல்கள் காரணமாக நற்கூலி வழங்கப்பட்டோரில் உள்ளவனாகவோ அல்லது சபிக்கப்பட்டோரில் உள்ளவனாகவோ ஆகிவிடுவது நிச்சயம் என நாம் கருத்துக் கொள்ளலாம். இறந்த காலம் சில சமயங்களில் குறிப்பிட்டவொரு விவகாரத்தின் உறுதிப்பாட்டை வலியுறுத்துவதற்காகப் பிரயோகிக்கப்படுகிறதென்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.*

## *ஹதீஸ் இலக்கம் 13 (நரகத்தின் தோழர்கள்)*

*கைபர் முற்றுகையின்போது தானொரு முஸ்லிம் எனச் சொல்லிக்கொண்ட ஒரு போராளியை நபிகளார், நரகவாசி என்றனர். இப்போரில் இம்மனிதர் வீர தீரத்துடன் போர் புரிந்து படுகாயமுற்றார். அவர் வீரமுடன் போராடிப் படுகாயமுற்றதைக் கண்டவர்கள் நபிகளாரிடம் போய் அதனை அறிவித்தனர். நபிகளார் அவர் நரகவாசியென்பதை மீண்டும் உறுதிப்படுத்தினர். இதனைக்*

கேட்டு சில முஸ்லிம்கள் பெரிதும் சங்கடப்பட்டனர். அதேவேளை படுகாயமுற்ற அம்மனிதர் வலிதாங்க முடியாமல் அம்பொன்றைத் தன் கழுத்தினுள் செலுத்தி தற்கொலைசெய்து கொண்டார். சில மனிதர்கள் நபிகளாரிடம் விரைந்து ''அல்லாஹ்வின் றஸூலே! நீங்கள் சொன்னதை அல்லாஹ் உறுதிப்படுத்திவிட்டான்'' என இதனை அறிவித்தனர். இதனைக் கேட்ட நபிகளார் பிலாலிடம் இவ்வாறு அறிவிக்குமாறு வேண்டினார்: ''விசுவாசியைத் தவிர வேறெவரும் சுவர்க்கம் புக மாட்டார். நிச்சயமாக அல்லாஹ் பாவியான மனிதன் மூலமும் இஸ்லாத்துக்கு வலுவூட்டு கின்றான்.''[58]

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர்: ஹிப்பான் இப்னு மூசா (ம. ஹி. 233) அப்துல்லாஹ் இப்னு அல்-முபாரக்கிடமிருந்து, மஃமர் இப்னு ராஷிதிடமிருந்து, முஹம்மத் இப்னு முஸ்லிம் இப்னு அல்-ஷிஹாப் அல்-ஸுஹ்ரியிடமிருந்து, ஸயீத் இப்னு அல்-முஸய்யிப் (ம. ஹி. 100) இடமிருந்து, அபூ ஹுரைராவிட மிருந்து. இவ்வறிவிப்பாளர் அனைவரும் மிகவும் நம்பகமான வர்கள்.

இதே அறிவிப்பு அல்-புஹாரியின் 'கித்தாப் அல்-மகாஸி'யில் பதிவாகியுள்ளது. இவ்வறிவிப்பும் அபூ ஹுரைராவை ஆதாரமாகக் கொண்டது. ஆனால் மற்றைய அறிவிப்பாளர் பெயர்களில் சில மாற்றங்கள் உண்டு.[59]

அம்மனிதரின் நிலை குறித்து அவர் நரகவாசியென நபிகளார் அறிவிக்கும்போது அப்போராளி முஸ்லிம் இராணுவத்தைச் சேர்ந்தவராகக் கருதப்பட்டவர். அவரை ஓர் அர்ப்பணிப்புள்ள வீரராகக் கருதிய உம்மத்தினர்க்கு நபிகளாரின் இவ்வறிவிப்பு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. தற்கொலை செய்து கொள்ளும் வரை அவர் வேறுவிதமாகவே கருதப்பட்டார். ஆனால் இறுதி மூச்சுவரை மார்க்கத்தைக் கடைப்பிடித்தொழுகும் ஒரு விசுவாசி இஸ்லாத்தினால் தடைசெய்யப்பட்டஒன்றை ஒருபோதும் செய்யத் துணியமாட்டார். அவரது தற்கொலை அவரது மதநம்பிக்கை எத்தகைய தென்பதைக் காட்டிவிடுகின்றது. போர்க்காயங்களின்

வலி தாங்க முடியாமல் ஓர் உண்மை விசுவாசி உயிரை மாய்த்துக் கொள்ள மாட்டார். அவர் சபிக்கப்பட்டவரென அவரது முடிவு முன்தீர்மானிக்கப் பட்டுவிட்டதால் அம்முஸ்லிம் போராளி நரகம் புகுந்தார் என இதிலிருந்து அறியவருகின்றது. எனினும் இதனை சரியான ஒரு புரிதலாகக் கருத முடியாது. பிலால் மூலம் நபிகளார் விடுத்த பிரகடனம் இதனை நன்கு தெளிவுபடுத்துகின்றது: ''விசுவாசியைத் தவிர வேறெவரும் சுவனம்புக மாட்டார். நிச்சய மாக அல்லாஹ் பாவியான மனிதன் மூலமாகவும் இஸ்லாத் துக்கு வலுவூட்டுகின்றான்.'' அம்மனிதர் பாவியாகவும் உண்மை யான மதநம்பிக்கை யற்றவராகவும் போலி முஸ்லிமாகவும் இருந்தபடியால் அவர் முஸ்லிம் சமூகத்துடன் வாழ்ந்தபோதும் அவர் நரகம் புகுந்தார். அவர் வீரராயும் அஞ்சா நெஞ்சராயும் விளங்கியது ஒரு முஸ்லிம் என்பதால் அல்ல; அவர் அரபியென் பதால். இஸ்லாத்துக்கு முந்திய கால அரபிகள் வீரர்கள்; துணிச்சல் மிக்கவர்கள். அவர்கள் போரை விரும்பியவர்கள். போர்க்களத்தில் மடிய விரும்பியவர்கள். சில நேரங்களில் அல்லாஹ் முஸ்லிம் அல்லாதாரைக் கொண்டும் இஸ்லாத்தைப் பாதுகாப்பான்.

விசுவாசிகள் மட்டுமே சுவனம் புகுவர் என இந்த ஹதீஸ் அறிவிக்கின்றது. உறுதியும் பொறுப்புணர்வும் அர்ப்பணிப்பும் விசு வாசத்தின் பண்புகளாகும். விசுவாசம் என்பது வாழ்நாள் முழுவதும் இறுதி மூச்சுவரை உறுதியுடன் ஒழுகுவதாகும். உண்மையான விசு வாசி ஈமானுடன் மரணிப்பதற்கு அல்லாஹ் உதவிபுரிவான். எனினும் பிரதான பாத்திரம் மனிதனுடையது. ஒரு விசுவாசி இறுதிமூச்சுவரை உண்மையான விசுவாசியாய் இருப்பதற்குப் பெருமுயற்சியெடுக்க வேண்டும். இதற்காகவே இறைமறை அழைப்பு விடுக்கின்றது: ''விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ் வுக்குப் பயப்படுங்கள். முஸ்லிமாகவன்றி நீங்கள் மரணித்துவிட வேண்டாம்'' (3:102).

## *ஹதீஸ் இலக்கம் 14 (நரகவாசிகள்)*

*நபிகளார் தலைமைதாங்கிய ஓர் இராணுவ முற்றுகையின் போது வீரமும் துணிவும் மிக்க ஒருவர் முஸ்லிம்களின் மிகச் சிறந்த பிரதிநிதியாக விளங்கினார். எனினும் நபிகளார் அவரைப் பார்த்து, ''நரகவாசி ஒருவரைப் பார்க்க விரும்புவோர் இவரைப் பாருங்கள்'' என்றார்கள். முஸ்லிம்களில் சிலர் அவரைப் பின் தொடர்ந்து சென்றனர். அவர் நிராகரிப்பாளர்களுக் கெதிராகக் கடுமையான போராளியாய் இருக்கக் கண்டனர். அவர் போரில் படுகாயமுற்றார். இச்சந்தர்ப்பத்தில் உடனே அவர் தனது அம்பி னால் தோளில் குத்தி தற்கொலை செய்துகொண்டார். இதனை நேரில் கண்ட ஒருவர் நபியிடம் விரைந்து சென்று, '' நீங்கள் அல்லாஹ்வின் தூதரே என நான் சாட்சியம் கூறுகிறேன்'' எனப் பிரகடனஞ் செய்தார். ''என்ன நடந்தது?'' என நபிகளார் விசாரித் தார்கள். அவர் அந்த மனிதனின் இறுதிமுடிவு பற்றி நபிகளார் கூறியதிலிருந்து அம்மனிதன் தற்கொலை செய்துகொண்டது வரை கூறிமுடித்தார். அப்பொழுது நபிகளார் கூறினர்: ஒருவர் பாவம் புரிந்துகொண்டிருப்பார் ஆனால் அவர் உண்மையில் சுவனவாசி யாவார். இன்னும் ஒருவர் நன்மை செய்துகொண்டிருப்பார். ஆனால் நரகவாசியாவார். ஒருவர் அவரது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் செய்யும் செயல்கள் மிகமுக்கியமானவை.''[(60)]*

*இதன் அறிவிப்பாளர் தொடர்: ஸயீத் இப்னு அபீ மர்யம் (ம. ஹி. 224) அபூ கஸ்ஸான் முஹம்மத் இப்னு முத்தர்ரிஃப் (ம.ஹி. 160) இடமிருந்து, அபூ ஹாசிம் ஸலாமா இப்னு தீனார் (ம. ஹி. 144) இடமிருந்து, ஸஹ்ல் இப்னு ஸஅத் (ம. ஹி. 99) இடமிருந்து. இந்த அறிவிப்பாளர்கள் அனைவரும் மிகவும் நம்பகமானவர்கள்.*

இந்த ஹதீஸ், நபிகளார் ஒருவரைப் பார்த்து அவர் நரகவாசி யென தீர்க்க தரிசனம் மொழிந்ததையும் அவர் தற்கொலை செய்துகொண்டபோது அத்தீர்க்க தரிசனம் நிஜமாகியதையும் குறிப்பிடும் 13ம் இலக்க ஹதீஸை ஒத்திருக்கின்றது. ஆனால் இது மேலதிக தகவலைக் கொண்டிருக்கின்றது. ஒருவர் நன்மை செய்தாலும் செய்யாவிட்டாலும் அது அவரது இறுதி முடிவின்மீது

*தாக்கத்தைச் செலுத்தப் போவதில்லை; ஆனால் ஒருவர் தனது வாழ்வின் இறுதிக்கட்டத்தில் செய்யும் செயல்கள் முக்கியமானவை; அவையே அவர்கள் நரகம் அல்லது சுவனம் செல்வதைத் தீர்மானிக்கின்றன என்பதே அம் மேலதிகத் தகவல்.*

*மனிதவிதி முன்தீர்மானிக்கப்பட்டு விட்டதாகும் என்ற கருத் துக்கு வலுச் சேர்ப்பதற்காக சிலர் இதனை மிதமிஞ்சிய வகையில் வியாக்கியானஞ் செய்ய முற்படுகின்றனர். ஆனால் இந்த ஹதீஸ் புறத்தோற்றம் அத்தியாவசியமாய் அகத்தைப் பிரதிபலிப்ப தில்லை யென்பதைக் குறிக்கின்றது. ஒருவர் புறத்தோற்றத்தில் பக்திமானாக நல்லவராகப் புகழ்பெற்றிருப்பார். ஆனால் அவர் உண்மையில் ஆசாடபூதியாக வெளிவேஷக்காரராக இருத்தல் கூடும். கூடியகெதியிலோ அல்லது காலம் தாழ்த்தியோ அவரது சுயரூபம் வெளிப்பட்டு அவர் தீமை புரியத் தொடங்கி நரகம் செல்கிறார். அதேவேளை பாவச் செயல்களிலேயே பழகிப்போன ஒருவர் செய்த பிழைகளுக்காக வருந்தி, பச்சாதாபப்பட்டு, தனது வாழ்வில் புதியதொரு அத்தியாயத்தை ஆரம்பித்தல் கூடும். தன்னை மாற்றிக்கொள்வதற்கான முயற்சி கைகூடி அவர் நற் செயல் புரியத் தொடங்கி சுவனத்தை அடைந்துகொள்ளலாம். இறுதியில் ஒருவரது விதி திர்மானிக்கப்படுவது அவரது நற்செயல் களாலேயே அன்றி நயவஞ்சகச் செயல்களால் அல்ல.*

### ஹதீஸ் இலக்கம் 15 (பயபக்தியுடன் நேர்த்திக்கடன் வைத்தல்)

*அப்துல்லாஹ் இப்னு உமர் கூறுகின்றார்:*

''நபிகளார், நேர்த்திக் கடன் வைப்பதைத் தடைசெய்து, இவ்வாறு கூறினார்கள்: அது எதனையும் நிகழுமாறு செய்வதில்லை. அது உலோபியிடமிருந்து செல்வத்தை ஈட்டிக் கொள்ள உதவுவதே தவிர.''[61]

*இதன் அறிவிப்பாளர் தொடர்: அபூ நுஅய்ம் அல்- ஃபத்ல் இப்னு துக்கய்ன் (ம. ஹி. 219) சுஃப்யான் இப்னு உயைனா (ம. ஹி. 198) இடமிருந்து, மன்சூர் இப்னு அல்- முஃதமிர் (ம. ஹி. 132) இடமிருந்து, அப்துல்லாஹ் இப்னு முர்ரஹ் அல்-ஹம்தானி*

(ம. ஹி. 100) இடமிருந்து, அப்துல்லாஹ் இப்னு உமர் (ம.ஹி. 73) இடமிருந்து. அனைத்து அறிவிப்பாளர்களும் மிகவும் ஆதாரபூர்வ மானவர்கள்.

இமாம் புஹாரி இதே அறிவிப்பை கித்தாப் அல்- அய்மான் வ அல்- நுளூரில் சேர்த்துள்ளார். இதே அறிவிப்பாளர் தொடர் மூலம் தனது நேரடி ஆதாரத்தை மட்டும் தவிர்த்து புஹாரி பதிவுசெய்துள் ளார். இங்கு ஆதாரம் கல்லாத் இப்னு யஹ்யா (ம. ஹி. 213)[(62)]

அல்-புஹாரி இந்த அறிவிப்பை ஏன் 'கிதாப் அல்-கதர்'இல் சேர்த்துள்ளார் எனத் தெரியவில்லை. 'சத்தியங்களும் நேர்த்திக் கடன்களும்' என்ற அத்தியாயத்தில் இது சேர்க்கப்படுகின்றமை போதுமானதாயிருக்கும். முன்தீர்மானிக்கப்பட்ட மானுட விதிக்கு மாறாக எதுவும் நிகழ்ந்து விடப் போவதில்லை என உணர்த்து வதுதான் அதற்குக் காரணமாக இருக்கலாம்.

இந்த ஹதீஸின் அடிப்படையில், நேர்த்திக்கடன் அற்பமானது என்பதால் அதனைத் தவிர்த்துக் கொள்ளுமாறு நபிகளார் அறி வுறுத்துகின்றனர். அர்த்தமற்ற செயல்களுக்கு இஸ்லாத்தில் இட மில்லை. ஒருவர் நேர்த்திக் கடன் வைக்கும்போது அவர் அல் லாஹ்வுக்கு லஞ்சம் கொடுக்க முற்படுகிறார். இது, 'நீ எனக்கு இதைச் செய்; நான் உனக்கு இதைச் செய்கிறேன்' என்பது போலாகும். உதாரணமாக ஒருவர் ''யா அல்லாஹ்! எனது தொழி லில் எனக்குப் பதவி உயர்வைத் தருவாயாக. நான் நூறு ஏழைக ளுக்கு அன்னதானம் வழங்குவேன்'' என நேர்த்திக்கடன் வைக் கக்கூடும். இது அனுமதிக்கப் படவில்லை. ஏதோ ஒன்றுக்குப் பகரமாக அல்லாஹ் அவரின் விருப்பத்தை நிறைவேற்றி வைப் பான் என அவர் கற்பனை செய்யத் தொடங்கிவிடுவார். அல் லாஹ்விடம் இறைஞ்சுவதற்கு நேர்மையுடன் பிரார்த்திக்குமாறு முஸ்லிம்களுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. துஆ கேட்டல் (பிரார்த்தனை செய்தல்) விரும்பத்தக்கதும் வரவேற்கத்தக்கது மாகும். ஆனால் நேர்த்திக்கடன்கள் கண்டிக்கப்பட வேண்டியவை. நேர்த்திக்கடன்கள் தடைசெய்யப்படக் காரணம் அது இஸ்லாத் துக்கு முந்திய ஜாஹிலிய்யாக்கால பழக்கமாகும். ஜாஹிலிய்யாக்

கால அரபிகள் அவர்களது தெய்வங்களுக்கு ஒருவகை ஆன்மீக லஞ்சம் வழங்குவது வழக்கமாயிருந்தது.

இவ்வகையான நேர்த்திக் கடன்களுக்கும் திருமறை வசனம் 76:7 க்கும் இடையிலான வேறுபாட்டை நாம் அறிந்துகொள்ள வேண்டும்: ''இவர்கள் (தங்கள்) நேர்ச்சையை நிறைவேற்றுவார் கள். இன்னும் ஒரு நாளையும் பயப்படுவார்கள். அதன் தீமை எங்கும் பரவியதாக இருக்கும்.'' இந்த வசனம் நேர்ச்சை செய் வதை அனுமதிப்பது மட்டுமன்றி நேர்ச்சைகளை நிறைவேற்று வோரை யும் பாராட்டுகின்றது. இந்த இறைவசனம் ஹதீஸ் குறிப்பிடும் லஞ்சம் போன்ற நேர்த்திக் கடன்களை குறிக்காமல், அல்லாஹ்வின் உண்மையான அடியானாக ஒரு முஸ்லிம் செய்யும் நேர்த்திக் கடனை, பிரதிக்ஞையைக் குறிக்கும். அல்லாஹ்வுக்கும் றஸூலுக்கும் கீழ்ப்படிதல், அநாதரவற்ற ஏழைகளுக்கு உதவுதல், அன்றாடக் கொடுக்கல் வாங்கலில் நாணயத்தைக் கடைப் பிடித்தல் இவையே மிகவும் விரும்பத்தக்கதும் பாராட்டத்தக்கது மான நேர்ச்சைகளாகும்.

## ஹதீஸ் இலக்கம் 16 (நேர்த்திக்கடன்களின் பங்கு)

(அல்லாஹ் அறிவித்ததாக) நபிகளார் கூறினர்: ''நேர்த்திக்கடன் வைப்பது ஆதத்தின் மகனுக்கு (மனிதனுக்கு) நான் ஏற்கனவே அவனது விதியில் எழுதாத எதனையும் கொடுத்து விடாது. ஆனால் விதிதான் அவனை நேர்த்திக்கடன் பக்கம் கொண்டு செல்கின்றது. நேர்த்திக்கடன் மூலம் நான் கருமியைச் செல வளிக்கச் செய்கிறேன்.''[(63)]

இதன் அறிவிப்பாளர் தொடர்: பிஷர் இப்னு முஹம்மத் (ம. ஹி. 224) அப்துல் லாஹ் இப்னு அல்- முபாரக்கிடமிருந்து, மஃமர் இப்னு ராஷிதிடமிருந்து, ஹம்மாம் இப்னு முனப்பிஹி டமிருந்து, அபூ ஹுரைராவிடமிருந்து. அறிவிப்பாளர்கள் அனை வரும் மிகவும் நம்பகமானவர்கள்.

இந்த ஹதீஸில் வரும் செய்தி முந்திய ஹதீஸில் வரும் செய்தி யைப் போன்றதே. இங்கு அல்லாஹ்வின் தீர்மானம் அழுத்தம்

பெறுகின்றது. அல்லாஹ்வின் கட்டளையின்றி எதுவுமே நடைபெறாது என்பதில் ஐயமில்லை. இந்த ஹதீஸின் சொற்பிரயோகம் இதனை 'ஹதீஸ் குத்ஸி' (அல்லாஹ் வெளியிட்டதை நபிகளார் தம் வாய்மொழியாக அறிவித்தது) எனக் கொள்ள வைக்கின்றது. ஆனால் அது இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்டில்லை. 'நான்' என்ற தன்மைப்பிரயோகம் இங்கு நபிகளாரைக் குறிக்காது. அல்-புஹாரி இதனைக் கவனியாமல்விட்டது ஆச்சரியமே.

### ஹதீஸ் இலக்கம் 17 (அல்லாஹ்வின் வல்லமை)

''நபிகளாரின் தலைமையில் நாம் இராணுவ படையெடுப்பில் ஈடுபட்டிருந்தோம். நாம் பள்ளத்தாக்குகளில் ஏறியும் இறங்கியும் வந்த போதெல்லாம் அல்லாஹ்வை (குரலுயர்த்தி)த் துதித்தோம். அப்போது நபிகளார் எம் அருகில் வந்து, ''மக்களே! தணிவாக. உங்கள்மீது தயை காட்டுங்கள். நீங்கள் செவிகேளாதவனையும் இங்கில்லாதவனையும் அழைக்கவில்லை. எல்லாவற்றையும் பார்க்கக்கூடியவனை எல்லாவற்றையும் கேட்கக்கூடியவனையே நீங்கள் அழைக்கின்றீர்கள்'' என்றார்கள். அதன் பின்னர் அவர்கள், ''யா அப்துல்லாஹ் இப்னு கைஸ்! சுவனத்தின் செல்வத் திரள் களில் ஒன்றான வாசகத்தை நான் உங்களுக்குக் கற்றுத்தர வேண்டாமா? அதுதான் 'லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்' 'வல்லமையும் அதிகாரமும் அல்லாஹ்விடமேயன்றி வேறெவரிடமும் இல்லை' என்பதாகும் எனக் கூறினார்கள்.''(64)

இதன் அறிவிப்பாளர் தொடர்: முஹம்மத் இப்னு முக்காத்தில் (ம. ஹி. 226) அப்துல்லாஹ் இப்னு அல்- முபாரக்கிடமிருந்து, காலித் இப்னு மிஹ்ரான் அல்- ஹத்தா (ம. ஹி. 141) இடமிருந்து, அப்துர் ரஹ்மான் இப்னு மல் அபூ உதுமான் அல்- நஹ்தீயிடமிருந்து, அபூ- மூசா அல்- அஷ்ஹரியிடமிருந்து. காலித் அல்-ஹத்தாவைத் தவிர மற்றைய அறிவிப்பாளர் அனைவரும் நம்பகமானவர்கள். காலித் அல்- ஹத்தாவின் ஆதாரபூர்வம் குறித்து சில ஹதீஸ் நிபுணர்கள் சந்தேகமெழுப்புகின்றனர். அபூ ஹாதிம் கூறுவார்: ''அவரது ஹதீஸ்கள் எழுதப்படுகின்றன. ஆனால் அவை விவாதத் துக்குப் பயன்படுத்தப்படுவதில்லை; காலித் அல்- ஹத்தாவின்

*பெயர் அறிவிப்பாளர் தொடரில் இருக்கக் கண்டால் அந்த ஹதீஸ் களை ஏற்க மறுத்துவிடுகின்றார் அஹ்மத் இப்னு ஹன்பல்; அபூ உதுமான் அல்- நஹ்தீயிடமிருந்து காலித் எதனையும் கேட்ட தில்லை.*[65]

*காலித் அல்- ஹத்தா இந்த ஹதீஸை அபூ உதுமானிடமிருந்து அறிவிக்கின்றார். ஆனால் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் பின்ன வரிடமிருந்து காலித் எதனையும் கேட்டதில்லை. இவ்வறிவிப்பைப் பொறுத்தவரை காலித், குறிப்பிட்டவரிடமிருந்து இதனை நேரடி யாகப் பெறவில்லை. ஆனால் அவரது பெயர் இந்த அறிவிப்பை நம்பகமற்றதாக்கவில்லை. இமாம் புஹாரி இதே அறிவிப்பை வெவ்வேறு அறிவிப்பாளர் தொடர்கள் மூலம் மேலும் ஐந்து இடங்களில் பதிவு செய்துள்ளார்.*[66] *இந்த அறிவிப்புகளின் அறிவிப்பாளர் தொடர்கள் மிகவும் நம்பகமானவை.*

*இந்த ஹதீஸில் மூன்று வெளிப்படையான செய்திகள் உள்ளன. முதலாவது, ஓர் உண்மை விசுவாசி எல்லா சந்தர்ப்பங்களிலும் அல்லாஹ்வை நினைவு கூர்தல் வேண்டும். இரண்டாவது, அல்லாஹ்வை நினைவுகூர்தல் மனிதனுக்கு சிரமங்கள் உண்டு பண்ணக்கூடாது. ஆக, அல்லாஹ்வைத் துதிக்கையில் குரலில் நிதானமிருக்க வேண்டும்; அல்லாஹ்வை ஒருவர் மனதால் நினைத்தாலும் அவனால் அதனைக் கேட்கமுடியும். மூன்றாவது, 'வல்லமையும் அதிகாரமும் அல்லாஹ்விடமேயன்றி வேறு எவரிடமும் இல்லை' என்ற வாசகம் இஸ்லாமிய நம்பிக்கையின் அடிப்படையாகும். இந்த ஹதீஸை 'கித்தாப் அல் கதர்' அத்தி யாயத்தில் சேர்த்திருப்பது பொருத்தமாகத் தெரியவில்லை. அல் புஹாரி ஆதரிக்கும் 'கலா கதர்' கருத்துக்கும் இந்த ஹதீஸுக்கு மிடையே எத்தகைய தொடர்பும் இல்லை.*

### *ஹதீஸ் இலக்கம் 18 (அல்லாஹ்வின் பாதுகாப்பு)*

*நபிகளார் நவின்றனர்: ''இருவகையான ஆதரவாளர்களால் சூழப்படாதவர்களாக எந்த ஓர் ஆட்சியாளரும் பதவிக்கு வந்ததில்லை. ஒரு கூட்டத்தினர் நன்மைபுரியுமாறு அவரைத்*

*தூண்டுபவர்கள். இன்னொரு கூட்டத்தினர் தீமைபுரியுமாறு அவரைத் தூண்டுபவர்கள். அல்லாஹ்வின் பாதுகாப்பைப் பெற்ற வரே பாதுகாக்கப்படுகின்றார்.''*[(67)]

*இதன் அறிவிப்பாளர் தொடர்: அப்தான் அப்துல்லாஹ் இப்னு உதுமான், அப்துல்லாஹ் இப்னு அல்- முபாரக்கிடமிருந்து, யூனுஸ் இப்னு யஸீதிடமிருந்து, முஹம்மத் இப்னு அல்- ஷிஹாப் அல் ஸுஹ்ரியிடமிருந்து, அபூ ஸலாமா இப்னு அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ம. ஹி. 94) இடமிருந்து, அபூ ஸயீத் அல்- குத்ரி (ம. ஹி. 74) இடமிருந்து. இத்தொடரின் அறிவிப் பாளர் அனைவரும் மிகவும் நம்பகமானவர்கள்.*

*இந்த அறிவிப்பை இமாம் புஹாரி அதே நபித்தோழரின் ஆதாரத்துடன், அறிவிப்பாளர் தொடரில் சில மாற்றங்களுடன் 'கித்தாப் அல்-அஹ்காம்'இல் பதிவுசெய்துள்ளார்.*[(68)]

*இந்த ஹதீஸ் பொதுவாக மக்கள், அதிகாரத்திலுள்ளோர் ஆகிய இருசாராருக்கும் பல செய்திகளைக் கொண்டுள்ளது. முதலாவது, மனிதன் சாதாரணமாக நல்லவர்களாலும் தீயவர் களாலும் சூழப்பட்டுள்ளான். இரண்டாவது, அவன் நல்லவர்களால் நன்மை செய்யவும் தீயவர் களால் தீமை செய்யவும் தூண்டப்படுகின்றான். மூன்றாவது, இது சாதாரண மக்களுக்குப் போலவே ஆட்சியதி காரத்தில் உள்ளவர்களுக்கும் பொருந்தும். நான்காவது, மனிதன் சாமான்யனாய் இருப்பினும் அல்லது பதவியில் உள்ளவனாய் இருப்பினும் தன்மீது நல்லெண்ணம் கொண்டோரையும் தனக்கு அழிவை எண்ணும் தீயவர்களையும் இனம் காண்பதில் பலவீன மாய் உள்ளான். ஐந்தாவது, மனிதன் தனது தீய நண்பர்களால் எளிதில் ஏமாற்றப்பட்டுவிடுகிறான். ஆறாவது, மனிதனுக்கு எப்பொழுதும் அல்லாஹ்வின் உதவி தேவை. ஏழாவது மனிதனை விரோதிகளின் சதித்திட்டங்களிலிருந்து காப்பாற்ற அல்லாஹ் வினால் மட்டுமே முடியும்.*

*அரசியல் வரலாறு, ஊழல்கள், சதித்திட்டங்கள் யாவும் நபி களாரின் வாக்கு சத்தியம் என்பதற்குச் சான்றுபகர்கின்றன. அதிகார*

*மையங்கள் தீய சக்திகளில் நின்றும் பாதுகாப்புப் பெற்றனவல்ல. அரசர்கள், பேரரசர்கள், சர்வாதிகாரிகள் அனைவரும் அவர்களைச் சுற்றி இயங்கும் தீயசக்திகளின் சுழலில் சிக்குண்டு வழிகெட்டு ஈற்றில் தம் உயிர்களைக் காவுகொடுத்துள்ளனர். நபிமொழிப்படி ''அல்லாஹ்வின் பாதுகாப்பைப் பெற்றவரே பாதுகாப்பானவர்.'' தன் சொந்த மக்களின் சதிவலைகளிலிருந்து அல்லாஹ்வினால் மட்டுமே மனிதனைப் பாதுகாக்க முடியும்.*

### ஹதீஸ் இலக்கம் 19 (சிற்றின்பம் அல்லாஹ்வினால் முன்தீர்மானிக்கப்பட்டதாகும்)

> ''ஆதத்தின் மகனுக்கு (மனிதனுக்கு) நிச்சயமாக அல்லாஹ் முறையற்ற பாலியல் இன்பத்தை முன்கூட்டியே எழுதியுள்ளான். அது அவனுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். கண்செய்யும் விபச்ச ாரம் பார்வை. நாவு செய்யும் விபச்சாரம் பேச்சு. மனித உயிர் அதற்கு ஆசைப்பட்டு ஏங்குகிறது. பாலுறுப்பு அதனை உறுதிப் படுத்தவும் மறுக்கவும் செய்கின்றது.''[(69)]

*இதன் அறிவிப்பாளர் தொடர்: மஹ்மூத் இப்னு கய்லான் (ம. ஹி. 239) அப்துற் றஸ்ஸாக் இப்னு அல் ஹம்மாமிடமிருந்து, மஃமர் இப்னு ராஷிதிடமிருந்து, அப்துல்லாஹ் இப்னு தாவூஸ் (ம. ஹி. 142) இடமிருந்து, அவரது தந்தை தாவூஸ் இப்னு கய்ஸானிடமிருந்து, அப்துல்லாஹ் இப்னு அப்பாஸிடமிருந்து, அபூ ஹுரைராவிடமிருந்து. அனைத்து அறிவிப்பாளர்களும் ஆதாரபூர்வ மானவர்கள்.*

*அப்துல்லாஹ் இப்னு அப்பாஸின் அவதானத்துடன் இந்த அறிவிப்பு தொடங்குகிறது. இப்னு அப்பாஸ் அறிவிக்கின்றார்: ''சிறுபாவத்துக்கு உதாரணமாக நபிகளாரிடமிருந்து அபூ ஹுரைரா எடுத்துரைத்த ஹதீஸைத் தவிர வேறு சிறந்த ஒன்றை நான் காண்கிலேன்.'' இவ்வாறு கூறிவிட்டு இவ்வறிவிப்பு தகாத பாலுறவின்போது நிகழும் சிறுபாவங்கள்மீது கவனஞ் செலுத்து கிறது. தன் மனைவியல்லாத ஒரு பெண்மீது மையல் கொண்டு அவளது அழகை ரசித்தல், சல்லாபப் பேச்சுகளில் ஈடுபடல்,*

அவளுடன் நெருக்கம் கொள்ள முனைதல் முதலியன இறுதியான பாலுறவுக்கு இட்டுச் செல்லும் முன்னோடிச் செயற்பாடுகளாய் அமைகின்றன. இறுதியான உடலுறவுக்கு இட்டுச் செல்லாதவரை இவை சிறுபாவங்களாகின்றன. உடலுறவுக்கு இட்டுச் செல்லக் கூடுமாயின் இவை அனைத்தும் பெரும் பாவங்களாகின்றன. உடலுறவுச் செயற்பாடுகள் அதன் சிறு வடிவிலோ பிரதான வடிவிலோ உள்ளார்ந்த இன்பமும் ஆனந்தமும் தருபவை. இவை மனிதனின் இயல்பூக்கத்தில் அல்லாஹ் வைத்தவை. இன்பம் அனுபவிப்பதற்கான இயற்கையான உந்துதலினாலேயே மனிதன் எதிர்ப்பாலினர் மீது ஈர்க்கப்படுகிறான். பார்வையில் லயித்திருக்கும் இன்பமும் தீண்டும் இன்பமும் இரு பாலர்க்கும் இன்பம் தரு பவை. இந்த சாதாரண யதார்த்தமே இந்த ஹதீஸில் கவனஈர்ப் பைப் பெறுகின்றது.

மனிதனின் முறையற்ற பாலுறவு முன்தீர்மானிக்கப் பட்டு விட்ட ஒன்று என நம்புகிறார் இப்னு ஹஜர். எனவே மனிதன் விதியிலிருந்து தப்ப முடியாது; முன்தீர்மானிக்கப்பட்டு விட்ட முறையற்ற பாலுறவு மனிதனது வாழ்வில் இடம்பெற்றே தீரும். இதற்கு ஆதரவாக அவர் இப்னு பத்தாலுடைய கருத்தை முன்வைக்கின்றார்:

''மனிதனுக்காக எழுதப்பட்டுவிட்ட ஒவ்வொன்றும் அவனு டைய (அல்லாஹ்வுடைய) அறிவில் ஏற்கனவே இருந்தவை. எனவே எழுதப்பட்ட விதி மனிதனை முந்திவிடும். உண்மையில் அதிலிருந்து விலகி நிற்க அவனுக்கு வழிகிடையாது. விலக்கப் பட்டதைச் செய்யும்போது அவன் சபிக்கப்பட்டவனாக இருக் கின்றான். ஏனெனில், அவனது விதி அவனிடமிருந்து மறைக்கப் பட்டுள்ளது. அதேவேளை அவன் நற்செயல் புரிவதற்கும் சக்தி பெற்றவனாக இருக்கின்றான். இவ்வாறு கதரிய்யாக்களதும் ஜபரிய்யாக்களதும் கருத்துகள் நிராகரிக்கப்படுகின்றன.''[70]

இப்னு பத்தால் மற்றவர்களின் கருத்துக்களை மறுதலித்து தனது கருத்தை நிறுவுதற்கு மித மிஞ்சிய பிரயத்தனம் மேற்கொள்கின்றார். மனிதனின் ஒவ்வொரு நடவடிக்கையும் அதன் துல்லியமான

விவரங்களுடன் முன்தீர்மானிக்கப்பட்டுவிட்டதென்ற ஒரே செய்தியை அவர் தனக்குக் கிட்டும் இடங்களிலிருந்தெல்லாம் பெற்றுக்கொள்ள எத்தனிப்பது ஏன்? மனிதன் பெண்ணைப் பார்ப்பதன் மூலம் அவளுடன் பேசுவதன் மூலம் அவளைத் தொடுவதன் மூலம் பரவசமடைகிறான். இது அவன் உருவாக்கியதல்ல; இறைவன் ஏற்படுத்தியது.

இது எவ்வாறிருப்பினும் மனிதனுக்கு இன்பமூட்டக்கூடிய சின்ன சின்ன செயல்களையெல்வாம் நபிகளார் ஏன் 'ஸினா' (விபச்சாரம்) என வர்ணித்தனர் என்று ஒருவர் கேட்கலாம். இது உருவகமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. உடலுறவினால் மட்டுமன்றி அதற்குமுன் பூர்வாங்கமாக இடம்பெறும் சிற்சிறு சில்மிசங்களாலும் மனிதன் பாலியல் தூண்டலும் இன்பமும் பெறுகிறான். ''கண்கள் பார்வையால் பாலின்பம் பெறுகின்றன. உதடுகள் முத்தத்தால் பாலின்பம் பெறுகின்றன. கைகள் தீண்டலால் பாலின்பம் பெறுகின்றன. பாதங்கள் விபச்சார விடுதிகளை நோக்கி நடப்பதில் பாலின்பம் பெறுகின்றன'' என்கிறார் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்.(71)

இந்த அறிவிப்பில் இப்னு ஹஜர் முன்தீர்மானிக்கப்பட்டுவிட்ட விதி என்ற கருத்துக்கு ஆதர வான சமிக்ஞையைக் காண்கிறார். 'மனித ஆன்மா அதற்கு விருப்பமுற்று ஏங்குகிறது. பாலுறுப்புகள் அதனை உறுதிப்படுத்தவும் ஒறுக்கவும் செய்கின்றன' என்ற கூற்றையிட்டு அவர் இவ்வாறு அறிவிக்கின்றார்:

''இதிலிருந்து பெறப்படுவது யாதெனில் மனிதன் தன் செயலைத் தானே உருவாக்குவதில்லை. உதாரணமாக, அவன் பாலுறவை விரும்பியபோதும் அவனது பாலுறுப்பு அவனுக்கு உதவ மறுக்கின்றது. காரணம் அறியாமலேயே அவன் தன் இயலாமையை உணர்கிறான். மனிதன் தன் செயலைத் தானே உருவாக்குபவனாக இருந்தால் அவன் தன் ஆசையைத் திருப்திப்படுத்திக் கொள்ளத் தவறமாட்டான். மனிதனது முன்தீர்மானிக்கப்பட்டுவிட்ட விதியினால் அவனது செயல் தீர்மானிக்கப்படுகிறதென்பது இதனால் ருஜூவாகின்றது. இதுவே இச்செயலைப்

*புரிவதற்கு அவனை உந்துகிறது. அல்லது அவனது இயலுமையை அவனிடமிருந்து பறித்துவிடுகிறது.*[72]

*இப்னு ஹஜர் இவ்வாறு விளக்கம் கொள்கின்றார் எனினும், இந் நவிற்சியின் அர்த்தம் இதுவன்று. மனிதனின் ஆன்மா உச்ச இன்பம் பெறுவதற்காக பல்வேறு செயல்களில் அவன் ஈடுபடு கிறான் என இந்த அறிவிப்பு முதலில் குறிப்பிடுகின்றது. உட லுறவுக்கு முற்பட்ட செயல்கள் உடலுறவுக்கு இட்டுச் செல்ல லாம் அல்லது இட்டுச் செல்லாமல் விடலாம். இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படுவது மனிதன் உச்ச இன்பம்பெறும் இறுதிப் பாலியல் செயற்பாடாகும். உடலுறவு மூலமாக இது பெரும்பாவ மாகும். உடலுறவு நிகழாவிட்டால் அதற்கு இட்டுச்செல்லும் முன்னோடிச் செயல்கள் யாவும் சிறுபாவம் என்கிற வகைப் பாட்டினுள் நின்றுவிடுகின்றன. ஏதோவொரு காரணத்தால் இது பொதுவாக மன்னிக்கப்பட்டு விடுகின்றது.*

### ***ஹதீஸ் இலக்கம் 20 (சபிக்கப்பட்ட மரம்)***

> ''... உமக்கு நாம் காண்பித்த (விண்ணுலக) காட்சிகளையும் குர்ஆனில் சபிக்கப்பட்ட மரத்தையும் மனிதர்களுக்குச் சோத னையாகவே தவிர நாம் ஆக்கவில்லை.'' (17:60) என்ற இறை வசனத்திற்கு விளக்கம் கூறுகையில் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ''அது நபிகளார் ஜெரூஸலத்துக்கு மேற்கொண்ட இரவு யாத்திரையின்போது அவர்கள் தம் கண்களால் நேரில் கண்ட உண்மை காட்சியாகும். அது கனவன்று. இன்னும் குர்ஆன் குறிப்பிடும் சபிக்கப்பட்ட மரம் 'ஸக்கூம்' ஆகும்'' என விளக்குகிறார்.[73]

*இந்த அறிவிப்பின் அறிவிப்பாளர் தொடர்வரிசை: அப்துல் லாஹ் இப்னு சுபைர் அல்- ஹுமைதி (ம. ஹி. 219) சுஃபியான் இப்னு உயைனாஹ்விடமிருந்து, அம்ர் இப்னு தீனார், (ம. ஹி. 126) இடமிருந்து, இக்ரமா இப்னு அப்துல்லாஹ் (ம. ஹி. 106) இடமிருந்து, அப்துல்லாஹ் இப்னு அப்பாஸிடமிருந்து. இவ்வறி விப்பாளர் அனைவரும் மிகவும் நம்பகமானவர்கள்.*

இது நபிகளாரின் ஹதீஸ் அல்ல. ஆனால் மாபெரும் குர்ஆனீய அறிஞரான அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் அவர்களது கூற்று. இது நபிகளார் மக்கா விலிருந்து ஜெரூஸலத்துக்கு கனவில் மேற்கொண்ட இரவு யாத்திரையைக் குறிப்பிடும் இறைவசனம் 17:60 இன் விளக்கமாக அமைகின்றது. இப்னு அப்பாஸ் இதனை அல்லாஹ் நபிகளாருக்குக் காட்டிய உண்மைக் காட்சியாக விளக்கு கிறார். இது அன்றைய மக்களால் நம்பமுடியாத ஒரு சம்பவ மாகவே தோன்றியது. இது சம்பந்தமான நபிகளாரின் அறிவிப்பு உண்மையில் மக்காவிலிருந்த பலருக்குப் பெரும் சோதனையாக அமைந்தது. இதனை உண்மையென நம்பியோரும் இருந்தனர்; வெறும் கட்டுக்கதையென இதனை நிராகரித்தோரும் இருந்தனர். இறைவசனங்களின்படி (37: 62; 44: 43; 56: 52) 'ஸக்கூம்' மரம் என்பதும் மக்களுக்கு ஒரு பரீட்சையாகவே அமைந்தது.

இந்த அறிவிப்பு கித்தாப் அல்- கதர் அத்தியாயத்தில் ஏன் சேர்க் கப்பட்டது என்ற அறிவுப் பின்புலம் ஐயத்திற்குரியதாகும். ''இந்த அறிவிப்பு இங்கு இந்த அத்தியாயத்தில் சேர்க்கப்பட்ட தற்கான காரணம் நிராகரிப்பாளர்கள் உண்மையை நிராகரித்ததனால் நபி யுடைய தூதின் உண்மையைக்காணும் ஆற்றலை அவர்களிட மிருந்து அல்லாஹ் எடுத்து விடுகிறான் எனக் குறிப்புணர்த்து வதாகும்'' என்று எழுதுவதன் மூலம் இப்னு அல்- தீன் இதற்கான காரணத்தை அடையாளம் காண்பதுபோல் தெரிகிறது.(76) இவ் விளக்கம் இவ் விறைவசனத்திலேயே காணப்படும் பரீட்சை பற்றிய கருத்தாக்கத்துக்கு முற்றிலும் முரணாகத் தோன்றுகிறது. நபியை உண்மைத் தூதராக மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா எனப் பரீட்சிப்பதற்காகவே இத் திருஷ்டாந்தக் காட்சி இடம்பெற்ற தெனில், அது பலவந்தமாகத் திணிக்கப்பட்ட ஒன்றாக இருத்தல் முடியாது. பரீட்சையென்பது சுதந்திரச் சிந்தனையையும் தேர்வை யும் பாராதீனப்படுத்த முடியாத அம்சங்களாகக் கொண்டது. இறைவனால் வழங்கப்பட்ட சிந்தனைச் சுதந்திரத்தினதும் தேர்வுச் சுதந்திரத் தினதும் விளைவாகவே, நபிகளாரின் தூதை முதலில் நிராகரித்த அரபிகள் பின்னர் அல்லாஹ்வுக்கு அடிபணிந்தனர் என்பது மனங்கொள்ளத்தக்கது.

### ஹதீஸ் இலக்கம் 21 (ஆதமும் மூசாவும் தர்க்கித்தல்)

ஆதமும் மூசாவும் தர்க்கித்துக் கொண்டனர். ஆதத்திடம் மூசா கூறினார்: ''ஆதமே! நீர் எங்கள் தந்தை. நீர் எம்மை ஏமாற்ற மடையச் செய்தீர். சுவனத்திலிருந்து எம்மை வெளியேறச் செய்து விட்டீர்.'' மூசாவிடம் ஆதம் கூறினார்: ''மூசாவே! உம்முடன் நேரடியாகப் பேசுவதற்கு அல்லாஹ் உம்மைத் தேர்ந்தெடுத்தான். தூதைத் தன் கையாலேயே எழுதினான். என்னைப் படைப்பதற்கு நாற்பது வருடங்களுக்கு முன்பாகவே என்னைப் பற்றித் தீர் மானிக்கப்பட்டுவிட்ட ஒன்றுக்காகவா என்மீது குற்றஞ் சுமத்து கிறீர்?'' 'ஆதம் மூசாவுடன் தர்க்கம் புரிந்தார்' என்ற வாசகத்தை நபிகளார் மூன்றுமுறை திருப்பிக் கூறினர்.[75]

இதன் அறிவிப்பாளர் தொடர்: அலி இப்னு அப்துல்லாஹ் அல்-மதாயினி, சுஃபியான் இப்னு உயைனாஹ்விடமிருந்து, அம்ர் இப்னு தீனாரிடமிருந்து, தாவூஸ் இப்னு கய்ஸானிடமிருந்து, அபூ ஹுரைராவிடமிருந்து. இவ்வறிவிப்பாளர் அனைவரும் மிகவும் ஆதாரபூர்வமானவர்கள். இதே ஹதீஸை இமாம் புஹாரி அபூ ஹுரைராவின் ஆதாரத்துடன் வெவ்வேறு அறிவிப்பாளர் தொடர் மூலம், மேலும் நான்கு இடங்களில் பதிவு செய்துள்ளார்.[76]

இந்த ஹதீஸ் பல்வேறு காரணங்களால் ஆட்சேபத்துக்குள்ளா கின்றது. முதலாவது ஆதம் (அலை) அவர்களை மூசா (அலை) பெயர் சொல்லி அழைக்கின்றார். ஒரு நபி தன் தந்தையைப் பெயர்கூறி அழைப்பது பொருத்தமன்று. இது அல்-குர்ஆன் கூறும் (2:83), மூசா உட்பட அனைத்து நபிமார்களுக்கும் அருளப்பட்ட 'இஹ்ஸான்' (அழகான உபசார மொழி) என்ற கோட்பாட்டுக்கு எதிரானதாகும். இரண்டாவது, மூசா (அலை) அவர்களின் கடுமொழி இறைபக்தியுடைய ஒரு தந்தையோடு இறைபக்தி யுடைய மகன் பேசும் மரியாதையான வார்த்தைகளாய் இல்லை. மூன்றாவது, அல்லாஹ்வினால் மன்னிக்கப்பட்டுவிட்ட ஒரு குற்றத்திற்காக மூசா ஏன் ஆதத்தைக் கடிந்துகொள்ள வேண்டும்? செய்த குற்றத்திற்காக பச்சாதாபப்பட்டு பாவமன்னிப்பு கேட்கப் பட்டுவிட்ட ஒருவரிடம் அதனை நினைவூட்டுவது நாகரிகமன்று

என்பது யாவரும் அறிந்ததே. நான்காவது, மூசா ஏன் ஆதத்தைக் குறைகூற வேண்டும்? கட்டளையை மீறும்படி ஆதத்துக்கு ஆசையூட்டியவன் ஷைத்தான் என்பதை மூசா அறியமாட்டாரா? உண்மையில், சுவனத்திலிருந்து ஆதம் வெளியேற்றப்படுவதற்கு ஷைத்தான்தான் காரணமென்பதை அல்லாஹ்வே அறிவித்து விட்டான்: ''ஆதத்தின் சந்ததியினரே! ஷைத்தான் உங்கள் பெற்றோருக்கு ஆசையூட்டி அவர்களை சுவனத்திலிருந்து வெளியேறச் செய்ததுபோல் உங்களுக்கும் ஆசையூட்டி உங்களைச் சோதனைக்குள்ளாக்கிவிட வேண்டாம்'' (7:27).

மூசா (அலை)வுக்கு வஹி அருளப்பட்டுள்ளதால், ஆதம் (அலை) சுவனத்திலிருந்து வேளியேற்றப்படக் காரணம் ஷைத்தான் என அறிவுறுத்தப்பட்டுத்தான் இருப்பார். அல்லாஹ்வின் கூற்றுப்படி இதற்காகக் குற்றஞ் சாட்டப்பட வேண்டியவன் ஷைத்தானேயன்றி ஆதம் அல்லர். ஆனால் இந்த அறிவிப்பில் ஆதத்தை மூசா குற்றஞ்சாட்டுகிறார். இது விசித்திரமானதும் நம்பமுடியாதது மாகும்.

இமாம் முஸ்லிமின் விளக்கவுரையாளரான அல் - மாஸரீ இவ்வறிவிப்புக்கு ஆட்சேபனை கிளப்பிவிட்டு பல்வேறு விளக்கங்களை முன்வைக்கிறார்.[77] (1) தந்தையைக் கண்டிப்பதற்குச் சில சந்தர்ப்பங்களில் தனயர் அனுமதிக்கப்படுகிறார். ஆனால் ஆதத்தைக் கண்டிப்பதற்கான கடமைப் பாடு மூசாவுககு ஏன் ஏற்பட்டதென்பதை இது விளக்குவதாக இல்லை. (2) ஆதத்துக்கும் மூசாவுக்குமான (ஷரிய்யத்) சட்டங்கள் வெவ்வேறானவை. எனவே தந்தையைத் தனயன் குற்றஞ் சாட்டுவதில் பிரச்சினையில்லை. ஆனால் தந்தை-மகன் உறவில் இது பொருந்தாதென்பது நித்திய உண்மை. அனாதி காலந்தொட்டு மனித இயல்பில் உள்ளுறையும் இந்த உண்மையை அல்லாஹ் எல்லா நபிமார்களுக்கும் அறிவித்துத்தான் இருப்பான். மேலும், இஹ்ஸான் என்ற எண்ணக்கரு மூசாவின் சட்டத்தில் இடம்பெற்று இரு சாராரையும் நெறிப்படுத்துவதை நாம் முன்னர் கவனித்தோம். மூன்றாவது, ஆதத்தின்மீது மூசாவின் குற்றச்சாட்டு தாக்கமானதாக

இல்லை. ஆதம் அப்போது பொறுப்புக் கூறவேண்டிய இவ்வுல கில் இருக்கவில்லை. அவர் மறுமையை அடைந்து விட்டவர். ஆதமை மூசா குறைகாண்பது, ''ஏற்கனவே பச்சாதாபப்பட்டு மன்னிப்பு கேட்கப்பட்டுவிட்ட ஒன்றுக்காக ஒருவர் குறைகூறப் படக் கூடாது'' எனும் கட்டளைக்கு விதிவிலக்காக அமைந்த ஒன்று என ஊகமுரைக்கின்றார் இப்னு அப்த்-அல்-பர்ர்.[78] அறிவார்ந்த அறஞ் சார்ந்த விவாதங்கள் காணப்படாதவிடத்து அடிக்கடி கூறப்படும் நியாயப்படுத்தலே இது. மறுமையில் ஒருவரை மற்றொருவர் குறைகூறமாட்டார். அர்த்தமற்ற வீண் பேச்சுகளுக்கும் அற்பச் செயல்களுக்கும் (லக்ஹ்வா) மறுமையில் இடம்கிடையாது (19: 62; 52:25; 78: 35; 88:11) என்பதனை நினைவிற்கொள்ள மாஸரீ, இப்னு பர்ர் இருவரும் தவறிவிட்டனர் போல் தெரிகிறது.

ஆதமிடம் மூசா கேள்விகேட்பதை நியாயப்படுத்துவதற்காக ஒருவர் இப்றாஹீம் (அலை) தன் தந்தையுடன் விவாதம்புரிந்ததை உதாரணங் காட்டலாம். இவ்விரண்டுக்குமிடையே வேறுபாடு உண்டு. மூசா ஏற்கனவே மன்னிக்கப்பட்டுவிட்ட தவறுக்காக ஆதமைக் குறைகாண்கிறார். அதே வேளை இப்றாஹீம் அஞ் ஞானியான தன் தந்தையிடம் விக்கிரக வணக்கத்தைக் கைவிடுமாறு நம்பச்செய்யும் வகையில் கெஞ்சிக் கேட்கிறார். கண்டிப்பதும் (ளம்) இசையச் செய்ய முயற்சிப்பதும் (நஸீஹா) இருவேறு விடயங்கள். முதியவர்களைக் கண்டிப்பது விரும்பத்தக்க செய லல்ல. ஆனால் தீமையை விடுமாறு இசையச் செய்ய முயற்சிப்பது பாராட்டத்தக்க செயல்.

அல்-தீபீ ஒருபுறம் ஜபரிய்யாஹ் சிந்தனைப்பள்ளியினரின் கருத்துக்களை நிராகரிப்பதற்கும் மறுபுறம் முஃதஸிலாக்களின் கருத்துக்களைக் கண்டிப்பதற்கும் இந்த ஹதீஸைப் பயன் படுத்துகிறார்.[79] இதுவே இந்த ஹதீஸின் மெய்ம்மையையிட்டு ஐயங்களை எழுப்புகின்றது. இது மற்றவர்களை மட்டந்தட்டு வதற்காகப் புனையப்பட்ட ஹதீஸ் அல்லவெனக் கூறுவது கடினம்.

### *ஹதீஸ் இலக்கம் 22 (அல்லாஹ்வின் பிரத்தியேக உரிமைகள்)*

*நபிகளார் தொழுகை முடிந்தவுடன் ஓதியவைகளைத் தமக்கு அறிவிக்குமாறு அல் முகீரா இப்னு ஷுஃபாஹ்வுக்கு முஆவியா இப்னு சுஃபியான் எழுதினார். எனவே இப்னு ஷுபாஹ் தனது எழுத்தர் வர்ராத் மூலம் பின்வருமாறு எழுதச்செய்து அதனை முஆவியாவுக்கு அனுப்பிவைத்தார்: ''தொழுது முடிந்தவுடன் நபிகளார் இவ்வாறு ஓதுவதனை நான் கேட்டேன்: 'அல்லாஹ்வைத் தவிர வேறு நாயனில்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணை யானவன் எவனுமில்லை. இறைவா! நீ கொடுப்பதைத் தடுப்பவர் யாருமில்லை; நீ தடுப்பதைக் கொடுப்பவர் யாருமில்லை. உன்னை மீறி எவரது முயற்சியும் அவருக்குப் பலனளிக்காது.''[80]*

*இதன் அறிவிப்பாளர் தொடர்: முஹம்மத் இப்னு ஸினான் (ம. ஹி. 223) ஃபுலைஹ் இப்னு சுலைமான் (ம. ஹி. 168) இடமிருந்து, அப்தா இப்னு அபீ லுபாபஹ் (ம. நிச்சயமில்லை; ஹி. 100க்குப் பின்) இடமிருந்து, வர்ராத் (மறைந்த ஆண்டு நிச்சயமில்லை; ஹிஜ்ரி 100க்கு முன்னர்) இடமிருந்து. ஃபுலைஹ் இப்னு சுலை மானைத் தவிர ஏனையவர்கள் நம்பகமானவர்கள். ஃபுலைஹின் ஆதாரபூர்வம் குறித்து ஹதீஸ் நிபுணர்கள் மத்தியில் சந்தேகம் நிலவுகின்றது. உதாரணமாக, ''அவர் பலவீனமானவர். அவரது அறிவிப்புகள் விவாதங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்படுவ தில்லை'' என்கிறார் யஹ்யா இப்னு மாயின். யஹ்யா இப்னு ஸயீத் அவரது அறிவிப்புகளைத் தவிர்த்துக் கொள்கிறார். அல்- நஸாயி, அல்- ஹாக்கிம், அலி இப்னு அல்- மதாயினீ முதலானோர் இவரைப் பலவீனமானவர் எனக் கருது கின்றனர்.[81]*

*இந்த அறிவிப்பு இமாம் புஹாரியால் வேறும் மூன்று இடங் களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.[82] இம்மூன்று அறிவிப்புகளி னதும் அறிவிப்பாளர் தொடர்கள் மிகவும் நம்பகமானவை.*

*தொழுகைக்குப்பின் ஓதப்படுபவைகளாக நபிகளாரிடமிருந்து எடுத்தாளப்பட்டுள்ளவை மனிதன் தொடர்பாக அல்லாஹ்வின் நிலைபற்றி சிறந்த ஞாபகமூட்டலாகும். பிறமதங்களைப்*

*போலன்றி இஸ்லாம் அல்லாஹ்வின் பண்புகளைத் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. ஏனைய வேதங்களில் மனிதன் அல்லாஹ்வுக்குச் சவால்விடுக்கும் அதேவேளை இஸ்லாம் ஒருபோதும் அல்லாஹ்வுக்குச் சவால் விடாதிருக்குமாறு மனித னுக்குக் கற்றுக்கொடுக்கின்றது. அவன் சர்வ சக்தன்; விண்ணிலும் மண்ணிலும் உள்ளவை யாவும் அவனுக்குச் சொந்தமானவை; அவனது ஆட்சிக்கு உட்பட்டவை. அல்லாஹ்வினால் அருள் புரியவும் அருளைத் தடுக்கவும் முடியுமென்பதை இந்த ஹதீஸ் அழுத்திக் கூறுகின்றது. அல்லாஹ் அருள்புரிவதும் அருள்புரியா மல் இருப்பதும் வெறுமனே நிகழ்வதன்று. அல்லாஹ் பிரக்ஞை யுடன் செயல்படுபவன். அவனது அருளுக்குரியவர்களுக்கு அவன் அருள் புரிகிறான். அவனது அருளைப்பெறத் தகுதியற்றவர்களை அவன் கண்டிக்கிறான் (12:56). அல்லாஹ்வுக்கு நன்றி பாராட்டு வதால் மனிதன்மீது அவனது அன்பு அதிகரிக்கின்றது. நன்றி யின்மை துன்பத்துக்கு இட்டுச் செல்கின்றது:*

> ''இன்னும் உங்கள் இரட்சகன் 'நீங்கள் எனக்கு நன்றி செலுத்தினால் நிச்சயமாக நான் (எனது அருளை) உங்களுக்கு அதிகப்படுத்து கிறேன். இன்னும் நீங்கள் நன்றியற்றவர்களானால் என்னுடைய வேதனை மிக்க கடினமானது' என்று அறிவித்ததையும் நீர் நினைவுகூர்வீராக.'' (14:7)

*இந்த வசனத்தில் 'லா யன்ஃபஉ த அல்- ஜத்த் மின்க்க அல்-ஜத்த்' என்ற இறுதிப் பகுதிக்குப் பல்வேறுவிதமாக அர்த்தம் கூறப்படு கின்றது. 'அல் ஜத்த்' என்பதைச் சிலர் 'செல்வம்' என மொழி பெயர்க்கின்றனர். ஏனையோர் இதனை 'உலக இன்பம்', 'முயற்சி' அல்லது 'குலப்பெருமை' என்றெல்லாம் விளக்குகின்றனர்.[83] எல்லா அர்த்தங்களும் ஏதோவொரு வகையில் காத்திரமானதாகத் தென்படினும் குறிப்பிட்ட வார்த்தையின் அர்த்தங் குறித்து சர்ச்சை யேற்படும்போது சம்பந்தப்பட்ட வசனத்துடன் இசைவதாய் அதற்கு அர்த்தங் காண்பதே சிறந்த வழி. இவ்வசனத்தை முழுமை யாகப் பரிசீலிக்கும்போது 'ஜத்த்' என்பது 'உலகைச் சார்ந்த அதிகாரம்', 'முயற்சி' என அர்த்தம் தருகிறது. முழுவசனத்தையும்*

*முரண்பா டின்றி இசைவுறச் செய்கிறது. அப்போது உண்மையான அர்த்தம்: ''அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணையானவன் எவனுமில்லை; இறைவா நீ கொடுப்பதைத் தடுப்பவர் யாருமில்லை; நீ தடுப் பதைக் கொடுப்பவர் யாருமில்லை. உன்னை மீறி எவரது முயற்சியும் பலனளிக்கப் போவதில்லை.''*

### ஹதீஸ் இலக்கம் 23 (அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடல்)

நபிகளார் நவின்றனர்: வாழ்வின் வலிதரும் துன்பங்களிலிருந்து, அழிவைத் தரும் துயரங்களிலிருந்து, துன்பகரமான முடிவி லிருந்து, எதிரியின் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்திலிருந்து அல்லாஹ் விடம் அடைக்கலம் தேடுங்கள்.''(84)

*இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர்: முஸத்தத் இப்னு முஸர்ஹத் (ம. ஹி. 228) சுஃபியான் இப்னு உயைனாஹ்விடமிருந்து, சுமய்யி (ம. ஹி. 130) இடமிருந்து, அபூ ஸாலிஹ் ஸக்வான் (ம. ஹி. 101) இடமிருந்து, அபூ ஹுரைராவிடமிருந்து. இவ்வறி விப்பாளர் அனைவரும் ஆதாரபூர்வமானவர்கள்.*

*இமாம் புஹாரி இதே ஹதீஸை 'கித்தாப் அல்- தஃவாத்' என்ற அத்தியாயத்திலும் அபூ ஹுரைராவை ஆதாரமாகக் கொண்டு அறிவிப்பாளர் தொடரில் சிறிது மாற்றங்களுடன் பதிவு செய் துள்ளார். இங்கு இமாம் புஹாரியின் நேரடி ஆதாரம் முஸத்தத் துக்குப் பதிலாக அலி-இப்ன்-அப்துல்லாஹ் அல்-மதாயினி ஆவார். இந்த அறிவிப்பில் ஒரு பிரச்சினையுண்டு. ''அசலான ஹதீஸில் மூன்று விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன. ஒன்று நான் மேலதிகமாகச் சேர்த்தது. அவ்வாறு மேலதிகமாகச் சேர்த்தது எதுவென எனக்கு நினைவில்லை'' என அறிவிக்கின்றார் சுஃபியான் இப்னு உயைனாஹ்.(85) அப்படியாயின் இந்த ஹதீஸில் இடைச் செருகல் உண்டு. இடைச்செருகப்பட்டது எதுவென்பது தெரியாத தால் இந்த ஹதீஸை நம்புவது பாதுகாப்பானதாயில்லை.*

*மனிதன் தன் செயல்களை உருவாக்குபவனல்லன் என்பதற் குச் சான்றாக இந்த ஹதீஸ் உள்ளதென அல்-அய்னீ கூறுவார்.*

மனிதன் தனக்குவரும் துன்பங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளச் சக்தியற்றவன். இந்த சக்தி அவனுக்கு இருப்பின் அவன் அல்லாஹ்வின் பாதுகாப்பை நாடமாட்டான் என இந்த ஹதீஸை மேலும் விளக்குகிறார் அவர். இதே காரணத்திற்காகவே இமாம் புஹாரி ஹதீஸ் இலக்கம் 23 ஐப் பதிவுசெய்த அதே உபதலைப்பில் குர்ஆன் வசனங்கள் 113 : 1-2 ஐயும் எடுத்தாண்டுள்ளார்: ''(நபியே) நீர் கூறுவீராக: அதிகாலையுடைய இரட்சகனிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன். அவன் படைத்தவற்றின் தீங்கைவிட்டும்.'' இத்திரு வசனங்கள் அல்லாஹ்வே சிருஷ்டியாளன் என்பதைத் தெளிவாகக் கூறுகின்றன. தான் சிருஷ்டித்ததாக எதற்கேனும் உரிமை கொண்டாடும் முஸ்லிம் எவரேனும் உண்டா? மனிதனுக்குச் செயல் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதென்றும் சுயமாகத் தீர்மானித்து அதன்படி நடப்பதற்கு அவனுக்குச் சுதந்திரமுண்டென்றும் சில அறிஞர்கள் நம்புகின்றனர். மதவிவாதங்களின் வெளிச்சத்தில் குர்ஆனும் ஹதீஸும் விளக்கப்படும்போது புலமைத்துவத்தின் இயல்பு குறித்து விசனமேற்படுகின்றது.

குர்ஆனும் ஹதீஸும் தத்துவாசிரியர்களை நோக்கிப் பேசவில்லை. நபிகளாரின் காலத்தில் காணப்பட்ட நிலைமை குறித்தே அவை கரிசனை காட்டின. பூமியில் மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதியாவான். தான் பிறந்த இடத்திலும் காலத்திலும் நிலையூன்றிய அவன் தனது வாழ்வை உருவாக்கிக் கொள்ளவும் தகுந்த முறையில் அதனை விருத்தி செய்துகொள்ளவும் ஆற்றல் மிக்கவனாக விளங்குகிறான். ஆனால் அவனது இவ்வாற்றல் மட்டுப்படுத்தப்பட்டதாகும். குறிப்பிட்ட எல்லைக்கோட்டைத் தாண்டி அவனால் செல்லமுடியாது. எனவே அவன் தன் கடமையைச் செய்ய அல்லாஹ்வின் உதவியை நாடுகிறான். அதேநேரம் தனது சக்திக்கு அப்பாற்பட்டவைகளிலிருந்து அவன் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறான். முடிவாக, இந்த ஹதீஸ் சர்வவல்லோனான அல்லாஹ்விடம் வேண்டுதல் புரியுமாறும் கஷ்டங்கள் துன்பங்களிலிருந்து அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடுமாறும் கற்றுத் தருகின்றது.

## *ஹதீஸ் இலக்கம் 24 (அல்லாஹ் இதயங்களைக் கட்டுப்படுத்துபவன்)*

> அப்துல்லாஹ் இப்னு உமர் கூறுகிறார்: ''இல்லை, இதயத்தை மாற்றுபவன்மீது ஆணையாக!'' என்ற வார்த்தைகளால் நபிகளார் அடிக்கடி சத்தியம் செய்வது வழக்கம்.[86]

*இதன் அறிவிப்பாளர் தொடர்: முஹம்மத் இப்ன் முக்காத்தில், அப்துல்லாஹ் இப்னு அல் முபாரக்கிடமிருந்து, மூசா இப்னு உக்பா (ம. ஹி. 141) இடமிருந்து சாலிம் இப்னு அப்துல்லாஹ் (ம. ஹி. 106) இடமிருந்து அப்துல்லாஹ் இப்னு உமரிடமிருந்து. இவ்வறிவிப்பாளர் அனைவரும் ஆதாரபூர்வமானவர்கள். இமாம் புஹாரி இந்த ஹதீஸை மேலதிகமாக இரு வேறிடங்களில் பதிவு செய்துள்ளார்.[87] அறிவிப்பாளர் தொடரில் சிறிது மாற்றம் காணப் படினும் இறுதி அறிவிப்பாளர்களில் மாற்றமில்லை. அதாவது ஸாலிம் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்.*

*நபிகளார் பல்வேறு சந்தர்ப்பங்களில் அல்லாஹ்வின் மீது மட்டுமே ஆணையாக சத்தியங்கள் செய்கின்றார்கள். இவ்விதமாக நான்கு சொற்றொடர்களை இப்னு ஹஜர் குறிப்பிடுகிறார்: 1. எனது ஆன்மா/உயிர் எவன் கையில் உள்ளதோ அவன்மீது ஆணையாக! / எவனது கையில் முஹம்மதின் உயிர் உள்ளதோ அவன்மீது ஆணையாக! 2. இதயத்தை மாற்றுபவன்மீது ஆணையாக! 3. அல்லாஹ்மீது ஆணையாக! 4. இல்லை, பின்னர் அல்லாஹ்மீது ஆணையாக![88]*

*நபிகளாரின் வழிமுறை அவர்களின் உம்மத்தினர்க்கு வழி காட்டியாகும். அல்லாஹ்வின் பெயரையோ அல்லது அவனது பண்புகளையோ அன்றி வேறு எதன் பெயராலும் பிரதிக்ஞை செய்தல் கூடாது. இமாம் புஹாரி பதிவுசெய்துள்ள இந்த ஹதீஸுக்கும் கித்தாப் அல்-கதரில் பதிவாகியுள்ள ஏனைய ஹதீஸ்களுக்கும் எத்தகைய வெளிப்படையான தொடர்பும் தென்படவில்லை. அல்லாஹ் கணங்கள்தோறும் ஒவ்வொரு விவகாரத்தையிட்டும் தீர்மான மெடுக்கின்றான் என்ற கருத்துக்கு*

*இந்த ஹதீஸ் வலுசேர்க்கின்றது. இந்த ஹதீஸின் வெளிச்சத்தில் முன் தீர்மானிக்கப்பட்டுவிட்ட விதி என்ற கருத்தை நியாயப் படுத்தல் சிரமம். ஹதீஸ் அறிவிப்பில் இவ்விதமான ஒவ்வாமை கள் குறிப்பிட்ட ஹதீஸ் சம்பந்தமான ஆதாரபூர்வத்தை சந்தேகத்திற் குள்ளாக்குகின்றன.*

### *ஹதீஸ் இலக்கம் 26 (தொற்றுநோயால் உண்டாகும் மரணம்)*

> ஆயிஷா (றலி) கொள்ளை நோய் குறித்து வினவ, நபிகளார் கூறினர்: ''அது அல்லாஹ் தான் நினைத்தவர்களுக்கு அனுப்பி வைக்கும் வேதனையாகும். அதை இறை நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ் கருணையாக ஆக்கிவிட்டான். ஊரில் ஓர் அடியார் தமக்கு அல்லாஹ் எழுதிய விதிப்படியே தவிர எந்த நோயும் தம்மைத் தீண்டாது என உறுதி பூண்டவராகப் பொறுமையோடும் நன்மையை எதிர்பார்த்தும் அந்த ஊரிலிருந்து வெளியேறாமல் அங்கேயே தங்கியிருந்தால் உயிர்த் தியாகிக்குக் கிடைக்கும் நன்மையைப் போன்று அவருக்கும் கிடைக்கும்.''[89]

*இதன் அறிவிப்பாளர் தொடர்: இஷ்ஹாக் இப்னு இப்றாஹீம், அல்- நத்ர் இப்னு ஷமய்யில் (ம. ஹி. 204) இடமிருந்து, தாவூத் இப்னு அபீ அல்-ஃபுராத் (ம. ஹி. 167) இடமிருந்து, அப்துல்லாஹ் இப்னு புரைதாஹ் (ம. ஹி. 105) இடமிருந்து, யஹ்யா இப்னு யஃமார் (ம. ஹி. 89) இடமிருந்து, ஆயிஷாவிடமிருந்து. இந்த அறிவிப்பாளர் தொடரின் அறிவிப்பாளர்கள் அனைவரும் மிகவும் ஆதாரபூர்வமானவர்கள்.*

*இமாம் புஹாரி இதே ஹதீஸை ஆயிஷாவின் அதிகாரத்தில் மேலும் இரண்டிடங்களில் சிறிது வித்தியாசமான அறிவிப்பாளர் தொடர்கள் மூலம் பதிவுசெய்துள்ளார்.*[90]

*எல்லா சந்தர்ப்பங்களிலும் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு இஸ்லாம் முஸ்லிம்களுக்கு அறிவுரை கூறுகின்றது. தொற்று நோயால் பாதிக்கப்பட்ட ஓர் ஊர் வெளியுலகிலிருந்து பிரித்து வைக்கப்படும். வெளியூரார் அங்கு செல்லவோ அவ்வூர்வாசிகள் அங்கிருந்து வெளியேறவோ அனுமதிக்கப்படுவதில்லை. ஊர்வாசி*

கள் அங்கிருந்து வெளியேற விரும்பினால் நோயால் தாக்குண்டு மரணித்துக் கொண்டிருப்போரைக் கவனிப்பது யார்? தமக்கும் ஒருநாள் மரணம் வரும் என்பதை முஸ்லிம்கள் நன்கறிவர். எனவே வியாதியால் பீடிக்கப்பட்ட ஊரைவிட்டு ஓடுவதால் மரணத்தி லிருந்து தப்பிவிடலாம் என்பதற்கு எவ்வித உத்தரவாதமுமில்லை.

இந்த நபிமொழி அல்லாஹ்மீது நம்பிக்கை வைக்குமாறும் உயிர் வாழ்வதற்கும் மரணிப்பதற்கும் அல்லாஹ்வே மூல காரணம் என்றும் நம்புமாறும் விசுவாசிகளுக்கு அழைப்பு விடுக்கின்றது. உயிர் வாழ்வில் அவன் நன்மையடைகிறான். மரணத்தில் அவன் எதனையும் இழப்பதில்லை. மறுமையில் அவனுக்கு அளப்பரிய நன்மையும் நற்கூலியும் உண்டு. எனவே கொள்ளை நோயின் போது எவர் பொறுமை காத்து துன்பங்களைச் சகித்து அல்லாஹ் வின் பேரருளில் நம்பிக்கை வைக்கின்றாரோ அவருக்கு இறுதித் தீர்ப்பு நாளில் ஒர் உயிர்த் தியாகிக்குரிய சன்மானம் வழங்கப்படும். உயிர்த் தியாகி என்ற சொல் பாரிய அர்த்தத்தைக் கொண்டது. அது இஸ்லாத்துக்காக அருந்தொண்டாற்றி நேரம் வரும்போது அல் லாஹ்வின் தூதை எத்திவைப்பதற்காக இன்னுயிரை ஈவதற்கும் தயங்காத மாபெரும் தியாகத்தைக் குறிப்புணர்த்துகிறது. இது அவருக்கு ‘ஷஹீத்’ என்ற சிறப்பை ஈட்டித்தருகின்றது. கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ ஓர் உண்மை விசுவாசி பெரும் பிரயத்தன மெடுப்பார். அவர் மரணத்திற்கு அஞ்சமாட் டார். வாழ்வும் மரணமும் அல்லாஹ்வின் கரங்களில் என்பதை அவர் உறுதியாக நம்புவார். நோயினால் பாதிப்புற்றோருக்கு உதவி செய்யும்போது உயிர் நீக்க நேரிடின் அது அவர் செய்யும் மாபெரும் உயிர்த் தியாகமாகும். இதனாலேயே நோயாளிகளுக்குத் தொண்டாற்றுகையில் ஒருவர் இறக்க நேர்ந்தால் அவர் விசேட கவனிப்புக்குத் தகுதி பெறுகிறார்.

இந்த ஹதீஸ் இமாம் புஹாரி முன்மொழியும் கருத்துக்குப் பொருந்திவரவில்லை. இந்த அத்தியாயத்தில் இந்த ஹதீஸ் சேர்க் கப்பட்டதனை நியாயப்படுத்த இப்னு ஹஜர், அல்-அய்னி போன்ற மாபெரும் விரிவுரையாளர்களும் தவறிவிடுகின்றனர்.

## *ஹதீஸ் இலக்கம் 27 (அல்லாஹ்வின் சித்தம்)*

அகழ் யுத்தத்தின்போது ஒருநாள் நபிகளார் மண்சுமந்த வண்ணம் இவ்வாறு பாடிக்கொண்டு வருவதை நான் கண்டேன்: ''அல்லாஹ் மீது ஆணை! அவனது அருள் இன்றேல் நாங்கள் நல்வழி அடைந்திருக்க மாட்டோம்; தொழுதும் இருக்க மாட்டோம். எங்கள் மீது அமைதியைப் பொழிவாயாக! எதிரிகளை நாம் சந்திக்கும்போது எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக! இணைவைப்பாளர்கள் எங்களுக்கு அநீதி இழைத்து விட்டனர்; எங்களை சோதனையில் ஆழ்த்த இவர்கள் விரும்பினாலும் இடம் தர மாட்டோம்.!''[91]

*இதன் அறிவிப்பாளர் தொடர்: அபூ அல்- நுஃமான் முஹம்மத் இப்னு அல்-ஃபத்ல் (ம. ஹி. 224) ஜரீர் இப்னு ஹாஷிம் (ம. ஹி. 170) இடமிருந்து, அபூ இஷ்ஹாக் அம்ர் இப்னு அப்துல்லாஹ் (ம. ஹி. 129) இடமிருந்து, அல்-பரா இப்னு ஆஸிப் (ம. ஹி. 72) இடமிருந்து. இவ்வறிவிப்பாளர் அனைவரும் மிகவும் ஆதாரபூர்வமானவர்கள்.*

*இமாம் புஹாரி இதே அறிவிப்பை மேலதிகமாய் நான்கு இடங்களில் சிறிது வித்தியாசமான அறிவிப்பாளர் தொடர்கள் மூலம் பதிவுசெய்துள்ளார்.*[92]

*இக்கவித்துவ வரிகள் உண்மையான குர்ஆனிய உணர்வைப் பிரதிபலிக்கின்றன. 1. ''இந்த உன்னத நிலைக்கு எம்மை வழி நடாத்திய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அல்லாஹ் எங்களை நேர்வழியில் நடத்தியிராவிட்டால் நிச்சயமாக நாம் நேர்வழி யடைந்தவர்களாக இருந்திருக்க மாட் டோம்'' (7:43). 2. ''அல்லாஹ் தன்னுடைய தூதர்மீதும் விசுவாசிகள்மீதும் தன்னுடைய அமைதி யை இறக்கிவைத்தான்'' (48:26). 3. ''எங்கள் இரட்சகனே! எங்கள் மீது உறுதியான தன்மையைப் பொழிவாயாக! எங்கள் பாதங் களை உறுதியாக்கி வைப்பாயாக! நிராகரிப்பாளர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக! என அவர்கள் பிரார்த்தித்தனர்'' (2:250). 4. ''(அவர்களின்) அட்டூழியங்கள் இல்லாதொழிந்து*

*அல்லாஹ்வின் மார்க்கம் முற்றாக நிலைநாட்டப்படும்வரை அவர் களுடன் போர்புரியுங்கள்.'' (8:39)*

இவ்வழகிய கவிவரிகள் நபிகளாரின் கரிசனையையும் அவர் களின் பணிவோடான மன்றாட்டத்தையும் பிரதிபலிக்கின்றன. அல்லாஹ்விடம் விண்ணப்பிப்பது எவ்வாறு என்பதை இந்த ஹதீஸ் கற்றுத்தருகிறது. இதன் முதல் பகுதி அல்லாஹ்வைப் புகழ்கின்றது. அதனைத் தொடர்ந்து தேவை குறிப்பிடப்படு கின்றது. அல்லாஹ்விடம் விண்ணப்பிக்கும் பிரார்த்தனை ஒருவரின் வேண்டுதலை மட்டுமன்றி வாழ்வின்மீது நடைமுறை சாத்தியமான அணுகுமுறையையும் குறிப்பிடுகின்றது. ஒருவர் சத்தியவழியில் நிற்பதற்குப் பெரும் பிரயாசை வேண்டும். வழி காட்டல் என்பது மனிதனால் அடையப்படுவதன்று. அது அல்லாஹ்வின் அருட்கொடையும் மாபெரும் சலுகையுமாகும். அதுபோன்று அமைதியும் மேலிருந்து இறங்குவதாகும். வெற்றி தோல்வி இரண்டுமே அல்லாஹ்வின் கரங்களில் உள்ளவை. அல்லாஹ்விடமே எமது வேண்டுதல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மனிதன் அகந்தை கொள்ளக்கூடாது. அவனது மத நம் பிக்கை, உடைமைகள், சாதனைகள், மற்றும் அவனிடமுள்ளவை யாவுமே அவனுக்கு அல்லாஹ் அருளியனவாகும். இவற்றை யிட்டு ஒருவர் அகந்தை கொள்வதால், சுயபெருமை பாராட்டு வதால் இவை யாவையும் அவர் இழக்கவும் நேரிடலாம். அவரது உண்மையான மத நம்பிக்கையும், நேர்மையும் அவரை விட்டோடிவிடும்.

''அல்லாஹ்வின் வழிகாட்டலின்றி எமக்கு ஒருபோதும் வழி காட்டல் கிடைத்திராது'' என்ற நபிகளாரின் கூற்றுக்குத் தவறாகப் பொருள்கொள்ளக் கூடாது. அல்லாஹ் திருமறையை இறக்கி வைத்ததன் மூலம் மனுக்குலத்துக்குத் தேவையான வழிகாட்டலை ஏற்கனவே அருளிவிட்டான். அப்படியாயின், இப்போது மனித னின் பாத்திரம் திருமறையைக் கற்பதும், அதனைப் புரிந்துகொள் வதும் அதன்படி நடப்பதுமாகும். உண்மையில் அதற்கான ஆற்ற லையும் தீரத்தையும் அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ளான்.

மனிதன் எவ்வளவுதான் விவேகமும் வலிமையும் கொண்டிருப்பினும், குர்ஆன் இன்றி, அது வரையறுத்துத் தரும் வழிகாட்டலின் தரத்தை அவனால் ஒருபோதும் அடையமுடியாது. வழிகாட்டல் என்ற பெயரில் அவன் சுயமாக எதையும் உருவாக்கிக் கொள்ள எத்தனித்தால் அது இருளில் மறுகுதலாகவே முடியும். ஒடுக்கு முறை மனித இனத்தின் சாபக்கேடு. ஒடுக்குமுறையாளனிடமிருந்து மனிதனுக்கு விடுதலை பெற்றுக் கொடுப்பது எல்லா நபிமார்களதும் இலக்குகளில் ஒன்றாகும். ''நிச்சயமாக நாம் நம்முடைய தூதர்களைத் தெளிவான அத்தாட்சிகளுடன் அனுப்பிவைத்தோம். அவர்களுடன் வேதத்தையும் மனிதர்கள் நீதியில் நிலைத்திருப்பதற்குத் தராசையும் இறக்கினோம்.'' *(57:25).* மனித இனத்திற்கு சமாதானத்தையும் நீதியையும் கொணர்வதற்கே நபிகளார் விரும்பினார்கள். அஞ்ஞானத்தில் உழன்ற மூடர்களோ மக்களை ஒடுக்கவும் கொடுமைப்படுத்தவுமே விரும்பினார்கள். நபிகளார் தம் இலக்கை அடைவதற்காக இராணுவ நடவடிக்கைகளிலும் ஈடுபட நேர்ந்தது. இஸ்லாம் தோற்கடிக்கப்படுவதற்காக வரவில்லை, மனித இனத்திற்கு அறிவொளி பாய்ச்சி நீதியை நிலைநாட்டவே இஸ்லாம் வந்தது.

# குறிப்புகள்

CHAPTER 1

1. Ibn al-Athīr, ʿIz al-Dīn, *Al-Kāmil fī al-Tārīkh* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 1989), vol.2, pp.277–278.
2. Fallatah, Umar ibn Hasan Uthman, *Al-Waḍʿ fī al-Ḥadīth* (Damascus: Maktabah al-Ghazāly, 1981), vol.1, p.183.
3. Ahmad Amin, *Fajr al-Islām*, 5th edn.(Cairo: Compilation, Translation, and Publication Committee Press, 1930), p.258; Abu Zahw, Muhammad, *Al-Ḥadīth wa al-Muḥaddithūn*, 1st edn.(Cairo: 1958), p.480.
4. Muslim, ibn al-Ḥajjāj al-Qushayrī, *Ṣaḥīḥ* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 2000), "Muqaddimah," report no. 1–4.
5. Abu Shahbah, Muhammad, *Al-Isrā'iliyyāt wa al-Mawḍūʿāt fī al-Tafsīr* (Cairo: Majmaʿ al-Buḥūth al-Islāmiyyah, 1973), pp.32–34.
6. Subhi al-Salih, *ʿUlūm al-Ḥadīth wa Muṣṭalaḥuhu* (Beirut: Dār al-ʿIlm li al-Malāyīn, 1959), pp.266–267.
7. Ibn al-Jawzī, ʿAbd al-Raḥmān ibn ʿAlī, "*Kitāb al-Mawḍūʿāt*" (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 1995), vol.1, pp.328–329.
8. Ibid., p.330.
9. Ibid., p.331.
10. Ibid.
11. Ibid., p.334.
12. Ibid., p.335.
13. Ibid., p.338.
14. Ibid.
15. Ibid., p.323.
16. Ibn al-Athīr, vol.2, p.76.
17. Ibn al-Jawzī, "*Kitāb al-Mawḍūʿāt*," vol.1, p.325.
18. Ibid., p.254.
19. Ibid., p.259.
20. Ibid., pp.268–271.
21. Ibid., p.277.
22. Ibid., p.278.
23. Ibid., p.286.
24. Ibid., vol.2, p.290.
25. Ibid., vol.1, p.17.
26. Ibid., pp.352–353.
27. Ibid., p.15.
28. Ibid.
29. Ibid.
30. Ibid., p.64.

31. Ibid., p.146.
32. Ibid., p.404.
33. Ibid., p.396.
34. Ibid., p.375.
35. Ibid., p.90.
36. Ibid., p.206.
37. Ibid., p.207.
38. Ibid., p.16.
39. Ibid., pp.84–87.
40. Ibid., p.200.
41. Ibid., p.202.
42. Ibid., p.203.
43. Ibid., p.204.
44. Ibid., p.205.
45. Ibid., vol.2, p.22.
46. Ibid., p.23.
47. Ibid., vol.1, p.354.
48. Ibid., vol.2, pp.189–227.
49. Ibid., p.245.
50. Ibid., p.252.
51. Ibid., p.254.
52. Ibid., p.188.
53. Ibid.
54. Ibid., vol.1, p.20.
55. Ibid., p.22.
56. Ibid.
57. Ibid., p.142.
58. Ibid., p.143.
59. Ibid., pp.241–242.
60. Muslim, "*Kitāb Faḍā'il al-Ṣaḥābah*," tradition no.2542.
61. Ibn al-Jawzī, "*Kitāb al-Mawḍūʿāt*," vol.1, pp.350–351.
62. Ibid., p.17.
63. Ibid., p.18.
64. Ibid., vol.2, p.347.
65. Ibid., p.182.
66. Ibid., pp.33–67.
67. Ibid., p.30.
68. Ibid., vol.2, p.166.
69. Ibid., pp.340–345.
70. Ibid., vol.1, pp.357–372.
71. Muslim, "Muqaddimah," p.51.
72. Ibid., p.52.
73. Ibid.
74. Ibid., p.50.
75. Ibid.
76. Ibid., pp.50–51.
77. Ibid., p.51.
78. Ibid.
79. Ibid.
80. Ibid.
81. Ibn al-Jawzī, "*Kitāb al-Mawḍūʿāt*," vol. 1, p.25.
82. Ibid.
83. Ibid.

CHAPTER 2

1. Fallatah, *Al-Waḍʿ fī al-Ḥadīth* (Damascus: Maktabah al-Ghazāly, 1981), vol.1, p.178.
2. Abū Dāwūd, Sulaymān ibn al-Ashʿath, *Sunan* (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 1996), vol.3, "*Kiāb al-Adab*," hadith no.5180.
3. Ibid., hadith no.5183.
4. Fallatah, vol.1, p.180.
5. Muslim, *Ṣaḥīḥ* (Beirut: Dār al-Ma ʿrifah, 1997, with the commentary by al-Nawawī), vol.1, "Muqaddimah," p.39, hadith no.21.
6. Ibid., pp.39–40, hadith nos.22–24.
7. Muslim, vol.1, "Muqaddimah," p.44, hadith no.27.
8. Ibid., pp.44–45, hadith nos.28–29.
9. Ibid., pp.45–46, hadith no.30.
10. Ibid., pp.46–47, hadith no.32.
11. Ibid., pp.48–49, under hadith no.32.

12. Al-ᶜAsqalānī, Ibn Ḥajar, Aḥmad ibn ᶜAlī, *Hadiyy al-Sārī* (Riyadh: Dār al-Salām, n.d.), p.8.
13. Kamil Muhammad, Muhammad Uwaydah, *Aᶜlām al-Fuqahā' wa al-Muḥaddithīn: Al-Imām al-Bukhārī* (Beirut: Dār al-Kutub al-ᶜIlmiyyah, 1992), p.9.
14. Kamil Muhammad, *Aᶜlām al-Fuqahā' wa al-Muḥaddithīn: Muslim ibn al-Ḥajjāj* (Beirut: Dār al-Kutub al-ᶜIlmiyyah, 1995), p.14.
15. Tahan, Mahmud, *Taysīr Muṣṭalaḥ al-Ḥadīth* (Kuwait: Maktabah Dār al-Turāth, 1984), pp.34–35.
16. Ibn Kathīr, Abū al-Fidā Ismāᶜīl, *Al-Bāᶜith al-Ḥathīth*, 4th edn. Ahmad Muhammad Shakir, ed. (Beirut: Dār al-Kutub al-ᶜIlmiyyah, 1994), p.19.
17. Ibid., p.42.
18. Ibn Kathīr, p.20.
19. Tahan, p.146.
20. Ibid.
21. Al-Suyūṭī, Jalāl al-Dīn, *Tadrīb al-Rāwī* (Beirut: Dār al-Kutub al-ᶜIlmiyyah, 1989), vol.1, p.252.
22. Al-Khair Abadi, Muhammad Abul Laith, *Takhrīj al-Ḥadīth: Nash'atuhu wa Manhajuhu* (Kuala Lumpur: Dār al-Shākir, 1999), pp.268–274.
23. Ibid., p.265.
24. Mālik ibn Anas, *Al-Muwaṭṭa'* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ᶜArabī, 1985), vol.1, "*Kitāb al-Zakāh*," tradition no.52.
25. Muslim, vol.4, "*Kitāb al-Zakāh*," tradition nos.2275–2279.
26. Al-Khair Abadi, p.265. The example is not correct because what is referred to as addition is not addition but the part of the original statement of the Prophet. Al-Khair Abadi relies for this contention on al-Tirmidhī who claims that the words "from the Muslims" form addition. Vide, al-Timidhī, *Sunan*, "*Kitāb al-Zakāh*," tradition no.675.
27. Muslim, vol. 4, "*Kitāb al-Zakāh,*" tradition no.2377.
28. Al-Khair Abadi, p.266. He has used this tradition as an example of confusion (*iḍṭirāb*) because Ibn ᶜAbd al-Barr (d.463 AH) has declared the tradition as *muḍṭ arab*. On what basis he considers all these five traditions as one. Probably these are really five, and not only one.
29. Abū Dāwūd, "*Kitāb al-Ṣalāh*," tradition no.970.
30. Al-Suyūṭī, *Tadrīb al-Rāwī*, vol.1, p.268.
31. Al-Khair Abadi, p.267.
32. Ibn al-Jawzī, "*Kitāb al-Mawḍūᶜāt*," vol.1, "Muqaddimah," p.23.
33. Ibid., pp.11–14.
34. Al-Dumayni, Misfir Ghuram Allah, *Maqāyīs Naqd Mutūn al-Sunnah* (Riyadh: self published by the author, 1403 AH), pp.55–56.
35. Ibid., pp.69–70.
36. Ibid., p.90
37. Ibid. p.96.
38. Ibid., p.121.
39. Ibid., p.139.

40. Ibid., p.144.
41. Ibid., p.146.
42. Ibid., p.150.
43. Ibid., p.156.
44. Ibid., pp.167–180.
45. Ibid., p.185.
46. Ibid. p.196.
47. Ibid., p.208.
48. Ibid., p.124.
49. Ibid., p.310.
50. Ibid., p.352.
51. Ibid., p.384.
52. Ibid., p.406.
53. Ibid., pp.439–440.
54. Ibid., p.461.
55. Ibid., p.478.

CHAPTER 3

1. Al-Tirmidhī, Muḥammad ibn ʿĪsā, *Sunan* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 1995), vol.5, "*Kitāb al-Manāqib*," hadith no.3892.
2. Al-Bukhārī, Muḥammad ibn Ismāʿīl, *Ṣaḥīḥ* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 1400 AH), vol.1, "*Kitāb al-ʿIlm*," hadith no.103.
3. Ibid.
4. Muslim, vol.3, "*Kitāb al-Janā'iz*," hadith no.2151.
5. Al-Zarkashī, Badr al-Dīn, *Al-Ijābah*. Said al-Afghani, ed. (Beirut: al-Maktab al-Islāmī, 1980), pp.67–68.
6. Ibid., pp.85–86.
7. Ibid., p.104.
8. Ibid., p.139.
9. Muslim, vol.5, "*Kitāb al-Ṭalāq*," hadith nos.3681–3704.
10. Ibid., hadith no.3694.
11. Al-Qurṭubī, Muḥammad ibn Aḥmad, *Al-Jāmiʿ li Aḥkām al-Qur'ān* (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 2000), vol.4, part 7, p.77.
12. Al-Dumayni, Misfir Ghuram Allah, *Maqāyīs Naqd Mutūn al-Sunnah* (Riyadh: Self published by the author, 1403 AH), p.287.
13. Ibid., p.297.
14. Ibn al-Qayyim, Muḥammad ibn Abū Bakr, *Al-Manār al-Munīf fī al-Ṣaḥīḥ wa al-Ḍaʿīf*. Abd al-Fattah Abu Ghuddah, ed. (Ḥalab: Maktab al-Maṭbūʿāt al-Islāmiyyah, 1982), p.80.
15. Al-Bukhārī, vol.2, "*Kitāb al-Anbiyā'*," hadith nos.3357–3358; Muslim, vol.8, "*Kitāb al-Faḍā'il*," hadith no.6097.
16. *Al-Muʿjam al-Wasīṭ*. Ibrahim Mustafa and others, eds. (Istanbul: Al-Maktabah al-Islāmiyyah, n.d.), p.511.
17. Al-Aṣfahānī, al-Rāghib, *Al-Mufradāt fī Gharīb al-Qur'ān* (Beirut: Dār al-Maʿrifah, 1998), p.280.
18. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī* (Riyadh: Dār al-Salām, 2000), vol.6, p.473.
19. Ibn al-ʿArabī, Abū Bakr, *Aḥkām al-Qur'ān* (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 1996), vol.3, pp.262–263.
20. Al-Qurṭubī, *Al-Jāmiʿ li Aḥkām al-Qur'ān* (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 2000), vol.6, part 11, pp.198–200.
21. Ibn al-Jawzī, *Zād al-Masīr fī ʿIlm al-Tafsīr* (Beirut: Dār al-Kutub al-

ᶜIlmiyyah, 2002), vol.3, part 4, pp.266–268.

22. Al-Ālūsī, Al-Sayyid Maḥmūd, *Rūḥ al-Maᶜānī* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ᶜArabī, 1999), vol.9, part 17, pp.85–87.
23. Islahi, Amin Ahsan, *Tadabbur-i-Qur'ān* (Delhi: Taj Company, 1997), vol.5, pp.162–163.
24. Al-Rāzī, Fakhr al-Dīn, *Mafātīḥ al-Ghayb* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ᶜArabī, 1997), vol.8, p.156.
25. Mawdūdī, Sayyid Abul A'lā, *Tafhīm al-Qur'ān* (Lahore: Idara Tarjuman al-Qur'ān, 1997), vol.3, pp.167–168.
26. Sayyid Qutb, *Fī Ẓilāl al-Qur'ān* (Cairo: Dār al-Shurūq, 1996), vol.4, p.2387.
27. Al-Bukhārī, vol.4, "*Kitāb al-Qadar*," hadith no.6594; Muslim, vol.8, "*Kitāb al-Qadar*," hadith no.6665. The translation given is of the tradition as recorded by Muslim.
28. Proponents of predestination point to two particular verses of the Qur'an: (1) "Dost thou not know that God knows all that occurs in heaven as well as on earth? All this, behold, is in [God's] record: verily, [to know] all this is easy for God" (22:70). (2) No calamity can ever befall the earth, and neither your own selves, unless it be [laid down] in Our decree before We bring it into being: verily, all this is easy for God. [Know this,] so that you may not despair over whatever [good] has escaped you nor exult [unduly] over whatever [good] has come to you: for, God does not love any of those who, out of self-conceit, act in a boastful manner" (57:22–23). However, *āyah* 22:70 simply shows that Allah knows all that exists in the heaven and on earth. His knowledge is preserved in the Book. It in no way conveys a message concerning predestination. As for *āyah* 57:22–23 when understood and interpreted in the light of other *ayāt* which highlight man's freedom to think, choose, and act, it will mean that Allah has outlined laws and principles for the universe, that are immutable and written in the Book. The Book does not contain precise information of each and every event related to man. For example, Mr A suffers burns from a fire on 29th of July 2009 at 3pm at his house number …etc. Is this event written in the Book with such precise detail? Certainly not. What is written in the Book is that fire burns; whatever comes in contact with fire will get burnt; the fire will not cause anyone, anything, any place to feel cold.
29. Al-Bukhārī, vol.4, "*Kitāb al-Marḍā*," hadith no.5673, and "*Kitāb al-Riqāq*," hadith no.6464; Muslim, "*Kitāb Ṣifāt al-Munāfiqīn*," hadith nos. 7042–7054. The words of the tradition quoted above are from Muslim.

30. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.11, "*Kitāb al-Riqāq*," p.357.
31. Ibid., p.358.
32. Al-Ālūsī, vol.7, part 14, p.502.
33. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.11, p.358; Ibn ʿAṭṭiyyah, *Al-Muḥarrar al-Wajīz* (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 2001), vol.3, p.391.
34. Al-Bukhārī, vol.2, "*Kitāb al-Jihād wa al-Siyar*," hadith no.2946; Muslim, "*Kitāb al-Īmān*," hadith nos.124–130.
35. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.1, p.105.
36. Al-Nawawī, Muḥy al-Dīn, *Al-Minhāj: Sharḥ Ṣaḥīḥ Muslim* (Beirut: Dār al-Maʿrifah, 1997), vol.1, p.160.
37. Muhammad Asad, *The Message of the Qur'ān* (Gibraltar: Dar al-Andalus, 1980), p.58.
38. Al-Bukhārī, vol. 2, "*Kitāb Aḥādīth al-Anbiyā'*," hadith no.3407; Muslim, vol.8, "*Kitāb al-Faḍā'il*," hadith no.6101.
39. *The Holy Bible* (Authorized King James Version, The Gideons International, 1978), Genesis 32:22–32.
40. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.6, p.538.
41. Ibid.
42. Muslim, vol.8, hadith no.6100.
43. Al-Nawawī, vol.8, p.128.
44. Al-Bukhārī, vol.4, "*Kitab al-Qadar*," hadith no.6614; Muslim, vol.8, "*Kitāb al-Qadar*," hadith nos.6684–6689. The translation given above is based on the report according to Muslim's report no.6684.
45. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.11, p.622.
46. Ibid., p.621.
47. Ibid., p.623.
48. Muslim, vol.9, "*Kitāb Ṣifāt al-Munāfiqīn*," hadith no.6985.
49. Ibid., "*Kitāb al-Tawbah*," hadith no.6942.
50. Ibid., hadith no.6943–6944.
51. Ibid., hadith no.6945.
52. Ibn Mājah, Muḥammad ibn Yazīd al-Qazwīnī, *Sunan* (Beirut: Dār al-Maʿrifah, 1997: along with the commentary of al-Sindī), vol.4, "*Kitāb al-Zuhd*," hadith no.4341.
53. Muslim, vol.4, "*Kitāb al-Zakāt*," hadith no.2348.
54. Al-Nawawī, *Al-Minhāj: Sharḥ Ṣaḥīḥ Muslim*, vol.9, pp.87–88.
55. Muslim, vol.9, "*Kitāb al-Tawbah*," hadith no.6943.
56. Ibid., vol.5, "*Kitāb al-Riḍāʿ*," tradition no.36636; al-Bukhārī, vol.2, "*Kitāb Aḥādīth al-Anbiyā'*," tradition no.3399.
57. Al-Nawawī, vol.5, p.301.
58. Ibid.
59. Al-ʿAynī, Badr al-Dīn, *ʿUmdat al-Qārī: Sharḥ Ṣaḥīḥ al-Bukhārī* (Beirut: Dār al-Kutub al-ʿIlmīyyah, 2001), vol.15, p.291.
60. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī: Sharḥ Ṣaḥīḥ al-Bukhārī,* vol.6, p.444.
61. Muslim, "*Kitāb al-Salām*," tradition no.2225–2226; al-Bukhārī, vol.4, "*Kitāb al-Ṭibb*," tradition no.5753.

62. Al-ʿAynī, *ʿUmdat al-Qārī: Sharḥ Ṣaḥīḥ al-Bukhārī,* vol.21, p.406.
63. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī: Sharḥ Ṣaḥīḥ al-Bukhārī*, vol.6, pp.75–78.
64. Al-Zarkashī, Badr al-Dīn, *Al-Ijābah,* Saʿid al-Afghani, ed. (Beirut: Al-Maktab al-Islāmī, 1980), pp.103–104.
65. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī: Sharḥ Ṣaḥīḥ al-Bukhārī,* vol.6, p.76.

CHAPTER 4

1. The Qur'an, 4:59.
2. Al-Bukhārī, vol.4, "*Kitāb al-Iʿtiṣām bi al-Sunnah*," Bāb no.20.
3. Muslim, vol.2, "*Kitāb al-Ṣalāh*," hadith nos.1137–1139.
4. Ibid., hadith nos.1142–1144.
5. Ibid., "*Kitāb al-Ṭaharah*," hadith no.783.
6. Ibid., hadith no.776; al-Bukhārī, vol.1, "*Kitāb al-Wuḍū'*," hadith no.180.
7. Al-Nawawī, *Al-Minhāj: Sharḥ Ṣaḥīḥ Muslim,* vol.2, pp.261–262.
8. Muslim, vol.3, "*Kitāb al-Janā'iz*," hadith nos.2146–2150.
9. Ibid., hadith no.2151.
10. Al-Zarkashī, *Al-Ijābah,* p.72.
11. Ibid., pp.76–77.
12. Ibid., p.77.
13. Ibid., pp.81–83.
14. Ibid., p.93.
15. Ibid., p.94.
16. Ibid., p.97.
17. Ibid., p.97.
18. Ibid., p.98.
19. Ibid., p.100.
20. Ibid., pp.109–110.
21. Ibid., pp.110–111.
22. Ibid., p.101.
23. Muslim, vol.6, "*Kitāb al-Aqḍiyah*," hadith no.4447.
24. Ibid, hadith no.354; al-Bukhārī, vol. 2, "*Kitāb al-Rahn*," hadith nos.2515–2516.
25. Muslim, vol.8, "*Kitāb al-Qadar,*" hadith no.6712–6715.
26. Muslim, vol.8, "*Kitāb Faḍā'il al-Ṣaḥābah*," hadith nos.6322–6326; al-Bukhārī, vol.4, "*Kitāb al-Daʿwāt*," hadith no.6344.
27. For example see, Al-Bukhārī, vol. 4, "*Kitāb al-Daʿwāt*," hadith nos.6375–6377.
28. Al-Bukhārī, vol.1, "*Kitāb al-Wuḍū'*," hadith no.233; Muslim, vol.6, "*Kitāb al-Qasāmah*," hadith nos. 4329–4335.
29. Al-Bukhārī, vol.1, "*Kitāb al-Wuḍū'*," hadith no.220; Muslim, vol.2, "*Kitāb al-Ṭahārah*," hadith nos. 657–659.
30. Al-Bukhārī, vol.1, "*Kitāb al-Wuḍū'*," hadith no.216.
31. Muslim, vol.2, "*Kitāb al-Ṭahārah*," hadith no.654.
32. Al-Nawawī, *Al-Minhāj: Sharḥ Ṣaḥīḥ Muslim,* vol.6, pp.155–156.
33. The Qur'an, 7:157.
34. Al-Bukhārī, vol.4, "*Kitāb al-Ḥudūd*," hadith no.6858; Muslim, vol.6, "*Kitāb al-Aymān*," hadith no.4287.
35. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.12, "*Kitāb al-Ḥudūd*," p.229.
36. Ibid.

37. Al-Nawawī, *Al-Minhāj: Sharḥ Ṣaḥīḥ Muslim,* vol.6, p.134.
38. Al-Bukhārī, vol.1, "*Kitāb al-Īmān*," hadith no.30; Muslim, vol.6, "*Kitāb al-Aymān*," hadith no.4289.
39. Muslim, vol.6, "*Kitāb al-Aymān*," hadith no.4274.
40. Al-Bukhārī, vol.6, "*Kitāb al-Ḥudūd*," hadith no.4408.
41. Muslim, vol.5, "*Kitab al-Musāqāt*," hadith nos.3987–3990.
42. Al-Nawawī, *Al-Minhāj: Sharḥ Ṣaḥīḥ Muslim,* vol.5, "*Kitāb al-Musāqāt*," p.477.
43. Ibid., p.478.
44. Muslim, vol.5, "*Kitāb al-Musāqāt*," hadith nos.4014–4018; al-Bukhārī, vol.2, "*Kitāb al-Ijārah*," hadith no.2281.
45. Ibid., vol.8, "*Kitāb al-Shiʿr*," tradition nos.5853–5855; Al-Bukhārī, "*Kitāb al-Adab*," tradition no.6155.
46. Al-Zarkashī, *Al-Ijābah*, p.111.
47. Muslim, vol.8, "*Kitāb Faḍā'il al-Ṣaḥābah*," tradition nos.6334–6345; al-Bukhārī, "*Kitāb al-Ṣalāh*," tradition no.453.

CHAPTER 5

1. Al-Zamakhsharī, Maḥmūd ibn ʿUmar, *Al-Kashshāf* (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 1995), vol.3, p.287.
2. Muslim, vol.5, "*Kitāb al-Riḍāʿ*," hadith no.3585–3590.
3. Al-Nawawī, vol.5, pp.273–274.
4. Muslim, vol.5, "*Kitāb al-Riḍāʿ*," hadith nos.3588–3589.
5. This is the summery developed on the basis of information available under the biographies of Abū Ḥudhayfah, his wife Sahlah bint Suhayl, Sālim. See for the detail, Ibn al-Athīr, *Usd al-Ghābah* (Beirut: Dār al-Ma ʿrifah, 1997), vol.4, pp.416–417 (for Abū Ḥudhayfah), vol.5, pp.316–317 (for Sahlah bint Suhayl), vol.2, pp.260–262 (for Sālim).
6. Muslim, vol.7, "*Kitāb al-Imārah*," hadith nos.4811–4812.
7. Al-Nawawī, vol.5, p.274.
8. Muslim, vol.5, "*Kitāb al-Riḍāʿ*," hadith nos.3575–3581. In these traditions three different terms have been used to refer to foster relationship: 1) *al-Maṣṣah*, 2) *al-Raḍʿah*, and 3) *al-Imlājah*. All these three words mean sucking milk directly from the breast.
9. Al-Bukhārī, vol., "*Kitāb aḥādīth al-Anbiyā'*," hadith no.3340 & 3361; Muslim, vol.2, "*Kitāb al-Īmān*," hadith nos.474–481.
10. Muslim, vol.8, "*Kitāb al-Faḍā'il*," hadith nos.6109–6110.
11. Al-Bukhārī, vol.1, "*Kitāb al-Ghusl*," hadith no.278; Muslim, vol.2, "*Kitāb al-Ḥayḍ*," hadith no.768.
12. Al-Nawawī, vol.8, p.126.
13. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.1, p.501.
14. Muslim, vol.9, "*Kitāb al-Tawbah*," hadith no.6954.
15. Ibn al-Athīr, *Al-Kāmil fī al-Tārīkh* (Beirut: Dār Iḥyā'

al-Turāth al-ʿArabī, 1994), vol.5, p.394.

16. Muslim, vol.5, "*Kitāb al-Liʿān*," hadith nos.3736–3748.
17. Ibn al-Athīr, op. cit., vol.5, p.394.
18. Muslim, vol.3, "*Kitāb al-Masājid*," hadith nos.1479–1483; al-Bukhārī, vol.1, "*Kitāb al-Adhān*," hadith no.644.
19. Muslim, vol.8, "*Kitāb al-Faḍā'il*," hadith no.6061.
20. Abū Dāwūd, vol.3, "*Kitāb al-Adab*," hadith no.5268.
21. Muslim, vol.3, "*Kitāb al-Masājid*," hadith no.1480.
22. Muhammad Asad, *The Message of the Qur'ān* (Gibraltar: Dar al-Andalus, 1980), p.92.
23. Al-Bukhārī, vol. 2, "*Kitāb al-Jihād*," hadith nos.2788–2789; Muslim, vol.7, "*Kitāb al-Imārah*," hadith no.4911.
24. Ibn al-Athīr, op. cit., vol.5, p.435.
25. Ibn al-Athīr, op. cit., vol.1, p.453.
26. Al-Nawawī, vol.7, p.59.
27. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.11, "*Kitāb al-Isti'dhān*," p.93.
28. Ibid.
29. Ibid.
30. Ibid.
31. Salmā bint ʿAmr ibn Zayd ibn Labīd ibn Kharrāsh ibn ʿĀmir ibn Ghanam ibn ʿUday ibn Najjār; Umm Ḥarām bint Milḥān ibn Khālid ibn Zayd ibn Ḥarām ibn Jundub ibn ʿĀmir ibn Ghanam ibn ʿUday ibn Najjār.
32. Ibid.
33. Ibn ʿAbd al-Barr, Yūsuf ibn ʿAbd Allah, *Al-Istīʿāb fī Maʿrifat al-Aṣḥāb* (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 1995), vol.1, p.134.
34. Ibid., p.199.
35. Ibid., vol.4, p.494.
36. Ibid.
37. Ibn al-Athīr, *Usd al-Ghābah*, vol.5, p.456.
38. Abū Ṭalḥah died in 51 AH at the age of 70. It means he was only 21 at the time of his marriage to Umm Sulaym. See for the detail: Ibn al-Athīr, vol.5, pp.19–20.
39. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.11, "*Kitāb al-Isti'dhān*," pp.93–94.
40. The Qur'an, 33:50 declares that the only the Prophet was allowed to marry as many women as he wished; it was not allowed for his followers. There are several tradition making it clear that certain things were only for the Prophet. For example, the Prophet's property was not for distribution among his legal heirs but it belonged to the entire Ummah. See for this, Muslim, vol.6, "*Kitāb al-Jihād*," hadith no.4552.
41. Muslim, vol.7, "*Kitāb al-Imārah*," hadith nos.4811–4812.
42. Muslim, vol.9, "*Kitāb al-Tawbah,*" hadith nos.6898–6899.
43. Al-Bukhārī, vol.4, "*Kitāb al-Ḥudūd*," hadith no.6830.
44. Abrogation in the Qur'an is a controversial issue. For a detailed and comprehensive understanding of abrogation in the Qur'an, please see: Khan, Israr Ahmad, *Theory of Abrogation: A Critical*

*Evaluation*, Research Management Centre, International Islamic University Malaysia, Kuala Lumpur, 2006.) Also see, Dr. Taha J. Alalwani, *Naḥwa Mawqif Qur'ānī min al-Naskh* [Towards a Qur'anic Position on Abrogation] (Egypt: Maktabah al-Shorouk al-Dawliyyah, 2007), in which he rejects the concept of abrogation entirely.

45. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.12, "*Kitāb al-Ḥudūd*," p.192.
46. Mālik ibn Anas, *Al-Muwaṭṭa'* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 1985) vol.2, "*Kitab al-Ḥudūd*," hadith no.10; Al-Nasā'ī, Aḥmad ibn Shuʿayb, *Al-Sunan al-Kubrā* (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 1991), vol.4, "*Kitāb al-Rajm*," hadith no.7156.
47. Islahi, vol.5, pp.366–367.
48. Ibid., p.367.
49. Ibn Kathīr, *Tafsīr al-Qur'ān al-ʿAẓīm* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 2000), vol.4, pp.329–330.
50. Al-Bukhārī, vol.1, "*Kitāb al-Ḥayḍ*," hadith no.304; Muslim, vol.1, "*Kitāb al-Īmān*," hadith no.238.
51. Al-Nawawī, vol.1, "*Kitāb al-Īmān*," p.255.
52. Ibn al-Athīr, *Al-Kāmil fī al-Tārīkh*, vol.1, p.586.
53. Muhammad Asad, p.63.
54. Al-Nasā'ī, Aḥmad ibn Shuʿayb, *Sunan* (Beirut: Dār al-Kutub al-ʿIlmīyyah, 1991), vol.5, "*Kitāb ʿIshrat al-Nisā'*," hadith no.8888.
55. Al-Bukhārī, vol.3, "*Kitāb al-Nikāḥ*," hadith no.5069.
56. Muslim, "*Kitāb al-Ṭalāq*," tradition no.3663; al-Bukhārī, vol.3, "*Kitāb al-Ṭalāq*," tradition no.5267.
57. Muslim, "*Kitāb al-Ṭalāq*," tradition no.3664; al-Bukhārī, vol.3, "*Kitāb al-Aṭʿimah*," tradition no.5431.
58. Al-Nawawī, vol.5, pp.317–318.
59. Al-ʿAynī, vol.19, p.358.
60. Islahi, vol.8, pp.457–458.
61. Muslim, "*Kitāb al-Salām*," tradition no.2241 (148–150).

CHAPTER 6

1. *The Holy Bible*, op.cit., Genesis 19:29–38.
2. The Qur'an, 21:74–75.
3. Al-Bukhārī, vol.1, "*Kitāb al-Zakāh*," hadith no.1420.
4. Ibn Saʿd, *Al-Ṭabaqāt al-Kubrā* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 1996), vol.4, part 8, p.269. Ibn al-Athīr says that Sawdah died towards the end of ʿUmar's Caliphate i.e. 23 AH (See, *Usd al-Ghābah*, vol.5, p.319). Whether Sawdah died in 23 AH or in 54 AH, it is clear that she dies after the death of Zaynab bint Jaḥsh.
5. Ibn al-Athīr, *Usd al-Ghābah*, vol.5, p.296.
6. Muslim, vol.8, "*Kitāb Faḍā'il al-Ṣaḥābah*," hadith no.6266.
7. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.3, p.364.

8. Al-Nawawī, vol.8, p.227.
9. Al-Bukhārī, vol.1, "*Kitāb al-Janā'iz*," hadith no.1280.
10. Muslim, vol.5, "*Kitāb al-Ṭalāq*," hadith no.3709.
11. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.3, "*Kitāb al-Janā'iz*," p.188.
12. Al-Bukhārī, vol.3, "*Kitāb al-Maghāzī*," hadith no.4086.
13. Ibn Hishām, Abū Muḥammad ᶜAbd al-Mālik, *Al-Sīrah al-Nabawiyyah* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ᶜArabī, 1997), vol.2, pp.289–321; Ibn Saᶜd, vol.2, part 3, See the list of Muslim combatants on pp.509–515; Ibn Kathīr, *Al-Bidāyah wa al-Nihāyah* (Beirut: Dār al-Maᶜrifah, 1997), vol.2, pp.334–345.
14. Ibn Hishām, vol.2, p.322.
15. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.7, "*Kitāb al-Maghazī*," p.477.
16. Al-Bukhārī, vol.2, "*Kitāb al-Buyūᶜ*," hadith no.2122.
17. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.4, "*Kitāb al-Buyūᶜ*," pp.431–432.
18. Ibid., p.432.
19. Al-Bukhārī, vol.3, "*Kitāb Faḍā'il al-Ṣaḥābah*," hadith no.3696.
20. Muslim, vol.6, "*Kitāb al-Ḥudūd*," hadith no.4432.
21. Al-Bukhārī, vol.3, "*Kitāb Faḍā'il al-Ṣaḥābah*," hadith no.3872.
22. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.7, p.73.
23. Muslim, vol.8, "*Kitāb al-Faḍā'il*," hadith no.6055.
24. Ibid., hadith nos.6049–6052.
25. Al-Nawawī, vol.8, p.102.
26. Ibn Saᶜd, vol.2, part 2, p.404.
27. Muslim, vol.8, "*Kitāb al-Faḍā'il*," hadith no.6053.
28. Ibid., hadith no.6050.
29. Ibn ᶜAbd al-Barr, vol.1, p.143, 147.
30. Al-Bukhārī, vol.2, "*Kitāb Aḥādīth al-Anbiyā'*," hadith no.3366; Muslim, vol.3, "*Kitāb al-Masājid*," hadith nos.1161–1162.
31. The Qur'an, 22:25–26.
32. Ibn al-Athīr, *Al-Kāmil fī al-Tārīkh*, vol.1, pp.157–158.
33. The Qur'an, 11:71; 12:4–6.
34. The Qur'an, 12:54–56
35. The story of Moses is spread over many chapters of the Qur'an: 2, 7, 10, 17, 20 etc.
36. The Qur'an, 2:251.
37. The Qur'an, 38:30
38. Ibn Ḥajar, *Fatḥal-Bārī*, vol.6, "*Kitāb Aḥādīth al-Anbiyā'*," p.494.
39. Al-Qurṭubī, vol.2, part 4, pp.88–89.
40. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.6, p.495.
41. The Qur'an, 22:26.
42. Al-Nasā'ī, vol.1, "*Kitāb al-Masājid,*" hadith no.772.
43. Muslim, vol.8, "*Kitāb al-Faḍā'il*," hadith no.6359.
44. Ibn Hishām, vol.4, pp.50–52; Ibn al-Athīr, *Al-Kāmil fī al-Tārīkh*, vol.1, pp.611–613.
45. *ᶜUlamā'* and *Fuqahā'* are all unanimous over the validity of marriage solemnized in a situation where both bride and groom are at different places, even thousands of kilometers away from each other. It was

Negus who solemnized the marriage of Umm Ḥabībah with the Prophet after he received the proposal plus consent of the Prophet from Madinah. Remember, the Negus had accepted Islam.

46. Ibn ʿAbd al-Barr, vol.4, p.484; Ibn al-Athīr, *Al-Kāmil fī al-Tārīkh*, vol.1, pp.582–586.
47. Ibn Hishām, vol.4, p.44.
48. Al-Nawawī, vol.8, p.279.
49. Ibid., p.280.
50. Ibid.
51. Ibid., pp.280–281.
52. Al-Bukhārī, vol.3, "*Kitāb al-Nikāḥ*," hadith no.5114 (al-Bukhārī has not mentioned the name of Maymūnah); Muslim, vol.5, "*Kitāb al-Nikāḥ*," hadith nos.3437–3438.
53. Muslim, vol.5, "*Kitāb al-Nikāḥ*," hadith no.3439.
54. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.9, p.207.
55. Al-Nawawī, vol.5, p.197.
56. Ibid.
57. Muslim, vol.5, "*Kitāb al-Nikāḥ*," hadith nos.3432–3436.
58. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.9, p.207.

CHAPTER 7

1. Ibn al-Jawzī, "*Kitāb al-Mawḍūʿāt*" (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 1995), vol.2, pp.63–64.
2. Ibid., pp.65–66. Editor's note: Some of the scholars are of the opinion that when so many of the narrators of a hadith are not reliable, having multiple chains of narrators may grant some degree of authority to render it acceptable.
3. Ibid., pp.39–40.
4. Ibn al-Qayyim, *Al-Manār al-Munīf fī al-Ṣaḥīḥ wa al-Ḍaʿīf*, p.44.
5. Ibid. p.45.
6. Ibn al-Jawzī, "*Kitāb al-Mawḍūʿāt*," vol.1, p.190.
7. Ibid., vol.2, p.350.
8. Ibid.
9. Ibid.
10. Ibid.
11. Ibid., p.347.
12. Ibid., pp.330–331.
13. Ibid., p.330.
14. Ibn al-Qayyim, pp.50–51.
15. Ibn al-Jawzī, "*Kitāb al-Mawḍūʿāt*," vol.2, p.326.
16. Ibid.
17. Ibid.
18. Ibid., vol.1, p.205.
19. Ibid.
20. Ibid., pp.352–353.
21. Ibid., p.353.
22. Ibid., p.354.
23. Ibn al-Qayyim, p.117.
24. Ibn al-Jawzī, "*Kitāb al-Mawḍūʿāt*," vol.1, p.353.
25. Ibid., p.339.
26. Ibid., p.341.
27. Ibid., p.178.
28. Ibid., pp.179–180.
29. Ibid., p.181.
30. Ibid., p.183.
31. Ibid., p.185.
32. Ibid., p.359
33. Ibid., p.357.
34. Ibid., p.374.

CHAPTER 8


1. Ibn Ḥajar, *Hadiyy al-Sārī* (Riyadh: Dār al-Salām, n.d.), pp.12–14.
2. Al-Farāhīdī, Al-Khalīl ibn Aḥmad, *Kitāb al-ʿAyn* (Beirut: Dār Iḥya' al-Turāth al-ʿArabī, 2001), p.772.
3. Al-Aṣfahānī, (Beirut: Dār al-Maʿrifah, 1998), p.395.
4. Al-Fayrūzābādī, Muḥammad ibn Yaʿqūb, *Al-Qāmūs al-Muḥīṭ* (Beiryt: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 1997), vol.1, p.641.
5. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī* (Riyadh: Maktabah Dār al-Salām, 2000), vol.11, p.582.
6. Ibid.
7. Al-Qasṭalānī, Aḥmad ibn Muḥammad, *Irshād al-Sārī li Sharḥ Ṣaḥīḥ al-Bukhārī* (Beirut: Dār al-Fikr, 1305 AH), vol.9, p.343.
8. Hamzah Muhammad Qasim, *Manār al-Qārī* (Damascus: Maktabah Dār al-Bayān, 1990), part 5, p.307.
9. Ibid.
10. Ibid.
11. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.11, p.582.
12. Al-Bukhārī, *Ṣaḥīḥ Bukhārī*, vol.4, Book 55, hadith no.549.
13. Ibn Ḥajar, *Taqrīb al-Tahdhīb* (Beirut: Dār al-Maʿrifah, 1997), vol.2, p.325 (Hishām); vol.1, p.338 (Shuʿbah), p.319 (Sulaymān), and p.270 (Zayd).
14. Please, visit http://www.nlm. nih. gov/medlineplus/ency/article/ 002398.htm. The title of the article is "Medline Plus Encyclopedia: Fetal Development."
15. Keith L. Moore, "A Scientist's Interpretation of References to Embryology in the Qur'an," in *The Journal of Islamic Medical Association*, vol. 18, Jan–June 1986, pp.15–16; Khan, Israr Ahmad, *Qur'anic Studies: An Introduction* (Zaman Islam Media, 2000), p.22.
16. Ibn Ḥajar, *Taqrīb al-Tahdhīb*, p.385.
17. Ibn Ḥajar, *Tahdhīb al-Tahdhīb*, vol.2, p.254.
18. Al-Dhahbī, Muḥammad ibn Aḥmad, *Mizān al-Iʿtidāl fī Naqd al-Rijāl* (Beirut: Dār al-Maʿrifah, n.d.), vol.2, p.107.
19. Ibn Ḥajar, *Taqrīb al-Tahdhīb*, p.270.
20. Muslim ibn al-Ḥajjāj, *Ṣaḥīḥ* (Beirut: with al-Nawawī's commentary, Dār al-Maʿrifah, 1997), vol.8, "*Kitāb al-Qadar*," p.409, hadith no.6668.
21. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.11, p.588.
22. Al-Bukhārī, *Ṣaḥīḥ*, vol.2, "*Kitāb Bad'u al-Khalq*," p.424, hadith no.3208.
23. Ibid., vol.4, "*Kitāb al-Tawḥīd*," pp.395–396, hadith no.7454.
24. Al-ʿAynī, Badr al-Dīn, *ʿUmdat al-Qārī Sharḥ Ṣaḥīḥ al-Bukhārī* (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 2001), vol.23, p.225.
25. Hamzah Muhammad Qasim, *Manār al-Qārī*, part 5, p.307.
26. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.11, p.583.

27. See for detailed information: Al-Khair Abadi, ʿ*Ulūm al-Ḥadīth: Aṣīluhā wa Muʿāṣiruhā* (Malaysia: Dār al-Shākir, 2003), pp.119–120.
28. Al-Bukhārī, *Ṣaḥīḥ*, vol.2, "*Kitāb Bad'u al-Khalq*," p.424, hadith no.3208; "*Kitāb Aḥādīth al-Anbiyā'*," p.451, hadith no.3332; vol.4, "*Kitāb al-Qadar*," p.208; "*Kitāb al-Tawḥīd*," pp.395-396, hadith no.7454. These reports are recorded on the authority of ʿAbd Allah ibn Masʿūd. And for the reports on the authority of Anas ibn Mālik, vol.1, "*Kitāb al-Ḥayḍ*," p.119, hadith no.318; vol.2, "*Kitāb Aḥādīth al-Anbiyā'*," p.451, hadith no.3333; vol.4, "*Kitāb al-Qadar*," p.208, hadith no.6595.
29. Muslim, vol.8, "*Kitāb al-Qadar*," pp.407–411. Reports of Ibn Masʿūd are under hadith nos.6665–6666; those of Ḥudhayfah ibn Asīd are under hadith nos.6667–6671; and that of Anas ibn Mālik, is under hadith no.6672.
30. Aḥmad ibn Ḥanbal, *Musnad* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 1994), vol.4, p.561, hadith no.15649.
31. Al-Tirmidhī, *Al-Jāmiʿ al-Ṣaḥīḥ* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 1995), vol.4, p.448, hadith no.2144.
32. Al-Bukhārī, *Ṣaḥīḥ*, vol.4, "*Kitāb al-Daʿwāt*," p.161, hadith no.6344.
33. Abū Dāwūd, vol.1, "*Kitāb al-Ṣalāh*," hadith no.1551.
34. Al-Fayrūzābādī, vol.2, p.1705.
35. Abū Dāwūd, vol.3, "*Kitāb al-Adab*," p.336, hadith no.5116.
36. Al-Bukhārī, *Ṣaḥīḥ*, vol.4, "*Kitab al-Qadar*," p.208, hadith no.6595.
37. Al-Bukhārī, *Ṣaḥīḥ*, vol.4, "*Kitāb al-Qadar*," p.208.
38. Ibid., vol.3, "*Kitāb al-Nikāḥ*," p.357, hadith no.5076.
39. Ibid. p.375, hadith no.5149.
40. Ibid. p.356, hadith nos.5071, 5073–5075.
41. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.11, p.598.
42. ʿAbdullah Yūsuf ʿAlī, *English Translation of the Qur'ān* (Madinah: King Fahd Complex for the Printing of the Qur'an, 1413 AH), p.1226.
43. Ibid., p.1664.
44. Al-Bukhārī, *Ṣaḥīḥ*, vol.4, "*Kitāb al-Qadar*," p.208, hadith no.6596.
45. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.11, p.599.
46. Muslim, vol.8, "*Kitāb al-Qadar*," pp.414–415, hadith no.6681.
47. Al-Bukhārī, *Ṣaḥīḥ*, vol.4, "*Kitāb al-Qadar*," p.209, hadith no.6599.
48. Ibid., vol.1, "*Kitāb al-Janā'iz*," pp.416–417, hadith nos.1358 & 1359 and p.424, hadith no.1385.
49. Ibid., hadith no.6601.
50. Ibid., vol.2, "*Kitāb al-Buyūʿ*," p.100, hadith no.2140; "*Kitāb al-Shurūṭ*," p.76, hadith no.2723; vol.3, "*Kitāb al-Nikāḥ*," p.373,

hadith no.5144; pp.375–376, hadith no.5152.

51. Ibid. vol.1, "*Kitāb al-Janā'iz,*" p.396, hadith no.1284; vol.4, "*Kitāb al-Marḍā,*" p.26, hadith no.5655; vol.4, "*Kitāb al-Aymān wa al-Nudhūr,*" p.220, hadith no.6655; vol.4, "*Kitāb al-Tawḥīd,*" p.379, hadith no.7377; vol.4, "*Kitāb al-Tawḥīd,*" p.394, hadith no.7448.
52. Ibid., "*Kitāb al-Qadar,*" p.210, hadith no.6604.
53. Ibn Ḥajar, *Tahdhīb al-Tahdhīb*, vol.5, p.562.
54. Ibid., pp.561–562.
55. Al-Bukhārī, *Ṣaḥīḥ*, vol.2, "*Kitāb Bad'u al-Khalq,*" p.418, hadith no.3192.
56. Ibid., vol.4, "*Kitāb al-Qadar,*" p.210, hadith no.6605.
57. Ibid., vol.1, "*Kitāb al-Janā'iz,*" p.418, hadith no.1362; vol.3, "*Kitāb Tafsīr al-Qur'ān,*" p.324, hadith no.4945; p.325, hadith no.4946; p.325, hadith no.4947; pp.325–326, hadith no.4948; p.326, hadith no.4949; vol.4, "*Kitāb al-Adab,*" p.131–132, hadith no.6217; "*Kitāb al-Tawḥīd,*" p.417, hadith no.7552.
58. Ibid., "*Kitāb al-Qadar,*" p.210, hadith no.6606.
59. Ibid., "*Kitāb al-Maghāzī,*" p.136, hadith no.4203.
60. Ibid., vol.4, "*Kitāb al-Qadar,*" p.210, hadith no.6607.
61. Ibid., hadith no.6608.
62. Ibid., vol.4, "*Kitāb al-Aymān wa al-Nudhūr,*" pp.227–228, hadith no.6693.
63. Ibid., "*Kitāb al-Qadar,*" p.211, hadith no.6609.
64. Ibid., hadith no.6610.
65. Ibn Ḥajar, *Tahdhīb al-Tahdhīb*, vol.2, pp.77–78.
66. Al-Bukhārī, *Ṣaḥīḥ*, vol.2, "*Kitāb al-Jihād wa al-Siyar,*" p.356, hadith no.2992; vol.3, "*Kitāb al-Maghāzī,*" p.136, hadith no.4205; vol.4, "*Kitāb al-Daᶜwāt,*" p.168, hadith no.6384; p.174, hadith no.6409; "*Kitāb al-Tawḥīd,*" p.381, hadith no.7386.
67. Ibid., vol.4, "*Kitāb al-Qadar,*" p.211, hadith no.6611.
68. Ibid., "*Kitāb al-Aḥkām,*" p.342, hadith no.7198.
69. Ibid., vol.4, "*Kitāb al-Qadar,*" pp.211–212, hadith no.6612.
70. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.11, p.613.
71. Al-ᶜAynī, *ᶜUmdat al-Qārī*, vol.23, pp.241–242.
72. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.11, p.614.
73. Al-Bukhārī, *Ṣaḥīḥ*, vol.4, "*Kitāb al-Qadar,*" p.212, hadith no.6613.
74. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.11, pp.614–615.
75. Al-Bukhārī, *Ṣaḥīḥ*, vol.4, "*Kitāb al-Qadar,*" p.212, hadith no.6614.
76. Ibid., vol.2, "*Kitāb Aḥādīth al-Anbiyā',*" p.478–479, hadith no.3409; vol.3, "*Kitāb Tafsīr al-Qur'ān,*" p.260, hadith nos.4736 & 4738; vol.4, "*Kitāb al-Tawḥīd,*" p.407, hadith no.7515.
77. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.11, p.622.

78. Ibid., p.621.
79. Ibid., p.623.
80. Al-Bukhārī, *Ṣaḥīḥ*, vol.4, "*Kitāb al-Qadar*," p.212, hadith no.6615.
81. Ibn Ḥajar, *Tahdhīb al-Tahdhīb*, vol.4, pp.488–489.
82. Al-Bukhārāī, *Ṣaḥīḥ*, vol.1, "*Kitāb Mawāqīt al-Ṣalāh*," p.271, hadith no.844; vol 4, "*Kitāb al-Daʿwāt*," p.159, hadith no.6330; vol.4, "*Kitāb al-Tamannī*," p.362, hadith no.7292.
83. Al-ʿAynī, *ʿUmdat al-Qārī*, vol.23, p.247.
84. Al-Bukhārī, *Ṣaḥīḥ*, vol.4, "*Kitāb al-Qadar*," p.212, hadith no.6616.
85. Ibid., "*Kitāb al-Daʿwāt*," p.162, hadith no.6347.
86. Ibid., p.213, hadith no.6617.
87. Ibid., "*Kitāb al-Aymān wa al-Nudhūr*," p.215, hadith no.6628; "*Kitāb al-Tawḥīd*," p.382, hadith no.7391.
88. Ibn Ḥajar, *Fatḥ al-Bārī*, vol.11, p.640.
89. Ibid., vol.4, "*Kitāb al-Qadar*," p.213, hadith no.6619.
90. Ibid, vol.2, "*Kitāb al-Anbiyā'*," pp.498–499, hadith no.3474; vol.4, "*Kitāb al-Ṭibb*," p.42, hadith no.5734.
91. Ibid., vol.4, "*Kitāb al-Qadar*," p.213, hadith no.6620.
92. Ibid.,vol.2, "*Kitāb al-Jihād wa al-Siyar*," p.316, hadith no.2837; p.367, hadith no.3034; vol.3, "*Kitāb al-Maghāzī*," p.116, hadith no.4104; vol.4, "*Kitāb al-Tamannī*," p.351, hadith no.7236.

# உசாத்துணைகள்


Abū Dāwūd, Sulaymān ibn al-Ashᶜath, *Sunan* (Beirut: Dār al-Kutub al-ᶜIlmiyyah, 1996).

Abu Shahbah, Muhammad, *Al-Isrā'iliyyāt wa al-Mawḍūᶜāt fī al-Tafsīr* (Cairo: Majmaᶜ al-Buḥūth al-Islāmiyyah, 1973).

Abu Zahw, Muhammad, *Al-Ḥadīth wa al-Muḥaddithūn*, 1st edn.(Cairo: 1958).

ᶜAlī, ᶜAbdullah Yūsuf , *English Translation of the Qur'ān* (Madinah: King Fahd Complex for the Printing of the Qur'an, 1413 AH).

Al-Ālūsī, al-Sayyid Maḥmūd, *Rūḥ al-Maᶜānī* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ᶜArabī, 1999).

Amin, Ahmad, *Fajr al-Islām*, 5th edn.(Cairo: Compilation, Translation, and Publication Committee Press, 1930).

Asad, Muhammad, *The Message of the Qur'ān* (Gibraltar: Dar al-Andalus, 1980).

Al-Aṣfahānī, al-Rāghib, *Al-Mufradāt fī Gharīb al-Qur'ān* (Beirut: Dār al-Ma ᶜrifah, 1998).

Al-ᶜAsqalānī, Ibn Ḥajar, Aḥmad ibn ᶜAlī, *Hadiyy al-Sārī* (Riyadh: Dār al-Salām, n.d.).

Alᶜ Aynī, Badr al-Dīn, *ᶜUmdat al-Qārī: Sharḥ Ṣaḥīḥ al-Bukhārī* (Beirut: Dār al-Kutub al-ᶜIlmīyyah, 2001).

Al-Bukhārī, Muḥammad ibn Ismāᶜīl, *Ṣaḥīḥ* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ᶜArabī, 1400 AH).

Al-Dhahbī, Muḥammad ibn Aḥmad, *Mizān al-Iᶜtidāl fī Naqd al-Rijāl* (Beirut: Dār al-Maᶜrifah, n.d.).

Al-Dumayni, Misfir Ghuram Allah, *Maqāyīs Naqd Mutūn al-Sunnah* (Riyadh: self published by the author, 1403 AH).

Fallatah, Umar ibn Hasan Uthman, *Al-Waḍᶜ fī al-Ḥadīth* (Damascus: Maktabah al-Ghazāly, 1981).

Al-Farāhīdī, al-Khalīl ibn Aḥamd, *Kitāb al-ᶜAyn* (Beirut: Dār Iḥya' al-Turāth al-ᶜArabī, 2001).

Al-Fayrūzābādī, Muḥammad ibn Yaᶜqūb, *Al-Qāmūs al-Muḥīṭ* (Beiryt: Dār Iḥyā' al-Turāth al-ᶜArabī, 1997).

Hamzah Muhammad Qasim, *Manār al-Qārī* (Damascus: Maktabah Dār al-Bayān, 1990).
*The Holy Bible* (Authorized King James Version, The Gideons International, 1978).
Ibn al-ʿArabī, Abū Bakr, *Aḥkām al-Qur'ān* (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 1996).
Ibn al-Athīr, ʿIz al-Dīn, *Al-Kāmil fī al-Tārīkh* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 1989).
________, *Al-Kāmil fī al-Tārīkh* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 1994).
________, *Usd al-Ghābah* (Beirut: Dār al-Ma ʿrifah, 1997).
Ibn ʿAbd al-Barr, Yūsuf ibn ʿAbd Allah, *Al-Istīʿāb fī Maʿrifat al-Aṣḥāb* (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 1995).
Ibn Anas, Mālik, *Al-Muwaṭṭa'* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 1985).
Ibn Ḥajar, *Fatḥ al-Bārī* (Riyadh: Maktabah Dār al-Salām, 2000).
________, *Taqrīb al-Tahdhīb* (Beirut: Dār al-Maʿrifah, 1997).
________, *Hadiyy al-Sārī* (Riyadh: Dār al-Salām, n.d.).
Ibn Ḥanbal, Aḥmad, *Musnad* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 1994).
Ibn Hishām, Abū Muḥammad ʿAbd al-Mālik, *Al-Sīrah al-Nabawiyyah* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 1997).
Ibn al-Jawzī, ʿAbd al-Raḥmān ibn ʿAlī, "*Kitāb al-Mawḍūʿāt*" (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 1995).
________, *Zād al-Masīr fī ʿIlm al-Tafsīr* (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 2002).
Ibn Kathīr, Abū al-Fidā Ismāʿīl, *Al-Bāʿith al-Ḥathīth*, 4th edn. Ahmad Muhammad Shakir, ed. (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 1994).
________, *Al-Bidāyah wa al-Nihāyah* (Beirut: Dār al-Maʿrifah, 1997).
________, *Tafsīr al-Qur'ān al-ʿAẓīm* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 2000).
Ibn Mājah, Muḥammad ibn Yazīd al-Qazwīnī, *Sunan* (Beirut: Dār al-Maʿrifah, 1997: along with the commentary of al-Sindī).
Ibn al-Qayyim, Muḥammad ibn Abū Bakr, *Al-Manār al-Munīf fī al-Ṣaḥīḥ wa al-Ḍaʿīf*. Abd al-Fattah Abu Ghuddah, ed. (Ḥalab: Maktab al-Maṭbūʿāt al-Islāmiyyah, 1982).
Ibn Saʿd, *Al-Ṭabaqāt al-Kubrā* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ʿArabī, 1996)
Ibn Shuʿayb, Aḥmad, *Al-Sunan al-Kubrā* (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 1991).
Islahi, Amin Ahsan, *Tadabbur-i-Qur'ān* (Delhi: Taj Company, 1997).
Kamil Muhammad, Muhammad Uwaydah, *Aʿlām al-Fuqahā' wa al-Muḥaddithīn: Al-Imām al-Bukhārī* (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 1992).
Kamil Muhammad, *Aʿlām al-Fuqahā' wa al-Muḥaddithīn: Muslim ibn al-Ḥajjāj* (Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah, 1995).

Al-Khair Abadi, Muhammad Abul Laith, *Takhrīj al-Ḥadīth: Nash'atuhu wa Manhajuhu* (Kuala Lumpur: Dār al-Shākir, 1999).

________, *ᶜUlūm al-Ḥadīth: Aṣīluhā wa Muᶜāṣiruhā* (Malaysia: Dār al-Shākir, 2003).

Khan, Israr Ahmad, *Qur'anic Studies: An Introduction* (Zaman Islam Media, 2000).

Mawdūdī, Sayyid Abul A'lā, *Tafhīm al-Qur'ān* (Lahore: Idara Tarjuman al-Qur'ān, 1997).

Moore, Keith L., "A Scientist's Interpretation of References to Embryology in the Qur'an," in *The Journal of Islamic Medical Association*.

*Al-Muᶜjam al-Wasīṭ*. Ibrahim Mustafa and others, eds. (Istanbul: Al-Maktabah al-Islāmiyyah, n.d.).

Muslim, ibn al-Ḥajjāj al-Qushayrī, *Ṣaḥīḥ* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ᶜArabī, 2000).

________, *Ṣaḥīḥ* (Beirut: with al-Nawawī's commentary, Dār al-Maᶜrifah, 1997).

Al-Nasa'ī, Ahmad ibn Shuᶜayb, *Sunan* (Beirut: Dār al-Kutub al-ᶜIlmīyyah, 1991)

Al-Nawawī, Muḥy al-Dīn, *Al-Minhāj: Sharḥ Ṣaḥīḥ Muslim* (Beirut: Dār al-Maᶜrifah, 1997).

Al-Qasṭalānī, Aḥmad ibn Muḥammad, *Irshād al-Sārī li Sharḥ Ṣaḥīḥ al-Bukhārī* (Beirut: Dār al-Fikr, 1305 AH).

Al-Qurṭubī, Muḥammad ibn Aḥmad, *Al-Jāmiᶜ li Aḥkām al-Qur'ān* (Beirut: Dār al-Kutub al-ᶜIlmiyyah, 2000).

________, *Al-Jāmiᶜ li Aḥkām al-Qur'ān* (Beirut: Dār al-Kutub al-ᶜIlmiyyah, 2000).

Qutb, Sayyid, *Fī Ẓilāl al-Qur'ān* (Cairo: Dār al-Shurūq, 1996).

Al-Rāzī, Fakhr al-Dīn, *Mafātīḥ al-Ghayb* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ᶜArabī, 1997).

Al-Salih, Subhi, *ᶜUlūm al-Ḥadīth wa Muṣṭalaḥuhu* (Beirut: Dār al-ᶜIlm li al-Malāyīn, 1959).

Al-Suyūṭī, Jalāl al-Dīn, *Tadrīb al-Rāwī* (Beirut: Dār al-Kutub al-ᶜIlmiyyah, 1989).

Tahan, Mahmud, *Taysīr Muṣṭalaḥ al-Ḥadīth* (Kuwait: Maktabah Dār al-Turāth, 1984).

Al-Tirmidhī, Muḥammad ibn ᶜĪsā, *Sunan* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ᶜArabī, 1995).

________, *Al-Jāmiᶜ al-Ṣaḥīḥ* (Beirut: Dār Iḥyā' al-Turāth al-ᶜArabī, 1995).

Al-Zamakhsharī, Maḥmūd ibn ᶜUmar, *Al-Kashshāf* (Beirut: Dār al-Kutub al-ᶜIlmiyyah, 1995).


Al-Zarkashī, Badr al-Dīn, *Al-Ijābah*. Said al-Afghani, ed. (Beirut: al-Maktab al-Islāmī, 1980).



இந்த நூலில் ஹதீஸின் ஆதாரபூர்வத் தன்மை எனும் நுட்பமான பொருள் குறித்துப் பேசப்படுகின்றது. ஹதீஸ் அறிவிப்புகளின் உள்ளடக்கத்திற்கான தொடர் வரிசை, அதன் நம்பகத் தன்மை, அதன் அறிவிப்பாளர் வரிசையை உறுதிப்படுத்தும் முனைப்பு ஆகியவற்றில் செலுத்தப்படும் கவனத்தை விட, பிரதான ஹதீஸ் கிரந்தங்களின் தொகுப்பாளர்கள் பிரிகோடுகளின் முறைமைகளில் செலுத்தியுள்ள கவனம் மற்றும் இன்றைய சூழலில் இஸ்லாத்திற்கு எதிரான உணர்வலைகளைக் கிளறிவிட ஹதீஸ்கள் எனப் பெயரியன பயன்படுத்தப்படும் பிரச்சினைகளைத் தவிர்க்க முடியாதுள்ளமை, அவையே இஸ்லாமிய வன்முறையும் பிற்போக்குவாதமும் என்ற கோட்பாட்டை ஆதரித்துப் பேசுவதற்காகப் பரந்த அளவிலும் பயங்கரமான முறையிலும் விளம்பரம் செய்யப்படுகின்றமை என்பனவெல்லாம் இங்கு பேசப்பட்டுள்ளன.



2010 இல் வெளியிடப்பட்ட Authentication of Hadith- Redefining the Criteria எனும் இந்த நூலின் ஆசிரியரான கலாநிதி இஸ்ரார் அஹமத் கான் இந்தியாவின் அலிகார் பல்கலைக்கழகத்தில் இறையியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். தற்பொழுது மலேசியாவின் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக் கழகத்தில் (IIUM) குர்ஆன் மற்றும் ஸுன்னா கற்கைத் துறை இலாகாவில் இணைப் பேராசிரியராகக் கடமையாற்றும் இவருடைய பிரதான கற்கைநெறி, போதனை, ஆராய்ச்சி என்பன எல்லாம் குர்ஆன் மற்றும் ஹதீஸ் துறைகளுடன் சம்பந்தப்பட்டனவாக இருக்கின்றன. *Quranic Studies: An Introduction (2000), The Theory of Abrogation: A Critical Evaluation (2006), Understanding the Quran: A Reflection (2006)* என்பன அவரது ஏனைய ஆக்கங்களுள் சிலவாகும்.



Published by
**Fuzin Texts**
23/3 Market Road,
Dharga Town 12090
Sri-Lanka.

ISBN 978-955-8398-46-3